T. 1891
TO
1894

891
T.1891

மகோடி க்ரந்தாவளி : 29

ॐ

श्रीगुरुभ्यो नमः

# நமது வேதங்களும் சாஸ்திரங்களும்

ஸ்ரீ காமகோடி பீடாதிபதிகளான
ஜகத்குரு
ஸ்ரீ சங்கராசார்ய ஸ்வாமிகள்
அருளிய நன்மொழிகள்



श्रीकामकोटिर्विजयते

ஸ்ரீ காமகோடி கோசஸ்தானம்
பிரான்ஸிஸ் ஜோஸப்புத் தெரு,
சென்னை



ஸ்ரீ ஜகத்குரு காஞ்சி காமகோடி பீடாதிபதிகள்

ஸ்ரீ சந்த்ரசேகரேந்த்ர ஸரஸ்வதீ ஸ்ரீ சங்கராசார்யஸ்வாமிகள்

T. 1891

GOVERNMENT ORIENTAL MSS. LIBRARY
21 JAN 1953
MADRAS

ॐ

श्रीगुरुभ्यो नमः

# நமது வேதங்களும் சாஸ்திரங்களும்

ஸ்ரீகாமகோடி பீடாதிபதிகளான
ஜகத்குரு
**ஸ்ரீசங்கராசார்ய ஸ்வாமிகள்**
அருளிய நன்மொழிகள்



श्रीकामकोटिर्विजयते

ஸ்ரீ காமகோடி கோசஸ்தானம்
பிரான்ஸிஸ் ஜோஸப்புத் தெரு, சென்னை

பதிப்புரிமை] 1949 [விலை ரூ. 1-0-0

முதற் பதிப்பு அக்டோபர், 1949

Thompson & Co., Ltd., Madras.

॥ श्रीः ॥

यदा यदा हि धर्मस्य ग्लानिर्भवति भारत ।
अभ्युत्थानमधर्मस्य तदात्मानं सृजाम्यहम् ॥

21 JAN 19

ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதிகளான ஜகத்குரு ஸ்ரீ சங்கராசாரியார் அவர்கள், 1932௵ செப்டம்பர் ௴ சென்னைக்கு விஜயம் செய்தார்கள். அச்சமயம் அவர்கள் அருளிய பொன்மொழிகள் இங்கே அளிக்கப்படுகின்றன.

காலவேறுபாட்டால் மக்கள் ஒரு நிலையில் இல்லை. நமது மதங்கள், வேதங்கள், சாஸ்திரங்கள், புராணங்கள் அவற்றின் கொள்கைகள், நாகரிகம் முதலியவற்றின் உண்மைகளைச் சரிவர அறிந்து கொள்ளமுடியாமல் பலவாறு குழம்பி யிருக்கின்றனர். அன்னாரது நன்மைக்காகப் பல விஷயங்களும் எளிதில் விளங்குமாறு, தக்க மேற்கோள்களுடன் உபதேசிக்கிறார்கள்.

மக்கள் தங்களது ஆத்மலாபத்தைக் கருதி நற்பயன் அடையும் முறைகளை மேற்கொள்ள வேண்டுமென்று வேண்டப்படுகிறார்கள்.

ஸ்ரீ காமகோடி கோசஸ்தானம்.

# விஷய அட்டவணை


| | | பக்கம் |
|---|---|---|
| 1. | வேதங்கள் ... ... ... | 1 |
| 2. | புருஷ ஸூக்தம் ... ... ... | 14 |
| 3. | ஷடங்கங்கள் ... ... ... | 21 |
| 4. | தர்மப் பிரமாணங்கள் ... ... | 26 |
| 5. | வியாகரணம் ... ... ... | 28 |
| 6. | பாஷையின் பிரயோஜனம் ... ... | 42 |
| 7. | சந்தஸும், நிருக்தமும் ... ... | 58 |
| 8. | ஜ்யோதிஷமும், கல்பமும் ... ... | 64 |
| 9. | மீமாம்ஸை ... ... ... | 89 |
| 10. | நியாயம், புராணம், தர்ம சாஸ்திரம் ... | 93 |
| 11. | ஆயுர்வேதம் ... ... ... | 111 |
| 12. | அர்த்த சாஸ்திரம் — தநுர்வேதம், காந்தர்வவேதம் ... ... | 130 |
| 13. | நமது சாஸ்திரங்கள் ... ... | 158 |

# நமது வேதங்களும் சாஸ்திரங்களும்

T. 1891

## 1

## வேதங்கள்

[25—10—1932]

தர்மஸ்தானங்கள் பதினான்கில் அங்கம் ஆறு; உபாங்கம் நான்கு; வேதம் நான்கு. ருக், யஜுஸ், ஸாமம், அதர்வம் என்பவை அந்த வேதங்களின் பெயர்.

வேதத்தின் மஹிமை எல்லையில்லாதது. ஆனாலும் லௌகிகத்தில் அதனுடைய பெருமை ஒரு விதத்தில் புலப்படுகிறது.

உலகத்தில் உள்ள க்ஷேத்திரங்களுள் காசி அதிக மஹிமையுடையது என்று நினைக்கப்படுகிறது. வேறு க்ஷேத்திரங்களைப்பற்றிச் சொல்லும்பொழுது அவை காசிக்கு ஸமானமானவை என்று சொல்லுகிறார்கள். அதனால் காசியினுடைய மஹிமை தெரிகிறது. இந்த ஸ்தலத்தை தக்ஷிண காசி என்று சொல்லுவார்கள். உத்தரகாசி ஹிமாசலத்தில் இருக்கிறது. விருத்தகாசி என்று விருத்தாசலத்திற்குப் பெயர். சில காலத்திற்கு முன் நான் இருந்த புக்கே என்னும் ஊரும் ஒரு காசி என்று சொல்லப்படுகிறது. தென்காசி என்றே ஓர் ஊர் இருக்கிறது. மற்ற ஸ்தலங்களை இது காசி க்ஷேத்திரத்துக்கு ஸமமானது; இது காசியிலும் வீசம் அதிகம் என்று சொல்லுகிறார்கள். கும்பகோண ஸ்தலத்தைப் பற்றிய ஒரு சுலோகம் உண்டு.

अन्यक्षेत्रे कृतं पापं पुण्यक्षेत्रे विनश्यति ।
पुण्यक्षेत्रे कृतं पापं वाराणस्यां विनश्यति ॥
वाराणस्यां कृतं पापं कुम्भघोणे विनश्यति ।
कुम्भघोणे कृतं पापं कुम्भघोणे विनश्यति ॥

என்பது அந்த சுலோகம். காசியைவிடக் கும்பகோணம் அதிகமஹிமையுடையது என்பது இதன் கருத்து. இவ்வாறு காசியைவிட உத்கிருஷ்டமானது என்று சொல்லுவதனால் காசிக்கு ஒரு தனி மஹிமை இருக்கிறதென்று தெரிகிறது. அதை உபமானமாகச் சொல்லிச் சொல்லி அதற்கு இன்னும் கௌரவத்தை உண்டாக்கி வருகிறார்கள். நூறு வருஷங்களுக்கு முன் ஒரு பெரியவர் காசி க்ஷேத்திரத்தைப்பற்றி ஒரு சுலோகம் சொல்லியிருக்கிறார்.

क्षेत्राणामुत्तमानामपि यदुपमया काऽपि लोके प्रशस्तिः
चित्तद्रव्येण मुक्तिक्रयमभिलषतां याऽद्भुता पण्यवीथी ।
साक्षाद्विश्वेश्वरस्य त्रिभुवनमहिता या पुरा राजधानी
रम्या काशी सकाशीभवतु हितकरी भुक्तये मुक्तये नः ॥

[மஹிஷசதக வியாக்கியானம்]

உத்தம க்ஷேத்திரங்களுக்கு எதை உபமானமாகச் சொல்லி பிரசித்திவருகிறதோ அது காசி. அங்கே பக்தியாகிய காசைக் கொடுத்தால் முக்தியைச் சுலபமாய் வாங்கலாம். அது கிடைக்கும் கடைத்தெரு காசிதான் என்று சொல்லுகிறார்.

இதைப்போல் வேதத்திற்கு விஷயத்தால் கௌரவம் இருந்தாலும்கூட லௌகிகத்தில் பெருமை இருக்கிறது.

ராமாயணம் மிகவும் பிரசித்தமானது. அது பல வகையாக இருக்கின்றது. நாடகம் கீர்த்தனம் காவியம்

எல்லாம் ராம கதை. யார் எடுத்தாலும் ராமாயணத்தைப் பற்றிச் சொல்லுகிறார்கள். தமிழில் கம்பர் விருத்தப் பாவால் ராமாயணத்தைப் பாடினர். அருணாசலக்கவி ராயர் நாடக ரூபமாகப் பாடினர். மஹாராஷ்டிரம், தெலுங்கு முதலிய ஒவ்வொரு பாஷையிலும் ராமாயணத்தைச் செய்திருக்கிறார்கள். ஸம்ஸ்கிருதத்தில் காளிதாஸ கவி இரகுவம்சம் என்று ஒரு காவியம் எழுதினர். அது பெரும்பாலும் ராமாயணத்தையே சொல்லுகிறது. போஜ ராஜா ராமாயண சம்பூ எழுதியிருக்கிறார். பவபூதி என்ற கவி உத்தரராமசரிதம் எழுதியிருக்கிறார். ராமபத்திர தீக்ஷிதர் என்பவர் ஜானகி பரிணயம் என்று ஒரு நாடகம் செய்திருக்கிறார். ராமாயணத்திலேயே பல வகைகள் இருக்கின்றன. அற்புதராமாயணம், ஆனந்தராமாயணம், தத்துவஸங்கிரஹராமாயணம் என்று பலவகைகள் இருக்கின்றன. எதை எடுத்தாலும் இதுதானா. ராம கதை எழுதின ஒருவர் இதற்குப் பதில் சொல்லுகிறார். யார் வீட்டில் பாயசம் பண்ணினாலும் சர்க்கரை போடுவதுபோல் அதைத்தான் போடவேண்டும் என்று அவர் சொல்லுகிறார். பூஜை இல்லாவிட்டாலும் ராமாயண பாராயணம் சிலர் செய்கிறார்கள். அப்படிப்பட்ட ராமாயணத்தின் கௌரவத்தைச் சொல்லவந்தபொழுது அது வேதமென்று சொல்லப்படுகிறது.

वेदः प्राचेतसादासीत् साक्षाद्रामायणात्मना ।

மஹாபாரதத்துக்கும் வேதம் என்னும் பெயர் சொல்லப் படுகிறது.

भारतः पञ्चमो वेदः ।

ராமாயணத்தைப்போல வைஷ்ணவர்கள் திருவாய் மொழியைக் கொண்டாடுவார்கள். "வேதம் தமிழ்செய் தான் மாறன் சடகோபன்" என்று சொல்லுகிறார்கள்.

அதனால் அதுவும் ஒரு வேதம் என்று எண்ணப்படு கிறது. தமிழில் மிகவும் பிரசித்தமான நீதி சாஸ்திர மாகிய குறள் தமிழ்வேதம் என்று சொல்லப்படுகிறது.

திருவள்ளுவர் அந்தத் திருக்குறளைச் செய்தார். அந்தக் காலத்தில் மதுரையில் கடைச் சங்கம் இருந்தது. அங்கே சுந்தரேசுவரரால் கொடுக்கப்பட்ட பலகை ஒன்று இருந்தது. அதன்மேல் யோக்கியதை இருந்த வர் உட்காரலாம். யோக்கியதை இல்லாவிட்டால் தள்ளி விடும். அது எப்படி? இதை நம்மால் நம்ப முடியவில்லை. ஆனால் காசு போட்டால் டிக்கட் வருகிறது என்பதை நம்புகிறோம். திருவள்ளுவர் தாம் செய்த குறளை எடுத் துக்கொண்டு அந்தச் சங்கத்திற்குப் போனார். பொது வாக வித்வான்கள் மற்றவர்களை அலக்ஷியம் பண்ணுவார் கள். அப்படிப் பண்ணுவதனால் அசடாயிருப்பவர்கள் நானும் படித்தவன் என்று சொல்லிக்கொள்ள முடியாது. ஆகையால் அப்படிப் பண்ணுவது ஒரு வகையில் நல்ல தையே உண்டாக்குகிறது. ஆனால் அந்த அலக்ஷியப் புத்தி அதிகமாகப் போகக்கூடாது. அது தப்பு.

திருவள்ளுவர் கொண்டுபோன சுவடியை அந்தச் சங்கப் பலகையில் வைக்கச் சொன்னார்கள். அது அந்தச் சுவடிக்குமட்டும் இடம் கொடுத்து மற்றவர்களை யெல்லாம் கீழே தள்ளிவிட்டது. அப்பொழுது எல்லோரும் குற ளின் பெருமையை உணர்ந்து ஒவ்வொருவரும் ஒவ்வொரு செய்யுளால் அதனைப் புகழ்ந்தார்கள். அவர்களுக் குள்ளே ஒருவர்,

"ஆரியமுஞ் செந்தமிழு மாராய்ந் திதனினிது
சீரிய தென்றொன்றைச் செப்பரிதால்—ஆரியம்
வேத முடைத்து தமிழ்திரு வள்ளுவனார்
ஓது குறட்பா வுடைத்து"

[திருவள்ளுவமாலை]

என்று சொல்லி இருக்கிறார். ஸம்ஸ்கிருதம் பெரியதா தமிழ் பெரியதா என்று கேட்டால் அந்தக் கேள்வியை நேற்றுவரையிலும் கேட்கலாம். இன்றிலிருந்து கேட்கக் கூடாது. ஸம்ஸ்கிருதத்திற்கு உயர்வு அதில் வேதம் இருக்கிறது என்பதே. அதற்குச் சமானமாகத் தமிழில் குறள் வந்துவிட்டதே அது எப்படி உயர்வு உடையதாகும் என்று அவர் சொல்லுகிறார். இதனால் குறளானது வேத சமானம் என்பது தாத்பரியம்.

தேவாரமும் திருவாசகமும் தமிழ்வேதம் என்பது பிரசித்தம். இவை நம் மதத்துக்குள் அகப்பட்டவை. கிறிஸ்தவர்கள் ஒரு புஸ்தகம் கொண்டு வந்தார்கள். அதற்குச் சத்தியவேதம் என்று பெயரிட்டார்கள். இப்படி உலகத்திலிருக்கும் வியவஹாரத்தைப் பார்த்தால் வேதத்திற்கு ஒரு தனி கௌரவம் இருக்கிறது. ஒரு பிரகாசமான கிரந்தத்தால் மற்றவைகளை வியவஹரிப்பது பிரசித்தமான உலக வழக்கம்.

துவாபரயுக முடிவில், கலியுக ஆரம்பத்தில் சற்றேறக்குறைய 5000 வருஷங்களுக்குமுன் வியாஸமஹரிஷி வேதத்தை நான்காகப் பிரித்தார். உத்தர மீமாம்ஸை, பதினெட்டுப் புராணங்கள், பாரதம் முதலியவைகளைச் செய்தவர் அவரே. வேதம் முழுவதையும் அத்தியயனம் பண்ணுவது முடியாத காரியம். ஒரு மனிதன் எவ்வளவு பாகத்தை அத்தியயனம் செய்து சிரேயஸை உண்டாக்கிக் கொள்ள முடியுமோ அவ்வளவை ஒரு பிரிவாகப் பிரித்து வைத்தார். அது சாகை என்று சொல்லப்படும். வியாஸருடைய சிஷ்யர் ஸுமந்து, பைலர், ஜைமினி, வைசம்பாயனர் என்னும் நால்வரும், ருக், யஜுஸ், ஸாம, அதர்வ வேதங்களை அவர் மூலம்

தெரிந்துகொண்டார்கள். வியாஸர் ஸூதருக்குப் புராணங்களைச் சொன்னார். அதனால் புராணங்களில் ஸூத புராணிகர் சொன்னதாகக் காணப்படுகிறது.

ருக் வேதத்தில் அநேக சாகைகள் உண்டு. அதில் ஒரு சாகைதான் இப்பொழுது இருக்கிறது. அதற்கு ஐதரேயசாகை என்று பெயர். யஜுர்வேதத்திற்கு 101 சாகைகள் உண்டு. இப்பொழுது இருப்பவை 3 சாகைகள்தான். அவை காண்வசாகை, தைத்திரீயசாகை, மாத்யந்தினசாகை என்பவை. ஸாமவேதத்தில் 1000 சாகைகள் இருந்தன. கௌதமசாகை, தலவகாரசாகை என்னும் இரண்டுதான் இப்பொழுது இருக்கின்றன. அதர்வ வேதத்தில் ஒரு சாகைகூட இப்பொழுது இல்லை. வடக்கே உத்கல (ஒரிஸ்ஸா) தேசத்து பிராம்மணர்களில் 18 ஜாதிகள் இருக்கின்றன. அவர்களுக்குள் ஆதர்வணிகர் என்று ஒரு ஜாதி இருக்கிறது. அந்த ஜாதியின் பெயரால் அவர்கள் அதர்வணசாகை அத்தியயனம் பண்ணிக்கொண்டு இருந்தார்களெனத் தெரிகிறது.

வியாஸர் வேதத்தைப் பிரித்தபோது 1180 சாகைகளாக விபாகம் பண்ணினார். இப்பொழுது 8 தான் பாக்கி. [அதற்குமுன் வேதங்கள் அநேகங்களாக இருந்தாலும், கலியுகத்திற்கு இவை போதும் என்று சுருக்கினார்.] அதுவே இந்தக் காலத்தில் குறைந்து விட்டது.

ஒரு சாகை என்பது ஒரு பிராம்மணன் பிறந்தது முதற்கொண்டு இறக்கும்வரையில் உள்ள கர்மாக்களுக்கு உபயோகமான விஷயங்கள் அடங்கி இருப்பது.

एकां शाखामधीत्य श्रोत्रियो भवति ।

ஒரு வேத சாகையை முழுவதும் அத்தியயனம் பண்ணின

வனுக்கு ஒரு சுரோத்திரிய கிராமம் விடுவது அந்தக் காலத்து ராஜாக்களுக்கு வழக்கம். அந்தக் கிராமத்திற்கு வரி கிடையாது. வேதாத்தியயனம் பண்ணுகிறவர்களுக்கு வேறு விதமான வேலை இல்லாதபடியால் அவர்களால் கிஸ்தி கட்ட முடியாது என்பதை அறிந்திருந்தார்கள். இப்பொழுதும் சுரோத்திரிய கிராமங்களுக்கு வரி கிடையாது. லௌகிகத்தில் பிரவிருத்தி வைத்துக் கொள்ளாமல் ஆத்ம லாபமான காரியங்களையே செய்து கொண்டு வந்த பரம்பரை நம்முடைய தேசத்திலேதான் இருந்திருக்கிறது. அதனால் நம்முடைய தேசத்திற்கு என்றைக்கும் அழியாத கௌரவம் இருந்து வருகிறது. விவேகாநந்தர் முதலியவர்களால் நம்முடைய தேசத்தின் கௌரவத்தை அறிந்து கொண்ட தேசாந்தரத்தில் உள்ளவர்கள் அதை அதிகமாகப் பாராட்டுகிறார்கள். ஜர்மனியில் உள்ள டாய்ஸ்ன் (Paul Deussen) என்னும் ஒருவர் நம்முடைய சங்கராசாரியாரைக் காட்டிலும் தெய்வம் இல்லை என்று சொல்லுகிறார். அத்வைத சாஸ்திரங்களை மிகவும் நன்றாக அவர் வாசித்து இருக்கிறார். ஸ்ரீ ஆசாரியருடைய அவதார ஸ்தலமான காலடியில் வைப்பதற்காகத் தம்முடைய பிரதிரூபத்தை அனுப்பி இருக்கிறார். ஆத்மதத்வத்தை உபதேசிக்கும் சக்தி நம்முடைய தேசத்தில்தான் இருக்கிறது. வேதாத்தியயனம் செய்கிறவர்கள் லௌகிகத்தில் ஸௌகரியம் செய்து கொள்ளமாட்டார்கள். ஆனாலும் அவர்களுக்கு அதிக ஸௌகரியமும் வேண்டாம், கஷ்டமும் வேண்டாம் என்று நினைத்து ஸ்வல்ப பூமியைக் கொடுத்து வரியும் இல்லாமல் செய்து பழைய அரசர்கள் காப்பாற்றினார்கள். அதனால் தான் சுரோத்திரியர்கள் நம்முடைய தேசத்தில் அதிகமாய் இருந்தார்கள்.

ஒவ்வொரு சாகையும் மூன்று பிரிவாகப் பிரிந்து இருக்கின்றது. 1. மந்திரம், 2. பிராம்மணம், 3. உபநிஷத். மந்திரம் என்பது உச்சாரணம் பண்ணினால் புண்ணியத்தைத் தருவது. அந்த மந்திரம் எந்த தேவதையின் ஸ்வரூபத்தை அறிவிக்கிறதோ அந்தத் தெய்வத்தை உத்தேசித்து அந்த மந்திரத்தைச் சொல்லி அக்கினியில் ஒரு திரவியத்தை ஆஹுதி பண்ணவேண்டும். ஆஹுதி பண்ணும் பொழுது 'ந மம' என்று சொல்லவேண்டும். 'என்னுடையது இல்லை' என்று அதனுடைய அர்த்தம். எல்லாப் பொருள்களையும் ஈசுவரார்ப்பணம் பண்ணுவதற்கு அடையாளம் அது. இன்ன கர்மா இதை உத்தேசித்து இப்படிப் பண்ணவேண்டும் என்று சொல்லுவது பிராம்மணம். மந்திரமும் பிராம்மணமும் கர்மகாண்டம். ஒவ்வொரு சாகையிலும் முடிவில் இருப்பது உபநிஷத். பிராம்மணப்படி கர்மாக்களை நாம் எதற்காகப் பண்ணுகின்றோம்? நல்ல பலன் உண்டாவதற்காக நல்ல கர்மாக்களைப் பண்ணி அவற்றின் பலனைப் பரமேசுவரனுக்கு அர்ப்பணம் பண்ணினால் ஈசுவரப்பிரஸாதம் கிடைக்கும். ஸத்தியம் வெளிப்படும்.

जन्माद्यस्य यतोऽन्वयादितरतश्चार्थेष्वभिज्ञः स्वराट्
तेने ब्रह्म हृदा य आदिकवये मुह्यन्ति यत्सूरयः ।
तेजोवारिमृदां यथा विनिमयो यत्र त्रिसर्गोऽमृषा
धाम्ना स्वेन सदा निरस्तकुहकं सत्यं परं धीमहि ॥

[ஸ்ரீமத்பாகவதம், I-i-1.]

என்று பாகவதம் சொல்லுகிறது. நாம் உண்மையில் இருந்து விலகியிருக்கிறோம். சில சமயங்களில் நாம்

இப்படி இருந்தால் நல்லது என்று தோன்றுகிறது. ஆனால் அப்படி இருக்க முடிவதில்லை. நாம் செய்கின்ற கர்மாக்களை எல்லாம் ஈசுவரார்ப்பணம் பண்ணிப் பரமாத்மாவை அடையும் வழியைச் சொல்லுவதுதான் உபநிஷத்.

ஒவ்வொரு சாகையிலும் ஒவ்வொரு உபநிஷத் இருக்கிறது. நமக்குக் கிடைத்திருக்கிற ஒவ்வொரு சாகையிலும் ஒவ்வொரு உபநிஷத் இருக்கிறது. காண்வ சாகையில் மட்டும் ஈசாவாஸ்யோபநிஷத்தும் பிருஹதாரணியக உபநிஷத்தும் இருக்கின்றன. நமக்குத் தெரியாத சில சாகைகளிலுள்ள உபநிஷத்துக்களும் கிடைத்திருக்கின்றன. ருக்வேதத்தினுள் கடோபநிஷத் என்று ஒன்று இருக்கிறது. அதனுடைய சாகை இன்னதென்று இப்பொழுது தெரியவில்லை. அதர்வவேத சாகைக்குரிய உபநிஷத்தும் இப்பொழுது கிடைக்கிறது. கௌஷீதிகிப்பிராம்மண உபநிஷத் என்பது அத்தகையது. சாகைகள் போய்விட்டாலும், நம்முடைய தேசத்தில் தத்துவத்தைக் காப்பாற்றி வந்திருக்கிறார்கள். ஒருவர் ஒரு சாகையை அத்தியயனம் பண்ணினால் போதுமென்று வியாஸர் சுலபமாகப் பிரித்து வைத்தார். அப்படி அமைத்ததைக்கூட நம்மால் அநுஷ்டிக்க முடியவில்லை. பல சாகைகளை இழந்துவிட்டோம்.

தமிழில் தொல்காப்பியம் என்று மிகப் பழைய ஒரு இலக்கண நூல் இருக்கிறது. அது அகஸ்திய சிஷ்யர்கள் பன்னிருவர்களுள் ஒருவரான திருணதூமாக்கினியால் செய்யப்பட்டது. அந்தப் புஸ்தகத்துக்கு உரை எழுதிய ஒருவர் ஓரிடத்தில், வேதவியாஸர் வேதங்களைப் பிரிப்பதற்கு முன்பு அது செய்யப்பட்டதென்றும்,

அந்தக் காலத்தில் நான்கு வேதங்களுக்கும், தைத்திரீயம், பௌடிகம், தலவகாரம், ஸாமம் என்ற பெயர்கள் இருந்தன என்றும் எழுதியிருக்கிறார். திவ்வியப்பிரபந்தத்தில் பௌழியா சந்தோகா என்று வருகிறது. இவைகள் வேதங்களின் பெயர் இல்லை. தலவகாரம், தைத்திரீயம், பௌழியம் என்பவை சாகைகளின் பெயர்கள்.

மலையாளத்தில் உள்ள நம்பூத்திரிப் பிராம்மணர்கள் யாவரும் வேதாத்தியயனம் செய்வார்கள். லௌகிகப் பிரவிருத்தி உள்ளவர்கள்கூட இளமையில் வேதாத்தியயனம் பண்ணினவர்களாகத்தான் இருப்பார்கள். பிரம்மசாரிகள் கௌபீனம், கிருஷ்ணாஜினம், தண்டம், ஸமிதாதானம் முதலியவைகளை விடாமல் கைக்கொண்டு இருக்கிறார்கள். ஆனால் இப்பொழுது அவர்கள்கூட மாறிக்கொண்டு வருகிறார்கள். எந்த ஜாதியினர் அதிக சிஷ்டர்களாக இருக்கிறார்களோ அவர்கள் தவறினால் மிகவும் கீழே போய்விடுகிறார்கள்.

நம்பூதிரிகளில் ருக்வேதத்தினர்கள் அதிகம். அவர்களுடைய சுவடி ஒன்றில் ருக்வேதத்திற்குப் பௌழியம் என்ற பேர் எழுதியிருக்கிறது. அதனால் பௌழியம் என்பது ருக்வேதத்தின் பெயர் என்று தெரியவந்தது.

மந்திரம் ஸம்ஹிதை முதலியவைகளில் சொல்லப்படும் கர்மாக்களைச் செய்துவந்தால் அவைகளின் பலன் ஜன்மாந்தரங்களில் ஐசுவரியத்தை அடையச் செய்கிறது. அந்தக் கர்மாக்களையே ஈசுவரார்ப்பணம் பண்ணினால் அவைகளே சித்தசுத்தியை உண்டாக்கி மோக்ஷத்தைக் கொடுக்கின்றன.

தெரியாத விஷயத்தைத் தெரிந்துகொள்ள நமக்கு அநேக கருவிகள் இருக்கின்றன. கண்ணினால் சிலவற்றைத் தெரிந்துகொள்ளுகிறோம். காதால் சிலவற்றைத் தெரிந்து கொள்ளுகிறோம். ஊஹத்தால் சில

தெரிகின்றன. வார்த்தைகளால் சில தெரிகின்றன. அமெரிக்காவில் நடக்கிற சமாச்சாரம் வார்த்தைகளால் தெரியாது. அவைகளைத் தந்தி, பத்திரிகை முதலிய வற்றால் தெரிந்துகொள்ளுகிறோம்.

லோகத்திலுள்ள கருவிகளால் தெரிந்துகொள்ளக் கூடாததைத் தெரிந்துகொள்ள ஒரு பத்திரிகை வேண்டும். எது இந்தக் கருவிகளால் தெரிந்துகொள்ள முடியாதோ எந்த ஊரில் இருந்து தந்தி வராதோ அங்கே உள்ள விஷயங்களைத் தெரிந்துகொள்ளவேணடும். அதீந்திரியமானவைகளைத் தெரிந்துகொள்ளும் அறிவிற்குத்தான் வேதம் என்று பெயர்.

வேதத்தில் தள்ளப்படும் சில பாகங்கள் உண்டு. அவைகளுக்கு அர்த்தவாதம் என்று பெயர். இதர கருவிகளைக் கொண்டு தெரிந்துகொள்ளுவதை அது சொன்னால் அது பிரமாணமில்லை. அதைச் சொல்லுவதற்கு வந்ததல்ல வேதம். தெரியாததைத் தெரிவிக்கத்தான் ஏற்பட்டது வேதம். தெரியாதது என்ன?

உலகத்தில் தத்துவ விஷயத்தில் இரண்டுவித அபிப்பிராயங்கள் இருக்கின்றன. நமக்குத் தோன்றுகின்ற பொருள் எல்லாம் ஒரே பொருளா, வெவ்வேறு பொருளா என்ற ஸந்தேஹம் இருக்கிறது. ஸையன்ஸில் (Science) ஆரம்பத்தில் பார்த்தால் உலகத்திலுள்ள பொருள்கள் எல்லாம் வெவ்வேறே என்று நினைத்தார்கள். பின்பு எல்லாவற்றிற்கும் மூலமாக 72 பொருள்கள் (elements) என்று தீர்மானித்திருக்கிறார்கள். அந்த 72-ம் தங்களுக்குள் ஒன்றுக்கொன்று சேருவதால் பல பொருள்களை உண்டாக்குகின்றன என்று சொல்லுகிறார்கள். இன்னும் மேலே ஆராய்ந்துகொண்டேபோனால் அந்த 72 பதார்த்தங்களுக்கும் மூலம் ஒரு பதார்த்தம்

தான் என்பதை அறிந்துகொள்ளுவார்கள். ஆத்ம தத்துவத்தையே விசாரிப்பவர்கள் எல்லாம் அறிவினுல் ஏற்பட்டவை என்று சொல்லுகிருர்கள்.

நம்முடைய தேசத்தில் ஒன்று என்று சொல்லுவதை அத்வைதமென்றும், வெவ்வேறு என்று சொல்லுவதை துவைதம் என்றும் சொல்லுவார்கள். இந்த இரண்டில் எது வாஸ்தவம்? வேதம் எதைச் சொல்லுகிறது? துவைதம் ஸத்தியமாய் இருந்ததானுல் வேதத்தைப் பார்க்கவே வேண்டாம். நம்முடைய கண்ணுக்குத் தோன்றுவது துவைதந்தானே. நமக்குத் தெரியாததை அல்லவா வேதம் சொல்லவேண்டும். நமது புத்தியால் எது அறியப்படவில்லையோ அதைத்தான் அது சொல்லும். அதுதான் நமக்குப் பிரதானம். நமக்குத் தெரியாதது அத்வைதம்தான். வேதம் ஒன்றைச்சொல்லுமானுல் அத்வைதத்தை தான் சொல்லவேண்டும். துவைதம் நிஜமாக இருந்தாலும் வேதம் சொல்லாது. தப்பானுலும் சொல்லாது. வேதத்தில் கர்மகாண்டத்தைப் பார்த்தால் துவைதத்தின் சார்பாகத் தோன்றும். முடிவில் ஒன்ருகத் தோன்றும். இதரப் பிரமாணங்களால் தெரிவதை வேதம் சொன்னுல் அதற்கு அனுவர்தமென்று பெயர்.

अनुवादोऽवधारिते ।

என்று சொல்லப்பட்டு இருக்கிறது.

சில பேர் 'வேதத்தை நம்பமுடியுமா? அதற்கு ஒரு யுக்தி சொல்லுங்கள்' என்று கேட்கிருர்கள். யுக்திக்கு எட்டுமானுல் அதை வேதம் சொல்லுவானேன். யுக்திக்கு எட்டாததைச் சொல்லத்தான் வேதம் இருக்கிறது.

வேதம் நித்தியமானது. அதைத் திவ்விய திருஷ்டி உள்ள முனிவர்கள் அறிந்து நமக்குச் சொன்னார்கள், எதை ருசுவினால் (proof) நிரூபிக்க முடியாதோ, எங்கே புத்தி எட்டவில்லையோ, அதற்காகத்தான் வேதம் ஏற்பட்டிருக்கிறது. இந்திரியங்களுக்கு அகப்படாததைத் விளக்குவது வேதம்.

இவ்வளவு தூரம் கேட்டதற்குப் பிரயோஜனமாக எல்லோரும் ஏதாவது ஒரு காரியம் பண்ணவேண்டும். பிராம்மணர்கள் நித்தியம் பிரம்மயஜ்ஞம் பண்ணவேண்டும். பஞ்சமஹாயஜ்ஞங்களில் அது ஒன்று. பிரம்ம என்பது வேதம். அகண்டதீபம்போல் மந்திர சக்தியானது நம்மிடம் அணையாதிருப்பதற்காக நாம் அதைச் செய்யவேண்டும். நாம் அத்தியயனம் பண்ணவேண்டிய சாகையின் மஹரிஷி யாரோ அவருக்குத் தர்ப்பணம் பண்ணவேண்டும். பண்ணிவிட்டு இரண்டு அக்ஷரமாவது வேத அத்தியயனம் பண்ணவேண்டும. அதுவும் முடியாவிட்டால் காயத்திரீ ஜபத்தை விடாமல் செய்ய வேண்டும். காயத்திரீ வேதத்தின் ஸாரமானது. காயத்திரியை உபதேசம் பண்ணிக்கொண்ட பின்புதான் வேதாக்ஷர உச்சாரணம் செய்யவேண்டும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. அத்தகைய காயத்திரீயை ஸஹஸ்ராவிருத்தி முக்கியமாக தினந்தோறும் செய்யவேண்டும். கடைசி பக்ஷம் பத்தாவது பிரதிதினம் செய்யவேண்டும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. காயத்திரீ மந்திரம் சித்த சாந்திக்குக் காரணம். அதனுடைய தேவதை சூரியன். சூரியனுக்கு உரிய நாளாகியது ஞாயிற்றுக்கிழமை. இந்தக் காலத்தில் எல்லோருக்கும் லீவு நாளாக இருக்கிறது. ஆகையால் அன்று 4-மணிக்கு எழுந்து எல்லோரும் ஸஹஸ்ராவிருத்தி காயத்திரீ ஜபம் செய்யவேண்டும். செய்தால் க்ஷேமம் உண்டாகும். இதை உங்களுக்குச் சொல்லவேண்டும் என்பது என்னுடைய அபிப்பிராயம்.

---

## 2

# புருஷஸூக்தம்*

[5—12—1932]

உலகில் பலவகையான பிராணிகளைக் காண்கிறோம். சில ஜலத்தில் வசிப்பன. அவைகளில் ஆயிரக்கணக்கான பேதங்களுண்டு. ஒவ்வொன்றிலும் எண்ணிறந்த பேதங்களிருக்கின்றன. நிலத்தில் வஸிக்கும் ஜீவன்கள் பல. அவைகளில் சில மிருகம். அதில் அநேக ஜாதி பேதமுண்டு. பக்ஷிகளில் பலவகை. அசையாப் பொருளான மரம் மலை முதலியன பல. ஆகாசத்தில் அண்ணாந்து பார்த்தால் பல நக்ஷத்திரங்கள், பல கிரஹங்கள், சந்திர ஸூரியர்கள் இருக்கிறார்கள். அது ஓர் உலகம். அதில் பற்பல ஜீவராசிகள் வஸிக்கின்றன. காலமோ கணக்கிலடங்காம லிருக்கிறது. இவை எப்போது உண்டானவை? ஏன் உண்டாயின? எங்கிருந்து தோன்றின? எதற்காகப் பிறந்தவை? எப்போது அழியும்? எப்படி அழியும்? இவைகளைப் படைத்தவன் ஒருவனா? பலரா? இவைகள் எதுவரை இருக்கும்?

நாம் சில காரியங்களைச் செய்கிறோம். வீடு கட்டினால் எப்படி, எதைக் கொண்டு கட்டினோம், இது எத்தனை நாள் இருக்கும் எனச் சுமாராக அறிவோம். கோடிக்கணக்கான ஜீவர்களைப் பற்றி நாமொன்றுமறியோம். சில துக்கப்படுகின்றன. சில ஸந்தோஷப் படுகின்றன. சில சண்டையிடக் காண்கிறோம். சில ஸ்நேஹமா யிருக்கின்றன. இவை எல்லாவற்றிற்கும் காரணமாக ஒருவன் இருக்கவேண்டும். அவன் நம்மைப் போல ஸாதாரணனாயிருக்க முடியாது. பெரிய ஆளாக

* இந்த உபந்யாஸம் மாம்பலத்தில் செய்யப்பட்டது.

இருக்க வேண்டும். அவன் யார்? அவன்தான் பெருமாள். ஒரு ஸூத்திரக்காரர். இவரை இப்படியே சொல்லுகிறார். ஆகமத்திற்கு வைகாநஸ ஸூத்திரம் பாஞ்சராத்ர ஸூத்திரம் என்ற ஸூத்திரங்கள் உண்டு. நாம் வீட்டில் செய்யவேண்டிய கர்மாவைக் கூறப் பல ஸூத்திரங்களுண்டு.

ஆபஸ்தம்பர், போதாயநர், ஸத்யாஷாடர், திராஹ்யாயணர் முதலிய பலர் ஸூத்திரங்கள் எழுதியிருக்கின்றனர். அதில் போதாயநர் வீட்டுப் பூஜையைப்பற்றியும், ஆலய பூஜையைப்பற்றியும் ஸூத்திரங்கள் எழுதியிருக்கிறார். "அதாதோ மஹாபுருஷஸ்ய பூஜாம் வ்யாக்யாஸ்யாம:" என்று கூறுகிறார். மஹாபுருஷன், மஹாதேவன் என்பவரே பெருமாள். வேதம் அந்த மஹாபுருஷனை அறிந்ததாகக் கூறுகிறது. அந்தப் பாகத்திற்குப் புருஷஸூக்தம் என்று பெயர். அதில் பதினாறு மந்திரங்களுண்டு. அதைக்கொண்டே ஷோடசோபசார பூஜை செய்யலாம். அதற்குப் புருஷஸூக்த விதானம் என்று பெயர். சிவன், ஸுப்ரமண்யன், விநாயகர் முதலியவர்களுக்கும் அதைக்கொண்டே பூஜை செய்யலாம். அதில் கூறப்படும் பெருமாளே ஸர்வஜ்ஞன். அவனே உலகத்திற்குக் கர்த்தா என வேதங் கூறுகிறது.

ஸு-உக்தம் என்றால் நன்றாகச் சொல்லியது என்று பொருள். சமகம் என்று வேதத்தில் ஒரு பகுதி உண்டு. அதில் ஸு+உஷா-நல்ல காலை. ஸுதினம்-நல்ல தினம் என்று கூறப்பட்டிருக்கிறது. பெரியோரைப் பார்க்கும் போது இப்படிச் சொல்லுவது நமது நாட்டு வழக்கம். இதையே இதர தேசத்தவர் "குட் மார்னிங்" என்று கூறுகின்றனர். அந்தப் புருஷஸூக்தம் எல்லாச் சக்தியும் வாய்ந்த ஒரு மஹாபுருஷனே விசாலமான இவ்

வுலகைப் படைத்தவன் என்கிறது. அவன் ஒருவனே ஆனாலும் வேலைக்கு ஏற்றபடி ரூபத்தை எடுக்கிறான். இதைப்பற்றி வட மொழியில் காளிதாஸனுக்கு அடுத்த படி மஹாகவியான பாணன் ஓரிடத்தில் கூறுகிறார். அவர் சொல்லாத விஷயமில்லை. ஆதலால் 'பாணோச் சிஷ்டம் ஜகத் ஸர்வம்' என்று கூறுவதுண்டு. உச்சிஷ்டமென்பது தின்ன மிகுதியும் சொன்ன மிகுதியு மாம். பாணன் வசன நடையில் காதம்பரி என்றொரு நூல் இயற்றியிருக்கிறார். அது கத்யகாவ்யமெனப்படும். அதன் மங்களசுலோகத்தில், "ஒரே மஹாபுருஷன் ரஜோ குணத்தைக் கொண்டு பிரம்மாவாகிப் படைக்கிறார். ஸத்வ குணத்தால் விஷ்ணுவாகிப் பரிபாலிக்கிறார், தமோ குணத்தால் ருத்திரனாகி ஸம்ஹாரம் செய்கிறார், அவர் பிறப்பில்லாதவர்" என்கிறார். அவருக்குப் பிறப்பிருந்தால் நம்முடைய கோஷ்டியைச் சேர்ந்தவராய் விடுவார். அவரைப் படைத்தவர் வேறொருவர் வேண்டும்.

நாம் ஒருவனே ஆனாலும் நண்பனைக் கண்டு பிரியம் அடைகிறோம். அப்போது ஒரு மாதிரியாகிறோம். ஒருவன் தப்பு செய்யும்போது கோபம் உண்டாகிறது. அது வேறுமாதிரி. நம்முடைய குழந்தைகளுக்கு உபாதி உண்டாகும்போது கருணை உண்டாகிறது. அது வேறுமாதிரி அல்லவா? இதைப்போலத்தான் ஒரே மூர்த்தி மூன்று வேலை செய்ய முக்குணங்களைக் கொண்டு மும்மூர்த்தியானது. உலகிற்கு சிருஷ்டி ஸ்திதியைப்போல் ஸம்ஹாரமும் அவசியமேயாகும். நாமெல்லோரும் நானூறு வருஷம் சாகாமல் இருந்துபின் பிறந்தவர்களும் சாகாமல் இருந்தால் நாம் வஸிக்க இடம் போதுமா? உணவுதான் கிடைக்குமா? அப்படி ஒரு ஸ்வாமி ஸம்ஹாரம் செய்யாவிடில் நாம் வயதானவர்களை அடித்துக் கொன்று அவர் தொழிலைச் செய்ய ஆரம்பித்து விடுவோம்.

மூன்று வேலையையும் செய்யும் ஈசன் அநாதி. எந்த அர்சாங்கத்திற்கும் ஒரு சட்டம் வேண்டுமல்லவா? ஈசுவரனுக்கு வேதமே சட்டம். அதன் சொற்படி நடக்கிறார். அதுவும் அநாதியேயாம். நமக்கு உத்தியோகத்திற்குப் போகும்போது ஒரு வேஷம், வீட்டில் ஒரு வேஷம், தோட்டத்தில் ஒரு வேஷம். நாம் வெவ்வேறு ஸமயத்தில் வெவ்வேறு வேஷம் போடுகிறோம். ஒரே ஸமயத்தில் பகவான் பல வேஷம் போடுகிறார். நமக்கு அந்த 'சக்தி இல்லை. அவன்தான் நமக்கு நல்ல பந்து. நாம் பந்து என்று மனிதரிடம் பெண்ணைக் கொடுக்கிறோம், பணத்தைக் கொடுக்கிறோம். உடனே மநஸ்தாபம் ஏற்பட்டு பந்து சத்துருவாகிறார். பகவான் அப்படியல்ல. நாம் ஒரு வேலையைச் செய்தாலும் அவர் பந்து, செய்யாவிட்டாலும் பந்துதான். அவரைத்தான் நாம் ஆசிரயிக்க வேண்டும். அவருக்கு ஓர் இடத்தை நாம் கல்பிக்க வேண்டும். அங்குப்போய் நமது உடலைத் தண்டம்போல் தள்ளவேண்டும். ஏன்?

இதுவரை 'நாம்', 'நாம்' என்று இந்த சரீரத்தை நினைத்துக் கர்வங்கொண்டோம். இதைக் கீழே தள்ளி இந்த உடல், உம்முடையது; நீர் தந்தது என்று அங்கு அஹங்காரத்தை விடவேண்டும். பகவானது எதிரே வணங்கினால் போதும், எங்கும் திக்விஜயம் செய்யலாம். தண்டம் ஸமர்ப்பிப்பது என்பது வைஷ்ணவ பரிபாஷை. பிராமணரல்லாதவர்கள், "ஸ்வாமீ தண்டம்" என்பார்கள். தெலுங்கர்களும், "தண்டம் பெட்டேதி" என்பார்கள். ஆதலால் தண்டம் போல் சரீரத்தை ஆலயத்தில் கீழே தள்ளுவதென ஸம்பிரதாயம் தெரிகிறது. ஸத்வ குணந்தானே சிறந்தது. அதை நாம் கைப்பற்ற வேண்டும். அப்படியிருக்க, தமோகுண மூர்த்தியுள்ள சிவாலயத்திற்குப் போகலாமா? ஒருவர் கோபாவேசத்தால்

வீட்டிலுள்ளோரைத் திட்டி, அடித்துப் பாத்திரங்களை வீசி எறியும்போது சென்றால் நம் காரியம் ஆகுமா? சிவனே உடலில் ஒரு ஸமயம் துணி அணிவார். மற்றொரு ஸமயம் வஸ்திரமிராது. அவர் பெயரால் சுடுகாட்டுக்கு ருத்திர பூமி என்று பெயர் வந்தது. அங்கேதான் அவர் வசிப்பவர். அவர் தோழர்களோ பூதப்பிரேத பிசாசங்கள். மாலையோ எலும்புகள், மண்டை ஒடு கையிலுள்ள பாத்திரம்.' இவரை எப்படி உபாஸிப்பது? ஒரு ஸந்தேஹத்தைக் கிளப்புவது பாபம். அதைவிட பாபம் அதற்குப் பதில் சொல்லாமலிருப்பது. ஏன்? ஒருஸமயம் நாம் சிவாலயஞ் சென்றால் இந்த ஸந்தேஹந்தான் முன்னே தோன்றும். ஸந்தேஹத்தையகற்ற வேதத்தையும் குருவையுந் தவிர. வேறு வழி இல்லை. அந்த வேதம் மலைபோலுள்ளது. கழுக்குன்றத்தில் வேதமே மலையாயிருக்கிறது. ஆதலின் வேதாசலம் வேதகிரி எனப் பெயர் வழங்குகிறது. அதை நான் பிரதக்ஷிணம் வரும்போது தேவ தேவ தேவ மஹாதேவ என்று பக்தர்கள் பஜனை செய்தனர்.

நான் வேத வேத வேத மஹாவேத என்றும் கூறும்படி சொன்னேன். அந்த வேதம், ருத்திரன்தான் புருஷன் என்கிறது. சிறு காரியம் முதல் மோக்ஷம் வரை அவனை வணங்கிப் பெறலாம். அந்த மஹா புருஷனுக்கு உலகெல்லாம் உடல். ஒரு சிறு வெளவால் புழுக்கையை நாலாக்கி ஒன்றை பூதக்கண்ணாடியால்' பார்த்தேன். அதில் கட்டை விரல் அளவு ஒரு புழு நெளிந்தது. நமது உடலிலும் அநேக புழுக்களிருக்கின்றன. அவை தம்மை அறியா. நாமும் அதுபோல ஜகத்ஸ்வரூபியான பகவானிடத்தில் ஒரு புழுப்போலிருக்கிறோம். அவன்தான் முதல் சரீரமுள்ளவன் என சுருதி கூறுகிறது. அவன் ஒருவன்தான் முதலிலிருந்தான். அவனிடமிருந்து பின்

ணர் ஜீவர் பிறந்தனர் என்ற சுருதியை அன்னிய தேசத்தவர் அரைகுறையாக அர்த்தம் தெரிந்துகொண்டனர். ஆடம் (Adam) முதலிலிருந்தது. அதன்பிறகு ஈவ் (Eve) உண்டானது என்று கதை எழுதிவிட்டனர்.

द्वा सुपर्णा सयुजा सखाया
समानं वृक्षं परिषस्वजाते ।
तयोरन्यः पिप्पलं स्वाद्वत्ति
अनश्नन्नन्यो अभिचाकशीति ॥

[முண்டகோபநிஷத்]

"ஒரு மரத்தில் இரண்டு பக்ஷிகளிருக்கின்றன. ஒன்று பழத்தைத் தின்கிறது என்று சரீரத்திலுள்ள ஜீவன் கர்மபலத்தை அனுபவிக்கிறான், பரமாத்மா அநுபவிப்பதில்லை" என உபநிஷத் கதையாகக் கூறியதை பைபில் (Bible) ஒரு பழத்தைத் தின்றான் அதனால் ஜநந மரணம் வந்ததெனச் சொல்லுகிறது.

ஈசன் அவயவமான நாமும் சிருஷ்டி, ஸ்திதி, லயகாரியங்களைச் செய்கிறோம். ஸ்வப்நத்தில் அபூர்வமான அநேக விஷயங்களைப் படைக்கிறோம். விழித்தகாலத்தில் அவைகளைப் பாதுகாக்கிறோம். உறக்கத்தில் உபஸம்ஹாரம் செய்கிறோம். பரமபுருஷனது தூக்கமே பிரளயமாகும். மிக்க பலிஷ்டனாயிருந்தாலும் தூங்கும்போது அவனது துணியை ஒருவன் கொண்டுபோனால் அவனால் ஒன்றும் செய்ய முடிவதில்லை. தூக்கத்தில் இந்திரியங்கள் நம்மிடம் ஒடுங்குகின்றன. பரமாத்மாவினிடத்தில் உலகம் ஒடுங்குகிறது. இம்மூன்று அவஸ்தைகளுக்கும் ஆதாரமாக ஒன்றுள்ளது. அது ஸத்தியம். மற்றவை மாயை. அதே ஆத்மா எனப்படும். நான்காவதவஸ்தை ஒன்றுண்டு. அது துரீயநிலை. தூங்காமல் தூங்குவதென்பர். அது ஆநந்தமயம். அதற்குமுன் நித்திரையே ஆநந்தத்தை யளிப்பது. 'நன்றாகத் தூங்கினேன, ஸுகமாக இருந்தது' என எல்லோரும் கூறுவர்

விடோபா, வால்மீகி முதலிய பெரியோர் துரீயநிலையை அநுபவித்தனர்.

இயற்கையான ஆநந்தமே மாயையால் மறைக்கப்பட்டிருக்கிறது. மாயைக்கு ஆவரணசக்தி விக்ஷேபசக்தி என இரண்டு அம்சங்களுண்டு. மூன்றாவது கண்ணால் சிவன் கர்மாக்களை எரிக்கிறார். ஆநந்தமூர்த்தியானதால் தாண்டவமாடுகிறார். நித்திரைக்கு முந்திய பிரதோஷ காலமே ஆநந்தத்திற்கேற்ற ஸமயம். திரயோதசி தேவர்களது ஸந்தியா காலமாகும். அச்சமயம் பகவான் ஆநந்தக் கூத்தாடுகிறார். ஸகல உலகையும் தனக்குள் சுருக்கிக் கொள்ளுவதால் அவரிருப்பிடம் மஹாச்மசானமேயாகும். ஸம்ஹாரத்தினால்தான் ஸந்தோஷமுண்டாகிறது. வைத்தியன் கட்டியை அறுப்பதுபோல் நம்முடைய கர்ம துன்பத்தை ஈசன் அகற்றுகிறார். அவர் தமோமூர்த்தி என்றாலும் அவரது செயலும் உள்ளமும் ஸத்வகுணம் நிறைந்தன. ஆதலால் அவர் வஸிக்கும் மலை, வாஹநம், உடலில் அணியும் விபூதி, சந்திரன், கங்கை எல்லாம் வெண்மை நிறமுள்ளவை. விஷ்ணு ஸத்வமூர்த்தி. ஆனாலும் அவர் செயலும் உள்ளும் தமோகுணம் நிறைந்தன. ஜாக்கிரதவஸ்தை நமக்குத் துன்பத்தைத் தரவில்லையா? விஷ்ணுவின் உடல் கருப்பு, செயல் தூக்கம்; இரண்டும் தமஸே. பிரவிருத்தியைச் செய்யும் விஷ்ணுவைக் காலையில் எழுந்த உடன் துதிக்க வேண்டும். நிவர்த்தி செய்யும் சிவனை மாலையில் துதிக்க வேண்டும்.

அந்தச் சிவனை நமது உடலைக் கோயிலாக வைத்து உள்ளே நினைக்கவேண்டும். வீட்டில் அவருக்கு இடமளிக்க வேண்டும். ஊருக்குப் பொதுவாக ஒரு ஆலயங் கட்டவேண்டும். தேசத்திற்குப் பொதுவாக ஸ்ரீ ஆசார்யர்கள் ஏற்படுத்திய ஸ்ரீ சந்திரமௌலீசுவரரை ஆதரிக்க வேண்டும். உபன்யாஸங்களைக் கேட்பதோடிராமல், அநுஷ்டாநத்திற்குக் கொண்டுவர வேண்டும். காலையில் விஷ்ணுவைப் பஜியுங்கள், மாலையில் பத்து சிவநாமாவையாவது சொல்லுங்கள்.

[சுதேசமித்திரன்]

# 3

## ஷடங்கங்கள்

*[18—10—1932]*

வேதபுருஷனுக்குப் பல அங்கங்கள் இருக்கின்றன. வாய், மூக்கு, கண், காது, கை, பாதம் என்ற ஆறு அங்கங்கள் இருக்கின்றன. இவற்றை ஷடங்கம் என்று சொல்லுவார்கள். சடங்கு என்று சொல்லுவது அந்த வார்த்தையிலிருந்து மருவி வந்ததுதான்.

பழைய காலத்தில் தர்மசாஸனங்களெல்லாம் கோயிற் சுவர்களில் கல்லில் வெட்டப்பட்டிருக்கின்றன. தர்மங்களைப் பதிவு செய்யும் ஸப் ரிஜிஸ்தர் ஆபீஸ் பழைய நாளில் கோயில்தான். திருவாங்கூரில் ராஜ்யாதிகாரிகளுள் திருமந்திர ஓலை என்பவன் ஓர் உத்யோகஸ்தன் இந்தக் காலத்தில் பிரைவேட் ஸெகிரிடரி (Private Secretary) என்று சொல்லுவார்கள். அவன் அரசன் எது சொன்னாலும் அதை எழுதிக்கொள்ள வேண்டும். பின்பு அதை யார் யாருக்கு அனுப்பவேண்டுமோ அவரவர்களுக்கு அனுப்பவேண்டும். அந்தக் காலத்தில் யார் எந்தத் தர்மம் பண்ணினாலும் அதை மஹாராஜாவுக்குத் தெரிவிக்கவேண்டும். அவன் அதை ஒத்துக்கொண்டு ஆஜ்ஞை பண்ணுவான். அந்த ஆஜ்ஞையைத் திருமந்திர ஓலைக்காரன் எழுதி அனுப்புவான். அப்படி எழுதிக் கடைசியில், 'கல்லிலும் செம்பிலும் வெட்டிக்கொள்ளுவதாகவும்' என்று எழுதுவான். அந்த ஆஜ்ஞை எந்த ஊரில் தர்மம் செய்யப்படுகிறதோ அந்த ஊர் ஸபை

யாருக்கு அனுப்பப்படும். அவர்கள் அதைக் கோயிற் சுவரில் வெட்டச் செய்வார்கள்.

ஒவ்வொரு ஊரிலும் பிராம்மண ஸபை ஒன்று இருந்தது. அதில் வேதமும் மந்திரப் பிராம்மணமும் தெரிந்தவன் அங்கத்தினனாகலாம். அங்கத்தினர்களைத் தேர்ந்தெடுக்கும் முறைகள் உண்டு. இன்னார் இன்னார்தாம் அந்த ஸபைக்கு அங்கத்தினனாகலாமென்ற விதி உண்டு. இன்ன இன்ன குற்றம் செய்தவர்களும் அவர்களுடைய பந்துக்களும் ஸபைக்கு அங்கத்தினர் ஆகக்கூடாது என்ற நியதியும் உண்டு. ஒவ்வொருவர் பெயரையும் ஓலையில் எழுதிக் குடத்தில் போட்டு ஒரு குழந்தையைக் கொண்டு எடுக்கச் சொல்லுவது வழக்கம். அப்படி எடுத்த ஓலையில் உள்ள பெயருடையவர் ஸபைக்கு அங்கத்தினராவர். உத்திரமேரூர் என்னும் ஊரில் உள்ள சிலாசாஸனத்தில் இந்த விஷயங்கள் அதிக விரிவாகச் சொல்லப்பட்டுள்ளன.

அந்த ஸபையினர்க்குள் பல பிரிவுகள் உண்டு. நீருக்காக ஒரு பிரிவு, வரிபோட ஒரு பிரிவு முதலிய பல பிரிவுகள் உண்டு. தர்மத்துக்கு நிலம் கொடுத்தாலும், பணம் கொடுத்தாலும், மாடு ஆடுகளை கோயில்களில் தீபம் போடுவதற்காக விட்டாலும் அந்த ஸபையினர் மூலமாக விடவேண்டும். அவர்கள் அதை அங்கீகரிப்பார்கள். அந்த தர்மசாஸனத்தில், 'இங்ஙனம் ஸபையோம்' என்று அவர்கள் கையெழுத்துப் போடுவார்கள். அப்படி உள்ள கையெழுத்துக்களால் பலபேருடைய பெயர்கள இப்பொழுது தெரியவருகின்றன. அவற்றில், 'ஷட்கர்மநிரதன்' என்றும 'சடங்கவி' என்றும் பிராம்மணர்களுக்குப் பட்டம் கொடுக்கப்பட்டிருக்கிறது. 'சடங்கவி' என்பது

'ஷடங்கவித்' என்பதன் சிதைவாகும். ஷட்+அங்கம +வித். அதாவது ஆறு அங்கங்களை அறிந்தவன் என்பது அதன் அர்த்தம். அந்தப் பிராம்மணர்கள் ஆறு அங்கங்களையும் அறிந்தவர்கள் என்று தெரியவருகின்றது. வைதிக கர்மாக்களுக்குச் சடங்கு என்று சொல்லும் சொல் ஷடங்கம் என்பதிலிருந்துதான் வந்தது.

ஆறு அங்கங்களாவன : சிக்ஷை, வியாகரணம், நிருக்தம், கல்பம், சந்தஸ், ஜ்யோதிஷம் என்பவை. பிராம்மணன் வேதங்களையும் இந்த ஆறு அங்கங்களையும் தெரிந்துகொள்ள வேண்டும். முதலில் வேதாத்தியயனம் செய்ய வேண்டும். அந்த வேதத்திற்கு அர்த்தம் தெரிந்துகொள்ளும் பொருட்டு இந்த ஆறு அங்கங்களும் தெரிந்துகொள்ள வேண்டும்.

ब्राह्मणेन निष्कारणो धर्मः षडङ्गो वेदोऽध्येयो ज्ञेयश्च ।

பிராம்மணன் காரணம் தெரிந்து கொள்ளாமலே வேதங்களையும் சாஸ்திரங்களையும் தெரிந்துகொள்ள வேண்டும்.

வேதபுருஷனுக்கு சிக்ஷை மூக்கு, வியாகரணம் முகம், அதாவது வாய்; வியாகரணப்படி ஒன்றைச் சொல்ல முடியாவிட்டால் உளறவேண்டும். கல்பம் கை; நிருக்தம் காது; சந்தஸ் பாதம்; ஜ்யோதிஷம் கண்.

கண் இல்லாதவன் குருடன். கண் எதற்காக இருக்கிறது? பக்கத்திலுள்ள வஸ்துவைக் கையினால் தடவிப் பார்த்துத் தெரிந்துகொள்ளலாம். 50 அடி தூரத்திலுள்ளதைப் பார்க்கவேண்டுமானால் அப்பொழுது கண் வேண்டும். ஆகையால் தூரத்தில் இருப்பதைத் தெரிந்து கொள்ளக் கண் வேண்டியிருக்கிறது. அதுபோல் ஜ்யோதிஷம் இருக்கிறது. இன்றைக்குச் சூரியன் சந்தி

ரன் முதலியவர்கள் எங்கே இருக்கிறார்களென்பதைப் பிரத்தியக்ஷத்தில் நாமே பார்த்துத் தெரிந்துகொள்ள லாம். 500 வருஷங்களுக்கு அப்புறம் ஒரு கிரஹம் எங்கே இருக்கும் என்பது தெரியவேண்டுமானால் ஜ்யோதிஷத் தால்தான் அறிந்துகொள்ள வேண்டும். தூரத்தில் இருப்பதைத் தெரிந்துகொள்ள எப்படிக் கண் உபயோ கப்படுகிறதோ அப்படிப் பல வருஷங்களுக்கு அப்புறம் உள்ள கிரஹ நிலைகளைத் தெரிந்து கொள்ளுவதற்கு ஜ்யோதிஷம் உபயோகப்படுகிறது. அதனால்தான் அதைக் கண் என்று சொன்னார்கள்.

கணிதம் என்பது ஜ்யோதிஷத்தின் ஒரு பிரிவு. நவ கிரஹங்களின் கதியைக் கணக்குப் பண்ணும் முறை அதில் சொல்லப்பட்டிருக்கிறது. கணக்கு, கூட்டல், கழித் தல், பெருக்கல், வகுத்தல், என நான்கு வகை. இவை வியக்த கணிதம் என்று சொல்லப்படும். சில ஸம்ஜ்ஞை களை வைத்துக்கொண்டு கணக்குப் பண்ணுவது அவ் வியக்த கணிதம் எனப்படும். பலதடவை கூட்டுதல்தான் பெருக்கல் ஆகும். பலதடவை கூட்டுவதை ஸுலப மாகப் பெருக்குதலால் அறிந்துகொள்ளலாம். அப்படியே பலதடவை கழிப்பதை வகுத்தலால் அறிந்துகொள்ள லாம். க்ஷேத்ரக்கணிதம் என்பது ஒன்று. சதுரம், வட் டம், திரிகோணம் முதலியவற்றைப்பற்றி அதில் சொல் லப்பட்டிருக்கிறது. ஜ்யாமிதி என்று ஒரு வார்த்தை கணிதத்தில் வருகிறது. ஜ்யா என்பது பூமி, மிதி என் பது அளவு. பூமியின் அளவைச் சொல்லுவது ஜ்யாமிதி என்று சொல்லப்படும். இப்பொழுது இங்கிலீஷில் ஜ்யா மெட்ரி (Geometry) என்று வழங்குவது அந்தச் சொல் தான். ஜ்யாக்ரபி (Geography) என்பதும் ஸம்ஸ்கிருதத்தி லிருந்து போன வார்த்தைதான். ரேகாகணிதம் என்பது

ஒன்று. குட்டகம், அங்கபாசம் முதலிய பலவகைக் கணக்குகள் கணிதத்திற் சொல்லப்படுகின்றன.

இந்தக் கணிதங்கள் திதி முதலியவற்றை அறிவதற்கு உபயோகமாகும். பிராம்மணர்கள் வைதிக கர்மாக்களைச் செய்வதற்குரிய காலங்களைத் தெரிந்துகொள்ள வேண்டுமல்லவா? அதற்காக ஜ்யோதிஷம் உபயோகப்படுகிறது.

இப்படியே ஒவ்வொன்றும் வேதத்துக்கு அங்கமாக இருக்கின்றது. பிராம்மணன் இவற்றை அறிந்துகொள்ள வேண்டும்.

---

GOVERNMENT ORIENTAL MSS. LIBRARY
21 JAN 1953
TRIPLICANE P.O. MADRAS

# தர்மப் பிரமாணங்கள்

[19—10—1932]

உலகத்தில் புஸ்தகங்கள் நிறைய இருக்கின்றன. ஒவ்வொன்றும் ஒவ்வொரு விஷயத்தைச் சொல்லுகிறது. ஒவ்வொரு மதத்தினரும் ஏதாவது ஒன்றைக் கௌரவமாக வைத்திருக்கிறார்கள். எல்லாம் புஸ்தகங்களே. ஆனாலும் ஒரு புஸ்தகத்தை விசேஷமாகக் கொண்டாடுகிறார்கள். அதில்தான் ஜன்மம் கடைத்தேறும் வழிகள் சொல்லப்படுவதாகச் சொல்லுகிறார்கள். அதில் இருக்கிறது எல்லாவற்றிலும் முக்கியமானது என்று எண்ணுகிறார்கள். அந்தப் புஸ்தகத்துக்குப் பூஜை செய்கிறார்கள்; நமஸ்காரம் செய்கிறார்கள். சில மதஸ்தர்கள் அந்தப் புஸ்தகத்திற்கே தனியாகக் கோயில் கட்டி வணங்குகிறார்கள். ஸீக்கியர்கள் அவ்வாறு செய்து வருகிறார்கள். அவர்களுடைய மதப்புஸ்தகத்தை அவர்கள் கிரந்த ஸாஹேப் என்று மரியாதையாகச் சொல்லுவார்கள். இப்படி ஒவ்வொரு மதத்தினரும் தங்கள் தங்கள் ஆத்ம க்ஷேமத்திற்கு வேண்டிய மார்க்கங்களைச் சொல்லும் ஒவ்வொரு புஸ்தகத்தைப் பெற்றிருக்கிறார்கள்.

நம்முடைய வைதிக மதத்திற்கு எந்தப் புஸ்தகம் இருக்கிறது? மற்ற மதஸ்தர்களை உங்கள் மதப் புஸ்தகம் எது என்று கேட்டால் அவர்களுக்குச் சந்தேகமில்லாமல் செய்து இருக்கிறார். எச்சப்படாமற் பாராயணம் பண்ணுவதற்கு உபயோகப்படுமென்று நினைத்தாற் போலிருக்கிறது.

मन्त्रो हीनः स्वरतो वर्णतो वा मिथ्याप्रयुक्तो न तमर्थमाह ।
स वाग्वज्रो यजमानं हिनस्ति यथेन्द्रशत्रुः स्वरतोऽपराधात् ॥

எழுத்துக்களின் ஸ்வரும் தவறினால் விபரீதமான பலன்

உண்டாகும். துவஷ்டா என்று ஒருவர் விருத்திரனை உண்டுபண்ணுவதற்காக ஹோமம் பண்ணினார். ஒரு ஸ்வரம் தவறிப்போய்விட்டது. அதனால் அவருக்குத் துன்பம் உண்டாயிற்று. நாம் ஸந்தியாவந்தனத்தை ஸ்வரம் தப்பிச் செய்து வருகிறோம். அதற்குத் தகுந்த படிதான் பலனும் இருக்கிறது.

இன்ன எழுத்துக்கு இன்ன ஸ்வரமென்பது வேதத்தின் பிரதமாங்கமாகிய சிக்ஷையில் சொல்லப்பட்டிருக்கிறது. ஸம்ஸ்கிருதத்தில் 51 அக்ஷரங்கள் இருக்கின்றன. மாத்ருகா என்று அவற்றிற்குப் பெயர். இந்த அக்ஷரங்கள் அம்பாள் ஸ்வரூபம். இன்ன இன்ன அங்கம் இன்ன இன்ன அக்ஷரம் என்று கூறப்பட்டிருக்கிறது. ஆத்ம க்ஷேமத்துக்கு உபயோகமாகின்றவைகள் இந்த ஐம்பத்தோர் அக்ஷரங்கள்தாம். லோகத்தில் பலவிதமான சப்தங்கள் இருந்தாலும் சிரேயஸுக்கு ஸாதனமாக உள்ள அக்ஷரங்களைப் பொறுக்கிச் சேர்த்து வேதமாக்கி வைத்திருக்கிறார்கள்.

சிக்ஷை வேதபுருஷனுக்கு நாஸிகையாகும். அதாவது பிராணஸ்தானம். இப்படியே ஒவ்வோரங்கமும் வேதபுருஷனுக்கு ஒவ்வோரங்கமாகும்.

GOVERNMENT ORIENTAL MSS. LIBRARY ... 21 JAN 1958 ... MADRAS

# 5

## வியாகரணம்

[20—10—1932]

நம்முடைய மதத்துக்கு பிரமாணமாக இருப்பவை வேதம் நான்கு, அங்கம் ஆறு, உபாங்கம் நான்கு: ஆகப் பதினான்கு. இவை வித்தியாஸ்தானங்களென்றும் சொல்லப்படும்.

வேதபகவானுக்கு அங்கம் ஆறில் சிக்ஷை நாஸிகாஸ்தானம். இரண்டாவது அங்கமாகிய வியாகரணம் முகம். முகம் என்பது இங்கே வாய். வியாகரணங்கள் பல இருக்கின்றன. முக்கியமாக பிரசாரத்தில் இருப்பது பாணிநிமஹரிஷி செய்த வியாகரணம். அந்த வியாகரண ஸூத்திரங்களுக்கு ஒரு வார்த்திகம் இருக்கிறது. அதைச் செய்தவர் வரருசி. வியாகரணத்திற்குப் பாஷ்யம் செய்தவர் பதஞ்ஜலி. இந்த மூன்றும் முக்கியமான வியாகரண சாஸ்திரங்கள். மற்ற சாஸ்திரங்களுக்கும் இதற்கும் ஒரு வித்தியாசம் உண்டு. அவைகளில் பாஷ்யத்தைவிட ஸூத்திரங்களுக்குத்தான் கௌரவம் அதிகம். வியாகரணத்தில் அப்படியில்லை, ஸூத்திரத்தைவிட வார்த்திகத்திற்கு மதிப்பு அதிகம். வார்த்திகத்தைவிட பாஷ்யத்திற்குக் கௌரவம் அதிகம். ஆறு சாஸ்திரங்கள் என்று ஒரு பிரிவு உண்டு. அந்தப் பிரிவில் வியாகரணமும் ஒன்று. நான்கு சாஸ்திரங்கள் மிக்க பிரஸித்தி உடையவை. அவை தர்க்கம், மீமாம்ஸை, வியாகரணம், வேதாந்தம் என்பவை. அவைகளிலும் வியாகரணம் ஒன்றாக இருக்கிறது. ஆறு அங்கங்களிலும் ஒன்றாக இருக்கிறது.

வியாகரணம் ஸூத்திர ரூபமாக இருக்கிறது. சிறு சிறு வார்த்தைகளால் சுருக்கமாகச் செய்யப்பட்டது ஸூத்திரம்.

सूचनात् सूत्रम् ।

ஒவ்வொரு சாஸ்திரத்திற்கும் பாஷ்யம் உண்டு. அவைகளை எல்லாம் இன்ன இன்ன பாஷ்யம் என்று குறிப்பிட்டுச் சொல்லுவதுண்டு. வியாகரண பாஷ்யத்தை மட்டும் மஹா பாஷ்யமென்று சொல்லுவார்கள். அதனாலேயே அதனுடைய பெருமை தெரியவருகின்றது. அந்தப் பாஷ்யம் மஹரிஷி பதஞ்ஜலியால் இயற்றப்பட்டது.

சிவன் கோயில்களில் வியாகரண தான மண்டபம் என்னும் பெயரையுடைய மண்டபம் ஒன்று இருப்பதுண்டு. வக்காணிக்கும் மண்டபம் என்று சொல்லுவதுண்டு. அத்தகைய மண்டபம் திருவொற்றியூரில் இருக்கிறது. சோழ நாட்டில் பல கோயில்களில் இருக்கிறது. எதற்காகச் சிவன் கோயிலில் வியாகரண தான மண்டபம் இருக்கிறது?

नृत्तावसाने नटराजराजो ननाद ढक्कां नवपञ्चवारम् ।
उद्धर्तुकामः सनकादिसिद्धान् एतद्विमर्शे शिवसूत्रजालम् ॥

என்று ஒரு சுலோகம் இருக்கிறது. இதைப்பற்றிக் கொஞ்சம் சொல்லுகிறேன்.

நடராஜன் என்பது பரமேசுவரனுடைய ஒரு பெயர். நடன், விடன், காயகன் என்பவர்களுள் நடன் ஒருவன். அவன் நாட்டியம் செய்பவன். அந்த நடர்களுக்கெல்லாம் ராஜா நடராஜா. யாரைக்காட்டிலும் உயர்ந்த நடனம் ஒருவன் செய்யமுடியாதோ அவன்தான் நடராஜா.

மஹா நடன்[1] என்று அவன் சொல்லப்படுகிறான். 'அம்பலக் கூத்தாடுவான்' என்று தமிழிற் சொல்லுவார்கள். அம்பலக் கூத்தாடுவான் பட்டன் என்பது பிராம்மணர்களுக்கு உரிய பெயராக இருந்ததென்று சாஸனங்களால் தெரியவருகிறது.

நிர்ணயஸாகர பிரெஸ் என்று பம்பாயில் ஒரு அச்சு யந்திராலயம் இருக்கிறது. அதில் பழைய காலத்தில் இயற்றப்பட்ட சிறு காவியங்கள் காவியமாலை[2] என்னும் பெயரால் வரிசையாக வெளியிடப்பெற்று வருகின்றன. அந்த மாலையில் பிராசீனலேகமாலை என்னும் பெயருடைய சில புஸ்தகங்கள இருக்கின்றன. பழைய காலத்து ஸம்ஸ்கிருத சாஸனங்கள் அதில் இருக்கின்றன. அந்தச் சாஸனங்களுக்குள் வேங்கி நாட்டுச் சாஸனம் ஒன்று இருக்கிறது. வேங்கி நாடு என்பது கிருஷ்ண நதிக்கும் கோதாவரி நதிக்கும் நடுவில் இருப்பது. அந்த நாட்டில் அகப்பட்ட தாம்மிர சாஸனம் ஒன்றை அந்தப் புஸ்தகத்தில் வெளியிட்டிருக்கிறார்கள். தெலுங்கு தேசத்தில் அரசாட்சி செய்துவந்த சோழ ராஜாக்களுக்கும் தஞ்சாவூரில் இருந்த சோழர்களுக்கும் விவாஹ சம்பந்தம் இருந்தது. தஞ்சாவூரில் ராஜராஜ நரேந்திரன் என்ற ஒரு அரசன் ஆண்டு வந்தான். அவன் தான் பிருஹதீசுவரஸ்வாமி கோயிலைக் கட்டினவன். வேங்கி நாட்டில் இருந்தவர்களுடைய பௌத்ரவம்சத்தானகிய குலோத்துங்க சோழனென்பவன் தஞ்சாவூர்ச் சோழவமிசத்தில் ஒருவனை ஆண்டிருக்கிறான். அவன் சோழ தேசத்துக்கு ஒரு முறை வந்த போது ஆந்திர தேசத்தில் வேதாத்தியயனம் விருத்தியடைய வேண்டுமென்று எண்ணி இங்கிருந்து 500 பிராம்

---

1 महाकालो महानटः [அமரம்]

2 Kāvya Mālā Series.

மணர்களைக் கொண்டுபோய் வேங்கி நாட்டிற் குடியேற வைத்தான். ஆந்திர தேசத்தில் உள்ள திராவிடலு என்ற பிரிவினர் இந்த 500 பிராம்மணர்களுடைய வமிசஸ்தர்களே.

அந்த 500 பிராம்மணர்களுடைய பெயர்களும், கோத்திரங்களும் அந்தச் சாஸனத்தில் சொல்லப்படுகின்றன. இன்ன இன்ன சாஸ்திரத்தில் வல்லவர், இன்ன இன்ன காரியங்கள் செய்யவேண்டியவர் என்பவைகளைப் போன்ற பல விவரங்கள் சொல்லப்பட்டிருக்கின்றன. இன்னர் இன்னருக்கு இவ்வளவு இவ்வளவு பாகம், இன்னர் இன்னருக்கு இந்த இந்தப் பூமி என்பனவும், அந்தப் பூமியின் எல்லை முதலியவைகளும் அதில் காட்டப்படுகின்றன. யார் வந்தாலும் அவர்கள் தங்களுக்குத் தெரிந்த வேதங்களையும் சாஸ்திரங்களையும் சொல்லி வைக்கவேண்டும். அதற்காக அவர்களுக்கு நிலங்கள் விடப்பட்டிருக்கின்றன.

रूपावतारवक्तुः एको भागः ।

என்று ஒரு வாக்கியம் இருக்கிறது. அதாவது ரூபாவதாரம் சொல்லுபவருக்கு ஒரு பாகம் என்று சொல்லப்பட்டிருக்கிறது. ரூபாவதாரம் என்பது ஒரு வியாகரண சாஸ்திரம்.

ஸித்தாந்தகௌமுதி என்று ஒரு வியாகரணம் இப்பொழுது அதிகமாகப் பிரசாரத்தில் இருந்துவருகிறது. அடையப்பலம் என்ற ஊரில் அவதாரம் செய்தவர்களும், 104 கிரந்தங்களை எழுதினவர்களும், சைவகிரந்தங்களை அதிகமாகச் செய்தவர்களும், குவலயானந்தம் என்னும் அலங்கார சாஸ்திரத்தை எழுதினவர்களுமாகிய அப்பைய தீக்ஷிதரவர்களுடைய சிஷ்யராகிய பட்டோஜி தீக்ஷிதர் என்பவர் அந்த ஸித்தாந்தகௌமுதி

யைச் செய்தார். அது பாணினியின் ஸூத்திரத்திற்கு வியாக்கியான ரூபமாக உள்ளது.

अर्धमात्रालाघवेन पुत्रोत्सवं मन्यन्ते वैयाकरणाः ।

என்று சொல்லப்பட்டிருக்கிறது. அரை மாத்திரை லாபம் கிடைத்தால் அது வியாகரண சாஸ்திரம் அறிந்தவர்களுக்கு, நிரம்ப நாள் பிள்ளை யில்லாதவனுக்கு ஒரு புத்திரன் உண்டானதுபோல ஸந்தோஷத்தைக் கொடுக்குமாம். 'அ' என்பதை 'ஆ' என்று நீட்டினால் அப்படி நீட்டினதற்குப் பலன் சொல்லவேண்டும். ஸூத்திரத்தில் எழுத்துக்களெல்லாம் மிகவும் கணக்காக இருக்கும். ஸித்தாந்தகௌமுதியில் வியாக்கியானம் கணக்காக இருக்கும். ஸூத்திரத்தில் அதிகம் இருந்தாலும் இருக்கலாம். இதில் இராது. அந்தக் கௌமுதி இப்பொழுது மிகவும் பிரஸித்தி அடைந்திருக்கிறது. அது சற்றேறக்குறைய 350 வருஷங்களுக்கு முன் செய்யப்பட்டது. இப்பொழுது அதைத்தான் ஸம்ஸ்கிருத வியாகரணம் வாசிக்கிறவர்கள் முதலில் வாசிக்கிறார்கள். இந்த வியாகரணத்தைச் செய்த பட்டோஜி தீக்ஷிதரென்பவரே தத்வகௌஸ்துபம் என்று ஒரு கிரந்தம் செய்து அதை குருவுக்குக் காணிக்கையாக அர்ப்பணம் செய்தார். அந்தப் புஸ்தகத்தில் பிரம்மத்தைவிட வேறுண்டென்று சொல்லுவது உபநிஷத்துக்களோடு ஒட்டாது என்றும், அத்வைதந்தான் உண்மையானது என்றும் தீர்மானம் செய்திருக்கிறார். மத்வமத கண்டனமாக மத்வமத வித்வம்ஸனமென்ற கிரந்தம் ஒன்று அப்பைய தீக்ஷிதரவர்களுடைய ஆஜ்ஞையின் மேல் அவர் செய்திருக்கிறார்.

அவர் செய்த ஸித்தாந்தகௌமுதிக்கு முன்பு, முன் சொன்ன ரூபாவதாரம் என்னும் வியாகரண சாஸ்திரம் பிரஸித்தமா யிருந்தது. ரூபம் என்பதற்கு சப்தத்தின்

முழு ஸ்வரூபம் என்று அர்த்தம். அவதாரம் இறங்குதல்; அதாவது வரலாறு. இந்த ரூபாவதாரத்தைப் பிரஸிடென்ஸி காலேஜில் உபாத்தியாயராயிருந்த ரங்காசாரியார் என்பவர் பிரசுரம் செய்திருக்கிறார்.

அந்த ரூபாவதாரத்தைச் சொல்லி வைக்கிறவர்களுக்குத் தனியே அதற்காக ஒரு பாகம் கொடுக்கப்பட்டதென்பது முன்னே சொன்ன சாஸனத்திலிருந்தும் தெரியவருகிறது. வியாகரணம் அவ்வளவு முக்கியமாக நினைக்கப்பட்டு வந்தது என்று அதனால் தெரியவருகிறது.

அந்தச் சாஸனம் ஏறக்குறைய 800 வருஷங்களுக்கு முன் ஏற்பட்டது. அதில் ஒவ்வொரு பிராம்மணனுடைய பேரும் இருக்கிறது. ஷடங்கவித் என்ற பட்டம் அந்தப் பிராம்மணர்களிற் பல பேருக்கு இருக்கிறது. அவர்களுடைய பேர்களிற் பல தமிழில் இருக்கிறது. அம்பலக் கூத்தாடுவான் பட்டன், திருவரங்கமுடையான் பட்டன் என்பவை போன்ற பல பெயர்கள் அதில் வருகின்றன.

எல்லாரும் ஸ்மார்த்தர்களே. சிவ பக்தியும் விஷ்ணு பக்தியும் எந்தக் காலத்திலும் இருந்தது. அதனால்தான் சிவன் பெயரும் விஷ்ணு பெயரும் அவர்கள் வைத்துக் கொண்டிருந்தார்கள். வட தேசத்திலும் மலையாளத்திலும் இப்பொழுதும் ஸ்மார்த்தர்களே கோயிற் பூஜை செய்கிறார்கள். திருவரங்கமுடையான் பட்டன் என்றால் வைஷ்ணவரென்று நினைக்க வேண்டாம். திருவரங்கமுடையான் என்பதை ஸம்ஸ்கிருதத்தில் ரங்கஸ்வாமி என்போம். ஸ்வாமி என்றால் உடையான், 'ஸ்வம்' என்றால் ஸொத்து, உடைமை.

திருவம்பலக் கூத்தாடுவானென்பது நடராஜருடைய தமிழ்ப் பெயர். அவர் பெரிய கூத்து ஆடுகிறார். நாமெல்லாம் ஆடவேண்டிய கூத்தை அவர் ஆடுகிறார். அந்த நடராஜ விக்கிரஹத்தில் தலையிற் படர்ந்தாற்போல் ஒன்று இருக்கும். அது இரண்டு பக்கத்திலும் நீண்டு இருக்கும். அதில் சந்திரன் இருக்கும். கங்கையும் இருக்கும். அது என்ன? அதுதான் நடராஜாவுடைய ஜடாபாரம். இந்தக் காலத்தில் போட்டோ எடுக்கிறார்கள். அதில் ஸ்நாப்ஷாட் (Snapshot) என்பது ஒன்று. ஒரு வஸ்து சலனத்தில் இருக்கும்பொழுது திடீரென்று ஓர் அவஸரத்தில் எடுப்பது அது. நடராஜா வெகு வேகமாக நர்த்தனம் பண்ணுகிறார். பண்ணி நிறுத்தப் போகிற ஸமயத்தில் ஜடாபாரம் இரண்டு பக்கங்களிலும் நீட்டிக்கொண்டு இருக்கும். அந்த நிலையை அந்தக் காலத்துச் சிற்பி மனதிலே எடுத்த ஸ்நாப்ஷாட்டுத்தான் அந்த ஸ்வரூபம். அவருடைய கையில் ஓர் உடுக்கு இருக்கிறது. அது குடுகுடுப்பாண்டி வைத்திருப்பதை விடப் பெரியது; மாரியம்மன் கோயிற் பூஜாரி வைத்திருப்பதைவிடச் சிறியது. அதற்கு டக்கா என்றும் டமருகம் என்றும் பெயர்கள் உண்டு. பாதத்தின் தாளத்தை அநுஸரித்து அந்த டமருக தாளமும் இருக்கும்.

வாத்தியங்களில் முக்கியமானவை மூன்றுவகை. அவை சர்ம வாத்தியம், தந்திரி வாத்தியம், வாயுரந்திர வாத்தியம் என்பவை. இவைகளில் சர்ம வாத்தியம் தண்டத்தாலும் ஹஸ்தத்தாலும் அடிக்கப்படும். அந்த வாத்தியத்தை நிறுத்தும்பொழுது சாப்புக் கொடுப்பது வழக்கம். சேர்ந்தாற்போலச் சில அடிகள் அடிப்பது வழக்கம். அதுபோல நடராஜருடைய டமருகத்தில் நடனம் முடியும் காலத்தில் ஒரு சாப்புத்தொனி உண்டா

யிற்று. அதைப் பற்றித்தான் முன் சொன்ன சுலோகம் சொல்லுகிறது.

நடராஜா நிருத்தம் செய்கிறார். ஸனகாதிகள், பதஞ்ஜலி, வியாக்கிரபாதர் முதலியவர்கள் சுற்றி நின்று கொண்டிருக்கிறார்கள். அவர்கள் மஹாதபஸ்விகள். ஆகையால் அந்த நிருத்தத்தைத் தெரிந்துகொள்ள முடிந்தது. நடராஜாவினுடைய நடனத்தை ஞானநேத்திரம் உடையவர்கள் தாம் பார்க்க முடியும். ஸ்ரீகிருஷ்ண பகவானுடைய விச்வரூபத்தைத் தரிசிக்கும் சக்தியை வியாஸர் ஸஞ்ஜயனுக்கும், பகவான் அர்ஜுனனுக்கும் கொடுத்தார்கள். அதனால்தான் அந்த ஸ்வரூபத்தை அவர்களாற் பார்க்க முடிந்தது. மற்றவர்களாற் பார்க்க முடியவில்லை. தேவதைகளும் ரிஷிகளும் யோகிகளும் ஸ்ரீ நடராஜ மூர்த்தியின் தாண்டவத்தைப் பார்ப்பதற்காகப் பலப் பிரயத்தனங்கள் செய்து அதற்கு வேண்டிய பார்வையைப் பெற்றார்கள். அந்தப் பார்வை திவ்விய திருஷ்டி என்று சொல்லப்படும்.

दिव्यं ददामि ते चक्षुः पश्य मे योगमैश्वरम् ।

[கீதை, XI-8]

என்று சொல்லப்பட்டிருக்கிறது.

நம்முடைய கண்ணில் ஒருவகை அமைப்பு இருக்கிறது. லென்ஸ் (lens) என்ற ஒரு கருவி கண்ணில் இருக்கிறது. நமக்கு வஸ்துக்களெல்லாம் ஒருவகை அளவில் தோன்றுவதற்கு அந்த லென்ஸே காரணம். அதைப் பொறுத்தே நமது பார்வை இருக்கிறது. நாம் பார்ப்பவைகளையே இன்னும் பெரியவைகளாகப் பார்க்கக்கூடிய லென்ஸ் இருந்தால் அப்படியே பார்ப்போம். ஆகையால் நாம் பார்க்கிறவைகள் உண்மையானவை அல்லவென்று தெரிகிறது. ரூப அளவு கண்ணைப்

பொறுத்திருக்கிறது. இதைத்தான் திருஷ்டி ஸிருஷ்டி வாதமென்று வேதாந்தம் சொல்லுகிறது. ஆத்ம தத்வம்தான் நிஜம்; மற்ற தோற்றங்களெல்லாம் பொய் என்று சொல்லுகிறது.

நிஜமான கண்களைக் கொண்டு ஸனகாதிகள் பார்த்துக் கொண்டிருந்தார்கள். விஷ்ணு மத்தளம் கொட்டிக் கொண்டிருக்கிறார். பிரம்மா தாளம் போட்டுக் கொண்டிருக்கிறார். நிருத்தம் முடிகிற ஸமயத்தில் டமருகத்தில் 14 சப்தங்கள் எழுந்தன. அந்தச் சப்தங்களின் கணக்கும் வித்தைகளின் கணக்கும் 14 ஆகத்தான் இருக்கின்றன. அந்தப் பதினான்கு சப்தம் ஸனகாதிகளை உத்தாரணம் செய்வதற்காக உண்டாயின. தக்ஷிணாமூர்த்திக்குப் பக்கத்தில் வயதில் முதிர்ந்த நாலு பேர்கள் இருப்பதாகக் கோயிலில் பார்க்கிறோமே அவர்கள்தாம் ஸனகாதிகள். தேவாரத்தில் பல இடங்களில் "அன்றாலின் கீழிருந்து நால்வருக்கு உபதேசம் செய்தவன்" என்று. சொல்லப்பட்டிருக்கிறது. அந்த நால்வர் தாம் ஸனகாதிகள்.

அப்படி எழுந்த சப்தங்கள் சிவஸ்வரூபத்தை ஏக போகமாக அநுபவித்தற்கு மார்க்கமாக இருந்தன. அந்த சப்தங்களைச் சிவபக்தி ஸூத்திரங்களென்று வைத்து அவைகளுக்கு நந்திகேசுவரர் பாஷ்யம் எழுதினார்.

அப்பொழுது அங்கே இருந்தவர்களுள் பாணினி என்பவர் ஒருவர். அந்தப் பாணினி என்பவருடைய கதை "பிருஹத்கதை" என்ற ஒரு புஸ்தகத்திற் சொல்லப்பட்டிருக்கிறது.

அந்த பிருஹத்கதை பிராகிருத பாஷைகள் ஆறுக்குள் ஒன்ருகிய பைசாச பாஷையில் குணாட்டியர் என்பவிரால் செய்யப்பட்டது.

चित्रार्थी न बृहत्कथामचकथम् । [குவலயாநந்தம்]

என்று ஒருவர் சொல்லுகிருர்.

அந்த பிருஹத் கதையின் ஸங்கிரஹத்தை க்ஷேமேந்திரர் என்பவர் ஸம்ஸ்கிருதத்தில் எழுதிஞர். ஸோமதேவ பட்டர் கதாஸரித்ஸாகரம் என்று ஒன்று எழுதியிருக்கிருர். அது பிருஹத்கதையை அநுஸரித்த கதை. அரேபிக் கதைகள், ஈஸாப் கதைகள், பஞ்சதந்திரக் கதைகள் முதலியவைகளெல்லாம் அதில் இருக்கின்றன. தமிழிலும் பெருங்கதை என்று ஒன்று இருக்கிறது.

கதாஸரித்ஸாகரத்தில் பாணினியின் கதை சொல்லப் பட்டிருக்கிறது. மகத தேசத்தில் இப்பொழுது பாட்ஞவென்று வழங்கும் பாடலீபுத்திரத்தில் வர்ஷோபாத்தியாயர், உபவர்ஷோபாத்தியாயர் என்ற இருவர் இருந்தார்கள். உபவர்ஷோபாத்தியாயர் இளையவர். அவர் பெண் உபகோஸலை. வர்ஷோபாத்தியாயரிடம் வரருசி என்பவரும் பாணினியும் பாடம் கேட்டு வந்தார்கள். பாணினிக்குப் படிப்பு வரவில்லை. அதனல் அவரை வர்ஷோபாத்தியாயர் ஹிமாசலத்துக்குப் போய்த் தவம் பண்ணு என்று அனுப்பிவிட்டார். அவர் அப்படியே போய்த் தவம் செய்து ஈசுவர கிருபையை அடைந்தார். நடராஜருடைய தாண்டவத்தைப் பார்க்கும் சக்தியைப் பெற்ருர். நடராஜ தாண்டவத்தின் அவஸான காலத்தில் உண்டான 14 சப்தங்களையும் கொண்டு அவற்றைப் பதிஞன்கு ஸூத்திரங்களாக வியாகரணத்துக்கு மூலமாக வைத்துக்கொண்டு அஷ்டாத்தியாயியை எழுதிஞர்.

அந்தப் பதினான்கு ஸூத்திரங்களையும் ஆவணியவிட்டம் பண்ணுகிறவர்கள் கேட்டிருப்பார்கள்.

अइउण्....ऐऔच्, हयवरट्....हल् इति माहेश्वराणि सूत्राणि ।

இந்த எழுத்துக்களை அவர் எப்படி உபயோகப்படுத்திக் கொண்டார்? எழுத்துக்களைச் சேர்த்துச் சொல்ல ஒரு சுருக்கமான ஸம்ஜ்ஞையை இந்த ஸூத்திரங்களிலிருந்து பாணினி ஏற்படுத்திக் கொண்டார். 14 ஸூத்திரங்களில் ஒன்றின் முதலெழுத்தையும் மற்றொன்றின் கடைசி எழுத்தையும் சேர்த்துச் சொன்னால் நடுவில் இருக்கிற எல்லா எழுத்தையும் அது குறிக்கும்;

हयवरट् என்பதில் முதல் 'ஹ' हल् என்பதில் முடிவு 'ல்' இவைகளைச் சேர்த்தால் 'ஹல்' என்றாகிறது. அது இடையிலுள்ள மெய்யெழுத்துக்கள் எல்லாவற்றையும் குறிக்கும். இப்படியே 'அச்' என்பது உயிரெழுத்துக்களைக் குறிக்கும் ஸூத்திரங்களுடைய முதலெழுத்தாகிய 'அ'வையும் கடைசி எழுத்தாகிய 'ல்'லையும் சேர்த்து 'அல்' என்றால் எல்லா எழுத்தையும் குறிக்கும்.

अलोऽन्त्यस्य । [பாணினிஸூத்திரம்]

என்பது ஒரு ஸூத்திரம். இதில் 'அல்' என்பதற்கு எழுத்து என்பது அர்த்தம். இப்படிப்பட்ட ஸம்ஜ்ஞைகளாக மாஹேசுவர ஸூத்திரங்களை எடுத்துக்கொண்டு எட்டு அத்தியாயத்தில் பாணினி வியாகரணம் செய்தார்.

எல்லாப் பாஷைகளுக்கும் அகாரம் ஆதியாயிருக்கிறது. இந்துஸ்தானி பாஷையில் 'அலீப்' என்பது முதலெழுத்து, கிரீக்கில் 'ஆல்பா' என்பது முதலெழுத்து. இந்த இரண்டு எழுத்துக்களையெல்லாம் குறிக்கும் 'அல்' என்பதிலிருந்து வந்தவைகளே. இங்கிலீஷில் ஆல்பபெட் (alphabet) என்று எழுத்துக்களைக் குறிப்பதும் 'அல்' என்பதிலிருந்து வந்ததுதான்.

இவ்வாறு வியாகரணத்திற்கு மூல காரணமாயிருந்தது, நடராஜாவினுடைய டமருகத்தில் இருந்து உண்டாகிய மாஹேசுவர ஸூத்திரங்களென்று தெரிகிறது. லோகத்தில் சப்த சாஸ்திரங்களை ஏற்படுத்தியதற்குக் காரணமாக இருந்தவர் பரமேசுவரராகையினால் சிவன் கோயிலில் வியாகரணதான மண்டபம் அமைக்கப்பட்டிருக்கிறது.

நடராஜருக்கருகில் பதஞ்ஜலி வியாக்கிரபாதர் என்னும் இருவர் இருக்கிறார்கள். அவர்களுடைய பிம்பங்களை நடராஜாவினுடைய பிம்பத்துக்குப் பக்கத்தில் பார்க்கலாம். சீகாழிக் கருகில் ஒரு க்ஷேத்திரத்துக்குப் போயிருந்தேன். அங்கே கோயிலில் நடராஜாவுக்குப் பக்கத்தில் பதஞ்ஜலி வியாக்கிரபாதர் இவர்களுடைய உருவங்களை எழுதி இருந்தார்கள். வியாக்கிரபாதருக்குக் கீழே அவருடைய பெயராகிய வியாக்கிரபாதர் என்பது எழுதப்பட்டிருந்தது. எழுதுகிறவன் நன்றாகத் தெரிந்து கொள்ளாமையால் பதஞ்ஜலி என்னும் பெயரைப் பதஞ் சொல்லி என்று எழுதி இருந்தான். பதம் என்பது வியாகரணத்திற்கு ஒரு பெயர்.

पदवाक्यप्रमाण ।

இதில் பதம் என்பதற்கு வியாகரணம் என்பதுதான் அர்த்தம். ஆகவே ப த ஞ் சொ ல் லி என்பதற்கு வியாகரணம் சொன்னவர் என்று அர்த்தமாகிறது. பதஞ்ஜலி வியாகரணபாஷ்யம் செய்தவர் என்பதை முன்னே சொன்னேன். அந்தப் பெயர் அவருக்குப் பொருந்தியதை அறிந்து, அறியாத நிலையிலும் ஒரு தத்துவம் இருக்கிறதென்று ஸந்தோஷம் அடைந்தேன்.

தஞ்சாவூர் ராஜ்யத்தில் ஏறக்குறைய நானூறு வருஷங்களுக்கு முன் நாயகர் வமிசத்தில் ரகுநாதன்

என்னுமோர் அரசன் ஆண்டு வந்தான். அவன் காலத்தில் ஏற்பட்ட பழைய காவியம் ஒன்றை நான் பார்க்க நேர்ந்தது. அதை எழுதியவர் பெரிய சிவபக்தர். அவர் சொல்லியுள்ள ஈசுவரஸ்தோத்திரம் இரண்டை இங்குச் சொல்லுகிறேன்.

अज्ञातप्रभवैर्वचोभिरखिलैरालम्भि धर्मप्रभा-
हेतुत्वं विविधाध्वरक्रमकृतिष्वेकायनैश्चोदनैः ।
तेषामध्वरकर्मणामधिपतिं त्वामीशमाराध्नुवन्
धर्मानर्जयितुं न शक्ष्यति जनो दक्षोऽप्यदक्षोऽथ वा ॥ १ ॥

[ஸாஹித்யரத்நாகரகாவியம், XI-129]

(யஜ்ஞ நாராயண தீக்ஷிதரால் செய்யப்பட்டது.)

நமக்கு தர்மம் கிடைக்க வேண்டுமானால், பண்ணின கர்மாக்கள் பூர்ணமாக வேண்டுமானால், பகவானுடைய கிருபை அவசியம் என்பதை இந்தச் சுலோகம் கூறுகிறது. வாக்கானது எங்கிருந்து உண்டாயிற்றென்று தெரியாத தன்மையுடைய வேதங்கள் தர்மத்தைத் தெரிவிக்கக் காரணமாக இருக்கின்றன. அவை அநேக விதமான யஜ்ஞங்களைப் பண்ணு என்று ஆஜ்ஞை செய்கின்றன. அந்த யஜ்ஞகர்மாக்களுக்கதிபதி நீதான். யஜ்ஞேசுவரன் நீ. உன்னை ஆராதிக்காமல் எந்தக் கர்மாவின் பலனையும் ஒருவன் அடைய முடியாது என்று இதில் சொல்லப்பட்டிருக்கிறது.

आ वो राजानमध्वरस्य रुद्रं होतारम् ।

[தைத்திரீயஸம்ஹிதை]

என்று வேதம் சொல்லுகிறது. எப்படிப்பட்ட கெட்டிக்காரனாக இருந்தாலும் பரமேசுவர ஆராதனமில்லாமல் அவனுக்கு எந்தக் காரியமும் பூர்த்தியாகாது. இதற்குத்

தக்ஷிணே சாக்ஷி. இந்த சுலோகத்துக்கு முந்தின சுலோகத்தில் வியாகரணத்தைப்பற்றிச் சொல்லப்பட்டிருக்கிறது.

आदौ पाणिनिनादतोऽक्षरसमाम्नायोपदेशेन यः
शब्दानामनुशासनान्यकलयः शास्त्रेण सूत्रात्मना ।
भाष्यं तस्य च पादहंसकरवैः प्रौढाशयं तं गुरुं
शब्दार्थप्रतिपत्तिहेतुमनिशं चन्द्रावतंसं भजे ॥ २ ॥

[ஸாஹித்யரத்நாகரகாவியம், XI-124]

அக்ஷர ஸமாம்நயம் என்பது வியாகரணத்திற்குப் பெயர். அக்ஷரங்களுக்கு வேதம் என்பது பெயர். ஈசுவரனுடைய மூச்சுக்காற்று வேதம். அவருடைய கைக்காற்று அக்ஷர வேதம். அதாவது மாஹேசுவர ஸூத்திரம். சப்தானுசாஸனம் என்பது அதன் பெயர். பாணினிநாதத: என்பதற்குப் பாணிகளால் சப்தம் பண்ணினாய் என்றும் பாணினிக்குச் சப்தம் ஏற்பட்டது என்றும் இரண்டு அர்த்தங்கள் உண்டாகின்றன. அதாவது கையிலிருந்து உண்டான சப்தத்தை வைத்துக்கொண்டு பாணினி வியாகரணம் பண்ணினார் என்னும் கருத்து இதில் குறிப்பிக்கப்படுகிறது.

நீ கையாட்டியதால் ஸூத்திரங்கள் ஏற்பட்டன. காலையாட்டியதால் பாஷ்யத்தை உண்டுபண்ணினாய் என்று சுலோகம் சொல்லுகிறது. பாஷ்யத்தைச் செய்த பதஞ்ஜலி ஆதிசேஷாவதாரம். அவ்வாதிசேஷன் பரமேசுவரன் காலில் பாதஸரமாக இருக்கிறார். இதை நினைத்துத்தான் காலாட்டிப் பாஷ்யத்தை உண்டு பண்ணினார் என்று கவி சொன்னார். சப்தமும் அர்த்தமும் உன்னாலேற்பட்டது என்று அவர் முடிக்கிறார்.

வியாகரணத்திற்கு இப்படிப் பல காரணங்களால் பரமேசுவரன் மூல புருஷனாய் இருப்பதால் அவருடைய கோயிலில் வியாகரண தான மண்டபங்கள் ஏற்படுத்தப் பட்டிருக்கின்றன என்று நினைக்கிறேன்.

6

# பாஷையின் பிரயோஜனம்

[13—12—1952]

பிராணிகளிடைய ஹ்ருதயத்தில் இருக்கிற ஹாவம் மற்றப் பிராணிகளுக்குத் தெரியவேண்டு மென்றால் அதற்கு முக்கியமான ஸாதனமாக வாக்கு இருக்கிறது. இல்லாவிட்டால் ஹ்ருதயத்தில் உள்ள ஹாவம் மற்றப் பிராணிகளுக்குத் தெரியாது; கஷ்டமாக இருக்கும். அந்த வாக்கு, சப்த ஸ்வரூபமானது. அந்த சப்தம் இரண்டுவிதமாக இருக்கிறது. துவனியாத்மகம் வர்ணாத்மகம் என்பவை அவை. துவனியாத்மகம் அவ்வியக்தமான சப்தம். வர்ணாத்மகம் வியக்தமான சப்தம். துவனியாத்மகத்திலுள்ள ஸ்வர பேதத்தால் ஹிருதய ஹாவம் தெரியவருகிறது. ஒரு பசு இருக்கிறது. அது ஸந்தோஷமாக இருக்கும்போது ஒருவிதமான சப்தத்தை உண்டாக்குகிறது; பசியால் உண்டாக்குகிற சப்தம் ஒருவிதமாக இருக்கிறது; கன்று இல்லாவிட்டால் ஒரு வித சப்தத்தை உண்டாக்குகிறது. அந்த சப்தங்களால், எழுத்து மூலமாக அறிந்துகொள்ளப் படும் சப்தம் தெரியாவிட்டாலும், அவற்றின் ஸ்வரத்தால் ஹ்ருதய ஹாவம் இன்னதென்று தெரிகிறது. அப்படி தெரிகிற ஹாவம் ஸ்தூலமானது. ஸூக்ஷ்மமான ஹாபம் வியக்த சப்தத்தால் தெரியவேண்டும். வியக்த சப்தம் அக்ஷரங்கள். அகாராதி க்ஷகாராந்தம் உண்டான பாஷை வியக்த பாஷை யென்று சொல்லப்படும். எழுத்தில்லாத பாஷை பூர்வ காலத்தில் இருந்தது. அதை ம்லேச்ச பாஷை என்று சொல்லுவார்கள்.

म्लेच्छोऽव्यक्तशब्दः ।

வியக்தம் இல்லாதது அவ் வியக்தம். இங்கிலீஷில்

வியக்தமில்லாத சப்தங்கள் இருக்கின்றன. சப்த வியக்தி இல்லை. இன்னதற்கு இன்ன சப்தம் என்ற வியக்த மான விபாகம் இல்லை. C என்ற எழுத்திற்கு ஸி என்ற சப்தமுண்டு. Cat என்ற பொழுது 'க' என்ற சப்தம் இருக்கிறது. இப்படி ஒரெழுத்துக்குப் பல சப்தங்கள் இருக்கின்றன. ஒரு சப்தத்துக்குப் பல எழுத்துக்கள் உபயோகிக்கப்படுகின்றன. ககாரத்துக்கு, C, K, Q என்ற எழுத்துக்கள் வருகின்றன. மெய் எழுத்துக் களுக்கு இப்படி இருப்பதுபோலவே உயிரெழுத்துக் களுக்கும் இந்த மாதிரி உச்சரிப்பு இருக்கிறது. பே, ப் என்ற இரண்டிடங்களிலும் உயிர் சப்தத்தைக் குறிக்க A உபயோகிக்கிறார்கள். Put என்பதில் உள்ள Uக்கு உகார சப்தம்; But என்பதிலுள்ள அதே Uக்கு அகார சப்தம். ஸம்ஸ்காரமில்லாத சப்தங்களாக இவை இருக் கின்றன. ஒரெழுத்துக்கு அநேக சப்தம் வைத்தால் அப்யஸிக்கிறவர்களுக்கு அதிகக் கஷ்டம் உண்டாகிறது. மிருக பாஷையாகப் பேசின பாஷை எழுதும்படி வந்தால் பரிசுத்தி இல்லாமல் இருக்கும். நம்முடைய தேச பாஷைகள் முதலில் கஷ்டப்பட்டுத் தெரிந்துகொள்ள வேண்டியிருக்கின்றன. ஒரு வருஷம் சிரமப்பட்டுப் பால சிக்ஷை வாசித்துவிட்டால் பின்பு எதையும் வாசிப்பது கஷ்டமில்லை. இங்கிலீஷில் எம். ஏ. பரீட்சை தேறிவிட் டாலும் ஏதாவது ஒரு பதத்திற்கு உச்சரிப்பு தெரிவ தற்கு அகாரதி (Dictionary) வேண்டியிருக்கிறது. இது நம்முடைய தேச பாஷைகளுக்கும் மற்ற பாஷைகளுக்கும் உள்ள வித்தியாஸம்.

ஸம்ஸ்காரம் செய்த சப்தமாகையால் ஸம்ஸ்கிருதம் என்ற பெயர் உண்டாயிற்று. அகாராதி க்ஷகாராந்தம் இருப்பதால் அவைகளுக்கு அக்ஷமாலிகா என்பது பெயர். அக்ஷ என்பது அகராதி க்ஷகாராந்தம் என்

பதைக் குறிக்கிறது. ஜகத்திலுள்ள ஸமஸ்த உச்சாரணங்களும் இந்த அகராதி க்ஷகாராந்தமாகவுள்ளவற்றுள் உள்ளனவென்று சப்த சாஸ்திரஜ்ஞர்கள் அபிப்பிராயப் படுகிறார்கள்.

பாஷாந்தரங்களில் இரண்டு அல்லது மூன்று எழுத்துக்கள் ஸம்ஸ்கிருதத்தில் இல்லாமல் அதிகமாக உண்டு. சீன பாஷை, பிரெஞ்சு பாஷை, தமிழ்ப்பாஷை இந்த மூன்றிலும் 'ழ' என்ற ஓர் உச்சாரணம் உண்டு. பிரெஞ்சு பாஷையில் 'ழ'க்கு J, G என்னும் இரண்டையும் உபயோகிக்கிறார்கள். Jendow என்பதை 'ழாந்தா' என்று சொல்லுகிறார்கள். Judge என்பதை ழூ என்று உச்சரிக்கிறார்கள். இந்த வார்த்தைகளில் J-க்கு 'ழ'வை உச்சரிக்கிறார்கள். சீன பாஷையில் 'ழ' உண்டு. மிருகசீர்ஷ நக்ஷத்திரத்தில் பூர்ணிமை வருவது மார்க்கசீர்ஷம்; அதை மார்கழி என்று தமிழில் சொல்லுகிறார்கள். 'ழ' வேறு, 'ள' வேறு.

ஜபம் செய்யும் மாலைக்கு அக்ஷமாலை என்று பெயர். ஜபம் பண்ணுவதற்குக் கணக்கு வைத்துக் கொள்ள வேண்டும். அகாரம் முதல் க்ஷகார பரியந்தம் சொல்லி ஜபம் செய்ய வேண்டும். இப்படி இரண்டு தடவை பண்ணினால் மாலை பூர்த்தியாகிறது. ஸ்படிகாக்ஷமாலா, ருத்ராக்ஷமாலா என்று மாலைகளைச் சொல்லுகிறார்கள். அகராதி க்ஷகாராந்தமான மாலை என்பதனால் தான் அப்படிச் சொல்லப்படுகின்றன. ருத்ராக்ஷம் முதலியவை கையில் இருக்கும் அக்ஷமாலை. அகராதி க்ஷகாராந்தம் உள்ளவை மனதிலிருக்கும் மாலை.

நாக்கில் வருகிற எல்லா உச்சாரணங்களும் அகராதி க்ஷகாராந்தத்தில் இருக்கின்றன. ஒருவர், எல்லா விதமான சப்தங்களும் தமிழில் இருக்கின்றன என்று எழுதியிருக்கிறார். நமக்குத் தெரிந்தவரையில் ஸம்ஸ்கிருதத்

தில் இல்லாத சப்தங்கள், F, ழ, ஃ என்ற மூன்று மென்று தெரிகிறது. 'ஃ' என்பதைத் தமிழில் ஆய்தம் என்று சொல்லுவார்கள். அஃது என்று சொல்லும்பொழுது அந்த உச்சாரணம் இருக்கிறது. இந்த மூன்றும் ஐம்பத்து நான்கு அக்ஷரங்களில் இல்லை. அகராதி க்ஷகாராந்தம் 50 எழுத்துக்களும் இருக்கின்றன. இந்த மூன்று எழுத்துக்களும் சேர்ந்துவிட்டால் எல்லா விதமான சப்தங்களும் இருப்பதாகச் சொல்லிவிடலாம்.

பாணினி மஹரிஷி வியாகரண சாஸ்திரம் செய்திருக்கிறார். அவருடைய வியாகரண ஸூத்திரத்தில்

'ஹ் கப் பௌச'

என்ற ஒரு ஸூத்ரம் இருக்கிறது. ராம: என்பதில் கடைசியில் இருப்பது விசர்க்கம் என்று சொல்லப்படும். விசர்க்கமென்பதற்கு விடுவது என்பது அர்த்தம். ராம: என்பதன் பின் கருணாகர: என்பது வந்தால் ராம: கருணாகர: என்று வரும். சந்தி சாஸ்திரம் சொல்லுகிறது: ராம: என்று தனியாகச் சொன்னால் ஹகாரம் வருகிறது. சந்தியில் வேறு உச்சாரணம் உண்டாகிறது. அந்த உச்சாரணத்திற்கு ஜிஹ்வாமூலீய மென்றுபெயர். அது தமிழில் உள்ள ஆய்த எழுத்தினுடைய சப்தத்தை உடையது.

விசர்க்கத்தின் முன்பு ககாரம் வந்தால் ஒருவித உச்சாரணம் ஏற்படுகிறது. ராம:+பண்டித:=ராமf பண்டித:; வ்ருக்ஷ:+பலம்=வ்ருக்ஷfபலம் என்று வரும். இந்த ஸந்தியில் உண்டாகிற சப்தம் உபத்மானீயம் என்று சொல்லப்படும். அது F மாதிரி இருக்கிறது. த்மா என்றால் ஊதுதல் என்பது அர்த்தம். அதை உச்சரிக்கையில் ஊதுவதால் அப்பெயர் அதற்கு ஏற்பட்டது.

வேதத்தில் ளகார உச்சாரணம் இருக்கிறது. ழகாரத்திற்கும் ளகாரத்திற்கும் ஒரு ஸம்பந்தம் உண்டு. ழகர்ரம் சொல்லவேண்டிய இடததில் மற்றப் பாஷைக்காரர்கள் ளகாரத்தைச் சொல்லுகிறார்கள். தமிழில் கூடச் சிலபேர் வாழைப்பழம் என்பதற்கு வாளைப்பழம் என்று சொல்லுகிறார்கள். 'ழ'வை நினைத்தால் 'ர' வருவதில்லை. 'ள' தான் வருகிறது. அந்த இரண்டு எழுத்துக்கும் ஒருவித சம்பந்தம் இருக்கிறதென்பதை அது காட்டுகிறது.

யஜுர் வேதத்தில் ஡காரம் வருமிடத்தில் ருக் வேதத்தில் ளகாரம் வரும். ஈ௰ீஂஜெ, என்று யஜுர் வேதத்தில் வருவது 'ஈ௰ீஂஜெ, என்று ருக்வேதத்தில் வரும். மூன்றுவது ஡க்கு ளகாரம் வருகிறது. 'ஜீ஡஻ஷூஊய, என்று யஜுர் வேதத்தில் வருகிறது. அதே, ருக்வேதத்தில் வருகிறது. அப்பொழுது ஡காரத்துக்குப் பதிலாக ஓர் உச்சாரணம் வருகிறது. ஸ்தூல ளகாரம் இல்லாமல் ழகாரம் அந்தர்ப்பாவமாக உள்ள ஒரு சப்தமாக அது இருக்கிறது. அது 'ழ'வைப் போலத்தான் இருக்கும்.

இப்படி, ஃ, F, ழ என்ற மூன்று சப்தங்களும் ஸம்ஸ்கிருதத்தில் அந்தர்ப்பாவமாக இருக்கின்றன. அதனால் தான் அக்ஷமாலையில் எல்லாவிதமான சப்தங்களும் இருக்கின்றன என்று சொல்லுகிறார்கள்.

அக்ஷரங்களுக்கு வர்ணமென்று ஒரு பெயர் உண்டு. வர்ணம் என்பதறகு மூன்று அர்த்தம் உண்டு. சுக்கிலம், நீலம், மஞ்சள் முதலிய திருஷ்டிக் கிராஹ்யமான நிறங்களுக்கு வர்ணம் என்னும் பெயர் உண்டு. நான்கு வர்ணம்—பிரம்ம க்ஷத்திரிய வைசிய சூத்திரர்கள் என்று சொல்லும் வர்ணம் ஒன்று. அகாராதி க்ஷகா

ராந்தமான எழுத்துக்களுக்கும் அந்தப் பெயர் உண்டு. ஆக, வர்ணம் என்பதற்கு மூன்று அர்த்தங்கள் இருக்கின்றன.

லிபி என்று அக்ஷரங்களுக்கு ஒரு பேர் உண்டு. வாயிலிருந்து சப்தம் வர ஸாத்தியமில்லாத பொழுது மற்றவர்களுக்கு மனோபாவத்தைத் தெரிவிக்கும் ரேகா விசேஷந்தான் லிபி. அந்த ரேகையினால் எழுத்தை அநுமானம் செய்துகொள்ள வேண்டும். 'கா' என்று எழுதினால் அது சப்தமன்று. அது சப்தத்தை ஞாபகப்படுத்துவதற்கு ஒரு சங்கேதமாக இருக்கிறது. ஒரு பாஷைக்கு அநேக லிபிகள் இருக்கின்றன. தேவநாகரம், மராத்தி, தெலுங்கு, கன்னடம், மலையாளம், கிரந்தம், பெங்காலி, ஹிந்தி, குஜராத்தி முதலிய பல லிபிகளில் ஸம்ஸ்கிருத பாஷையை எழுதி வருகிறார்கள். அப்படியே ஒரு லிபியில் அநேக பாஷைகள் எழுதப்படுகின்றன. தெலுங்கு லிபியில் ஆந்திர தேசத்தில் திவ்யப்பிரபந்தத்தைப் பாராயணம் செய்ய விரும்புகிறவர்கள் தமிழைத் தெலுங்கு லிபியில் எழுதி வாசிக்கிறார்கள். அப்படி அச்சிட்ட புஸ்தகங்களும் இருக்கின்றன. ரோம தேசத்து லிபியில் ஐரோப்பாக் கண்டம் முழுவதிலும் உள்ள பாஷைகள் எழுதப்படுகின்றன.

ஆந்திர பாஷை, ஆந்திர லிபி ஆகிய இரண்டுக்கும் சில விசேஷங்கள் இருக்கின்றன. பராசக்தி யந்திரத்தில் முத்திரைக்கு உபயோகமான லிபியாக ஆந்திர லிபி இருக்கிறது. பராசக்தி ஸ்திரீ ரூபம். ஆகையால் வாமாவர்த்தமான பூஜை அம்பிகைக்கு ஏற்பட்டிருக்கிறது. ஆந்திர லிபிதான் வாமாவர்த்தமானது. இடது பக்கமாகச் சுழித்து எழுதப்படுவது. மற்றவை தக்ஷிணாவர்த்தமானவை. வர்த்தம் என்றால் சக்கரம். தெலுங்கு வட்டமான லிபியை உடையது. அதிலும்

வாமாகாரமான வர்த்தம். அதனால்தான் பரதேவதா யந்திரத்தில் சக்கரத்தில் ஆந்திர லிபி ஏற்பட்டிருக்கிறது. ஆகவே ஆந்திர லிபி பராசக்திப் பிரதானமானது என்று தெரிகிறது.

ஆந்திர பாஷை சிவப்பிரதானமானது. லிபி சக்திஸ்வரூபமாக இருக்கிறது. பாஷையையும் அர்த்தத்தையும் பார்க்கும்பொழுது பாஷை சக்திஸ்வருபம், அர்த்தம் சிவஸ்வரூபம் என்று சொல்லப்படும. காளிதாஸகவி

वागर्थाविव संपृक्तौ वागर्थप्रतिपत्तये ।

जगतः पितरौ वन्दे पार्वतीपरमेश्वरौ ॥ [ரகுவம்சம், I—1]

என்ற சுலோகத்தில் இதைச் சொல்லியிருக்கிறார். பாஷையையும் லிபியையும் பார்க்கும்பொழுது ஆந்திர லிபி சக்திப் பிரதானமாகவும், பாஷை சிவப்பிரதானமாகவும் இருக்கின்றன.

ஆந்திர பாஷைக்குள்ள சிவப்பிரதானத்தை அப்பைய தீக்ஷிதர் ஒரு சுலோகத்தில் தெரிவித்திருக்கிறார். அவர் தக்ஷிண தேசத்தில் பிறந்தவர். சிவோத்கிருஷ்டத்தை ஸ்தாபித்தவர். அவர் காலத்துக்கு முன்பு ஸ்ரீகண்டபாஷ்யம் வழக்கற்றுக் கிடந்தது. அதை அவர் உத்தாரணம் பண்ணினார். சிவமார்க்கப் பிரதிஷ்டாபனாசார்யரென்று அவருக்கு ஒரு பெயர் உண்டு. அவர் ஸாமவேதி; சிவபக்தி மிகுதியாக உடையவர். அவர் சொன்ன சுலோகம் இது.

आन्ध्रत्वमान्ध्रभाषाचाप्यान्ध्रदेशस्वजन्मभूः ।

तत्रापि याजुषी शाखा नाल्पस्य तपसः फलम् ॥

[அப்பையதீக்ஷிதர்]

இதில் அவர் ஆந்திரபாஷை பேசுபவராகவும் ஆந்திர

தேசத்தில் பிறந்தவராகவும் இருக்கவில்லையென்று வருத்தப்படுகிறார். அவர் திராவிட தேசத்தில் ஆரணிக்கருகில் அடையபலம் என்னும் ஒரு கிராமத்தில் பிறந்தவர். அவருடைய சாகை ஸாமசாகை. தாய் பாஷை தமிழ். சிவபக்தி உடையவர்.

யஜுர் வேத மத்தியில் ஸ்ரீருத்திரமும் அதன் மத்தியில் பஞ்சாக்ஷரமும், அதன் மத்தியில் 'சிவ' என்பதும் இருக்கின்றன என்று முன் சொல்லியிருக்கிறேன். அதனால் யஜுர்வேதம் சிவஸம்பந்தமான வேதமென்று அவருக்கு அதில் அதிகப் பிரியம் உண்டாயிற்று. அதனால் யஜுஸ் சாகையில் பிறக்கவில்லையே என்பது அவருக்கு ஏற்பட்ட ஒரு குறை. அதுமட்டுமில்லை. வேறு சில குறைகளும் இருந்தன.

லோகத்தில் கல் இருக்கிறது. அதில் மந்திர பூர்வமான சக்தியை உண்டாக்கி மஹனீயர்கள் பிரதிஷ்டை பண்ணினால் கோடி கோடி பேர் நமஸ்காரம் பண்ணி இன்பத்தை அடைகிறார்கள். ஸாமான்யமாக இருந்தால் அந்தக் கல்லை எல்லைக் கல்லாக வைத்துக் கொள்ளுகிறோம். ஆந்திர தேசத்தில் ஒரு விசேஷம் இருக்கிறது. மஹனீயர்கள் பிரதிஷ்டைபண்ணின மூன்று லிங்கங்களே அந்தத் தேசத்திற்கு எல்லைக் கற்களாக இருக்கின்றன. அநாதி காலமாக அவை இருக்கின்றன. அதனால் அந்தத் தேசத்திற்கு திரிலிங்க தேசமென்று பெயர் உண்டாயிற்று. தக்ஷிண எல்லையாக இருப்பது காளஹஸ்தி. மேற்கு எல்லை ஸ்ரீசைலம். உத்தர எல்லை கலிங்க தேசத்துக்கு வடக்கிலுள்ள (திரிலிங்கேக்ஷு) கோடிலிங்க க்ஷேத்திரம். ஆந்திர தேசமே சிவலிங்க எல்லைக்குள் அகப்பட்டிருக்கிறதாக இருக்கிறது. அதனால் திரிலிங்க தேசத்திற் பிறக்கவில்லையே என்று அப்பைய தீக்ஷிதர் வருத்தப்பட்டார்.

ஆந்திரராகப் பிறந்திருந்தால் அக்ஷராப்பியாஸத்திற்கு முன்பு ஓம்நம:ஶிவாய [ओंनमःशिवाय] என்று சொல்லும் படியான பாக்கியம் ஏற்பட்டிருக்கும். எந்தப் பஞ்சாக்ஷரம் ஜன்மதாரகமாக இருக்கிறதோ அதை ஒவ்வொரு சிசுவுக்கும் ஆந்திர தேசத்தில் சொல்லிக் கொடுக்கிறார்கள். பாஷை ஆரம்பிக்கும்பொழுது வைஷ்ணவனானாலும் சரி, வேறு எந்த ஜாதியானாக இருந்தாலும் சரி, பஞ்சாக்ஷரத்தைச் சொல்லிக் கொடுக்கிறார்கள். அதனால் அந்தப் பாஷை சிவப்பிரதானமானது என்று தெரிய வருகிறது.

ஆந்திர தேசத்தில் உள்ள சாகைகளில் சாமவேதம் இல்லை. பெரும்பாலும் யஜுஸ் சாகைதான் உள்ளது. ருக் வேதம் மிகக் குறைவு.

சிவசப்தம் வரும் சிவாத்மகமான வேதம், திரிலிங்க எல்லை, சிவஸம்பந்தமான பாஷை, சக்தி ஸம்பந்தமான லிபி ஆகிய இவை ஒருங்கே ஆந்திர தேசத்தில் இருப்பதால் அப்பைய தீக்ஷிதர் அந்த சுலோகத்தைச் சொல்லி வருத்தப்பட்டார்.

லிபிகள் ஐம்பது. தெலுங்கில் இரண்டு அதிகமாக இருக்கின்றன. ஜகாரத்தில் ஒன்று சகாரத்தில் ஒன்றும் அதிகம். அவை ஸூக்ஷ்மமான ஜகாரமாகவும் ஸூக்ஷ்மமான சகாரமாகவும் உள்ளன. இந்த இரண்டும் மஹாராஷ்டிர பாஷையிலும் இருக்கின்றன.

மிலேச்ச பாஷையிற்கூட தக்ஷிண விருத்தமான லிபிகள்தாம் இருக்கின்றன. ஆந்திர லிபி வாமாவிர்த்தம். ஆயிரம் வருஷங்களுக்கு முன்பு இரண்டு விதமான லிபிகள் எழுதுவதுண்டென்று சாஸனங்களால் தெரிய வருகிறது. பிராம்மிலிபி கரோஷ்டிலிபி என்பவை அவை. பிராம்மிலிபி இப்பொழுது இல்லை. இரண்டாயிரம் வருஷங்களுக்கு முன்பு ஏற்பட்ட சாஸனங்களில் அது காணப்

படுகிறது. அதற்கு முன்பு பிரம்மலிபி என்று பெயர். அது நன்ருகத் தெரியாது. அதனுல் தெரியாத எழுத்தை, 'இது என்ன பிரம்மலிபியாக இருக்கிறதே' என்று சொல்லுகிருர்கள். இது தெரியாமல் பிரம்மலிபி என்பதற்கு இப்பொழுது லலாடலிகிதா ரேகா என்று அர்த்தம் பண்ணுகிருர்கள். கரோஷ்டிலிபி என்ற ஒன்று இருந்தது. அது பார்ஸி முதலிய எழுத்துக்களுக்கு மூலமானது. கரம்—கழுதை, ஒஷ்டம்—உதடு. கழுதையின் உதட்டைப்போல் இருந்ததனுல் அந்த லிபிக்கு அப்பெயர் உண்டாயிற்று. கழுதைக்கு உதடு அதிகமாக வெளியில் வந்திருக்கும்.

இந்த மாதிரி உள்ள அநேக பாஷைகளோடும் அநேக லிபிகளோடும் ஒவ்வொரு தேசமும் தனித்தனியாக இருக்கிறது. பாஷை, லிபி முதலியவற்ருல் உண்டாகும் பிரயோஜனம் என்ன? மிருகத்திற்குப் பாஷையில்லை; லிபி யில்லை; புஸ்தகம் இல்லை; வித்தியாசாலை இல்லை. நமக்கு அச்சுக்கூடம், பத்திரிகை, பாஷைகள் புஸ்தகங்கள் முதலியவைகள் இருப்பதனுல் மிருகத்தைவிட ஸௌக்கியம் அதிகமா? குறைவா? பதார்த்தங்கள் அதிகமாக இருக்கின்றன. இவைகளால் என்ன பிரயோஜனம்? துக்கத்தைத்தான் ஸம்பாதிக்கிருேம். இவைகள் இல்லாத பிராணிகளைவிட நமக்கு அதிக சௌக்கியம் உண்டா, இல்லையா, என்று யோசித்தால், இருப்பதாகத் தெரியவில்லை. மனுஷியனைவிட மிருகம் ஸௌக்கியமாக இருக்கிறதாகத் தோன்றுகிறது. அதற்கு மனுஷியனுக்கு இருக்கிற இவ்வளவு வியாதி இல்லை. அது ஆனந்தமாக விருத்தியாகிறது. எப்படியோ பகவான் கொடுக்கிருர். ரோகம் இல்லை. நேற்று என்ன செய்தோம், நாளைக்கு என்ன செய்வோம் என்ற கவலை இல்லை. இன்று என்ன செய்வோம் என்பதுதான்

உண்டு. அதில்கூட ராத்திரிக்கு என்ன பண்ணுவோ மென்ற கவலை இல்லை. அதன் விருத்திக்கும் குறைவில்லை. புலியைச் சிங்கம் அடித்துச் சாப்பிடுகிறது. ஆனாலும் புலிகள் குறையவில்லை. பாம்பு அடிக்க அடிக்கக்குறையாமலே இருக்கிறது. இவ்வளவு ஸௌகர்யங்களை வைத்துக்கொண்டு மனுஷியன் ஸௌக்கியமாக இல்லாவிட்டால் எதற்காக இவ்வளவையும் ஸம்பாதிக்கிறான்? இவைகளால் என்ன பிரயோஜனம்? மனுஷிய சிருஷ்டியிலேகூட எந்த தேசத்தில் அச்சுக்கூடம் இல்லையோ, எங்கே பள்ளிக்கூடம் இல்லையோ அந்தமாதிரி இடங்களில்—ஆப்பிரிக்காவிலும் அமெரிக்காவிலுள்ள செவ்விந்தியர்களிடத்திலும், இவைகளைப் போன்ற மற்ற இடங்களிலும்—மற்ற இடங்களில் உள்ள அவ்வளவு கோர்ட்டுக்கள் இல்லை. குற்றம் நிரம்பக் குறைவு. எங்கே நாகரிகம் குறைவாகக் காணப்படுகிறதோ அங்கே அகாரியம் குறைவாக இருக்கிறது. இந்த நாகரிகத்தால் உண்டாகிற அதிக புத்தியினால் செய்யப்படும் காரியங்கள் எவ்வளவுக்கெவ்வளவு இல்லையோ, அவ்வளவுக்கவ்வளவு பாபமும் துக்கமும் குறைவாக இருக்கின்றன. எங்கே அதிகமாக இருக்கிறதோ அங்கே பாபம் அதிகமாகிறது. அங்கே அவ்வளவு பாபம் செய்யும் விசித்திரபுத்தி இருக்கிறது. புத்தி, ஐசுவர்யம், பலவித ஸாமக்கிரியைகள முதலியவை இருந்தால் பாப அபிப்பிராயம் உண்டாகும் பொழுது உடனே காரியம் செய்ய முடிகிறது. வாக்சக்தி, லிபிசக்தி, புத்தி சக்தி, அநுமான சக்தி இவைகளை வைத்துக்கொண்டதனால் துக்கத்தைப் பெருக்கிக் கொண்டோம். தரித்திரம், வியாதி முதலியவைகளை இந்த ஜன்மத்தில் உண்டாக்கிக் கொள்வதோடு வரும் ஜன்மத்திலும் துக்கப்படும்படியான பாபத்தை ஸம்பாதிக்கிறோம். இப்படி மிருகம், நாகரிகமில்லாதவர்கள், இவர்களைவிட நாம் அதிக சௌ

TRIPLICANE P.O., MADRAS



கரியங்களை வைத்துக்கொண்டதனல் அதிக பாபம் ஸம் பாதிக்கிறோம். நம்மைவிட அமெரிக்கர்களுக்கு அதிக புத்தி, அதிக ஐசுவர்யம் இருக்கின்றன. அவைகளால் அதிக துக்கந்தான் உண்டாயிருக்கிறது.

ஈசுவரன் புத்தி, சக்தி, சாஸ்திரம், பாஷை முதலியவைகளைக் கொடுத்திருப்பது அநுக்கிரஹமா? அபராதமா? அநுக்கிரஹமாகத்தானே அங்கீகரித்துக் கொண்டோம். ஆனல் ஆலோசித்தால் அபராதமாகத் தோன்றுகிறது.

இவைகளையெல்லாம் யோசித்தால் நாமும் மிருகமாகவே இருந்துவிடலாமே என்று தோன்றுகிறது. மனுஷியனவது புண்ணியபலமா? பாபபலமா? மிருகமானல் பாபம்பண்ண அவகாசம் இல்லை. அப்படி இருந்தும் மிருக ஜன்மம் குறைவானதென்று பெரியவர்கள் சொல்லுகிறார்கள்; சாஸ்திரங்களும் சொல்லுகின்றன. சர்க்காரிலே கூட, மனுஷியனை ஒருவன் கொன்றால் தண்டனை விதிக்கிறார்கள்; ஆட்டைக் கொன்றால் ஒன்றும் செய்வதில்லை.

மிருகம் பிறந்து இறந்துபோகும் வரைக்கும் சித்திர குப்தன் பாபக்கணக்கு ஒன்றும் எழுதமாட்டான். நமக்கு பிரதி க்ஷணமும் கணக்கு எழுதுவான். வஞ்சனை, மோசம், வேஷம்,பொய் முதலிய பல விஷயங்களை அவன் கணக்கில் எழுதுவான். வாக்கு, பாஷை, லிபி இல்லாத மிருகங்களுக்கு இவை இல்லை. அதனல் எனக்கு அதிக ஸந்தேஹம் உண்டாயிற்று. இவைகளை எதற்காக ஸ்வாமி நமக்குக் கொடுத்தார் என்று யோசித்தேன். பின்பு ஒருவிதமாகத் தீர்மானம் செய்து கொண்டிருக்கிறேன்.

மிருக ஜன்மத்திற் கூடக்கஷ்டம் உண்டு. ஆனல் மனுஷ்ய ஜன்மத்திலுள்ள கவலையும் வியாதியும் இல்லை.

புலி ஒவ்வொரு க்ஷணமும் ஒரு பிராணியை அடிக்க எண்ணுகிறது. பூனை எலியைக் கொல்லப்பார்க்கிறது. இப்படி மிருகங்களுக்குப் பிராணபயம் ஒவ்வொரு க்ஷணமும் உண்டு. அந்த ஒன்றைத் தவிர வேறு கஷ்டம் இல்லை. பாப பயம் ஆகார விசாரம் முதலியவை இல்லை. பசி எடுக்கிறபொழுது அந்த க்ஷண மாத்திரம் அந்தத் துன்பம் இருக்கிறது. ஆகையால் மிருகமானாலும் பயம் இருக்கிறது என்று தெரிகிறது.

பயமே இல்லாமல் இருக்க ஜன்மமே இல்லாமல் இருக்கவேண்டும். ஜன்மம் இல்லாமற் செய்துகொள்ள வேண்டும். அப்படிச் செய்வது மிருகமானால் முடியாது. அதற்குப் புத்திவேண்டும். ஜன்மமில்லாமற் பண்ணிக் கொள்வதற்காகத்தான் பகவான் புத்தி கொடுத்திருக்கிறார். அந்தப் புத்தி பாபம் செய்யவும் உபயோகப்படும். கத்தி இருக்கிறது. க்ஷத்திரியனுக்கு அஸ்திர சஸ்திர அப்பியாசம் பண்ணிவைக்கும் குரு கத்தியைக் கொடுக்கிறார். அதைக்கொண்டு சத்துரு ஸம்ஹாரம் செய்கிறான். கத்தியினால் மரத்தை வெட்டலாம். நம்முடைய தேகத்திலே கை காலிற்பட்டு உபத்திரவத்தை உண்டாக்குகிறது. இப்படி ஒரு வஸ்துவுக்கே இரண்டுவித உபயோகங்கள் இருக்கின்றன. புத்தி சக்தி இல்லாவிட்டால் ஜன்மம் நீங்க வழி இல்லை. புத்தி சக்தி இருந்தால் பாபம் செய்கிறோம். கோடியில் ஒருவர் புத்தியினால் ஜன்மம் இல்லாமல் பண்ணிக்கொள்ளுகிறார். இவ்வளவு பேருக்கும் புத்தியைக் கொடுத்தால் ஒரு பிராணிக்காவது க்ஷேமம் உண்டாகட்டுமே என்று பகவான் எல்லோருக்கும் அதைக் கொடுத்திருக்கிறார். நாம் அதைக் கெட்ட வழிகளில் உபயோகிக்கிறோம். எல்லோரும் கெட்ட வழியிலேயே உபயோகித்தால் இது வேண்டாம். பாஷை, லிபி, புத்தி இவைகளால் சில மஹாத்மாக்கள் ஜன்ம

மில்லாமல் செய்து கொள்ளுகிருர்கள். பாஷாஜ்ஞானம் முதலியவை அநேகர்களுக்குப் பாபம் செய்ய உபயோகப் பட்டாலும் யாராவது மஹனீயருக்கு ஜன்மம் நீங்க வழி யாக இருக்கின்றன. அதனுல் இவைகளே அங்கிகரிக்கி ரோம். ஸஹஸ்ர பிராம்மண போஜனம் பண்ணுகிருர்கள். அவர்களைப் பார்த்து, "எதற்காகப் பண்ணுகிருய்? வேலையில்லாச் சோம்பேறிகளுக்குச் சோறு போடுவத ைல் என்னப் பிரயோசனம்?" என்று சொல்லுகிரோம். அவ்வளவு பேருக்கும் அன்னம் போடும்பொழுது அவர் களுக்குள் யாராவது ஒரு மஹான் இருந்து அவருடைய வயிற்றில் அந்த அன்னம் போனுல் ஜன்ம ஸாபல்யம் உண்டாகிறது. அந்த ஒருவரை உத்தேசித்துத் தான் பலபேருக்கும் அன்னதானம் செய்யப்படுகிறது. அதைப் போல யாராவது சிலபோ ஜன்மமில்லாமற் செய்து கொள்ளட்டுமென்று பகவான் புத்தி முதலியவைகளே எல்லோருக்கும் கொடுத்திருக்கிருர்.

வீட்டில் உட்கார்ந்திருக்கிரோம். போஜனத்துக்கு அரிசி நெய் வேண்டும். உட்கார்ந்திருந்தால் வருமா? வய லுக்குப் போய்க் கவனித்துவரவேண்டும். கஷ்டப்பட்டுப் பிரயத்தனம் பண்ணினுல் தான் பின்பு சுகம் ஏற்படும். அதைப் போலப் பாபம், துக்கம் இவைகளே அநுபவித் தால் தான் சுகம் உண்டு. அவைகளே அனுபவிக்கும் மனுஷிய ஜன்மத்தில் தான் சுகத்துக்கும் காரணமான காரியங்கள் செய்யவேண்டும். மனுஷிய ஜன்மம் சரியாக உபயோகப்பட்டால் ஜன்மஸாபல்யம் உண்டாகிறது; இல்லா விட்டால் பாபம் ஏற்படுகிறது. புத்தியை ஸிந்தைக் கும் உபயோகப்படுத்தலாம்; ஸ்தோத்திரத்துக்கும் உப யோகிக்கலாம்.

நாகரிகம் அதிக பாபத்திற்குக் காரணமாக இருக் கிறது. நாகரிகம் என்பது நகர ஸம்பந்தமானது என்ற

அர்த்த முடையது. பழைய காலத்தில் நகரவாழ்க்கை (Town Life) கொஞ்சந்தான் இருந்தது. இந்தக் காலத்தில் கிராமத்திலுள்ளவர்கள் யாவரும் நகரத்திற்கு வந்து விடுகிறார்கள். மிகவும் சாந்தமான நிலையில் கிராம வாஸம் இருந்தது. ஐம்பது வருஷங்களுக்கு முன்புவரையில் கிராமங்கள் செழிப்பாக இருந்தன. அங்கே அதிகமாக ஆபரணங்கள் இல்லை. கூரை வீடுகளே அதிகமாக இருக்கும். பணக்காரர்களும் ஏழைகளும் ஸமானமாகப் பழகுவார்கள். பேதங்கள் அதிகமாகக் காணப்படும். வர்ணம் முதலிய பேதங்கள் இருக்கும். அவைகளால் பொது நன்மைக்கு ஒரு குறைவும் இல்லாமல் இருந்தது.

அதிக வேஷம், பெரிய வீடு, நாகரிகம் இவைகளால் பாபந்தான் அதிகமாகிறது. சில ஜாதிகள் நாகரிகத்தை அதிகப்படுத்தி எல்லாவற்றையும் தின்றுகொண்டு அதிக பாபத்தைச் செய்கிறார்கள். ஆகையால் குறைவான பதார்த்தங்களை வைத்துக்கொண்டு சாந்தமாக இருந்துகொண்டு புத்தியால் நல்லதை நினைத்துக் கொண்டு இருக்க வேண்டும். நமக்கு ஒரு வஸ்துவினிடத்தில் ஆசை உண்டாகிறது. ஒன்றைத் தின்னவேண்டுமென்று விரும்புகிறோம். அந்த வஸ்துவை எப்படிப் பெறுவது என்று யோசித்து முயல்கின்றோம். அதில் பாபம் உண்டாகிறது. அந்த ஆசை யில்லை யென்றால் பாபமும் இல்லை. அந்த ஆசை இல்லாமல் இருக்க எது மார்க்கமோ, அதில் புத்தியை உபயோகப்படுத்தினால் பாபம் போகும்; ஜன்மம் போய்விடும். ஆசையைப் பூர்த்திசெய்யத் தொடங்கினால் ஜன்மம் அதிகமாகும். அதை நீக்க உபயோகித்தால் பரமேசுவரன் எதற்குப் புத்தியைக் கொடுத்தானோ அதைச் செய்தவர்களாவோம். புத்தி, லிபி, பாஷை இவைகளெல்லாம் ஜன்மம் இல்லாத நிலையை அடைய ஸாதனங்கள்.

லௌகிகத்தில் உபயோகப்படுத்தினல் அதிக துன்பம் உண்டாகிறது. எல்லோரையும் விட நாம் அதிக புத்தி சாலி என்று ஒவ்வொருவருக்கும் தங்களிடத்தில் ஓரபி மானம் இருக்கிறது. அந்தப் புத்தியால் ஆசையே வர வொட்டாமற் பண்ணவேண்டும். பாஷை முதலியவை களை அதற்கு உபயோகிக்கவேண்டும். அதனல் தான் லிபியை ஆரம்பிக்கும்பொழுதே பகவதர்ப்பணம் பண்ணுகிறேம்; ஓம் நமஃஶிவாய என்று ஆரம்பிக் கிறேம். இப்படி பாஷை, லிபி, புத்தி முதலியவற்றை உபயோகித்து வந்தால், நாகரிகத்தால் உண்டாகும் தோஷ மெதுவுமில்லாமல் பரமேசுவரப் பிரீதிக்குப் பாத்திரமாகி, புத்திசக்தியின் வாஸ்தவமானப் பிரயோஜ னத்தை அடைந்து, ஜன்மமில்லாத வழியை அடை வோம். ஸ்ரீ சந்த்ரமௌளீசுவரருடைய அநுக்கிரஹம் எல்லோரும் பெறவேண்டும்.

# 7

## சந்தஸும் நிருக்தமும்

[21—10—1932]

வேதபுருஷனுக்குப் பாதமாக இருப்பது சந்தஸ் என்னும் அங்கம். மந்திரஜபம் உபதேசம் செய்து கொண்டவர்கள் அதை ஜபிக்கும்பொழுது மந்திரத்தின் ரிஷியைச் சொல்லித் தலையைத் தொடுவதுண்டு; சந்தஸைச் சொல்லி மூக்கைத் தொடுவார்கள்; தேவதையைச் சொல்லி ஹிருதயத்தைத் தொடுவார்கள். வேத மந்திரங்களெல்லாம் சந்தஸ். மற்ற சப்தங்களைச் சுலோகம என்று சொல்லுவார்கள். தெலுங்கில் பத்யம் என்பார்கள். தமிழில் செய்யுள் என்றும் இங்கிலீஷில் பொயட்ரி (Poetry) என்றும் சொல்லுவார்கள். வசனத்தைக் கத்யம் என்றும் சந்தஸை பத்யம் என்றும் ஸம்ஸ்கிருதத்தில் சொல்லுவதுண்டு.

சந்தஸுக்குக் கணக்கு உண்டு. செய்யுளிற் பலவிதமான விருத்தங்கள் இருக்கின்றன. சுலோகங்களும் விருத்தங்களே. அநுஷ்டுப் விருத்தம் என்பது ஒன்று. புராண சுலோகங்களும் ராமாயண சுலோகங்களும் அந்த விருத்தங்களே. விருத்தலக்ஷணம்தான் சந்தஸ்.

ஒவ்வொரு விருத்தத்திற்கும் இவ்வளவு பாதம் இருக்க வேண்டும். ஒவ்வொரு பாதத்திற்கும் இவ்வளவு எழுத்துக்கள் இருக்கவேண்டும் என்று நியமம் உண்டு. ஆர்யா என்று ஒரு சந்தஸ் இருக்கிறது. அதற்கு மாத்திரைக்கணக்கு உண்டு. குற்றெழுத்து நெட்டெழுத்துக் கணக்கு உள்ள சில சந்தஸ் உண்டு. சார்த்தூலவிக்

ரீடிதம், சிகரிணி முதலிய பலவகையான சந்தஸுக்கள் இருக்கின்றன.

எல்லாருக்கும் தெரிந்த

शुक्लाम्बरधरं विष्णुं शशिवर्णं चतुर्भुजम् ।
प्रसन्नवदनं ध्यायेत् सर्वविघ्नोपशान्तये ॥

என்ற சுலோகத்தைப் பார்ப்போம். இது அநுஷ்டுப் சந்தஸில் அமைந்தது. இதற்கு 4 பாதம் உண்டு. ஒவ்வொரு பாதத்திற்கும் எட்டு எட்டு எழுத்துக்கள். ஆக மொத்தம் 32 எழுத்துக்கள் இருக்கின்றன. இப்படியே ஒவ்வொரு அநுஷ்டுபு சுலோகமும் 32 எழுத்துக்களை உடையதாக இருக்கும்.

இந்திரவஜ்ரா, உபேந்திரவஜ்ரா, ஸ்ரக்தரா முதலிய வேறு பல சந்தஸுக்கள் இருக்கின்றன. வேதத்துக்கும் பல சந்தஸுக்கள் உண்டு. அநுஷ்டுபு, காயத்திரி முதலிய சந்தஸுக்கள் இருக்கின்றன. காயத்திரி மந்திரம் சந்தஸின் பெயரால் வழங்குகிறது. காயத்திரி சந்தஸில் நிசிருத் காயத்ரீ, த்ரிபதா காயத்ரீ, உஷ்ணிக் காயத்ரீ, பிருஹதி காயத்ரீ முதலிய பல பேதங்கள் உண்டு. இவைகளுக்குள் உட்பிரிவு பல இருக்கின்றன.

எழுத்துக்களுக்கு ரக்ஷையாக இருப்பது சிக்ஷை. சப்தங்கள் எல்லாவற்றிற்கும் ரக்ஷையாக இருப்பது இந்தச் சந்தஸ். வேதத்தில் கூட்டுதலும் குறைத்தலும் முடியாமல் செய்வது இந்த அங்கம்தான். ஆத்மார்த்தமான அதில் கூட்டுதலும் குறைத்தலும் கூடாதல்லவா?

ஒவ்வொரு மந்திரத்திற்கும் சந்தஸ் உண்டு; ரிஷியும் தேவதையும் உண்டு. ரிஷிகள் மந்திரங்களைச் செய்தவர்கள் அல்ல. அவர்களுக்கு மந்திரதிரஷ்டாக்கள் என்று பெயர். அவர்கள் மந்திரங்களைக் கண்டவர்கள். அவை

களை லோகத்திற் பிரசாரத்திற்குக் கொண்டுவந்தவர்கள். எந்த ரிஷியின் மூலமாக எந்த மந்த்ரம் லோகத்திற்கு வந்ததோ அந்த ரிஷி அந்த மந்திரத்தின் ரிஷியாவார். அவர்களைச் சொல்லித் தலையிற் கையை வைத்துக் கொள்ளுவது அவர்களுடைய பாதங்களைச் சிரஸில் வைத்துக் கொள்ளுவதற்கு அறிகுறி. அவர்களால்தான் அந்த மந்திரங்கள் நமக்குக் கிடைத்தன. ஆகையால் அவர்களுக்கு முதலில் வணக்கம் செலுத்தவேண்டும். சந்தஸைச் சொல்லி மூக்கிற் கை வைக்கிறோம். மந்திரத்தின் சப்தத்தை ரக்ஷிப்பது சந்தஸ். அது அதற்குப் பிராணன் போன்றது. அதனால் பிராணன் ஸ்தானமாகிய மூக்கில் கையை வைக்கிறோம். மூச்சு இல்லாவிட்டால் பிராணன் இல்லையல்லவா? அதைப்போல மந்திரங்களுக்கு மூச்சாக இருப்பது சந்தஸ். அந்த மந்திரங்களின் அதிதேவதையைத் தியானம் செய்யவேண்டும். அந்தத் தேவதையின் ஸ்வரூபத்தை ஹிருதயத்தில் தியானம் செய்து மந்திர ஜபம் ஆரம்பிக்க வேண்டும். அதற்காகத்தான் தேவதையைச் சொல்லி ஹிருதயத்தைத் தொடுகிறோம்.

छन्दः पादो वेदस्य ।

சந்தஸ் மந்திரங்களுக்கு ஆதாரம்.

என்று சொல்லியிருக்கிறது. காலில்லாமல் நிற்க முடியாது. சந்தஸ் ஆதாரமானது. ஆகையால் அது பாதமாகச் சொல்லப்படுகின்றது. வேதமந்திரங்களை சந்தஸின் அமைப்பு நிற்கவைக்கின்றது.

## நிருக்தம்

நிருக்தம் என்பது வேதத்துக்கு அகராதி (Dictionary). கோசம் என்று ஸம்ஸ்கிருதத்தில் சொல்லப்படும். அமர கோசம் என்று ஒரு கிரந்தம் இருக்கிறது. நிகண்டு என்றும் சொல்லுவதுண்டு.

நிருக்தம் வேத புருஷனுக்குச் சுரோத்திரஸ்தானம். வேதத்தில் உள்ள அரிய வார்த்தைகளுக்கு இன்ன இன்ன அர்த்தம் என்று அது சொல்லுகிறது. வேத நிகண்டு என்றும் அது சொல்லப்படும். ஏன் இந்தப் பதம் இங்கே உபயோகப்படுத்தப்பட்டது என்பதை காரணத்துடன் அது சொல்லும். அந்த நிருக்தம் பலரால் செய்யப்பட்டிருக்கிறது.

சிக்ஷைகள் பல இருந்தாலும் யாக்ஞவல்கிய சிக்ஷை விசேஷமானது. 30 சிக்ஷைகள் இருப்பதாகத் தெரிகிறது. அப்படியே வியாகரணங்களும் பல இருக்கின்றன. நவ வியாகரணம் என்று ஒரு பிரிவு உண்டு. அநுமார் சூரியனிடத்தில் அந்த நவ வியாகரணங்களையும் படித்தார். தொல்காப்பியம் என்னும் பழைய தமிழ் இலக்கணத்திற்கு மூலம் ஐந்திரவியாகரணம் என்று சொல்லுகிறார்கள். அது இந்திரனால் செய்யப்பட்டது. அது நவவியாகரணங்களில் ஒன்று. இவ்வளவு வியாகரணங்கள் இருந்தாலும் அதிகமாகப் பிரசாரத்தில் இருப்பது பாணினீய வியாகரணந்தான்.

இவைகளைப்போல நிருக்தம் பலரால் செய்யப்பட்டிருந்தாலும் முக்கியமாகச் சொல்லப்படுவது யாஸ்கர் செய்ததைத்தான்.

வேத நிகண்டுவில் ஒவ்வொரு பதத்திற்கும் காரணம் சொல்லப்பட்டிருக்கிறது. ஹிருதயம் என்ற ஒரு பதம் இருக்கிறது. அது ஏன் அப்படி வந்தது? வேதமே அதன் காரணத்தைச் சொல்லியிருக்கிறது. ஹிருதி அயம்; ஹிருதயத்தில் இவன் இருக்கிறான் என்பது அர்த்தம். ஹ்ருத் என்பதே ஹிருதயத்தின் பெயர். எனவே ஹிருதயத்தில் பரமேசுவரன் இருப்பதால் அதற்கு அப்பெயர் வந்தது என்று தெரிய வருகிறது

இப்படி ஒவ்வொரு பதத்திற்கு காரணம் உண்டு. அதை ஆராய்வது நிருக்தம்.

பிரகிருதி, பிரத்யயம் என இரண்டு வியாகரணத்திற் சொல்லப்படுகின்றன. 'ராமன்' என்னும் மூலபதம் பிரகிருதி. அதனுடைய அர்த்தத்தை வேறுபடுத்த, 'கு' என்பதைச் சேர்த்து 'ராமனுக்கு' என்று சொல்லுகிறோம். அந்த 'கு' என்பதுதான் பிரத்யயம். 'செய்' என்பது பிரகிருதி; 'கின்றான்' என்பது பிரத்யயம். தமிழில் பிரகிருதியைப பகுதி என்கிறார்கள். பிரத்யயத்தை பிரகிருதி என்பதற்கு எதிரான பதமாகிய விகிருதி என்னும் பதத்திலிருந்துவந்த விகுதி என்னும் பெயரால் சொல்லுகிறார்கள். பிரத்யயம் என்பது மேலே வைப்பது என்னும் அர்த்தமுடையது. ஒரே பகுதிக்குப் பல அர்த்தங்களை உண்டாக்குவது பிரத்யயங்கள். ஸம்ஸ்கிருதத்தில் எல்லாப் பதங்களுக்கும் தாது உண்டு. இன்னப் பிரத்யயம் இன்ன ஸூத்திரத்தின்படி வந்தது என்று வியாகரணம் சொல்லும். ஒவ்வொரு சப்தத்துக்கும் தாது சொல்லவேண்டும். தாதுவை ரூட் (Root) என்று இங்கிலீஷில் சொல்லுவார்கள். இங்கிலீஷில் கிரியாபதங்களுக்கு (Verbs) தாது உண்டே தவிரப் பெயர்களுக்கு (Nouns) தாது இல்லை. ஸம்ஸ்கிருதத்தில் ஒவ்வொரு பதத்திற்கும் பிரகிருதியும் பிரத்யயமும் உண்டு. அப்படி உள்ள பதங்களின் விகாரங்களை மற்றப் பாஷைக்காரர்கள் எடுத்து உபயோகித்தார்கள். அதனால்தான் அந்தப் பாஷைகளில் ரூட் தெரிவதில்லை. அந்தப் பாஷைக்கே உரிய சொல்லாக இருந்தால் ரூட் இருக்கவேண்டுமல்லவா? மணியை இங்கிலீஷில் (Hour) என்று சொல்லுகிறார்கள். அந்தப் பதத்தில் அமைந்துள்ள எழுத்துக்களில் உச்சரிப்பை அநுசரித்துப் பார்த்தால் ஹோர் என்று சொல்லவேண்டியிருக்கிறது.

ஒரு காலத்தில் ஹோர் என்றே சொல்லி யிருக்க வேண்டும். ஹோரா சாஸ்திரம் என்று ஸம்ஸ்கிருதத்தில் ஒரு சாஸ்திரம் உண்டு. அஹோராத்ரம் என்பதிலிருந்து அந்த ஹோரா என்பது வந்தது. ஹோராவென்பது ஒரு மணி நேரத்தைக் குறிக்கும் ஒரு பெயர். அதுவே ஹோராவாகி ஹவராகி வந்திருக்கிறது. இப்படியே ஹார்ட் (heart) என்பது ஹ்ருத் என்பதிலிருந்தும் அனதர் (another) என்பது அந்யதர என்பதிலிருந்தும், வந்தவைகள். அனதர் என்பது இரண்டு வஸ்துக்களில் ஒன்றைச் சொல்லி மற்றொன்றைச் சொல்லுகையில் உபயோகப்படுவது. அப்படியே அந்யதர என்பதும் உபயோகப்படும். இப்படிப் பல வார்த்தைகள் இருக்கின்றன. இவைகள் தற்காலத்திய ஸ்வரூபத்தை அடைவதற்கு எவ்வளவோ காலம் ஆயிருக்கவேண்டும். அந்தப் பாஷைகளின் பதங்கள் மூலம் தெரியாமல் இருப்பதற்குக் காரணம் இதுதான்.

வியாகரண சாஸ்திரத்தையும் நிருக்த சாஸ்திரத்தையும் வெள்ளைக்காரர்கள் காசியிலிருந்த பண்டிதர்களிடம் தெரிந்து கொண்டார்கள். வேதத்தின் நிருக்தத்தைப் பார்த்தார்கள். இன்ன இன்ன காரணத்தால் இன்ன இன்ன பதம் இவ்விவ்வாறு வந்தது என்று அதில் சொல்லியிருப்பதைத் தெரிந்துகொண்டனர். இவைகளிலிருந்து ஒரு புதிய சாஸ்திரம் (Science) உண்டாக்கினார்கள். அது பைலாலஜி (Philology) என்னும் பெயரால் சொல்லப்படும். பாஷா சாஸ்திரம் ஏற்பட்டதற்கு மூலகாரணம் வியாகரணமும் நிருக்தமுமே. அவர்கள் ஆராய்ச்சியால் எல்லாப் பாஷைகளும் ஒரு மூலத்திலிருந்து வந்தவைகளென்று சொல்லுகிறார்கள். அந்த மூலபாஷையைப் பேசிய மனிதர்களிருந்த விடத்தில்தான உலக ஜனங்கள் இருந்தார்களென்றும், ஆகையால் எல்லா ஜனங்களும் ஓரிடத்திலிருந்து வந்தார்களென்றும் சொல்லுகிறார்கள். இன்ன இடத்திலிருந்துதான் வந்தார்கள் என்பதில் அபிப்பிராய பேதங்கள் பல இருக்கின்றன. எதாயிருந்தாலும் நமக்குக் கவலையில்லை. நாம், எல்லாம் நம்முடைய ஊரே என்ற கொள்கையுடையவர்கள்.

8

# ஜ்யோதிஷமும் கல்பமும்

[22—10—1932]

நம்முடைய வைதிக மதத்திற்கு ஆதாரமாகிய பதினான்கு வித்தியாஸ்தானங்களுள் ஷடங்கங்களில் சிக்ஷை, வியாகரணம், சந்தஸ், நிருக்தம் என்பவற்றைப் பற்றிச் சொன்னேன். சந்தஸ்ஸூத்திரம் பண்ணினவர் பிங்களநாதர். பலவகையான சுலோகங்களுக்கும் வேதத்திற்கும் உரிய சந்தஸ் அவர் செய்த கிரந்தத்தால் தெரியும்.

வேதபுருஷனுக்கு ஜ்யோதிஷம் நேத்திரஸ்தானம். ஜ்யோதிஷ சாஸ்திரமானது மூன்று ஸ்கந்தங்கள் அடங்கியது. அதனால் அதற்கு ஸ்கந்தத்ரயாத்மகம் என்று பெயர். கர்க்கர், நாரதர், பராசரர் முதலிய பல ரிஷிகள பல ஜ்யோதிஷ ஸம்ஹிதைகளைச் செய்திருக்கிறார்கள். சூரிய பகவான் ஓர் ஆகிருதியை எடுத்துக்கொண்டு அசுரத் தச்சனாகிய மயனுக்கு உபதேசம் பண்ணினதாக ஒரு கிரந்தம் இருக்கிறது. அதற்குச் சூரியசித்தாந்தம் என்று பெயர். இப்படி தேவர்களும் ரிஷிகளும் இயற்றிய பல ஜ்யோதிஷக் கிரந்தங்கள் உண்டு. மனிதர்கள் செய்த கிரந்தங்களும் இருக்கின்றன. வராஹ மிஹிரர் என்பவர் பல கிரந்தங்களை எழுதியிருக்கிறார். ஆரியபடர், பாஸ்கராசாரியர் முதலியவர்கள் பண்ணின கிரந்தங்கள் பல இருக்கின்றன. சமீப காலத்தில் சுந்தரேசுவரச்ரௌதிகள் என்பவர் சித்தாந்த கௌஸ்துபம் என்ற ஒரு ஜ்யோதிஷக் கிரந்தத்தைச் செய்திருக்கிறார். அது இன்னும் அச்சிடப்படவில்லை. அதில் முக்கால் பங்கு தான் கிடைத்திருப்பதாகத் தெரிகிறது.

ஜ்யோதிஷத்தில் மூன்று ஸ்கந்தங்கள் இருக்கின்றன என்பதாக முன்பே சொன்னேன். மடத்தில் ஜ்யோதிஷம் தெரிந்த ஒரு சாஸ்திரிகள் இருந்தார். அவருக்கு ஒரு பட்டம் கொடுக்க யோசித்தோம். கடைசியில் 'திரிஸ்கந்த பாஸ்கரர்' என்னும் பட்டத்தைக் கொடுத்தோம். ஸ்கந்தம் என்றால் மரத்தின் அடிக்கட்டையில் இருந்து பிரிகிற பெரிய கிளைகளுக்குப் பெயர். ஜ்யோதிஷ சாஸ்திரத்தில் சித்தாந்த ஸ்கந்தம், ஹோராஸ்கந்தம், ஸம்ஹிதாஸ்கந்தம் என்று மூன்று ஸ்கந்தங்கள் இருக்கின்றன. அரித்மெடிக் (arithmetic), டிரிகினொமெட்ரி (trigonometry), ஜ்யாமெட்ரி (geometry), அல்ஜீப்ரா (algebra) என்று பலவிதமாக உள்ள கணிதங்களெல்லாம் சித்தாந்த ஸ்கந்தத்தில் அடங்கி இருக்கின்றன.

அரித்மெடிக் (arithmetic) என்பது வியக்த கணிதம். எண்களைத் தெளிவாகக் கொடுத்துப் பலன் கேட்பது வியக்த கணிதம். கூட்டல், கழித்தல், பெருக்கல், வகுத்தல் என்பவைகள் வியக்த கணிதத்தைச் சார்ந்தவை. அவ்வியக்தம் என்பது தெரியாமல் ஏ (A), எக்ஸ் (X) என்று வைத்துக் கொள்ளுவதுபோல் வைத்துக் கொள்ளுவது. அதைத்தான் அல்ஜீப்ரா (algebra) என்று சொல்லுகிறார்கள். அவ்வியக்தம் என்பதற்குத் தெரியாதது என்பது அர்த்தம். க்ஷேத்ர கணிதம் என்பதுதான் ஜ்யாமெட்ரி (geometry) என்பது. ஸமீகரணம் என்று ஒரு கணக்கு உண்டு. அது அவ்வியக்தங்களை கொடுத்த வியக்தங்களைக்கொண்டு கண்டுபிடிப்பது. அவ்வியக்தமான எண்ணிக்கைகளின் கூட்டங்களைத் தனியாகக் கொடுத்து அவைகளை சமமாக செய்யச் சொல்லுவது ஸமீகரணம். ஸமீகரணம் என்பதற்குச் சமமாகப் பண்ணுதல் என்பது அர்த்தம். அதைத்தான் ஈக்வேஷன் (Equation) என்று சொல்லுகிறார்கள்.

ஆறுவது அங்கமாக இருக்கும் கல்பஸூத்திரங்களுக்கு ஸித்தாந்த ஸ்கந்தத்தின் உதவி முழுவதும் வேண்டும். கல்பஸூத்திரங்களெல்லாம் மகரிஷிகளால் செய்யப்பட்டவை. ஆபஸ்தம்ப ஸூத்திரம், ஆச்வலாயன ஸூத்திரம் என்பவைகளைப் போன்ற (शुल्व) சுல்ப ஸூத்திரங்கள் மஹரிஷிகளால் பண்ணப்பட்டவை. அந்த ஸூத்திரங்களிற் சொன்னபடி நாம் கர்மாநுஷ்டானம் செய்து வருகிறோம். கர்மாக்களைப் பண்ண வேண்டிய விதிகள் அவற்றில் சொல்லப்பட்டிருக்கின்றன.

அந்த ஸூத்திரங்களில் யஜ்ஞங்களைப் பற்றிச் சொல்லப்படும் பாகத்தில் சயனம் (चयन) என்னும் ஒன்றைப் பற்றிய விஷயங்கள் இருக்கின்றன. அந்த சயனத்தை அமைத்து அதன்மேல் யஜ்ஞங்களைச் செய்ய வேண்டும். கருடாகிருதியாக ஒரு சயனம் அமைக்க வேண்டும். செங்கல் சூளை போடும் விதம், இத்தனை அளவுள்ள இத்தனை செங்கல்கள் அடுக்கினால் இந்த அளவுக்கு இன்ன ஆகிருதி வரும், அதற்கு வேண்டிய அளவுகள் இவை என்று சில கணக்குகள் அந்தக் கல்ப ஸூத்திரங்களிற் சொல்லப்பட்டிருக்கின்றன. ஆபஸ்தம்ப சுல்ப ஸூத்திரத்தில் ஒரு ஸமீகரணம் (Equation) இருக்கிறது. அதை விடுவிக்க (to prove) இருபது முப்பது வருஷங்களுக்குமுன் வரையில் முடியாமல் இருந்தது. வெள்ளைக்காரர்களால் கண்டு பிடித்தவற்றைக் கொண்டு அதை நிரூபணம் (proof) பண்ண முடியவில்லை. இப்பொழுதுதான் சில காலத்திற்குமுன் ஒரு வழி கண்டுபிடித்தார்கள். இன்னும் கண்டுபிடிக்க வேண்டிய கணக்குகளுக்கு உரிய ஸூத்திரங்கள் எவ்வளவோ இருக்கின்றன. இந்தச் சுல்ப ஸூத்திரத்தில் சொல்லப்பட்ட ஸமீகரணங்களும், அளவுகளும் "ஸித்

தார்ந்த ஸ்கந்தத்தின் உதவியால் நிரூபணம் செய்ய வேண்டிய வைகளாகும்.

வியக்த கணிதத்திற்கு பீஜ கணிதம் என்றும் ஒரு பெயர் உண்டு. எழுநூறு அல்லது எண்ணூறு வருஷங்களுக்குமுன் பாஸ்கராசாரியார் என்ற பெரிய கணித ஸித்தாந்தி ஒருவர் இருந்தார். அவர் கணித சாஸ்திர விஷயமாக ஒரு கிரந்தம் செய்யவேண்டுமென்று நினைத்தார். தமது புத்திரியின் பெயராகிய லீலாவதி என்னும் பெயரால் கணித சாஸ்திரம் எழுதினர். அதில் வியக்த கணிதம், பீஜ கணிதம் முதலிய பலவகைக் கணிதங்கள் இருக்கின்றன. கிரஹஸ்திதிகள், கிரஹங்களின் கதிகள் முதலியவற்றை நிர்ணயித்தற்கு உபயோகமாக ஸித்தாந்தசிரோமணி என்ற ஒரு கிரந்தத்தையும் அவர் எழுதியிருக்கிறார்.

பிராசீனலேகமாலை யென்னும் சாஸன புஸ்தகத்தில் உள்ள ஒரு சாஸனத்தால் அந்தக் காலத்தில் பாஸ்கராசாரியருடைய கிரந்தங்கள் பிரசார மடைவதற்காகக் கூர்ஜர (Guzerat) தேசத்தில் இருந்த சிங்கணன் என்னும் அரசன் மானியம் விட்டிருந்தானென்று தெரிய வருகிறது. நவீன க்ஷேத்திர கணித கிரந்தமாகிய யூக்ளிட் (Euclid) என்னும் புஸ்தகத்தில் நடுவில் உள்ள 7, 8, 9, 10-ம் பாகங்களைக் காணவில்லை என்று சொல்லுகிறார்கள். ஸம்ஸ்கிருதத்தில் 12 புஸ்தகங்களும் அப்படியே இன்றைக்கும் இருக்கின்றன.

பாஸ்கராசாரியருக்கு முன்பு, அதாவது இன்றைக்கு 1800 வருஷங்களுக்கு முன்பு, வராஹமிஹிரர் என்ற ஒருவர் இருந்தார். அவர் பிருஹத்ஸம்ஹிதை, பிருஹத் ஜாதகம் முதலிய பல கிரந்தங்களைச் செய்திருக்கின்றார். ஆரியபடர் என்பவர் ஆரியபடஸித்தாந்தமென்று ஒரு புஸ்தகம் எழுதியிருக்கின்றார். இப்பொழுது வழங்கி

வரும் வாக்கிய கணிதமானது ஆரியபடஸித்தாந்தத்தை அநுஸரித்தது என்று சொல்லுவார்கள். தெலுங்கு பேசுபவர்கள ஸித்தாந்த பஞ்சாங்கத்தைப் பின்பற்றுகிறார்கள. அது சூரிய ஸித்தாந்தத்தை அநுஸரித்தது.

இவ்வளவு கணித சாஸ்திரங்களும், நக்ஷத்திரங்கள், ஒன்பது கிரஹங்கள் என்பவைகளின கதியைப் பற்றியும் ஸ்திதியைப் பற்றியும் சொல்லுபவைகள. கிரஹங்கள் ஏழுதான். ராகு கேதுக்கள் நிழல்; அதனால் அவைகளைச் சாயாக்கிரஹங்கள் என்று சொல்லுவார்கள். சூரியனுக்கும் சந்திரனுக்கும் நேர் விரோதமாக அவை ஓடும். அவைகளுக்குத் தனிகணனம் வேண்டாம். சூரிய சந்திரர்களின் கணனத்தின் விபரீத கணனமே அவைகளுக்குரிய கணனமாகும். எவ்வளவுக்கெவ்வளவு கணனம் அதிகப்படுகிறதோ அவ்வளவுக்கவ்வளவு ஸூக்ஷ்மமான பலன்களை (results) தெரிந்து கொள்ளலாம்.

நக்ஷத்திரங்களுக்கும் கிரஹங்களுக்கும் உள்ள வித்தியாசம் என்ன? நம்முடைய கண்ணுக்குத் தெரிகிற அடையாளம் ஒன்று இருக்கிறது. வைரத்தை ஆட்டிக்கொண்டே இருந்தால் அது பளபளவென்று அசைந்து ஜ்வலித்துக்கொண்டே இருக்கும். அதைப்போல நக்ஷத்திரங்கள் அசைவோடு ஜ்வலித்துக் கொண்டிருக்கும். கிரஹங்கள் அசையாமல் இருக்கும்.

சூரியனும் நக்ஷத்திரங்களும் ஸ்வயப் பிரகாசம் உடையவை. நக்ஷத்திரங்களில் பலவிதமான வர்ணங்களின் டால் அடிக்கும். பட்டை தீர்த்த வைரத்தில் நீலம், பச்சை முதலிய நிறங்கள் ஜ்வலிப்பதுபோல அவை இருக்கும். குருவும் சுக்கிரனும் கொஞ்சம் பெரிய நக்ஷத்திரங்களைப் போல இருக்கும். ஆனால் தளதளப்பு இராது. நக்ஷத்திரங்கள் தளதளவென்று இருக்கும்.

சூரியனும் அப்படித்தான் இருக்கும். சூரியனைக் கொஞ்சம் உற்றுக் கவனிக்க ஆரம்பித்தால் சுற்றிலும் காணப்படுகின்ற பிசிர் போய்விடும். அப்புறம் கண்ணாடியால் தட்டையாகச் செய்யப்பட்ட ஒன்று ஜலத்தில் மிதப்பது போல் தளதளவென்று தோன்றும். அசைவு இருக்கும். சந்திரன் இந்த மாதிரி இராது. மற்றக் கிரஹங்களும் இப்படியே. நக்ஷத்திரம் சிறியதாக இருந்தாலும் அசைவு இருக்கும். நக்ஷத்திரம் பெரியதாக இருந்தால் விப்ஜியார்[1] (Vibgyor) என்று சொல்லப்படும் ஏழு நிறங்கள் தோன்றும்.

சூரியனுக்கு ஸப்தாசுவன் என்பது ஒரு பெயர். ஏழு குதிரைகள் உண்டு என்று சிலர் சொல்லுவார்கள். ஓர் அசுவந்தான். அதற்கு ஏழு பேர்கள் இருக்கின்றன என்று சொல்லுவதும் உண்டு. அசுவம் என்பதற்குக் கிரணம் என்பது அர்த்தம். சூரியனுக்கு ஏழு[2] தினுஸான கிரணங்கள் இருக்கின்றன என்பதுதான் தாத்பர்யம். ஒரே கிரணம்தான் ஏழு தினுஸாகப் பிரிகிறது. விப்ஜியார்[1] என்பதும் அதுதான்.

நக்ஷத்திரங்கள் கிழக்கே உதயமாகி மேற்கே அஸ்தமிக்கும். கிரஹங்களும் மேற்கே போகும். ஆனால் நித்தியம் கொஞ்சம் கிழக்கே நகர்ந்துகொண்டே போகும். கிழக்கே ஓடும் ரயிலில் மேற்கே போகிறவனைப்போல ஏழு கிரஹங்களும் கிழக்கே நகர்ந்துகொண்டே போகும். இவற்றின் ஸ்திதிகளை ஜ்யோதிஷ சாஸ்திரம் சொல்லுகிறது.

லோகத்தில் நவக்கிரஹங்களைப் போலவே மனிதன் முதலியவர்களுடைய ஸ்திதியும் மாறிக்கொண்டே வரு

---

1. Vibgyor-Violet, Indigo, Blue, Green, Yellow Orange, Red.

2. एको अश्वो वहति सप्तनामा । [தைத்திரீய ஆரண்யகம்]

கிறது. கஷ்டம், ஸௌக்கியம், மனோதுக்கம், சந்தோஷம், உன்னதபதவி, தாழ்ந்தபதவி என்று இப்படி எல்லாருடைய ஸ்திதியும் மாறிவருகிறது. இப்படி மாறிக்கொண்டே இருப்பவன் மனிதன்மட்டும் அல்ல. எல்லாம் அப்படித்தான். பல ஸ்தாபனங்களும் அப்படியே.

லோகத்தில் நடக்கும் சுகதுக்கங்களுக்கும் கிரஹங்களுக்கும் ஸம்பந்தம் உண்டென்று நினைத்து, மஹரிஷிகள் இன்ன இன்ன மாதிரி கிரஹங்கள் இருந்தால் இன்ன இன்ன பலன் கிடைக்கும் என்று சொல்லியிருக்கிறார்கள். ஒரு காரியம் ஆரம்பித்தால் அதன் ஆரம்பகால கிரஹரீதிகளைக்கொண்டு மேலே நடக்கும் சுகதுக்க பலன்களைச் சொல்லும் பாகத்திற்கு ஹோராஸ்கந்தம் என்று பெயர். ஜனன காலத்தை ஆரம்பமாக வைத்துக்கொண்டு சுகதுக்க பலன்களைச் சொல்லிவிடலாம்.

சுகதுக்க பலன்களுக்குக் காரணம் பலவிதமாகச் சொல்லப்படுகிறது. வைத்தியர்கள் தாது வித்தியாசத்தால் என்று சொல்லுவார்கள். தாதுக்களின் ஸமநிலையானது தப்பிவிட்டது, அதனால்தான் இந்த வியாதி உண்டாயிற்றென்று அவர்கள் சொல்லுவார்கள். மந்திரவாதி தெய்வக்கோளாறு ஏற்பட்டிருக்கிறது என்று சொல்லுகிறான். ஜ்யோதிஷன் கிரஹகதியால் அது வந்தது என்கிறான். தர்மசாஸ்திரம் பூர்வ கர்மபலன் என்று சொல்லுகிறது. பயந்துகொண்டதனால் மனம் மாறி இருக்கிறது என்று மனோதத்துவ நிபுணர்கள் சொல்லுகிறார்கள். இப்படி ஒன்றுக்கே பல காரணங்கள் சொல்லப்படுகின்றன. உண்மையில் கிரஹகதியால் வருகிறதா? தாதுக்களால் வருகிறதா? மனதின் சலனத்தால் வருகிறதா? மற்றவைகளால் வருகிறதா? என்பது சந்தேகமாக இருக்கிறது. சில சமயங்களில்

ஒருவன் அநுபவிக்கிற சுகதுக்கங்களுக்கு மற்றவருடைய புண்ணிய பாவங்கள் காரணம் என்றும் சொல்லுவதுண்டு. குழந்தைக்கு ஏதாவது வியாதி வந்தால் மாதா பிதா பண்ணின பாபபலன் என்று சொல்லுகிறார்கள். குழந்தையின் பக்கத்திலிருந்து அவர்களும் துக்கத்தை அநுபவிக்க நேர்கின்றதால் அப்படிச் சொல்லுவதும் நியாயந்தான். நமது உடம்புக்கு வியாதி வந்தால் அதற்குக் காரணம் நம்முடைய சத்துருவின் புண்ணியம் என்றும் சொல்லலாம். இப்படி ஒருவனுக்கு ஒருதுக்கம் வந்தால் அது அநேகருடைய பாப புண்ணியங்களால் வந்தது என்று சொல்லலாம்.

இவற்றில் ஒன்றும் பொய்யில்லை. எல்லாம் காரணங்களே. எல்லாம் ஒன்றின் அடையாளங்களே. நாம் தெரிந்துகொள்ளுவதற்காக இப்படிப் பல வகையிலும் காரணங்கள் ஏற்பட்டு ஒன்றாகக்கூடி அநுபவத்தைக் கொடுக்கின்றன. ஒவ்வொருவர் ஒவ்வொரு காரணத்தை எடுத்துக்கொள்ளுகிறார்கள். மழை பெய்தால் ஈரம் உண்டாகிறது; ஈசல் உண்டாகிறது; தவளை கத்துகிறது. இவ்வளவும் மழைபெய்ததற்கு அடையாளங்கள். அதுபோலக் கர்மாவின் பலன் உண்டானதற்கு அநேக அடையாளங்கள் அமைகின்றன. ஒவ்வொன்றும் அடையாளந்தான். எல்லாவற்றிற்கும் ஸம்பந்தம் உண்டு. கர்மாவை அநுஸரித்து கிரஹகதி ஏற்படுகிறது, வியாதி ஏற்படுகிறது, மனச் சஞ்சலம் உண்டாகிறது, பிசாசாதிகளின் பீடை உண்டாகிறது. எல்லாம் ஒரு கர்மாவின் பலனாகவே உண்டாகின்றன. ஒவ்வொரு வழியிலும் தெரிந்து கொள்ளலாம். இப்படி உள்ள பலன்களைத் தெரிந்துகொள்ளக் கணக்கு மிகவும் உபயோகமாக இருக்கிறது.

ஜ்யோதிஷ சாஸ்திரத்தில் ஸம்ஹிதாஸ்கந்தம் என்ற ஒரு பிரிவு இருக்கிறது. ஜலம் எங்கே ஓடுகிறது? பூமிக்

குள் நதி உண்டு; அது எங்கெங்கே போகிறது? உள்ளே ஜலம் இருப்பதற்கு மேலே என்ன என்ன அடையாளம் இருக்கும்? என்பவைகளைப் போன்ற பல விஷயங்கள் அதில் சொல்லப்பட்டிருக்கின்றன. வாஸனைத் திரவியங்கள் செய்யும் விதம், வீடு கட்டும அளவு, சகுன சாஸ்திரம், நிமித்த சாஸ்திரம் முதலிய எல்லாம் ஸம்ஹிதையிற் சொல்லப்படும். சகுனம் வேறு, நிமித்தம் வேறு. சகுனம் என்பதற்குப் பக்ஷி என்பது அர்த்தம். பக்ஷிகளால் ஏற்படும் நிமித்தங்களுக்குத்தான் சகுனம் என்று பெயர். உலகத்தில் ஒன்றுக்கொன்று ஸம்பந்தமில்லாத வஸ்து ஒன்றும் இல்லை. நடக்கும் காரியங்களும் அப்படியே. ஸரியான கணக்குத் தெரிந்தால் எல்லாம் தெரிந்துகொள்ளலாம். உலகத்தில் நடப்பவை எல்லாம் ஒருவனுடைய ஆஜ்ஞையால் நடக்கின்றன; ஒரு கணக்காக நடக்கிறது. ஒன்றால் எல்லாவற்றையும் கண்டு பிடிக்கலாம். கைரேகை, பக்ஷி, ஆரூடம், கிரஹநிலை முதலிய எல்லாம் ஒன்றுக்கொன்று ஸம்பந்தம் உடையனவாகவே இருக்கின்றன. எல்லாம் நிஜந்தான்.

கணிதத்தையும் கிரஹகதிகளையும் சொல்லுவது ஸித்தாந்தம். தனித்தனியாக மனிதனுடைய சுக துக்க பலனைச் சொல்லுவது ஹோரை அல்லது ஜாதகம். மிச்சம் உள்ளவை எல்லாம் ஸம்ஹிதை.

பூனை குறுக்கேபோவது முதலியவை நிமித்தம். பக்ஷிகள் குறுக்கே போவது சகுனம். இவைகளெல்லாம் ஸம்ஹிதையிற் சொல்லப்படும்.

வராஹமிஹிரர் பிருஹத்ஸம்ஹிதை ஒரு கிரந்தம் எழுதியிருக்கிறார்.

வெறும் ஆகாசத்தில் இந்தக் கிரஹங்களெல்லாம் இருக்கின்றனவே. விழாமல் எப்படி நிற்கின்றன? இதற்

குக் காரணத்தை நியூடன் (Newton) என்பவர்தாம் கண்டு பிடித்தார் என்று எல்லோரும் நினைக்கிறார்கள். மிகப் பழைய காலத்தில் உண்டான சூரிய சித்தாந்தத்தின் முதலில் இருக்கிற சுலோகம் பூமி விழாமல் இருப்பதற்கு ஆகர்ஷணசக்தி (Gravitation) காரணம் என்று சொல்லுகிறது. ஸ்ரீசங்கராசாரியாரவர்கள் பாஷ்யத்திலும் பூமிக்கு ஆகர்ஷணசக்தி இருக்கிறது என்று சொல்லப் பட்டிருக்கிறது.[1] ஒரு வஸ்துவை நாம் மேலே வீசி எறிந்தால் அது மறுபடியம் கீழே வந்து விழுகிறது. அப்படி விழுவது அதனுடைய ஸ்வபாவ குணம் அல்ல. அப்படியானால் அது ஆகாசத்திலேயே நின்றுவிட வேண்டியதுதான். அது பூமியில் விழுவதற்குக் காரணம் பூமியின் ஆகர்ஷணசக்தியே. ஆகர்ஷணசக்தியென்றால் இழுக்கும் சக்தி என்பது அர்த்தம். பிராணன் மேலே போகும். அபானன் கீழே போவது. கீழே இழுக்கிற சக்திக்கு அபான சக்தி என்று பெயர். ஸ்ரீ ஆசாரியாரவர்கள் பிருதிவிக்கு அபான சக்தி, அதாவது ஆகர்ஷணசக்தி இருக்கிறதென்று சொல்லியிருக்கிறார்கள். இவைகளைப்போன்ற பல அருமையான விஷயங்கள் நம்முடைய சாஸ்திரங்களில் இருக்கின்றன. நமக்கு இவைகள் தெரியாததனால் தேசாந்திரத்தில் உள்ளவர்கள் எழுதியவைகளுக்கு அளவில்லாத கௌரவத்தைக் கொடுக்கிறோம்.

இப்பொழுது எவ்வளவு விதமான கணக்குகள் லோகத்தில் இருக்கின்றனவோ அவ்வளவு கணக்குகளும் எவ்வளவோ வருஷங்களுக்கு முன்பே நம்முடைய ஜ்யோதிஷ சாஸ்திரங்களில் இருக்கின்றன.

கல்பாரம்பத்தில் எல்லாக் கிரஹங்களும் ஒரே நேராக இருந்தன. அப்புறம் காலம் ஆக ஆக அவை கொஞ்

1. ப்ரஸ்னோபநிஷத் பாஷ்யம்.

சங் கொஞ்சமாக மாறிக்கொண்டே வருகின்றன. மற்றொரு கல்பாரம்பத்தில் மறுபடியும் நேராக வந்துவிடும்.

நாம் செய்யும் கர்மாக்களில் முதலிற் சொல்லும் ஸங்கல்பத்தில் சொல்லப்படுகிற அவ்வளவும் ஜ்யோதிஷ விஷயந்தான்.

பிரம்மா லோக சிருஷ்டி பண்ணுகிறார். அவருக்கு நான்கு முகங்கள் உண்டு. நான்கு வேதங்களையும் நான்கு முகங்களால் சொல்லிக்கொண்டேயிருக்கிறார். வேதத்தை அவர் பண்ணியதாகச் சொல்லப்படவில்லை.

வேதத்தைப்பற்றி இங்கே ஒரு ஸந்தேகம் உண்டாகிறது. சைவ சித்தாந்த சாஸ்திரங்களைச் சேர்ந்த தேவாரத்தில் பரமேசுவரன் எப்பொழுதும் வேதம் சொல்லிக்கொண்டேயிருக்கிறார் என்று காணப்படுகிறது.

''வேதியா வேத கீதா'' என்று அது சொல்லுகிறது. ''சாமமோதும் வாயானை'' என்று ஓரிடத்தில் இருக்கிறது. இவற்றில் வேதத்தைச் சொல்லிக்கொண்டே இருப்பதாகக் காணப்படுகிறதே யன்றி வேதம் பண்ணினார் என்று இல்லை. நாராயணர் ஹிருதயத்தில் வேதத்தை ஸ்புரிக்கச் செய்தார் என்று பாகவதம் சொல்லுகிறது.

வேதம் அநாதி. ஈசுவரனும் அநாதி. வேதத்தை ஈசுவரன் உண்டுபண்ணினாரென்றால் அது ஆதியுள்ளதாக ஆகிவிடும். பிரம்மஸூத்திரபாஷ்யத்தில் ஓரிடத்தில் வேதத்துக்கு மூலகாரணன் பரமேசுவரன் என்ற ஒரு விஷயம் இருக்கிறது. அப்படியானால் வேதத்திற்கு ஆதியுண்டா? என்ற ஆக்ஷேபணை அடுத்தபடி காணப்படுகிறது. வேதத்துக்கு ஈசுவரன் காரணம். ஈசுவரனுக்கு வேதம் காரணம்; அதாவது ஈசுவரனைத் தெரிந்து கொள்ள வேதம் காரணம்.

'अस्य महतो भूतस्य निःश्वसितमेतत् यदृग्वेदो यजुर्वेदः सामवेदोऽथर्वाङ्गिरसः' ।

என்று வேதம் சொல்லுகிறது.

வேதம் ஆதியா? ஈசுவரன் ஆதியா? இரண்டும் அநாதி. வேதம் ஈசுவரனிடத்திலிருந்து வருகிறது. அப்படியாயின் அது எப்படி அநாதியாகும்? ஈசுவரனுடைய சுவாஸம் வேதம். சுவாஸம் இல்லையானல் ஈசுவரனும் இல்லை. எப்பொழுதும் ஈசுவரன் வேதத்தைப் பாடிக் கொண்டே இருக்கிறார் என்று சொல்லியிருக்கிறது. எப்பொழுதும் ஈசுவரன் மூச்சுவிட்டுக்கொண்டிருக்கிறார்; வேதமாகிய மூச்சை விட்டுக்கொண்டிருக்கிறார். தமிழ் நூல்களில் பரமேசுவரனை ஒரு கனபாடிகளைப்போல வருணித்திருக்கிறது. பூணூல் போட்டுக்கொண்டு விபூதி இட்டுக் கொண்டு வேதம் சொல்லிக்கொண்டே இருக்கிறார் என்று தேவாரம் சொல்லுகிறது. வேதியன் என்று சொல்லுகிறது. அதனல் பிராம்மணன் என்றால் விபூதி இட்டுக்கொண்டு பூணூல் போட்டுக்கொண்டு வேதாத்தியயனம் செய்பவன் என்பது தெரிய வருகிறது. ஆழ்வார்ாதிகள் இப்படி எழுதவில்லை. யக்ஞம் யாகம் என்பவைகளைப்பற்றி அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். ஓர் ஊரைப்பற்றிச் சொல்லுகையில் அது யக்ஞமும் யாகமும் பண்ணுபவர்கள் இருக்கும் ஊர் என்று சொல்லுகிறார்கள்.

தேவாரங்களில் பரமேசுவரன் ருத்ராக்ஷம் போட்டுக்கொண்டதாகப் பெரும்பாலும் காணப்படவில்லை. அவருடைய கண்ணிலிருந்தே ருத்ராக்ஷம் உண்டாயிற்று. அதிலேயே ருத்ராக்ஷம் இருக்கிறது. மூன்றுவது கண்ணாகிய ஞானக் கண்ணில் அது உண்டாயிற்று. அது ஞான ஸாதனமானது. அதனல்தான் அதற்கு ஸாதனம் என்ற ஒரு பெயர் ஏற்பட்டிருக்கிறது.

"எவரேனும் லலாடத்திட்ட வெண்ணீறும் சாதனமும்" என்று சொல்லியிருக்கிறது. இங்கே சாதனமென்பது ருத்ராக்ஷம். ஈசுவரன் ஸதா வேதம் ஓதுகிறார் என்று தேவாரங்கள் சொல்லுகின்றன. அது அவருடைய சுவாஸமாக இருக்கிறது என்பதை அநுசரித்தது தான்.

வேதங்களுக்குப் பாஷ்யம் செய்த வித்தியாரணிய ஸ்வாமிகள் தம்முடைய குருவை ஈசுவரனாகப் பாவித்துத் துதிக்கையில்,

यस्य निःश्वसितं वेदा यो वेदेभ्योऽखिलं जगत् ।
निर्ममे, तमहं वन्दे विद्यातीर्थमहेश्वरम् ॥

என்று சொல்லுகிறார். வேதங்கள் ஈசுவரனுடைய நிச்வாஸம் என்று அதில் குறிப்பிட்டிருக்கிறார்.

பிரம்மா எப்படி சிருஷ்டி பண்ணுவது? ஒன்றுமில்லாத ஆகாசத்திலிருந்து எலக்ட்ரிஸிடி (electricity) யால் எவ்வளவோ காரியங்கள் செய்யப்படுகின்றன. அதைப்போல, எல்லாம் சைதன்ய வஸ்துவினிடமிருந்து உண்டாகும். மற்ற ஸமயங்களில் அந்தச் சைதன்யம் தூங்கும். ஒரு ஸாண்டோ இருக்கிறான். அவன் தூங்கினால் அவனுடைய சக்தி ஒன்றும் வெளியே தெரிவதில்லை. குஸ்தி முதலிய காரியங்களைப் பண்ணும்பொழுது அவனுடைய சக்தி தெரிகிறது. அதுபோல சிருஷ்டி காலத்தில் சைதன்ய வஸ்துவின் சக்தி பல காரியங்களைச் செய்கிறது. நிர்க்குண வஸ்துவினிடத்திலிருந்து ஒரு சக்தி கிளம்புகிறது. அதன் வழியே உண்டானவர் பிரம்மா.

அவர் வேதசப்தத்திலிருந்து லோகத்தைச் சிருஷ்டித்தார். 'அநந்தா வை வேதா:'[1] என்று சொல்லப்பட்டிருக்கிறது. வேதங்கள் அளவிறந்தன. சிருஷ்டியும் பலவிதம்.

[2]பரத்வாஜமஹரிஷி மூன்று ஆயுள் பரியந்தம் வேதாத்தியயனம் செய்தார். பரமேசுவரன் அவருக்குப் பிரத்தியக்ஷமானார். உமக்கு 4-வது ஆயுள் கொடுக்கிறேன் அதைக் கொண்டு என்ன செய்வீர்? என்று கேட்டார். பரத்வாஜர் அந்த ஆயுளை வைத்துக்கொண்டு வேதாத்தியயனமே பண்ணிக்கொண்டிருப்பேன் என்று சொன்னார். அவர் மனதைக் கொஞ்சம் மாற்றவேண்டும் என்று பரமேசுவரன் எண்ணினார். அங்கே மூன்று பெரிய மலைகளைத் தோற்றப்பண்ணி, ஒரு பிடி மண்ணை எடுத்துக் காட்டி 'நீ இவ்வளவு வருஷக் கணக்காக அத்தியயனம் பண்ணின வேதங்கள் இந்தப் பிடி மண்ணுக்கு ஸமானம். நீ இன்னும் தெரிந்துகொள்ளாதவை இந்த மலைகளைப்போல் இருக்கின்றன' என்று சொன்னார். அதனால் அநந்தமான வேதங்கள் உண்டு என்று தெரிகிறது.

---

[1] अनन्ता वै वेदाः ।

[2] "भरद्वाजो ह त्रिभिरायुर्भिर्ब्रह्मचर्यमुवास । तꣳ ह जीर्णिꣳ स्थविरꣳ शयानमिन्द्र उपव्रज्योवाच भरद्वाज । यत्ते चतुर्थमायुर्दद्याम् । किमेनेन कुर्या इति । ब्रह्मचर्यमेवैनेन चरेयमिति होवाच । तꣳह त्रीन् गिरिरूपानविज्ञातानिव दर्शयांचकार । तेषाꣳ हैकैकस्मान्मुष्टिनाददे । स होवाच । भरद्वाजेत्यामन्त्र्य वेदा वा एते" इति ।

[தைத்திரீயப்பிராம்மணம்]

பிரம்மா உண்டானவுடன் அவருடைய ஹிருதயத்தில் வேதசப்தமெல்லாம் தோன்றின. அவருக்குச் சிருஷ்டி செய்வதற்கு அந்த வேதம் வழி காட்டிற்று. எங்கே பார்த்தாலும் வேதசப்தம் நிறைந்திருந்ததை அவர் அறிந்தார். அவருக்கு எல்லா வேதங்களும் தோன்றும். ரிஷிகளுக்குச் சில சில மந்திரங்களே தோன்றும். அப்படித் தோன்றிய மந்திரங்கள் எல்லாம் சேர்ந்துதான் நமக்கு வேதமாக இருக்கிறது. நாம் மந்திரங்களுக்கு ரிஷி, சந்தஸ், தேவதை என்னும் மூன்றையும் சொல்லுகிறோம். எல்லா மந்திரங்களுக்கும் ரிஷி, சந்தஸ், தேவதை உண்டு. தெலுங்கு தேசத்தில் எல்லா மந்திரங்களுக்கும் அவைகளைச் சொல்லி வருகிறார்கள். தபஸ் பண்ணின ரிஷிகள் மூலமாக அறியப்பட்டவைகள் மந்திரங்கள். அந்த ரிஷிகள்தான் அந்தந்த மந்திரத்திற்குரிய ரிஷிகள். அவர்களுக்கு அந்த மந்திரங்களைக் கேட்கும் திவ்விய சுரோத்திரம் உண்டு. யோகசாஸ்திரத்தில் பெரிய ஆகாசமும் மனதிலுள்ள ஆகாசமும் ஒன்றாக ஆகிவிட்டால் பெரிய ஆகாசத்திலுள்ள சப்தமெல்லாம் நமக்குக் கேட்கும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. எங்கும் நிறைந்து அபேதமான நிலையை அடைந்தவர்களுடைய மனதிற்கு அந்தச் சப்தங்கள் தெரியும். ரிஷிகளுடைய திவ்வியசுரோத்திரம வைதிகமான சப்தங்களைக் கிரஹித்தன. அவைகள்தாம் வேத மந்திரங்கள். பிரம்மா எல்லாவற்றையும் தெரிந்துகொண்டார்.

அந்தப் பிரம்மாவுக்கு ஆயுள் உண்டு. அவருக்கு நூறு வருஷ ஆயுள். அவருக்குப் பிறகு நூறு வருஷ காலம் பிரபஞ்சம் தூங்குகிறது.

சிருஷ்டி பண்ணுபவர் பிரம்மா. ருத்திரர் பிரளயத்தை உண்டாக்குகிறார். அவர் பரமோபகாரி. பகல் ஸௌக்கியமோ? ராத்திரி ஸௌக்கியமோ? பகல் முழு

வதும் வேலை செய்கிறோம். அந்தச் சிரமத்திற்கு விஸ்ராந்தி ராத்திரி காலத்தில் ஏற்படுகிறது. உலகம் முழுவதும் ராத்திரியில் விஸ்ராந்தி அடைகிறது. அப்படி ராத்திரி விஸ்ராந்தி இருந்தால்தான் மறுபடியும் பகலில் எழுந்து வேலை செய்யும் சக்தி உண்டாகும். அதுபோலக் கர்மபலன் இல்லாமல் கொஞ்சம் விஸ்ராந்தி இருந்தால் தான் ஆத்மாக்களுக்கு மறுபடியும் கர்ம பலனை அநுப விக்கும் சக்தி உண்டாகும். லோகாந்தர அலைச்சலுக் கெல்லாம் விஸ்ராந்தி நமக்கு ஏற்பட்டால் அப்பொழுது ஆநந்தம் உண்டு. அந்த ஆநந்தம் பிரளயத்தில் ஸகல ஆத்மாக்களுக்கும் உண்டாகிறது. மோக்ஷ சாதனமாகிய காரியங்களைப் பண்ணமுடியாமற் கூட அந்த ஆநந்தத்தைப் பிரளயத்தில் ருத்திரர் எல்லோருக்கும் கொடுக்கிறார், ருத்திரர் மூன்று மூர்த்திகளுள் ஒருவர். பிரம்மாவும் அப்படிப்பட்டவரே. மூன்று மூர்த்திகளுக்கும் மேலே அதீதராகப் பரமசிவன் இருக்கிறார். அவர் பிரம்மாவுக்கு அநுக்கிரஹம் பண்ணுகிறார். காமேசுவரனாக இருந்து அருள் புரிகிறார். பராசக்தி காமேசுவரியாக அநுக்கிர ஹிப்பாள்.

பரமேசுவரனுடைய அநுக்கிரஹத்தால் பிரம்மா வேதங்களை அறிந்துகொள்ளுகிறார். நான்கு வேதங்களை யும் நான்கு முகத்தில் சொல்லிக்கொண்டு சிருஷ்டியை நடத்திக்கொண்டு நூறு வயது இருக்கிறார். அப்புறம் நூறு வயது மஹாப்பிரளயம். அப்புறம் வேறொரு பிரம்மா ஏற்பட்டு நூறு வயது இருக்கிறார். மஹாப் பிரளயம் ஸகல ஆத்மாவுக்கும் ராத்திரி. அப்பொழுது எல்லாம் தூங்கும். நித்தியப் பிரளயம் தினந்தோறும் உள்ள ராத்திரி. பெரிய பிரளயத்தில் எல்லாவற்றை யும், பெரிய ஆத்மாவாகிய பரமாத்மா தம் ஸ்வரூபத்தில் அடக்கிக்கொள்ளுகிறார். சின்னப் பிரளயமாகிய தூக்கத்

தில் சின்ன ஆத்மாவில் இந்திரியங்கள் முதலியவை அடங்குகின்றன.

பிரளயம் முடிவானவுடன் உண்டான பிரம்மாவுக்கு முன்பு இருந்த பிரம்மா என்ன பண்ணிஞரென்பதை வேதம் தெரிவிக்கிறது. பிரம்ம என்று வேதத்திற்குப் பெயர். அதை அழியாமல் வைப்பவன் பிராம்மணன்.* அவனுக்குப் பிரம்மா என்று ஒரு பேர் உண்டு.

பிரம்மாவுக்குச் சக்தி உண்டானது வேதத்திஞல். அது அவருக்குச் சிருஷ்டியை எப்படிச் செய்யவேண்டுமென்பதைத் தோற்றுவிக்கிறது. இப்பொழுதுள்ள பிரம்மாவுக்கு நூறு வயது. அந்த நூறு வயதுக்கும் ஒரு பரம் என்று பெயர். அதில் பாதி ஒரு பரார்த்தம். மிகவும் சிறிய எண் ஒன்று. மிகவும் பெரிய எண் பரார்த்தம். ஆகையால் ஏகாதி பரார்த்தபரியந்தம் சங்கியை (संख्या) என்று சொல்லுவதுண்டு. 18-வது ஸ்தானம் பரார்த்தம். பரார்த்தமென்பதற்குப் பரத்தில் பாதி என்பது அர்த்தம். பரார்த்தத்துவயஜீவி பிரம்மா. அதாவது இரண்டு பரார்த்தங்கள் ஜீவித்திருப்பவர் பிரம்மா. இப்பொழுது இருக்கும் பிரம்மாவுக்குப் பாதிக்குமேல் ஆயுள் தீர்ந்துவிட்டது. அவர் ஆயுள் ஏழு கல்பம். இப்பொழுது மூன்றிற்குமேல் நான்காவது கல்பமாகிய சுவேதவராஹ கல்பம் நடக்கிறது. இதற்கு முன்பு நடந்தது லக்ஷ்மீ கல்பம். 4,32,000 வருஷங்கள் ஒரு சதுர்யுகம். பத்துக் கலியுகப் பிரமாணம் ஒரு சதுர்யுகம். கலியில் இரண்டு பங்கு துவாபரயுகம், கலியில் மூன்று பங்கு திரேதாயுகம், நான்கு பங்கு கிருதயுகம். பத்துக் கலியுகக் காலம் சேர்ந்து ஒரு சதுர்யுகம் ஆகும். இப்படி 1000 சதுர்யுகம், அதாவது 4,32,00,00,000 வருஷங்கள்

* ब्रह्मायुष्मत् तद्ब्राह्मणैरायुष्मत् ।

பிரம்மாவுக்கு ஒரு பகல். அவ்வளவு வருஷங்கள் ஒரு ராத்திரி. 8,64,00,00,000 வருஷங்கள் அவருக்கு ஒரு நாள். இப்படி 365 நாட்கள் சேர்ந்தது ஒரு வருஷம். அப்படி நூறு வருஷங்கள் அவருடைய ஆயுள். இந்தப் பிரபஞ்சத்தின் ஆயுளும் அதுதான். பிரம்மாவினுடைய ஒவ்வொரு ராத்திரியிலும் அவாந்தரப் பிரளயம் உண்டாகும். அது பூலோகம், புவர்லோகம், ஸுவர்லோகம் என்ற மூன்றையுமே பாதிக்கும். மஹாப் பிரளயத்தில் அவர் ஆயுள் முடிவடையும்.

பிரம்மாவின் ஒரு பகலுக்குள் (அதாவது 4,32,00,00,000 வருஷங்களுக்குள்) 14 மனுவந்தரம் இருக்கின்றன. ஒவ்வொரு மனுவந்தரத்துக்கும் ஒவ்வொரு மனு அதிகாரி. இப்பொழுது ஏழாவது மனுவின் காலம். அவருக்கு ஜகத்தைப் பரிபாலிக்கும் அதிகாரம் இருக்கிறது. வைவஸ்வத மனு என்பது அவர் பெயர். அவர் தான சூரிய குலத்துக்கு முதல் அரசன்.

சூரியனிடத்திலிருந்து கிரணங்கள் வந்து கொண்டிருக்கின்றன. அவைகளுக்கு உஷ்ணம் குறைந்து கொண்டே வருகிறது. எப்பொழுது முழு உஷ்ணமும் குறையும் என்பதை ஒருவகையிற் கணக்குப்போட்டு நவீன ஆராய்ச்சிக்காரர்கள் கண்டு பிடித்திருக்கிறார்கள். அந்தக் கணக்கும் அவாந்தரப் பிரளயத்திற்கு உரிய கணக்கும் சற்றேறக்குறைய ஒத்திருக்கின்றன.

ஒரு மனுவந்தரத்திற்கு 71 சதுர்யுகங்கள். இந்த வைவஸ்வதமனுவந்தரத்தில் இப்பொழுது நடப்பது 28-வது சதுர்யுகம். அதில் இது கலியுகம். நாம் பண்ணும் ஸங்கல்பத்தில் இவ்வளவும் இருக்கின்றன. திதி, லக்கினம் வரையில் சொல்லுவதுண்டு. இவ்வளவும் காலக்கணக்கு. அப்புறம் தேசக்கணக்கு வேறு அந்த

ஸங்கல்பத்தில் இருக்கிறது. நாம் கடிதங்களில் ஊரை யும் தேதியையும் எழுதுவதுபோல ஸங்கல்பத்தில் தேசத் தையும் காலத்தையும் சொல்லிக் கொள்ளுகிறோம். இவ் வளவு அருமையான காலக் கணக்குகள் ஜ்யோதிஷ சாஸ்திரத்தில் அறியப்படுகின்றன.

ஒரு கொட்டகையில் மேற் கூரையிலுள்ள துவாரம் வழியாக வரும் சூரிய கிரணம் ஓரிடத்தில் படுகிறது. அதே கிரணம் அடுத்த வருஷம் எங்கே விழும் என்று கேட்டால் நமக்குத் தெரியாது. ஜ்யோதிஷ சாஸ்திரத் தில் சொல்லியுள்ள கணனங்களைச் செய்தால் தெரியும். பழைய காலத்தில் ஒரு முத்தைத் தொங்கவிட்டு இன்ன காலத்தில் இன்ன இடத்தில் அதனுடைய நிழல் விழும் என்று கோடு போட்டுக் காண்பித்தால் அப்படிக் காண் பித்தவர்களுக்கு அரசர்கள் உயர்ந்த சன்மானங்களைச் செய்து வந்தனர். மற்ற சாஸ்திரங்களிலெல்லாம் வாக்கி யார்த்தம் செய்து சன்மானம் பெறுவார்கள். ஜ்யோதிஷ சாஸ்திரத்திலோ பிரத்தியக்ஷமாகக் காட்டிச் சன்மானம் பெறவேண்டும். அதில் ஏமாற்ற முடியாது. அதற்கு சூரிய சந்திரர்களே சாக்ஷி.

प्रत्यक्षं ज्योतिषं शास्त्रम् ।

கல்பம்

வேதபுருஷனுக்குக் கல்பம் கரம் என்பார்கள். காரி யங்களைச் செய்வதினால் கைகளுக்குக் கரம் என்று பெயர் வந்தது. செய்யும் தொழில் உடையதால் தெலுங்கில் 'செய்' என்று வழங்குகிறது.

ஜ்யோதிஷம் முதலியவற்றைத் தெரிந்து கொண்டு வேதத்தையும் தெரிந்துகொண்டு பின்பு என்ன செய் வது? ஏதாவது ஒரு காரியம் செய்யவேண்டும். நமக்குத் தோன்றுகிற காரியங்களெல்லாம் பண்ணி, சம்பாதித்த

பாபங்களெல்லாம் தொலைய ஒரு நல்ல காரியம் பண்ண வேண்டும். அதற்கு மந்திரம் முதலியவைகள் வேண்டும். அந்தக் கர்மாக்களைச் செய்வதற்குப் பல திரவியங்கள் வேண்டும். அதை நடத்த வீடு வேண்டும். அந்த வீட்டுக்கு வாஸ்து லக்ஷணம் வேண்டும். பின்பு அந்தக் கர்மாக்களின் பலனை ஈசுவரனுக்கு அர்ப்பணம் பண்ண வேண்டும். இவைகளைப் பற்றிய விஷயங்களைச் சொல்லுவதுதான் கல்பம். நம்முடைய சாஸ்திரங்களில் எல்லாக் காரியங்களையும் பரமேசுவரனுக்கு அர்ப்பணம் செய்ய வேண்டும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. சிற்பி, தட்டான் முதலிய எல்லோருடைய வேலையும் பரமேசுவரனுக்கர்ப்பணம் செய்யவேண்டியதே. பதினான்கு வித்தைகளையும் அவருக்கே அர்ப்பணம் செய்யவேண்டும். பிராம்மணன் வேதத்தைக் கோயில்களிற் சொல்லி பகவானுக்கர்ப்பணம் செய்கிறான். சிற்பி கோயில்களைக் கட்டுவதினாலும் பகவானுடைய பிம்பங்களை அமைப்பதினாலும் அவன் தன்னுடைய வேலைகளை பகவானுக்கர்ப்பணம் செய்கிறான். மற்ற தேச சாஸ்திரங்களெல்லாம் ஈசுவரனுடைய நினைவை நம்மிடத்திலிருந்து எவ்வளவு விலக்க வேண்டுமோ அவ்வளவுக்கு உபயோகப்பட்டு வருகின்றன. அவர்களுடைய சாஸ்திரங்களெல்லாம் இந்திரிய சுகத்திற்கு உபயோகப்படுகின்றன. நாம் நந்தவனம் போடுகிறோம். அதற்கும் அவர்கள குரோடன்ஸ் வைப்பதற்கும் எவ்வளவோ வித்தியாசம் இருக்கிறது. அது கண்ணால் பார்த்து ஆனந்தப்படுவதோடு சரி. நாம் செய்யும் காரியங்களோ ஈசுவரார்ப்பணத்திற்கு ஏற்பட்டவை. நம்முடைய தேசத்துச் சித்திரக் கலைகளெல்லாம் கோயில்களிலேயேதான் காணப்படுகின்றன. பிராம்மணனுடைய வித்தைகளெல்லாம் அங்கேதான் உபயோகப்படுகின்றன. இப்படி ஈசுவரார்ப்பணம் செய்வதால் சித்த சுத்தி உண்டாகும்.

வேதத்தை அத்தியயனம் பண்ணி அதிலே உள்ள அக்ஷரங்களைப்பற்றித் தெரிந்துகொண்டு வியாகரணத்தையும் அறிந்து, ஸ்வரம் அர்த்தம் என்பவற்றையும் தெரிந்துகொண்டு, கர்மாக்களைச் செய்யும் காலத்தைத் தெரிந்து கொள்ளுவதின் பிரயோஜனம் நல்ல கர்மாக்களைப் பண்ணுவதே. ஜ்யோதிஷத்திற்கு நயனம் என்று ஒரு பெயர் உண்டு. நயதி என்றால் அழைத்துக்கொண்டு போவது. வெகு தூரத்திற்கு அழைத்துக்கொண்டு போகிறது (லீடர்.) நமக்குக் கண்ணில்லாமற் போனால் நம்மை ஒருவர் அழைத்துப் போகவேண்டும். அந்த ஸ்தானத்தில் கண் இருக்கிறது. அந்தக் காரணத்தினால்தான் கண்ணிற்கு நயனம் என்று பெயர் வந்தது. அந்தக்கண்ணைப்போலவே ஜ்யோதிஷம் பல காலத்துக்கு அப்புறம் நடக்கும் விஷயத்தைத் தெரிவிக்கிறது.

ஜ்யோதிஷத்தினால் காலத்தைத் தெரிந்துகொண்டு நல்ல காரியங்களைப் பண்ணவேண்டும். எந்தக் கர்மாவை எப்படிப் பண்ணுவது? எந்த எந்த வருணத்தார் எந்த எந்தக் காரியங்களைச் செய்யவேண்டும், எந்த எந்த ஆசிரமத்தார் எதை எதைச் செய்யவேண்டும் என்பவைகளையும் எந்தக் கர்மாவுக்கு எந்த எந்த மந்திரம், திரவியம், தேவதை என்பவைகளையும், எத்தனை ருத்விக்குகளை வைக்கவேண்டும், எந்த விதமான பாத்திரங்களை உபயோகப்படுத்தவேண்டும் என்பவைகளையும், இவை போன்ற மற்றவைகளையும் சொல்லுவது கல்பம்.

கல்ப சாஸ்திரத்தை அநேக ரிஷிகள் செய்திருக்கிறார்கள். கிருஷ்ண யஜுர் வேதத்திற்கு ஆபஸ்தம்பர், போதாயனர், வைகானஸர், ஸத்யாஷாடர், பாரத்துவாஜர், அக்கினிவேசர் என்னும் ஆறு பேர்கள் கல்ப ஸூத்திரங்கள் செய்திருக்கிறார்கள். ருக்வேதத்திற்கு ஆச்வலாயனர் என்பவர் செய்திருக்கிறார். சுக்ல யஜுர்

வேதம் இரண்டு சாகை யுடையது. அதற்குக் காத்தியாயனர் ஸூத்திரம் செய்திருக்கிறார். ஸாமவேதத்தில் கௌதம சாகைக்குத் திராஹ்யாயணர் ஸூத்திரம் செய்திருக்கிறார். வேறொரு சாகை தலவகாரசாகை. அதற்கு ஜைமினி ஸூத்திரம் செய்திருக்கிறார். ஒவ்வொரு சாகைக்கும் கிருஹ்ய ஸூத்திர மென்றும் சிரௌத ஸூத்திரமென்றும் இரண்டு வகை உண்டு. கர்ப்பம் உண்டாவது முதல் தேஹம் அக்கினிக்கு ஹோமம் பண்ணப்படும் வரையில் செய்யப்படுகின்ற கிரியைகளைச் சொல்லுவது கிருஹ்ய ஸூத்திரம். தஹனக்கிரியையும் ஒருவகையான ஹோமம்தான். அந்தியேஷ்டி என்று சொல்லுவார்கள். அந்த இஷ்டியில் தேஹமே திரவியமாக உபயோகப்படுகிறது. அக்கினிஹோத்திரத்தை ஆதாரமாகக்கொண்டு பண்ணும் ஏழு ஹவிர்யஜ்ஞும் ஏழு ஸோமயஜ்ஞும், ஆகப் பதினாலு கர்மாக்களைத் தவிர மற்றவற்றைப்பற்றிக் கிருஹ்ய ஸூத்திரம் சொல்லுகிறது. வீட்டில் செய்வது அக்கினிஹோத்திரம். சாலை போட்டுக்கொண்டு பண்ணுவது யஜ்ஞும்.

நாற்பது ஸம்ஸ்காரங்களும் எட்டு ஆத்ம குணங்களும் கல்ப ஸூத்திரங்களில் சொல்லப்பட்டிருக்கின்றன. அந்த நாற்பது ஸம்ஸ்காரங்களில் முன்பு சொன்ன பதினான்கைத் தவிர மிகுதியுள்ள இருபத்தாறும் கிருஹ்ய ஸூத்திரத்தில் சொல்லப்படும். அதில் கர்ப்பாதானம். பும்ஸவனம், ஸீமந்தம், ஜாதகர்மா, நாமகரணம், அன்னப் பிராசனம், சௌளம், உபநயனம், விவாஹம், அந்தியேஷ்டி முதலியவைகள் சொல்லப்படுகின்றன. எட்டு ஆத்ம குணங்களாவன: தயை, பொறுமை, அசூயை இல்லாமலிருத்தல், சுத்தி, பிடிவாதமின்மை, மனங் குளிர்ந்திருத்தல், லோபமின்மை, நிராசை என்பவை

கள். இவை எட்டும் சாமான்ய தர்மங்களைச் சேர்ந்தவை களே.

நாம் இன்ன ஸூத்திரத்தைப் பின்பற்றுகிறவர்கள் என்று சொல்லுகிறோம். அது சிரௌத ஸூத்திரத்தைத் தான் குறிக்கின்றது. திருஷ்டாந்தமாக ஸாம வேதிகள் திராஹ்யாயண ஸூத்திரம் என்று சொல்லுகிறார்கள். திராஹ்யாயணர் சிரௌத ஸூத்திரம் மாத்திரம் செய்திருக்கிறார். வேறொருவர்தான் கிருஹ்ய ஸூத்திரம் செய்திருக்கிறார். அதனால் யஜ்ஞகர்மானுஷ்டானங்கள் விசேஷமாகச் செய்யப்பட்டு வந்தன என்று தெரிகிறது. நாம் அவைகளைப் பண்ணாமல் விவாஹம் முதலியவற்றை அதிகமாகப் பண்ணுகிறோம். கிருஹ்ய கர்மாக்கள் லகுவாகச் செய்யவேண்டியவை. அவை இப்பொழுது பலத்துப் போயின. சிரௌத கர்மாவை ஏழையாய் இருப்பவன் யாசகம் பண்ணிச் செய்கிறான். பழைய காலத்தில் 'பிரதி வஸந்த ஸோமயாஜிகள்" என்று பல பேர்கள் இருந்தார்கள். அதாவது ஒவ்வொரு வஸந்த காலத்திலும் ஸோமயாகம் செய்பவர்கள். யாகம் வஸந்த காலத்தில்தான் செய்யவேண்டும். ஒரு வருஷத்தில் வரவு (यस्य त्रयी) மூன்று வருஷச் செலவுக்குப் போதுமானதாக இருந்தால் அந்த வரவை உடையவர்கள் ஒவ்வொரு வஸந்த காலத்திலும் ஸோமயாகம் செய்து வந்தார்கள். இப்பொழுது எல்லாம் கெட்டுப் போய்விட்டன. இக்காலத்துப் பணக்காரர்கள் ஒரு வருஷ வரவிற்கு மூன்று வருஷச் செலவை வைத்துக் கொண்டிருக்கிறார்கள். வியாபார ரீதியில் உண்டான மாறுதல்களால் எல்லாருக்கும் தரித்திரமும் கஷ்டங்களும உண்டாயிருக்கின்றன. எதிலும் மிதமாக இருக்க வேண்டும்; அமிதம் கூடாது. இந்தக் காலத்து புத்தி சாமர்த்தியங்களெல்லாம் தரித்திரத்தில் கொண்டு

போய்விடுகின்றன. ஒருவன் பணக்காரனாக இருக்கிறானென்றால் அவனுக்கேற்றபடி அபாரமான செலவுகளை வைத்துக்கொண்டிருக்கிறான். இவைகளையெல்லாம் மிதப்படுத்திக்கொண்டு நல்ல காரியங்களைச் செய்ய வேண்டும். சிகை, புண்ட்ரம், கர்மானுஷ்டானம் முதலியவைகள் ஸூத்திரத்துக்குத் தக்கபடி பலவகையாக இருக்கின்றன. சிலர் ஊர்த்துவசிகை வைத்துக்கொண்டிருக்கிறார்கள்; சிலர் பூர்வசிகையுடையவர்களாயிருக்கிறார்கள். அப்படியே ஊர்த்துவ புண்ட்ரம், திரிபுண்ட்ரம் (शिखां पुण्ड्रं च) என்று புண்ட்ர பேதங்கள் இருக்கின்றன. இவைகளெல்லாம் முன்னோர்களுடைய ஆசாரப்படி அனுஷ்டிக்கவேண்டும்.

யஜ்ஞ விசேஷத்தில் சயனம் என்று ஒன்று சொல்லப்படுகிறது. அதனுடைய லக்ஷணங்கள் முதலியவைகளைச் சொல்லும் சுல்பஸூத்திரம் என்று ஒரு பிரிவு இருக்கிறது.

ஸோமயாகம் முதல் அசுவமேதயாகம் வரையில் செய்கிற எல்லா யாகங்களுக்கும் மூன்று வேத மந்திரங்களும் உபயோகப்படுகின்றன. யஜ்ஞம் பண்ணுபவன் யஜமானன் என்று சொல்லப்படுவான். இப்பொழுது பல பேரை யஜமானன் என்று சொல்லுகிறோம். முன்பு பல பேர்கள் யஜ்ஞம் செய்துவந்தார்களென்றும் அதனால் யஜமானன் என்னும் பெயர் அதிகமாக வழங்கி வருகின்றது என்றும் தெரிகிறது. 'ருத்விக்' என்பவன் தக்ஷிணை வாங்கிக் கொள்பவன். அந்த ருத்விக்குகளில் ஹோதா, உத்காதா, அத்வர்யு என்று மூன்று பிரிவினர் உண்டு. ஹோதா ருக் வேதத்தையும், அத்வர்யு யஜுர் வேதத்தையும், உத்காதா ஸாம வேதத்தையும் சொல்ல வேண்டும். மூன்று வேதத்தாலும் யஜ்ஞம் நடக்கவேண்டும். நித்திய யஜ்ஞங்கள் என்று சில இருக்கின்றன.

லோகாந்தர பலனை உத்தேசித்து ஜாதிகளுக்கு ஏற்றபடி எல்லாரும் செய்யவேண்டிய யஜ்ஞங்களும் இருக்கின்றன.

சுல்பஸூத்திரங்கள் சாமான்ய ஸூத்திரங்களென்றும் விசேஷ ஸூத்திரங்களென்றும் இருவகைப்படும். ஹிரண்யகேசர் என்பவர் சுல்ப ஸூத்திரம் செய்திருக்கிறார். வேறு பலரும் செய்திருக்கிறார்கள். ஸூத்திரங்களின் வழியாக உண்டான பிரயோகங்கள் சில இருக்கின்றன. ஆண்டபிள்ளைப் பிரயோகம் என்பது இப்பொழுது அதிகமாகப் பிரசாரத்தில் இருந்து வருகிறது. ஆண்டபிள்ளை என்பவர் திருப்பனந்தாளில் இருந்தவர். திருவிடைமருதூர்ப் பிள்ளையாருக்கு ஆண்டபிள்ளையார் என்பது பெயர். அந்தப் பெயர் அவருக்கு வைக்கப் பட்டது. அவருடைய பிரயோகத்தின்படி இப்பொழுது சிரௌத கர்மாக்கள் நடந்து வருகின்றன.

சிரௌத ஸூத்திரத்திற்கு அதிகாரி இப்பொழுது பெரும்பாலும் இல்லை. கிருஹ்ய ஸூத்திரம்தான் பிரசாரத்திலிருந்து வருகிறது. மற்ற தேசாந்திர சாஸ்திரங்களெல்லாவற்றிற்கும் அதிகப் பிராதான்னிய மேற்பட்டிருக்கின்றது. நம்முடைய சாஸ்திரங்கள் எல்லாம் ஈசுவரசரணாரவிந்தத்தைக் கட்டிப்பிடிக்கின்றன. எதைப படித்தாலும் அது ஈசுவரார்ப்பணமாகவும் ஆத்ம லாபத்தைத் தருவதாகவும் இருக்கவேண்டும். நம்முடைய சாஸ்திரங்கள் எல்லாம் அப்படிப்பட்டவைகளே.

# 9

# மீமாம்ஸை

[23—10—1932]

வேதங்களுக்கு உள்ள அங்கங்கள் ஆறு. உபாங்கங்கள் நான்கு. மீமாம்ஸை, நியாயம், புராணம், தர்ம சாஸ்திரம் என்பவையே நான்கு உபாங்கங்கள்.

மீமாம்ஸை முதல் உபாங்கம். உப+அங்கம்=உபாங்கம். அக்கிராஸநாதிபதிக்கு அடுத்தாற்போல இருப்பவர் உப அக்கிராஸநாதிபதி. அதுபோல ஆறு அங்கங்களுக்கும் அடுத்தபடியாக இருப்பவை உபாங்கங்கள்.

மீமாம்ஸை என்பதில் மாங் என்பது தாது, ஸன் ப்ரத்யயம். இதன் தாத்பர்யார்த்தம் பூஜித விசாரம் என்பது; அதாவது நல்ல விஷயத்தை விசாரிக்கிறது.

மீமாம்ஸை பூர்வமீமாம்ஸை என்றும் உத்தரமீமாம்ஸை என்றும் இரண்டு விதம்.

அநேகமாகச் சாஸ்திரங்கள் ஸூத்திரமாக இருக்கும். அதற்கு வார்த்திகமும் பாஷ்யமும் இருக்கும். ஸூத்திரகாரர் ஒரு ரிஷியாக இருப்பார். பூர்வமீமாம்ஸையின் ஸூத்திரகாரர் ஜைமினி. பாஷ்யகாரர் சபரஸ்வாமி என்பவர். வார்த்திககாரர் குமாரஸ்வாமியின் அவதாரமாகிய குமாரிலபட்டர். இவை மூன்றும் பூர்வமீமாம்ஸை.

பூர்வமீமாம்ஸை ஆயிரம் அதிகரணங்களாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது. சில ஸூத்திரங்கள் சேர்ந்து ஒரே விஷயத்தை விசாரம் செய்வது ஓர் அதிகரணம். ஒவ்வோர் அதிகரணத்தில் ஒவ்வொரு விஷயமாக ஆயிரம் விசாரம் செய்வது பூர்வமீமாம்ஸை. வேதவாக்கியங்களை எடுத்துக்கொண்டு அது விஷயங்களை விசாரம் செய்யும்.

வேதம் என்பது ஈசுவரன் உண்டாக்கிய சட்டம். நாம் பிரஜைகள். ஈசுவரன் நமக்கு அரசன். அவர் பல அதிகாரிகளை ஏற்படுத்தியிருக்கிறார். அவருடைய ராஜாங்கத்தில் இந்திரன், வாயு, வருணன், அக்கினி, யமன், ஈசானன், குபேரன், நிருருதி முதலிய பல தேவதைகளை லோகத்தை ஸம்ரக்ஷிக்கும் அதிகாரிகளாக நியமித்திருக்கிறார். அந்த அதிகாரிகள் 14 லோகத்திலும் உள்ள ஜீவராசிகளாகிய பிரஜைகளை ரக்ஷிப்பதற்கு ஒரு சட்டம் வேண்டும் அல்லவா? அந்தச் சட்டந்தான் வேதம். அதன்படி நாம் எப்படி நடப்பது, அதிகாரிகள் எப்படிப் பரிபாலனம் பண்ணுவது என்று ஸந்தேஹம் வந்தால் ஜட்ஜுகள் யோசித்துத் தீர்ப்புச் சொல்லுகிறார்கள். வக்கீல்கள் ஆலோசிக்கிறார்கள். அதுபோல தர்மத்தை அநுஷ்டானம் பண்ணும் வழிகளையெல்லாம் சொல்லும் வேதமாகிற சட்டத்திற்கு அர்த்த நிர்ணயம் பண்ணினவர் ஜைமினி. அதுதான் மீமாம்ஸை.

ஓர் ஊரில் ஒரு வழக்கு வந்தால், அலகாபாத்தில் இந்த மாதிரி வந்த கேஸில் இந்த மாதிரி தீர்ப்புச் செய்திருக்கிறார்கள், பம்பாயில் இப்படித் தீர்ப்பு என்று தெரிந்துகொண்டு அவைகளை அநுஸரித்துத் தீர்மானம் செய்கிறார்கள். அதுபோல ஓர் இடத்தில் அர்த்த நிர்ணயம் செய்ததை வேறு சில இடங்களில் எடுத்து அமைத்துக்கொள்ளலாம். இப்படி ஆயிரம் விதமான விஷயங்களை எடுத்துக்கொண்டு எவ்வளவு யுக்தியுண்டோ அவ்வளவினாலும் ஆக்ஷேபணை செய்து அவ்வளவையும் பூர்வபக்ஷம் செய்து நிர்ணயம் செய்வது மீமாம்ஸை. ஒரு விஷய நிர்ணயம் ஓர் அதிகரணமாக இருக்கிறது. ஜைமினி செய்தவை சின்னச்சின்ன ஸூத்திரங்களாக இருக்கின்றன. அந்த ஸூத்திரங்களின் அபிப்பிராயத்தை விரிவாக விளக்குவது சாபர

பாஷ்யம். சபரர் ஈசுவராம்சம் உடையவர். ஈசுவரன் அர்ஜுனனுக்குப் பாசுபதாஸ்திரம் கொடுக்க வேடராக வந்தபோது செய்தது என்றும் சொல்லுவதுண்டு. [இந்த மயிலாப்பூர் ஸம்ஸ்கிருத காலேஜ் ஏற்பட்ட பிறகு மீமாம்ஸா சாஸ்திரம் அதிகப் பிரசாரத்துக்கு வந்திருக்கிறது.]

ஆயிரம் அதிகரணத்தை உடைமையால் பூர்வ மீமாம்ஸைக்கு 'ஸஹஸ்ராதிகரணி' என்ற ஒரு பெயர் உண்டு. வேதத்தில் உள்ளவற்றிற்கு அர்த்த நிர்ணயம் செய்கையில் பலவகையாக உள்ள குயுக்திகளைப் போக்கித் தீர்மானம் செய்வது இது.

வேதம் பூர்வகாண்டம் உத்தரகாண்டம் என்னும் இரண்டு பிரிவை உடையது. நாம் செய்யவேண்டிய காரியங்களாகிய தர்மங்களை அநுஷ்டானம் செய்வதற்கு உபயோகமாக இருப்பது கர்மகாண்டமாகிய பூர்வகாண்டம். தர்மாநுஷ்டானத்தின் பலன் சித்த சுத்தி. அதனால் அத்வைத நிலைமை உண்டாகிறது. அந்த அத்வைத ஸித்தியைப்பற்றிச் சொல்லுவது வேதத்தின் உத்தரகாண்டம். அதை வேதாந்தம், வேதசிரஸ் என்று சொல்லுவதுண்டு. உபநிஷத்துக்களாக இருப்பவை அவை.

பூர்வமீமாம்ஸை வேதத்தின் பூர்வகாண்டத்திற்கு அர்த்த நிர்ணயம் செய்வது. அதைப்போல உத்தர காண்டமாகிய உபநிஷத்துக்களின் அர்த்தத்தை நிர்ணயம் செய்வது உத்தரமீமாம்ஸை. பரமாத்மாவைப் பற்றியும், அதனோடு வேறாகாமல் ஒன்றுவதைப் பற்றியும் இவைபோன்ற வேறு விஷயங்களைப்பற்றியும் சொல்லுவது உபநிஷத். அந்தச் சட்டத்துக்கு அர்த்த நிர்ணயம் செய்தவர் வியாஸர். அவர் பூர்வ மீமாம்ஸை செய்த ஜைமினியின் குரு. வேதத்

தைப் பிரித்தவர். பாரதத்தைச் செய்தவர். பதினெட்டுப் புராணங்களைச் சொன்னவர். வேதாந்த சாஸ்திரத்திற்கு அர்த்தம் விசாரிக்கும் உத்தரமீமாம்ஸைதான் வேத வியாஸருடைய பிரம்ம ஸூத்திரமென்று சொல்லப்படுவது. வேதமாகிய விருக்ஷத்தில் உபநிஷத்துக்களாகிய புஷ்பங்கள இருக்கின்றன. அதனுடைய பழம் ஞானம். வேதம் பெரிதாக இருந்தாலும் உபநிஷத்துக்கள் கொஞ்சம்தான் இருக்கின்றன. மரத்தில் கிளை, இலை முதலிய பல வஸ்துக்கள் நிரம்ப இருக்கின்றன. புஷபங்கள் கொஞ்சமாகத்தான் இருக்கின்றன. அதைப்போல வேத ஸாரங்களாகிய உபநிஷத்துக்களும் கொஞ்சமாக இருக்கின்றன. அந்த உபநிஷத்துக்களை உத்தர மீமாம்ஸை விசாரிக்கின்றது. வியாஸர் ஸூத்திரம் செய்தார். அதில் 192 அதிகரணங்கள் இருக்கின்றன. அந்த ஸூத்திரத்திற்குப் பாஷ்யகாரர்கள் நம்முடைய ஆசாரியரவர்கள். எல்லாக் கர்மாவிற்கும் முடிவு ஞான காண்டம். அது ஆத்ம லாபத்தைச் சொல்லுவது. ஸூத்திரத்துக்கும் உபநிஷத்துக்கும் உள்ள ஸம்பந்தத்தை பாஷ்யம் விளக்கிக் காட்டுகிறது. எல்லாவற்றிற்கும் முடிவான வேதாந்த ஸூத்திர பாஷ்யம் செய்ததனுல் நம்முடைய ஆசாரியர்களுக்கு ஜகதாசாரியர்கள் என்னும் சிறந்த பெயர் பிரஸித்தியாகச் சொல்லப்பட்டு வருகிறது. இந்த ஸூத்திரத்திற்கு வார்த்திககாரர் ஸுரேசுவராசாரிய ரென்பவர். அவருடைய பூர்வாசிரமப் பேர் மண்டனமிசிரர் என்பது. அவர் பிரம்மாவின் அவதாரம். அவர் பத்தினியாகிய ஸரஸவாணி என்பவள் ஸரஸ்வதியின் அவதாரம். மண்டனமிசிரர் முதலில் கர்மகாண்டத்தின்படி அநுஷ்டித்து பிறகு ஆசாரிய தரிசனத்தால் ஞானம் அடைந்தவர். அவரே பின்பு வார்த்திகம் செய்தார். தைத்திரீயத்திற்கும், பிருஹதாரணியத்திற்கும் வார்த்திகம் செய்திருக்கிறுர். இந்த இரண்டிற்கும் ஆசாரியர்கள் பாஷ்யம செய்திருக்கிறுர்கள்.

# 10

# நியாயம், புராணம், தர்ம சாஸ்திரம்

## (24—10—1932)

நம்முடைய மதப்பிரகாரம் நாம் நடந்துகொள்ள வேண்டியதை நமக்குத் தெரிவிக்கும் ஸாதனங்களா யிருப்பவை வேதம் நானகு, அங்கம் ஆறு, உபாங்கங்கள் நான்கு, ஆக பதினுன்கு தர்ம ஸாதனங்கள் ஆகும். இவைகளுள் மீமாம்ஸை, நியாயம், தர்ம சாஸ்திரம், புரா ணம் என்னும் நாலும் உபாங்கங்கள். மீமாம்ஸை, பூர்வ மீமாம்ஸை, உத்தரமீமாம்ஸை என்று இரண்டு வகைப் படும்.

நியாயசாஸ்திரம் கௌதம மஹரிஷியால் செய்யப் பட்டது. இதன் முக்கிய உத்தேசம், இந்த உலகத்துக் கெல்லாம் கர்த்தா பரமேசுவரன் என்பதை யுக்திகளைக் கொண்டு தீர்மானிப்பதுதான். அது அனுமானத்தால் ஈசுவரனை ஸாதித்துக் கொடுக்கின்றது. ஆகவே அது யுக்திப் பிரதானமான சாஸ்திரம். யுக்தி அவசியம் வேண்டும். வேதம் ஒரு விஷயத்தைச் சொல்லுகிறது. அதனுடைய அர்த்தத்தை மீமாம்ஸை நிர்ணயிக்கின் றது. நாம் வேதத்தை நம்புகிறோம். நம்பினாலும் மனது ஸந்தேஹப்படும். ஆகையினால் அந்த ஸந்தேஹத்தை நிவர்த்தி பண்ணுவதற்கு வேதம் சொன்னதைப் பலவித யுக்திகளைக்கொண்டு தீர்மானப்படுத்தினால் அந்த தீர் மானம் திடமாயிருக்கும். ஒரு தூணை நடும்பொழுது அதை ஆட்டி அசைத்துப் பார்த்து வைத்தால் தான் உறுதியாக நிற்கும். யார் யுக்தி வாதம் பண்ணினாலும் அதை ஏற்றுக்கொள்ளவேண்டும். ஆனால் யுக்திகள்

21 JAN 1958

எல்லாம் ஆதாரத்தை வைத்துக்கொண்டு பண்ண வேண்டும். குயுக்திகள் பண்ணக்கூடாது.

ஸ்ரீ சங்கராசாரிய ஸ்வாமிகள் கைலாஸத்துக்குப் போகும்போது சிஷ்யர்களெல்லாம் சேர்ந்து ஸங்கிரஹமாக ஓர் உபதேசம் செய்யவேண்டும் என்று கேட்டுக் கொண்டார்கள். அப்படிப் பிரார்த்தித்தபொழுது உபதேச பஞ்சகம் என்று ஐந்து ச்லோகத்தை ஆசாரியர்கள் சொன்னார்கள்.

वेदो नित्यमधीयतां तदुदितं कर्म स्वनुष्ठीयतां
तेनेशस्य विधीयतामपचितिः काम्ये मतिस्त्यज्यताम् ।
पापौघः परिधूयतां भवसुखे दोषोऽनुसंधीयताम्
आत्मेच्छा व्यवसीयतां निजगृहात्तूर्णं विनिर्गम्यताम् ॥
सङ्गः सत्सु विधीयतां भगवतो भक्तिर्दृढाधीयतां
शान्त्यादिः परिचीयतां दृढतरं कर्माशु संत्यज्यताम् ।
सद्विद्वानुपसर्प्यतां प्रतिदिनं तत्पादुके सेव्यतां
ब्रह्मैकाक्षरमर्थ्यतां श्रुतिशिरोवाक्यं समाकर्ण्यताम् ॥
वाक्यार्थश्च विचार्यतां श्रुतिशिरःपक्षः समाश्रीयतां
दुस्तर्कात् सुविरम्यतां श्रुतिमतस्तर्कोऽनुसन्धीयताम् ।
ब्रह्मैवास्मि विभाव्यतामहरहर्गर्वः परित्यज्यतां
देहेऽहंमतिरुज्झ्यतां बुधजनैर्वादः परित्यज्यताम् ॥

[ஸாதன பஞ்சகம் 1, 2, 3-வது ச்லோகங்கள்]

வேதத்தை அத்தியயனம் செய்யுங்கள். அதுவே ஈச்வர உபாஸனை என்று நினையுங்கள். சித்த சுத்தியை

அடைந்து நல்ல ஆசாரியரை அடைந்து பக்தி பண்ணுங்கள். பிரணவ ஸ்வரூப உபதேசம் தரவேண்டுமென்று பிரார்த்தியுங்கள். அப்புறம் வேதாந்தத்தைக் கேளுங்கள். குயுக்தியை விடுங்கள் என்று உபதேசம் செய்தார்கள். அதில் குயுக்தி செய்யவேண்டாம் என்று சொல்லியிருக்கிறார்கள். வேதாந்த நிர்ணயத்துக்கு நல்ல யுக்திகளையே உபயோகப்படுத்தவேண்டும்.

யுக்திகளினால் நிர்ணயம் பண்ணிக்கொள்ளாவிட்டால் காட்டிலே போவது போன்றதுதான். அந்த யுக்திகளை ஓர் ஆதாரம் வைத்துக்கொண்டு செய்யவேண்டும். அந்த யுக்திகளைக்கொண்டு வேதார்த்தத்தை நிர்ணயம் பண்ணுவதுதான் நியாயம். அது கௌதமரால் செய்யப்பட்டது. கணாதர் என்பவர் ஒரு நியாய சாஸ்திரம் பண்ணியிருக்கிறார். அது வைசேஷிகம் என்று சொல்லப்படும்.

நியாயத்தில் பிரதானமானது அநுமானம். முன்பு சொன்ன சுலோகத்தில் ஆசாரிய முகமாக உபநிஷத்துக்களைக் கேட்கவேண்டும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. குருமுகமாகக் கேட்பதற்குமுன் மனம் சாந்தமாக இருக்க வேண்டும். அப்படி உபதேசம் பெற்றால் அது உடனே நல்ல பயனை உண்டாக்கும். உழுத இடத்தில்தான் விதை பிரயோஜனப்படும். நாம் எவ்வளவோ உபந்நியாஸங்களைக் கேட்டாலும் நமக்குத் துக்கம் போகவில்லை. ஏனெனில் நாம் சித்த சுத்தி பண்ணிக்கொண்டு கேட்கவில்லை. சித்தத்தைச் சாந்தமாக வைத்துக்கொண்டு கேட்கவேண்டும். வைதிககர்மாக்களைப் பகவதாராதனையாக நினைத்துக்கொள் என்றார். அதுதான் மனதில் சாந்தத்தை உண்டாக்கும். அது உழுவதற்கு ஸமானம். வைதிக கர்மாக்களை நன்றாக அநுஷ்டிக்கவேண்டும். அவற்றைப் பகவதர்ப்பணமாகப் பண்ணவேண்டும். கர்மாவால் மனதை உழுதானபின் ஜலம் பாய்ச்சவேண்டு

மல்லவா? அதுதான் பக்தி. ஆசாரிய பக்தி ஈசுவரபக்தியைவிட அதிகமானது. குருபக்தி இருந்தால் மனது தானுக சாந்தத்தை அடையும். பெரியவர்களுக்குமுன் ஒன்றை வாசித்தாலும் கேட்டாலும் மனது ஒருவிதமான சாந்தத்தோடு இருக்கிறது. கிளப்பிலும் லைப்ரெரியிலும் அப்படி இருப்பதில்லை. மனதானது குரு பக்தியில் நனைந்தால் உடனே பலன் உண்டாகும். மஹான்களாக இருக்கின்றவர்களிடத்தில் உபதேசம் கேட்கவேண்டும். முதலில் ஆளைத் தேடிக்கொண்டு அப்புறம் கேட்கவேண்டும். அதனுல்தான் எதையும் குருமூலமாகக் கற்றுக் கொள்ளவேண்டுமென்று சொல்லுகிருர்கள். நாம் எவ்வளவோ படித்திருக்கிறோம். ஆனுலும் நமக்குள்ள அஞ்ஞானத் தடிப்புக் குறையவில்லை. அது எந்த இடத்தில் குறையுமோ அந்த இடத்தைத் தேடவேண்டும். பிருஹதாரண்யோபநிஷத்தில் குருமுகமாக சிரவணம் பண்ண வேண்டுவது அவசியம் என்று சொல்லப்படுகிறது.

आत्मावारे द्रष्टव्यः श्रोतव्यो मन्तव्यो निदिध्यासितव्यः ।

ஸாத்விகரான வித்வானை ஆசாரியனுக வரித்து அவர் பாதுகையை ஸேவிக்கவேண்டும்; பிரம்மோபதேசம் கேட்டுக்கொள்ளவேண்டும் என்று ஸ்ரீ ஆசாரிய சுவாமிகள் சொல்லியிருக்கிருர்கள். சிரவணம் செய்த பின்பு மனனம் பண்ணவேண்டும், மனனம் என்ருல் ஆசாரியர் மூலமாக கேட்டவைகளை புத்தியினுல்ஏற்பட்ட யுக்தி ஸஹாயத்தால் நினைத்து நினைத்துப் பார்ப்பது. இதற்கு ஸஹாயமாக இருப்பது யுக்தி. அதுதான் அநுமானம். அதாவது நேராக அறியக்கூடாதவைகளைக் காரணங்களைக்கொண்டு அறிந்து கொள்ளுதல். பரமாத்ம ஜீவாத்ம ஸ்வரூபங்கள் நம்முடைய கண்ணுக்குத் தெரியவில்லை. மூக்கு முதலிய இந்திரியங்களுக்கும் தெரியவில்லை. மோக்ஷஸ்வரூபமும் தெரியவில்லை. கடைத்தேறுவதற்

குரிய வழியும் தெரியவில்லை. இவைகளையெல்லாம் அநுமானத்தால் தெரிந்துகொள்ளவேண்டும். தெரிந்த ஒன்றை வைத்துக்கொண்டு தெரியாதவற்றைத் தெரிந்து கொள்ளுவது அநுமானம். மேக கர்ஜனையால் மேகம் உண்டென்று அநுமானிக்கிறோம்.

வைதிக கர்மாக்களால் சித்த சுத்தி உண்டாயிற்று. நல்ல ஆசாரியரை அடைந்தோம். அவர் ஒன்று சொன்னார். அதை நம்பிவிட்டோம். பின்பு வேறு ஒருவர் வித்தியாசமாக ஒன்று சொன்னால் நமக்கு ஸந்தேஹம் உண்டாகும். ஆகையால் எத்தனை தினுஸான ஆக்ஷேபணைகள் உண்டோ அவ்வளவையும் பண்ணித் தீர்மானிக்கவேண்டும். அப்படித் தீர்மானிக்க அநுமானப் பிரமாணங்கள் உபயோகப்படும். அந்த அநுமானத்தைப் பிரதானமாக வைத்துக்கொண்டு ஆராய்வது நியாயம். வைசேஷிகமும் அப்படியே.

நம்முடைய மதஸித்தாந்தம், எல்லாப் பதார்த்தங்களையும் நன்றாகத் தெரிந்துகொள்ளுவதால் துக்கம் போகும் என்பது. எல்லாவிதமான பிரமாணங்களையும் உபயோகப்படுத்தி அப்படித் தெரிந்துகொள்ளவேண்டும். கண் ஒரு பிரமாணம். எதைக்கொண்டு பதார்த்தங்களைத் தெரிந்து கொள்ளுகிறோமோ அதுதான் பிரமாணம்.

पदार्थत्वम् अभिधेयत्वम् । [தர்க்கஸங்கிரஹம்.]

பிரத்தியக்ஷப் பிரமாணம் கண் காது முதலியவை. இவைகளுக்குள் அகபபடும் விஷயங்கள் கொஞ்சந்தான். அகப்படாதவை அதிகமாக இருக்கின்றன. அவைகள் அநுமானப் பிரமாணத்தில் அகப்படும். அந்த அநுமானத்தை விரிவு படுத்தவேண்டும். அது வேதத்துக்கு உபயோகப்படுகிறது. அதனால்தான் நியாயம் ஓர் உபாங்கமாகச் சொல்லப்பட்டிருக்கிறது. மீமாம்ஸை சிரவணத்

திற்கு உபயோகம். மனனத்துக்கு ஸாதகமாக இருப்பது நியாயம்.

பதார்த்தங்களை ஏழு விதமாகப் பிரித்திருக்கிறார்கள். ஒவ்வொன்றையும் தனியாகப் பார்க்க முடியாது. அதற்காக மொத்தமாகத் தெரிந்து சொல்லி யிருக்கிறார்கள். அந்த ஏழுவகைப் பதார்த்தங்களில் இரண்டு வகைப் பிரிவு உண்டு. உள்ளது என்று ஒன்று, இல்லாதது என்பது ஒன்று.

भावोऽभावश्च ।

ஏழுவகைப் பதார்த்தங்களுள் ஏழாவது இல்லாதது என்பது. இருக்கிறது என்பது பாவம். இல்லாதது அபாவம். இருப்பதை ஆறுவிதமாகப் பிரித்திருக்கிறார்கள்.

இல்லை என்பது எப்படிப் பதார்த்தமாகும்? பதார்த்தம் என்பது என்ன? பதத்தின் அர்த்தந்தான் பதார்த்தம். இல்லை என்னும் ஒரு பதத்திற்கும், ஒரு அர்த்தம் இருக்கிறதல்லவா ?

அபாவம் சில இடத்தில் இருக்கிறது; சில இடத்தில் இல்லை. இங்கே புஷ்பங்கள் இல்லை; புஷ்பத்தின் அபாவம் இங்கே இருக்கிறது. அங்கே (பூஜாமண்டபத்தில்[1]) ரதத்தில் புஷ்பம் இருக்கிறது; புஷ்பத்தின் அபாவம் அங்கு இல்லை. அந்தப் பெட்டியில் பிரகாசத்தின் அபாவம் இருக்கிறது, இங்கே இல்லை. இப்படி அபாவமானது சில இடங்களில் இருக்கிறது; சில இடங்களில் இல்லை. அப்படியே சில ஸமயத்தில் உண்டு, சில ஸமயத்தில் இல்லை ஆகவே சில கால தேசங்களில் அபாவம் இருப்பதனால் அது பதார்த்தம் ஆகிறது.

---

1. மயிலாப்பூர் ஸம்ஸ்கிருத கலாசாலையில் உபந்நியாஸம் செய்த விடத்திலிருந்த பூஜா மண்டபம்.

ஏழு பதார்த்தங்களாவன: திரவியம், குணம், கர்ம, ஸாமானியம், விசேஷம், ஸமவாயம், அபாவம் என்பவை. திரவியம், குணம், கர்ம இந்த மூன்றும் ஸத்தான பதார்த்தம். இருக்கிறதென்று காட்டமுடிவது ஸத். பாக்கி நான்கும் அப்படிக் காட்ட முடியாது. ஸத்தையோடு கூடியது மூன்றுதான். திரவியம் ஸ்தூலமாகக் காட்டக் கூடியது. ஞானம், ஆசை, ஸந்தோஷம், துக்கம் முதலியவைகளைக் காட்டமுடியாது. இவைகளெல்லாம் ஒன்றை ஆசிரயித்தே இருக்கும். தனியாகப் பிரிக்கமுடியாது. இவைகள் குணபதார்த்தங்கள். தாமரை சிவப்பாக இருக்கிறது. சிவப்பு தாமரையினுடைய குணம். அதைத் தனியாகப் பிரித்துக் காட்டமுடியாது. இப்படி ஒரு ஆசிரயத்தை ஒட்டிக்கொண்டு எடுக்க முடியாதிருப்பதுதான் குணம். அது எதை ஆசிரயித்திருக்கிறதோ அந்த ஆசிரயந்தான் திரவியம். கர்ம என்பது காரியம். சலனம், போதல், ஓடுதல் முதலிய வேலைகள் கர்மாக்கள். அவைகளும் திரவியத்தை ஆசிரயித்தே நிற்கும். ஒருவன் ஓடுகிறான். ஓடுதலை அவனிடத்திலிருந்து பிரிக்கமுடியாது. ஸாமானியம் என்பது ஒன்று. அது ஜாதியைக் குறிப்பது. பல மாடுகள் இருக்கின்றன. அவைகளுக்குள் மாட்டுத்தன்மை என்னும் ஒரு பொதுமை இருக்கிறது. அதை நாம் ஜாதி என்கிறோம். அது எல்லா பசுக்களிடத்திலும் இருக்கிறது. அதுதான் ஸாமானியம். ஒரே மாதிரி இருந்தும் வெவ்வேறாக இருப்பது விசேஷம். பசுக்கள் ஒரே ஜாதியாக இருந்தும் அவைகளிடத்தில் ஒவ்வொன்றையும் தனித்தனியே பிரித்துக் காட்டக்கூடிய சில விசேஷ பதார்த்தங்கள் இருக்கின்றன. திரவியத்தையும், குணத்தையும் பிரிக்கமுடியாமல் ஒட்டிவைத்திருப்பது ஸமவாயம். அக்கினியில் பிரகாசமான ரூபம் இருக்கிறது. அதைப் பிரிக்க

முடியாது. அது ஸமவாயம். திரவியமும் திரவியமும் சேர்ந்தால் அதை ஸம்யோகம் என்று சொல்லுவார்கள். திரவியமும் குணமும் சேர்ந்தால் அது ஸமவாயம். திரவியமும் கர்மாவும் சேர்ந்தால் அதுவும் ஸமவாயந்தான்.

இப்படிப் பதார்த்தங்களை ஏழுவகையாகப் பிரித்தது போல ஒவ்வொரு பதார்த்தங்களையும் பலவகையாகப் பிரித்திருக்கிறார்கள். திரவியம் ஒன்பது விதமாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது. அவை பிருதுவீ, அப்பு, தேஜஸ், வாயு, ஆகாசம், காலம், திக், ஆத்மா, மனது என்பவை. இவைகளில் முதலில் சொல்லப்பட்ட ஐந்துக்கும் பஞ்ச பூதங்களென்று பெயர். பிருதுவீ, என்பது பூமி, அப்பு ஜலம், தேஜஸ் அக்கினி, வாயு காற்று, ஆகாசம் என்பது எல்லாவற்றிற்கும் இடம் கொடுப்பது.

இந்த பஞ்ச பூதங்களிலும் ஒரு வேடிக்கை இருக்கிறது. இவைகளுக்கு ஸரியாக உடம்பில் ஐந்து தினுஸான அறிவுகள் இருக்கின்றன. பார்க்கிற சக்தியுள்ள கண், கேட்கும் காது, ருசிக்கும் நாக்கு, உஷ்ணம் சீதம் தெரிந்துகொள்ளும் ஸ்பரிசேந்திரியம், கந்தம் தெரிந்துகொள்ளும் மூக்கு என்பவை ஐந்து. ஸ்பரிசம் என்பது உடம்பு முழுவதிலும் இருக்கிறது. உள்ளேயும் இருக்கிறது. வயிற்றுவலி முதலியவை அதனால்தான் தெரிகின்றன. இந்த ஐந்து விதமான அறிவும் ஒவ்வொன்றால் அறியப்படுகிறது. ஒவ்வொரு ஸாமான் ஒவ்வோரிடத்தில்தான் உணர்ச்சியைத் தருகிறது. பார்வை கண்ணில்தான் இருக்கிறது; காதினால் பார்க்கமுடியாது, காதினால் கேட்கிற ஸங்கீதத்தைக் கண்ணினாலோ மூக்கினாலோ கேட்க முடியாது. நாக்கிலே ஒரு பதார்த்தத்தைப் போட்டால் அதனுடைய ருசியைத் தெரிந்துகொள்ள முடியுமேயொழிய வாஸ

ளையைத் தெரிந்துகொள்ள முடியாது. கற்கண்டு தித்திக்கிறது என்பதை மூக்குத் தெரிந்து கொள்ளாது? இப்படி ஐந்து தினுஸான குணங்களை ஐந்து இந்திரியங்கள் தான் தெரிந்துகொள்ள முடியும். ரூபம் என்னும் குணத்தைக் கண் தெரிந்துகொள்ளுகிறது. நிறம், அளவு முதலியவைகள் ரூபம். சுக்ல, நீல, பீத, ஹரித, ரக்த, கபிசம், அதாவது வெள்ளை, கருப்பு, மஞ்சள், பச்சை, சிவப்பு, காப்பி நிறம் என்பவை நிறங்கள். சப்தபேதங்களைக் காது அறிகிறது. கெட்ட வாஸனை நல்ல வாஸனைகளை மூக்கு அறிந்து கொள்ளுகிறது. ஆறுவகை ரஸங்களை நாக்கு உணர்ந்து கொள்ளுகிறது. உஷ்ணம் சீதம் முதலியவைகளை ஸ்பரிசேந்திரியம் தெரிந்துகொள்ளுகிறது. இப்படி ஐந்து இந்திரியங்கள் ஐந்து வகையான குணங்களை உணர்ந்து கொள்ளுகின்றன. இவைகளுக்கு ஞானேந்திரியங்கள் என்று பெயர். இந்திரியம் இல்லாவிட்டால் குணம் தெரியாது. இந்திரியங்கள் ஆறாக இருந்தால் ஆறுவகையான குணங்களை நாம் அறியலாம். ஆயிரம் இந்திரியங்கள் இருந்தால் ஆயிரம் குணங்களும் அறியப்படும். உலகத்தில் எத்தனை விஷயங்கள் இருக்கின்றனவோ தெரியவில்லை. நமக்கு ஸ்பரிசேந்திரியம் கொடுக்காவிட்டால் சீதம் உஷ்ணம் முதலியவைகளை அறிய முடியாது. அந்த இந்திரியம் கொடுத்ததனால் சீதோஷ்ணங்கள் அறியப்படுகின்றன. சீதோஷ்ணங்கள் இருப்பதனால் தெரிகின்றன என்று சொல்லக்கூடாது.

கண், நாக்கு, மூக்கு, உணர்ச்சி (துவக்), காது என்னும் ஐந்து இந்திரியங்களுக்கும் ரூப, ரஸ, கந்த, ஸ்பரிச, சப்தங்கள் விஷயமாகின்றன.

இந்த ஐந்து குணங்களையும் பகவான் பஞ்ச பூதங்களில் வைத்திருக்கிறார். மண்ணில் ஐந்து குணங்களும் இருக்கின்றன. அதற்கு ரூபம் இருக்கிறது; ருசி இருக்

கிறது. உடம்பு, கத்திரிக்காய், வெல்லம் எல்லாம் மண் தான். அதற்கு வாஸனை இருக்கிறது. வாஸனை உள்ள புஷ்பம் மண் தான். கடினம், சீதம், உஷ்ணம் முதலிய ஸ்பரிசங்களும் இருக்கின்றன. சப்தமும் இருக்கிறது. நூலைக் கட்டிக் கேட்டால் சப்தம் கேட்கிறது. கட்டையைத் தட்டினால் சப்தம் உண்டாகிறது. ஜலத்தில் கந்தத்தைத் தவிர மிகுதியுள்ள நான்கு குணங்களும் இருக்கின்றன. நாம் வாஸனைப் பதார்த்தங்களைக் கலந்தால் தான் கந்தம் உண்டாகிறது. ஜலத்திற்கு ரூபம், ரஸம், சப்தம், ஸ்பரிசம் என்னும் நான்கும் இருக்கின்றன. ஜலத்தை அடித்தால் சப்தம் உண்டாகிறது: மண்ணில் ஐந்து குணங்களும் இருந்தாலும் மற்ற நான்கிலும் இல்லாமல் அதில் மட்டும் இருப்பது கந்தம். அது அதனுடைய விசேஷ குணம். ரஸம் அப்படியே ஜலத்தின் விசேஷ குணம். ஜலம் இல்லாமல் போனால் ரஸம் இல்லை. அதனால்தான் ரஸநேந்திரியமாக நாக்கில் எப்பொழுதும் தண்ணீர் இருக்கிறது. நாக்கு மரத்துப்போனால் ருசியை அறிய முடியாது. ரஸம் என்பதற்கே ஜலம் என்று ஓர் அர்த்தம் உண்டு.

தேஜஸுக்கு ரஸமும் இல்லை கந்தமும் இல்லை. ரூபம், சப்தம், ஸ்பரிசம் என்ற மூன்றுதான் இருக்கின்றன. அதற்கு ரூபம் விசேஷ குணம். வாயுவில் ரூபம் இல்லை. சப்தமும் ஸ்பரிசமும் இருக்கின்றன. அதற்கு ஸ்பரிசம் விசேஷ குணம். ஆகாசத்திற்கு சப்தம் மாத்திரம்தான் உண்டு. சில காலம் வாயுவினால்தான் சப்தம் உண்டாகிறதென்று நவீனர்கள் கருதியிருந்தார்கள். கம்பியில்லாத் தந்தி முதலியவை ஏற்பட்ட பின்பு காற்றினுடைய மாறுதல்களுக்கு உட்படாமல் சப்தம் கேட்பதால் ஆகாசத்தினுடைய குணம் அது என்று தெரிந்துகொண்டு வருகிறார்கள்.

ஐந்து குணங்களுக்கு ஆசிரயங்களாக பஞ்ச பூதங்களாகிய திரவியங்கள் இருக்கின்றன. மிகுதியுள்ள திரவியங்கள் காலம், திக்கு, ஆத்மா, மனது என்பவை. காலம் மணி, நேற்று, இன்று, நாளை, வருஷம், யுகம் முதலியவை. திக்கு என்பது தேசம்—மேல், கீழ், அங்கே, இங்கே என்பனவெல்லாம். இவ்வளவையும் அறிபவன் ஆத்மா. எல்லாம் அவனுக்காகத்தான் இருக்கின்றன. அவன் இரண்டுவிதம். அசட்டு ஆத்மா ஒருவன். அசடில்லாத ஆத்மா ஒருவன். அவர்கள் ஜீவாத்மா பரமாத்மாவென்று சொல்லப்படுவார்கள். லோகத்தில் நடப்பதையெல்லாம் பார்த்துக் கொண்டிருப்பவன் ஒருவன். துக்கப்படுபவன் ஒருவன். ஜீவாத்மா பலர், பரமாத்மா ஒருவர். இவ்விருவரும் சைதன்ய வஸ்துக்கள். வேதாந்தம் அறிவே ஆத்மா என்று சொல்லுகிறது. நியாயம ஞானவான் ஆத்மா என்று சொல்லுகிறது. நியாயப்படி அறிவு குணத்தில் சேர்க்கப்பட்டிருக்கிறது. ஆத்மா திரவியம். ஞானுஶ்ரயன் ஆத்மா. பரமாத்மாவினுடைய ஞானத்தில் தெரியாதது ஒன்றும் இல்லை. ஜீவாத்மாக்கள் கொஞ்சம் ஞானம் உடையவர்கள். அதனுல்தான் நமக்கு கிஞ்சிஜ்ஞர்கள் என்னும் பெயர் ஏற்பட்டிருக்கிறது. நாம் ஞானுஶ்ரயமாகவும் அஞ்ஞான ஆஶ்ரயமாகவும் இருக்கிறேம். பரமாத்மா பூர்ண ஞானுஶ்ரயமாக இருக்கிறுர். ஞானம் என்பது எந்த இடத்தில் இருக்கிறது? ஆத்மா விபு. அவன் எங்கும் நிறைந்திருக்கிறுன். பரமாத்மாவும் எங்கும் நிறைந்திருக்கிறுன். ஆனுல் அறிவு என்பது ஒவ்வோரிடத்தில் தனியாக ஏற்படுகிறது. அந்த இடம்தான் மனது. அந்த மனதினுல் தான் சுகமும் துக்கமும் உண்டாகின்றன. குணத்தில் சேர்ந்தது ஞானம் என்று நியாயம் பிரித்திருக்கிறது. குணம் 24 பிரிவாகவும், கர்ம 5 பிரிவாகவும் நியாய சாஸ்திரத்தில் பிரிக்கப் பட்டிருக்கின்றன. இப்படிப் பதார்த்த

ஞானம் இருந்தால் வைராக்கியம் உண்டாகி மோக்ஷம் வரும். வேதாந்த மார்க்கத்தின்படியே மோக்ஷத்தை அபேக்ஷித்தாலும் அந்த வழியிலும் மனனத்திற்கு நியாயம் மிகவும் உபயோகப்படும். பஞ்ச பூதங்களையும், ஜீவாத்மாவையும், மனதையும் நாம் தெரிந்து கொள்ளுகிறோம். பரமாத்மாவை எப்படித் தெரிந்துகொள்ள முடியும்? அவன் ஒருவன்தான் அறிய முடியாதவன். அவனை அறிவதற்காகத்தான் அநுமானம வேண்டும். மற்றவைகளை அறிவதற்குப் பிரத்தியக்ஷப் பிரமாணமே போதும். சுருதி வாக்கியமானது ஈசுவரன் இருக்கிறான் என்று சொல்லுகிறது. இருந்துதான் ஆக வேண்டும் என்று அநுமானத்தால் ஸித்தாந்தம் செய்வது நியாயம்.

ஒரு சின்ன அநுமானத்தை இப்பொழுது பார்க்கலாம். இந்த ஸிம்மாஸனம் ஒருவன் பண்ணித்தான் ஆயிருக்கிறது என்பது நமக்குத் தெரியும். பண்ணினவன் தெரியாவிட்டால் பண்ணினது பொய் என்று சொல்லலாமா? வேறு ஸிம்மாஸனங்களைப் பண்ண நாம் பார்த்திருக்கிறோம். அதைக்கொண்டு இதையும் பண்ணினவன் ஒருவன் இருக்கவேண்டும் என்பதைத் தெரிந்து கொள்ளுகிறோம். அவனுக்கு இதைப் பண்ணுகின்ற சக்தியுண்டு என்பதையும் அறிந்து கொள்ளுகிறோம். அதைப் போல எல்லாவற்றையும் பண்ணுகிறவன் ஒருவன் இருக்கிறான். அவன் ஸர்வஜ்ஞன், ஸர்வசக்திமான். எல்லாரையும் ரக்ஷிக்கின்றமையால் கருணாநிதியாக இருக்கவேண்டும். இந்த மாதிரி விஷயங்களை ஆக்ஷேப ஸமாதானங்களோடு ஸரியான அநுமானத்தைக் கொண்டு நிர்ணயிப்பது நியாய சாஸ்திரம்.

புராணம் :

புராணம் என்பது வேதத்துக்கு பூதக்கண்ணாடி. வேதத்தில் உள்ளவை உத்திரவுகளாக இருக்கும். 'ஸத்

யம் வத' உண்மை பேசு என்று வேதம் சொல்லுகிறது. அது நமக்கு நினைவுக்கு வராது. பல அத்தியாயங்களாகச் செய்யப்பட்ட அரிச்சந்திர புராணத்தை வாசித்தால்தான் அது நினைவுக்கு வருகிறது. 'பித்ருதேவோ பவ' தந்தையை தெய்வமாகக் கொள் என்று வேத வாக்கியம் சொல்லுகிறது. ராமாயணம் வாசித்தால்தான் நன்ருகப் புரியும். இப்படி வேதத்தைப் பெரிதாகப் பண்ணிக் காண்பிப்பதுதான் புராணம்.

புராணம் என்பதற்குப் பழையது என்று அர்த்தம். நம் தேசத்தில் சரித்திரம் (History) இல்லை என்று சொல்லுகிருர்கள்? வாஸ்தவமான சரித்திரந்தான் புராணம். நமக்குச் சரித்திரம் கிடையாது என்று குறை சொல்லுகிருர்கள். இவ்வளவு கஷ்டமான நிலையில் இவ்வளவாவது இருப்பதே ஆச்சரியம். 2000 வருஷங்களுக்குள்ளே இருப்பதுதான் சரித்திரம் என்று நினைக்கிருர்கள். பழைய காலத்தில் நடந்த சரித்திரத்தை எதற்காகப் படிக்க வேண்டும் என்ருல் நாம் இனிமேல் நடப்பதற்குப் பழைய அநுபவங்கள் இருந்தால் ஸாதகமாக இருக்கும் என்று சொல்லுகிருர்கள். நாம் இனிமேல் நல்லவர்களாக நடக்க வேண்டும். நல்லவர்களாக இருந்து நல்ல காரியங்களைச் செய்து நன்மையை அடைந்தவர்களுடைய சரித்திரங்களைப் படித்தால் நாமும் அப்படி இருக்கவேண்டும் என்று ஆசைப்படுகிறோம். அப்படி இருக்க முயற்சி பண்ணுகிறோம். கெட்டவர்களாக இருந்து கெட்ட காரியங்களைச் செய்து உலக க்ஷேமத்துக்குக் கேடு உண்டு பண்ணிக்கொண்டு கஷ்டங்களை அடைந்தவர்களுடைய கதைகளை நாம் தெரிந்து கொள்ளுவதனுல் கெட்ட காரியங்களை நாம் பண்ணக்கூடாது என்ற எண்ணம் ஏற்படுகிறது. அப்பேர்ப்பட்ட சரித்திரங்களைச் சொல்லுவது

தான் புராணம். நமக்கு ஸம்பந்தம் இல்லாத சரித்திரங்கள் நமக்கு வேண்டாம். அவசியம் இல்லை. ஆத்மலாபமான சரித்திரங்களைப் புராணம் சொல்லுகிறது. வேதத்தில் இருப்பதை எல்லாருக்கும் நன்றாக விளங்க வைப்பது 18 புராணங்கள். 18 உபபுராணங்கள் வேறே இருக்கின்றன. 18 புராணங்களும் சேர்ந்து 4 லக்ஷம் கிரந்தம். ஒரு கிரந்தம் என்பது 32 எழுத்துக்கொண்டது. 17 புராணங்கள் 3 லக்ஷம் கொண்டவை. மிகுதியுள்ள ஒரு லக்ஷ கிரந்தமும் ஸ்காந்தபுராணம். பகவத் அவதாரங்களில் ஒவ்வொரு மூர்த்தியைப்பற்றியும் ஒவ்வொரு புராணம் சொல்லும். இவைகளில் பரமசிவனைப் பற்றிச் சொல்லுபவை 10 புராணங்கள். அவைகளுக்குள் ஒன்றே லக்ஷம் கிரந்தம் உடையது.

यद्वेदात् प्रभुसंमितादधिगतं शब्दप्रमाणाच्चिरं
यच्चार्थप्रवणात् पुराणवचनादिष्टं सुहृत्संमितात् ।
कान्तासंमितया यया सरसतामापाद्य काव्यश्रिया
कर्तव्ये कुतुकी बुधो विरचितस्तस्यै स्पृहां कुर्महे ॥

[பிரதாபருத்ரீயம், 8-வது சுலோகம்]

ஒரு காரியம் ஆகவேண்டுமானால் அதை மூன்று தினுஸாகச் செய்யச் சொல்லலாம். உத்தரவு ஒன்று. அதைக் கேட்டுப் பயந்து சிலர் பண்ணுவார்கள். ஸ்நேகிதன் சொல்லுவதானால் அது லகுவாக இருக்கும். பத்தினி சொன்னால் எத்தனை பாரமானாலும் இலேசாகி விடும். அதற்குக் காந்தாஸம்மிதம் என்று பெயர். வேதம் ஆஜ்ஞை செய்கிறது. அது பிரபுஸம்மிதம். ஸுஹ்ருத்ஸம்மிதம் புராணம். அதாவது ஸ்நேகிதனைப் போல வேதத்தில் உள்ளவைகளையே ஸுலபமாகத் தெரிவிப்பது. அப்படிச்செய் இப்படிச்செய் என்று கட்டளை

இடாமல் அவன் அப்படிச் செய்தான், அதனுல் ஸுகத்தை அடைந்தான் என்று சொல்லுவதனுல் நாமும் பண்ணுவோம் என்று தோன்றுகின்றது. அதே விஷயத்தைப் பல விதமான கற்பனைகளோடு இன்னும் ஸுலபமாக சொல்லுவது காவியம். இது காந்தாஸம்மிதம். சொல்லாமலே சொல்லி நமக்குத் தோன்றும்படி செய்கிற புராணங்கள் நாம் மேல் நடக்கவேண்டிய விதத்திற்கு ஸாதகமாய் இருப்பதனுல் அதை நாம் எல்லோரும் தெரிந்து கொள்ளவேண்டும்.

தர்ம சாஸ்திரம்;

வேதங்கள் கணக்கில்லாமல் இருந்தது. கொஞ்ச பாகந்தான் இப்பொழுது கிடைக்கிறது. கலியில் நேரே வேதத்தைப் பார்த்துக் கர்மானுஷ்டானங்களைச் செய்வது கஷ்டம். வேதத்துக்கு அர்த்தம் சொல்லுவதே கஷ்டம். ஆகையினுல் நம்முடைய அநுஷ்டானத்திற்கு உபயோகமான விஷயங்களை ஸுலபமாக எடுத்துச் சொல்லும் சாஸ்திரங்கள் இருக்கின்றன. அவைகள் ஸ்மிருதி என்று சொல்லப்படும். மனு, யாஜ்ஞவல்கியர், பராசரர், கௌதமர், ஹாரீதர், யமன், விஷ்ணு முதலியவர்கள் ஸ்மிருதிகளைச் செய்திருக்கிறுர்கள். ஸ்மிருதி என்றுல் என்ன? குறிப்பு (Note) போன்றது அது.

श्रुतिं पश्यन्ति मुनयः ।

வேதத்தை முனிவர்கள் பார்க்கிறுர்கள் என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஸ்மிருதி என்றுல் நினைவு என்பது அர்த்தம். முதலில் உண்டான அநுபவத்தால் நினைவு ஏற்படுகிறது. அந்த அநுபவம்தான் 'ஸ்மிருதி'. அதை நினைப்பது ஸ்மிருதி. ஸ்மிருதி என்றுல் சட்டமென்று சிலர் நினைக்கிறுர்கள் அது தப்பு.

संस्कारजन्यं ज्ञानं स्मृतिः ।

என்று நியாய சாஸ்திரம் சொல்லுகிறது. ஸம்ஸ்காரத்தால் ஏற்பட்டது ஸ்மிருதி என்பது அதன் பொருள். ஸ்மிருதிக்கு மூன்று காரணங்கள் உண்டு. 1. அநுபவம், 2. ஸ்மிருதி, 3. அதீந்திரியம் அல்லது ஸம்ஸ்காரம். அநுபவம் என்பது, காசிக்குப் போய்ப் பார்த்திருக்கிறோம். அப்படிப் பார்த்தது அநுபவம். ஊருக்கு வந்த பின்பு காசி நினைவு வருகிறது. இவ்வளவு நாள் அந்த நினைவு நமக்குள்ளே இருந்தும் தெரிகிறதில்லை. எவ்வளவோ ஊர்களையும் பேர்களையும நாம் அறிவோம். ஆனால் பார்த்தால்தான் நினைவு வருகிறது. இப்படி இடையில் இருக்கிற தெரியாத நிலை அதீந்திரியம் அல்லது ஸமஸ்காரம் எனப்படும். ஸ்மருதிகள் எல்லாம் வேதமூலமாக வந்தவை. வேத அநுபவத்தால் நினைக்கப்பட்டவை. வேத மூலம் இல்லை என்றால் அந்தப் பெயரே தப்பு.

தர்மசாஸ்திரத்தைக் காலத்தை அநுஸரித்து மாற்றக்கூடாதா என்று சிலர் கேட்கிறார்கள். ஸர்க்கார் சட்டங்களை மாற்றவில்லையா என்று அவர்கள் ஆதாரம் சொல்லுகிறார்கள். இங்கே வந்து "நீங்கள் மிகவும் உயர்ந்தவர்கள், அந்த ஸ்மிருதிகளைச் செய்த ரிஷிகளைப் போல நீங்கள் இருக்கிறீர்கள், நீங்கள் நினைத்தால் இதை மாற்றிவிடலாம்" என்று சிலர் சொல்லுகிறார்கள். நாங்கள் சொல்லுகிறபடி நீங்கள் மாற்றித்தரவேண்டும் என்பதைக் கௌரவமாகச் சொல்லுகிறார்கள். அந்த ரிஷி எழுதினதற்காக அதை நாம் நம்பவில்லை. வேதத்தில் உள்ளதைச் சொல்லுவதற்காகத்தான் அதை நாம் நம்புகிறோம். எல்லாராலும் மிகவும் புத்திசாலியாகக் கொண்டாடப்படுகிற கவி காளிதாஸன் ஓரிடத்தில் ஸ்மிருதியைப் பற்றிச் சொல்லி இருக்கிறார். ரகுவம்சத்தில் இந்த

ஸமாச்சாரம் வருகிறது. திலீபன என்னும் அரசனுக்கு ஸுதக்ஷிணை என்று ஒரு மனைவி இருந்தாள். அவர்களுக்கு குழந்தை பிறக்கவில்லை. அவர்கள் இருவரும் வஸிஷ்டருடைய ஆசிரமத்திற்குப் போய் தங்கள் குறையைத் தெரிவித்துக்கொண்டார்கள். அவரிடம் காமதேனுவின் பெண்ணாகிய நந்தினீ என்னும் பசு இருந்தது. அதை மேய்த்து ஆராதிக்கும்படி திலீபனுக்குக் கட்டளை இட்டிருந்தார். திலீபன் பசுவை மேய்க்கப் புறப்படும பொழுது ஸுதக்ஷிணை பின்தொடர்ந்து போய்வருவாள். அப்படிப் போவதைக் கவி வருணிக்கிறார்.

பசுவினுடைய தூளி மிகவும் விசேஷமானது. உடுப்பியில் பிராம்மண ஸமாராதனை நடந்த பின் அந்த இடத்தைச் சுத்தம் பண்ணுவதற்காகப் பசுமாட்டை ஒட்டி விடுவார்கள். பசுக்களின் குளமபுகளின் தூளி பட்டால அந்த இடம் பரிசுத்தமாய் விடுகிறது. வைத்திய சாஸ்திரத்தில சொல்லப்பட்ட காயசித்தி முறைகள் பலவற்றில் கோமந்தையில் இருந்துகொண்டு அதனுடைய ரஜஸ் படும்படி இருப்பது ஒன்றாகச் சொல்லப்பட்டிருக்கிறது. ஸாதாரணப் பசுவின் ரஜஸுக்கே இவ்வளவு பெருமை இருந்தால் காமதேனுவின் புத்திரியாகிய நந்தினீயின் ரஜஸ் அதிக பவித்திரமானது அல்லவா. அதோடு பர்த்தாவின் பாத ரஜஸ் மிகவும் உயர்வு உடையது. பெண்களுக்குப் புருஷர்களைப் பின்பற்றுதல் மிகவும உத்தமமான புண்ணியம். புருஷர்களைவிட ஸ்திரீகளுக்கு அநுகூலங்கள் அதிகம். அவர்களுக்குக் கண்ணுக்குத் தெரிந்த ஸ்வாமியாகப் பர்த்தா இருக்கிறார். பர்த்தாவின் மூலமாக அவர்கள் ஸ்வாமியை வணங்குகிறார்கள். பசு மாட்டில் ஸ்வாமியைத் தியானம் பண்ணு என்று சொல்லப்பட்டு இருக்கிறது. கோபூஜை செய்வது மாட்டுக்காக இல்லை. அதற்குள்ளே ஈசுவரன் இருப்

பதால் நாம் செய்கிறோம். அதனால் மாட்டுக்குக் கொம்பு கோணல் என்றும், அது கருப்பென்றும் நாம் பார்க்க மாட்டோம். சிஷ்யர்களுக்குக் குருவினிடத்தில் ஈசுவரன் இருக்கிறான். ஸ்திரீகளுக்கு பர்த்தாவிடத்தில் இருக்கிறான். ஆகையால் ஸ்திரீகள் பர்த்தாவின் குணத்தை நினைக்காமல் ஸேவை செய்யவேண்டும்.

மஹாபதிவிரதையாகிய ஸுதக்ஷிணை மிகவும் பவித்திரமான பதியின் அடிச்சுவட்டையும் பசுவின் அடிச்சுவட்டையும் பின்பற்றிப் போனாள்.

तस्याः खुरन्यासपवित्रपांसुम्
अपांसुलानां धुरि कीर्तनीया ।
मार्गं मनुष्येश्वरधर्मपत्नी
श्रुतेरिवार्थं स्मृतिरन्वगच्छत् ॥

[ரகுவம்சம், II-2]

பரிசுத்த அந்தக்கரணத்தையுடைய ஸுதக்ஷிணை பதியைப் பின்பற்றி நந்தினீயினுடைய குரதூளி இருக்கிற பவித்திரமார்க்கத்தை அடைந்து சிறிதேனும் வழுவாமல் போனாள். வேத அர்த்தத்தினின்றும் வழுவாமல் ஸ்மிருதி போவதுபோலப் போனாள் என்று சொல்லப்பட்டு இருக்கிறது. எப்பொழுதும் உபமானமானது உபமேயத்தை விட உயர்ந்ததாக இருக்கவேண்டும். அதனால் பர்த்தாவைப் பதிவிரதை பின்பற்றுவதைவிட அதிகமாகவே ஸ்மிருதி சுருதியைப் பின்பற்றும். "உபமாகாளிதாஸஸ்ய" என்று உபமானம் சொல்லுவதில் அதிசிரேஷ்டனாகச் சொல்லப்படுகிற காளிதாஸனே இந்த விஷயத்தை உபமானமாகச்சொல்லி இருக்கிறான். அதனால் ஸ்மிருதியானது சுருதி அர்த்தத்திலிருந்து வழுவாமல் சொல்லுவது என்பதைத் தெரிந்துகொள்ளலாம். சுருதியின் அர்த்தத்தையே ஸ்மிருதிகள் சொல்லும். ஸ்மிருதியினுடைய குறிப்பு அது. ரிஷியால் சொல்லப்பட்டது.

# 11

# ஆயுர்வேதம்

*[26—10—1932]*

நான்கு வேதங்களுள்பட வித்தியாஸ்தானங்கள் 14. 18 என்று ஒரு கணக்கு உண்டு. இந்தக் கணக்கு எதனால் ஏற்பட்டது? தர்மஸ்தானமாகவும் வித்தியாஸ்தானமாகவும் இருப்பவை 14. வித்தியாஸ்தானமாக இருப்பவை 18. ஆகவே வித்யாஸ்தானமாக மாத்திரம் உள்ளவை 4. அந்தப் பதினான்கும் தர்மம் வித்தை என்னும் இரண்டுக்கும் இருப்பிடம்; அதாவது சிரேயோமார்க்கம், அறிவு ஆகிய இரண்டுக்கும் ஸ்தானங்கள். சாஸ்திரம் என்பதற்குக் கட்டளையிடுவது என்பது அர்த்தம். ஆகவே வேதந்தான் பிரதானமான சாஸ்திரம். மற்றவைகளெல்லாம் அதற்கு அங்கங்கள்.

14 சாஸ்திரங்களில் சேராமல் 18 என்னும் கணக்கிற் சேர்ந்தவைகளாகிய நான்கையும் உபவேதம் என்று சொல்லுவார்கள். அந்த நான்கும் ஆயுர்வேதம், அர்த்த சாஸ்திரம், தனுர்வேதம், காந்தர்வவேதம் என்பவை.

ஆயுர்வேதமென்பது ஆயுளை விருத்தி பண்ணுவதற்கு வேண்டிய மார்க்கங்களைச் சொல்லும் உபவேதம். ஆயுள் குறைவது அநேகமாக வியாதிகளால்தான். அந்த வியாதிகள் எவ்வளவு விதமாக வருமென்பது தெரிந்தால் தடுக்க உபாயம் பண்ணலாம். வியாதிகள் வந்த பிறகு போக்குவதைவிட வராமலே தடுப்பது விசேஷம். தோல், எலும்பு ருசுவினால் (proof) நிரூபிக்க முடியாதோ, எங்கே புத்தி எட்டவில்லையோ, அதற்காகத்தான் வேதம் ஏற்பட்டிருக்கிறது. இந்திரியங்களுக்கு அகப்படாததை விளக்குவது வேதம்.

இவ்வளவு தூரம் கேட்டதற்குப் பிரயோஜனமாக எல்லாரும் ஏதாவது ஒரு காரியம் பண்ணவேண்டும். பிராம்மணர்கள் நித்தியம் பிரம்மயஜ்ஞம் பண்ணவேண்டும். மஹாயஜ்ஞங்களில் அது ஒன்று. பிரம்ம என்பது வேதம். அகண்ட தீபம்போல் மந்திர சக்தியானது நம்மிடம் அணையாதிருப்பதற்காக நாம் அதைச் செய்ய வேண்டும். நாம் அத்தியயனம் பண்ணவேண்டிய சாகையின் மஹரிஷி யாரோ அவருக்குத் தர்ப்பணம் பண்ண வேண்டும். பண்ணிவிட்டு இரண்டு அக்ஷரமாவது வேத அத்தியயனம் பண்ணவேண்டும். அதுவும் முடியாவிட்டால் காயத்திரீ ஜபத்தை விடாமல் செய்யவேண்டும். காயத்திரீ வேதத்தின் ஸாரமானது. காயத்திரீயை உபதேசம் பண்ணிக்கொண்ட பின்புதான் வேதாக்ஷர உச்சாரணம் செய்யவேண்டும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. அத்தகைய காயத்திரீயை ஸஹஸ்ராவிருத்தி முக்கியமாக தினந்தோறும் செய்யவேண்டும். கடைசி பக்ஷம் பத்தாவது பிரதி தினம் செய்யவேண்டும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. காயத்திரீ மந்திரம் சித்த சாந்திக்குக் காரணம். அதனுடைய தேவதை சூரியன். சூரியனுக்கு உரிய நாளாகிய ஞாயிற்றுக்கிழமை இந்தக் காலத்தில் எல்லோருக்கும் லீவு நாளாக இருக்கிறது. ஆகையால் அன்று 4-மணிக்கு எழுந்து எல்லாரும் ஸஹஸ்ராவிருத்தி காயத்திரீ ஜபம் செய்யவேண்டும் செய்தால் க்ஷேமம் உண்டாகும். இதை உங்களுக்குச் சொல்லவேண்டும் என்பது என்னுடைய அபிப்பிராயம்.

மனது முதலியவைகளைப்பற்றிய வியாதிகள் எவ்வளவோ இருக்கின்றன. அந்த அந்த வியாதிகளின் விஷயத்தையும் அவை வருங்காரணத்தையும் தெரிந்து கொள்ளத் தேஹ அமைப்புத் தெரியவேண்டும். வந்த வியாதியைப் போக்க என்ன மருந்து கொடுக்கவேண்டும்.

அந்த மருந்தில் என்ன ஸாமான்கள் சேர்க்கவேண்டும் என்பதைத் தெரிந்துகொள்ளவேண்டும். தேஹ அமைப்பைத் தெரிவிப்பதை நவீனத்தில் பிஸியாலஜி (Physiology) என்று சொல்லுகிறார்கள். மருந்துகளில், ஒஷதி வர்க்கம் ரஸ வர்க்கம் என்று இரண்டுவகை வஸ்துக்கள் சேரும். செடி கொடி முதலியவை ஒஷதி வர்க்கம். கந்தகம், பாஷாணம், லோஹங்கள் முதலியவை ரஸ வர்க்கம். இவைகளெல்லாம் என்ன சக்தியை உடையவை? இவைகளை எப்படிப் பிரயோகம் பண்ணவேண்டும் என்பவைகளை ஆயுர்வேதம் சொல்லுகிறது. விருக்ஷாயுர்வேதம் என்று ஒன்று இருக்கிறது. விருக்ஷங்களுக்கு வரும் ரோகங்களும் அவற்றை நிவர்த்தி பண்ணுவதற்குரிய மார்க்கங்களும் அதில் சொல்லப்படும். இவ்வாறு தேஹதத்துவ சாஸ்திரம் (Physiology), பிராணி தத்துவ சாஸ்திரம் (Zoology), தாவர தத்துவ சாஸ்திரம் (Botany), மருந்துகளைப்பற்றிய சாஸ்திரம் (Medical Science), ரஸாயன சாஸ்திரம் (Chemistry) முதலிய பலவித சாஸ்திரங்கள் இந்த ஆயுர்வேதத்தில் அகப்பட்டுவிடுகின்றன. பௌதிக சாஸ்திரத்தை (Physics) தவிர மற்றவை எல்லாமுமே அகப்பட்டுவிடுகின்றன என்றே சொல்லலாம். நம்முடைய தேசத்திலுள்ள பி. ஸி. ரே (Sir P. C. Ray) என்பவர் நம்முடைய பிராசீன சாஸ்திரங்களில் நவீன சாஸ்திரங்கள் எல்லாவற்றிற்கும் மூலம் இருக்கிறதென்று ஆராய்ந்து நிரூபித்து வருகிறார்.

ஆயுர்வேதத்தில் முக்கியமாக சரகம், ஸுச்ருதம் என்ற இரண்டு பழைய புஸ்தகங்கள் இருக்கின்றன. அவை ஆயிரக்கணக்கான வருஷங்களுக்கு முன் எழுதப்பட்டவை. இருநூறு அல்லது முந்நூறு வருஷங்களுக்குள் எழுதப்பட்ட நவீன சாஸ்திரங்களில் உள்ளவைகளெல்லாம் அவைகளில் முழுமையும், இருக்கின்றன.

வைத்தியத்திற்கு மூலமாக உள்ள நம்முடைய சாஸ்திரங்கள் மொழி பெயர்க்கப்பட்டுப் பலவகையில் விருத்தியாயின. எல்லோரும் ஒரு விஷயத்தை ஒத்துக்கொள்ளுகிறார்கள். இந்தக் காலத்தில் சஸ்திர சிகித்ஸைக்கு (Surgery) உபயோகப்படுகின்ற எல்லாவிதமான ஆயுதங்களும் அவைகளின் பிரயோகக் கிரமங்களும் பழைய சாஸ்திரங்களில் அப்படியே இருக்கின்றன என்பதைப் புதிய சாஸ்திர ஆராய்ச்சிக்காரர்கள் ஒத்துக்கொள்ளுகின்றனர்.

மற்றத் தேசங்களில் நாகரிகம், கல்வி முதலிய ஒன்றும் தெரியாத காலத்திலேயே, இன்றைக்கு மேல் நாடுகளில் சாஸ்திரங்கள் எவ்வளவு பூர்ணமான நிலையில் இருக்கின்றனவோ அதைவிட அதிகமாக நம்முடைய தேசத்தில் இருந்தன. அந்தச் சாஸ்திரங்களில் ஆயுர்வேதமும் ஒன்று. அதற்குள் நவீன சாஸ்திரங்களில் ஏழு அல்லது எட்டு அகப்பட்டுவிடுகின்றன.

நாம் நம்முடைய ஆயுளைத் தீர்க்கமாக ஆக்கிக் கொள்ளவேண்டும். வருகிற கஷ்டங்களையும் வியாதிகளையும் குறைத்துக் கொள்ளவேண்டும். இந்த இரண்டுக்கும் வேண்டிய மார்க்கங்களை ஆயுர்வேதம் சொல்லுகிறது.

உடம்பை வைத்திருப்பானேன்? எவ்வளவு நாள் வைத்திருந்தாலும் அது இருக்கப் போகிறதில்லையே? ஒரு நாள் அழியத்தானே போகிறது? அப்படி அழிவது என்றைக்குப் போனால் என்ன? ஆயுளைத் தீர்க்கமாகப் பண்ணவேண்டியதன் அவசியம் என்ன? மிகவும் ஞானிகளாக இருப்பவர்கள்கூட இந்த உடம்பு என்றைக்குப் போனால் என்ன என்று சொல்லுகிறார்கள். புஸ்தகங்களிலும் எழுதியிருக்கிறது. எவ்வளவு நாள் இருந்தாலும் திருப்தியாகிறது இல்லையே. நாம் போனாலும்

நமக்கு வேண்டியவர்கள் உடம்பு தீர்க்காயுளுடன் இருக்க வேண்டுமென்றல்லவோ நினைக்கிறோம். நம் கண் முன் அவர்கள் போகாமல் இருக்க வேண்டுமென்று தோற்று கிறது. நம்முடைய உடம்பில் அவ்வளவு பிரியம் இருப்ப தில்லை. இது என்றைக்குப் போனால்தான் என்ன? வைத்தியம் எதற்காக ஏற்பட்டது? ரிஷிகள் எதற்காக ஆயுர்வேதத்தை எழுதியிருக்கிறார்கள்?

உலகத்தில் நாஸ்திகர்கள் ஆஸ்திகர்கள் என்று இரண்டு வகை மனிதர்கள் இருக்கிறார்கள். நாஸ்திகர் கள் என்பவர்கள் எல்லோரும் ஈசுவரன் இல்லை என்று எண்ணுகிறார்கள். வைதிக மார்க்கத்தின்படி சொல்லப் பட்ட பரலோகம் இல்லை யென்பவர்கள்தாம் நாஸ்திகர் கள். அது உண்டு என்பவர்கள் ஆஸ்திகர்கள். நாஸ்தி கர்கள் கண்ணில் கண்டதையே நம்புகிறவர்கள்; இந்த ஜன்மத்துக்கு முந்தியும் நாம் இருந்ததில்லை; இனி மேலும் இருக்கப்போகிறதில்லை என்று சொல்லுபவர்கள்.

கர்மாவானது எல்லாப் பலன்களையும் கொடுக்கிறது. ஈசுவரனைப்பற்றி விசாரிக்க வேண்டிய அவசியம் இல்லை என்று மீமாம்ஸை சொல்லுகிறது. அந்த மீமாம்ஸைப் படி நடக்கிறவர்கள் ஆஸ்திகர்களே. வேதம் அவர்களுக் குப் பிரமாணம். ஸாங்கியர்கள் ஈசுவரன் இல்லை என்று சொல்லுகிறார்கள். ஆனாலும் அவர்கள் ஆஸ்திகர்கள்; அவர்கள் வேதப்பிரமாணத்தையும் அதன்படி பரலோ கத்தையும் ஒத்துக்கொண்டவர்கள். மற்றவர்கள் எல் லாரும் ஈசுவரனையும் பரலோகத்தையும் ஒத்துக்கொண்ட ஆஸ்திகர்கள். பரலோகத்தை மாத்திரம் ஒத்துக் கொள்ளுகிறவர்களும் ஆஸ்திகர்களாகின்றார்கள். நாஸ் திகர்களில் ஈசுவரனை மாத்திரம் ஒத்துக்கொள்ளுகிறவர் கள் இருக்கிறார்கள். கிறிஸ்துவர் முதலியவர்கள் அப்ப டிப்பட்டவர்களே.

ஆகவே ஈசுவரனை ஒத்துக்கொள்ளாதவர்களிலும் ஆஸ்திகர்கள் உண்டு—ஸாங்கியர், மீமாம்ஸகர் என்பவர்களைப்போல—என்றும் ஈசுவரனை ஒத்துக் கொண்டவர்களிலும் நாஸ்திகர்கள் உண்டு என்றும் தெரிந்து கொள்ளுகிறோம்.

பௌத்தர்கள் ஈசுவரன் இல்லை என்று சொல்லும் நாஸ்திகர்கள். அவர்கள் பரலோகம் உண்டென்பவர்கள். கேவலம் பரலோகம் உண்டென்று மட்டும் சொல்லுகிறவர்கள் எல்லாம் ஆஸ்திகர்களல்ல. வேதப்பிரமாணப் படி பரலோகம் உண்டென்பவர்கள்தாம் ஆஸ்திகர்கள். ஆஸ்திகர்கள் பரலோக க்ஷேமத்தை வேதத்திற் சொல்லியவைகளின்படி அடையலாம் என்று நம்புகிறார்கள். நம்முடைய மதத்தினரை ஆஸ்திகர்கள் என்று சொல்லுவார்கள். ஹிந்து மதத்தினரென்பது அதுதான். நியாயமாக நம் மதத்துக்கு உள்ள பெயர் ஆஸ்திகமதம் என்பதே. வேதப்படி நடந்துவந்தால் பரலோகத்தில் சிரேயஸை அடையலாம் என்று நியாயமாக நம்புகிறோம். வேதப்பிரமாணத்தை நம்பாதவர்கள் நாஸ்திகர்கள். வேதமும் வேதோக்த கர்மாக்களும் இல்லை என்று அவர்கள் சொல்லுவார்கள். அவைகளை இல்லை யென்பது மஹாபாபம். அதற்குக் கீழ்ப்பட்டதுதான் ஈசுவரன் இல்லை என்னும் பாபம்.

ஞானஸம்பந்தமூர்த்தி என்பவர் சைவ சமயாசாரியர்களுள் ஒருவர். பாலியத்தில் பல ஸ்தலங்களுக்குப் போய்ப் பல அற்புதங்களைச் செய்திருக்கின்றார். இந்த க்ஷேத்திரத்திலு (மயிலாபபூரிலு)ம் சில அற்புதங்களைச் செய்திருக்கின்றார். பட்டீச்சுரம் என்னும் ஸ்தலத்தில் முத்துப் பல்லக்கு முதலியவைகளை ஈசுவரன் கொடுக்கப் பெற்றுக்கொண்டார். முத்துப் பல்லக்கில் ஏறிக்கொண்டு ஸ்தல யாத்திரை செய்துகொண்டு வந்தார். அவருடன்

5000 பேர் பஜனை செய்துகொண்டு போவார்கள். பரமேசுவர பக்தி பண்ணிக்கொண்டு சிவக்ஷேத்திரங்களான ஊர்களுக்குப் போய்க்கொண்டிருந்தார். அந்தக் காலத்தில் ஜைனமதம் பௌத்தமதம் என்னும் இரண்டும் இந்தத் தேசத்தில் இருந்தன. வேதம் தப்பு; அதன்படி நடந்தால் பிரயோஜனமில்லை என்று அவர்கள் சொல்லிக்கொண்டு இருந்தார்கள். ஜைனர்கள் அதிகாரம் உடையவர்களாகி அரசனையும் தங்கள் மதத்திற்கு இழுத்துக் கொண்டார்கள். மதுரையிலிருந்த பாண்டியன் சமணன் ஆனான். ஆனால் அவனுடைய தேவியும் மந்திரியும் சிவபக்தி மிகுந்தவர்களாயிருந்தார்கள். அரசன் சமணனாய் விட்டதை அறிந்து மிகவும் வருந்தினார்கள். ஞானஸம்பந்தமூர்த்தியின் பிரபாவத்தை அவர்கள் கேட்டார்கள். அவர் மூலமாக அரசனை மாற்றலாம் என்று எண்ணி அவரை மதுரைக்கு அழைத்துப் போனார்கள். அவர் மதுரைக்குப் போனவுடன் சமணர்கள் வாதத்துக்கு வந்தார்கள். அப்பொழுது அரசியும் மந்திரியும் அந்த சமணர்கள் துஷ்டர்கள், இவரை என்ன செய்துவிடுவார்களோ என்று பயந்தார்கள். ஈசுவரனுடைய கிருபை இருந்தால் எந்த ராஜ்யம் எப்படிப் புரண்டாலும் பயம் இல்லாமல் இருக்கலாம். அருள் வெல்லும். பரிபூரண கடாக்ஷம் எப்பொழுதும் ரக்ஷிக்கும். பீரங்கிகளும் மற்றவைகளும் அவன் காலில் வந்துவிழும். அந்த பக்தியும் கடாக்ஷமும் குறையும்பொழுது தேசத்துக்கும் மதத்துக்கும் குறைவு உண்டாகிறது. ஈசுவர கடாக்ஷத்தைப் பரிபூரணமாகப் பெற்றவன் ஒருவன் இருந்தாலும் போதும்; அவன் மூலமாகத் தேசம் க்ஷேமத்தை அடையும்; அப்பொழுது எது வந்தாலும் பயமில்லை.

ஆகவே ஈசுவர கடாக்ஷத்தைப் பெற்ற ஞானஸம்பந்தமூர்த்தி பயமில்லை என்று வாதம் செய்யத் துணிந்

தார். வாதம் செய்யப் போவதற்குமுன் ஈசுவர ஸந்நிதானத்தை அடைந்து ஒரு பதிகத்தால் ஸ்தோத்திரம் பண்ணினர். அதில் 'ஜைனர்களை வாதத்தில் ஜயித்து உன்னுடைய புகழை நிலை நிறுத்த வேண்டும்' என்று பிரார்த்தித்தார். ஒவ்வொரு பாட்டிலும் கடைசியில்

'ஞால நின்புக ழேமிக வேண்டுந்தென்
ஆல வாயி லுறையுமெம் மாதியே'

என்று இருக்கிறது.

ஜைனர்களை ஏன் ஜயிக்க வேண்டும்? அவர்கள் பாபம் செய்கிறார்கள். என்ன பாபம்? சிவன் கோயிலுக்கு வருவதில்லை; நீறிடுவதில்லை; ருத்திராக்ஷம் அணிவதில்லை; சிவபக்தியைப் பழிக்கிறார்கள். இத்தகைய பாபங்களைச் செய்கிறார்களென்று ஞானஸம்பந்தர் சொல்லவில்லை.

"வேத வேள்வியை நிந்தனை செய்துழல்
ஆத மில்லி யமணொடு தேரரை
வாதில் வென்றழிக் கத்திரு வுள்ளமே
பாதி மாதுட னாய பரமனே

ஞால நின்புக ழேமிக வேண்டுந்தென்
ஆல வாயி லுறையுமெம் மாதியே"

என்று முதற் பாட்டிற் சொல்லுகிறார். அவர்கள் வேதத்தையும் யஜ்ஞத்தையும் நிந்திப்பவர்கள் என்று சொல்லுகிறார்கள். அது பெரிய பாபம். சிவபக்தி யில்லாதவர் என்று ஒரு பாட்டிலும் சொல்லவில்லை. அதைவிடப் பெரிய பாபம் இது என்று தெரிகிறது. மற்றொரு பாட்டில்,

" மறை வழக்கமி லாதமா பாவிகள்
பறித லைக்கையர் பாயுடுப் பார்களை

முறிய வாது செயத்திரு வுள்ளமே
மறியு லாங்கையின் மாமழு வாளனே
ஞால நின்புக ழேமிக வேண்டுந்தென்
ஆல வாயி லுறையுமெம் மாதியே"

என்று சொல்லுகிறார். இதில் 'மறை வழக்கமிலாத மாபாவிகள்' என்று ஜைனர்களைச் சொல்லியிருக்கிறார். ஒழுக்கம் வழக்கம் என்று தமிழில் சொல்லுவார்கள். ஆசாரம் அநுஷ்டானம் என்று ஸம்ஸ்கிருதத்திற் சொல்லுவார்கள். மறை வழக்கமென்பது வைதிகாநுஷ்டானம். வைதிகாநுஷ்டான மில்லாதவர்கள் ஜைனர்கள். அது தான் மஹா பாபம். அதனால்தான் மாபாவிகள் என்றார்.

பறிதலைக்கையர் என்று அவர்களைச் சொல்லியிருக்கிறார். வித்தியாரண்யஸ்வாமிகள் என்பவர் வேத பாஷ்யம் செய்தவர். ஸகல வித்தைகளையும் அறிந்தவர். ஹம்பி முதலிய ராஜ்யங்களை ஸ்தாபித்தவர். அவர் ஸர்வதரிசன ஸங்கிரஹம் என்று ஒரு புஸ்தகம் எழுதியிருக்கிறார். தரிசனம் என்பது மதத்துக்கு ஒரு பெயர். தரிசனம்-பார்ப்பது. உள்ளதை உள்ளபடி பார்ப்பது மதமாகையால் தரிசனம் என்னும் பெயர் பெற்றது. அந்தப் புஸ்தகத்தில் அந்தக் காலத்தில் இருந்த மதங்களைப்பற்றி எழுதியிருக்கிறார். ஜைன மதத்தைப்பற்றி எழுதியிருக்கும் இடத்தில் அவர்கள் கேசோல்லுஞ்சனம் பண்ணிக்கொள்ளுவார்கள் என்று சொல்லியிருக்கிறார். உல்லுஞ்சனம் என்றால் பிடுங்குதல் என்று அர்த்தம். பாபம் செய்வதற்குப் பலனாகக் கஷ்டத்தை அநுபவிக்க வேண்டும். கஷ்டத்தை அநுபவித்தால் பாபம் போய்விடும். தலையிலுள்ள கேசத்தை ஒவ்வொன்றாகப் பிடுங்குவதால் கஷ்டம் அதிகம் உண்டாகும். அதனால் பாபம் குறையுமென்பது அவர்களுடைய அபிப்பிராயம். அவர்கள் வஸ்திரம் உடுத்தமாட்டார்கள்.

"கடவஸனு:" [कटवसनाः]

என்று சொல்லப்பட்டிருக்கிறது. அதனுல் பாயை உடுப்பார்கள். இதைத்தான் "பறிதலேக்கையர் பாயுடுக்கையர்" என்று ஞானஸம்பந்தர் சொல்லி யிருக்கிருர். அவர் செய்யும் பாபம் மறை வழக்கத்துக்குப் பாஹ்யர்களாக இருப்பதும் வேத வேள்வியை நிந்தனை செய்வதும் என்று சொல்லியிருக்கிருர்.

ஞானசம்பந்தர் சமணர்களேக் கழுவில் ஏற்றினுரென்று ஒரு கதை சொல்லுகிருர்கள். அது தப்பு என்று தோன்றுகிறது. அப்பைய தீக்ஷிதருடைய தம்பி பேரனுகிய நீலகண்ட தீக்ஷிதரென்பவர் திருமலே நாயக்கரிடம் மந்திரியாக இருந்தவர். அவர் சிவலீலார்ணவம் என்று ஓர் அழகான காவியம் எழுதியிருக்கிருர். சிவலீலேக்கடல் என்பது அந்தப் பெயருக்கு அர்த்தம். ஸ்ரீசுந்தரேசுவரர் செய்த லீலேகள் அதிற் சொல்லப்பட்டிருக்கின்றன. அதில் ஞானஸம்பந்தருடைய சரித்திரமும் வருகிறது. ஞானஸம்பந்தர் வாதத்தை ஆரம்பிக்கு முன் சமணர்கள் தங்களுடைய கக்ஷி தோல்வியுற்ருல் தாங்கள் பிராணத்தியாகம் செய்துகொள்ளுவதாகப் பிரதிஜ்ஞை செய்தார்கள். அவர்கள் மறை வழக்கம் இல்லாதவர்களானுலும் ஒழுக்கம் உடையவர்கள். வேதத்தில் சொல்லப்பட்ட ஆசாரங்களுள் சிலவற்றை உடையவர்கள். ஸத்தியம் உள்ளவர்கள். ஆகையால், அவர்கள் தோற்றவுடன் தங்களுடைய வாக்குத் தவருமல் கழுவேறப் போனுர்கள். அப்பொழுது ஞானஸம்பந்தர் அவர்களேக் கழுவேற வேண்டாமென்று தடுத்தார். நாங்கள் செய்த பிரதிஜ்ஞையில் தவறமாட்டோம், ஒழுக்கத்தை மீறமாட்டோமென்று அவர்கள் கழுவேறிவிட்டார்கள். நாஸ்திகர்களாகிய அவர்கள் செய்த பாபமே அவர்களே அப்படித் தூண்டிப் பிராணத்தியாகம் செய்

யச் செய்கிறதென்று ஒரு வகையாக ஸமாதானம் பண்ணிக்கொண்டு ஞான ஸம்பந்தர் இருந்து விட்டார். இந்த மாதிரி சிவலீலார்ணவம் சொல்லுகிறது.

வேதம் பிரமாணம், அதிற் சொல்லப்பட்ட கர்மாநுஷ்டானங்கள் சிரேயஸுக்கு ஸாதனமானவை என்று நம்புகிறவர்கள் ஆஸ்திகர்கள்; அப்படி நம்பாதவர்கள் நாஸ்திகர்கள் என்று தெரிந்துகொண்டோம். மனிதர்களுள் இந்த இரண்டு வகையினர் இருக்கிறார்கள்.

ஆயுள் ஏன் அதிகமாக இருக்கவேண்டும்? நாஸ்திகர்களைப்பற்றிப் கவலையில்லை. அவர்கள் எப்பொழுது போனாலும் அவர்களுக்குக் கெடுதல் ஒன்றும் இல்லை. ஆஸ்திகர்களுக்குத்தான் தீர்க்காயுள் வேண்டும். எவ்வளவோ பாபம் பண்ணி இந்த ஜன்மாவை அடைந்து கஷ்டப்படுகிறோம். இந்த பாபங்களைப் போக்க புண்ணியம் பண்ணவேண்டும். பாபங்களை யெல்லாம் கரைத்துவிடத் தீர்க்கமான தர்மங்களைப் பண்ணவேண்டும். அந்தத் தர்மங்களை இந்த உடம்பு இருக்கும்பொழுது செய்ய வேண்டும். ஆகையால் உடம்பை ஜாக்கிரதையாகக் காப்பாற்றவேண்டும். அதனால்தான் ரிஷிகள் அதற்கு உபயோகப்படும்படி ஆயுர்வேத சாஸ்திரங்களைச் செய்திருக்கிறார்கள். ஆயுர்வேதத்தில் நாஸ்திகனுக்கு வைத்தியம் செய்யாதே என்று சொல்லப்பட்டிருக்கிறது. நாஸ்திகன் பாபத்தை அதிகமாகச் செய்துகொண்டே யிருக்கிறான். அவனுக்கு எவ்வளவு ஆயுள் தீர்க்கமாக இருக்கிறதோ அவ்வளவு பாபத்தையும் ஸம்பாதித்துக் கொள்ளுகிறான். எவ்வளவு சீக்கிரம் அவன் இறந்துபோகிறானோ அவ்வளவுக்கேற்ற பாபத்திலிருந்தும் அவன் தப்பித்துக் கொள்ளுகிறான். அதனால் அவனுக்குத் தீர்க்காயுள் வேண்டியதில்லை; வைத்தியமும் வேண்டியதில்லை.

शरीरम् आद्यं खलु धर्मसाधनम् ।

இந்தச் சரீரம் தர்மாநுஷ்டானத்திற்கு ஸாதனமாக இருக்கிறது. தர்மாநுஷ்டானம் ஆத்ம சிரேயஸை உண்டாக்குகின்றது. ஹோமத்திற்கு, தருப்பை, ஸமித், நெய், அரிசி முதலிய இவ்வளவு ஸாதனங்களைப்போல உடம்பும் ஒரு ஸாதனம். அதுவே பிரதானமான ஸாதனம். ஹோமம் செய்வதற்காக உமியை எப்படி ரக்ஷிக்கிறோமோ அப்படியே இந்த சரீரத்தையும் ரக்ஷிக்கவேண்டும்.

வேதாந்த திருஷ்டியாகப் பார்த்தாலும் சரீர ஸம்ரக்ஷணம் அவசியமென்று தோன்றுகிறது. இந்த ஜன்மம் போனால் எது வருமோ நமக்குத் தெரியாது. இந்த ஜன்மத்திலேயே முயற்சி செய்து சித்தசுத்தியைப் பெற்று ஜீவன் முக்தியை அடையவேண்டும்.

शक्नोतीहैव यः सोढुं प्राक् शरीरविमोक्षणात् ।
कामक्रोधोद्भवं वेगं स युक्तः स सुखी नरः ॥

[கீதை, V. 23]

என்று கீதையில் காணப்படுகிறது. உயிரும் உடலும் பிரிவதற்கு முன் காமக்குரோதம் இல்லையா என்று பார்த்துக் கொண்டு அப்புறம் இந்த உடம்பை விடவேண்டும். ஒன்றும் செய்யாமல் விட்டுவிட்டால் மாடாகப் பிறந்தால் என்ன பண்ணுவது? ஆகையால் உடம்பை ஜாக்கிரதையாகப் பாதுகாக்கவேண்டும். ஆயுர்வேதம் அதற்கு அவசியம். உடம்பு வலித்துக்கொண்டே இருந்தால், ஜபம் செய்ய முடியுமா? யோகம் செய்ய முடியுமா? நிஷ்டை எங்கே? ஞானம் எங்கே?

மருந்தைக் காட்டிலும் பத்தியம் முக்கியமானது. வியாதி வந்த பின்பு மருந்து சாப்பிட்டுப் போக்கிக் கொள்ளுவதைக் காட்டிலும் வராமலே தடுத்துக்கொள்ள

வேண்டும். அதற்கு உபவாஸம் ஒரு பத்தியம். பதினைந்து நாளைக்கு ஒரு தடவை உபவாஸம் இருக்கவேண்டும். அதற்காகத்தான் ஏகாதசி ஏற்பட்டிருக்கிறது. நம்முடைய தேசத்தில் நாம் அதை அநுஷ்டிப்பதில்லை. மஹாராஷ்டிர தேசத்தில் ஏகாதசி யன்று அடுப்பே மூட்டமாட்டார்கள். குழந்தைகளுக்குக்கூட ஒன்றும் போடமாட்டார்கள். பிச்சைக்காரர்களுக்குப் பிச்சை போடமாட்டார்கள். நாமோ ஓர் உபவாஸமும் இல்லாமல் இருக்கிறோம். ஆத்மார்த்தத்துக்காகவும் தேஹ க்ஷேமத்துக்காகவும் எல்லோரும உபவாஸம் இருக்க வேண்டும். ஸர்வ ஜாதிகளும் ஏகாதசி உபவாஸம் இருக்கலாம். ருக்மாங்கத சரித்திரத்தில், ஏகாதசி அன்று குழந்தைகளுக்கும் பால் கொடுக்கக்கூடாது; மாட்டுக்குப் புல் போடக்கூடாது என்று அவன் உத்தரவு செய்திருந்தான். ஏகாதசியன்று யாருக்காவது ஆஹாரம் கொடுத்தால் அது மஹாபாபம் எனறு சொல்லப்பட்டிருக்கிறது.

தினந்தோறும் நாம் சாப்பிட்டுக்கொண்டே இருக்கிறோம். ஒருநாள் உபவாஸம் இருந்தால் செத்தா போய் விடுவோம்? இந்தக் காலத்தில் யார் யாரோ பல நாள் பட்டினி கிடக்கிறார்கள். தேஹ சுகத்திற்காகவும் பகவத் பிரீத்யர்த்தமாகவும் ஒரு நாள் உபவாஸம் இருக்க முடியாதா! தர்ம சாஸ்திரத்தில் ஏகாதசி உபவாஸம் முக்கியமாகச் சொல்லப்பட்டிருக்கிறது. உபவாஸம் இருக்கும் பொழுது முதலில் கஷ்டமாகத்தான் இருக்கும். பழக்கமானால் சரியாகப் போய்விடும். சிவராத்திரி யன்றைக்கு பாதிப் பேர் சாதம் சாப்பிடாமல் இருக்கிறார்கள். சுத்த உபவாஸம் இருப்பதுதான் சிரேஷ்டம். பிரதி ஏகாதசியும் உபவாஸம் இருந்தால் சிவராத்திரியில் உபவாஸம் இருப்பது ஸுலபமாகிவிடும்.

மனதில் ஒரு நெறி வேண்டும். பிரதிதினமும் விடியற்காலத்தில் ஸ்நானம் செய்து 1000 காயத்ரீயை ஜபம்

செய்துகொண்டு ஏகாதசி உபவாஸம் இருந்து வந்தால் அவர்களுக்கு டாக்டர் செலவே (Bill) வராது. அப்படி இருந்தவர்கள் முன் காலத்தில் 80 வயதுக்குமேல் இருந்தார்கள். ஏகாதசி யன்று லீவு இல்லையே என்று சிலர் கேட்கலாம். எல்லாரும் ஏகாதசி உபவாஸம் இருப்பது என்ற நியதி ஏற்பட்டுவிட்டால் அப்புறம் கேட்டால் லீவு கிடைத்துவிடும். ஏகாதசிகள் லீவு நாட்களாகி விடும். சிலர் உபவாஸம் இருந்தால்தான் வேலை நன்றாகச் செய்ய முடிகிறது. ஆகையால் லீவே வேண்டாம் என்று சொல்லுகிறார்கள்.

உபவாஸம் இருக்க முடியாவிட்டால் கிழங்கையாவது பழத்தையாவது சாப்பிடலாம். சிவராத்திரியில் சர்க்கரை வெள்ளிக்கிழங்கு சாப்பிடுவது அதனால்தான். அதுகூட இரண்டாம் பக்ஷந்தான். சுத்த உபவாஸந்தான் விசேஷமானது.

மருந்தைவிடப் பத்தியம் விசேஷமென்றும் அந்தப் பத்தியங்களுள் உபவாஸம் ஒன்று என்றும் சொன்னேன்.

வைத்திய முறைகள் பல இருக்கின்றன. சஸ்திர சிகித்ஸை செய்து சில வியாதிகள் குணமாகின்றன. லேபம் பண்ணுவது ஒரு முறை. மருந்தை உள்ளே செலுத்தி ரத்ததில் சேர்த்தல் (Injection) ஒருவிதம். ஒஷதி, ரஸவர்க்கங்கள் முதலியவைகளாற் செய்யப்பட்ட மருந்துகளாற் செய்யும் சிகித்ஸை வேறு. வமனம், விரேசனம் என்று இரண்டு முறைகள் உண்டு. வமனம் என்பது வாயிலெடுக்கச் செய்வது. விரேசனம் என்பது பேதியாகச் செய்வது. ஸ்நேஹனம் என்பது ஒன்று. அது எண்ணெய் தேய்த்துக்கொள்ளுவது. இப்படிப் பல வழிகள் இருக்கின்றன.

காயஸித்திக்குரிய ரஸாயன ஸேவைகள் சில உண்டு. யோகம், தபஸ், ஞானப்பியாஸம் இவைகள் செய்வதற்கு உடம்பு திடமாக இருக்கவும் அபமிருத்யு உண்டாகாமல் இருக்கவும் அவைகளைச் செய்வதுண்டு. பசு மாட்டு மந்தையிலே இருந்துகொண்டு செய்யும் சில ரஸாயன ஸேவைகள் உண்டு. நெல்லி மரத்தின் அடியிலிருந்து செய்பவை சில உண்டு. இப்படிச் செய்யப்படும் ரஸாயன ஸேவைகளால் தேஹத்தில் புது மாம்ஸம் ரத்தம் இவை உண்டாகித் தீர்க்காயுள் ஏற்படும்.

இரண்டாயிரம் வருஷங்களுக்கு முன்பே சஸ்திர சிகித்ஸை (Surgery) முதலிய பல அருமையான வைத்திய முறைகள் நம்முடைய தேசத்தில் இருந்தன என்பதை மற்ற நாட்டிலுள்ளவர்களும் ஒத்துக் கொள்ளுகிறார்கள். அவர்களுடைய சாஸ்திரங்களுக்கு மூலமாக இருப்பவைகளும் நம்முடைய சாஸ்திரங்களே.

இங்கே வந்திருப்பவர்களில் யாராவது ஒருவராவது கேட்டதைச் செய்யட்டுமே என்று உபவாஸத்தைப் பற்றிச் சொன்னேன். அந்தமட்டும் லாபந்தானே. அன்ன தானம் செய்கிறார்கள். சத்திரத்தில் பலபேருக்கும் அன்னம் போடுகிறார்கள். அப்படிப் போடுவது எல்லாருடைய பசியையும் தீர்ப்பதற்கு மட்டும் அல்ல. அங்கே சாப்பிட்டுவிட்டுப் போகின்ற பல ஆயிரம் பேர்களில் யாராவது ஒரு பிரம்மவித் இருந்து அவருடைய குக்ஷியில் சிறிது அன்னம் விழுந்தால் அதனால் அளவில்லாத நன்மையும் சிரேயஸும் உண்டாகும். அந்த ஒருவரை உத்தேசித்து ஆயிரக்கணக்கான பேர்களுக்குச் சாதம் போடுகிறார்கள். அதைப்போல உபவாஸம் செய்ய நமக்கும் இரண்டு பேராவது அகப்படமாட்டார்களா என்று நினைத்துத்தான் சொன்னேன். யாராவது உபவாஸத்தை அநுஷ்டிக்கட்டும் என்பது என் ஆசை.

o

அன்னதானம் செய்தால் கோடியில் ஒருவராவது ஞானியாக இருந்து அவர் சாப்பிட நேர்ந்தால் அது ஜன்மம் கடைத்தேறுவதற்கு வழி என்று சொன்னேன். இங்கே மடத்தில் சாதம் போடுவது அந்த உத்தேசத்தோடு இல்லை. இது அன்னதானமே அன்று. சிலர் இதை அன்னதானமென்று நினைத்துக்கொண்டிருக்கிறார்கள். இன்னும் சிறந்த வித்தியாதானம் செய்யலாமே; எதற்காக இப்படி அநாவசியமாக சாதம் போட வேண்டுமென்று சிலர் என்னிடமும் சொல்லுவதுண்டு.

अन्नस्य क्षुधितं पात्रम् ।

என்று சொல்லப்பட்டிருக்கிறது. பசித்தவர்களுக்கு அன்னம் போடவேண்டும். இங்கே அப்படி யில்லை. மடத்துக்கு யார் பணம் கொடுக்கிறார்களோ அவர்களுக்குப் போடுகிறோம். ஒரு கிராமத்துக்குப் போனால் அந்தக் கிராம ஜனங்கள் சேர்ந்து பணம் கொடுக்கிறார்கள். அவர்கள் சாப்பிட்டுப் போகிறார்கள். அன்னதானமாக இருந்தால் பணம் கொடுக்கிறவர்களுக்குப் போடக்கூடாது. கூன், குருடு, நொண்டி, முடம் முதலிய அங்கஹீனர்களுக்குப் போடவேண்டும். இது அன்னதானமாக இருந்தால் இதனால் வரும் புண்ணியத்தைவிட அதிக புண்ணியத்தைத்தரும் வித்தியாதானம் முதலியவைகளைச் செய்யலாம்.

இது அன்னதானமல்ல. சத்திரத்தில் செய்கிறதுதான் அன்னதானம். ஸன்யாஸி தானமே செய்யக்கூடாது. கிருஹஸ்தன்தான் தானம் செய்யவேண்டும். தர்ம சாஸ்திரத்தில் ஸன்யாஸி தானம் செய்வது தப்பு என்று சொல்லி யிருக்கிறது. ஏகாதசியில் யார் அன்னதானம் பண்ணினாலும் தோஷந்தான். அப்படியானால் இந்த மடத்தில் தினந்தோறும் ஸமாராதனை நடக்கிறதே!

இது என்ன என்று எல்லாருக்கும் ஸந்தேஹம் இருக்கிறது. பக்திமான்கள் 'அதைப்பற்றி நமக்கென்ன கவலை' பெரியோர்கள் காலத்திலிருந்து நடக்கிறதென்று ஸமாதானம் சொல்லுகிறார்கள். கோபித்துக்கொள்ளுகிறவர்கள் அதிகம்.

கிருஹஸ்தனாலும் ஸந்யாஸியாலும் பூஜை பண்ண அதிகாரம் உண்டு. நாம் காசி, திருப்பதி, பழனி முதலிய ஸ்தலங்களுக்குப் போய்விட்டு வந்தால் உடனே ஸமாராதனை செய்கிறோம். அந்த ஸமாராதனை அன்னதானம் அல்ல. அது பூஜை. ஈசுவர பூஜையில் அது ஓர் அங்கம். 'ஆராதனம் என்பது பூஜை. ஸம்யக் ஆராதனம் ஸமாராதனம். நன்றாகப் பூஜை பண்ணுவது என்பது அதன் அர்த்தம். ஸ்ரீ வெங்கடாசலபதி ஸமாராதனம் செய்தால் எல்லோரையும் வெங்கடாசலபதியாக நினைத்து அன்னம் போடுகிறோம். இங்கே நடக்கும் சந்திர மௌலீசுவர பூசைக்கு ஸமாரதானம் ஓர் அங்கம். சந்திரமௌலீசுவர ஸ்வரூபமாக நினைத்துப் பிராம்மணர்களுக்கு அன்னம் போடப்படுகிறது. இது ஸமாராதனம் பண்ணுகிறவர்கள் உத்தேசம். சாப்பிடுகிறவர்களுடைய உத்தேசம் வேறு. மடத்தில் சந்திர மௌலீசுவரப் பிரஸாதத்தைச் சாப்பிடவேண்டுமென்று அவர்கள் வருகிறார்கள். இரண்டுபேருடைய அபிப்பிராயத்திலும் இது அன்னதானமில்லை. நாம் ஸ்ரீமுகம் அனுப்பும் பொழுதுகூட அதில் ஸ்வாமி பூஜையையும் பிராம்மண ஸந்தர்ப்பணைகளையும் நடத்தி வைக்க வேண்டுமென்று எழுதியனுப்புகிறோம். இது பூஜாங்கமானதால் இதைச் செய்யவேண்டியது நமது கடமை. அதற்காகத்தான் ஸ்தானம் ஏற்பட்டிருக்கிறது. ஸஞ்சாரம் செய்வதும் அதற்குத்தான். பலன் வேண்டுமானால் அன்னதானத்தைவிட அதிக பலனைத்தரும் வேறு தானங்கள்

பல இருக்கின்றன. ஸமாராதனம் செய்யும்பொழுது,

अनेन ब्राह्मणसमाराधनेन सर्वात्मको भगवान् हरिः श्रीजनार्दनः प्रीयताम् ।

என்னும் மந்திரத்தைச் சொல்லுகிறோம். இது சந்திர மௌலீசுவரர் ஆராதனமாக இருக்கட்டும் என்று சொல்லுகிறோம். இது வைதிகமான காரியம்.

இந்த மாதிரி ஸமாராதனை கூட ஏகாதசியன்று செய்யக்கூடாது. அன்றைக்கு எல்லாரும் உபவாஸம் இருக்க வேண்டும். மற்ற ஏதாவது ஒரு நாளில் உபவாஸம் இருந்தால் உடம்புக்கு ஸௌக்கியம். தேஹ ஸௌக்கியத்தோடு ஆத்ம ஸௌக்கியமும் ஏகாதசி உபவாஸத்தால் உண்டாகிறது.

வைத்திய சாஸ்திர ரீதியாகவும் உபவாஸம் உயர்வாகச் சொல்லப்படுகிறது.

लङ्घनं परमौषधम् ।

லங்கனம் என்பதற்குத் தாண்டுவது என்பது அர்த்தம். ஆஹார காலத்தைத் தாண்டுவதால் அந்தப் பெயர் ஏற்பட்டது.

இப்படிப்பட்ட பல அருமையான விஷயங்களைச் சொல்லும் ஆயுர்வேதத்தில் பலவகையான சாஸ்திரங்களின் விஸ்தாரத்துக்கு இடமிருக்கிறது. தேஹத்தைத் திடமாக வைத்துக்கொண்டு தர்மானுஷ்டானங்கள் செய்வதற்கும், ஞானத்தை அடைவதற்கும் அது உபயோகமாக இருக்கிறது. தர்மத்துக்கும் இந்த உடம்பு அங்கமாக இருக்கிறது. ஞானத்துக்கும் அங்கமாக இருக்கிறது. ஆதாவது பூர்வ உத்தரமீமாம்ஸைகளிற் சொல்லப்பட்ட இரண்டு வகை அநுஷ்டானங்களுக்கும் இது அங்கமாக

இருக்கிறது. இதை நாம் பாதுகாக்க வேண்டும். வியாதி வந்தால் சிகித்ஸை செய்து கொள்ள வேண்டும். நம்முடைய சாஸ்திரப்பிரகாரம் செய்யவேண்டும். மற்ற வைத்தியங்களின்படி செய்தால் தர்ம விரோதமான காரியங்கள் செய்ய வேண்டியிருக்கும். ஆகையால் இங்கிலீஷ் வைத்தியம் முதலியவை ஆஸ்திகர்களுக்கும் அவசியமே இல்லை.

நம்முடைய தேசத்தில் நமது வைத்தியத்தை விருத்தி பண்ணவேண்டும். ஜஸ்டிஸ் கக்ஷிக்காரர்கள் கவர்ன்மெண்டு அதிகாரத்தில் இருக்கிறபொழுது ஒரு நல்ல காரியத்தைச் செய்திருக்கிறார்கள். நம்முடைய பிராசீன வைத்தியத்தைக் கவர்ன்மெண்டார் ஆதரிக்க வேண்டும் என்ற சட்டத்தைச் செய்தார்கள். பலர் ஆக்ஷேபித்தாலும் கடைசியில் அந்தச் சட்டத்தை நிறைவேற்றி வைத்துவிட்டார்கள். நமது வைத்தியத்தில் தேர்ச்சி பெறுபவர்களுக்குக் கவர்ன்மெண்டார் பட்டம் கொடுக்கிறார்கள். காலேஜும் ஏற்படுத்தி இருக்கிறார்கள். இது பெரிய உபகாரம்.

நம்முடைய வைத்தியம் தர்மத்தை அநுஸரித்ததாக இருப்பதால் எல்லோரும் நம் வைத்தியத்தையே செய்து கொள்ளவேண்டும். மற்றவற்றைச் செய்து கொள்ளக்கூடாது.

---

## 12

# அர்த்த சாஸ்திரம்—தநுர்வேதம் காந்தர்வவேதம்

[13-11-1932]

ஸாங்கோபாங்கமாக வேதங்களும் சேர்ந்து பதினுன்கு வித்தைகள் உண்டு. வேதம் நான்கும் பிரதானமானவை. அதற்கு அங்கம் ஆறு; உபாங்கம் நான்கு. இவைகளைத்தவிர உபவேதங்கள் நான்கு இருக்கின்றன. அவைகளையும் சேர்த்தால் 18 வித்தைகள் ஆகின்றன.

நான்கு உபவேதங்களாவன: ஆயுர்வேதம், அர்த்த சாஸ்திரம், தனுர்வேதம், காந்தர்வவேதம் என்பவை. நான்கு வேதங்களுக்கும் இந்த நான்கும் உபவேதங்கள். இந்த நான்கும் இல்லாத 14 வித்தைகளுக்கும் வித்தியாஸ்தானமென்றும் தர்ம ஸ்தானமென்றும் பெயர். இந்த நான்கும் சேர்ந்த பதினெட்டும் வித்தியாஸ்தானங்கள் ஆகும்.

ஆயுர்வேதம் தீர்க்காயுளோடும் சரீரஸௌக்கியத்தோடும் இருக்கும் வழிகளைச்சொல்லுவது. அதிற் சொல்லியிருக்கிறபடி இருந்தால் இந்தத் தேஹம் திடமாக இருக்கும். அதனுல் பாபபரிஹாரத்துக்குரிய கர்மாக்களையும் ஜனனமரணங்கள் இந்த ஜன்மத்தோடே முடிவதற்கு வேண்டிய காரியங்களையும் செய்து கொள்ளலாம். தீர்க்காயுஸுக்கும் தேஹ ஸௌக்கியத்திற்கும் ஆயுர்வேதம் முக்கிய ஸாதனமாக இருக்கிறது.

### அர்த்த சாஸ்திரம்:

அர்த்த சாஸ்திரம் ஓர் உபவேதம். பொதுவாக நான்கு புருஷார்த்தங்கள் இருக்கின்றன. அவை: தர்மம்,

அர்த்தம், காமம், மோக்ஷம் என்பவை. தர்மமென்பது வேதோக்தமான ஸத்காரியங்களைச் செய்வது. அதனுடைய பலன் பிரத்தியக்ஷமாகத் தெரியாது. தானதர்மங்கள் பண்ணுவதற்குக் கைமேற் பலன் இல்லை. ஆனால் கைமேல் கிடைக்கும் பலனைக்காட்டிலும் உத்கிருஷ்டமான பலன் அவைகளுக்கு உண்டு என்ற நம்பிக்கை இருக்கிறது. அப்படி அதிருஷ்டமாக இருந்து க்ஷேமத்தைக் கொடுப்பது தர்மம். காணமுடியாதது அதிருஷ்டம். இப்பொழுது ஏதாவது ஒரு லாபம் கிடைத்தால் அதிருஷ்டம் என்று சொல்லுகிறார்கள். அந்த லாபத்திற்குக் காரணம் காண முடியாதது; புண்ணியத்தால் அது உண்டாவது என்பதுதான் தாத்பரியம். ஆகையால் தர்மம், காணப்படும் பலனைவிட அதிகப் பலனைத் தருகிறது. பிரத்தியக்ஷமாகப் பலன் தருவது அர்த்தம். வீடு, வஸ்திரம், ஆஹாரதானியம் முதலியவைகளை வாங்குகிறோம். இவைகளெல்லாம் அர்த்தம். திருஷ்டமான பிரயோஜனத்தைத் தருவது அர்த்தம். மேலே உள்ளவை காமமும் மோக்ஷமும். தற்கால சுகத்தைத் தருவது காமம். எந்நாளும் சுகமாக இருப்பது மோக்ஷம்.

தர்மத்தைக் குறிக்கும் சாஸ்திரம் உபாங்கத்தில் அகப்பட்டுவிட்டது. பதினான்கும் தர்மஸ்தானமாகையால் அர்த்தசாஸ்திரம் அவைகளிற் சேராமல் தனியாக உபவேதமாகச் சொல்லப்பட்டிருக்கிறது. அநேகமாக உபவேதங்கள் நான்கும் பிரத்தியக்ஷ பலனைத் தருபவைகள். ஆயுர்வேதம் உடனே பலனைத்தருவது. அர்த்தசாஸ்திரமும் அப்படிப்பட்டதே. அர்த்தம் என்பது பொருள். ஆஹார நித்திரைகளுக்கு வேண்டியவை, வஸ்திரம் எல்லாம் அர்த்தந்தான். வெயில் மழையால் உபத்திரவப்படாமல் இருக்க வீடு வேண்டும். சரீரத்துக்குப் பசி முதலி

யவைகளால் துன்பம் ஏற்படக்கூடாது. அதற்காக ஆஹாரம் முதலியவை வேண்டும். இவைகளெல்லாம் அர்த்தம். ஆஹாரம், வஸ்திரம், வீடு, சரீரத்துக்கு மற்றவர்களால் துன்பம் நேராமல் இருப்பது என்ற இந்த நான்கும் மனிதனுக்கு வேண்டும். இவைகளைச் செய்து கொடுக்க வேண்டியது ராஜாங்கத்தின் கடமை. ராஜாங்கம் இல்லாமல் இருந்தால் ஆஹாரவஸ்துக்களை வீட்டில் வைத்திருந்தால் யாராவது பலிஷ்டர்கள் எடுத்துக் கொண்டு போய்விடலாம். அப்படி எடுத்துக்கொண்டு போனால் அதைத் தெரிவித்துக் கொள்வதற்காக ஓர் இடம்—ஒரு ராஜாங்கம் வேண்டும். அரசன் ஒருவன் பரிபாலனம் பண்ணினாலும் ஸரி, ஜனங்களெல்லாம் சேர்ந்து ராஜாங்கம் பண்ணினாலும் ஸரி, ஒரு வருஷத்துக்கு ஒருவரை அதிகாரியாகவைத்து ராஜாங்கம் நடத்தினாலும் ஸரி, எந்தவிதமாவது ராஜாங்கம் ஒன்று இருக்கவேண்டும். பலிஷ்டன் துர்ப்பலனுக்குக் கஷ்டம் உண்டாக்காமலும், திருடாமல் இருப்பதற்கும், ஒவ்வொரு பிராணிக்கும் அவர்களிடத்திலுள்ள பொருள்களை ரக்ஷித்துக் கொடுப்பதற்கும், ராஜாங்கம் ஏற்பட்டிருக்கிறது. எப்படி ராஜாங்கம் நடத்தமுடியும்? சில சட்டங்களை ஏற்படுத்திக்கொண்டால்தான் இந்த மாதிரி ரக்ஷித்துக்கொடுக்க முடியும். தோன்றினபடியெல்லாம் செய்தால் தீர்க்ககாலம் ரக்ஷித்துக் கொடுக்க முடியாது. பக்ஷபாதமில்லாமல் ஸமமாக ரக்ஷித்துக் கொடுத்தால் தான் ராஜாங்கமும் ரக்ஷிக்கப்படும். பக்ஷபாதத்தோடே இருந்தால் அது நிற்காது. தன்னை ரக்ஷித்துக்கொள்ளவும், பிரஜைகளையும் அவர்களிலும் பலஹீனர்களை ரக்ஷிக்கவும் சில ஏற்பாடுகள் பண்ணிக்கொள்ள வேண்டும். அந்த ஏற்பாடுதான் அர்த்தசாஸ்திரம்.

சத்துரு அரசர்கள் இருக்கிறார்கள். நம்முடைய தேசத்திலேயே ஸாதுக்களும் போக்கிரிகளும் இருக்கிறார்

கள்; சாந்தர்களும் துஷ்டர்களும் இருக்கிறார்கள். மற்ற அரசர்கள் துஷ்டர்களாக இருந்தால் அவர்களால் இந்தத் தேசத்திலுள்ள எல்லோருக்கும் கஷ்டம் உண்டாகும். துஷ்டர்களால் நாட்டுக்குள்ளேயே மற்றவர்களுக்குத் துன்பம் உண்டாகும். இந்தத் துன்பங்களால் குடிகள் கஷ்டப்படாமல் காப்பாற்றும் வழிகளை அர்த்த சாஸ்திரம் சொல்லுகிறது. சண்டை போடாமல் பார்த்துக் கொள்வது அர்த்த சாஸ்திரம். யுத்தம் கடைசி மார்க்கம். சண்டையைப் பற்றிச் சொல்லுவது வேறு இருக்கிறது. அது தநுர்வேதம்.

துஷ்டர்கள் ஜனங்களை ஹிம்ஸிக்காமலும் மற்ற அரசர்கள் கஷ்டம் உண்டாக்காமலும் செய்வதற்கு நான்கு வழிகள் உண்டு. அவை ஸாம தான பேத தண்டம் என்பவை. ஸாம தான பேதங்களாகிய மூன்றையும் அர்த்த சாஸ்திரம் சொல்லுகிறது. தண்டம் தநுர்வேதத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. இதர அரசர்களால் துன்பம் வராமலிருக்க முதல் மூன்று வழிகளுக்குப் பின்புதான் தண்டத்தை உபயோகிக்கவேண்டும். நம்முடைய ராஜ்யத்திலுள்ள துஷ்டர்களை அடக்க முதலில் முதல் மூன்று உபாயங்களை உபயோகித்துக் கடைசியில்தான் தண்டோபாயத்தைச் செய்யவேண்டும். துஷ்டர்களைத் தண்டிக்கும் தண்டோபாயம் மட்டும் அர்த்த சாஸ்திரத்தில் அடங்கும். விதி (Rule)க்கு விரோதமாக நடக்கிறவர்களைத் தண்டிக்கும் முறை அர்த்தசாஸ்திரத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. மற்ற அரசர்களைத் தண்டிக்கும் உபாயமாகிற சண்டையைப்பற்றித் தநுர்வேதம் சொல்லுகிறது. இந்த நான்கு உபாயங்களும், ஜனங்களுடைய வஸ்துக்களை ரக்ஷித்துக் கொடுக்க, அர்த்தசாஸ்திரத்தால் சொல்லப்படுகின்றன.

முதலில் அன்போடு பழகி அதனால் முடியுமோ என்பதைப் பார்க்கவேண்டும். வேண்டியவர்களைக் கொண்டு

நல்ல வார்த்தைகள் சொல்லச் செய்யவேண்டும். மனதில் சாந்தியோடு பிரயத்தினம் செய்யவேண்டும். அதுதான் ஸாமோபாயம்.

இரண்டாவது தானம். அதாவது நாம் பிரியம் வைத்திருக்கிற பொருளைக் கொடுப்பது. இப்பொழுது அதைத் தியாகம் (Sacrifice) என்று சொல்லுகிறார்கள். அன்பு தான் உத்தம உபாயம். அப்புறம் 'கொஞ்சம் கூடக் கொடுக்கிறேன்' என்று மத்தியஸ்தம் செய்து கொள்ளுவது போன்றது தானம். பிரியம் இருந்தால் அது வேண்டியதில்லை. அப்பொழுது நம்முடையவை யெல்லாம் அவனுடையவை; அவனுடையவை யெல்லாம் நம்முடையவை என்ற எண்ணம் வந்துவிடும். தானோபாயம் வந்தால் கொஞ்சம் வேறுபாடு இருக்கும். அப்பொழுது என்னுடையதைக் கொடுக்கிறேன் என்ற ஞாபகம் உண்டாகும்.

பேதமும் தண்டமும கெடுதலான உபாயங்கள். காரியம் மிகவும் பெரிதாக இருந்தால் பேதத்தை அநுஸரிக்கவேண்டும். ஒருவன் நாம் சொல்லுவதை ஒப்புக் கொள்ளாமற்போனால் அவனுக்கு ஒரு கெடுதல் வரும்படி ஒரு காரியம் செய்வதும், அவனுக்கு வரும் பிரயோஜனத்தைக் கிட்டாமல் தடங்கல் பண்ணிவிடுவதும், நம்மை அவனிடமிருந்து பிரித்துக் கொள்ளுவதுந்தான் பேதம்.

அதிலும் ஸாத்தியமாகாவிட்டால் தண்டோபாயத்தைச் செய்யவேண்டும். தண்டம்-சிக்ஷை அல்லது யுத்தம்-தேஹத்திற்கு நேராக ஹிம்ஸையை உண்டாக்குவது. பேதம் என்பது பொருளுக்காவது ஐகமத்தியத்துக்காவது ஹானிவரச்செய்வது. முதலில் பிரீதியினால் காரியத்தை முடித்துக் கொள்ளவேண்டும். அது முடியாவிட்டால்தான் மற்றவைகளைச் செய்ய வேண்டும்.

இவைகளெல்லாம் அர்த்தசாஸ்திரத்தில் சொல்லப் பட்டிருக்கின்றன.

ராஜாங்கம் எதற்காக இருக்கிறது? அதிக பலம் உள்ளவர்கள் குறைந்த பலம் உள்ளவர்களையும், பெரிய கூட்டத்தார் சிறியக் கூட்டத்தினரையும், பலபேர் ஒரு வனையும் ஹிம்ஸித்து வீடு முதலியவற்றை ஆக்கிரமித் துக் கொள்ளாமல் இருக்க ஏற்பாடு செய்ய வேண்டுவது அதன் கடமை. ஹிம்ஸை செய்யவந்தவனை அப்படிச் செய்தால் அதைக்காட்டிலும் அதிகக் கஷ்டம் தனக்கு உண்டாகுமென்று தோன்றவைப்பது ராஜாங்கம். பத்து ரூபாய்க்காக நான்கு மாதம் தண்டனை உண்டாகும் என்ற பயம் உண்டானால் திருடமாட்டார்கள். குற்றம் பண்ணு வதற்கு அப்புறம் செய்வது சிக்ஷை.

குற்றம் செய்யும் எண்ணமே ஒருவருக்கும் தோன்று மல் பண்ணுவது ஸுலபம். அப்படிப் பண்ணுவதுதான் அர்த்த சாஸ்திரத்தின் முக்கிய நோக்கம். ஒருவரும் குற்றம் பண்ணுமல் இருக்கும்படி பண்ணினவனைச் சிக்ஷித்துக் காட்டி ஹிம்ஸையைக் குறைப்பது இரண்டா வதுவழிதான். ஒருவருக்கும் குற்றம் பண்ணும் நினைவு தோன்றுமல் இருக்கச் செய்வதுதான் முதல் வழி. அந்த வழிக்கு அர்த்த சாஸ்திரம் தர்மசாஸ்திரத்தின் காலில் வந்து விழவேண்டும்.

காமத்தால் கேடு உண்டாகும். குரோதத்தால் கேடு உண்டாகும் என்று தர்ம சாஸ்திரத்திலிருந்து அர சன் உபதேசம் பண்ணவேண்டும். ‘இதுதான் தர்மம்; இதை மீறக்கூடாது’ என்று சாந்தமாக ஒரு பிரயோ ஜனத்தையும் எதிர் பார்க்காமல் சொல்லவேண்டும். பிர யோஜனத்தை எதிர் பார்த்தால் அந்தக் காரியம் சிறந்த தாகாது. தங்கள் நன்மைக்காகச் சொல்லுகிறுனென்று

தெரிந்தால் எல்லோரும் அதைக்கேட்டு அந்தப்படி இருப்பார்கள். எல்லோரும் நல்லதைத்தான் தேடுகிறார்கள். ஆகையால் அவர்களுடைய நன்மைக்காக அவர்களுடைய பிரயோஜனத்துக்காகச் சொல்லுகிறனென்பது தெரிந்தால் கேட்கிறவர்களுக்கு நம்பிக்கை உண்டாகும். அப்படி நடந்துவந்தால் எல்லோருக்கும் க்ஷேமம் என்பதை அவர்கள் அறிந்து கொள்ளவேண்டும். சாந்தமாக உண்மையைச் சொல்லுகிறவர்கள் அந்த மாதிரி தர்மங்களை எல்லோருடைய மனதிலும் பதியும்படி சொல்லவேண்டும். அப்படிச் சொல்லுபவர்களை ஏற்படுத்தி அவர்களுடைய முயற்சி பிரயோஜனப்பட்டால் அப்புறம் போலீஸுக்கு வேலை யில்லை. ஆகையால் அரசன் போலீஸையும் கோர்ட்டையும் விருத்தி பண்ணுமல் தர்மஜ்ஞர்களை விருத்தி பண்ணவேண்டும். யார் ஆத்மார்த்தமாகப் போதிப்பார்களோ, யார் பணம் வாங்க மாட்டார்களோ அப்படிப்பட்ட ஞானிகளை உண்டாக்க வேண்டும். சாஸ்திரமார்க்கப்படி நடக்கிறவர்களும் ஞான மார்க்கத்தில் இருப்பவர்களும் அப்படியே நடந்து வருவதற்கு அநுகூலமான "ஸௌகர்யங்களைச் செய்து கொடுத்து அவர்களை விருத்தி பண்ணவேண்டும். அப்படிப் பண்ணினால் ஞானிகள் உண்டாவார்கள். அவர்களால் லோகம் நன்மையை அடையும். ஆஸ்பத்திரி அதிகமாகக் கட்டப்பட்டிருக்கின்றனவென்றால் வியாதிகள் அதிகமாக இருக்கின்றன என்பதுதான் அர்த்தம். கோர்ட்டு அதிகமாவது அயோக்கியர்களும் குற்றங்களும் அதிகமாக இருப்பதன் அறிகுறியேயாகும். எல்லோரும் சாந்தமாக இருந்தால் குற்றங்களும் நோய்களும் இரா. ராஜாங்கத்துக்கும் காரியம் இருக்காது. ஆகையால் எல்லா ஜனங்களையும் தர்ம சாஸ்திரத்தை நம்பச் செய்ய வேண்டும். மற்ற புஸ்தகங்களெல்லாம் ராஜாங்கத்துக்கு அதிகக் கஷ்டத்தை விளைவிக்கின்றன. அஸ்திவாரம்

சரியாகப் போட்டால் இவ்வளவு கஷ்டம் உண்டாகாது. இதுதான் முதல் அர்த்த சாஸ்திரம்.

ஆத்மார்த்த ஜ்ஞானத்தை விருத்தி பண்ணவேண்டும். முதலில் ஜனங்களுக்குத் துர்ப்புத்தி உண்டாகாமல் செய்யவேண்டும். யார் சொன்னால் கேட்பார்களோ அப்படிப்பட்டவர்கள் உண்டாவதற்குரிய காரியங்களைச் செய்யவேண்டும். தர்ம பரிபாலன ராஜ்யம் அழியாதது என்பதின் தத்துவம் இதுதான்.

சிக்ஷை என்பது ஒருவனை ஹிம்ஸிப்பதுதான். ஒருவன் மற்றொருவனைச் சிக்ஷித்தால் அவனை ராஜாங்கம் சிக்ஷிக்கிறது. ஹிம்ஸை செய்வதுதான் அது. சிக்ஷை ஸரியான வழியில்லை. அது இரண்டு தப்புப் பண்ணுவதாக ஆகிறது. ஜெயிலில் ஒருவனை எதற்காகப் போடுகிறார்கள்? அவன் ஒருவனுக்குத் துன்பத்தை உண்டாக்கினான் என்று அவனுக்குத் துன்பத்தை உண்டாக்குகிறார்கள். அது எதற்காக? அவனை வெளியில் விட்டு வைத்தால் பதினாயிரக் கணக்காகக் குற்றம் நடக்கும். தினந்தோறும் திருட்டு நடக்கும். அவனை ஜெயிலில் போடுவதால் அத்தனை நாள் அத்தனைபேருக்கு உண்டாகும் ஹிம்ஸை குறையும். ஆகவே ஹிம்ஸையைக் குறைப்பதுதான் சிக்ஷையினுடைய தாத்பரியம். சிக்ஷை செய்வது அவன் முன்பு குற்றம் பண்ணினதற்காக இல்லை. இனிமேல் பண்ணாமலிருப்பதற்காகச் செய்வது. இதோடு நிற்கமாட்டானே என்பதற்காகச் செய்யப்படுவது. ஒரு பயித்தியம் கல்லெறிந்தால் அவனை உள்ளே அடைக்கிறோம். அப்படியே திருடனை அடைக்கிறோம். திருட வேண்டும் என்ற பயித்தியம் அவனுக்கிருக்கிறது. ஒருவன் தப்புக் கையெழுத்துப் (Forgery) போடுகிறான். அவனுக்கு அப்படிச் செய்யவேண்டுமென்ற பயித்தியம் இருக்கிறது. இப்படிப்பட்டவர்களால் ஹிம்ஸை உண்

டாகாமலிருக்கச் சிக்ஷை செய்யப்படுகிறது ஹிம்ஸையைக் குறைக்க ஹிம்ஸையையே உபயோகப்படுத்தவேண்டி இருக்கிறது. ஹிம்ஸையே இல்லாமலிருப்பதுதான் தர்மம். 'சாந்தமாயிருக்க வேண்டும், கோபம் கூடாது' என்று எல்லாப் பிராணிகளும் இருக்கும்படி பண்ணிவிட்டால் அரசனின் காரியம் ரொம்பக் குறைந்துவிடும். அப்பொழுது சட்டம் (Act) வேண்டாம், தண்டனையும் வேண்டாம். ஆஹாரக் குறைவை நீக்க முயற்சி பண்ணும் வேலைமட்டும் அரசனுடைய காரியமாக இருக்கும்.

பழைய காலத்தில் ஜாதிகளுக்குள் கட்டுப்பாடும் தண்டனையும் இருந்துவந்தன. ஜாதிக்கட்டுப்பாடு குறையக் குறைய ராஜாங்கத்துக்கு வேலை அதிகமாகிறது. பழைய காலத்து அரசர்களெல்லாம் தான தர்மம் செய்து கொண்டும் கோயில்களைக் கட்டிக்கொண்டும் இருந்தார்கள். அவர்களுக்குச் சட்டங்களைப் புதிது புதிதாக உண்டாக்குகிற வேலை யில்லாமலிருந்தது. கோர்ட்டுகளுக்குப் பதிலாகக் கோயில்களை அவர்கள் கட்டி வந்தார்கள். ஜனங்கள் கோயிலுக்கு வந்தால் சாந்தராகிறார்கள். அக்காலத்தில் தினந்தோறும் கோயிலுக்குப் போவார்கள். இப்பொழுது அது குறைந்து விட்டது. ஆனால் கோர்ட்டுக்குப் போவது அதிகமாயிருக்கிறது. கோயிலுக்குப் போனால் கோர்ட்டுக்குப் போகவேண்டாம். இப்பொழுது எங்கும் இடிந்த கோயில்களும் இடியாத கோர்ட்டுகளும் காணப்படுகின்றன. எல்லோரும் அக்கிரமத்துக்கும் அபக்ஷ்ய பக்ஷணம் செய்வதற்கும் ஏற்பட்டிருக்கிற இடங்களுக்குப் போகிறார்கள். சித்த சாந்தி உண்டாகும் இடத்திற்குப் போவதில்லை.

அந்தக் காலத்தில் அரசர்கள் கோயில் கட்டினார்கள்; கோரக்ஷணம் செய்தார்கள்; அன்னஸத்திரம் கட்டினார்கள்; சுரோத்திரியம் கொடுத்தார்கள்; தான தர்மம் செய்

தார்கள். வயிற்றுக் குறையைப் போக்கி ரக்ஷணம் பண்ணுவதும் தர்மவிருத்தி பண்ணுவதுமே அரசனுடைய காரியங்களாக இருந்தன. சட்டம் பண்ணவேண்டிய அவசியமே இல்லாதிருந்தது. விதியை மீறுமல் எல்லோரும் ஸமாதானமாக இருந்தார்கள். அந்த ஸமாதானத்தை ஜாதி தர்மம் காப்பாற்றிவந்தது. அது அழியாமலிருக்கத் தர்ம விருத்தி பண்ணவேண்டும். அந்தக் காலத்தில் வேறு அரசன் வேண்டுமென்கிற விஷயம் இல்லை. ஜாதி தர்மமே சாந்தத்தையும் ஸமாதானத்தையும் நிரம்ப உண்டாக்கி வந்தது.

ஆகவே, எல்லோரையும் சாந்தப்படுத்துவது அர்த்த சாஸ்திரத்தினுடைய லக்ஷ்யமாக இருக்க வேண்டும். எல்லோரிடத்திலும் ஸத்தியம் பரோபகாரம் முதலிய குணங்களிருக்கவேண்டும். அதற்குச் சாந்தம் வளர வேண்டும். அது வளர்வதற்கு வேதத்திலுள்ள தர்ம விஷயங்களை எல்லோருக்கும் சொல்லவேண்டும். அதற்குப் பத்துப்பேராவது இருக்கவேண்டும். அவர்கள் எல்லோரிடத்திலும் அன்புடையவர்களாகவும், சாந்தர்களாகவும், வைதிகாநுஷ்டானம் உள்ளவர்களாகவும் இருக்க வேண்டும். அவர்கள் சொன்னுல் எல்லோருடைய மனதிலும் புகும். அவர்களை நமஸ்காரம் பண்ணிப் பிரார்த்தித்து அழைத்துக்கொண்டு வரவேண்டும். அதனுல்தான் பழைய காலத்தில் அரசர்கள் ரிஷிகளைக் காட்டிலிருந்து தங்கள் தேசத்திற்கு அழைத்து வந்தார்கள்.

ஜாதிக் கட்டுப்பாடுகள் மாறுமல், அவைகளுக்கு அடங்கி நின்ருல் குற்றமே உண்டாகாது; வர்ணுசிரம தர்மம் குலையக்கூடாது. அதை மீறினுல் ராஜாங்கத்துக்குக் காரியம் அதிகமாகும். சாந்தமில்லாமல் போய்விடும். இப்பொழுது அந்த நிலை வந்திருக்கிறது. பக்தி வந்தால் குயுக்தி போய்விடும். நம்மையறியாமல் ஒருவித ஆநந்தம்

பக்தியினுல் வருகிறது. குயுக்தி பதில் சொல்வதினுல் தீராது. பக்திநிறைந்த இடம் ஒன்றைப் பிடிக்கவேண்டும். அப்பொழுது, ‘அடடா! நாம் பரீக்ஷை செய்ததே தப்பு’ என்று தோன்றும். அப்படிப்பட்ட பக்தி நிறைந்த மஹான்களை ஆதரிப்பதுதான் உண்மையான ராஜீய சாஸ்திர (Politics) தத்துவம். இந்த வழியில் கொஞ்சம் ஸமாதானம் எங்கேயாவது குறைந்தால் வேறு வழி வைத்துக்கொள்ளலாம். மஹான்களிடத்தில் பக்தி, ஜாதி வர்ணுசிரம தர்மங்களை ரக்ஷித்தல் என்பவை தாம் அர்த்த சாஸ்திரத்தின் முக்கியக்கொள்கை. மீறினுல் ஸாம தான பேதோபாயங்களை அநுஸரிக்கலாம். அப்புறம்தான் தண்டோபாயத்தைக் கைக்கொள்ள வேண்டும்.

அர்த்த சாஸ்திரம் அரசன் தன்னுடைய பொருள்களைப் போல ஒவ்வொரு ஏழையின் பொருளையும் ரக்ஷித்துக் கொடுக்கவேண்டும் என்று சொல்லுகிறது. அதற்குத்தான் நான்கு உபாயங்கள் ஏற்பட்டிருக்கின்றன. அரசன் புத்திசாலியாயிருந்தால், பணம், அதிகாரம், பட்டங்கள் முதலியவைகளால் ஸமாதானம் உண்டாகாது என்பதை அறிந்து, மஹான்களுடைய உபதேசத்தை ஜனங்களெல்லாம் கேட்கச் செய்து ஜாதி வர்ணுசிரம தர்மத்தைக் காப்பாற்றிவரவேண்டும் அப்படிச் செய்தால் மற்றக் காரியங்களுக்கு இடமிருக்காது.

தநுர்வேதம் :

மற்ற அரசர்களால் தன்னுடைய தேசத்துக்கு ஹிம்ஸை நேரும்பொழுது செய்கிற தண்டோபாயத்தைச் சொல்லுவது தநுர்வேதம். அந்த வேதப்படி அரசன் எப்பொழுதும் சண்டை செய்யத் தயாராக இருக்கவேண்டும். துஷ்ட அரசன் தன்னுடைய தேசத்தில் புகுந்து

அலங்கோலம் பண்ணுமலிருக்க அப்படி இருக்கவேண்டும். அதற்காகத்தான் க்ஷத்திரியர்களிருக்கிருர்கள். ஒவ்வொருவனும் ஒவ்வொரு தொழில் பண்ணவேண்டுமென்றுவிதிக்கப்பட்டடிருக்கிறது. எல்லோரும்எல்லாம் செய்வது தப்பு. ஜர்மனியில் எல்லோரும் யுத்தம் செய்யப் பழகிக்கொள்ளவேண்டும் என்ற விதி இருக்கிறது. அதனுல் லோகத்துக்கே கஷ்டம் உண்டாகும். அவர்களுக்கு அஹம்பாவம் உண்டாகி இருக்கிறது. லோகத்தையே சாப்பிட்டு விடுகிறேன் என்று அந்தத் தேசம் சொல்லுகிறது. ஆகையால் எல்லோரும் ஒரே தொழிலேயே செய்யக்கூடாது. சரீரபலமே பெரிதென்று நினைப்பது தவறு. நம்முடைய சாஸ்திரத்தில் ஒவ்வொரு ஜாதிக்கும் தனித்தனி ஒவ்வொரு முக்கியமான தொழில் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. இப்படித் தனித்தனியே வைத்ததினுல் பொதுவில் எல்லோருக்கும் ஸௌகர்யம் உண்டாகிறது. எண்ணெயாட்டுகிறவன் ஒருவன் இருக்கிருன்; சாஸ்திரம் வாசிப்பவன் ஒருவனிருக்கிருன்; யுத்தம் செய்வதற்கு ஒருவனிருக்கிருன். இப்படி ஒவ்வொரு தொழிலுக்கும் ஒவ்வொரு பிரிவு ஏற்பட்டு இருக்கிறது. க்ஷத்திரியன் சரீர பலம் உடையவனுக இருக்கிருன். பிராம்மணனுக்கு சரீரபலம் அவ்வளவு அவசியம் இல்லை. பிராம்மணனுக்கு அறிவு பலம் வேண்டும். அந்த அறிவினுல் எல்லோருக்கும் கைங்கரியம் பண்ணவேண்டும். அர்த்த சாஸ்திரம் தநுர்வேதம் என்பவைகளைப் பிராம்மணன் தெரிந்துகொண்டு, அவைகளை க்ஷத்திரியனுக்குச் சொல்லிக் கொடுக்கவேண்டும். அவைகளில் சொல்லி இருக்கிறபடி நடக்கிறவன் க்ஷத்திரியன்.

தநுர்வேதத்தில் ஆயுத விசேஷங்களைப் பற்றியும், துஷ்டர்களை எப்படி ஸம்ஹாரம் பண்ணுவது என்பதைப் பற்றியும் பல விஷயங்கள் சொல்லப்படுகின்றன. தநுஸ்

என்பது வில். அது முக்கியமான ஆயுதம். அதிலிருந்து தநுர்வேதமென்னும் பெயர் வந்தது. ஆயுதங்கள் பொதுவாக இரண்டு வகைப்படும். அவை அஸ்திரம், சஸ்திரம் என்பவை. துஷ்டர்களால் உண்டாகின்ற ஹிம்ஸையைத் தடுக்கவும் அவர்களை ஹிம்ஸிக்கவும் அவை உதவுபவை. அஸ்திரமென்பது மந்திரத்தை யுச்சரித்துப் பிரயோகம் பண்ணினால் அநேக கோடி பேர்களை ஸம்ஹாரம் பண்ணுவது. பாசுபதாஸ்திரம், நாகாஸ்திரம் என்பவை போன்ற பல அஸ்திரங்களிருக்கின்றன. அதர்வவேத மந்திரங்களை அத்தியயனம் பண்ணி ஸித்தி பெற்று வைத்திருந்தால் அவைகள் அஸ்திரப்பிரயோகம் பண்ண உபயோகப்படும். ஒரு சின்ன தருப்பையை எடுத்து அந்த மந்திரத்தை உச்சாரணம் பண்ணிப் போட்டாலும் அது பகைவனைத் தஹித்துவிடும். ஸரியானபடி அநுஷ்டானம் செய்து தேஹ பரிசுத்தியோடு இருந்து அஸ்திரப் பிரயோகங்களைத் தெரிந்து கொள்ளவேண்டும். கையில் கிடைக்கும் மற்ற ஆயுதங்கள் சஸ்திரங்களாம். உள்ளே இருக்கும் மந்திர சக்தியால் பிரயோகிப்பது அஸ்திரம். வெறும் பலத்தால் பிரயோகம் பண்ணுவது சஸ்திரம்.

சஸ்திரம் மூன்று வகைப்படும். அவை, முக்தம், அமுக்தம், முக்தாமுக்தம் என்பவை. முக்தம் என்பது கையை விட்டு எறிவது. கல், பாணம் முதலியவை அந்த வகையைச் சேர்ந்தவை. அமுக்தம் கையில் வைத்துக்கொண்டே ஹிம்ஸிப்பது. கத்தியைப் போன்றவை அந்த வகையைச் சேர்ந்தவை. பாசம் முதலிய வேறு சில ஆயுதங்கள், கையிலும் இருக்கும்; கையை விட்டும் போகும்; திரும்பிவரும். அவை முக்தாமுக்தம். சில சக்கிரங்கள் பிரயோகம் பண்ணினால் ஸம்ஹாரம் செய்து விட்டுத் திரும்பி வந்து விடும். அவை இந்த வகையைச் சேர்ந்தவைகளே.

அஸ்திரங்களுக்குள் பல பேதங்கள் இருக்கின்றன. ஓர் அஸ்திரத்துக்கு விரோதமாக மற்றோர் அஸ்திரம் இருக்கிறது. நாகாஸ்திரம் என்பது ஒன்று. அதற்கு விரோதமானது காருடாஸ்திரம். அக்கினியஸ்திரத்துக்கு எதிரானது வாருணாஸ்திரம். அது அக்னியினுடைய சக்தியைத் தீர்த்த மயமாகச் செய்துவிடுகிறது. இந்த அஸ்திரங்கள் க்ஷத்திரியர்களிடம் இருக்கவேண்டும்.

வஸிஷ்டர் ராமனுக்கு அஸ்திர சஸ்திர வித்தைகளைக் கற்றுக் கொடுத்தார். ஆனால் அவர் அவைகளைப் பிரயோகம் பண்ணவில்லை. பிராம்மணனுக்குப் பதினெட்டு வித்தைகளும் தெரியவேண்டும். காந்தர்வவேதங் கூடத் தெரியவேண்டும். லோகத்திற்கு வேண்டியவைகளெல்லாம் தெரியவேண்டும். கிருஷி சாஸ்திரம் தெரிய வேண்டும். அது ஜ்யோதிஷத்தில் ஸம்ஹிதை என்னும் பிரிவில் வந்து விட்டது. வீடு கட்டத் தெரிய வேண்டும். அவைகளை யெல்லாம் தெரிந்து கொண்டு அந்த அந்த வித்தைகளுக்கு ஏற்ற ஜாதியினர்க்கு அந்த அந்த வித்தையைச் சொல்லிக் கொடுக்க வேண்டும். ஒரு விருத்தியிலும் நுழையக் கூடாது. அத்தியயனம் பண்ண வேண்டும். நேரே தொழில் வைத்து அதிக லாபம் ஸம்பாதிக்கலாம் என்று வரக்கூடாது. அந்த அந்த ஜாதிக்கு அந்த அந்த வித்தையைச் சொல்லித் தருவது தான் பிராம்மணனுடைய தொழில்.

தனுர்வேதம் வஸிஷ்டருக்குத் தெரியும்; விசுவாமித்திரருக்கும் தெரியும். விசுவாமித்திரர் யாகம் பண்ணினார். அதை ஸுபாஹு மாரீசன் என்னும் ராக்ஷஸர்கள் வந்து கெடுக்க ஆரம்பித்தார்கள். அப்பொழுது அவர் 'இந்த வித்தை யார் சொல்லிக் கொடுத்தது? நான் தானே சொல்லிக் கொடுத்தது. நானே இவர்கள் பேரில் அஸ்திரங்களைப் போடுகிறேன்' என்று எண்ணிப் போடவில்லை.

ராம லக்ஷ்மணர்களைக் கூட்டிக் கொண்டு வந்து அந்த ராக்ஷஸர்களைத் தொலைக்கச் சொன்னார்.

ஆகையால் பிராம்மணன் எல்லாத் தொழில்களையும் தெரிந்து கொண்டு அதற்கு உரிய ஜாதியினருக்கு அந்த அந்தத் தொழிலைச் சொல்லிக் கொடுப்பதோடு நிற்க வேண்டும். அறிவை மாத்திரம் ஜாக்கிரதையாக ரக்ஷித்து வரவேண்டும். எல்லாவற்றையும் அவன் தெரிந்து கொள்ளவேண்டும். 'கத்தி சுற்றத் தெரியுமா?' என்றால் 'தெரியும்' என்று சொல்லவேண்டும். 'சிகித்ஸை பண்ணத் தெரியுமா?' என்றால் 'தெரியும்' என்று சொல்ல வேண்டும். 'சித்திரம் எழுதுவையா?' என்றால் 'எழுதுவேன்' என்று சொல்லவேண்டும். வர்ணாசிரம தர்மத்துக்குத் தக்கபடி அந்த அந்தத் தொழிலாளியைச் சிஷ்யனாக்கிக் கொண்டு அந்த அந்த வித்தையைச் சொல்லிக் கொடுத்து அவன் தரும் குரு தக்ஷிணையைக் கொண்டு ஜீவிக்க வேண்டும். குரு தக்ஷிணை கொஞ்சமாக இருந்தாலும் திருப்தி அடையவேண்டும். மற்றவையெல்லாம் ஆபத்தர்மம். ஒரு தொழிலைப் பார்த்துக் கொண்டே இருந்தால் அறிவை ஸம்பாதிக்க முடியாது. பாக்கியெல்லாம் ஆபத்காலதர்மம். அந்த நிலை இப்பொழுது வந்திருக்கிறது.

தனுர்வேதத்தில் சில யுத்த ஏற்பாடுகள் சொல்லப் படுகின்றன. வியூஹம் என்பது ஒன்று. தனுர்வியூஹம், கருடவியூஹம் என்பவைகளைப் போலப் பல வியூஹங்கள் உண்டு. அந்த வியூஹங்களின்படி ஸைன்னியத்தை நிறுத்திவைப்பார்கள். யானைப்படையை இன்ன இடத்தில் நிறுத்த வேண்டும், குதிரைப் படையை இன்ன இடத்தில் நிறுத்த வேண்டும், மற்ற ஸைன்னியங்களை இன்ன இன்ன இடங்களில் நிறுத்த வேண்டும் என்ற விஷயங்களும், எதிரியை எப்படிச் சுற்றிக் கொள்

ளுவது என்பதும், இன்ன இன்ன தினுஸாக நின்ருல் எதிரி அகப்படுவான என்பதும், இவைகளைப்போன்ற வேறு பல விஷயங்களும் தநுர் வேதத்தில் சொல்லப் படும். சதுரங்க ஆட்டத்திற்கூட ஆனையைப் பிடிக்க இப்படிப் போகவேண்டும். குதிரையைப் பிடிக்க இன்னது செய்ய வேண்டும் என்ற நியதி ஏற்பட்டிருக் கிறது. சதுரங்க ஸைன்னியத்தில் ஏற்பட்டதுதான் திருஷ்டாந்தத்தில் சதுரங்கத்தில் இப்படி ஏற்பட்டிருக் கிறது. ஸ்ரீகிருஷ்ணன் அபிமன்யுவுக்கு எதிரியின் ஸைன்னியங்களுக்குள்ளே போக வழி சொல்லிக் கொடுத்து வெளியில் வர வழி சொல்லிக் கொடுக்கவில்லை என்றும் அதனுல் அவன் விரோதிகளிடம் அகப்பட்டுக் கொண்டான் என்றும் பாரதத்தில் இருக்கிறது. இப்ப டிப்பட்ட பலவகை உபாயங்கள் தநுர் வேதத்தில் இருக் கின்றன. இப்பொழுது ஓர் உபாயமும் தெரியாது. கோட்டைகளெல்லாம் இடிக்கப்பட்டுவிட்டன.

ஒவ்வொருவனுக்கும் வில்வித்தை தெரிய வேண்டும். ஒவ்வொருவனுக்கும் ஒவ்வொரு தொழில் இருப்பதில் அது க்ஷத்திரியன் தொழில். ஆனுலும் அவன் பிறர் உதவியை வேண்டினுல் எல்லோரும் உதவி செய்யவேண் டும். தன்னையும், தன்னுடைய வீட்டையும், தன்னுடைய குழந்தை மனைவிகளையும் ரக்ஷிக்கப் பலம் ஒவ்வொரு வனுக்கும் வேண்டும். ஆகையால் தநுர்வேதத்தை ஒவ் வொருவனும் அறிந்துகொள்ள வேண்டும். ஜீவனத் துக்கு அர்த்தம் எப்படி முக்கியமோ அப்படிப் பலமும் அவசியமேயாகும்.

### காந்தர்வவேதம் :

வயிற்றுக்கும் உபயோகம் இல்லாமல் பகை, துக்கம் முதலியவைகளை நிவர்த்திக்கவும் உபயோகப்படாமல் உத்ஸாஹத்தை மட்டும் தருவது காந்தர்வவேதம். சித்தி

ரம் இருக்கிறது; பார்த்தால் ஸந்தோஷம் உண்டாகிறது. ஸங்கீதக் கச்சேரி நடக்கிறது; கேட்டால் காதுக்கு ஓர் இனிமை ஏற்படுகிறது. நாடகம் (Drama), ஸினிமா முதலியவைகள் இருக்கின்றன. இவைகளால் நமக்கு வயிறு நிரம்புவதில்லை. ஆனாலும் இவைகளை நடத்து பவர்களுக்கு வயிறு நிரம்புகிறது. பார்க்கப் போகிறவர் கள் தங்கள் வயிறுக்கு வைத்துக் கொண்டிருப்பதையும் கொண்டுபோய்க் கொடுத்து விட்டு வந்து விடுகிறார்கள். கிருஷி செய்தால் தான்யம் கிடைக்கிறது; அதனால் வயிறு நிரம்புகிறது. ஆனால் ஆட்டம் (Dance), நாடகம் (Drama), போட்டோ (Photo) முதலியவைகளால் வயிற் றுக்கு ஒரு பிரயோஜனமுமில்லை. ஆனாலும் இவைகள் உபயோகமில்லை என்பதில்லை. இவைகளால் மனதுக்கு ஓர் உத்ஸாஹம் ஏற்படுகிறது.

இந்த மாதிரி உத்ஸாஹங் கொடுக்கும் விஷயங்களி லேயே பொழுது போக்கிக் கொண்டிருப்பவர்கள் கந்தர்வர்கள். அவர்கள் நம்முடைய கண்ணுக்குத் தெரிய மாட்டார்கள். நம்முடைய கண்ணுக்குத் தெரியாமல் மைக்ராஸ்கோப்புக்குத் தெரியும் பிராணிகள் இருக்கின் றன. எலக்ட்ரிஸிடி நமது கண்ணுக்குத் தெரிவதில்லை. அப்படி நம்முடைய கண்ணுக்குத் தெரியாத அநேக ஜாதிகள் உண்டு. அவைகளைத் தெரிந்து கொள்ளும் கண்களும் இருக்கும். எக்ஸ்ரேயால் (X-Ray) ஸாதாரண மாகக் கண்ணுக்குத் தெரியாதவைகள் தெரிகின்றன. அதுபோல நம்முடைய கண்ணுக்குத் தெரியாத தேவ ஜாதிகள் சில திவ்விய சக்ஷுஸுக்குத் தெரியும்.

கந்தர்வர்களைப்போல எழுதியுள்ள சித்திரங்களில் அவர்கள் புஷ்பம் சொரிவதைப் போலவும் வீணா கானம் செய்வதைப் போலவும் இருப்பதைப் பார்க்கலாம். அவர் களுக்கு உத்ஸாஹம் அதிகம். இந்திரிய விஷயங்களில்

பிரீதி உள்ளவைகளுக்கு அவர்கள்தாம் அதிஷ்டான தேவதைகள். ஆகையால் வெறும் இந்திரிய ஸுகத்தைத் தரும் வித்தைகளுக்குக் காந்தர்வவேதம் என்று பெயர் ஏற்பட்டது.

அந்த சாஸ்திரத்தில் முக்கியமாக உள்ளவை மூன்று. அவை நிருத்தம், கீதம், வாத்தியம் என்பவை. இவைகளை அல்லாமல், சித்திரம், சமையல் முதலிய அநேக தினுஸு ருசிக்குத் தக்கபடியுள்ளவை இருக்கின்றன. சாப்பாடு நிரம்ப ருசிகரமாயிருந்தால் வயிறு நிரம்பாது. தெவிட்டி விடும். அப்புறம் தீர்த்தத்தைக் கொண்டுதான் வயிற்றை நிரப்ப வேண்டும்.

நிருத்த கீத வாத்தியங்கள் முக்கியமானவை என்று சொன்னேன். கலைகள் மொத்தம் 64. அவைகளிற் பல இந்தக் காந்தர்வவேதத்தில் அடங்கி இருக்கின்றன. கவித்துவம், பல பாஷைகளைத் தெரிந்து கொள்வது சதுரங்கம், பாட்மிண்டன், பொம்மலாட்டம், ஸினிமா முதலிய காரியத்துக்கு உபயோகம் இல்லாமல் விசித்திரத்தைக் காட்டுகின்றவைகளெல்லாம் காந்தர்வவேதத்தில் அடங்கியவைகளே யாகும். அவைகள் கடைசி பக்ஷமாகத் தெரிந்து கொள்ளவேண்டியவை. ஆனால் ஜனங்களுக்கு அவைகளில்தான் அதிக ஆசை உண்டாகிறது. புத்தி அவைகளில்தான் அதிகமாக உபயோகப்படுகிறது.

நிருத்தம் என்பது அபிப்பிராயத்தைக் கை கால் அசைவால் காட்டுவது.

कस्तूरीतिलकं ललाटफलके वक्षःस्थले कौस्तुभं
नासाग्रे नवमौक्तिकं करतले वेणुं करे कङ्कणम् ।
सर्वाङ्गे हरिचन्दनं च कलयन् कण्ठे च मुक्तावलिं
गोपस्त्रीपरिवेष्टितो विजयते गोपालचूडामणिः ॥

[கிருஷ்ணகர்ணாமிர்தம்]

என்ற ஒரு சுலோகம் இருக்கிறது. இது கிருஷ்ண னுடைய வர்ணனை. இதை வாயால் சொல்லாமல் கையி ஞலும் உடம்பினுலும் அசைவு முதலியவைகள் செய்து காட்டி இன்ன சுலோக அர்த்தத்தைத்தான் அபிநயித்துக் காட்டுகிருன் என்று ஸபையோர்கள் அறியும்படி செய்ய வேண்டும். அந்த நாட்டியம், தாண்டவம் லாஸ்யம் என்று இரண்டு வகைப்படும். ஈசுவரன் செய்தது தாண்டவம்; அம்பிகை செய்தது லாஸ்யம். பூஜை யில்கூட உபசாரமாக நிருத்தம் உண்டு. ராஜோபசாரத் தில் ஒன்று அது. ராஜ ஸமுஹத்தில் செய்யப்படுவது ராஜோபசாரம். புருஷர்கள் செய்வது தாண்டவம். ஸ்திரீகள் செய்வது லாஸ்யம்.

மனேபாவத்தை வார்த்தையால் சொல்லும்பொழுது அதைக் காதால் கேட்கிறேம். அதுபோலக் கண்ணுல் பார்த்து மனத்திலுள்ள அபிப்பிராயத்தைத் தெரிந்து கொள்ளச் செய்வது நாட்டியம். பொம்மலாட்டத்தில் எல்லாவற்றையும் பொம்மை செய்து தெரிவிக்கிறது. மலையாளத்தில் 'கதைகளி' என்று ஒரு ஆட்டம் நடக் கிறது. அதில் வாய் பேசாமல் ஊமை போல எல் லோரும் ஆடுவார்கள். மனேபாவம் எல்லாம் தெரிந்து விடும்.

கீதம் என்பது பாட்டு. சப்தம் தொண்டையில் உண் டாகிறது. எல்லோரும் சப்தம் போடுகிறேம். அந்தச் சப் தத்தை ஸ்வரமாகப் பிரித்து இதற்கப்புறம் இது என்று அழகாக வைத்தால் அது ஓர் இனிமையை உண்டாக்கு கிறது. புரட்டிப் புரட்டி வைத்தால் ஓரின்பம் ஏற்படு கிறது. அந்தப் புரட்டலில் நன்ருகப் பழகினவனுக்கு ஒரு மணிக்கு இரு நூறு அல்லது முந்நூறு ரூபாய் கொடுக் கிறேம். இங்கிலீஷில் 26 எழுத்துக்கள் இருக்கின்றன. அவைகளையே புரட்டிப் புரட்டி வைத்து எவ்வளவோ

புஸ்தகங்கள் எழுதுகிறார்கள். டாகூர் எழுதினால் அதற்குப் பணம் கொடுக்கிறார்கள்; நிரம்பக் கொண்டாடுகிறார்கள். நாம் எழுதினால் அதற்கு அவ்வளவு மதிப்பு இருப்பதில்லை. அதைப் போலத்தான் ஸங்கீதமும் இருக்கிறது. மஹா வைத்தியநாதையர் பாடினால் அது மிகவும் நன்றாயிருந்தது என்றுசொல்லுகிறார்கள். நமக்கும் தொண்டையிருக்கிறது. ஆனாலும் அப்படிப் பாட வருவதில்லை. நன்றாகப் புரட்டினால் அதிக ஸந்தோஷம் உண்டாகிறது. ஸாதாரணமாக இருந்தால் ஒன்றும் பிரயோஜனம் இல்லை என்று சொல்லி விடுகிறோம். அந்தப் புரட்டலையே பிலாக்கணமாகப் புரட்டினால் துக்கம் உண்டாகிறது.

சித்திர கலையும் (Art) இப்படிப்பட்டதுதான். வர்ணமுள்ள புட்டி (Bottle)-யையும் பிரஷையும் வைத்துக் கொண்டு நாமும் எதையாவது ஒன்றை எழுதுகிறோம். அது நன்றாக இருப்பதில்லை. அதில் பழக்கமுடையவன் முன் பின் பார்த்து யோசித்து எழுதினால் நன்றாக இருக்கிறது. கலைகளெல்லாம் இப்படிப்பட்டவைகளே.

மஹாகவி ஒரு சுலோகம் எழுதினால் நன்றாக இருக்கிறது. அவனும் வார்த்தைகளைக் கொண்டுதான் அந்தச் சுலோகத்தை எழுதுகிறான். நமக்கும் வார்த்தைகள் தெரியும். ஆனால் நாம் எழுதுவது நன்றாக இருப்பதில்லை. புரட்டி வைப்பதில் தான் வித்தியாஸம் இருக்கிறது. ஸ்வரம், எழுத்து, வார்த்தை எதுவாயிருந்தாலும் புரட்டலுக்குத் தகுந்தபடி உயர்வு தாழ்ச்சி அமைகின்றன.

ஸங்கீதம் வாயினால் பாடுவது. வாத்தியம் வெளியிலுள்ள ஒரு ஸாமானிற் சப்தம் உண்டாக்குவது. வாத்தியத்திற் சில தினுஸுகள் உண்டு. தந்திரீ வாத்தியம், ரந்திர வாத்தியம், சர்ம வாத்தியம், லோஹ வாத்தியம்

என்ற நாலு வகைகள் உண்டு. நம்முடைய தொண்டை மாம்ஸ வாத்தியம். அதில் காற்றைக்கொண்டு சப்தம் உண்டு பண்ணுகிறோம். சர்ம வாத்தியம் என்பது தோலைக் கட்டி அடித்துச் சப்தம் உண்டாக்குபவை. மிருதங்கம், தவில், நகார், பேரிகை, கிஞ்ஜரா முதலியவைகள் சர்ம வாத்தியங்கள். தந்திரீ வாத்தியங்கள் அநுரணனம் உடையவை. ஒரு தரம் மீட்டினால் நிரம்ப நாழிகை அந்தச் சப்தம் இழுத்துக்கொண்டே இருக்கும். முதல் தந்தியில் உண்டான சப்தம் பின்பும் நீடித்து இரண்டாம் தந்தியில் உண்டான சப்தத்தோடு சேர்ந்து நிற்கும். அது தான் அநுரணனம் என்பது. வீணை, தம்பூர் முதலியவை தந்திரீ வாத்தியங்கள். இவைகளில் ஸ்பரிசத்தால் சப்தம் உண்டாகின்றது. ரந்திர வாத்தியம் துவாரம் உடையது. புல்லாங்குழல், நாயனம் முதலியவை ரந்திர வாத்தியத்தில் சேர்ந்தவை. லோஹ வாத்யம்; தாளம் மோர்ஸிங்கு முதலியவை. மண்ணால் உள்ள இரண்டு வாத்தியங்கள் இருக்கின்றன. அவை கடமும் ஜலதரங்கமும். ஜலதரங்கத்துக்குப் பீங்கான் கிண்ணங்களை உபயோகிக்கிறார்கள். அவை மண் தானே ? ஹார்மோனியம் ரந்திர வாத்தியத்திற் சேர்ந்ததே. வாய்க்குப் பதிலாகத் துருத்தி இருக்கிறது. கையாலடைப்பதற்குப் பதிலாகப் பில்லையை அழுத்துகிறார்கள்.

நாட்டியம் என்பது ஆதிமுதல் கடைசிவரையில் ஒரு சரித்திரத்தை அங்க அசைவால் காட்டுவதாகும். பாட்டில் இரண்டுவகை இருக்கின்றன. மனோபாவமும் கீதமும் கலந்தது பாட்டு. அர்த்தமும் ஸ்வரானந்தமும் பாட்டினால் உண்டாகின்றன. பாட்டில் சப்தானந்தத்தைப்போல நாட்டியத்தில் கை கால் விந்யாஸத்தால் ஏற்படும் ஆனந்தம் இருக்கிறது. பாட்டிலும் மனோபாவம் இருப்பதுபோல நாட்டியத்திலும்

இருக்கிறது. ராகாலாபனம் பண்ணுதல், ஸ்வரம் பாடுதல், தானம் பாடுதல் என்பவைகளில் அர்த்தமில்லாமல் சப்தம் மாத்திரம் ஆனந்தத்தைத் தருகிறது. கீர்த்தனம் அல்லது சுலோகம் சொன்னால் அர்த்தம் சப்தம் என்னும் இரண்டும் உண்டாகின்றன. அது போல நாட்டியத்தில் அங்கசர்யானந்தமும் அர்த்தானந்தமும் ஏற்படுகின்றன. ராக ஆலாபனம் முதலியவைகளில் சப்தத்தால் ஏற்படுவதைப்போல அங்கசர்யையால் மட்டும் ஆனந்தம் உண்டாக்கும் ஆட்டத்திற்கு நிருத்தம் என்று பெயர். நடையில் யானை நடை, ஹம்ஸ நடை அழகாக இருக்கின்றன; ஸந்தோஷத்தைத் தருகின்றன. நாய், காக்கை முதலியவைகளின் நடை நன்றாக இல்லை. நடையில் வித்தியாஸம் இருக்கிறது. அங்க சேஷ்டை மாத்திரம் ஸந்தோஷத்தைத் தருவதற்கு யானை நடை, ஹம்ஸ நடை என்பவை உதாரணம். மனித சரீர சேஷ்டையால் மாத்திரம ஆனந்தம் தருவது நிருத்தம்.

நிருத்தமும் நாட்டியமும் தனித்தனி உபசாரங்களாகச் சொல்லப்பட்டிருக்கின்றன.

நாட்டியம் செய்வதற்காக ஒரு ஜாதி இருக்கிறது. அது பரத ஜாதி என்று சொல்லப்படும். நட்டுவன் தாஸி முதலியவர்கள் தாம் அந்தத் தொழிலைச் செய்யலாம். இதைப்போல வைத்தியம் செய்ய அம்பஷ்டன் என்ற ஒரு ஜாதியினர் தனியாகச் சொல்லப்பட்டிருக்கிறார்கள். டிராமா போடுகிறவர்கள் பரத புத்திரர்கள். பரத சாஸ்திரத்தில் நாடகத்துக்கு வேண்டிய லக்ஷணங்கள் சொல்லப்பட்டிருக்கின்றன. அதில் ஸ்திரீ புருஷர்களுள் நட்டுவன் ஆண் வேஷம் போட்டால் அவன் பெண்டாட்டிதான் நாடகத்திலும் அவனுடைய மனைவியாக வேஷம்போட வேண்டும். பொதுப்பெண் போடக்கூடாது. புருஷ வேஷம் போட்ட பெண்ணையும் பெண்

வேஷம் போட்ட புருஷனையும் பார்க்கக்கூடாது என்று தர்ம சாஸ்திரம் சொல்லுகிறது. பிராம்மணன் வேஷம் போட்டு ஆடக்கூடாது. இப்படியானால் இந்தக் காலத்தில் டிராமாவே இராது. அதைப் பரத புத்திரர்கள் தாம் நடிக்க வேண்டும். புருஷராகவும் மனைவியாகவும் இருப்பவர்களே நாடகத்திலும் புருஷராகவும் மனைவியாகவும் நடிக்கவேண்டும். நாடகத்தின் முதல் அப்படியே ஆரம்பிக்கப்படுகிறது. நடன் தன்னுடைய பத்தினியைக் கூப்பிட்டுச் சொன்னான் என்று சொல்லுவது வழக்கம்.

இவைகளைச் சொல்லிவைக்கிறவன் பிராம்மணன். அப்படியானால் அவன் போய் நடிக்கக் கூடாதா, காளிதாஸன் நாடகம் பண்ணவில்லையா என்று கேட்கிறார்கள். ஒவ்வொரு ஜாதிக்கும் தனித்தனித் தொழில் இருந்து வந்தது. இப்பொழுது எல்லாவற்றையும் எல்லாரும் செய்கிறார்கள். பிராம்மணன், நாட்டியம், கீதம் என்னும் இரண்டு தொழிலையும் செய்கிறான். நாயனம் வாசிப்பதை மட்டும் இன்னும் வைத்துக் கொள்ளவில்லை. அப்படி வைத்துக் கொள்ளுவதற்கு யாதொரு தடையும் இப்பொழுது கிடையாது. ஆனாலும், இதை எப்படி வைத்துக் கொள்ளாமலிருக்கிறானோ அப்படியே பழைய காலத்தில் ஒன்றும் வைத்துக்கொள்ளாமல் இருந்தான். ஆனால் ஸகல வித்தைகளையும் அவன் தெரிந்து கொண்டிருந்தான்.

ஸ்ரீமத் ஆசார்யர்களைப் பற்றிய ஒரு ஸமாசாரம் இங்கே ஞாபகத்திற்கு வருகிறது. ஆனால், அது சங்கர விஜயத்திலில்லை. சக்கிலியன் ஒருவன் அவரைப் பார்த்து, செருப்புத் தைப்பீரா என்று கேட்டான். அவர் முடியுமென்று சொல்லி ஊசியை வாங்கி முதலில் மூக்கிலே தடவிக்கொண்டார். அதைப் பார்த்து சக்கி

வியன் போதுமென்று போய்விட்டான். ஆரம்பிக்கும் பொழுது சக்கிலியர்கள் அப்படிச் செய்வது வழக்கமாம். பரம ஸௌக்ஷ்மமும் அவருக்குத் தெரிந்திருக்கிறதென்று அந்தச் சக்கிலி போய்விட்டான்.

எல்லாத் தொழிலும் எல்லாருக்கும் தெரிய வேண்டும். ஆனாலும் ஒரு முக்கியத்தொழில் அதிகமாகத் தெரியவேண்டும். வித்தை ஸம்பாதிக்கிறதே ஒருவனுடைய தொழிலாக இருக்கவேண்டும். விமானம் பண்ணுவது ஒருவனுடைய தொழிலாக இருக்கவேண்டும். எல்லோரும் விமானம் பண்ணுபவர்களாயிருந்தால் ஏறுபவர்கள் யார்? இந்திரியானந்தத்துக்கு வேண்டிய காரியங்களைச் சில பேர் செய்யவேண்டும். ஆத்மாவுக்கு ஆனந்தம் தரும் ஆத்ம வித்தையைச் சிலபேர் தெரிந்து கொள்ளவேண்டும். சரீரத்துக்கும் வயிற்றுக்கும் ஆயுர்வேதமும் கிருஷியும் உபயோகப்படும். இந்திரியங்களுக்கு இன்பத்தைக் கொடுப்பதில் காந்தருவ வேதம் பிரயோஜனப்படுகிறது. இப்படி மனுஷ்யனுக்கு வேண்டிய ஸகலமான வித்தைகளும் பதினெட்டு வித்தைகளில் அடங்கி இருக்கின்றன.

அர்த்த சாஸ்திரத்தின்படி பார்த்தாலும் வர்ணாசிரம தர்மம் நிலைக்கும்படி ராஜாங்கம் பண்ணவேண்டும் என்று தெரிந்தது. காந்தர்வ வேதத்தைப் பார்த்தாலும் அந்த அந்தத் தொழிலாளி அந்த அந்தத் தொழிலைப் பண்ணி ஜீவிக்கவேண்டும் என்று தெரிகிறது. பிராம்மணன் தெரிந்தவற்றைச் சொல்லிக் கொடுத்து அதனால் கிடைக்கின்ற தக்ஷிணையால் ஜீவிக்க வேண்டும். ஒருவன் எவ்வளவு கொடுத்தாலும் போதுமென்று இருந்து வித்தையை ஸம்ரக்ஷிக்கவேண்டும். குரு தக்ஷிணையை வாங்காமல் செய்யக் கூடியவர்கள் அப்படியே செய்ய வேண்டும். ராஜாக்களிடம் தானம் முதலியவைகள்

வாங்கினதால் அதிக செல்வமடைந்தவர்கள் தக்ஷிணை வாங்காமலே வித்தையைச் சொல்லிக் கொடுத்து அபிவிருத்தி செய்யவேண்டும். ஆனால் இந்தக் காலத்தில் பிறரிடத்தில் பிரதிக்கிரஹம் வாங்காமல் ஜீவனம் பண்ணும் சக்தி உடையவன் கண்டபடி செலவழிக்கிறான். ஏழைதான் வித்தையைக் கற்றுக் கொள்ளுகிறான். பணக்காரன்தான் அப்படியில்லாமல் அதிகமாக வித்தையை ரக்ஷிக்கவேண்டும். மற்றவர்கள் தங்களுக்குக் கொஞ்சம் பணம் இருந்தாலும் அதை ஜாக்கிரதையாகப் பாதுகாக்க வேண்டும். அதை வைத்துக்கொண்டு ஜீவனம் பண்ணவேண்டும். சில வருஷங்களுக்கு முன் வரையில் நம்முடைய தேசத்தில் அப்படிப்பட்டவர்கள் இருந்தார்கள். இப்பொழுது எல்லாம் மாறிவிட்டன.

பிராம்மணன் பிறருக்குக் கற்பிப்பதைத் தவிர வேறு தொழில் பண்ணக்கூடாது. இந்தக் காலத்தில் அப்படி இருப்பது எல்லாருடைய சம்மதமுமிருந்தாலொழிய முடியாது. இப்பொழுது சாஸ்திரமே மறந்து போய்விட்டபடியால் இதைப்பற்றி ஆலோசிப்பதற்கு இடமேயில்லை. தொழில் செய்யும் அதிகாரி ஒருவன்; அதைச் சொல்லிக் கொடுப்பவன் பிராம்மணன். ஒருவன் வேறொருவனுடைய தொழிலைச் செய்யக்கூடாது என்ற நியதி பழைய காலத்தில் இருந்தது. ஒவ்வொருவருக்கும் தம் தம் தொழிலில் க்ஷேமம் இருக்கிறதென்பதை தெரிந்திருந்தால் இந்த மாதிரி நிலை வராது. அதைத் தெரிந்து கொள்ளச் சாஸ்திரம் இல்லை. அது இருந்திருந்தால் எல்லாரும் எல்லாம் செய்யவேண்டும் என்று சொல்லும் நிலை வராது.

இந்தக் காலத்தில் பள்ளிக்கூடத்தில் படிக்கிறவர்கள் கிராப்பையும், காபி குடிக்கிறதையும் முதலில் பழகிக் கொள்ளுகிறார்கள். படிப்பதனால் அதிகச் செலவு என்

பது தெரிந்திருந்தும் படித்துவிட்டு உத்தியோகம் அகப்படவில்லை என்று அலைகிருர்கள். சர்மகாரன் நாகசுரக்காரன் என்னும் இருவர் வேலையைத்தான் பிராம்மணன் செய்வதில்லை. பாக்கி எல்லாவற்றையும் செய்கிருன். வீட்டையும் நிலத்தையும் விற்று ஸர்டிபிகேட்டுகளாக (Certificate) மாற்றி வைத்துக் கொண்டிருக்கிருர்கள். வேறு ஒன்றும் கிடைக்கவில்லை. ஒரே பந்தியில் சேர்ந்து உட்கார்ந்து சாப்பிடவேண்டும், ஜாதி ஆசிரம நினைவையே மறந்துவிட வேண்டும் என்ற எண்ணந்தான் இப்பொழுது வந்திருக்கிறது.

ஸ்வதேசி, ஸ்வராஜ்யம் என்று இப்பொழுது எல்லோரும் சொல்லுகிருர்கள். ஆனல் எல்லாம் வெள்ளைக்காரன் மாதிரி இருக்கவேண்டும் என்று முயற்சி செய்கிருர்கள்; அவனைப்போல எல்லாரும் ஒன்ருகப் போய்விட வேண்டும் என்கிருர்கள். இவைகளெல்லாம் பரதேசி, பரராஜ்யம், பரர்களுடைய வழக்கந்தான். வாஸ்தவமான ஸ்வராஜ்யம் வரவேண்டுமென்ருல் நம்முடைய தேசத்தில் ஆசார அநுஷ்டானங்கள் எப்படி இருந்தன, இப்பொழுது இருப்பது எப்படி மாறினல் நல்லது என்பதை அறிந்து பழையமாதிரி வருவதற்கு வேண்டிய காரியங்களைச் செய்யவேண்டும். நம்முடைய தேசத்துப் பழைய வழக்கங்கள் மாருமல் இருக்க வேண்டும். பிறதேசத்தார்கள் மாதிரி நாம் இருக்க வேண்டும் என்று சொல்லுகிறது தப்பு. கிராப் அவர்கள் வைத்துக் கொள்ளுகிருர்கள் நானும் வைத்துக் கொள்ளுகிறேனென்று அதை அநுசரிப்பது தப்பு. ஒரு குல்லாய் வியாபாரி தன்னுடைய குல்லாய் மூட்டையுடன் ஒரு மரத்தடியில் படுத்துத் தூங்கிக்கொண்டிருந்தான். அப்பொழுது அந்த மரத்தில் இருந்த குரங்குகள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு குல்லாயாக எடுத்துக் கொண்டன. அவன் தலை

யில் ஒரு குல்லாய் போட்டுக்கொண்டிருப்பதைப் பார்த்து எல்லாம் தலையில் வைத்துக் கொண்டன. வியாபாரி எழுந்திருந்து பார்த்தான் எல்லாக் குல்லாய்களையும் குரங்குகள் எடுத்துக்கொண்டு போய்விட்டன. 'இந்தக் குல்லாய் இருந்து என்ன ப்ரயோஜனம்' என்று வெறுப் போடு தன் தலையில் இருந்த குல்லாயை எடுத்துக் கீழே எறிந்தான். குரங்குகளெல்லாம் அவன் மாதிரி செய்யவேண்டுமென்று தாமும் அப்படியே குல்லாய்க ளெல்லாவற்றையும் கீழே எறிந்து விட்டன. அதைப் போலத்தான் ஒருவனைப் பார்த்து மற்றொருவன் ஒன் றைச் செய்வதும் இருக்கிறது. முஹம்மதியர்கள் பல நூறு வருஷங்கள் இந்தத் தேசத்தை ஆண்டு வந்திருக் கிறார்கள். அந்தக் காலத்தில் யாவரும் தாடியை வைத் துக் கொள்ளவில்லை. இங்கிலீஷ் ராஜாங்கம் வந்து 150 வருஷங்கள்கூட ஆகவில்லை. எல்லோரும் கிராப் செய்து கொண்டிருக்கிறார்கள். முன்னே சொன்ன குரங்கைப் போலத்தான் நாம் செய்து வருகிறோம். அவர்கள் சொல்லாமலே நாமே அவர்களுடைய பழக்கங்களுக்கு அடிமையாகிவிட்டோம். குலாசார தர்மங்களில் நாம் அவர்களுக்கு அடிமையாகிவிட்டோம். மற்ற அடிமைத் தனம் இருந்தென்ன? போயென்ன?

உண்மையான ஸ்வராஜ்யமானால், நம்முடைய ஸ்வ தந்த்ரப்படி நடத்தும் சட்ட ஸபை வந்தால்—அவர்களைப் போல் ஆகவா அவை வேண்டும்?—நம்முடைய ராஜ்யம் எப்படி இருந்தது, என்ன செய்ய வேண்டுமென்பதை ஆலோசிக்க வேண்டும். நாம் நாமாக இருக்கவேண்டும். எவ்வளவு பலம் நமக்கு உண்டோ அவ்வளவையும் நம்மை நாமாக்குவதில் உபயோகப்படுத்த வேண்டும். ஒவ்வொருவனும் தம் தமக்குத் தோன்றியபடி ராஜாவை வைத்துக்கொள்ளப் பிரியப்படுகிறான். வெள்ளைக்

காரரைப் போல் வேஷத்தினுல்தான் எல்லாக் காரியங்களும் நடக்கின்றன. அப்படியிருப்பவர்கள்தான் சட்டம் செய்கிருர்கள். அதற்கு அடிமையாக நாம் இருக்கிறேம். நம்முடைய விஷயமே தெரியாமல் வெள்ளைக்கார ஸம்பிரதாயங்களை அநுஸரிப்பவர்களுக்கு ஒட்டு கொடுத்து வரும் ராஜ்யம் அடிமை ராஜ்யந்தான். முன்பு எந்த முறை இருந்ததோ அந்த முறைதான் நம்முடையது. அதன்படி இருந்தால் உத்கருஷத்தை அடையலாம் என்பது அறிந்து, நமக்கு எந்த மாதிரி ஸ்வதந்திரம் உண்டோ அதை அந்த முறையை நிலை நிறுத்துவதில் விநியோகப்படுத்த வேண்டும். தர்மம், தொழில்முறை, முதலியவைகளை அறிந்தவர்களையும், அநுஷ்டானம் ஒழுக்கம் உடையவர்களையும் ராஜ்யத்தில் வைத்துப் பார்க்கவேண்டும். நம்முடைய தர்ம ராஜ்யத்தை ஸ்தாபித்து இது நன்ருக நடக்கிறது என்று காட்டி மற்றவர்களும் இதை அநுஸரிக்கச் செய்யவேண்டும். வர்ணுசிரமக் கட்டுப்பாடு இருக்கவேண்டும். நமக்கு ஸ்வதந்திரம் கொடுப்பது வாஸ்தவமாக இருந்தால், அந்த ஸ்வதந்திரத்தை நாம் உபயோகப்படுத்தமுடியுமானல், நம்முடைய தர்மத்தை அநுஸரித்து நடத்திக் காட்ட வேண்டும். அப்படி நடத்திக் காட்டுவதற்கு நம்முடைய சாஸ்திரங்களை யெல்லாம் தெரிந்து கொள்ள வேண்டும். புஸ்தகங்கள் இருக்கின்றன. அதனல் தான் நானும் சொல்லுகிறேன். இல்லாவிட்டால் எல்லாம் மறந்து போயிருக்கும். அவைகளைப் பார்த்து அந்தப் படி ஏன் நடக்கக்கூடாது. அந்தப்படி பண்ணுகிறவர்களை ஏன் சட்டசபைக்கு அனுப்பக்கூடாது என்று ஆலோசித்து நமக்குக் கொடுக்கப்படும் ஸ்வாதந்த்ரியத்தை பிரயோஜனப்படுத்தி லோகத்தில் நடத்தி எல்லோருக்கும் வழி காட்டிப் பரமேச்வரனுடைய அநுக்ரஹத்தைப்பெற வேண்டும்.

# 13

## நமது சாஸ்திரங்கள் *

[3—1—1933]

நமது தேசத்திற்கு இந்தியா என்று பெயர் வழங்கு கிறது. ஹிமாலயம் முதல் கன்னியாகுமரி வரையில் இந்தியாதான். பண்டை நாளில் இதற்குப் பாரதபூமி என்று பெயர். இதில் வஸிக்கிற ஜனங்களின் க்ஷேமத் திற்காக ஒவ்வொரு சாஸ்திரம் ஏற்பட்டிருக்கிறது. தேஹத்தை சௌக்கியமாக வைத்துக்கொள்ளுவதற்காக வும், அகால மரணம் இல்லாமலிருக்கும்படி செய்வதற் காகவும் ஒரு சாஸ்திரம் உண்டு. அதற்கு ஆயுர்வேதம் என்று பெயர். ஆயுள் விருத்தி ஆகவேண்டியதற்கும், இருக்கிறவரையில் கஷ்டமில்லாமலிருக்கும்படி செய்யவும் இந்த சாஸ்திரம் பல உபாயங்களைச் சொல்லுகிறது. இந்த நாட்டில் உற்பத்தியாகும் ஒஷதிகளைக்கொண்டு இந்த நாட்டு ஜனங்களின் ரோகங்களை நிவர்த்திக்க ஆயுர் வேதம் வழிகளைச்சொல்லி யிருக்கிறது. ராஜாங்கம் ஆதரிக்காததால் அதன் பிரஸித்தி குறைந்துபோயிருக் கிறது. இராஜாங்கத்தார் வெள்ளைக்காரரின் சிகித்ஸை முறைகளையே ஆதரித்து வந்திருக்கிறார்கள். ஆனால் ராஜாங்கத்தில் மந்திரிகள் நமது ஜனங்களான பிறகு பனகால் ராஜா அவர்கள் நமது தேச ஒஷதிகள்தான் நமக்குத் தகுதி என்றும், இதர முறைகள் விபரீதமென் றும் நினைத்து இந்த ஊரில் ஆயுர்வேத பள்ளிக்கூடத்தை ஸ்தாபித்தார். வெள்ளைக்கார வைத்திய முறைக்குச் செய்யப்படும் உபகாரத்தில் ஆயிரத்தில் ஒன்றுகூட இந்தப் பள்ளிக்கூடத்திற்குச் செய்யப்படவில்லை; ஆயி னும் பனகால் ராஜா ஸம்ஸ்கிருதத்தில் நல்ல படிப்புள்ள

---

* இது புரசைபாக்கத்திலுள்ள திரு. மு. சித. அவர்களின் பங்களாவில் நடத்தியது.

வராகையால் நமது சாஸ்திரங்களை ஆதரிக்க வேண்டு மென்று அபிமானமுடையவராக இருந்தார். அவர் இன்னும் சிறிதுகாலமிருந்தால் இன்னும் அதிகமாகச் செய்திருப்பார். ஆயுர்வேத சாஸ்திரம் ஒன்றுதான் சிறிது ஆதரிக்கப்படுகிறது. நமது கணிதம் முதலியவைகளை இன்னும்ராஜாங்கத்தார் ஆதரிக்கவில்லை. அவர்களுடைய நாட்டு சாஸ்திரங்களையே நமது பிள்ளைகளுக்குக் கற்பிக்கிறார்கள். நமது பனகால் ராஜா ஒருவர் மந்திரியானதால்தான் ஆயுர்வேதம் சிறிது கடாக்ஷம் பெற்றது. பனகால் ராஜா பெரிய தர்மத்தைச் செய்தவர். தேஹத்தைப்பற்றி ஆயுர்வேதம் சொல்லுவதுபோல் ஒவ்வொரு விஷயத்திற்கும் ஒரு சாஸ்திரம் இருக்கிறது. வெள்ளைக்கார தேசங்களிலும் பல சாஸ்திரங்கள் இருக்கின்றன. ஆனால் சென்ற 100 வருஷங்களில்தான் அவை அவர்களால் விருத்தி செய்யப்பட்டன. பிற நாடுகளைப் பிடித்து அவர்கள் செல்வத்தில் ஓங்கின பிறகே சாஸ்திர அபிவிருத்திக்காகப் பணத்தைச் செலவிட்டு பலன் அடைந்திருக்கிறார்கள். நமது தேசத்திலும் முன்காலத்தில் பிராம்மணர்களுக்கு மானியங்களைக் கொடுத்து அவர்களைச் சாஸ்திரங்களை ஆராய்ச்சி செய்யும்படி அபிமானித்து வந்தார்கள். நாலாயிரம் வருஷங்களுக்கு முன்னரே, வெள்ளைக்கார தேசங்களில் இப்பொழுது சாஸ்திரங்கள் அடைந்திருப்பதைக்காட்டிலும் அதிக அபிவிருத்தியை நமது தேசத்தில் அடைந்துவிட்டன. நம்முடைய தேஹ ஸௌக்யத்திற்கும் ஆத்ம சிரேயஸிற்கும் அவைதான் சிலாக்கியம். அவைகளைத் தள்ளிவிடக் கூடாது. கிருஷியில் கூட நமது தேச முறையையே அனுஷ்டிக்கவேண்டும். கிருஷியோ, வைத்தியமோ, ஆத்மலாபமோ நமது சாஸ்திரங்களால் பெறக்கூடிய பயன் மற்ற தேச சாஸ்திரங்களால் உண்டாகாது. வெள்ளைக்கார தேசம் சீதள தேசம்;

அதற்குத் தகுந்தபடி வைத்தியமோ சில்பமோ ஏற்பட்டிருக்கின்றன. அவர்கள் மேஜைமேல் ஆஹாரத்தை வைத்துக்கொண்டு சாப்பிடுவார்கள். அதற்குத் தகுந்தபடி வீடுகட்ட அவர்களுடைய சில்பம் ஏற்பட்டது. நாம் இலைபோட்டுக்கொண்டு சாப்பிடுகிறோம். அவர்களுடைய சில்பப்படி நாம் வீடு கட்டும்போது நம்முடைய ஆசாரங்கள் ஸாத்தியப்பட மாட்டா. நம்முடைய கணிதம் வெகு ஸுலபமானது. எண்சுவடி, கீழ்வாய் இலக்கம் முதலியன தெரிந்திருந்தால் ஸுலபமாகக் கணக்குப் போடலாம். பௌண்டன்பேனா, சட்டை முதலியன நமதுதேச கணிதத்திற்கு அவசிய மில்லை. வாயாலேயே கணக்குப் போட்டு விடலாம். நமது நாட்டில் ஒரு வித்தை இல்லையானால்அதைப் பிறரிடமிருந்து எடுத்துக்கொள்ளலாம். நம்மிடம் உள்ள வித்தையைத் தள்ளிவிட்டு பிறரது வித்தையைக் கற்றுக் கொள்ளுதல் சரியில்லை. வீடு கட்டவும் சாகுபடி செய்யவும், வைத்தியம் செய்யவும், கணக்குப் போடவும், பரிசுத்தமாக இருக்கவும், ஜீவன்முக்தன் ஆகவும் நம்மிடம் அதி சிரேஷ்டமான வித்தைகள் இருக்கின்றன. ஸங்கீதத்தில் 2 மேளகர்த்தாதான் அவர்களுக்குத் தெரியும். ஹரிகாம்போதி முதலிய சில ராகங்கள்தான் அவர்களுக்குத் தெரியும். நமது ஸங்கீத சாஸ்திரப்படி 72 மேளகர்த்தாக்களுண்டு; நம்முடைய வித்தைகள் ஏதேனும் மறைந்திருந்தால் அதை அவர்களிடமிருந்து தெரிந்து கொள்ளலாம். நம்முடைய வித்தைகளை அடியுடன் தள்ளிவிடுதல் பெரிய தவறு. மனுஸ்மிருதியில் கன்னிகையின் குணம் நன்றாக இருந்தால் குலம் நல்லதாக இராமற் போனாலும் பாதகமில்லை என்று சொல்லப்பட்டிருக்கிறது. பொன் சாக்கடையில் கிடந்தால் அதை எடுத்துக் கொள்ளக் கூடாதா? அப்படியே வித்தையை நீசனிடமிருந்தும் கிரஹித்துக்

கொள்ளலாம். ஆனால் அவனிடமிருந்துதான் கிரஹிக்க வேண்டுமென்று வைத்துக்கொள்ளக் கூடாது. நமது நாட்டிலுள்ள பள்ளிக்கூடங்களில் நம்மிடமுள்ள இஹலோக சாஸ்திரங்கள், பரலோக சாஸ்திரங்கள் ஆகியவைகளை எடுத்துக் கொண்டு அதிகமாக அவர்களிட முள்ளதைத் தெரிந்துகொள்ளலாம். ஸர்ஜரி அதாவது ரண சிகித்ஸை ஸு௱சுருதம் என்ற சாஸ்திரத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. இந்தக் காலத்தில் எத்தனை விதமான ஆயுதங்கள் ஆஸ்பத்திரிகளில் உபயோகத்திலிருக்கின்றனவோ அத்தனை ஆயுதங்களும் அதில் சொல்லப்பட்டிருக்கின்றன. இங்கிலீஷ் பாஷையில் 'என்ஸைகளோபீடியா பிரிட்டானிகா' என்று ஒரு புஸ்தகமிருக்கிறது. இருபது முப்பது வருஷங்களுக்கு ஒரு முறை அது திருத்தி வெளியிடப்படுகிறது. அதில் ஸகல விஷயங்களையும்பற்றி விஸ்தாரமாகச் சொல்லப்பட்டிருக்கிறது. ஒவ்வொரு சாஸ்திரத்தைப்பற்றிச் சொல்லுகையில் அதன் சரித்திரம் சொல்லப்பட்டிருக்கிறது. எங்கு அது முதலில் தோன்றியது, எந்தக் காலத்தில் தோன்றியது, எந்தக்காலத்தில் யார் அதைப் பிறதேசங்களுக்குக் கொண்டுபோனார்கள் என்ற விவரங்கள் சொல்லப்பட்டிருக்கின்றன. வானசாஸ்திரம், ஜ்யோதிஷசாஸ்திரம், வைத்திய சாஸ்திரம், ரண சிகித்ஸை சாஸ்திரம், கணித சாஸ்திரம், பாஷா சாஸ்திரம், தத்துவ சாஸ்திரம், இலக்கண சாஸ்திரம், விருக்ஷ சாஸ்திரம் ஆகியவைகளை யெல்லாம்பற்றி அதில் சொல்லப்பட்டிருப்பதில், ரண சிகித்ஸை வித்தை இந்தியாவிலேயே முதலில் இருந்ததாகவும், அது அரேபியா வழியாக கிரீஸ் (Greece) தேசத்துக்குப் போனதாகவும், அங்கிருந்து இத்தாலி (Italy) க்குப் போனதாகவும், பிறகு ஐரோப்பா (Europe) நெடுகப் பரவினதாகவும் சொல்லப்பட்டிருக்

கிறது. மற்ற சாஸ்திரங்களும் இந்தியாவில் பூர்வத்தி லேயே இருந்ததாக ஒப்புக்கொள்ளுகிறார்களாயினும், ரண சிகித்ஸையை இந்தியாவிலிருந்தே தெரிந்து கொண்டதாக ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். நம்முடைய வைத்தியமும் வான சாஸ்திரமும் அரபி (Arabic) பாஷை யில் மொழிபெயர்க்கப்பட்டு அங்கிருந்து ஐரோப்பாவுக் குப் போயின. ரணசிகித்ஸையை அவர்கள் அறியவே மாட்டார்கள். இந்தியாவிலிருந்துதான் கற்றுக்கொண் டார்கள். அப்படிப்பட்ட ரணசிகித்ஸை இப்பொழுது ஒருவருக்கும் தெரியாது. காரணம், அரசர்களின் ஆதர வில்லை. நம்முடைய ஜனங்களுக்கு உரிமை வந்துவிடும் போது பனகால் ராஜா சொல்பமாக ஆரம்பித்தது பெரியதாகிவிடும். அந்நிய தேச வித்தையைத் தள்ளக் கூடாது, கிரஹித்துக்கொள்ள வேண்டுமென்று மனு சொல்லியிருக்கிறார். நமது வித்தையைத் தெரிந்து கொள்வதுதான் தேசியக் கல்வி. வித்தைக்குப் பிரயோஜனம் ஆத்மலாபமே. தர்ம சாஸ்திரம் அதற்காகவே ஏற்பட்டிருக்கிறது. ராஜாங்க தர்மங் களைச் சொல்வது அர்த்த சாஸ்திரம். சுக்கிரநீதி, சாணக்கிய தந்திரம் முதலியன அர்த்த சாஸ்திரங்கள். ஒருவன் பாவத்தை மூட்டை கட்டிக்கொள்ளாமல் எப்படிக் கடைத்தேறலாமென்பதையே தர்ம சாஸ்திரம் சொல்லுவது. ஆத்மா எப்பொழுதுமுள்ளது. சரீரம் அநித்யம். சரீரத்தைப்பற்றிச் சொல்லும் சாஸ்திரம் எங்கேயாவது தர்ம சாஸ்திரத்துடன் முரண்படுமானால் தர்ம சாஸ்திரத்தையே பின்பற்றவேண்டும். காட்லிவர் ஆயில் என்ற மருந்தைச் சாப்பிடும்படி வைத்தியர் சொன்னால் தர்ம சாஸ்திரம் அது கூடாதென்கிறது. அந்த இடத்தில் தர்ம சாஸ்திரத்தை எடுத்துக்கொள்ள வேண்டும். ஆத்மாவைக் கெடுத்துக்கொண்டு ராஜாங்க

தர்ம வியவஹாரங்களில் ஈடுபட வேண்டியதில்லை. ஆகையால் அர்த்த சாஸ்திரத்திற்கும் தர்ம சாஸ்திரத்திற்கும் சண்டை வருமானால் அர்த்த சாஸ்திரத்தையே தள்ளிவிட வேண்டும்.

தர்ம சாஸ்திரம் நமது நித்திய நடவடிக்கைகளைச் சொல்லுவது. ஈசுவர ஆஜ்ஞைகளை நிறைவேற்றுவதால் பக்தி செய்து கடைத்தேற தர்ம சாஸ்திரம் வழி காட்டுகிறது.

பகவானுடைய அடிமை என்பதற்காகச் சில அடையாளங்கள் உண்டு. பள்ளிக்கூடங்களில் 'ஸ்கௌட்ஸ்' (Scouts) என்ற கோஷ்டிகள் இருக்கின்றன. அவர்களுக்கு ஓர் அடையாளமுண்டு. கச்சேரியில் ஸேவகனா யிருப்பவனுக்கு டவாலி யுண்டு. ராஜாங்கத்தில் ஸர் பட்டம் பெற்றவர்களுக்கு ஓர் அடையாள முண்டு. இந்தச் சின்னங்களைத் தரித்துக்கொள்ள எவரும் ஸங்கோசப்படுவதில்லை. ஆனால் ஈசுவரனுடைய அடிமை என்பதற் கடையாளமான ருத்திராக்ஷ மாலையையோ துளஸிமாலையையோ தரித்துக்கொள்ள ஸங்கோசப்படுகிறார்கள். ஆத்மாவின் க்ஷேமத்தைப்பற்றிய நூல்கள், வேதங்கள், சாஸ்திரங்கள், ஆகமங்கள், புராணங்கள், இதிஹாஸங்கள் முதலியன. இதிஹாஸங்களும் புராணங்களில் சேர்ந்தவைதான். இவைகளுக்கு மூலம் வேதம். தர்ம சாஸ்திரம் வீட்டில் நாம் எப்படி நடக்கவேண்டுமென்பதையும், குலத்தின் ஒழுக்கத்தையும் சொல்லும். அது ஆசார காண்டம் என்றும், வியவஹார காண்டம் என்றும் இருவகைப்படும். மனு, யாஜ்ஞவல்கியர், பராசரர் முதலிய 18 மஹரிஷிகள் தர்ம சாஸ்திரம் எழுதி யிருக்கிறார்கள். அவைகளுக்கு ஆதாரம் வேதமே. வேதங்களை ஆதாரமாகக்கொண்ட மதங்களுக்கு வைதிக மதங்கள் என்று பெயர். மற்றவை நாஸ்திக மதங்கள். ஜைனம்,

பௌத்தம் முதலியன ஈசுவரனில்லை யென்றோ, வேதம் பிரமாணமில்லை யென்றோ சொல்லுகின்றன. ஜினர், புத்தர் முதலியவர்களின் உபதேசங்கள் அந்த மதங்களுக்கு ஆதாரம். சைவம், வைஷ்ணவம் முதலியன வைதிக மதங்கள். சைவத்திற்கு வைதிக சைவம் என்றே பெயருண்டு. 'வேதநெறி தழைத்தோங்க' என்று பெரிய புராணம் சொல்லுகிறது. 'வேதம் தமிழ் செய்தான் மாறன் சடகோபன்' என்று நம்மாழ்வாரைப் பற்றிச் சொல்லப்பட்டிருக்கிறது. நம்மாழ்வாருக்குத் தான் சடகோபர் என்றும் பெயர். விஷ்ணு கோயிலில் தரிசனமான பிறகு சடகோபம் வைக்கிறார்கள். சடகோபர் பரம பாகவதர்களைத் தலைமேல்கொள்ளுவது என்பது அதன் கருத்து. அவர் பகவத் பாதத்தில் இருக்கிறார். அவரை நமது சிரஸின்மேல் வைக்கிறார்கள். இப்படிப்பட்ட வைதிக ஸமயங்கள் வேதம் முதலிய ஐந்து நூல்களை ஆதாரமாகக் கொண்டவை. வைதிகம் என்று அவைகளுக்குப் பெயர் ஏற்பட்டிருப்பதே யல்லாமல், ஒருவருடைய பெயரைத் தனக்குப் பெயராகப் பெற்றிருக்கவில்லை. கிறிஸ்தவ மதம் கிறிஸ்துவால் ஸ்தாபிக்கப்பட்டது என்பதுபோல், நமது மதம் ஒருவரால் ஸ்தாபிக்கப்பட்டதல்ல. வேதத்தை உணர்த்தவே கிருஷ்ணன் தான் வந்ததாகச் சொல்லுகிறார். அந்த வேதம் அநாதி காலம் தொட்டு வருவது. வேதத்தை மஹரிஷிகளின் ஹிருதயத்தில் ஈசுவரன் தோன்ற வைத்து அவர்கள் மூலம் நமக்கு அருளினார். அவை எப்பொழுது ஏற்பட்டன என்று சொல்ல முடியாது. இப்படிப்பட்ட வேதம் முதலியன நமது ஷண்மதங்களுக்குப் பிரமாணங்கள். வேதம் ஆறு ஸமயங்களுக்குப் பொது.

ஆகமங்கள் அதற்குத் தனியாக ஏற்பட்டிருக்கின்றன. சைவாகமங்கள், அம்பாள் ஆகமங்கள், விஷ்ணு

ஆகமங்கள், கணேசாகமங்கள். குமாரதந்திரம் என வெவ்வேறுண்டு. அந்தந்தத் தெய்வத்தை எப்படிப் பிரதிஷ்டை செய்து எப்படி வழிபடவேண்டுமென்பதை அந்தந்த ஆகமங்கள் சொல்லுகின்றன. சைவாகமங்கள் 28ம் அம்பாள் ஆகமங்கள் 64-ம் இருக்கின்றன. ஒவ்வொரு ஆகமத்திலும் வாமபாகம் என்றும், தக்ஷிணபாகம் என்றும் இரண்டு வகையுண்டு. வலக்கை இடக்கை என்று அவைகளுக்கு அர்த்தம். இப்படி ஆகமங்களில் இரண்டு பிரிவிருப்பதற்குக் காரணம் தர்ம சாஸ்திரம். சிலருக்கு ஆசாரங்களைக் கடுமையாகவும் சிலருக்கு லகுவாகவும் சொல்லி யிருப்பதேயாகும். பிராம்மணன் குடிக்கக் கூடாது. வேறு சிலர் குடிப்பது அவ்வளவு நிந்திதமல்ல. ஆசாரங்கள் சில ஜாதிகளுக்குப் பாரமாக ஏற்பட்டிருக்கின்றன; மாம்ஸம் சாப்பிடக்கூடிய ஜாதியினர்கள்கூட சில மாம்ஸங்களைச் சாப்பிடக்கூடாது என்று சொல்லப்பட்டிருக்கிறது. மாம்ஸம் சாப்பிடுகிறவர்கள் கூட தாங்கள் செய்யும் காரியங்களைப் பகவானுக்கு அர்ப்பணம் செய்து விட்டுச் சாப்பிடும்படி வாம மார்க்க ஆசாரம் ஏற்பட்டது. தக்ஷிணாசாரமாகச் செய்யவேண்டியவர்கள் வாமாசாரமாகச் செய்தால் நிந்திக்கிறார்கள். (வாம மார்க்கம் என்று ஸ்ரீ ஆசார்யர்கள் சொன்னது மதுமாம்ஸங்களை ஈசுவரார்ப்பணம் செய்யும் வழி.) வாம மார்க்கத்தை யனுஸரித்துப் பிராணிகளைக் காவு கொடுப்பதை ஜீவகாருண்ய ஸங்கங்கள் ஆக்ஷேபிக்கின்றன. கசாப்புக் கடைகளில் எத்தனையோ பிராணிகள் கொல்லப்படுகின்றன. அந்தக் கடைகளை இந்த ஜீவகாருண்ய ஸங்கங்கள் மறியல் செய்வதில்லை. ஆனால் ஒரு கிராம தேவதை கோயிலில் பூசாரி கொல்லுவதை மறியல் செய்வார்கள். ஸர்வப் பிராணிகளையும் ஹிம்ஸிக்கக் கூடாதுதான். ஆனால் வேதம் சொல்லியிருப்பதைச் செய்வதில் பக்தியிருந்தால் தோஷம் ஒட்டாது. திருக்கண்ணப்பர் பகவா

னுக்கு மாம்ஸத்தைக் கொடுத்தார். அதை ஸ்வாமி ஏற்றுக்கொண்டார். ஏனெனில் கண்ணப்பருடைய மனதில் பக்தி தான் இருந்தது. தோஷ நினைப்பே யில்லை. பக்தி பூர்வமாகப் பாவமான ஒரு காரியத்தைச் செய்தாலும் தோஷமில்லை. ஆனால் ஜீவகாருண்ய ஸபையார்கள் பிராம்மணன் யாகம் செய்தாலும், பூசாரி காவு கொடுத்தாலும் மறியல் செய்கிறார்கள். கசாப்புக்கடையில் மறியல் செய்ய விடப்படமாட்டார்கள் என்பது அவர்களுக்குத் தெரியும். வெள்ளைக்காரர்களின் ஆஹாரத்துக்காகப் பிரதி தினமும் எத்தனையோ பிராணிகள் கொல்லப்படுகின்றன. இச் சங்கங்கள் அதைப்பற்றி ஏன் கவனிக்கவில்லை? யாகங்களைச் செய்வதிலும் கிராமதேவதை கோயிலில் பிரார்த்தனை நிறைவேற்றுவதிலும் மனதில் கெட்ட எண்ணமில்லை. ஆகையால் பாபமுண்டாகாது. அதிதிக்குப் பசுவைக் கொடுக்கும்படி சாஸ்திரம் சொல்லியிருக்கிறது. அந்த அதிதி அந்தப் பசுவை விஸர்ஜனம் செய்துவிட வேண்டுமென்றும் சாஸ்திரம் சொல்லி யிருக்கிறது. அது தன்னிஷ்டப்படித் திரியும்படி அவன் விட்டுவிடவேண்டும். பிராணிகளிடத்தில் கருணையாலேயே அப்படி விதிக்கப்பட்டிருக்கிறது. சிறுத்தொண்டனார் பிள்ளைக்கறி ஸமர்ப்பித்தார். ஸர்வத்தையும் பரித்தியாகம் செய்துவிட வேண்டுமென்பதையே அது அறிவுறுத்துகிறது.

ஆகமங்களில் நாலு பிரிவுகள் உண்டு. சரியை, கிரியை, யோகம், ஞானம் என்பன. இவைகளைப்பற்றிச் சொல்லுமுன் ஒரு விஷயத்தைச் சொல்லவேண்டும். அநாதியான மதங்கள் எல்லாம் வைதிக மதங்களே. ஆனால் நவீன ஆராய்ச்சிக்காரர்கள் வேதம் வடக்கிலிருந்து வந்ததகாவும் தென்னாட்டில் வேறு நூல் இருந்ததாகவும் சொல்லுவதுடன் ஆரியர்கள் வைதிகர்கள் என்

றும், திராவிடர்கள் தென்னாட்டினர் என்றும் சொல்லி ஒரு சண்டையைக் கிளப்பி விடுகிறார்கள். வடமொழியில் ஒன்பது இலக்கண மிருந்ததாகச் சொல்லப்பட்டிருக்கிறது. அவைகளில் ஐந்திரம் என்பது ஒன்று. அது இந்திரனால் செய்யப்பட்டது. தமிழிலுள்ள இலக்கணங்களில் எல்லாவற்றிற்கும் புராதனமாகிய தொல்காப்பியம் ஐந்திரத்தை யனுஸரித்துஇயற்றப்பட்டதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. வைதிக ஸமயந் தவிர வேறு ஸமயமிருந்ததாக நமது நாட்டு நூல்களைக் கொண்டு சொல்லுவதற்கில்லை. சில தமிழ்ச் சொற்களே அதை விளக்குகின்றன. யாகம் என்பதை வேள்வி என்ற தமிழ்ச்சொல் உணர்த்துகிறது. வேதத்திற்கு மறை என்று பெயர். ஆசாரத்திற்கு ஒழுக்கமென்று பெயர். மறை என்பது எப்படி வேதம் என்ற பொருளைத் தருகிறது. வேதம் அதிருஷ்டமான—அதாவது கண்ணிற்குத் தெரியாத—அதாவது மறைந்திருக்கிற—பிரயோஜனத்தைச் சொல்வது. ஆகையால்தான் வேதம் மறை என்று சொல்லப்பட்டிருக்கிறது. அநாதியாக இப்பதங்கள் தமிழில் இருந்திருக்கின்றன. ஆகையால் அவை குறிக்கும் விஷயங்களும் அநாதியாக இருக்கின்றன வென்று அறியப்படும். பழைய தமிழ் நூல்களில் வேதங்களையும் யாகங்களையும் பரமசிவனையும்பற்றி ஏராளமாகச் சொல்லப்பட்டிருக்கையில் வேதம் வடக்கிலிருந்து வந்ததாகச் சொல்லுவது சரியல்ல. ஆகமம் சரியை, கிரியை, யோகம், ஞானம் என்பவைகளைப்பற்றிச் சொல்லுகிறதென்றேன். சரியை ஈசுவர பக்தியுள்ளவன் செய்ய வேண்டிய காரியங்களைச் சொல்லுவது. கிரியை என்ற பாகத்தில்தான் ஆலயம் சொல்லப்பட்டிருக்கிறது. ஸ்வாமி எங்கும் இருக்கிறார்; அவரை ஒரு கல்லில் வைப்பானேன் என்று கேட்கலாம். எங்கும் அவர் இருப்ப

தாகச் சொல்லுகிருேமாயினும் எங்கும் அவர் இருக்கிருர் என்ற நினைவு மனதில் இல்லை. ஸ்வாமி எங்கு மிருக்கிருர் என்ற எண்ணம் இருந்துவிடின் பொய் சொல்லுவாஞ, கெட்ட காரியம் செய்வாஞ? எங்குமவர் இருப்பது உண்மையே. அவர் இருப்பது மாத்திரம் நமக்குப் போதாது. அவருடைய அருளைப் பெறவேண்டும. அதற்கு அவரை எப்படி உபாஸிப்பது? அதைத்தான் ஆகமம் சொல்லுகிறது. ஸூரியகிரணம் இருக்கிறது. ஒவ்வொரு கிரணமும் நெருப்பே. ஆனல் ஒரு துணியை வெயிலில் காட்டினுல் அதில் தீ பற்றிக்கொள்ளவில்லை. லென்ஸ் என்ற பூதக் கண்ணுடியை வெயிலில் காட்டி அதன் கீழ் ஒரு துணியைப் பிடித்தால் அதில் தீ பற்றிக் கொள்ளுகிறது, பூதக்கண்ணுடி அநேக கிரணங்களை ஒருமிக்கக் குவிக்கிறது. மின்சார சக்தி (எலக்ட்ரிஸிடி) எங்கு மிருக்கிறது. அதை வெளிப்படுத்த ஒரு சக்தி ஸ்தாபனம் ஏற்படுத்த வேண்டியிருக்கிறது. அப்படியே எங்குமுள்ள ஈசுவரனுடைய அருள் நமக்குக் கிடைக்கும்படி செய்ய ஆலயம் அவசியமாக இருக்கிறது. ஆலயம் கட்ட உததேசிக்கப்பட்ட நிலத்தை முதலில் உழவேண்டும். முதலில் மூர்த்தி பிரதிஷ்டை, பூஜை முதலியன சொல்லப்பட்டிருக்கின்றன. குருக்கள் அனுஷ்டான மில்லாதவர்களாக இருக்கிருர்களே, யார் உள்ளேபோனுல் என்ன என்று சொல்லுகிருர்கள். அதாவது பாக்கி இருக்கிற ஸ்வாமியையும் வெளியே அனுப்பிவிடுவோம் என்கிருர்கள். கோயிலில் இருக்கிற அனுசாரத்தை நிவர்த்தி செய்யவேண்டுமேயல்லாமல் புது அனுசாரத்தைப் புகுத்தக்கூடாது. ஒரு வீட்டில் திருடன் புகுந்துவிடின் அதற்காகக் கதவைக் கழற்றி எப்பொழுதும் திறந்து கிடக்கும்படி விடுவதுண்டா. ஸாமான்ய அனுசாரங்களினுல் ஸான்னித்தியம் குறைந்துவிட முடியாமல் மஹரிஷிகள் பெரிய க்ஷேத்திரங்களைச் செய்திருக்

கிருர்கள். நிரம்ப சக்தி யிருக்கும்படி செய்திருக்கிருர்கள். ஆகையால்தான் நம்மூரில் கோயிலிருப்பினும், க்ஷேத்திரத்திற்குப் போய்த் தரிசனம் செய்யவேண்டும். இருக்கிற அனுசாரத்தை நிவர்த்திசெய்து கோயிலைப் பரிசுத்த மாக்கவேண்டும். ராஜீய வியவகாரங்களின் பொருட்டு மதத்தை மாற்றக்கூடாது. மின்சார சக்தியுள்ள ஒரு இயந்திரத்தில் நாம் தாறுமாருக் குறுக்கிட்டால் தேஹம் போய்விடும். ஆத்ம க்ஷேமத்தைப்பற்றிய இயந்திரத்தில் குறுக்கிட்டால் ஆத்மா போய்விடும். உள்ளகுறைகளை நிவர்த்தி செய்யமுயற்சி எடுப்பதே கிரமம். ஈசுவரானுக்கிரஹத்தால் கோயிலைப் பற்றி நினைக்கவேண்டிய ஸந்தர்ப்பமேற்பட்டிருக்கிறது. கோயில்களைச் சுத்தமாக வைத்துக்கொள்ள நாம் சிரத்தை எடுத்துக்கொண்டால் குருக்களும் தர்மகர்த்தாக்களும் சரியாகி விடுவார்கள். புதிது ஸ்திரமாகவிராது. ஆடிமாதத்தில் ஆற்றில் வெள்ளம் வரும்போது கரையைச் சில இடங்களில் இடிக்கும். அதைப்பற்றி நாம் கவலைப்படவில்லை. புது ஆவேசத்தைப்பற்றியும் கோபப் படவேண்டாம். அது தானகப் போய்விடும். உலகில் எது ஸ்திரம். ஒவ்வொரு காலங்களில் யதேச்சாதிபதிகள் ராஜ்ய மாண்டிருக்கிருர்கள்; பிறகு வரையறைக்குட்பட்ட அதிகாரமுடைய அரசர்கள் ஆண்டிருக்கின்றுர்கள். இப்பொழுது உலகில் அபேதவாத அரசியல் முறை செல்வாக்கடைந்து வருகிறது. ஒன்றும் ஸ்திரமில்லை. ஆலயங்களில் யாவரும் போகலாமென்று ஏற்பட்டுவிடினும், எல்லோரும போய்விடமாட்டார்கள். இப்பொழுது ஸ்திரீகள் மாதவிடாய் காலத்தில் போகக்கூடாது. போகலாமென்று சொல்லிவிட்டால் எல்லா ஸ்திரீகளும் அப்பேர்ப்பட்ட காலத்தில் போய்விட மாட்டார்கள். ஜனங்களிடத்தில் நாம் போய் எது நியாயமென்பதைச் சொன்

12

ளுல் அவர்கள் கேட்பார்கள். கோயில்கள் சரியாக இருந்தால், அவர்கள் தாங்கள் வரவேண்டுமென்று கேட்கமாட்டார்கள். கோயில்கள் சரியாக இராததற்குக் காரணம் நாம் போகாததே. இப்படிப்பட்ட விஷயங்களையெல்லாம் ஆகமத்தில் கிரியை என்ற பாகம் சொல்லுகிறது.

பிறகு யோகம், ஆத்மா ஈசுவரனிடத்தில் எப்படிக் கலக்கவேண்டு மென்பதைச் சொல்லுகிறது. அவரை எப்படித் தியானம் செய்ய வேண்டுமென்று யோகம் சொல்லுகிறது. பிறகு அங்குள்ள நிலையைச் சொல்லுவது ஞானம். ஆகமம் என்பது இதுதான். தர்ம சாஸ்திரம் நாம் தனியாக நடக்க வேண்டியதையும் பிறருடன் சேர்ந்து நடக்க வேண்டியதையும் சொல்லுகிறது. ஆகமம் உபாஸனைக் கிரமங்களைச் சொல்லுவது. சைவாகமம் 28. ஒவ்வொன்றும் நான்கு பிரிவுகளை உடையது. இவையெல்லாம் ஸ்வதேச சாஸ்திரங்கள். இவைகளை நாம் படிப்பதில்லை. ஆகையால் விழிப்பு மில்லை. படிப்பெல்லாம் வெள்ளைக்காரப் படிப்பு. ஆகையால் அவர்கள் மாதிரி நடக்கவேண்டுமென்ற ஆசை. உள்ளும் புறமும் சுதேசியாக விருப்பதே சுதேசியம். உள்ளே பரதேசியாக விருந்துகொண்டு வெளியில் மாத்திரம் சுதேசிய மெதற்காக? சீர்திருத்தக்காரர்கள் நமது சாஸ்திரங்களை யறியவில்லை. அவைகளைப் படிக்காததால் கோபமண்டைகிருர்கள். அப்படி அவர்கள் செய்வதற்காக நாம் அவர்களிடத்தில் கோபப்படக்கூடாது. எதிர்க்கக்ஷியிடத்திலும் பிரியம் வேண்டும். ஆகமத்தின் கருத்தை நாம் அவர்களுக்குச் சொல்லவேண்டும். ஒருவரும் கவனிக்காதிருந்த ஆகமத்திற்கு இரண்டு மாதங்களாக ஒரு கௌரவம் வந்துவிட்டது. ஆகமத்தைப்பற்றிய பேச்சாகவே இருக்கிறது. மதுரையில் ஒரு ஆகமஸபை ஏற்பட்டிருக்

கிறது. கிராம தேவதைகளைப்பற்றியும் ஆகமத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. அந்தக் கோயில்களில் இன்னும் சக்தி அதிகமாகவே இருக்கிறது. அனுசாரம் அதிகமாக ஏறவில்லை. வெள்ளைக்காரர்கள் பூட்ஸ் காலுடன் சிவன் கோயில், விஷ்ணு கோயில்களுக்குப் போவது போல் கிராமதேவதை கோயில்களுக்குப் போவதில்லை. சிவன் கோயில், விஷ்ணு கோயில்களில் ஐவேஜி அதிகமாக விருப்பதால் வேடிக்கைப் பார்க்க அங்கு வருகிறார்கள். இந்த பிட்ரோமாக்ஸ் (Petromax) விளக்கைப் பாருங்கள். சில இடங்களில் இது வந்துவிடுகிறது. நான் ஸ்நானம் செய்தவுடன் சாராய நாற்றம் வந்துவிடுகிறது. கிராமதேவதை கோயில்களில் பணம் அதிகமில்லை யாகையால் அனுசாரமும் குறைவு. எங்கு ஏற்றம் அதிகமோ அங்கு இறக்க மேற்பட்டுவிடின், மளமளவென்று இறங்கும். தமிழ் நாட்டிலும் தெலுங்கு தேசத்திலுமே ஆசாரம் அதிகம் ஏறின. இப்பொழுது அங்குதான் அனுசாரம் அதிகம். வடதேசத்துப் பிராம்மணன் மீசை வைத்துக்கொண்டிருப்பான், உக்கா குடிப்பான், தலையை மொட்டை யடித்துக்கொண்டாலும் சிகை வைத்துக்கொண்டிருப்பான். நமது தேசத்தில் அடியோடு கத்தரித்து விடுகிறார்கள். வடதேசத்தில் தென்னாட்டு ஆசாரியர்களுடைய சிஷ்யர்கள் இருக்கிறார்கள். இவ்விடத்தியாரின் ஆசாரங்கள் அப்படி ஜனங்களை வசியப்படுத்தி வந்தன. எச்சில், சுருட்டு, உக்கா, மத்ஸ்யம், மாம்ஸம் முதலிய அனுசாரங்கள் தெற்கில் வரவரக் குறைவு. ஆனால் இங்கிலீஷ் ஆசாரம் இங்கு அதிகம். இங்கிலீஷ்காரர்கள் முதலில் இங்கேதானே வந்தார்கள். அவர்களுடைய பழக்க வழக்கங்கள் நம்மிடமே அதிகமாக இருக்கின்றன. வடநாட்டாரிடத்தில் ஆசாரம் குறைவாக இருப்பினும் பக்தி அதிக முள்ளது. குஜராத்தில் சாந்த சுபாவமும் உறுதியும் அதிகம். அது பகவான்

ஸ்ரீ கிருஷ்ணன் இருந்தவிடம். அது கோபிகைகள் பக்தி செய்த நாடு. ஆகையால் பக்தி அதிகம். சிர்திருத்த பக்தி அதிகமுள்ளவர்களாகவு மிருக்கிறார்கள். மஹாராஷ்டிரத்தில் வேகமும் பக்தியு மதிகம். தெலுங்கு தேசத்தில் முரட்டுத்தனமும் பக்தியுமதிகம். வங்காளத்தில் கபடமும் பக்தியு மதிகம். தமிழர்கள் பட்டுக் கொள்ள மாட்டார்கள். மற்றவர்கள் வேலை செய்தால் நாம் ஸமயத்தில் தலைமை வகிப்போம். இங்கு எல்லாரும் புத்திசாலிகளாகையால் ஒருவனைப் பின்பற்ற ஜனங்கள் கிடையாது. கூர்ஜரத்தில் 100-க்கு 70 ஜனங்கள் மாம்ஸம் சாப்பிடமாட்டார்கள். அங்கு வைஷ்ணவர்கள் என்றால் மாம்ஸம் சாப்பிடாதவர்கள் என்று அர்த்தம். நமது தேசத்தில் சைவர்கள் என்றால் மாம்ஸம் சாப்பிடாதவர்கள் என்று அர்த்தம். நமது தேசத்தில் பிராம்மணரல்லாத வைஷ்ணவர்களில் மாம்ஸம் சாப்பிடக் கூடாது என்ற கட்டுப்பாடில்லை.

வேதம், ஆகமம், தர்மசாஸ்திரம், இதிஹாஸம், புராணம் ஆகியவைகளில் ஆத்ம க்ஷேமத்திற்கான வழிகள் சொல்லப்பட்டிருக்கின்றன. எல்லாத் தர்மங்களையும் கதையாகச் சொல்லுவது இதிஹாஸம். ஒவ்வொரு தர்மத்தைக் கதையாகச் சொல்லுவது புராணம். இந்த தர்மங்கள் அநாதியானவை. நமது மதத்திற்கு ஆள் பேரில்லை. நடுவில் வந்த ஆசார்யர்கள் ஒவ்வொரு மார்க்கத்தை வற்புறுத்தினவர்களே. ஸ்ரீ ராமானுஜர் பக்தி பெரிதென்று சொன்னார். ஸ்ரீ சங்கரர் ஞானம் பெரிதென்று சொன்னார். 56 தேசங்களிலும் பூர்வத்தில் இந்த மதமே அனுஷ்டிக்கப்பட்டு வந்தது. 56 தேசங்களில் பாரஸீகம் முதலியனவும் சேர்ந்தவை. இந்த தர்மங்களை ஜனங்கள் ஏற்று அனுஷ்டிக்கும்படி செய்ய வேண்டும். அதற்காகவே ஊரூராகப்போகிறேன். இரு

நூறு பெயர்கள் வந்திருக்கிறார்கள். இதையே அச்சில் போட்டால் ஆயிரக்கணக்கானவர்கள் படிப்பார்கள். ஆனால் நேரில் சொல்லுவதுபோல் பத்திரிகைகளில் போட முடியவில்லை. நேரில் செல்லும்போது ஸ்வரம், முகச்சாயை முதலியன கருத்தை விளக்கும். பத்திரிகைகளில் அந்த ஸாதனங்கள் ஸாத்தியமில்லை. மேலும் நமது பாஷையைக் குருக்கெழுத்தில் எழுதப் பழக்கமுமில்லை. சிலப் பெயர்களாவது இந்த உபந்நியாஸங்களைக் கேட்பதில் ஒரு ஸமயத்தில் பிரயோஜனமேற்படும். வெள்ளத்தில் ஒரு பூவரசிலை மிதந்துகொண்டு போயிற்று. அதில் ஒரு எறும்பு இருந்தது. ஒரு காகம் அந்த எறும்பைக் காக்கவேண்டுமென்று நினைத்து இலையைக் கொத்திக் கொண்டு போய் கரையில் போட்டது. அப்பொழுது ஒரு வேட்டைக்காரன் அந்த காகத்தின் மேல் சுட்டான். எரும்பு காகத்தைக் காப்பாற்ற விரும்பி அவன் காலில் கடித்தது; குறி தவறிப் போய்விட்டதால் காகம் தப்பித்துக்கொண்டது. அப்படி நீங்களும் செய்ய ஸந்தர்ப்பம் நேரும். ஆயிரம் பெயர்களுக்கு அன்னம் போட்டால் ஒருவராவது மஹானாக இருக்கலாம். அவர் சாப்பிடுவதால் சிரேயஸ் உண்டாகலாம் என்று நினைத்து அன்னதானம் செய்வதுபோல் நான் உபதேசம் செய்துகொண்டு போகிறேன். நீங்கள் எல்லோரும் நமது மார்க்கத்தை விட்டுவிடக்கூடா தென்பது எனது ஆசை. ஆத்மஜ்ஞான வழியிலும் சுதேசியாய் இருங்கள். எல்லோரும் ஆலயங்களுக்குப்போய்த் தரிசனம் செய்யவேண்டும்.

---

ஸ்ரீ சந்த்ர மௌளீச்வராய நம:

## ஸ்ரீ காமகோடி கோசஸ்தானத்தின் வெளியீடுகள்

ஒவ்வொரு புத்தகமும் ஸம்ஸ்க்ருத, க்ரந்த மூலமும், தமிழ் அனுவாதமும், பல வர்ணப் படங்களுடனும் ஸ்ரீ ஆசார்யாள் அனுக்ரஹ பூர்வமான ஸ்ரீ முகத்துடனும் கூடியது.

| | | ரூ. | அ. | பை. |
|---|---|---|---|---|
| 1. | ஸ்ரீ விஷ்ணுஸஹஸ்ர நாமஸ்தோத்திரம் ... | 1 | 8 | 0 |
| 2. | ௸ மூலம் மட்டும் ... | 0 | 2 | 6 |
| 3. | ஸ்ரீ பஜ கோவிந்தம் ... ... ... | 0 | 4 | 0 |
| 4. | ஸ்ரீ முகுந்தமாலை ... ... ... | 0 | 6 | 0 |
| 5. | ஸ்ரீ ப்ரச்னோத்ர ரத்னமாலிகா (தெலுங்கில்) ... | 0 | 2 | 6 |
| 6. | ஸ்ரீ தேவீ ஸ்தோத்ர ரத்னாகரம் (ஸ்ரீ ச்யாமளா தண்டகம் முதலிய 12 தேவீ ஸ்தோத்ரங்கள் தமிழ் அர்த்தத்துடன் கூடியது) ... | 0 | 15 | 0 |
| 7. | ஸ்ரீ சீதலாஷ்டகம் ... ... ... | 0 | 2 | 6 |
| 8. | ஸ்ரீ அம்பாஷ்டகம் ... ... ... | 0 | 2 | 6 |
| 9. | ஸ்ரீ ஜம்புநாதாஷ்டகம் ... ... | 0 | 2 | 0 |
| 10. | ஸ்ரீ குலீரேசாஷ்டகம் ... ... | 0 | 2 | 0 |
| 11. | ஸ்ரீ கீதையும், குறளும் ... ... | 0 | 3 | 0 |
| 12. | ஸ்ரீ தயாசதகம் ... ... ... | 0 | 12 | 0 |
| 13. | ஸ்ரீ சிவபாதாதிகேசாந்த ஸ்தோத்திரங்கள் ... | 0 | 12 | 0 |
| 14. | ஸ்ரீ தக்ஷிணாமூர்த்தி அஷ்டகம் ... ... | 0 | 5 | 0 |
| 15. | ஸ்ரீ ரங்கநாதாஷ்டகம் ... ... ... | 0 | 2 | 0 |
| 16. | ஸ்ரீ அத்வைதசித்தாந்த வினாவிடை ... | 0 | 5 | 0 |
| 17. | கும்பகோணம் அத்வைத சபை பொன் விழா நினைவு மாலை— (1) ஸம்ஸ்கிருதம்—51 கட்டுரைகள் அடங்கியது | 5 | 0 | 0 |
| 18. | (2) ஆங்கிலம் —12 ,, ,, ... | 3 | 0 | |
| 19. | ஸ்ரீ ஆர்யா ஷஷ்டி ... ... | 0 | 10 | 0 |
| 20. | திருக்குறள் — பொருட்பாலும், காமத்துப் பாலும்—பாலருரையுடன் ... | 4 | 0 | 0 |
| 21. | ஸ்ரீ சங்கராசார்ய ஸ்வாமிகளின் நன்மொழிகள் 5 பாகங்களாக கூடிய சீக்கிரம் வெளியிடப்படும் | | | |
| | (1) நமது வேதங்களும் சாஸ்திரங்களும் ... | 1 | 0 | 0 |
| | (2) நமது ஆலயங்களும் மூர்த்திகளும் ... | 0 | 12 | 0 |
| | (3) நமது மதம் ... | 0 | 8 | 0 |

ஸ்ரீ ஆதிசங்கரர். ஸ்ரீ ஆசார்யாள் அவர்களின் திவ்ய மூவர்ண படங்கள். ஒவ்வொன்றும் விலை அணா 10.

### ஸ்ரீ காமகோடி கோசஸ்தானம்

57, மேல டபீர் தெரு, கும்பகோணம் | 4, பிரான்ஸிஸ் ஜோஸப்புத் தெரு, சென்னை—1.

T
1892

மகோடி க்ரந்தாவளி : 30

T. 1892

ॐ

श्रीगुरुभ्यो नमः

21 JAN 1953

# நமது ஆலயங்களும் மூர்த்திகளும்

ஸ்ரீ காமகோடி பீடாதிபதிகளான

ஜகத்குரு

ஸ்ரீ சங்கராசார்ய ஸ்வாமிகள்

அருளிய நன்மொழிகள்



श्रीकामकोटिर्विजयते

ஸ்ரீ காமகோடி கோசஸ்தானம்

பிரான்ஸிஸ் ஜோஸப்புத் தெரு,

சென்னை



ஸ்ரீ ஜகத்குரு காஞ்சி காமகோடி பீடாதிபதிகள்

ஸ்ரீ சந்த்ரசேகரேந்த்ர ஸரஸ்வதீ ஸ்ரீ சங்கராசார்யஸ்வாமிகள்

T.1892

ॐ

श्रीगुरुभ्यो नमः

21 JAN 1953

# நமது ஆலயங்களும் மூர்த்திகளும்

ஸ்ரீகாமகோடி பீடாதிபதிகளான

ஜகத்குரு

ஸ்ரீசங்கராசார்ய ஸ்வாமிகள்

அருளிய நன்மொழிகள்



श्रीकामकोटिर्विजयते

ஸ்ரீ காமகோடி கோசஸ்தானம்

பிரான்ஸிஸ் ஜோஸப்புத் தெரு, சென்னை

பதிப்புரிமை] [விலை ரூ. 0-12-0

முதற் பதிப்பு பிப்ரவரி, 1950

Thompson & Co., Ltd., Madras.

T. 1892

॥ श्रीः ॥

यदा यदा हि धर्मस्य ग्लानिर्भवति भारत ।
अभ्युत्थानमधर्मस्य तदात्मानं सृजाम्यहम् ॥

ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதிகளான ஜகத்குரு ஸ்ரீ சங்கராசாரியார் ஸ்வாமிகள், 1932௵ செப்டம்பர் ௴ சென்னைக்கு விஜயம் செய்தார்கள். அச்சமயம் அவர்கள் அருளிய பொன்மொழிகள் இங்கே அளிக்கப்படுகின்றன.

காலவேறுபாட்டால் மக்கள் ஒரு நிலையில் இல்லை. நமது மதங்கள், வேதங்கள், சாஸ்திரங்கள், புராணங்கள் அவற்றின் கொள்கைகள், நாகரிகம் முதலியவற்றின் உண்மைகளைச் சரிவர அறிந்து கொள்ளமுடியாமல் பலவாறு குழம்பி யிருக்கின்றனர். அன்னாரது நன்மைக்காகப் பல விஷயங்களும் எளிதில் விளங்குமாறு, தக்க மேற்கோள்களுடன் உபதேசிக்கப்பட்டுள்ளன.

மக்கள் தங்களது ஆத்ம லாபத்தைக் கருதி நற்பயன் அடையும் முறைகளை மேற்கொள்ள வேண்டுமென்று வேண்டப்படுகிறார்கள்.

ஸ்ரீ காமகோடி கோசஸ்தானம்

# விஷய அட்டவணை


| | | பக்கம் |
|---|---|---|
| 1. | நமது ஆலயங்கள் ... ... | 1 |
| 2. | சிவ பக்தி ... ... ... | 9 |
| 3. | சிவ நாமாவின் பெருமை ... ... | 12 |
| 4. | சிவ நாமோச்சாரணம் ... ... | 22 |
| 5. | தக்ஷிணாமூர்த்தி ... ... ... | 23 |
| 6. | லிங்கோத்பவ மூர்த்தி ... ... | 38 |
| 7. | மஹாலிங்கம் ... ... | 46 |
| 8. | ஸ்ரீ சந்திர மௌளீச்வரி ... ... | 56 |
| 9. | அம்பிகையின் பெருமை ... ... | 60 |
| 10. | அம்பிகை உபாஸனையின் பலன் ... | 71 |
| 11. | அம்பிகை பூஜையின் பிரயோஜனம் ... | 81 |
| 12. | கௌரி பூஜை ... | 85 |
| 13. | பார்த்தஸாரதி ... | 93 |
| 14. | சிவவிஷ்ணு அபேதம்—I ... | 103 |
| 15. | சிவவிஷ்ணு அபேதம்—II ... | 115 |

# நமது ஆலயங்களும் மூர்த்திகளும்

---

## 1. நமது ஆலயங்கள்*

[2—12—1932]

भ्रुवौ भुग्ने किञ्चिद्भुवनभयभङ्गव्यसनिनि
त्वदीये नेत्राभ्यां मधुकररुचिभ्यां धृतगुणम् ।
धनुर्मन्ये सव्येतरकरगृहीतं रतिपतेः
प्रकोष्ठे मुष्टौ च स्थगयति निगूढान्तरमुमे ॥

[ஸௌந்தர்யலஹரீ—47.]

என்பது நம்முடைய ஸ்ரீ ஆசார்யர்கள் செய்த ஸௌந்தர்யலஹரீ என்னும் ஸ்தோத்திரங்களில் ஸாக்ஷாத் அம்பாளுடைய புருவத்தை வர்ணிக்கும் ஒரு சுலோகம். ஸ்ரீ ஆசார்யர்கள் கைலாஸத்திற்குப்போய் மந்திரங்கள் அடங்கியவைகளும் ஆபாதமஸ்தகம் அம்பாளுடைய சரீர வர்ணனைகளடங்கியவைகளுமான நூறு சுலோகமுள்ள ஸௌந்தர்யலஹரியை ஈசுவராநுக்கிரஹத்தால் பஞ்சலிங்கங்களுடன் வாங்கிக் கொண்டுவரும் ஸமயத்தில் நந்திகேசுவரர் தடை செய்தார். அப்படித் தடை செய்து 59 சுலோகங்களை அவர் பிடுங்கிக்கொண்டார். அவரிடமிருந்து உருவிக்கொண்டு வந்த மந்திரங்களடங்கிய 41 சுலோகங்களை எடுத்து வந்தார். தலை முதல் பாதம் வரை வர்ணிக்கும் பாக்கி 59 சுலோகங்களையும ஸ்ரீ ஆசார்யர்கள் செய்தார்கள். அதிலும் மந்திரங்கள் அடங்கி யிருக்கின்றன. அவைகளில் ஸகல லோகங்களுடைய பயத்தை நிவர்த்தி பண்ணும்படியான ரூபத்தை வர்ணிக்கும்படியான சுலோகம் இது.

---

* மாம்பலத்தில் செய்த உபந்யாஸம்

பயத்தை நிவர்த்தி செய்வதற்காகப் புருவத்தைக் கொஞ்சம் நெறிப்பது வழக்கம். ஆகையினுல்தான் 'புவன பயபங்கவ்யஸநிநி' என்று அம்பிகைக்கு விசேஷணம் போடப்பட்டிருக்கிறது. புருவத்தைக் கொஞ்சம் பய நிவர்த்திக்காக நெறிக்கும்பொழுது தநுஸ் மாதிரி வளைகிறது. ஆகையினுல் தநுஸ் மாதிரி இருக்கிறது என்று ஸ்ரீ ஆசார்யர்கள் சொல்லியிருக்கிருர்கள். கோபத்தினுல் புருவத்தை நெறித்தால் இரண்டு புருவங்களும் தூக்கிக் கொள்ளும். அப்பொழுது தநுஸ் மாதிரி இராது. பய நிவர்த்திக்காக ஸாக்ஷாத் அம்பாள் கொஞ்சம் நெறிப்பதால் தநுஸ் மாதிரி வளைகிறது. அப்பொழுது தநுஸ் மாதிரி தோன்றுகிறது. ஆகையினுல்தான் 'ப்ருவௌ புக்நே கிஞ்சித்' என்று ஸ்ரீ ஆசார்யர்கள் சொல்லுகிருர்கள். புக்னம் என்ருல் கொஞ்சம் வளைந்தது என்று அர்த்தம். கண்கள் இரண்டும் காது வரையில் நீண்டிருக்கின்றன. கறுப்பு விழிகள் வண்டுகளின் காந்தியையுடையனவாக இருக்கின்றன. வில் யாருடைய வில் என்ருல் ரதிபதியான மன்மதனுடைய வில். அவன் அழகுக்கு அதிபதியாயிருப்பதால் அவனைச் சேர்ந்த வில்லும் அழகுடையது. அந்த வில்லானது இக்ஷு என்று கவிகள் சொல்லுவது வழக்கம். அந்த வில்லுக்கு நாண்கயிருனது வண்டுகள். ஆகையால் காது வரையில் நீண்டிருக்கிற கண்களின் கருவிழிகள் மன்மதனுடைய வில்லின் நாண் கயிருன வண்டுகள்போல இருக்கின்றன. ஸௌந்தர்ய லஹரியில் இன்ஞேரிடத்தில் मौर्वी मधुकरमयी என்று சொல்லியிருக்கிருர்கள். இந்த நெறித்த புருவத்தை தநுஸாகவும் கண்விழிகளை வண்டுகளாகவும் சொன்னுல் ஒரு சிறிய கஷ்டமிருக்கிறதென்று ஸ்ரீ ஆசார்யர்கள் யோசிக்கிருர்கள். இரண்டு புருவத்திற்கும் நடுவே

யுள்ள பாகமொன்றிருக்கிறது. இரண்டு கண்களுக்கும் நடுவே நாஸாதண்டம் இருக்கிறது. இவை இரண்டும் அவ்வில்லையும் அதன் நாணையும் மறைக்கின்றன. இதைப்பற்றி ஸ்ரீ ஆசார்யர்கள் யோசித்தார்கள்.

அர்ஜுனனுக்குப் பத்து பெயர்கள் உண்டு.

अर्जुनः फल्गुनः पार्थः किरीटो श्वेतवाहनः ।

बीभत्सुर्विजयः कृष्णः सव्यसाची धनंजयः ॥

இந்தப் பத்துப்பெயர்களையும் பெரியோர்கள் மேகம் இடிக்கும் காலத்தில் சொல்லுவது வழக்கம். இடி இந்திர தநுஸாகையால் இந்திர ஸுதனை அர்ஜுன னுடைய பெயரைச் சொல்லுவது வழக்கம். அந்தப் பெயர் களில் ஸவ்யஸாசி என்று ஒரு பெயர் இருக்கிறது. அதற்கு அர்த்தம் இடது கையினுலுங்கூட பாணம் விடக்கூடியவன் என்பது. ஸாதாரணமாக இடதுகையி னுல் வில்லைப் பிடித்துக்கொண்டு பாணத்தை வலது கையினுல் விடுவது வழக்கம். அர்ஜுனனேவென்ருல் வலதுகையினுல் வில்லைப் பிடித்துக்கொண்டு இடது கையினுலும் பாணத்தை விடும் பெருமையுடையவன். அதுபோல மன்மதனும் ஸவ்யஸாசியாக இருக்கிருன். அப்படி வலதுகையினுல் தநுஸைப் பிடித்துக்கொண்டு பாணத்தை விட்டால் எப்படித் தோன்றுமோ அந்த மாதிரி இருக்குமென்று ஸ்ரீ ஆசார்யர்கள் சொல்லுகிருர் கள். முஷ்டி என்ருல் மூடிய கை என்று அர்த்தம். ப்ர கோஷ்டம் என்ருல் மணிக்கட்டின் ஸமீபமான கையின் மேல்புறம் என்று அர்த்தம். 'ஸவ்யேதரகரகிருஹீதம்' என்று சொல்லியிருக்கிருர்கள். ஸவ்யமென்ருல் இவ் விடத்தில் இடது என்று அர்த்தம். ஸவ்யேதர மென் ருல் வலது என்று அர்த்தம். மன்மதன் வலது

லிகையினுல் பிடித்துக்கொண்டிருக்கிற தநுஸாக இவ்விடத்தில் வர்ணிக்கப்பட்டிருக்கிறது. வலது கையினுல் தநுஸைப் பிடித்துக் கொண்டிருக்கும்பொழுதுதான் கைமுஷ்டியானது வில்லையும் ப்ரகோஷ்டமானது நாண் கயிற்றையும் மறைக்கும். இடதுகையினுல் பிடித்துக் கொண்டிருந்தால் அப்படி மறைக்காது. ஆகையால் தான் 'ஸவ்யேதரகரகிருஹீதம்' என்று ஸ்ரீ ஆசார்யர்கள் சொல்லியிருக்கிருர்கள். இரண்டு புருவங்களுடைய மத்யபாகமும் இரண்டு கண்களுக்கு நடுவிலிருக்கிற மூக்கின் அடியும் கைமுஷ்டியையும் மணிக்கட்டையும் ஒத்திருக்கின்றன.

மதுவனமென்று ஒரு க்ஷேத்திரமிருக்கிறது. அதற்குத் தமிழில் நன்னிலமென்று பெயர். அந்த க்ஷேத்திரத்தில் வண்டுகள் மஹாலிங்கத்தைப் பூஜிப்பதாக ஐதிஹ்யம். இன்றுவரையில் தேனடை அந்த ஆலயத்தில் காணப்படுகிறது. ஆகையினுல்தான் அதற்கு மதுவனம் என்று பெயர்.

ஆதியில் கோச்செங்கட் சோழன் என்று ஒரு சோழ அரசன் இருந்தான். கோ என்ருல் கிரீடத்தை உடைய அரசன் என்று அர்த்தம். செங்கண் என்ருல் சிவந்த கண்கள் என்று அர்த்தம். ஸம்ஸ்கிருதத்தில் 'ரக்தாக்ஷசோல' என்றும் சொல்லுவார்கள். அந்த சோழ அரசன் பெரிய சிவபக்தன். அவன் அநேக கோயில் திருப்பணிகளைச் செய்திருக்கிருன். அந்தத் திருப்பணிகளுக்கு யானை யேருத்திருப்பணி என்று பெயர். அதாவது யானை உள்ளே ஏருதிருக்கும்படி குறுகலாகக் கட்டப்பட்டிருக்கிற கோயில்கள் என்று அர்த்தம். இதனுலேயே இதற்கு முன்னுல் யானை போகும்படியாயிருந்தன வென்று தெரிகிறது. ஆதிகாலத்தில் அநேக நதீதீரங்களிலும் வனப்பிரதேசங்களிலும் மரங்களின் அடிகளி

னும் மஹரிஷிகள் மஹாலிங்கத்தை ஆத்மார்த்தமாகப் பூஜை செய்து வந்தார்கள். அந்த ஸமயங்களில் இதர ஜனங்கள் அணுகாமல் இருந்தார்கள். அப்பேர்ப்பட்ட சிவ பூஜைகள் கலியுகத்தில் பரார்த்தமாக உபயோகப்படுவதற்கு அரசர்கள் ஏற்பாடு செய்து ஆகமப்பிரகாரம் திருப்பணிகள் செய்தார்கள். எந்நாளும் பிராம்மணர்களுடைய ஸந்தியாஜபமும் சிவபூஜையும் நடைபெற வேண்டுமென்று அரசர்கள் ஏற்பாடு செய்தனர். அதற்காகவும், ஆத்மார்த்தமாக மஹரிஷிகள் பூஜை செய்து கொண்டிருந்த மஹாலிங்கங்களிருந்த இடத்தில் ஆகமப் பிரகாரம் சிவாலயங்களைக் கட்டி அவைகளுக்காகத் த[illegible]யாக தீக்ஷைபெற்ற சார்பாரை நியமித்தார்கள். த[illegible] சாஸ்த்திரத்தில் பிராம்மணர்கள் பணத்திற்காகப் பூஜை செய்யக் கூடாதென்றிருப்பதனால் ஒரு சார்பாரைத் தீக்ஷை பண்ணிக்கொள்ள ஏற்பாடு செய்தார்கள். ஆகையினால் ஆதியில் இந்தத்தேசத்திலுள்ள சிவாலயங்கள் எல்லாம் மஹரிஷிகளால் ஆத்மார்த்தமான வைதிக பூஜைகளால்பூஜிக்கப்பட்ட மஹாலிங்கங்களாயிருந்துபின் ஆகமப்பிரகாரம் அரசர்களால் கோயில் கட்டப்பட்டு பூஜிக்கப்பட்டு வருகின்றன. ஆகையினால்தான் இப்பொழுதும் ஒவ்வொரு க்ஷேத்திரத்திலும் ஸ்தலவிருக்ஷம் காணப்படுகிறது. தில்லைவனம், தேஜினீவனம் என்ற பெயர்களும் ஏற்பட்டிருக்கின்றன. திருவானைக்காவலில் ஜம்பூ விருக்ஷம், காஞ்சியில் ஆம்ர தரு, மல்லிகார்ஜுனம், புடார்ஜுனம், மத்யார்ஜுனம் இந்த க்ஷேத்திரங்களில் அர்ஜுன விருக்ஷம்; இவைகளெல்லாம் ஸ்தல விருக்ஷங்களாகக் காணப்படுகின்றன.

திருவானைக்காவல் திருப்பணி நடந்த பொழுது ஜம்பூ விருக்ஷத்தின் ஒரே ஒரு பட்டை மாத்திரம் பாக்கி இருந்தது. திருப்பணி செய்த *கானடுகாத்தான் செட்டி

யார்கள் அதுவும் போய்விடுமோ என்று கவலைப்பட்டு அதற்கு ஏகாதசருத்திராபிஷேகம் செய்தார்கள். அந்த மந்திர சக்தியால் அப்பொழுதே அது தளிர்த்து மரமாக களைத்திருக்கிறது. இப்பொழுதும் திருவானைக் காவல் பக்கத்தில் வெண்ணாவல் என்ற ஊர் இருக்கிறது. நாவல் என்று ஜம்பூ விருக்ஷத்தின் பெயர்.

யானையேருத்திருப்பணி என்று ஏன் கோச்செங்கட் சோழன் திருப்பணி செய்யவேண்டும்? யானையின்மேல் அவனுக்குத் துவேஷம் உண்டாயிற்று. பழைய காலத்தில் ஒருவன்மேல் துவேஷமிருந்தால் அவனுக்குச் சிவ பக்தியில்லாமல் போக வேண்டுமென்று சொல்லுவது வழக்கம். அதைத்தான் ஒருவனுக்குச் செய்யும் பெருந் தீங்காக எண்ணினர்கள். ஏன் இந்த அரசனுக்கு யானையின்மேல் துவேஷமுண்டாக வேண்டுமென்றால் அதற்கு ஒரு கதை இருக்கிறது. நாம் ஸ்தலபுராணங்களை நம்ப வேண்டும். ஏதோ சில ஸ்தல புராணங்கள் உத்பத்தி செய்யப்பட்டிருக்கலாமென்று தோன்றுவதனல் எல்லா ஸ்தல புராணங்களும நம்பத்தக்கவை அல்ல என்று எண்ணக்கூடாது.

தேவாரங்களில் ஒவ்வொரு ஸ்தலத்தினுடைய ஐதிஹ்யங்களும் சொல்லப்பட்டுள்ளன. அந்த ஐதிஹ்யங்கள் புராணங்களில் காணப்படுகின்றன. தேவாரங்களுடைய காலமே 1600-வருஷங்களுக்கு மேலே ஆகிறது. அதற்கு முந்தி அநாதியான பிரமாணங்களை வைத்துக் கொண்டு அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். தேவார காலத்திற்குப் பின் வந்தவர்களும் அதே ஐதிஹ்யங்களைச் சொல்லியிருக்கிறார்கள். இப்பொழுதும் அந்த ஐதிஹ்யங்களின் அடையாளங்கள்காணப்படுகின்றன. திருவானைக்காவலில் இப்பொழுதும் ஒரு ஜம்பூ விருக்ஷம, அதன்கீழ் லிங்கம் தும்பிக்கையால் அபிஷேகம் செய்வது போல் பக்கத்தில்

ஒரு யானை, பக்கத்தில் ஒரு சிலந்திப் பூச்சி இவைகளின் ரூபங்களும் செப்புப் பட்டையம் சாஸனம் இவைகளின் முத்திரைகளும் காணப்படுகின்றன. அதேமாதிரி மது... ...த்தில் தேன்கூடும் காணப்படுகிறது. திருவானை... காவலில் இந்த அடையாளம் இருப்பதற்குக் காரண மென்ன வென்றால் ஜம்பூ மஹரிஷி என்பவர் ஆதிகால... தில் அங்கே தபஸ் செய்துகொண்டிருந்தார். அவ... நீண்டகாலம் தபஸ் செய்துகொண்டிருந்ததினால் அவ... மேல் புற்று மூடிக்கொண்டு செடிகொடிகள் முளைத்... ஜம்பூ விருக்ஷம் ஒன்று முளைத்தது. அவர் பூஜித்துவந்... மஹாலிங்கத்தை ஒரு சிலந்தியானது பூஜை செய்... வந்தது. அந்த மஹாலிங்கம் திறந்த வெளியில் இரு... தனால் அதன்மேல் வெயில்படக் கூடாதென்று அ... சிலந்திப் பூச்சி தன் எச்சிலால் நூல் பந்தல் போட்டு கொண்டே இருந்தது. அந்த லிங்கத்தை ஒரு யானையு... தினந்தோறும் தன் துதிக்கையால் காவேரியிலிருந்து தீர்த்தம் கொண்டுவந்து மஹாலிங்கத்துக்கு அபி... பண்ணி பூஜைசெய்து வந்தது. அந்த அபிஷேக... தால் சிலந்தி போட்ட பந்தல் அழிந்துவிட்டது. அதை... கண்டு சிலந்திபூச்சி கோபமடைந்து அதனுடை... துதிக்கையினுள் புகுந்து கடித்துவிட்டது. ஆயர்வேதத்... தில் லூதா விஷமானது விஷங்களுக்குள் மிகக்கொடியது என்று சொல்லபபட்டிருக்கிறது லூதா என்றால் சிலந்தி என்று அர்த்தம். உடனே யானை அந்தச் சிலந்திப் பூச் சியைத் தேய்த்துக் கொன்றுவிட்டு அதன் விஷவேகத்... தால் தானும் இறந்துவிட்டது. அந்தச் சிலந்தியானது கோச்செங்கட் சோழனாக மறுபிறப்பில் பிறந்தது. இறக் கும் ஸமயத்தில் கோபத்தினால் கண் சிவந்திருந்ததனால் சிவந்த கண்களையுடைய சோழனாகப் பிறந்தது. ஆகையி னால்தான் அந்தச் சோழ அரசனுக்கு யானையைக்

ண்டால் மறு பிறப்பிலும் பரமத் துவேஷ முண்டா யிற்று. அதற்காகவே யானை யேருத் திருப்பணிகளாக 70 க்ஷேத்திரங்களில் செய்தான். அவன் பெரிய சிவ பக்தனுக இருந்தான். அவனுடைய சிவபக்தி மஹிமையை ஆழ் வார்கள்கூடப் பெரியதிருமொழியில் சிலாகித்திருக்கி ருர்கள். நாச்சியார் கோயில் விஷ்ணு ஆலயத்தைக் கோச் செங்கணன் நிர்மாணம் செய்தான் என்று சொல் லும்பொழுது பல சிவாலயங்களைக் கட்டினவனென்று சிலாக்கியமாகச் சொல்லியிருக்கிருர்கள்.

முருக்கிலங்கு கனித்துவர்வாய்ப் பின்னைகேள்வன்
மன்னெல்லாம் முன்னவியச் சென்று வென்றிச்
செருக்களத்துத் திறலழியச் செற்ற வேந்தன்
சிரந்துணித்தான் திருவடிநும் சென்னி வைப்பீர்
இருக்கிலங்கு திருமொழிவா யெண்டோ ளீசற்
கெழில்மாட மெழுபதுசெய் துலக மாண்ட
திருக்குளத்து வளச்சோழன் சேர்ந்த கோயில்
திருநறையூர் மணிமாடம் சேர்மின்களே.

பெரிய திருமொழி, 6-6-8.

# 2. சிவ பக்தி *

(11—10—'32)

"सर्वे वेदा यत्पदमामनन्ति" [ஸர்வே வேதா யத்பதம் ஆமநந்தி] முதலிய ச்ருதிகளால் நாம் அறிவது என்ன வென்றால் எல்லா வேதங்களும் யோகிகளும் ரிஷிகளும் மற்றுமுள்ள ஞானிகளும் ஒன்றையே அடைய விரும்பு கிறார்கள். அந்த ஒன்று என்னவென்றால் 'ஓம்' என் பதுதான். ஓம் என்பதைப் பற்றிய விஷயங்கள் மாண் டுக்யோபநிஷத்தில் விரிவாகவும் ஸ்பஷ்டமாகவும் சொல் லப்பட்டிருக்கிறது.

"शान्तम्, शिवम्, अद्वैतं चतुर्थं मन्यन्ते, स आत्मा विज्ञेयः ॥

[சாந்தம், சிவம், அத்வைதம், சதுர்த்தம் மன்யந்தே ஸ ஆத்மா ஸ விஜ்ஞேய:]

அதாவது, அந்த ப்ரமமம் எல்லாம் ஒடுங்கினதும், சிவ மென்று குறிக்கத்தகுந்ததும், இரண்டற்றதும், விசவ தைஜஸப்ராஜ்ஞனுக்கு மேலானதுமாக இருக்கின்றது.

विद्यासु श्रुतिरुत्कृष्टा रुद्रैकादशिनी श्रुतौ ।
तत्र पञ्चाक्षरी तस्यां शिव इत्यक्षरद्वयम् ॥

வேதங்களுள் யஜுர் வேதம் முக்யமானது. அதற் குள் அதன் மத்திய பாகமாகிற நாலாவது காண்டம் முக்யமானது. அதற்குள்ளும் மத்திய பாகமான நாலா வது பிரச்னம் முக்யமானது. அதுதான் ஸ்ரீருத்ரம். அதற்குள்ளும் நமச்சிவாய—[नमः शिवाय] என்ற பஞ்சா க்ஷர வாக்கியம் மத்தியிலிருக்கின்றது. அதன் மத்தியில்

---

* இன்றைய தினம் ப்ரதோஷம்.

"சிவ" என்ற இரண்டு அக்ஷரம் அடங்கியிருக்கிறது. இதையே ஜீவரத்னமென்று பெரியோர்கள் சொல்வார்கள். இந்த அபிப்பிராயத்தை அப்பைய தீக்ஷிதரவாள் ப்ரஹ்மதர்க்க ஸ்தவத்தில் சொல்லியிருக்கிறார்கள். அந்த ப்ரஹ்மம் சிவஸ்வரூபம் என்று தெரிகிறது.

यज्जीवरत्नमखिलागमलालनीयं
ये च त्रिनेत्रमृडशंकरनामधेये ।
एतैरपि स्फुटमनन्यसमाश्रयं ते
विख्याप्यते सकलजीवसुखप्रदत्वम् ॥

[ப்ரஹ்மதர்க்கஸ்தவம்]

அப்படிப்பட்ட ஸ்வரூபத்தை ஆராதிப்பதற்கு அடையாளமாகச் சிவ பக்தர்களெல்லோரும் ஐந்துவித காரியங்களைச் செய்து கொண்டிருக்கவேண்டும். அவைகளாவன :

(1) விபூதி பூசிக் கொள்ளுதல்.

(2) ருத்ராக்ஷம் அணிதல்.

(3) பஞ்சாக்ஷர மந்த்ரத்தை ஜபம் செய்தல். பஞ்சாக்ஷர மந்த்ரம் உபதேசமாகாதவர்கள் 'சிவ' என்ற பதத்தை ஜபம் செய்தல்.

(4) பில்வதளத்தால் பரமேச்வரனைப் பூஜித்தல்.

(5) ஹ்ருதயத்தில் ஸதா சிவத்யானம் செய்தல்.

இவைகளில் ஒவ்வொன்றும் ஈச்வரனுக்கு விசேஷ ப்ரீதியை கொடுக்கக் கூடியது. விபூதி என்றால் ஐச்வரியம் என்றும் அர்த்தம். இது அக்கியில் எரிக்கப்பட்டுச் சுத்தம் செய்யப்பட்டது. இதையே ஈச்வரனும் உடம்பில் பூசிக்கொண்டிருக்கிறார். ருத்ராக்ஷம் என்பது சிவனுடைய மூன்றாவது கண். அவர் ஒருவர்தான்

உலகத்தில் நடுவில் கண்ணுடன் கூடியவர். லக்ஷ்மி உலகத்தில் ஐந்திடங்களில் விசேஷமாக வஸிக்கிருள். அவைகளாவன—பில்வம், பசுவின் பின் பக்கம், பதிவ்ரதையின் ஸீமந்தம், யானையின் மஸ்தகம், பத்மம் ஆகிய இவ்வைந்தாம். லக்ஷ்மிநிவாஸ ஸ்தானங்களுள் பில்வமும் ஒன்று. ஆதலால், அதைக்கொண்டு செய்யும் பூஜையினுல் சிவன் ஸந்தோஷிப்பார். ஆகையால் எல்லோரும் பாஹ்யாராதனம் செய்வதுடன் ஸதா காலமும் சிவஸ்வரூபத்தை ஹ்ருதயத்தில் த்யானம் செய்து கொண்டிருக்க வேண்டியது.

———

## 3. சிவநாமாவின் பெருமை

[*10—11—1932*]

இன்று மஹாப்பிரதோஷமானபடியால் பரமேச்வரனது விஜயத்தைச் சொல்லவேண்டும். வேதத்தின் ஸாராம்சமாக இருப்பது ஸ்ரீருத்ரம். ஸ்ரீருத்திரத்தில் சங்கர ஸ்வரூபத்துக்கு அடுத்தபடியாக சிவஸ்வரூபம் சொல்லப்பட்டிருக்கிறது.

नमः शङ्कराय च मयस्कराय च नमः शिवाय च शिवतराय च ।

[ஸ்ரீருத்ரம்.]

சங்கரவிஜயத்தை இவ்வளவு நாள் சொன்னேன். இனிமேல் பரமேச்வரனைப் பற்றித்தான் சொல்லவேண்டும்.

ஜனங்கள் தெரிந்தும் தெரியாமலும் ஜன்மாந்தரங்களில் பண்ணிய பாபத்தைப் போக்க ஸுலபமான உபாயம் நம் சாஸ்திரத்தில் சொல்லப்பட்டிருக்கிறதா? ஒரே வழிதான் உண்டென்று தெரிகிறது. நாம் சாஸ்திரங்களை நம்புகிறோம். கோயிலுக்குப் போகிறோம். மற்ற மதஸ்தர்களிற் சிலர் 'உங்கள் மதத்தில் பாபத்தைப் பரிஹரிக்க வழி இல்லை எங்களிடம் இருக்கிறது. கொஞ்சம் தீர்த்தம் தெளித்தால் பாபமெல்லாம் போய்விடும். ஆகையால் எங்கள் மதத்துக்கு வாருங்கள்' என்று சொல்லுகிறார்கள்.

அதைக் காட்டிலும் ஸுலபமான மார்க்கம் நமது மதத்தில் இருக்கிறதென்று தெரிந்துகொண்டிருந்தால், கூப்பிடுகிறவர்களைப் பார்த்து, "முதலில் நீங்கள் எங்களைக் கூப்பிடும் பாபத்தைப் பரிஹாரம் பண்ணுங்கள்" என்று சொல்லுவோம். பாப பரிஹாரத்திற்கு

ஸுலபமானவழி பாகவதத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. சுகாசாரியர் ஏழு நாளில் பரீக்ஷித்துக்குப் பாகவதத்தை உபதேசித்தார். அந்தப் பாகவதத்தில் தாக்ஷாயணியின் கதை வருகிறது. அதில் மோக்ஷம் அடைய ஓர் உபாயம் சொல்லப்பட்டிருக்கிறது.

தாக்ஷாயணி என்பது அம்பிகையின் பெயர். பார்வதியாகவருவதற்குமுன்பு தக்ஷனுக்குப்புத்திரியாக அம்பிகை அவதரித்தபொழுது தாக்ஷாயணி என்னும் பெயருடையவளாக இருந்தாள். தக்ஷன் சிவனை நிந்தித்தான். அதனால் அவனுக்குப் பெண்ணாக இருப்பது கூடாதென்று அந்தத் தேஹத்தை விட்டுவிட்டுப் பார்வதியாக அவதரித்தாள்.

தக்ஷன் சிவத்துவேஷம் உடையவனாக இருந்தான். 'சிவ' என்பதற்கு பரம மங்களம் என்பது அர்த்தம்.

श्वःश्रेयसं शिवं भद्रं कल्याणं मङ्गलं शुभम् ।

[அமரகோசம்]

பரிமளம் என்று அப்பைய தீக்ஷிதர் ஒரு கிரந்தம் எழுதியிருக்கிறார். வாசஸ்பதிமிச்ரர் பாமதி என்று ஒரு கிரந்தம் எழுதியிருக்கிறார். அதனுடைய வியாக்கியானம் கல்பதரு என்பது. அதனுடைய வியாக்கியானந்தான் பரிமளமென்பது. அந்தப் பரிமளத்தை ஒருவர் கண்டனம் பண்ணினார். அவர் கண்டனம் பண்ணினாரென்று யாரோ வந்து அப்பைய தீக்ஷிதரிடம் சொன்னார். அப்பொழுது அவர் மூக்கைப் பிடித்துக்கொண்டார். பரிமள கண்டனம் பண்ணினால் அபரிமளந்தானே உண்டாம்! அதுபோல தக்ஷன் சிவ ஸ்வரூபத்தைத் துவேஷித்தான். ஸர்வமங்கள மூர்த்தி சிவன். சிவனிடம் துவேஷம் வந்தால் அவர்களிடம் அசிவந்தான் இருக்கும். அதாவது அமங்களம்

அகல்யாணம் என்பவைதான் இருக்கும். தாக்ஷாயணி தக்ஷனைப் பார்த்துச் சொல்லுகிறாள் :

यद्व्यक्षरं नाम गिरेरितं नृणां
सकृत्प्रसङ्गादघमाशु हन्ति तत् ।
पवित्रकीर्तिं तमलङ्घ्यशासनं
भवानहो द्वेष्टि शिवं शिवेतरः ॥

'என்ன பாபம்! நீ சிவத்துவேஷம் பண்ணுகிறாய். உனக்கு அமங்களந்தான் வந்துசேரும்' என்று சொல்லுகிறாள். இந்த சுலோகத்தில் பின் பாதியில் நல்லது சொல்லியிருக்கிறது. முன் பாதியில் தக்ஷன் ஸமாசாரம். அதை முன்பு சொல்லுவானேன் என்று நினைத்துப் பின் பாகத்திற் சொன்ன விஷயத்தை முன்பு சொல்லுகிறேன்.

இந்த சுலோகம் அம்பிகையின் வாக்கியம். யாராவது முன் காலத்தில் உடன்கட்டை ஏறினால் அவர்களுடைய துணியை வைத்து ஆராதனம் செய்வார்கள். அவர்கள ஆத்மஜ்ஞானியின் நிலையை அடைந்தவர்கள். எல்லாவற்றையும் தியாகம் பண்ணும் சக்தி இருப்பதால் அவர்கள் பூஜிக்கப்படுகிறார்கள். அம்பிகை அந்த நிலையில் இருந்து சொன்னது இது. அந்த ஸமயத்தில் சொன்ன ஸத்தியத்துக்கு விலையேயில்லை. அக்கினி குண்டத்தில் பாதிவிரத்தியத்தைக் காப்பாற்றிக் கொள்ளச் சரீரத் தியாகம் செய்யும் பொழுது சொன்ன வார்த்தையைவிட ஸத்தியமான வேறு வார்த்தை கிடையாது.

மேலே சொன்ன சுலோகத்தை எடுத்துச் சொன்னவர் சுகர்.

பாபத்தை ஒரே க்ஷணத்தில் துவம்ஸம் பண்ணும் ஒரு வஸ்து உண்டு. அந்த வஸ்துவைப் பல இடங்களுக்

குப் போய்த் தேடவேண்டாம். இரண்டு எழுத்துக்களா லான பெயர் அது. ஸகல வேதங்களுக்கும் மத்தியில் இருப்பது அது. அதுவே வேதங்களின் ஜீவரத்னம். கோயிலில் மஹாலிங்கம் போலவும், தேஹத்தில் உயிர் போலவும் அது வேதங்களின் மத்தியில் இருக்கிறது. அதை என்ன பண்ணவேண்டும்? வாக்கினுற் சொல்ல வேண்டும். யார் சொல்லவேண்டும்? மனிதனுகப் பிறந்த வன் சொல்லவேண்டும். ஊமையாக இல்லாத எவனும் சொல்லலாம். அதைச் சொல்லுவதற்காகத்தான் நாக்கு இருக்கிறது. மனிதன் அதைச் சொல்லாவிட்டால் 'நாக் கினுல் செய்யக்கூடியதை இவன் செய்யவில்லை; இவ னுக்கு நாக்குக் கொடுத்தது பிரயோஜனமில்லை' என்று பரமேச்வரன் திரும்பி வாங்கிவிடுவான். ஆகையால் எல்லோரும் அதைச் சொல்லியாகவேண்டும். சண்டாள னும் சொல்லவேண்டும்.

अपि वा यश्चाण्डालः शिव इति वाचं विसृजेत् तेन सह संवसेत् ।

அதை ஒருதரம் சொன்னுற் போதும். ஜாக்கிரதையாகச் சொல்லவேண்டும். வேருெரு காரியத்துக்கு நடுவிலும் சொல்லலாம். சொன்னுல் அந்த க்ஷணத்திலேயே அது பாபத்தைப் போக்கிவிடும்.

இந்த விஷயம் பாகவதத்தில் சொல்லியிருப்பது விசேஷம். சிவ புராணத்தில் சொல்லப்பட்டிருந்தால் ஸ்தோத்திரம் என்று சொல்லிவிடலாம். பாகவதத்தி லேயே விஷ்ணுஸ்தோத்திரம் இருந்தால் அது அவ் வளவு விசேஷமானதல்ல. அதிலும் இது உத்தமஸதி உத்தமமான காலத்தில் சொன்னது. சுகாசார்யர் பரீ க்ஷித்துக்குச் சொல்லும் ஸத்திய வாக்கியம்.

பரமேசுவரனுடைய கீர்த்தியை நாம் வாக்கினல் சொல்லுவதனாலும் கேட்பதனாலும் பவித்திரர்களாகிறோம். அவருடைய ஆஜ்ஞையை யாரும் மீறமுடியாது. அவரால் எல்லாம் சுற்றுகின்றன. அஹம்பாவமாக இருக்கும் பொழுது அவர் சிக்ஷிக்கிறார். குழந்தைகள் ஏதாவது தப்புச் செய்தால் நாம் அடிக்கிறோம். அது போலப் பரமேசுவரன் தேவதைகளைச் சிக்ஷித்தார். காலகூடவிஷம் பாற்கடலில் உண்டானபொழுது அதைச் சாப்பிட்டு அவர்களை ரக்ஷித்தார். ஸகல தேவதைகளும் பரமேசுவரனுடைய குழந்தைகள்.

பரமேசுவரனை நாம் நேரிற் பார்த்து நமஸ்காரம் பண்ண வேண்டாம். அவருடைய நாமாவே போதும். நமக்கு நன்றாகத் தெரிந்தது அது. நம்முடைய மதத்தில் பாப பரிஹாரத்துக்கு ஸுலபமான மார்க்கம் இருப்பதாகச் சொன்னேன். அது இந்த நாம ஸ்மரணந்தான். பிரதோஷ காலத்தில் இந்த நாமாவைச் சொன்னாற் போதும். பெரியவர்கள்—சிஷ்டர்கள் ஸாயங்காலத்தில் இதைச் சொல்லுவது வழக்கம்.

அப்பேர்ப்பட்ட ஸர்வேசுவரன் ஸகல வேத சாஸ்திரங்களின் தாத்பரியமாகிய ஓங்கார ஸ்வரூபமாக இருக்கிறார். ஓங்காரந்தான் எல்லாத் தத்துவங்களுக்கும் முடிவானது.

பரமேசுவரன் ஓங்காரம். ஸ்வரூபப் பிரம்மமும் ஓங்காரந்தான்.

सर्वे वेदा यत्पदमामनन्ति ।

ஸர்வவேதங்களும் ஓங்காரத்தைச் சொல்லுகின்றன. அதனுடைய அர்த்தத்தை விசாரிக்கும் ஓர் உபநிஷத்தே தனியாக இருக்கிறது. அதற்கு மாண்டூக்யோபநிஷத் என்று பெயர். அதில்,

शान्तम्, शिवम्, अद्वैतं चतुर्थं मन्यन्ते ।

என்று சொல்லப்பட்டிருக்கிறது.

சிவஸ்வரூபந்தான் பரப்பிரும்மம். ஸாயங்கால வேளைகளில் சிவத்தியானம் செய்யவேண்டும். பிரதோஷ காலத்தில் ஈசுவரதரிசனம் செய்யவேண்டும். ஈசுவரன் கோயிலில் பிரதோஷ காலத்தில் எல்லாத் தேவர்களும் வந்து ஈசுவர தரிசனம் செய்கிறார்கள்.

பரமேசுவரனுடைய நாமாவாகிய 'சிவ' என்பது வேதத்தின் மத்தியஸ்தானத்தில் இருக்கிறது. ஸாங்கிய ஸூத்திரத்தில் ஈசுவரன் மூன்று கண்ணுள்ளவன் என்று சொல்லப்பட்டிருக்கிறது. அமரமும் அப்படியே சொல்லுகிறது. லோகத்தில் ஈசுவரன் என்ற சப்தம் சிவனுக்கே வழங்கப்படுகிறது. அவன் மஹாபுருஷன்.

क्लेशकर्मविपाकाशयैरपरामृष्टः पुरुषविशेष ईश्वरः ।

[பாதஞ்ஜல யோகஸூத்திரம்]

இஃவாறு பரமேசுவரனுடைய நாமாவின் பெருமை சுருதியில் கர்மகாண்டமாகிய ஸ்ரீருத்ரத்திலும் ஞானகாண்டமாகிய மாண்டுக்யோபநிஷத்திலும் மற்ற ஸூத்திரங்களிலும் புராணங்களிலும் சொல்லப்பட்டிருக்கிறது. பிரம்மஸூத்திரத்தில்,

शब्दादेव प्रमितः ।

(ப்ரஹ்ம ஸூத்ரம்]

என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஈசானன் என்னும் சப்தத்துக்கு எது அர்த்தமோ அதுதான் பரமேசுவர ஸ்வரூபம்.

இவ்வளவுக்கும் பரமதாத்பரியமாக ஒன்று இருக்கிறது. அதுதான் இந்த இரண்டு எழுத்து. 'சிவ'

என்பதையே கொஞ்சம் நீட்டி 'சிவா' என்று சொன்னால் அது அம்பிகையின் பெயராகும்.

या ते रुद्र शिवा तनूरघोरापापकाशिनी । तया नस्तनुवा शंतमया गिरिशन्ताभिचाकशीहि । [ஸ்ரீருத்ரம்]

तस्यैते तनुवौ घोरान्या शिवान्या ।

[தைத்திரீய ஸம்ஹிதை]

என்று வேதம் சொல்லுகிறது. பரமசிவனுக்கு இரண்டு சரீரங்கள் இருக்கின்றன. ஒன்று பரம மங்களஸ்வரூபம். மற்றொன்று எலும்பை அணிந்துகொண்டு ஜடாதாரியாக இருக்கிற ஸ்வரூபம். ஸர்வமங்களா என்பது அம்பாளின் பெயர்.

या ते रुद्र शिवा तनूः शिवा विश्वा ह भेषजी ।
शिवा रुद्रस्य भेषजीं तया नो मृड जीवसे ।

[ஸ்ரீருத்ரம்]

அந்த அம்பாள்தான் உயிர். இந்த இரண்டு ஸ்வரூபங்களும் லோகத்தில் எல்லோருக்கும் பிதாவாகவும் மாதாவாகவும் இருக்கின்றன.

நேற்று ஒரு வைஷ்ணவர் குழந்தையோடும் தாயாரோடும் இங்கே வந்திருந்தார். குழந்தையைப் பார்த்து, "உம்மாச்சித் தாத்தாவுக்கு நமஸ்காரம் செய்" என்று அவர் சொன்னார். உம்மாச்சி என்றால் ஸ்வாமி என்பது அர்த்தம். குழந்தைகளின் பரம்பரையிலே சில வார்த்தைகள் வழங்கி வருகின்றன. அந்த வார்த்தைகள் 2000 அல்லது 3000 வருஷங்களாக வந்துகொண்டிருக்கின்றன. பெரியவர்கள் வார்த்தைகள் மாறும். குழந்தைகள் வார்த்தைகள் மாறா. அந்த உம்மாச்சி என்ற வார்த்தையும் குழந்தைகள் பரம்பரையில் வந்த பழைய வார்த்தை.

ஆனால் அதன் ஸரியான அர்த்தம் தெரியவில்லை. மற்ற மதங்கள் மாறும்—; குழந்தைகள் மதம் மாறாது. உம்மாச்சி என்பது யாரைக் குறிக்கிறது?

ஒரு நாள் மலைக்கோட்டைக்குப் போயிருந்தேன். அங்கே ஒருவரை 'உம்மாச்சு' என்று கூப்பிட்டார்கள். அங்கே உள்ள கோயில் ஸ்ரீபாதந்தாங்கிகள் வாத்திமப் பிராம்மணர்கள். அவர்களில் திருநல்லமென்னும் கோனேரிராஜபுரத்திலிருந்து வந்தவர்கள் இருந்தார்கள். திருநல்லத்தில் ஸ்வாமிபெயர் உமாமஹேசுவரர் என்பது. அந்தப் பெயரை வைத்துக்கொண்டிருந்த உமாமஹேசுவரையர் என்று ஒருவர் அங்கே இருந்தார். அவரைத்தான் 'உம்மாச்சு' என்று கூப்பிட்டார்கள். ஆகவே, உமாமஹேசுவரர் என்பது உம்மாச்சு என்றாயிற்றென்று தெரியவந்தது. அதுவேதான் உம்மாச்சி என்றும் ஆயிற்று. ஆகையால் குழந்தை பாஷையிலிருந்து அவர்களுடைய ஸ்வாமி உமாமஹேசுவரரென்பது தெரிந்தது. அந்த ஸ்வாமி அவர்களுக்கு மாறவில்லை. நாம் எவ்வளவோ மாற்றிக்கொண்டிருக்கிறோம். குழந்தைகளுடைய எண்ணப்படி மிகப் பழைய காலத்திலிருந்து ஸ்வாமியாக எண்ணப்பட்டு வந்தவர் உமாமஹேசுவரர் என்று தெரிகின்றது. குழந்தைகளால் சொல்லப்படும் ஒரு விஷயத்துக்குப் பெருமை அதிகம். குழந்தைதான் தெய்வம். அவர்களிடத்தில் காமக்குரோதங்கள் இல்லை. 'குழந்தையாக இரு' என்று உபநிஷத் சொல்லுகிறது. அதற்கு மோச எண்ணம் இல்லை. கபடம் இல்லை. அவைகளெல்லாம் இல்லாதபோது வருவதுதான் உபநிஷத். உபநிஷத்தும் குழந்தையினுடைய வார்த்தையும் ஒன்றுதான். இந்த இரண்டும் பரமேசுவரனைச் சொல்லுகின்றன. பாகவதமும் அப்படியே சொல்லுகிறது. ஆகையால் நாம் யாவரும் சிவத்தியானம் செய்யவேண்டும். சிவ

நாமோச்சாரணம் செய்யவேண்டும். நல்ல கதியை அடைய ஸுலபமான வழி அதுதான்.

शास्त्रं शारीरमीमांसा देवः श्रीचन्द्रशेखरः ।
गुरुः श्रीशङ्कराचार्यः सन्तु मे जन्मजन्मनि ॥

இந்த உபதேசத்தை நம்முடைய ஆசார்யஸ்வாமிகள் பிரச்னோத்தரரத்னமாலிகா என்ற கிரந்தத்தில் சொல்லி யிருக்கிறார்கள். அதில் ஒரு கேள்வி கேட்கிறார்.

को ब्राह्मणैरुपास्यः? गायत्र्यर्काग्निगोचरः शम्भुः ।

[பிரச்னேத்தரரத்னமாலிகா]

எந்த வஸ்து காயத்ரி, அக்னி, அர்க்கன் என்னும் மூன்றிலும் பிரகாசிக்கிறது? சிவன்தான். காயத்ரியின் பரம தாத்பர்யமாயிருப்பவர் அவரே. சூரியனிடத்தில் பிரகாசிப்பவர் அவர்தாம்.

सौरमण्डलमध्यस्थं साम्बं संसारभेषजम् ।
नीलग्रीवं विरूपाक्षं नमामि शिवमव्ययम् ॥

என்று சொல்லப்பட்டிருக்கிறது.

ஸ்ரீ ருத்ரத்தில் பரமேசுவரன் அக்கினிஸ்வரூபியாக இருக்கிறார் என்று சொல்லப்பட்டிருக்கிறது.

यो रुद्रोऽग्नौ

[ஸ்ரீருத்ரம்]

மூன்றிலும் பரமேசுவரனை ஆராதிக்கவேண்டும்.

ஆகவே நம்முடைய ஸ்ரீ ஆசார்யர்களும் முன் சொன்ன சுலோகத்தில் அந்த உபதேசத்தை செய்திருக்கிறார்கள். 'அடுத்த ஜன்மம் வந்தாலும் சாஸ்திரம் இதுவாக இருக்கவேண்டும். ஸ்வாமி ஸ்ரீ சந்திர மௌளீசுவரராக இருக்கவேண்டும்' என்று அதில் சொல்லப்பட்டிருக்-

கிறது. ஆசார்யர் ஸ்ரீ சங்கராசார்யராக இருக்கவேண்டும். சிவ என்ற இரண்டு அக்ஷரங்களை எப்பொழுது ஸந்தர்ப்பம் நேர்ந்தாலும் உச்சாரணம் பண்ணிக்கொண்டு இருக்க வேண்டும். எந்த ஜன்மம் வந்தாலும் அதை மறக்காமல் இருக்கவேண்டும். அப்படி இருந்தால் ஜன்மமேயில்லாத பரம சாந்த நிலை உண்டாகும்.

---

# 4. சிவநாமோச்சாரணம்

[10—12—1932]

இன்று மஹாப் பிரதோஷம். பிரதோஷ காலத்தில் எல்லோரும் சிவ ஸ்மரணம் பண்ணவேண்டும். மனதினாலும வாக்கினாலும் சிவ என்ற இரண்டு அக்ஷரங்களைத தியானித்துச் சொல்லவேண்டும். நித்தியம் ஸந்தியாகாலம் பிரதோஷ காலமாகும். திரயோதசி ஸந்தியா காலத்தில் இருக்கிறது மஹாப் பிரதோஷமாகும். நித்தியமும் ஸாயங்காலத்தில் ஐந்து நிமிஷமாவது சிவஸ்மரணை பண்ணிக்கொண்டுவர எல்லோரும் ஸங்கல்பம் செய்துகொள்ளவேண்டும். ஆயுஸ் பரியந்தம் பண்ணுவதாக ஸங்கல்பம் செய்துகொண்டு மனதால் ஸ்மரணம் பண்ணிக் கொண்டு வாக்கினால் சிவ நாமாவைச் சொல்லவேண்டும். இப்பொழுது எல்லோரும் சொல்லவேண்டும்.

(சிவநாமோச்சாரணம் எல்லோரும் 5 நிமிஷம் செய்கிறார்கள்)

இதே மாதிரியாக ஒவ்வொரு நாளும் பண்ணிக் கொண்டு வரவேண்டும். அதனால் ஆத்ம சிரேயஸ் உண்டாகும்.

———

21 JAN 1953

# 5. தக்ஷிணாமூர்த்தி

[21—11—32]

இன்றைக்குத் தொள்ளாயிரம் வருஷங்களுக்கு முன்பு உத்தர தேசத்தில் கிருஷ்ணமிச்ரரென்று ஒரு பெரியவர் இருந்தார். கிருஷ்ணாஷ்டபதி செய்த ஜய தேவரும் அவரும் ஸமகாலத்தவர்களென்று சொல்லுகிறார்கள். அந்த கிருஷ்ணமிச்ரர் பிரபோதசந்திரோதயம் என்று ஒரு கிரந்தம் எழுதியிருக்கிறார். பிரபோதம்-ஞானம். ஞானமாகிற சந்திரனுடைய உதயம் என்பது அதன் அர்த்தம். விவேகன் என்பது ஓர் அரசன். அவனுடைய எதிரி மஹாமோஹன் என்பவன். விவேகனுக்கு நல்ல குணங்களெல்லாம் மந்திரிகளாகவும் ஸைந்நியங்களாகவும் இருக்கின்றன. கெட்ட குணங்களெல்லாம் மஹாமோஹனுடைய பரிவாரங்கள். விவேகனுக்குச் சாந்தி என்ற மனைவி மூலமாக பிரபோதன் என்று ஒரு புத்திரன் உண்டாகிறான். இந்த மாதிரி விஷயங்களை வைத்து ஒரு நாடகமாக அதை எழுதியிருக்கிறார். யுத்தம், தூது, மோசம் முதலியவை அந்த நாடகத்தில் வருகின்றன. பிரபோதனுக்குப் பட்டாபிஷேகம் பண்ணுவதோடு பூர்த்தியாகிறது.

அந்த கிரந்தத்தை வடகலை வைஷ்ணவ ஆசாரியராகிய வேதாந்த தேசிகர் என்பவர் கண்டனம்பண்ணி ஸங்கல்ப ஸூரியோதயம் என்று ஒரு நாடகம் எழுதியிருக்கிறார். பிரபோத சந்திரோதயத்திலுள்ள கொள்கைகள் தப்பு என்பது அவருடைய அபிப்பிராயம். ஸூரியோதயத்துக்கு அப்புறம் சந்திரோதயம் இல்லையல்லவா? அதற்காகத் தாம் செய்த கண்டனக் கிரந்தத்துக்கு ஸூரியோதயம் என்று பெயர் வைத்தார். அந்தத் தேசிகர்

மஹா வித்வான். எதிலும் நிரம்ப யோக்கியதை உடையவர். அதனால்தான் ஊரூராக அவருக்கு ஒரு ஸந்நிதி ஏற்படுத்திக் கொண்டாடி வருகிறார்கள். அவருக்கு நிகமாந்த மஹா தேசிகன் என்று பெயர். மத்வாசாரியார் உபயக்ராஸராஹூதயம் என்று ஒரு கண்டனக் கிரந்தம் எழுதினார். ராஹூதயமானால் சந்திரன் ஸூரியன் இரண்டும் போய் விடும் என்பது அவருடைய அபிப்பிராயம். ராஹு சாயாக்கிரஹம். நிழல். கேதுவும் அப்படியே. நவக்கிரஹங்களில் இந்த இரண்டும போனால் பிரதானமாக இருப்பவை ஏழுக் கிரஹங்கள் தாம். இந்த இரண்டுக்கும் தனியான கணனம் வேண்டாம். ஸூரிய சந்திரர்களுக்கு எதிரான கதிதான் இந்த இரண்டினுடைய கதியாகும். சாயை என்பதற்கு இருட்டு என்று அர்த்தம்.

तमस्तु राहुः स्वर्भानुः सैंहिकेयो विधुंतुदः ।

[அமரகோசம்]

என்று அமரம் சொல்லுகிறது.

இருட்டு உண்டானால் பிரகாசத்தை மறைக்கிறது. அந்த அபிப்பிராயத்தை வைத்துக்கொண்டு மத்வாசாரியர் உபயக்கிராஸராஹூதயம் என்று பெயர் வைத்தார்.

முதலில் ஏற்பட்டக் கிரந்தம், சாந்தியும் விவேகமும் உண்டானால் பிரபோதம் உண்டாகிறது என்ற கருத்தைச் சொல்லுவதற்காக ஏற்பட்டது. அதைக் கண்டிக்க வேண்டுமென்று தேசிகருக்குத் தோன்றி அவர் கண்டனம் எழுதினார். பின்பு அதற்கும் கண்டனம் வந்தது. முதல் கிரந்தத்துக்கே ஸூரியோதயம் என்ற பெயர் வைத்திருந்தால் அடுத்தபடி வந்த கண்டனம் ராஹூதயமாக இருக்கும். ஆனால் அவர் இப்படிவரும்

என்று நினைத்து எழுதவில்லை. சந்திரோதயமென்று ஏன் பெயர் வைத்தார்?

உஷ்ணமும் ஒளியும் சேர்ந்தே யிருக்கும். தாபத்தில் நமக்குப் பிரியமில்லை. பிரகாசத்தில் மட்டும் பிரியம் இருக்கிறது. அந்தப் பிரகாசத்தைக் குளிர்ச்சியாகத் தரவேண்டும். சந்திரன் அப்படிச் செய்கிறான். ஞானம் அப்படிப்பட்டது. மற்ற வித்தைகளில் சிரமம், தாபம், அஹங்காரம் முதலியவை ஏற்படுகின்றன. ஆத்மஜ்ஞானத்தைத் தவிரப் பாக்கி எல்லாம் தாபத்தைத் தரும். மனதுக்கு ஆனந்தத்தைத் தருவது பிரபோதம் ஒன்று தான். அதற்குச் சந்திரனை திருஷ்டாந்தமாக அவர் சொன்னார். அந்தப் பெயர் அடிபட்டுப் போகவேண்டும் என்ற நோக்கத்தோடு கண்டனம் செய்தவர் ஸூரியோதயம் என்ற பெயரை வைத்தார். அதில் குளிர்ச்சியில்லாவிட்டாலும் பிரகாசமாவது இருக்கிறது. மத்வாசார்யர் அதைக்கூடப் பார்க்கவில்லை. பெயர் இரண்டுக்கும் விரோதமாக இருந்தாற்போதும் என்று நினைத்து ராஹூதயம் என்று வைத்தார்.

மனதிற்கு ஸந்தோஷத்தைக் கொடுத்து இன்பத்தைத் தருவதனால் ஞானத்தைச் சந்திரனாக கிருஷ்ண மிச்ரர் சொன்னார்.

ஸங்கல்ப ஸூரியோதயத்தில் எதிரி அரசர்களுக்கு ஸைன்யங்களாக டம்பன் முதலியவர்கள் சொல்லப்பட்டிருக்கிறார்கள். டம்பனை 'நீ எந்த ஊர்?' என்று ஒருவர் கேட்கிறார். 'நான் இருப்பது சின்னக் காஞ்சிபுரம் அக்கிரஹாரம்' என்று அவன் சொல்லுகிறான். வேதாந்ததேசிகருக்குத் தாத்தாச்சாரியாரைக் கண்டால் பிடிக்காது. அவர் சின்னக் காஞ்சிபுரத்தில் இருந்தார். அதை நினைத்துக்கொண்டு இப்படி தேசிகர் சொல்லியிருக்கிறார்.

முதலில் தாபத்தை உண்டுபண்ணி ஒரு பிரகாசத்தைக் கொடுப்பது ஸூரியோதயம். தாபத்தைச் சமனம் பண்ணி அப்புறம் உண்டாவதுதான் சந்திரோதயம்.

உஷ்ணமில்லாத பிரகாசத்தைத் தருபவன் சந்திரன். அந்தப் பிரகாசத்தை குளிர்ச்சியோடு கொடுக்கிறான். அவனுக்கு அமிர்தகிரணன் என்பது ஒரு பெயர். ஸூரியகிரணம் சுடும்; சந்திரகிரணம் குளிர்ச்சியாக இருக்கும்.

அத்வைதஸித்தி என்ற ஒரு கிரந்தம் மதுஸூதன ஸரஸ்வதி என்பவர் செய்திருக்கிறார். அதற்கு மத்வமத ரீதியாகத் தரங்கிணீ என்று ஒரு கண்டனம் உண்டு. அத்வைதஸித்திக்கு வியாக்யானம் ஒன்று கௌடதேசத்தில் இருந்த பிரம்மானந்த ஸரஸ்வதி என்பவர் சந்திரிகை என்ற பெயரோடு பண்ணியிருக்கிறார். பெங்களூரில் அநந்தாழ்வார் என்ற தென்கலை வைஷ்ணவர் ஒருவர் இருந்தார். தேசிகரைவிட வித்வத்தில் பெரியவர் என்று அவரைச் சொல்லுவார்கள். அவர் சந்திரிகைக்கு நியாய பாஸ்கரம் என்று ஒரு கண்டனம் எழுதியிருக்கிறார். தேசிகர் சந்திரோதயத்துக்குக் கண்டனமாக சூரியோதயம் எழுதியதை அனுஸரித்து அவர் சந்திரிகையின் கண்டனத்திற்கு நியாயபாஸ்கரம் என்று பெயர் வைத்தார்.

அத்வைத சாஸ்திரத்தில் ஞானத்தைச் சந்திரிகைக்கு ஸமானமாகச் சொல்லுகிறார்கள். மன்னார்குடி மஹாமஹோபாத்யாய பிரம்மஸ்ரீ ராஜு சாஸ்திரிகள் என்ற ஒரு பெரியவர் இருந்தார். அவர் பெரிய சாஸ்திரஜ்ஞர். அவருடைய பாண்டித்தியம் அவருடன் சரியாய்ப் போய்விட்டது. அவர் அந்த பாஸ்கரத்துக்கு ஒரு கண்டனம் எழுதினார். அதற்கு நியாயேந்துசேகரம் என்று பெயர் வைத்தார். சந்திரனை உயர்த்தி வைக்கவேண்டு

மென்ற நோக்கத்தோடு செய்யப்பட்டது அது. இந்து சேகரன் என்பது பரமேச்வரனுடைய பெயர். இந்த இரண்டும் அந்தப் பெயரில் பொருந்தி யிருக்கின்றன. ஈச்வரன் சந்திரனைத் தூக்கி வைத்துக்கொண்டிருக்கிறு ரல்லவா? இந்து சேகரம் என்ற பெயர் பல கிரந்தங் களுக்கு இருக்கிறது. சப்தேந்துசேகரம் என்று வியா கரண சாஸ்திரம் ஒன்று இருக்கிறது. அது மிகவும் உயர்ந்தது. அதைப் படித்தவர்களைச் சேகராந்தம் படித்த வர்களென்று சொல்லிப் பாராட்டுவார்கள். பரிபாஷேந்து சேகரம் என்று ஒரு வியாகரண சாஸ்திரம் இருக்கிறது. இந்துசேகரனுக்குப் பிரியமான பேர்களை உடைய பல வியாக்கியானக் கிரந்தங்கள் இருக்கின்றன. அஸ்தி மாலை, ஸர்வமங்களை என்ற பெயர்களுடைய கிரந்தங்கள் இருக்கின்றன.

பின்னால் வந்த பலவித தடபுடலுக்கும் மூலம் கிருஷ்ணமிச்ரர் பக்தியோடு சாந்தமாகப் பிரபோத சந்தி ரோதயம் எழுதி அஜ்ஞான நிவர்த்தி பண்ணுகிற ஒரு கக்ஷிதான். அவரும் டம்பனைப் பற்றிச் சொல்லியிருக் கிறார். 'நீ எங்கே இருந்து வந்தாய்?' என்று டம்பனைக் கேட்டபொழுது, அவன் 'நான் பிரம்மலோகத்திலிருந்து வருகிறேன்' என்று சொல்லுகிறான். 'அங்கே என்ன விசேஷம்?' 'அங்கே போனேன். பிரம்மா தம்முடைய தொடையிலே உட்கார்த்தி வைக்க யோசனை பண்ணினார். உடனே கோமயத்தைக் கொண்டு தொடையைச் சுத்தி பண்ணினார். உட்கார்ந்தேன். கொஞ்சம் பேசிக்கொண் டிருந்தோம். அப்புறம் வந்துவிட்டேன்' என்று டம்பன் சொல்லுகிறான்.

கிருஷ்ணமிச்ரர் அந்தக் கிரந்தத்தை கக்ஷியில்லாமல் சாந்தத்தோடே எழுதினார். அவர் ஓர் உதயம் எழுதினார். அதிலிருந்து கக்ஷி பிரதிகக்ஷி உண்டாகிப் பலத்துப்

போய்விட்டன. அவர் சாந்தமாகப் பண்ணினார். இப்படி வரப்போகிறதென்று அவருக்குத் தெரியாது. அவர் அந்தக் கிரந்தத்தின் முதலில் ஒரு மங்கள சுலோகம் சொல்லியிருக்கிறார் :

अन्तर्नाडीनियमितमरुल्लङ्घितब्रह्मरन्ध्रं
स्वान्ते शान्तिप्रणयिनि समुन्मीलदानन्दसान्द्रम् ।
प्रत्यग्ज्योतिर्जयति यमिनः स्फष्टलालाटनेत्र-
व्याजव्यक्तीकृतमिव जगद्व्यापि चन्द्रार्धमौलेः ॥

அந்த மங்கள சுலோகம் ஸாக்ஷாத் சந்திரமௌலி விஷயமாக உள்ளது. அந்தக் கிரந்தமானது கேவலம் வைராக்கியப் பிரதானமும் சாந்தப் பிரதானமும் ஆன நாடகமதலால், பரமேச்வரன் சாந்தத்தோடும் வைராக்கியத்தோடும் இருந்த தக்ஷிணாமூர்த்தி அவஸரத்தைப் பற்றி அந்த மங்கள சுலோகததில் சொல்லப்பட்டிருக்கிறது. பரமேசுவரன் ஏகாகியாக யோகதக்ஷிணாமூர்த்தியாக இருந்ததை அதில் சொல்லுகிறார். திருவெட்டீசுவரன்பேட்டை ஆலயத்தில் யோகதக்ஷிணாமூர்த்தி இருக்கிறார். அந்தத தக்ஷிணாமூர்த்தியை அந்த மங்கள சுலோகத்தில் யமி என்று சொல்லியிருக்கிறார். எல்லாவற்றையும் நிக்கிரஹம் பண்ணிகிறவன் யமன். யமியும் எல்லாம் நிக்கிரஹம பண்ணினவன். இருக்கிறபொழுது எல்லாவற்றையும் நிக்கிரஹம் பண்ணுகிறவன் ஸம்யமீ. நமக்கு இரண்டு ஸமயங்களில் நிக்கிரஹம் உண்டாகிறது. தூங்குகிறபொழுது நமக்கு நிக்கிரஹம் இருக்கிறது. அப்பொழுது மதம் முதலியவை இல்லை. செத்துப் போகிறபொழுது நிக்கிரஹம் உண்டாகிறது. சாவும் ஒரு நித்திரைதான. தீர்க்க நித்திரை என்று அதற்கு ஒரு பெயர். ஒருவன் தூங்குகிறபொழுது ஆலோசனை, நினைவு முத

லியவைகளில் ஒன்றுவது இருக்கிறதோ? இல்லை. எங்கே இருக்கிறது என்று தெரியவில்லை. ஆனல் விழித்துக் கொண்ட உடனே எல்லாம் நிறைய வந்துவிடுகின்றன. ஆனல் அவை தூங்கும்பொழுது எங்கே இருக்கின்றன என்று தெரியவில்லை. அந்த மாதிரிதான செத்துப் போகிறபோதுகூட எல்லாம் அடங்கிவிடுகின்றன.

இப்படி, தூங்கும்பொழுதும் சாகும்பொழுதும் அடங்குவது ஸ்வாதீனமாக அடங்குவதல்ல. தூங்கும் பொழுது அடங்குபவை எல்லாம் மறுபடியும் விழிக்கும் பொழுது திரும்பி வந்துவிடுகின்றன. அவை எப்பொழுது திரும்பிவருமோ தெரியாது. சாவிலும் அப்படித்தான். சாகும்பொழுது அடங்கி யிருந்தாலும் வேறொரு தேஹம் வந்தபொழுது அதிகமாக வந்துவிடுகின்றன. அவை ஸ்வாதீனம் இல்லாமல் அடங்கிவிடுவதால், ஸ்வாதீன மில்லாமல் திரும்ப வந்து விடுகின்றன. ஆகையால் அவற்றை ஸ்வாதீனமாக அடக்கவேண்டும். எல்லோரை யும் அடக்குகிறவன் யமன். இந்திரியம் முதலியவைகளை ஸ்வாதீனத்தோடு அடக்குகிறவன் யமீ. நினைவோடே அவைகளை அடக்குகிறவன், கண்ணைப் பார்க்காதே என்று சொன்னல் பாராமல் இருக்கவேண்டும்.

ஸ்வாமி அப்படிச் செத்தவரைப்போல இருக்க வில்லை. ஸூரியனைப் பளீரென்று அடித்துப் பல்லை உதிர்த்தார். பிக்ஷாடனம் பண்ணினர். கூத்தடிக்கிறர். இப்படி நிரம்ப வேலை செய்கிறர். பக்தர்களுக்கு வரம் கொடுத்துவிட்டு ஊரூராகத் திண்டாடுகிறர். நம்முடைய காரியத்துக்காகத்தான் திண்டாடுகிறர். எல்லாம் அடங்கி அவர் இருக்கவில்லை. ஆனாலும் அப்படி அடங்கி இருந்த ஸமயம் ஒன்றுண்டு. ஸ்வாமி எப்பொழுதும் உள்ளே அப்படி இருக்கிறர். உள்ளே அப்படி யிருந் தால் வெளியிலே எப்படி வேண்டுமானாலும் இருக்கலாம்.

வெளி அடக்கம இருந்தால்தான் உள்ளடக்கம் நமக்கு உண்டாகும். திருஷ்டியைக் குறைத்துக்கொள், கூட்டத்திற் சேராதே, இந்திரிய வியாபாரங்களைக் குறைத்துக் கொள் என்று சொல்லுவது அதற்காகத்தான். வெளியிலே அதிகமாகப் பிரவிருத்தி இருந்தால் உள்ளே அடங்காது. அதனால்தான் காட்டுக்குப்போ, பணத்தை வைத்துக்கொள்ளாதே என்று பெரியவர்கள் சொல்லுகிறார்கள். அந்தப் பிரயோஜனம் கிடைத்துவிட்டால் எப்படி வேண்டுமானாலும் இருக்கலாம்.

ஸ்வாமி உள்ளே அடக்கமாக இருக்கிறார்; வெளியிலே கூத்தடிக்கிறார். ஒரு ஸமயம் உள்ளே இருந்தது போல் வெளியில் இருப்பார். பார்வதி கல்யாணத்திற்கு முன் அப்படி ஒரு ஸமயம் இருந்தார். அப்படி இருந்தாரென்று குமார ஸம்பவத்தில் காளிதாஸ மஹாகவி எழுதியிருக்கிறார். பார்வதிக்கு முதலில் திரயம்பகராகத் தரிசனம் கொடுத்தார். மூன்று கண்களையுடைய ஸ்வாமியைப் பார்வதி பார்த்தாள் என்று அந்தக் கவி சொல்லுகிறார்.

நமக்கு இரண்டு கண்களே இருக்கின்றன. அவைகளுக்கு இருப்பது வெளிப்பார்வை. இந்த இரண்டு கண்களைத்தவிர மூன்றாவது கண் ஒன்று உண்டு. அது பரமேசுவரனுக்குத்தான் இருக்கிறது. அதைப்பற்றி பிரபோத சந்திரோதயக்காரர், முன்கூறிய சுலோகத்திற் சொல்லுகிறார். ஸ்வாமி யமியாக இருந்தார். எல்லாவற்றையும் அடக்கிக்கொண்டு இருந்தார். தேஜஸ்—ஆத்மஜ்யோதிஸ்—பிரகாசிக்கிறது. தரிசன மாத்திரத்திலேயே அந்த ஆத்ம தேஜஸ் தெரிகிறது. ஸ்பஷ்டமாக லலாட நேத்திரம் தெரிகிறது. அந்த வியாஜத்தில் ஆத்மஜ்யோதிஸ் தான் பிரகாசிக்கிறது. அந்த ஜ்யோ

திஸ் ஸமஸ்தலோக வியாபகமாக இருக்கிறது. அது எல்லாவற்றிற்கும் ஆதாரம்.

தேஹமத்யநாடி ஸுஷும்ந நாடி. அதில் யோகாப்பியாஸம் பண்ணிக் காற்றைவிட்டு ஆறு சக்கிரங்களின் வழியாக பிரம்மரந்திரம் வரையிற்போய்த் தன் மனதில் சாந்தி என்கிற பத்தினியை வைத்துக்கொண்டால் ஆனந்தம் உண்டாகிறது. மனது சாந்தம் குறையாமல் இருந்தால்—அதாவது சாந்தியென்னும் ஸம்ஸாரம் இருந்தால்—எப்பொழுதும் ஆனந்தந்தான். மற்ற ஸம்ஸாரத்தால் துன்பந்தான் உண்டாகிறது. எவ்வளவு குணம், பக்தி உடையவளாக இருந்தாலும் பக்கத்தில் இருப்பதற்கு பிரதிபந்தகம் ஏற்பட்டால் வருத்தம் உண்டாகிறது. அப்படி யில்லாமல் எப்பொழுதும் மனதில் இருந்துவிட்டால் துக்கமே இல்லை.

ஸ்வாமியினிடம் ஆத்மஜ்யோதிஸ் பிரகாசிக்கிறார். தபஸ்விரூபமாக இருக்கிறார். லோகம் முழுவதும் பிரகாசம் இருக்கிறது; பிரம்மஸ்வரூபமாகக் காணப்படுகிறது. உள்ளே நிறைந்திருக்கும் சாந்தத்தை வெளியிலும் வைத்துக்கொண்டு ஆத்ம நிஷ்டையைப் பண்ணிக்கொண்டு சிஷ்யர்களுக்கு ஞானமுத்திரையைக் காட்டிக்கொண்டு இருக்கிறார். உள்ளே இருக்கிறது வெளியிலும் ஜகத்திற்குத் தெரியட்டுமென்று யோக நிஷ்டையில் இருக்கிறார். பராசக்தியாகிய சாந்தியை மனஸில் வைத்துக்கொண்டு அதனால் நித்தியானந்தத்தோடு இருக்கிறார். லலாடநேத்திரரூபமாக ஆத்ம ஜ்யோதிஸ் பிரகாசிக்கிறது. பின்னால் விவேகனை அரசனாக வைத்து நாடகம் எழுதப்போகிற படியால் இந்த மாதிரி ஸ்தோத்திரத்தை அவர் பண்ணினார்.

அந்த ஸம்யமி யார்? சந்திரமௌலீசுவரர்தான். சந்திரனுக்கு ஸோமன் என்று ஒரு பெயர் உண்டு.

'ஸோமவாரம் இன்றைக்கு. இன்றைக்குச் சந்திர மௌலீசுவரருடைய சிரஸிலிருக்கிற சந்திரனுக்குரிய (Monday) நாள். அஷ்டமியில் அர்த்தசந்திரன் இருப்பான். இன்று அஷ்டமி. சந்திரமௌலீசுவரர் அர்த்த சந்திரனைத்தான் மௌலியில் வைத்திருக்கிறார். அவர் சந்திரார்த்தமௌலி.

இன்று ஒரு விசேஷம். கிருஷ்ணாஷ்டமி. அஷ்டமியில் ராத்திரிதான் சாப்பிடவேண்டும்; திவா உபவாஸம் இருக்கவேண்டும். ஞாயிறு, இரண்டு பர்வகாலங்கள். இவைகளில் ராத்திரி உபவாஸம் இருக்கவேண்டும். சதுர்த்தசி அஷ்டமிகளில் பகலில் சாப்பிடக்கூடாது. இன்று கார்த்திகை ஸோமவாரம். சாப்பிடக்கூடாது. உபவாஸ விசேஷம் இன்றைக்கு ஏற்பட்டிருக்கிறது. இன்றைக்கு அஷ்டமி சந்திரனாகிய அர்த்தசந்திரன் இருப்பதற்குப் பொருந்தியதாக இன்று சொல்ல எடுத்துக் கொண்ட இந்த சுலோகத்திலும் 'சந்திரார்த்தமௌலி' என்று அவர் சொல்லியிருக்கிறார்.

பகவத் கீதையில் இந்த சுலோகத்தை அநுஸரித்து ஒரு சுலோகம் இருக்கிறது.

या निशा सर्वभूतानां तस्यां जागर्ति संयमी ।
यस्यां जाग्रति भूतानि सा निशा पश्यतो मुनेः ॥

[கீதை, 2-69]

அதில் யமி தனியான ஜ்யோதிஸோடு இருக்கிறார் என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஸம்யமி ராத்திரியில் பிரகாசிக்கிறான்; எல்லோரும் எப்பொழுது தூங்குவார்களோ அப்பொழுது விழித்துக்கொண்டிருக்கிறான்; எப்பொழுது எல்லோரும் விழித்துக்கொண்டிருக்கிறார்களோ அப்பொழுது, உள்ளதை உள்ளபடி அறிகிறவனுக்கு இருட்டாக இருக்கும் என்று பகவத்கீதை சொல்லுகிறது.

அவன் கோட்டானைப்போல இருப்பானென்று தோற்று கிறது. இதற்கு என்ன அர்த்தம்? இது ஒரு புதிர் போட்ட மாதிரி இருக்கிறது.

நம்முடைய சாஸ்திரப்படி லோகத்திலுள்ள பதார்த் தங்களெல்லாம் பரமாத்மஸ்வரூபமாகும். அதைத் தவிர இரண்டாவது வஸ்துவே கிடையாது. உபநிஷத், பேதம் இல்லை என்று சொல்லுகிறது. நாம் எந்த மாதிரி பார்க் கிறோம்? வேறு வேருகப் பார்க்கிறோம். நிஜமாகப் பர்க்கும்பொழுது எல்லாவற்றையும் பரமாத்ம ஸ்வரூப மாகப் பார்ப்பான். அப்பொழுது பார்க்கிறவனும் அடங்கிவிடுவான். தானுகப் பார்க்கிறவன் எல்லா வற்றையும் தானுகப் பார்ப்பான். எல்லாம் பரமாத்ம ஸ்வ ரூபம். பரமாத்ம ஸ்வரூபத்தில் பார்க்கிறவனும் ஒருவன். அதனல்தான் வேறு பரமாத்மா ஒன்று இல்லாமல் எல்லாவற்றையும் தானுகப் பார்ப்பான். நாம் பார்ப்பது அவனுக்குப் பொய்யாக இருக்கிறது. வேருகப் பார்த் தால் அவனுக்கு இருட்டு. நாமாகப் பார்க்கிறதை விட்டுவிட்டு வேறே என்று பார்க்கும்பொழுது அவனுக் குத் திண்டாட்டம் ஏற்படுகிறது. வேறே ஒருவன் அடிப் பதுபோல நினை யென்றால் அது நம்மால் முடியும், அவனுல் முடியாது. நாமே அடித்துக்கொள்ளுவதாக நினை யென்றால் அது நம்மால் முடியாது. நமக்கு எல்லாம் வேருகத் தோன்றுகிறது. நாமாகப் பார்ப்ப தென்றால் நமக்கு இருட்டாகிறது. வேருகப் பார்ப்ப தானுல் அவனுக்கு இருட்டாகிறது. மத்தியில் ஒருவர் இருக்கிறார். அவரைத் தடஸ்தர் என்பார்கள். கரையில் இருப்பவர் அவர். காவேரியில் ஒருவன் போகிறுன். வயலில் ஒருவன் உழுதுகொண்டிருக்கிறுன். கரையில் ஒருவன் இருக்கிறுன். அவனுக்கு இரண்டுபேரும்

காணப்படுவார்கள். உழவனைக் கூப்பிட்டுக் காவேரியிற் போகிறவனை எடுக்கச் சொல்லலாம். ஊரிலிருக்கிறவனுக்குத் தானகப் பார் என்றால் இருட்டாகிறது; ஞானிக்கு வேருகப் பார் என்றால்இருட்டாகிறது; ஸ்வாமி இரண்டையும் பார்க்கிறார். தம்மையும் பார்க்கிறார்; வேறே யாகவும் பார்த்துக் காரியமும் பண்ணுகிறார்.

நிலைக்கண்ணாடி ஒன்று இருக்கிறது. அதில் நாம் பார்க்கிறோம். நம்முடைய பிரதிபிம்பம் தோன்றுகிறது. மாடு வந்து பார்க்கிறது. ஏதோ எதிரிமாடு வந்திருக்கிறதென்று நினைத்து முட்டுகிறது; கண்ணாடி உடைந்து போகிறது. நமக்கும் ஒரு எதிரி மனிதன் தோன்றுகிறான்; ஆனால் அது பிரதிபிம்பம் என்பதை அறிகிறோம். அந்த மாதிரிதான் ஸ்வாமியும் இருக்கிறார். நாம் வைத்த கண்ணாடி ரஸம் பூசினது. அதைப்போல ஸ்வாமி இருக்கிறார். நாம் வேறொருவனோடு சண்டை போடுவதாக நினைக்கிறோம். கண்ணாடியில் பார்த்த மாடு போல எண்ணுகிறோம். உண்மையில் நம்மையே நாம் அடித்துக்கொள்ளுகிறோம். மாடுபோல் இருப்பதால் தான் பசு என்ற பெயர் ஜீவர்களுக்கு ஏற்பட்டிருக்கிறது. ஸம்யமி பார்ப்பதற்கும் நாம் பார்ப்பதற்கும் இது தான் வித்தியாஸம். ஸம்யமி பார்த்தால் இது வெறும் பிரதிபிம்பம் என்று எண்ணிவிடுகிறார். நாம் வேறாகப் பார்க்கிறோம்.

பரமேசுவரனாகிய ஸம்யமி நமக்காகப் பார்க்கிறார். ஸ்வாமி ஸம்யமியாக இருந்த அவஸரந்தான் தக்ஷிணாமூர்த்தி. வேறேயாகப் பார்ப்பதால் நமக்குப் பிரகாசமாக இருக்கிறது. ஞானிக்கு இருட்டாக இருக்கிறது. தானகப் பார்ப்பதில் ஞானிக்குப் பிரகாசமாக இருக்கிறது; நமக்கு இருட்டாகிறது. நாம் எப்படிப் பார்க்கிறோமோ

அப்படி லோகம் இருக்கிறது. நம்முடைய திருஷ்டி மூக்குக் கண்ணாடிபோல இருக்கிறது.

முனியாகவும் ஸம்யமியாகவும் பரமேச்வரன் ஓர் அவஸரத்தில் இருந்தார்.

ஞானமார்க்கத்தில் பிரவேசித்த பக்தர்கள் பரமேச்வராராதனையில் பிரார்த்தனை பண்ணுகிற ஒரு சுலோகம் உண்டு.

याचे नाभिनवं ते चन्द्रकलोत्तंस किंचिदपि वस्तु ।
मह्यं देहि च भगवन् मदीयमेव स्वरूपमानन्दम् ॥

[மானஸபூஜை.]

மதுரையில் ஆவணி மூலம் திருநாள் நடக்கிறது. அது பகவான் பிட்டுக்காக மண்சுமந்த தினம். வைகையில் உடைப்படைக்க வேண்டுமென்று மண் சுமந்தார். அப்பொழுது அரசன் பிரம்பினால் அடித்தான். அந்தப் பிரம்படி எல்லோருக்கும் பட்டது. இந்த விஷயத்தைப் பற்றிச் சொல்லும் சிவலீலார்ணவத்தில் இந்த ஸமயத்தில் ஸ்வாமியிடம் சிலபேருக்கு அதிருப்தி உண்டாயிற்றென்றும் அநேகம்பேர் அநேக தினுஸாகப் பேசினார்களென்றும் சொல்லப்பட்டிருக்கிறது.

वेत्राहतिं विभक्तुं विश्वात्मकता प्रदर्शिता भवता ।
करगतकबलग्रासे पुनरभिनीतं शिवाद्वैतम् ॥

[சிவலீலார்ணவம், 21-95

"உன்னுடைய அடியைப் பாகம் பண்ணுவதில் மாத்திரம் நீ விச்வாத்மகன் என்பதைக் காட்டினாய். பிட்டுக் கொடுத்தாளே, அப்பொழுது என்ன செய்தாய், அப்

பொழுது மட்டும் இரண்டாவது இல்லை. சிவாத்வைதம். அடிபட மாத்திரம் எங்கும் தேகம் இருக்கிறதோ?'' என்று ஒருவர் சொன்னார். இப்படிப் பலபேர் பலவிதம் சொன்னார்கள். ஸ்வாமி பக்ஷமாகப் பேசுகிறவர் ஒருவர் வந்தார்.

त्राणे योऽधिकृतः समस्तजगतां तस्याम्बुराशौ सुखं
निद्राणस्य तथाविधेऽपि समये प्रष्टैव नालक्ष्यते ।
विष्टिं कुर्वति ताम्यति श्रमभराद्वेत्राहतिस्त्वय्यभूत्
कस्याग्रे कथयिष्यसीममनयं स्वामिन् अनाथो ह्यसि ॥

[சிவலீலார்ணவம், 21-89]

'நீர் அநாதையாக இருக்கிறீர். வைகையாறு உடைப்பெடுத்துக்கொண்டதென்று அடைக்க வந்தீர். பரிபாலனம் பண்ணவேண்டியது நாராயணருடைய வேலை. அவர் இப்பொழுது ஸமுத்திரத்தில் ஆனந்தமாகத் தூங்குகிறார். எங்கே உடைப்பெடுத்தால் அவருக்கு என்ன! எவ்வளவு ஜலம் ஏறினாலும் அவருக்குத் தெரியாது. பிரளய உபத்திரவம் தெரியாத இடத்தில் அவர் இருக்கிறார். கேட்பார் கிடையாது. இவருடைய உத்தியோகமாயிற்றே, இவர் தூங்கிக்கொண்டிருக்கிறாரே என்று கேட்பார் கிடையாது. மண்கூடையைத் தூக்கமாட்டாமல் தூக்கி நீர் சிரமப்படுகிறீர். உமக்குப் பிரம்படி கிடைக்கிறது. இந்த அநியாயத்தை யார் முன்னிலையிற் போய்ச் சொல்வீர்! நீர் அநாதை. சொல்லுகிறதற்கு உமக்கு மேல் ஒரு நாதன் இல்லை. சொல்லியாவது ஆறலாம். அதற்குக்கூட இடம் இல்லை.' இப்படி அவர் சொன்னார்.

மற்றொருவர் பெரிய மேடையின் மீது ஏறிக்கொண்டார். எல்லோரையும் கூட்டிக்கொண்டார். "இப்பொழுது ஒரு தீர்மானம் பண்ணவேண்டும். இவரே நேரில் இருக்கிறார். தீர்மானம் பண்ணி இவரிடமே கொடுத்துவிட வேண்டும். தபால் மூலம் அனுப்ப (Forward) முடியாது. இப்பொழுதே ஒரு தீர்மானம் பண்ணிவிட வேண்டும். அப்புறம் ஆள் அகப்படமாட்டார். இப்பொழுது பண்ணவிட்டால் துன்பம்" என்று சொல்லிப் பேச (Address பண்ண) ஆரம்பித்தார்.

हे सन्तः शृणुताधुनैव मिलितैरस्माभिरेतच्छिवे
वाच्यं वेत्रहतिं विभज्य न वयं भोक्तुं समर्था इति ।
नो चेत् पादहतिः शिलाप्रहरणं कोदण्डदण्डाहतिः
गण्डूषाम्बुनिषेचनं च सकलं सर्वं विभाज्यं भवेत् ॥

[சிவலீலார்ணவம், 21-83]

"ஏ ஸாதுக்களே! வாருங்கள். அப்புறம் என்று சொல்லாதீர்கள். இப்பொழுது கூடியிருக்கிறோம். என்ன தீர்மானம் பண்ணுவது தெரியுமா? நீர் பிரம்படியைப் பிரித்துக் கொடுத்தீரே; அதை வாங்கிக்கொள்ளத் தயாராயில்லை யென்று அவரிடம் சொல்லவேண்டும். அடிபட்டாலும் நாம் சம்மதிக்க மாட்டோம் என்று சொல்லிவிடவேண்டும்." ஜப்தி பண்ணினாலும் உடனே ஆக்ஷேப மனு கொடுத்தால் பின்னால் வியவஹாரம் சௌகரியம் அல்லவா?

அவர் சொல்லுகிறார்: "இப்பொழுதே கொடுக்காமற் போனால் அப்புறம் நமக்குத்தான் கஷ்டம். இவர் எங்கே பார்த்தாலும் அடிபடுகிற பேர் வழி. இன்னும் ஒருவன்

காலாலுதைப்பான், கல்லாலடிப்பான், வில்லாலடிப் பான், எச்சில் துப்புவான், இத்தனைக்கும் நாமும் பங்காளி யாக நிற்க வேண்டியிருக்கும். எல்லாவற்றுக்கும் பாகத் துக்குப் பாத்தியப்படவேண்டும். தெரிந்தவரைக்கும் இவ்வளவு பேர் அடித்திருக்கிறார்கள். இன்னும் எவ் வளவு பண்ணுவார்களோ-பக்தர்கள்!" என்றார்.

கடைசியாக ஒருவர் வந்தார். ஸ்வாமியிடம் நான் ஒன்று கேட்கிறேனென்று வந்தார். "ஒரு வாணிச்சி யிடம் வெல்லம் போட்ட பிட்டை வாங்கிக்கொண்டு அதற்காக வைகைக் கரையில் மண் கொட்டுகிறே னென்று அடிபட்டீர். என் ஹிருதயகமலத்தில் பக்தி ரஸம் இருக்கிறது. அங்கே வந்து என் மனோபாவத்தைச் சாப்பிட்டு விட்டு ஸம்ஸார பிரவாஹத்தை அடையும். நான் அடிக்க மாட்டேன். ஒன்று கொடுத்தால்தான் பண்ணுகிறதென்று வைத்துக் கொண்டிருக்கிறீர். பக்திரஸத்தையும் மனோபாவத்தையும்கலந்துகொள்ளும்" என்று பிரார்த்திக்கிறார். அப்படியே நாமும் பிரார்த் திப்போம். மனோபவம் போய்விட்டால் யமியினுடைய நிலை உண்டாகி ஆத்மானந்தத்தைப் பெறலாம்.

# 6. லிங்கோத்பவ மூர்த்தி

(11—12—1932)

9 JAN 1938

சிவாலயங்களில் கர்ப்பக்கிருஹத்தின் பச்சிம பாகத்தில் லிங்கோத்பவ மூர்த்தியின் பிம்பம் இருக்கும். ஒவ்வோர் ஆலயத்திலும் இருப்பது ஸம்பிரதாயம். கர்ப்பக்கிருகத்திற்கு வெளியில் பிரதக்ஷிணம் பண்ணினால் தக்ஷிணத்தில் தக்ஷிணாமூர்த்தி இருப்பார். பச்சிமதிக்கில் கர்ப்பக்கிருகத்துக்கு நேர் பின்பக்கத்தில் ஒரு மஹாலிங்கம் இருக்கும். அதற்குள் தீர்க்கவிருத்தமாக அதாவது அண்டாகாரமாக (oval) உள்ள ஒரு இடத்தில் பரமேசுவர ஸ்வரூபம் மான் மழுவுடன் இருக்கும். சிரஸுமாத்திரம் தீர்க்க விருத்தமாக இருக்கும். அந்த ஸ்வரூபத்தில் சிரஸும் தெரியாது. பாதமும் தெரியாது. பாக்கி எல்லாம் லிங்கத்துக்குள் அந்தர்பாவமாக இருக்கும்.

லிங்கோத்பவ மூர்த்தி என்பது பரமேச்வரனுடைய அறுபத்து நான்கு மூர்த்திகளுக்குள் ஒன்று. விருஷபாரூடர், அர்த்த நாரீச்வரர், ஹரி ஹரர், நடராஜ மூர்த்தி, பைரவர், தக்ஷிணாமூர்த்தி, ஸோமசேகர மூர்த்தி, பிக்ஷாடனர், ஊர்த்வ நடனர், ஜலந்தராஸுர ஸம்ஹாரர், கால ஸம்ஹாரர் இப்படி அறுபத்து நான்கு மூர்த்திகள் உண்டு. அவைகளுக்குள் ஒன்று லிங்கோத்பவ மூர்த்தி.

அந்த மூர்த்திதான் சிவாலயத்திலுள்ள லிங்கத்துக்கு நேர் மேற்கே பின்புறம் தீர்க்க விருத்தமாகக் காணப்படும். அதற்குக்கீழே ஒரு வராஹ மூர்த்தி இருக்கும்; மேலே ஹம்ஸரூப மூர்த்தி ஒன்று இருக்கும்.

• ஸ்ரீ ருத்திராபிஷேகம் பண்ணுவதற்கு முன்பு ஒரு தியான சுலோகம் சொல்லிவிட்டு அப்புறந்தான் அபிஷேகம் பண்ணுவது வழக்கம்.

आपातालनभःस्थलान्तभुवनब्रह्माण्डमाविःस्फुर-
ज्ज्योतिःस्फाटिकलिङ्गमौलिविलसत्पूर्णेन्दुवान्तामृतैः ।
अस्तोकाप्लुतमेकमीशमनिशं रुद्रानुवाकाञ्जपन्
ध्यायेदीप्सितसिद्धयेऽद्रुतपदं विप्रोऽभिषिञ्चेच्छिवम् ॥

இந்த சுலோகத்தில் என்ன சொல்லி யிருக்கிறது? பாதாள முதல் ஆகாசபரியந்தம் எல்லையில்லாத அநந்த ஸ்வரூபமாக பிரகாசிக்கின்ற ஸ்படிக லிங்கத்துக்கு அபிஷேகம் பண்ணுகிறேன் என்று சொல்லியிருக்கிறது. ஸ்படிக லிங்கம் நிர்லிப்தமானது. அதற்கு ஒரு வர்ணமும் சொல்ல முடியாது. சுத்தமானது. எந்த வஸ்துவை அதில் வைக்கிறோமோ அதனுடைய பரிணாமத்தை அது அடையும். குணதோஷம் இல்லாதது அது. ஞானம் எப்படி பரிசுத்தமாக இருக்கிறதோ அப்படி அந்த ஸ்படிக லிங்கம் இருக்கிறது. அதன்மேல் பச்சையை வைத்தால் பச்சையாகத் தோன்றும். சிவப்பை வைத்தால் சிவப்பாகத் தோன்றும். அது நிர்விகாரமானது. பரப் பிரம்ம ஸ்வரூபம் நிர்விகாரமாக இருந்தாலும் நம்முடைய மனோ பாவத்தை எப்படி வைக்கிறோமோ அப்படி தோன்றுமென்பதற்கு திருஷ்டாந்தமாக அந்த ஸ்படிக லிங்கம் இருக்கிறது. அது எதையும் மறைக்காது. அதற்கு அப்புறம் உள்ள வஸ்துக்களையும் அதன் வழியாகப் பார்க்கலாம். ஞான ஸ்வரூபமானது ஒன்றையும் வைக்காமற் போனால் சுத்தமாக இருக்கும்

னிர்க்குணமான பரமாத்ம வஸ்துவுக்கு அதுவ் திருஷ்டாந்தம். நினைக்கிற ரூபமாக அது ஆகும்.

அதன் சிரஸில் பூர்ணசந்திரகலை இருக்கிறது. ஸஹஸ்ரார கமலத்தில் சந்திர மண்டலத்தில் ஜ்யோதி ஸ்வரூபத்தைத் தியானம் பண்ணுகிறவர்களுக்கு சந்திர கலையிலிருந்து அமிருதம் ஒழுகுகிறது. அதனால் பரமானந்தம் உண்டாகிறது. ஸமஸ்த பிரபஞ்ச ஸ்வரூபம் அந்த ஜ்யோதி ஸ்வரூபமானது லிங்கந்தான். ஆகையால், அது குளிர்ந்தால் லோகமெல்லாம் குளிரும். ஸர்வ காலங்களிலும் ருத்திர அபிஷேகத்துக்கு முன்பு இந்த சுலோகத்தைச் சொல்லித் தியானம் பண்ணவேண்டும்.

ஸகலப் பிரம்மாண்டமும் சிவலிங்கம். அபிஷேக காலங்களில் இப்படித் தியானம் பண்ணவேண்டும். ஸ்ரீ ருத்திரத்தில் அதுதான் சொல்லப்பட்டிருக்கிறது. ஸர்வ பதார்த்தங்களும், நல்லது கெட்டது எல்லாம்—பகவத் ஸ்வரூபம் என்று தான் ஸ்ரீ ருத்திரம் சொல்லுகிறது. பரம மதுரமாகவும் சீதளமாகவும் உள்ள சந்திர மண்டலத்தைத் தியானம் பண்ணவேண்டும்; பின்பு அபிஷேகம் செய்ய வேண்டும். பதங்களை வேகமில்லாமல் சொல்லவேண்டும். துருதம் என்பது வேகம். துருத காலம் என்பதைத் தான் துரிதகாலம் என்று தப்பாகச் சொல்லுகிறார்கள்.

லிங்கோத்பவ மூர்த்தியின் பெருமை அந்தச் சுலோகத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. ஸ்படிகம் பரிசுத்தத்தைக் காட்டுகிறது. எப்படி எப்படிப் பார்க்கிறோமோ அப்படி அப்படி வந்து அநுக்கிரஹம் பண்ணுவதை அது குறிக்கிறது. ஜகத்முடிய அந்த ஸ்வரூபந்தான். விருத்தத்துக்கு அதாவது வட்டமான ஸ்வரூபத்துக்கு அடி முடியில்லை; ஆதியில்லை, அந்தமுமில்லை. மற்றவைகளுக்

குண்டு. சதுரத்திற்கு உண்டு. இந்த குத்துவிளக்கிற்கு இருக்கிறது. ஆத்யந்தமில்லாத வஸ்து என்பதை லிங்காகாரம் காட்டுகிறது.

அந்த மாதிரி மஹாலிங்கத்தை அபிஷேகம் பண்ணித் தியானம் பண்ணுகிறபோது ஏதாவது ஓர் ஆகாரம் தெரிந்தால்தான் மனதிற்கு ஆநந்தம் உண்டாகிறது. யாராவது பந்துவை நினைக்கிறோம், அவருடைய ஆகாரத்தையும் பார்த்தால் ஸந்தோஷம் உண்டாகிறது. ஒரு மூர்த்திகரத்தோடு அநுக்கிரஹம் பண்ணினால் மனதுக்கு சந்தோஷமாக இருக்கும். ஞானிகளுக்கு பரமாத்ம ஸ்வரூபத்தின் உண்மை தெரியும். ஆகாரத்தைப் பார்த்துப் பார்த்து ஆனந்தம் அநுபவிக்கிறவர்களுக்கு அப்படிக் கண்டால்தான் ஆனந்தம் உண்டாகும். அதற்காகத்தான் லிங்கோத்பவ மூர்த்தியாகப் பகவான் இருக்கிறார்.

பல சிவாலயங்களில் லிங்கோத்பவ மூர்த்தி கர்ப்ப கிருஹத்துக்குப் பின்பு இருக்கிறார். சில இடங்களில் அந்த இடங்களில் மஹாவிஷ்ணு இருப்பதுண்டு. லிங்கோத்பவத்திலும் மஹாவிஷ்ணு வராஹமாக இருக்கிறார்.

அடிமுடி இல்லை என்றேன். அவர் ஜ்யோதிஸ்வரூபமாக நின்றார். அந்த ஸ்வரூபம் (லிங்கோத்பவம்) ஏற்பட்ட ஸ்தலம் அருணாசலம். ஜ்யோதிர்மயமாக இன்றைக்கும் தீபம் ஏற்பட்டிருக்கிறது.

அப்படி ஜ்யோதி ஸ்வரூபமாகப் பரமேசுவரன் நின்றபொழுது விஷ்ணு பாதத்தைப் பார்க்கப் பாதாளத்துக்குப் போனார். பூமியைக் கல்லும் ஸ்வபாவம் வராஹத்திற்கு உண்டு. அந்த ரூபத்தை எடுத்துக்கொண்டார்.

பிரம்மா ஹம்ஸஸ்வரூபமானுர். பக்ஷிக்குப் பறப்பது ஸ்வபாவம். இரண்டு பேருக்கும் தேடிப்போனவை அகப்படவில்லை. ஹம்ஸம் வந்தது. 'நான் கண்டுவிட்டேன்' என்று அபத்தம் சொல்லியது. அதனுல் பிரம்மாவுக்கு பிரத்தியேகமாகப் பூஜை இல்லாமற் போய்விட்டது. பரிவாரமாகமட்டும் வைத்துப் பூஜை செய்வதுண்டு. அந்தப் பிரம்மாவுக்கு அநுகூலமாகத் தாழம்பூ இருந்து பொய் சொல்லிற்று. அதனுல் அது பரமசிவனுக்குக் கூடாதென் றேற்பட்டது. புராண ஐதிஹ்யத்தில் இப்படி இருக்கிறது. பிரம்மா ஹம்ஸரூபமாகப் போயும் சிரஸ் அகப்படவில்லை. விஷ்ணு வராஹரூபமாகப் போயும் பாதம் அகப்படவில்லை. ஆத்யந்த ஹீனமானவர் அவர் என்பதுதான் இதனுல் அறிந்து கொள்ளவேண்டியது. அப்படி உள்ளதைக் காட்டுவதற்காக இந்த விஷயம் அருணுசல க்ஷேத்திரத்தில் ஏற்பட்டது.

முந்நூறு வருஷங்களுக்கு முன் ஒரு பெரிய மஹான் இருந்தார். தஞ்சாவூர் ராஜ்யத்தை அவர் ஸ்தாபித்தார். ஒரு ராஜாவுக்குப் பட்டாபிஷேகம் செய்து வைத்தார். அந்தப் பெரியவர் ஜ்யோதிஷம் பார்த்து ராஜாவாக ஆவார் என்று தெரிந்து அப்படியே பண்ணிவைத்தார். தஞ்சாவூரில் கருடவ்யூஹமாகக் கோட்டை கட்டிப் பேருக்கு அவரை ராஜாவாகவைத்து எல்லாவற்றையும் தாமே கவனித்து வந்தார். ஆலயங்கள் கட்டினுர். வாய்க்கால்கள் வெட்டிப் பூமிக்கு வேண்டிய ஸௌகரியங்களைச் செய்தார். அருணுசல க்ஷேத்திரம் அவர் ராஜ்யத்திற் சேர்ந்திருந்தது. அவர் பெயர் ஐயன் என்பது. வேறு பெயர் இருந்திருக்கலாம். எல்லோரும் ஐயன் என்று மரியாதையாகக் கூப்பிட்டார்கள். அவர் வெட்

டிய குளத்துக்கு ஐயன் குளம் என்று பேர். இப்படியே ஐயன் கோபுரம் முதலியவைகள் அவருடைய பேரால் வழங்குகின்றன. ராஜா செய்ததாக அவரைச் சேர்ந்தவர்கள் சிலபேர் சொல்லுவார்கள். ஆனால் லோகமெல்லாம் ஐயன் செய்ததாகத் தான் சொல்லும். ஐயனுடைய புத்திரர் அருணாசல க்ஷேத்திரத்தில் ராஜா ஒரு குளம் வெட்டி ஒரு கோபுரம் கட்டினதாகச் சொல்லி யிருக்கிறார்.

सरो गभीरं पुरि गोपुरं च यः
समुन्नतं शोणगिरीशितुर्व्यधात् ।
अशक्तयोरङ्घ्रिशिरो विलोकितुं
महापथौ माधववेधसोरिव ॥

[ஸாஹித்யரத்னாகரம்]

கம்பீரமான குளம் ஒன்றை வெட்டி, உன்னதமான கோபுரம் ஒன்றைச் சோணகிரீசருக்குக் கட்டினார் என்று இந்த சுலோகத்தில் அவர் சொல்லுகிறார். எதற்காக அவைகளை உண்டாக்கினார்? மாதவனும் பிரம்மாவும் சேர்ந்து அந்த கிரீசரின் பாதத்தையும் சிரஸையும் பார்க்கப் போனால் அவர்களுக்குக் கொஞ்சதூரம் ஸஹாயம் பண்ணுவதற்குக் கட்டப்பட்டவைபோல அவை இருக்கின்றன என்று உத்ப்ரேக்ஷை பண்ணி யிருக்கிறார். கோபுரம் ஏணிபோல் இருக்கிறது. அதில் கொஞ்ச தூரம் போகலாம். குளம் ஆழமாக இருக்கிறது. அதில் கொஞ்ச தூரம் போய் அப்புறம் தோண்டலாம் அல்லவா?

அருணாசல விஷயம் லிங்கோத்பவத்துக்காக ஆவிர்ப்பவித்தது. அருண ஜ்யோதிஸுக்கு அடையாளமாகப்

பர்வதமும் ஜ்யோதிஸுக்குத் தீபமும் ஏற்பட்டிருக்கின்றன. அந்தப் பரமாத்மாவை கேவலம் ஆத்ரயந்த ரஹிதரென்றும் ஜ்யோதி ஸ்வரூபரென்றும் தியானிக்க வேண்டும். ஸ்படிக லிங்கம் ஸ்வயம் ஜ்யோதிஸுக்கு அடையாளம். அந்த ஜ்யோதி ஸ்வரூபத்தைத் தெரிவிக்கத்தான் கார்த்திகை தீபம் ஏற்பட்டிருக்கிறது. இன்றைக்கு, ஸமயம் நேர்ந்தால் இந்த ஸ்வரூப ஸம்பந்தமான புராணத்தை வாசித்துத் தியானம் பண்ணவேண்டும். இந்த மாதிரி விசேஷங்களெல்லாம் லோகத்திற்கு நன்மை உண்டாகிறதற்காக ஏற்பட்டவை. ஆகையால் ஸ்படிகலிங்கஸ்வரூபமாக உள்ள ஸ்ரீ சந்திரமௌளீச்வரருடைய அநுக்கிரஹத்தைப் பெற்று ஆனந்தத்தை எல்லோரும் அடையவேண்டும்.

# 7. மஹாலிங்கம் *

[26—12—1932]

ஒரு வீட்டைப்பார்த்து இதைக் கட்டியது யார் என்று நாம் கேட்டால் அதைக் கட்டியது ஸமீபத்திலானால் இன்னார் கட்டினார் என்று பதில் சொல்லலாம். முன்னூறு நானூறு வருடங்களுக்குமுன் கட்டப்பட்ட வீட்டை யார் கட்டினார் என்றால், தெரியாது என்று சொல்லுவார்கள். நாய், பூனை முதலியன வீடு கட்டப்பட்டதாகவே அறிந்திருக்க மாட்டா. இப்படியே எப்பொழுதுமிருப்பதாக நினைத்துக் கொண்டிருக்கலாம். ஒரு வண்டியைக் காட்டி அதை யார் செய்தது என்று கேட்டால் இன்ன தச்சன் செய்தானென்று சொல்லலாம்; ஆனால் இந்த வாழை மரத்தை யார் செய்தது என்று கேட்டால் தெரியாது. இது ஸமீபத்தில்தான் உண்டானது. ஆயினும் அதைச் செய்தது யார் என்று நமக்குத் தெரியாது. ஒவ்வொரு பட்டையாக அதில் அடக்கியது யார்? எந்த ஆயுதத்தைக்கொண்டு இது செய்யப்பட்டது? தெரியாது. அந்த மலையை—நக்ஷத்திரங்களை—சந்திரனைச் செய்தது யார்? தெரியாது. அவை வெகு காலமாக இருக்கின்றன. அவை நாட்பட்டவைதான். ஆனால் இந்தப் புஷ்பம் இப்பொழுது உண்டானதே. இரண்டுநாள்முன் சிறுமொட்டாக இருந்தது. இப்பொழுது அழகிய ரோஜாப்பூவாகிவிட்டது. ஒவ்வொரு தளத்திலும் எத்தனையோ நரம்புகள் ஓடிக்கொண்டிருக்கின்றன. ஒரு மிருகம் இந்தப் பட்டணத்தைச் சுற்றிப்பார்த்தால் எவ்வளவு தெரிந்து

---

* இது ஏகாம்ரேசுவரர் அக்ரஹாரத்தில் செய்யப்பட்டது.

கொள்ளுமோ அவ்வளவுதான் பிரபஞ்சத்தைப்பற்றி நாம் தெரிந்து கொள்ளக்கூடியவர்களாக இருக்கிறோம். இவற்றையெல்லாம் தெரிந்துகொண்டு நமக்கு ஆகவேண்டியதென்ன வென்று கேட்கலாம். இந்த அழகான ரோஜாப்பூவைச் செய்தவர் யார் என்று தெரிந்துக் கொள்ளுவதால் நமக்குப் பிரயோஜனமுண்டாகலாம். அவன் மஹாகெட்டிக்காரனாக இருக்கவேண்டும். அவன் இன்னான் என்று தெரிந்துகொண்டால், நமக்கு வேண்டியதை அவனிடத்தில் சொல்லிக்கொள்ளலாம். ஒரு வீட்டில் திருட்டு நடந்து விட்டது. திருடனைக் கண்டு பிடிக்க மண்ணில் பதிந்திருக்கும் அவனுடைய காலடையாளம் முதலியவைகளைக் கவனிக்கிறோம். சிருஷ்டி கர்த்தா ஒருவன் நமது கண்ணுக்குத் தெரியாமல் இருக்கிறான் என்று தெரிகிறது. அவன் இருக்கிறான் என்பதற்கு என்ன அடையாளம்? நாமே ஒரு அடையாளம். நம்முடைய உள்ளங்கையிலிருக்கிற ரேகை மாதிரி நாம் போடமுடியுமா? இந்தப் பட்டணத்திலுள்ள விசித்திரங்களைக் காட்டிலும் ஒரு சிறிய இலையில் அதிக விசித்திரங்கள் இருக்கின்றன. இவைகளைச் செய்தவன் அகப்படுவதில்லை. அவன் ஒரு குஹையில் புகுந்து கொண்டிருக்கிறான்.

ऋतं पिबन्तौ सुकृतस्य लोके
गुहां प्रविष्टौ परमे परार्धे । [கடவல்லி]
यो वेद निहितं गुहायाम् ॥ [தைத்திரீயோபநிஷத்]

என்று வேதம் சொல்லியிருக்கிறது. வேதம் அவனைப் பற்றிச் சொல்லும்போதெல்லாம் அவன் ஒரு குஹையில் இருப்பதாகவே சொல்லுகிறது. அவன் ஒருவனாகத்

தான் இருக்கவேண்டும். ஒரே ரீதியாக எங்கும் செய்வ தால் ஆஸாமி ஒரு ஆஸாமிதான். அப்படி ஒருவன் இருக்கிறன் என்பதை உலகெல்லாம் அறிவிக்கின்றன. இப்படி அறிவிக்கும் அடையாளத்திற்கு ஸம்ஸ்கிருத பாஷையில் லிங்கம் என்று பெயர். கண்ணுக்குத் தெரியாததை ஊஹிப்பதற்கு அனுமானம் என்றுபெயர். ஆகாசத்தில் ஒரு கர்ஜனை உண்டானல், மேகம் குழுமி யிருப்பதாக அனுமானிக்கிறேம். மேகமிருப்பதை அறி விக்கும் கர்ஜனை லிங்கம். காளஹஸ்தி முதலிய இடங் களில் ராத்திரி மலையில் நெருப்புத் தெரியும். மரங்கள் தாமாகவும் தீபற்றி எரிவதுண்டு. பகலிலுமெரியு மாயினும், அப்பொழுது நெருப்புத் தெரியாது. ஆனல் புகை தெரியும். அந்தப் புகையைக்கொண்டு நெருப்பிருப் பதாக அனுமானிப்போம். அந்தப் புகை லிங்கம். லிங்கம் என்ற சொல் அடையாளம் என்ற அர்த்தத்தை உடை யது என்பது இந்த உதாஹரணங்களிலிருந்து தெரியும். அப்படியே பிரபஞ்சத்திலுள்ள பொருள்களையெல்லாம் சிருஷ்டித்தவன் ஒருவன் இருக்கிறன் என்பதைக் காட்டும் லிங்கம் இருக்கிறது. இந்த உலகமே அந்த லிங்கம். கண்ணுக்குத் தெரியாததை நினைப்பூட்டக் கண்ணுக்குத் தெரியும் லிங்கம் ஏற்பட்டிருக்கிறது. யோசிப்போமானல் எல்லாம் லிங்கமே. ஆயினும் ஒன்றைக் கண்டால் அவன் நினைவு வரும்படி அதை லிங்கமென்றும் சாஸ்திரம் ஏற்படுத்தியிருக்கிறது. அந்த நினைவு தினந்தோறும் உண்டாகும்படி செய்ய ஸாயங் காலத்தில் சிவதரிசனம் அவசியமென்று சொல்லப் பட்டிருக்கிறது. ஈச்வர ஸ்வரூபம் இப்படிப்பட்டதென்று காட்ட அதைக் கூடுமான வரையில் அறிவிக்கக்கூடிய லிங்கத்தைச் சாஸ்திரம் சொல்லியிருக்கிறது. ஸாதாரண

லிங்கத்தைவிட அதிகமாக ஸ்படிக லிங்கம் சிவஸ்வரூபத்தை அறிவிக்கக் கூடியது. லிங்கத்தில், பிரம்ம பீடம், விஷ்ணு பீடம், சிவ பீடம் என மூன்று பீடங்கள் உண்டு. ஸ்ரீகாளஹஸ்தியில் லிங்கமானது எட்டுக்கால் பூச்சியாகவும் பாம்பாகவும் யானையாகவும் மூன்று பிரிவுகளாகவுள்ளது. ஸ்ரீ என்பதற்கு ஐசுவரியம், லக்ஷ்மி என்ற அர்த்தங்கள். தவிர எட்டுக் கால் பூச்சி என்றும அர்த்தமுண்டு. காளம் என்பதற்கு பாம்பு என்று அர்த்தம். ஹஸ்தி என்பதற்கு யானை என்று அர்த்தமுண்டு. லிங்கம் அப்படியே மூன்றின் உருவங்களாகவுமிருக்கிறது. காளஹஸ்தியிலிருந்து 20 மைல் தூரத்தில் குடிமல்லம் என்று ஒரு க்ஷேத்திரமிருக்கிறது. அங்கு லிங்கம் பரசுராமரால் பிரதிஷ்டைசெய்யப்பட்டது. அடிப்பாகம் கந்தர்வ ரூபமாகவும் மத்திய பாகம் முண்டாசுடன் கூடிய பரசுராம ரூபமாகவும், உச்சிப் பாகம் சிவலிங்க ரூபமாகவுமிருக்கிறது. பிரம்மா ஒரு சாபத்தால் சித்ரஸேனன் என்ற கந்தர்வனானாராம். ஆகையால் அந்த லிங்கத்தின் அடி பிரம்மா. பரசுராமர் விஷ்ணு அவதாரம் நடுவில் இருக்கிறார். அரசமர பூஜை செய்கையில் மூலம், அதாவது அடிப்பாகம் பிரம்ம ரூபமென்றும், மத்யபாகம் விஷ்ணு ரூபம் என்றும், உச்சிப் பாகம் சிவ ரூபமென்றும் சொல்லுவது வழக்கம். கீதையிலும் பகவான் 'ஊர்த்வமூலமத:சாகமச்வத்தம் ப்ராஹுரவ்யயம்' என்று சொல்லியிருக்கிறார். மற்ற விருக்ஷங்களைப் போலில்லாமல் ஸம்ஸார விருக்ஷத்தின் வேர் மேலோங்கியிருக்கிறது. கிளைகளும் இலைகளும் கீழ் நோக்கிச் செல்லுகின்றன என்பது அதன் அர்த்தம்.

இப்படிப்பட்ட லிங்கத்தைப் பூஜை செய்ய நர்மதை ஆற்றிலிருந்து லிங்கத்தைக் கொண்டுவரவேண்டும்.

வே—4

பஞ்சாயதன பூஜையில் கணநாதன், சூரியன், அம்பாள், விஷ்ணு, பரமசிவன் ஆகிய ஐந்து மூர்த்தங்கள் இருக்க வேண்டும். ஏகலிங்க பூஜை செய்தால், நிவேதனம் பிறகு சண்டேசுவரருக்கு அர்ப்பணமாகிவிடுகிறது. ஆகையால்தான் சிவன் கோயில் பிரஸாதம் சாப்பிடக்கூடாது. கோயில்களில் சாஸ்திர மரியாதையை மீறக் கூடாது. பிராம்மணர்களும் கர்ப்பக்கிருஹத்திற்குள் போகக் கூடாது. உள்ளே போனால் அபசாரமே நேரும், அபிஷேக தீர்த்தம் காலில் படும், அர்ச்சனை செய்த புஷ்பம் காலில் படும். ஆயினும் ஒருவர் செய்துதானாகவேண்டும். அதற்காகத் தீக்ஷை பெற்ற சிவத்விஜர்கள் ஏற்பட்டிருக்கிறார்கள். நிரம்ப ஸமீபிப்பது பிரயோஜனமில்லை. இந்தப் புஸ்தகத்தை கண்ணுக்கு ஸமீபத்தில் வைத்துக்கொண்டால் படிக்க முடியாது. தூரத்தில் பிடித்துக்கொண்டாலும் படிக்க முடியாது. அதி ஸாமீப்பியமும், அதி தூரமும் பிரயோஜனப்படாது என்பது அதனால் தெரிகிறது. ஆகையால் சிறிது தூரத்திலிருந்தே ஸேவிக்கவேண்டும். வீடுகளில் சிவலிங்க பூஜை மாத்திரம் கூடாது, ஆதித்யன், அம்பிகை, விஷ்ணு, கணநாதன், மகேசுவரன் என்ற ஐந்து மூர்த்தங்களையும் வைத்துப் பூஜைசெய்ய வேண்டும். தஞ்சாவூருக்கடுத்த வல்லத்தில் ஸூரியன் ஸ்படிகமாகக் கிடைக்கிறது. கணநாதம் என்ற சிவப்புக் கல் கங்கையில் விழும் சோணபத்திரையில் கிடைக்கிறது. ஸாளக்ராமம் நேபாளத்தில் கண்டகி நதியில் கிடைக்கிறது. காளஹஸ்திக் கருகிலுள்ள ஸுவர்ணமுகி நதியில் அம்பிகை அகப்படுகிறது. நர்மதையில் ஓங்கார குண்டத்தில் பாணம் அகப்படுகிறது. இப்படியே விஷ்ணு பஞ்சாயதன பூஜையும், சக்தி பஞ்சாயதன பூஜையு முண்டு.

ஈசுவரனை வேதம் வர்ணிக்கையில் அவருக்குக் கையில்லை, காதில்லை, கண்ணில்லை. ஆனால் எல்லாவற்றையும் செய்பவர், எல்லாவற்றையும் கேட்பவர், எல்லாவற்றையும் பார்ப்பவர் என்று சொல்லியிருக்கிறது. கண்ணிருந்தால் அது சிறிது தூரம் பார்க்கும். ஆகையால்தான் எதையும் பார்க்க வல்லவருக்குக் கண்ணில்லை, காதில்லை என்றால் உருவமேயில்லை. உருவமில்லையானால் அவர் எப்படித்தான் இருக்கிறார். நர்மதா பாணம் உருவமற்றது. அது அவர் எப்படி இருக்கிறார் என்று தெரிவிக்கிறது. அது வட்டமாக இருக்கிறது. வட்டத்திற்கு ஆதியுமில்லை அந்தமுமில்லை. ஈசுவரன் ஆதியுமந்தமுமற்றவர் என்று பாணம் காட்டுகிறது. ஸ்படிகலிங்கம் அவரை இன்னும் நன்றாகத் தெரிவிக்கிறது. நாம் எப்படி நினைக்கிறோமோ அப்படி அவர் ஆகி விடுவார் என்பதையும் அது தெரிவிக்கிறது. ஸ்படிக லிங்கத்தை ரோஜாப் புஷ்பத்தால் அர்ச்சனை செய்தால், அது சிவப்பாகத் தெரியும், வில்வத்தால் அர்ச்சித்தால் பச்சையாகத் தெரியும். அப்படியே அவரை நாம் மான் மழுவுடையவராக நினைத்தால் அப்படி ஆகிவிடுவார். சங்க சக்கர கதாபாணியாக ஸ்மரித்தால் அப்படி ஆகி விடுவார். அது அவருக்குத் தனியான ஸ்வரூபம் ஒன்றும் இல்லை. அவரே நாரதருக்கு அப்படிச் சொல்லியிருக்கிறார். "உலகில் உத்கிருஷ்ட வஸ்துக்களையெல்லாம் திரட்டி நானாக உனக்குக் காட்டுகிறேன். அழகு, ஐசுவரியம், சாந்தம், கருணை, வாஸனை முதலிய உத்கிருஷ்டமானவைகளை ஓர் உருவாக்கி நான் உனக்குக்காட்டுகிறேன். ஆனால் அதுதான் நான் என்று நினைத்துக் கொண்டு விடாதே, உனக்குத் தெரிவிக்க வேண்டி இந்த ரூபத்தைக் காட்டுகிறேன். அழகு, வாஸனை முதலிய

உத்கிருஷ்டப் பொருளில் உனக்குப் பிரியமாகையால், அவைகளை ஓர் உருவாக்கி நீ பார்க்கும்படி செய்கிறேன். ஆனால் இது மாயை" என்று பகவான் சொல்லியிருக்கிறார். நாம் நினைப்பது போல் அவர் ஆவார். நாம் நினைத்தால் ஸகுணம், அவராகவோ நிர்க்குணம். ஸ்படிக லிங்கம் அதைக் காட்டுகிறது. ஸாக்ஷாத் பரமேசுவரனுக்கு அது ஒரு சிறந்த அடையாளம். ஆகையால்தான் அதைத் தரிசனம் செய்ய வேண்டும். ஆகையால்தான் ஸன்னியாஸிகள் ஸ்படிகலிங்க பூஜை செய்கிறார்கள்.

சிவன் கோயில்களில் கர்ப்பக்ருஹத்தில் உள்ள லிங்கத்தை மஹாலிங்கம் என்கிறோம். எந்தக் கோயிலிலும் மஹாலிங்கத்திற்குக் கபாலீசுவரர் என்றோ, வன்மீகநாதர் என்றோ பல பெயர்கள் உண்டு. ஆனால் ஒரு மஹாலிங்கத்துக்கு மாத்திரம் மஹாலிங்கம் என்றே பெயர். அந்த மஹாலிங்கம் மத்தியார்ஜுனத்தில் இருக்கிறது. மத்தியார்ஜுனம் என்பது திருவிடைமருதூர். அர்ச்சுனம் என்றால் மருது என்று பெயர். வடக்கே கர்னூல் ஜில்லாவில் மல்லிகார்ஜுனமும் (ஸ்ரீசைலம்) தெற்கே திருநெல்வேலி ஜில்லாவில் புடார்ஜுனமும் இருப்பதால் நடுவிலுள்ளதற்கு மத்தியார்ஜுனம் என்று பெயர். அங்குள்ள லிங்கத்தை மஹாலிங்கம் என்று விசேஷமாகச் சொல்லுகிறோம். காரணம் சோள தேசமே ஒரு கோயிலாக இருக்கிறது. 'வித்யா கௌடே, சிவ: சோளே' என்று சொல்லுவதுண்டு. தர்க்கம் முதலிய வித்தைகளுக்குக் கௌட தேசம், அதாவது வங்காளம் பிரஸித்தம்; சைவத்திற்குச் சோளதேசம் பிரஸித்தம் என்பது அதன் அர்த்தம். சோள தேசத்தில் சிவன் கோயில்கள் அதிகமாக இருப்பதல்லாமல் தேசமே ஒரு சிவன் கோயிலாக இருக்கிறது. எந்தச் சிவன் கோயி

லிலும், கன்னி மூலையில் விக்கினேசுவரரும் மேற்கில் ஸுப்ரமண்யரும், வடக்கில் சண்டேசுவரரும், தெற்கில் தக்ஷிணாமூர்த்தியும், அக்கினிமூலையில் ஸோமாஸ்கந்தரும், ஈசானத்தில் நடராஜாவும் பைரவரு மிருப்பார்கள். பரிவார தேவதைகள் இன்ன இன்ன விடத்தில் இருக்க வேண்டுமென்று ஆகமம் விதித்திருக்கிறது. மத்தியார் ஜுனத்திற்கு நேர் மேற்கில் 10 மைல் தூரத்திலுள்ள ஸ்வாமிமலை, சுப்ரமண்ய க்ஷேத்திரம். அதற்குச் சிறிது தெற்கில் கன்னி மூலையிலுள்ள திருவலஞ்சுழி, பிரஸித்த மான கணேச க்ஷேத்திரம். அதைப்பற்றிச் சிறிது சொல்லுகிறேன்.

ஷண்மதங்களில் காணுபத்ய மென்பதொன்று. கண பதியை உபாஸித்து முக்தி அடைய காணுபத்யம் மார்க் கத்தை சொல்லுவது. மஹாராஷ்டர தேசத்தில் கணபதி உபாஸனை அதிகமாகவுள்ளது. அங்கு மோர்காம் என்று ஒரு கணேச க்ஷேத்திரமுள்ளது. மயூரம் என்ற ஸம்ஸ் கிருதச் சொல் மயில் என்று தமிழில் அர்த்தமுடையது. அது மஹாராஷ்டிரத்தில் மோர் என்ருகிவிட்டது. காம் என்பது கிராமம் என்பதன் திரிபு. மஹாராஷ்டிரம், ஹிந்துஸ்தானி முதலிய பாஷைகளில் 'காம்' என்ருல் கிராமம் என்று அர்த்தம். ஆகையால் மோர்காம் என் பது மயூரக்கிராமம்.

மயூரவாகனுரூடராக ஒரு கணேச அவஸரமுண்டு. மோர்காமில் ஸ்ரீகணேசர் மயூரவாகனுரூடராக இருக்கிருர். மோர்காம் க்ஷேத்திர புராணத்தில் திருவலஞ்சுழியை தக்ஷிணுவர்த்தமென்றும், அது கணேசருடைய ராஜ தானி என்றும் சொல்லப்பட்டிருக்கிறது. சைவ நாயன் மார்களும் திருவலஞ்சுழியைப்பாடியிருக்கிருர்கள். அங்கு

விக்கினேசுவரர் வலம்புரித் துதிக்கையை உடையவராக இருக்கிறார். இந்தத் திருவலஞ்சுழியில் பலகணி சலவைக் கல்லால் செய்யப்பட்டிருக்கிறது. சோள தேசத்தில் மலையேயில்லை. இருந்த மலைகளை ஹனுமார் பிடுங்கிக் கொண்டுபோய் ஸேது கட்ட உபயோகப்படுத்திவிட்டாராம். மலையில்லை என்பது நிச்சயம். இரண்டு மைலுக்கு ஓர் ஆறு உள்ளது. இதர நாடுகளிலிருந்து கருங்கல்லைக் கொண்டுவந்து ஆறுகளைக் கடந்து தேசமெங்கும் பெரிய பெரிய ஆலயங்களைப் பூர்விகர்கள் கட்டியிருக்கிறார்கள். அப்படிப்பட்ட கோயில்களில் திருவலஞ்சுழிக் கோயில் அபூர்வமான வேலைப்பாடுடையது. முன்னாளில் ஸ்தபதிகள் கோயில் கட்டுவதாக ஒப்புக்கொண்டு எழுதிக் கொடுக்கும்பொது, திருவலஞ்சுழிப்பலகணி, ஆவுடையார் கோயில் (திருப்பெருந்துறை) கொடுங்கை முதலிய வேலைப்பாடுகள் தவிர மற்ற வேலைகளை யெல்லாம் தாங்கள் செய்ய முடியுமென்று எழுதிக் கொடுப்பார்களாம். ஆவுடையார் கோயில் கொடுங்கை ஒரு காகிதத்தின் கனமே யுள்ளது. திருவலஞ்சுழிக் கோயில் திருவிடைமருதூர் மஹாலிங்கத்துக்கு விக்கினேசுவரர் ஸந்நிதி என்று சொல்லுகையில் இந்த விவரங்களைச் சொல்ல நேர்ந்தது. திருவிடைமருதூருக்கு 10 மைல் தெற்கில் ஆலங்குடி என்று ஓர் ஊர் இருக்கிறது. அது தக்ஷிணாமூர்த்தி க்ஷேத்திரம். இடைமருதூருக்கு நேர் வடக்கிலுள்ள திருச்சேய்ஞலூர் என்பது சண்டேசுவரர் கோயில். சண்டேசுவர நாயனார் திருச்சேய்ஞலூரில் அவதாரம் செய்ததாகப் பெரிய புராணமும் கூறியிருக்கிறது. திருவிடைமருதூருக்கு நேர்கிழக்கிலுள்ளது திருவாவடுதுறை. இப்பொழுதுள்ள மடம் ஏற்பட்டதற்கு முன்னேயே அது பிரஸித்தமான க்ஷேத்திரம். அது

திருவிடைமருதூருக்கு நந்திகேசுவரர் ஸந்நிதி. திருவாரூரில் ஸோமாஸ்கந்தர், தில்லையில் நடராஜா, சீகாழில் பைரவர், இப்படிச் சோள தேசமே ஒரு சிவாலயமாக இருக்கிறது. இந்தப் பெரிய ஆலயத்தின் கர்ப்பக்கிருஹம் திருவிடைமருதூர். அதிலுள்ள மஹாலிங்கத்திற்கு வேறு பெயர் இல்லை. மேலே சொன்ன பரிவார தேவதைகளையுடைய அந்தந்தக் கோயிலில் அந்தந்தப் பரிவார தேவதைக்கே பெருமை ஏற்பட்டிருக்கிறது. ஆரூரில் வன்மீகநாதர் முதலிய மூர்த்தங்கள் இருப்பினும், தியாகராஜ க்ஷேத்திரமென்றே அது பிரஸித்தி அடைந்திருக்கிறது. ஸ்வாமி மலைக்கு ஸுப்ரமண்ய க்ஷேத்திரமென்றே பிரஸித்தி. சிதம்பரத்திற்கு நடராஜ க்ஷேத்திரமென்றே பிரஸித்தி.

# 8. ஸ்ரீசந்திரமௌளீச்வரி*

(25—11—32)

ऐश्वर्यमिन्दुमौले-
रैकात्म्यप्रकृति काञ्चिमध्यगतम् ।
ऐन्दवकिशोरशेखर-
मैदंपर्यं चकास्ति निगमानाम् ॥

இந்தச் சுலோகம் மூககவி அம்பிகையைப் பற்றிச் சொன்னது. ஊமையாக இருந்து அம்பிகையின் அநுக்கிரகம் கிடைத்து அவருடைய ஞானம் கொப்பளித்து வந்து ஐந்து சதகம் பண்ணியிருக்கிறார். நாம் வாசித்தால் நம்மையே மறந்துவிடுவோம். அவர் எழுதியிருக்கிற ஒவ்வொரு சுலோகத்திலும், காஞ்சியையாவது காமகோடியையாவது சொல்லியிருப்பார்.

இந்தச் சுலோகத்தில் சந்திரமௌளீசுவரனுக்கு ஐசுவர்யம் அம்பிகை என்று சொல்லப்பட்டிருக்கிறது. பரமேசுவரனுக்கு ஈசுவரத் தன்மையைத் தருபவள் அம்பிகைதான். அவருக்கு மங்காத ஐசுவர்யமாக இருப்பவள் அம்பிகை. அவள் ஸர்வ மங்களை. எங்கும் நிறைந்திருக்கிற பரமேசுவர தத்வம் அவளுடைய கிருபை இருந்தால்தான் தெரியும்.

பிரகிருதி காஞ்சி மத்தியில் இருக்கிறது. எப்படி இருக்கிறது? பால சந்திரனைச் சிரஸில் வைத்திருக்கிறது. அம்பிகைக்கும் சந்திரகலை உண்டு. அம்பிகை பரமாத்ம ஸ்வரூபம். வேதத்தின் பரம தாத்பர்யமாக

*கிண்டியில் பேசியது.

இருப்பவள். அத்வைதமான தத்வம் அவள்தான். அவள் சந்திர மௌளீச்வரியாக இருக்கிருள்.

ஸௌந்தரிய லஹரியில் ஒரு சுலோகம் வருகிறது.

अहः सूते सव्यं तव नयनमर्कात्मकतया
त्रियामां वामं ते सृजति रजनीनायकतया ।
तृतीया ते दृष्टिर्दरदलितहेमाम्बुजरुचिः
समाधत्ते सन्ध्यां दिवसनिशयोरन्तरचरीम् ॥ ४८ ॥

அம்பிகைக்குக்கூட லலாட நேத்திரம் உண்டென்று இதிற் சொல்லியிருக்கிறது. சந்திர சூரியாக்னி லோசனம் உண்டு. ஒரு கண் பகலை சிருஷ்டி பண்ணுகிறது. மற்ருெரு கண் ராத்திரியை சிருஷ்டி பண்ணுகிறது. இரண்டுக்கும் நடுவில் ஸந்தியை இருக்கிறது. வலக்கண் பகலை உண்டுபண்ணுகிறது. இடக்கண் ராத்திரியை உண்டு பண்ணுகிறது. மூன்ருவது கண் இருக்கிறதே அது கொஞ்சம் திறந்திருக்கிறது. பொற் கமலம்போலச் சிவந் திருக்கிறது. திவசம், நிசி இரண்டுக்கும் நடுவில் இருக் கிற ஸந்தியை அது உண்டு பண்ணுகிறது.

त्वया हृत्वा वामं वपुरपरितृप्तेन मनसा
शरीरार्धं शंभोरपरमपि शङ्के हृतमभूत् ।
यदेतत्त्वद्रूपं सकलमरुणाभं त्रिनयनं
कुचाभ्यामानम्रं कुटिलशशिचूडालमकुटम् ॥ २३ ॥

சந்திரகலையும் திரிநேத்திரமும் அம்பாளுக்கு இருப் பதை இது சொல்லுகிறது. அம்பிகை பரமேசுவரன்

பாலுள்ள பாதிவிரத்தியத்தால் பாதி சரீரத்தைப் பிரித்துக்கொண்டு தானாக ஆகிவிட்டாள். முதலில் எதையோ உத்தேசித்துப் பாதியானாள். 'நீ இடப் பாகத்தை அபகரித்தால் திருப்தியாகும் என்று நினைத் தாய். திருப்தி உண்டாகவில்லை. வலதுபாகம் முழுவதும் நாமாகவேணும் என்ற உத்தேசம் போலும். ஒரே சிவப் பான ஸ்வரூபமாக இருக்கிறது. அம்பிகை தலையில் சந்திரகலை இருக்கிறது. அதைப் பார்த்தால் ஸ்வாமி யாகவும் இருக்கிறது. ஸ்வரூபம் மாதா ஸ்வரூபமாக இருக்கிறது. மூன்றாவது கண் இருக்கிறது. 'கொஞ்சம் கொஞ்சமாகத் தின்று முழுவதும் சாப்பிட்டாய் அதற்கு அடையாளம் சந்திர கலையையும் நெற்றிக் கண்ணையும் வைத்துக்கொண்டாய்' என்று இந்தச் சுலோகம் சொல்லுகிறது. அம்பிகைக்குச் சந்திர கலையும் திரிநேத் திரமும் உண்டென்பதைத் தெரிவிக்கத்தான் இந்தச் சுலோகங்களைச் சொன்னேன். சிலப் பிராசீன சித்திரங் களில் அம்பிகை உருவங்களில் இவைகளைக் காணலாம். நம்முடைய ஆசாரியர்களும் சொல்லியிருக்கிறார்கள். இன்று பிரதோஷம்; வெள்ளிக்கிழமை. அம்பிகையையும் பரமேசுவரனையும் தனித்தனியாகச் சொல்லப் பிரிய மில்லை. அதனால் இருவரும் ஒன்றான விஷயத்தைச் சொன்னேன். திருமூர்த்திகள் ஸத்வரஜஸ்தமோ குணங் களில் உண்டானவர்கள். "உன்னுடைய பாதத்தில் செய்த பூஜை மூன்று மூர்த்திகளுக்கும் பூஜையாக ஆகிறது" எப்படி? "உன் பாதத்தை வைக்கும் ரத்தின மயமான பீடத்துக்கு ஸமீபத்தில் எப்பொழுதும், அவர்கள் கைகளை மொட்டுப்போல அஞ்சலி பண்ணிக் கொண்டு சிரசுக்கு ஆபரணமாக வைத்துக்கொண்டு இருக்கிறார்கள்" மொட்டுப்போலக் கூப்பின கைகளைச்

சிரசில் அலங்காரமாக மொட்டுவைப்பது போல வைத்துக்கொண்டிருக்கிறார்கள். கிரீடாலங்காரமாக வைத்துக் கொண்டிருக்கிறார்கள். அப்பொழுது அங்கே பண்ணுகிற அர்ச்சனைப் புஷ்பங்கள் முழுவதும் அவர்கள் தலையில் விழும். அபிஷேகம் பண்ணினாலும், தீபாராதனை, பிரார்த்தனை முதலியவைகளில் எது பண்ணினாலும் அவர்களுக்கும் ஆகும். அங்கே பண்ணுகின்றவையெல்லாம் அவர்களுக்கும் சேரும்.

---

# 9. அம்பிகையின் பெருமை

(14—10—'32)

कीर्तयेन्नामसाहस्रं पौर्णमास्यां विशेषतः ।
पौर्णमास्यां चन्द्रबिम्बे ध्यात्वा श्रीललिताम्बिकाम् ॥

[லலிதாஸஹஸ்ரநாமபலச்ருதி, 21.]

இன்று வெள்ளிக்கிழமை; பூர்ணிமை. இந்த இரண்டும் சேர்ந்திருப்பது அம்பாளுக்கு விசேஷம். ஒவ்வொன்றும் தனித்தனியே விசேஷம் உடையதுதான். இங்கே கற்பகாம்பாள் க்ஷேத்ரத்தில் இன்றையதினம் நிறைபணி. பூர்ணிமை என்றால் நிறைவு என்று அர்த்தம்.

ஸகல ஜனங்களுக்கும் இன்பத்தைத் தருவது பரிபூர்ண சந்த்ரன். சரத்கால சந்த்ரன் மிகவும் விசேஷமானதென்று காவ்ய சாஸ்த்ரங்கள் சொல்லுகின்றன. இப்பொழுது நடப்பது சரத்ருதுதான். சரத்கால சந்த்ரன் ஆனந்தத்தைத் தருகிறான். அதனிலும் பூர்ணசந்த்ரன் அதிக ஆனந்தத்தைத் தருவான். ஒவ்வொரு ருது ஆரம்பத்திலும் நவராத்ரி உண்டு. அப்பொழுது அம்பிகையைப் பூஜிக்க வேண்டும். அப்படி உள்ள ஆறு நவராத்ரிகளுக்குள் வஸந்த நவராத்ரியும் சாரதநவராத்ரியும் விசேஷமானவை. சாரதநவரார்த்ரி என்பது சரத்காலத்தில் ஏற்பட்ட நவராத்ரி. நாம் அநுஷ்டிக்கும் நவராத்ரி அதுதான். பதினைந்து திதிகளிலும் பூஜித்தல் ஒரு ஸம்ப்ரதாயம். ஸலிதாஸஹஸ்ர நாமத்தில்,

प्रतिपन्मुख्यराकान्ततिथिमण्डलपूजिता ।

[ப்ரதிபன்முக்யராகாந்ததிதிமண்டலபூஜிதா]

என்று சொல்லப்பட்டிருக்கிறது. அந்தப் பதினைந்தாம்

நாள் இன்று பூர்த்தியாகிறது. அதனால்தான் இன்றைக்கு நிறைபணி என்னும் பெயர் ஏற்பட்டிருக்கிறது. ஆகவே இன்றைய தினம் சாரதநவராத்ரி பூர்த்தியும், வெள்ளிக்கிழமையும், பூர்ணிமையும் சேர்ந்து அமைந்து இருக்கிறது.

சந்த்ரமண்டலத்தில்அம்பாள் வஸிக்கின்றாள்.லலிதா ஸஹஸ்ரநாம பலச்ருதியில் அம்பாளைச் சந்த்ரமண்டலத்தில் த்யானம் பண்ணச் சொல்லுகிறது. அது மனஸுக்குக் குளிர்ச்சியைத் தரும். ஸூர்யோதயத்தால் நமக்கு அவ்வளவு ஆனந்தமில்லை. சந்த்ரோதயத்தால் குழந்தைகள், ஸ்த்ரீகள், விருத்தர்கள் முதலிய எல்லோருக்கும் ஸந்தோஷமுண்டாகிறது. நிலாச் சாப்பாடு பாட்டுக் கச்சேரி முதலிய பல ஸந்தோஷமான காரியங்களை அப்பொழுது எல்லோரும் செய்கிறார்கள். பூர்ண சந்த்ரோதயத்தால் இன்னும் அதிக ஆனந்தம் உண்டாகிறது. நித்யம் பூர்ணசந்த்ரன் உதயமானால் இவ்வளவு ஆனந்தம் இராது. பதினைந்து நாள் குறைந்து பதினைந்து நாள் நிறைந்தால்தான் பூர்ண சந்த்ரனுடைய அருமை தெரிகிறது. அந்தகாரத்தை ஸூர்யன் சந்த்ரன் இருவரும் போக்குகிறார்கள். ஸூர்யன் வெப்பத்தோடிருந்து இருட்டைப் போக்குகிறான். ஒளியும் குளிர்ச்சியும் சந்த்ரனிடத்தில்தான் இருக்கின்றன. அதுபோல அம்பிகையின் க்ருபை மனஸைக் குளிர்வித்து அஞ்ஞானத்தை நிவர்த்திக்கிறது.

चन्द्रमा मनसो जातः ।

[புருஷஸூக்தம்]

விஷ்ணுவினுடைய மனஸ் குளிர்ந்திருந்தபொழுது அதிலிருந்து உண்டானான சந்த்ரன். அதனால்தான் அவன்

சீதளனையிருந்து இருளைப் போக்குகிறான். அஞ்ஞான மாகிய இருட்டைப் போக்கிச் சாந்தத்தைத் தருவதால் அம்பிகையை சந்த்ர மண்டலத்தில் த்யானம் பண்ண வேண்டுமென்று சொல்லப்பட்டிருக்கிறது. வ்யாக்ராஸனத்தில் மத்திய பாகத்தில் (ஹ்ருதய ஸ்தானத்தில்) ஆஸனம் போட்டுக்கொண்டு ஜபத்யானாதிகள் பண்ண வேண்டும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. புலியானது நினைத்ததை ஒரேயடியாக அடிக்கும் சக்தி வாய்ந்தது. அந்த மாதிரி த்யானம் செய்வதற்கறிகுறியாகப் புலித்தோலாஸனம் ஏற்பட்டிருக்கிறது. அது போல அஜ்ஞானமாகிய இருட்டை நீக்கிச் சீதளமான தன்மையை அம்பிகையின் அருள் உண்டாக்குவதால் அவளைச் சந்த்ரமண்டலத்தில் த்யானம் பண்ண வேண்டும். இன்றைக்குப் பூர்ணிமையுடன் சுக்ரவாரமும் சேர்ந்திருக்கிறது. சந்த்ரனுக்கு அடுத்தபடியாக ஆனந்தம் தருபவன் சுக்ரன்தான்.

அம்பாள் யார்? ஒளவை 'அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்' என்று சொல்லி இருக்கிறாள்.

मातृदेवो भव। पितृदेवो भव।

[தைத்திரீயோபநிஷத்]

என்று உபநிஷத்தும் சொல்லுகிறது. மாதாவைத் தெய்வமாக வணங்கு, பிதாவைத் தெய்வமாக வணங்கு என்பது அவைகளுக்கு அர்த்தம். இந்த ஒரு ஜன்மத்துக்கு ஏற்பட்ட ஒரு தாயையே தெய்வமாகக் கொண்டாட வேண்டும். அம்பிகை எந்த ஜன்மத்துக்கும் மாதா. இந்த லோகத்தில் நாலைந்து குழந்தைகளுக்கு ஒருத்தி தாயாக இருக்கிறாள். எல்லாக் குழந்தைகளுக்கும் எல்லாக் காலத்திலும் தாயாய் இருப்பவள் அம்பிகையே. லோகம்

முழுதிலும் உள்ளவர்கள் யாவரும் ஸஹோதரர்களே; பக்ஷி, புழு முதலியவை எல்லாம் நம்முடைய ஸஹோதரர்களே. இவ்வளவு பேருக்கும் ஒரு தாயாக இருப்பவள் அம்பிகையே. அந்த ஒரு தாய் வயிற்றிலிருந்து யாவரும் உண்டானவர்கள். தாயாரைத் தெய்வமாக நினை என்பதனால் அவ்வாறு நினைக்கமுடியும என்பது தெரிகிறது. அதைத் திருப்பித் தெய்வத்தைத் தாயாக நினைப்பது தான் அம்பிகையின் த்யானம். க்ருஷ்ணனை அர்ஜுனன் ஸ்நேகிதனாக நினைத்தான்; குழந்தையாக யசோதை நினைத்தாள்; ருக்மிணி ஸத்யபாமை பர்த்தாவாக நினைத்தார்கள். நாமெல்லாம் குழந்தைகளாகையினால் பரமாத்மாவை அம்பிகையாக அதாவது தாயாக நினைத்தால் அப்படியே வந்து அநுக்ரஹம் செய்வாள். எந்த ரூபமாக எண்ணினாலும் அந்த ரூபமாக வந்து அநுக்ரஹம் செய்யும் தன்மை பரமாத்மாவுக்கு உண்டு. ஸாக்ஷாத் பரப்ரம்மமே அம்பிகையாய் இருந்து தாயைப் போல் ஸமஸ்தப்ராணிகளுக்கும் அனுக்கிரஹம் பண்ணிக் கொண்டிருக்கிறாள். அம்பாளை ஆராதனை பண்ணி எவ்வளவோ மஹா புருஷர்கள் அனுக்ரஹத்தை அடைந்திருக்கிறார்கள். மஹா கவியாகிய காளிதாஸர் அம்பிகையின் தாஸர். அம்பிகையினுடைய க்ருபையால் அவருக்குப் பரிபூர்ண வாக்கு உண்டாயிற்று. அம்பிகையினுடைய க்ருபை உண்டானவுடன் ச்யாமளா தண்டகம் என்று ஒரு ஸ்தோத்ரக்ரந்தம் செய்திருக்கிறார். காஞ்சிபுரத்தில் காமாக்ஷி ஸந்நிதியில் ஊமை யொருவர் உபாஸனை செய்து மஹா கவியானார். அம்பாளுடைய உச்சிஷ்டம் தெறித்து அந்த உச்சிஷ்டமே அம்ருத ரூபமாக உயர்ந்த வாக்கை உண்டாக்கிற்று. அவர் மூககவி என்னும் பெயரைப் பெற்றார். அவர் அம்பிகையின்

விஷயமாக 500 ச்லோகம் செய்திருக்கிறார். நூறு நூறு சேர்ந்த ஐந்து சதகங்களாக அவை இருக்கின்றன. மூகபஞ்சசதி என்பது அவற்றின் பெயர். அவை மிகவும் சுவையுள்ளனவாக இருக்கும். ஸம்ஸ்க்ருதம் தெரியாவிடின் அவைகளின் ரஸத்தை அனுபவிக்க முடியாது. ஸம்ஸ்க்ருதம் தெரிந்தால் மூககவி காளிதாஸன் முதலியவர்களுடைய வாங்மாதுர்யத்தை அனுபவிக்கலாம். பகவத்பாதாளுடைய வாங் மஹிமையை அனுபவிப்பதற்கும் ஸம்ஸ்க்ருத ஜ்ஞானம் வேண்டும். இந்த மூன்றுக்காகவாவது எல்லாரும் ஸம்ஸ்க்ருதம் வாசிக்கவேண்டும்.

அம்பிகையே வாக்ஸ்வரூபமாக இருப்பவள். அம்பாள் உருவம் முழுவதும் அக்ஷரங்கள். நம்முடைய உடம்பில் எல்லாம் நாற்றமுள்ள வஸ்துக்களே நிரம்பி இருக்கின்றன. இந்த ஆபாஸங்களுக்குள் அறிவு என்ற ஒரு மணி இருக்கிறது. அம்பாள் உடம்போ அகாராதிக்ஷகராந்தம் இருக்கும் அக்ஷரங்கள் தான். தர்க்கத்தில் முக்தாவளியில் சப்தத்தைப்பற்றி இரண்டு ந்யாயங்கள் சொல்லப்பட்டிருக்கின்றன. வீசிதரங்க ந்யாயம், கதம்பமுகுள ந்யாயம் என்பவை. அவை—அலைகளிலிருந்து அலை பிரிவது, அதாவது பெரிய அலைகளிலிருந்து சிறு சிறு அலைகள் பிரிந்து சென்று கடைசியிற் சிறிதாகி அடங்குவதைப் போல்வது வீசிதரங்க ந்யாயமென்பது. சப்தம் கொப்பளித்து வெவ்வேறு ஒலியாக விழுதல் கதம்பமுகுள ந்யாயமாகும். இந்த சப்தங்கள்தாம் 51 அக்ஷரங்கள். அவற்றிற்கு மாத்ருகா என்று பெயர். இந்த அக்ஷரங்கள் ஒருருவமெடுத்ததுதான் அம்பிகையின் வடிவம். அக்ஷரமாலிகை, மாத்ருகா ஸ்வரூபம் என்பர். "ஸர்வ வர்ணாத்மிகே" என்று காளிதாஸர் சொல்லியிருக்கிறார். "எல்லா எழுத்துக்களின் வடிவமாயும் இருப்பவளே" என்பது

அதன் கருத்து. நாம் ஜபத்தில் அங்கந்யாஸ கரந்யாஸங்கள் செய்கிறோம். அந்தஅந்த மந்த்ர தேவதைக்கு அந்த அந்த அக்ஷரம் அந்த அந்த அங்கங்களாக இருக்கின்றன என்பது குறிப்பு.

லோகம் முழுவதற்கும் ஒரு தாயாக இருந்து அநுக்ரஹம் செய்யும் அம்பிகைக்குப் பராசக்தி என்பது ஒரு பெயர். அம்பிகையின் கடாக்ஷம் எப்படிப்பட்டவனையும் கைதூக்கி விடும். இது சாஸ்த்ரங்களின் கருத்து. அவளைப் பரதேவதை என்று வேதம் சொல்லுகிறது. அந்த அம்பிகையை நாம் அன்போடு த்யானம் செய்ய வேண்டும். அபேதமாக நாம் வேறு அவள் வேறு என்பதின்றி ஒன்ருகவே த்யானம் செய்யவேண்டும்.

அம்பிகை விஷயமான ஸ்தோத்ரங்களைச் செய்தவர்களுள் நம்முடைய ஆசார்யாளும் ஒருவர். அவர்கள் ஈச்வராவதாரம். இந்த லோகத்தில் ஸஞ்சாரம் செய்கையில் மனுஷ்யாம்சத்தை ஒட்டித்தான் நடந்து வந்தார்கள். ராமர் மஹாவிஷ்ணுவின் அவதாரம். ஆனுலும் அவர் ஸீதை பிரிந்ததற்காகத் துக்கப்பட்டார். குரங்குகளுடைய ஸஹாயத்தை அடைந்தார். நாடகத்தில் எந்த வேஷத்தை எடுத்துக்கொண்டார்களோ அதற்குத் தக்கபடி ஆடவேண்டுமே யொழிய தங்களுடைய ஸொந்த ஸ்வரூபத்தை நாடகமேடையில் காட்டக்கூடாது. அது போல ராமர் தாம் எடுத்துக்கொண்ட மனுஷ்யவேஷத்திற்குத் தக்கபடி 14 வருஷம் காட்டுக்குப்போனுர்; ஸீதையைப் பிரிந்து வருத்தப்பட்டார்; பர்ணசாலையில் தங்கி இருந்தார்; பழங்களைச் சாப்பிட்டார்; லக்ஷ்மணர்மூர்ச்சையாக விழுந்தபொழுது அழுதார்; அவர் உத்தம புருஷராக நடித்தார். அதுபோல நம்முடைய ஆசார்யாளும்

மனுஷ்யாவதாரத்திற் கேற்ப நடந்து காட்டிப் பிறகு கைலாஸம் போனார்.

ராமர் இருந்த காலத்தில் நாம் பிறக்கவில்லையே என்று எல்லோரும் வருத்தப்படுவார்கள். நான் அப்படிப் பிறக்காததற்கு ஸந்தோஷப்படுகிறேன். அப்படிப் பிறந்திருந்தாலும் அந்தக் காலத்திற் ப்ராம்மணனாகப் பிறந்திருக்கக்கூடாது. பிறந்திருந்தால் ராமர் நம்மை நமஸ்காரம் செய்திருப்பார். ரிஷிகள் எல்லோருக்கும் அவர் நமஸ்காரம் செய்தார். அது மிகவும் தர்மஸங்கடமான நிலை. இப்பொழுது அவருக்குக் கோயில் கட்டி நாம் அவரை நமஸ்காரம் செய்துவருகிறோம். கீழ் ஜாதியாராகப் பிறந்தால் ஸௌகரியம் உண்டு. எல்லாரையும் நமஸ்காரம் செய்யலாம். மேல் ஜாதியாரானல் உபத்ரவம். அப்படியே உயர்ந்த ஆச்ரமம், உயர்ந்த வயது, உயர்ந்த குணம் உடையவர்கள் பலருடைய அநுக்ரஹத்தைப் பெற முடிவதில்லை. ஆசார்யாளுக்குக் குரு கோவிந்த பகவத்பாதாள். அவர்கள், "இவ்வளவு பேரும் புண்யம் பண்ணியிருக்க நான் ஒருவன்தானா அபாக்யம் பண்ணினவன்? என்னுடைய காலில் இவர் விழுகிறாரே!" என்று வருந்தினார்களாம்.

ஸ்ரீமத் ஆசார்யாள் தாம் எடுத்த வேஷத்திற்கேற்பக் கைலாஸம் போனார். போய் ஐந்து ஸ்படிக லிங்கங்களை வாங்கி வந்தார். அவைகளில் ஒன்றுதான் சந்த்ரமௌளீச்வரர். கைலாஸத்தில் ஈச்வரன் இருக்கிற இடத்தில் அம்பாளுடைய மந்த்ர சாஸ்த்ரம் இருந்தது. அதை எடுத்துக்கொண்டுவரும்பொழுது நந்திகேச்வரர் அதைப் பிடித்துக்கொண்டார். அவரிடமிருந்து உருவிக் கொண்டு ஒரு பாகத்தை ஆசார்யாள் கொண்டு வந்தார்.

அதில் 41 ச்லோகங்கள் இருந்தன. இங்கே வந்து மேலே 59 ச்லோகங்களைச் செய்து அதைப் பூர்த்தி பண்ணினர். அதுதான் ஸௌந்தர்யலஹரி. திருச்சிராப் பள்ளியில் மாத்ருபூதேச்வராலயத்தில் ஸ்ரீ ஸுகந்த குந்தளாம்பா ஸந்நிதியில் ஒரு சலவைக்கல்லில் முதல் 41 ச்லோகங்களும் எழுதப்பட்டிருக்கின்றன. அந்த ஸந்நிதி ஸ்ரீசக்ர ரூபமாக அமைக்கப்பட்டது என்று சொல்வதுண்டு. ஸௌந்தர்ய லஹரியில் பின் 59 ச்லோகங்கள் ஆசார்யாளால் செய்யப்பட்டவை. 100 ச்லோகங்களும் கைலாஸத்திலிருந்து வந்திருந்தால் நமக்கு நஷ்டந்தான். அப்பொழுது ஸ்ரீ ஆசார்யாளுடைய வாங் மஹிமையை நாம் அநுபவிக்க முடியாது. ஆசார் யாள் செய்தவைகளைவிடக் கைலாஸத்திலிருந்து வந்த வைகள் உயர்ந்தனவாகத் தோன்றவில்லை. அவை யெல்லாம் மந்த்ரங்கள்தாம். பின் 59 ச்லோகங்களும் ஆனந்தத்தைத் தரும் ஸ்தோத்ரங்கள்.

அந்த ஸ்தோத்ரங்களில் ஒன்று அம்பிகையின் ஸந் நிதியில் ஸரஸ்வதி வீணை வாசிப்பதைப் பற்றிச் சொல் கிறது. அது:

विपञ्च्या गायन्ती विविधमपदानं पशुपतेः
त्वयाऽऽरब्धे वक्तुं चलितशिरसा साधुवचने ।
तदीयैर्माधुर्यैरपलपिततन्त्रीकलरवां
निजां वीणां वाणी निचुलयति चोलेन निभृतम् ॥

[ஸௌந்தர்ய லஹரி, 66]

ஸரஸ்வதி அம்பாள் சந்நிதானத்தில் வீணையில் பாடுகிருள். எதைப் பற்றிப் பாடுகிருள்? நமக்கு

நம்மைப் பற்றி ஒருவர் பாடினால்¦சந்தோஷமாக இருக்கும். அம்பாளுக்குப் ப்ரியமானதைப் பற்றிப் பாடுகிறாள். அது எது? அம்பிகைக்கு ஸதீ என்று பெயர். பதிவ்ரதை யென்பது அதன் அர்த்தம். அம்பிகையைப் போலப் பதிவ்ரதை வேறு ஒருவரும் இல்லை. அவள் தன்னுடைய புருஷனுக்குக் குறைவான வார்த்தை வந்தவுடனேயே தேஹபரித்யாகம் செய்தவள். தாக்ஷாயணியைப்பற்றிய கதையினால் இதைத் தெரிந்து கொள்ளலாம். அத்தகைய மஹாபதிவ்ரதைக்குப் பசுபதியின் ஸ்தோத்திரத்தைக் கேட்பதில் பரமானந்தம் உண்டு. ஸரஸ்வதி அவளுடைய ஹ்ருதயம் அறிந்தவள். ஸர்வஜ்ஞத்துவம் ஸரஸ்வதிக்கு உண்டு. அவள் அம்பிகைக்கு விருப்பமான பசுபதியின் புகழைக் கானம் பண்ணுகிறாள். அப்படிப் பாடுவதைக் கேட்டு அம்பிகை ஆனந்தப்படுகிறாள். ஒருவர் நன்றாகப் பாடாவிட்டாலும் கேட்பவர் ஆனந்தப் படவேண்டும். உபந்யாசம் செய்யும் பொழுதும் அப்படிச் செய்ய வேண்டும். ஆனந்தப்பட்டால்தான் அவர்களுக்கு மேலே மேலே சொல்லவரும். அதில் என்ன குற்றம் இருக்கிறது என்று ஆராய்ந்து கொண்டு முகத்தைக் கடுமையாக வைத்துக்கொண்டிருப்பது உசிதமல்ல. ஔசித்யம் தெரிந்த அம்பிகை சிரஃகம்பம் பண்ணிக் கொண்டு 'நன்றாக இருக்கிறது" என்று சொல்ல ஆரம்பிக்கிறாள். ஆரம்பிக்கும் பொழுது அந்த வாக்கின் இனிமையில் ஸரஸ்வதியின் வீணையின் நாதமெல்லாம் ஒளிந்துகொண்டது; அந்த மாதுர்யத்திலே முழுகிப் போயிற்று. உடனே ஸரஸ்வதி அந்த வீணைக்கு முழுதும் உரைபோட்டு மூடி வைத்துவிட்டாள். இதைத்தான் இந்த ச்லோகம் சொல்லுகிறது.

மூககவி செய்தவற்றிலிருந்து ஒரு ச்லோகம் சொல்லு கிறேன் :

कलमञ्जुलवागनुमितगलपञ्जरगतशुकग्रहौत्कण्ठ्यात् ।
अम्ब रदनाम्बरं ते बिम्बफलं शम्बरारिणा न्यस्तम् ॥

[ஆர்யாசதகம், **99**]

அம்பிகையின் உதடு கோவைப் பழம் போல இருக் கிறது. அந்தக் கோவைப் பழத்தை மன்மதன் அங்கே வைத்தான். அவன் ஒரு வேடன். அவனுக்கு ஒரு கிளி யைப் பிடிக்கவேண்டு மென்று உத்தேசம். கிளிக்குக் கோவைப்பழத்தில் ப்ரியம். ஆகையால் அதை வைத் திருக்கிறான். கிளி எங்கே இருக்கிறது? உண்மையில் கிளி இல்லை. கிளி இருக்கும் என்று தோன்றியது. அம்பிகையின் மதுரமான சொல்லைக்கேட்டு அவளுடைய கண்டமாகிய பஞ்ஜரத்தில் ஒரு கிளியிருந்து பேசுகிற தென்று அவன் நினைத்து அதைப் பிடிக்க ஆசை கொண்டு வைத்த கோவை பழம்போல இருக்கிறது அம்பிகையின் உதடு என்பது இந்த ச்லோகத்தின தாத்பர்யம்.

ஆசார்யாளுடைய ச்லோகம் ஒன்றைப் பார்ப்போம் :

चेटीभवन्निखिलखेटीकदम्बतरुवाटीषु नाकिपटली-
कोटीरचारुतरकोटीमणीकिरणकोटीकरम्बितपदा ।
पाटीरगन्धकुचशाटीकवित्वपरिपाटीमगाधिपसुता
घोटीकुलादधिकधाटीमुदारमुखवीटीरसेन तनुताम् ॥

[அம்பாஷ்டகம்]

தேவ ஸ்த்ரீகளின் தலையின் மேலுள்ள கிரீடத்தில் மிக்க அழகான உச்சியிலுள்ள ரத்னத்தின் கிரணத்தின் நுனி அம்பிகையின பாதத்தில் கர்பூர ஹாரத்தி செய்கின்றது என்று ஒரு செய்தி இதிற் சொல்லப்பட்டிருக்கிறது. தேவஸ்த்ரீ:கள் அம்பிகையின் பாதத்தில் விழுந்து நமஸ்கரிப்பதை இது குறிக்கிறது. அம்பிகையின் தாம்பூல விசேஷமானது குதிரை வேகத்தைவிட அதிகமான வேகத்தோடு கவி பாடும் சக்தியைத் தருவது என்ற ஒரு கருத்தும் இதில் இருக்கிறது.

இத்தகைய அம்பிகையை நாம் ஸ்தோத்ரம் பண்ணிக் கொண்டிருப்பதே ஒரு பெரிய ஆனந்தத்தை நமக்குத் தருகிறது.

GOVERNMENT ORIENTAL MSS. LIBRARY, MADRAS
21 JAN 1953

# 10. அம்பிகை உபாஸனையின் பலன்

[22—11—1932]

ஸௌந்தர்யலஹரி என்ற அம்பிகை ஸ்தோத்திரத்தில் கடைசி சுலோகத்தை முன்பு ஒரு நாள் சொன்னேன். அதற்கு முன்பு ஒரு சுலோகம் இருக்கிறது. நம்முடைய ஸ்ரீ ஆசாரியர்கள் ஜகன்மாதாவாக இருக்கும் அம்பாளிடத்தில் சித்தத்தை வைத்து பக்தி பண்ணினால் என்ன பலன் உண்டாகிறது என்பதைக் கடைசி சுலோகத்துக்கு முந்தின சுலோகத்தில் சொல்லியிருக்கிறார். எந்த மாதிரிப் பிரயோஜனம் உண்டாகிறது? எந்த மாதிரி பக்தி பண்ண வேண்டும்?

இந்தச் சரீரத்துக்கு ஒரு தாய் இருக்கிறாள். பசி, கஷ்டம் முதலியவை வருகிற எந்த ஸமயத்திலும் உடனே தாயாரை ஸ்மரித்துக் கொண்டு பரம ஆவலாகத் துக்கப்படுவோம். தாயாரை நினைக்கும்பொழுது ஆவல் அதிகமாகும். இந்த ஆவல் பசுமாட்டுஜாதியில் அதிகமாக இருக்கும். குழந்தை அழுவதைவிட ஆயிரம்மடங்கு, கன்றுக்குட்டிக்கு அம்மா என்று கத்துவதில் ஆவல் தோன்றுகிறது. கன்றுக்குட்டி அம்மா என்று கத்துவதைப் பார்த்துத்தான் மனிதர்கள் அம்மா என்ற பெயரை வைத்திருக்கவேண்டும். இவ்வளவு பிரேமையுள்ள ஒரு பிராணி சொல்லுவதைத்தான் நாமும் சொல்லவேண்டும், என்று அது மாதிரியே சொல்ல ஆரம்பித்தார்களென்று தோன்றுகிறது.

அம்மா என்பதிலுள்ள 'மா' என்பதுதான் ஸமஸ்த பாஷைகளிலும் தாய்க்குச் சொல்லப்படுகிறது. ஸம்ஸ்கிருதத்தில் 'மா' என்பது தாயைக்குறிக்கும். ஹிந்துஸ்தானியில் 'மாயி' என்று சொல்லுகிறார்கள். இங்கிலீஷில் 'மம்மா' என்றுசொல்லுகிறார்கள். மஹாராஷ்டிரம், தெலுங்கு முதலிய பாஷைகளில் அம்மா என்றுதான் சொல்லுகிறார்கள். பரம ஆவலோடே தாயாரைக் காணவேண்டும் என்று இருக்கிற பசுவின் கன்றின் மனமுருகுவது போல லோகமாதாவினுடைய அநுக்கிரஹத்தை எப்பொழுது பெறுவோம் என்று இருக்க வேண்டும். அப்படி இருந்தால் எந்த மாதிரி அநுக்கிரஹம் ஏற்படுமென்று, ஸ்ரீ ஆசாரியர்கள் சொல்லியிருக்கிறார்கள். அவர்கள் சொல்லுவதைத் தெரிந்து கொள்ள வேண்டியது முக்கிய கடமை.

குழந்தைக்கு தாய்—கன்றுக்கு பசுவைப் போல எந்த ஜன்மத்திலும் எந்தக் காலத்திலும் எல்லாப் பிராணிகளுக்கும் தாயாராக இருக்கும் பரதேவதையின் பாதாரவிந்தத்தில் நிறைந்த அன்பு இருந்தால் பிரயோஜனம் என்ன என்று அவர்கள் ஸௌந்தர்ய லஹரியில் கடைசி பாகத்தில் சொல்லியிருக்கிறார்கள். உலகத்தில் பெரும்பாலும் கிரந்தம் பண்ணுகிறவர்கள் இந்தக் கிரந்தத்தைப் படிக்கிறவர்களுக்கு 'அது உண்டாகும், இது உண்டாகும்' என்று சொல்லுவது வழக்கம். ஸ்ரீ ஆசாரியர்களோ இந்த சுலோகத்தில் தன் பெருமையைச் சொல்லிக்கொள்ளவில்லை. அம்பிகையின் சரணாரவிந்தத்தில் ஒரு பிராணிக்குப் பக்தியிருந்தால்

அதனுடைய பலன் இது என்றுதான் சொல்லியிருக்கிறார்கள். இப்படி அடிக்கடி சொல்வதுண்டு.

सरस्वत्या लक्ष्म्या विधिहरिसपत्नो विहरते
रतेः पातिव्रत्यं शिथिलयति रम्येण वपुषा ।
चिरं जीवन्नेव क्षपितपशुपाशव्यतिकरः
परानन्दाभिख्यं रसयति रसं त्वद्भजनवान् ॥ ९९ ॥

'உன்னுடைய பக்தி உள்ளவன் எது எது வேண்டும் என்று நினைக்கிறானே அவைகளை யெல்லாம் அடைகிறான்'. எல்லோரும் எதை வேண்டுமென்று நினைக்கிறார்கள்? எல்லாம் கிடைக்கும் இடம் ஒன்று இருக்கிறதென்று வைத்துக்கொள்வோம். அங்கே ஒருவனைக் கூட்டிக்கொண்டு போனால் என்ன வேண்டுமென்று நினைப்பான்? கௌரவத்துக்காகச் சில பேர் ஒன்றும் வேண்டாமென்று சொல்லுவதுண்டு. அவசியம் கிடைக்கும் என்றுள்ள இடத்திற்குக் கூட்டிக் கொண்டு போய்க் கேட்டால் யாரும், நிறையப் பணம் வேண்டுமென்பார்கள். லக்ஷ்மீகடாக்ஷம்தான் முதலில் வேண்டும் என்பார்கள். 'லக்ஷ்மீகடாக்ஷம் உன்னுடைய பக்தர்களுக்குக் கிடைக்கும்' என்று ஸ்ரீ ஆசாரியர்கள் சொன்னார்கள்.

सचामररमावाणीसव्यदक्षिणसेविता ।

என்று ஸஹஸ்ரநாமத்தில் ஒரு நாமா இருக்கிறது. லக்ஷ்மியும் ஸரஸ்வதியும் அம்பிகையின் இரண்டு பக்கங்களிலும் இருந்து கொண்டு சாமரம் போடுவதை அந்த நாமா குறிப்பிடுகின்றது. அப்படியிருக்க பக்தியினால் ஏங்குகின்றவனுக்கு அம்பிகையின் கடாக்ஷம் பட்டால்

அந்த இரண்டு பெயர்களும் கிங்கரிகளாக ஆவார்கள். கிம் கரோமி-என்ன செய்யவேண்டும்-என்பவர்கள் தாம் கிங்கரிகள். அம்பிகையின் கடாக்ஷம் திரும்பும் இடத்தில் லக்ஷ்மி இருப்பாள். அந்த இடத்தில் லக்ஷ்மீ கடாக்ஷம் பரிபூர்ணமாக ஏற்படும். பரிபூர்ணத்துக்கு எல்லை எது? லக்ஷ்மீகடாக்ஷம் நிறைய இருக்கிற இடம் வைகுண்டம். புருஷோத்தமன் வீடு அது. அங்கே நிறைய ஐசுவரியம் இருக்கும். பாக்கி எல்லா இடங்களும் குறைவாக இருக்கும் இடங்கள் தாம். அதற்குச் சொந்தக்காரராகிய ஹரிக்குக்கூடப் பக்தன் கிருஹத்தில் அஸூயை வந்து விடும். 'நம்முடைய ஸ்திரீ லக்ஷ்மீ நமக்குத்தான் அதிக ஸௌபாக்கியம இருக்கவேண்டும். அந்த இடத்தில் இருக்கிறதே என்று அவரும் அஸூயைப் படுவார்.

முதலில் ஸரஸ்வதியென்று இந்த சுலோகம் ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது. அப்புறம் லக்ஷ்மீயைப் பற்றிச் சொல்லப்பட்டிருக்கிறது. ஒருவன் முதலிற் கேட்பது லக்ஷ்மீகடாக்ஷம் அல்லவா? ஆம். ஆனாலும் 'இவன் அசட்டுத் தனமாகக் கேட்கிறான். எவ்வளவு கொடுத்தாலும் செலவு பண்ணி விடுவான். எவ்வளவு கொடுக்கிறோமோ அவ்வளவுக்கவ்வளவு பாபத்தைத் தான் விலைக்கு வாங்கிக் கொள்ளுவான். ஆகையால் விவேகத்தைக் கொடுத்துப் பின்பு ஐசுவரியத்தைக் கொடுத்தால் நன்றாக அநுபவிப்பான். புண்ணியம் பண்ணிப் பின் ஜன்மத்துக்கும் உபயோகப்படுத்திக் கொள்ளுவான்' என்று அம்பிகை எண்ணுகிறாள். குழந்தை கேட்கிறதைக் கொடுக்கவேண்டும் என்று நினைக்கின்ற தாய் முதலில் விளக்கெண்ணெய் கொடுக்கிறாள்.

அப்புறம் எது தின்ருலும் உடம்புக்கு அசௌஸளக்யம் வராது. அது போல விவேக ஜ்ஞானத்தை நிறையக் கொடுத்து அப்புறம் ஐசுவர்யத்தைக் கொடுப்பாள். எதைக் கொடுத்துப் பின் பணம் கொடுத்தால் பணம் வீண்போகாதோ அதை முன்புகொடுப்பாள்.

स मेन्द्रो मेधया स्पृणोतु ततो मे श्रियमावह ।

[தைத்திரீயோபநிஷத்]

'ஸ்ரீயைக் கொடு' என்று இதிற் சொல்லப்படுகிறது. அதற்கு முன்னே மேதையைக் கொடு என்று பிரார்த்தித்து அப்புறம் ஸ்ரீயைக் கொடு என்று சொல்லப் பட்டிருக்கிறது. ஸ்ரீ ஆசாரியரவர்கள் இதற்குப் பாஷ்யம் செய்கையில்,

एवमादीनि कुर्वाणा श्रीर्या, तां ततो मेधानिर्वर्तनात् परम् आवह आनय । अमेधसो हि श्रोरनर्थायैवेति ।

[தைத்திரீயோபநிஷத்]

'மேதையில்லாதவனுக்கு ஸ்ரீயைக் கொடுத்தால் அனர்த்தம் உண்டாகும்' என்று எழுதியிருக்கிருர். பணத்தை வைத்துக் கொண்டு புண்ணியம் ஸம்பாதிக்க வேண்டும். அறிவில்லாதவன் பாபத்தைத்தான் ஸம்பாதிப்பான். பாபம் ஸம்பாதிக்கும் அனர்த்தத்துக்குத் தான் அர்த்தம் உபயோகப்படும்.

अर्थमनर्थं भावय नित्यं नास्ति ततः सुखलेशः सत्यम् ।
पुत्रादपि धनभाजां भीतिः सर्वत्रैषा विहिता रीतिः ॥

என்று நம்முடைய ஸ்ரீஆசாரியரவர்களே பஜகோவிந்தத்திற் சொல்லி யிருக்கிருர்கள்.

எல்லாம் உண்டாகும் இடம் அம்பிகையின் இடம். இங்கே முதலில் மஹாபுத்தி உண்டாகும். எதை நினைத்தாலும் பளீரென்று தோன்றும். புத்தியில் தோன்றுகிற எதுவும் நல்லதாகத் தோன்றும். அப்படியிருந்து பணம் வந்தால் இஹபர லோகங்களுக்குப் பிரயோஜனமான காரியங்களைச் செய்வான்.

ஏகாந்த பக்தி அம்பிகையிடத்தில் யாருக்கு உண்டோ அவர்களுக்கு ஸரஸ்வதியின் அருள் நிறைய உண்டாகும். நல்ல புத்தி ஏற்படும். அதற்கு எல்லை எவ்வளவு? பிரம்மா வீட்டில் அது ஸம்பூர்ணமாக இருக்கிறது. அம்பிகை உபாஸகனுக்கு அதைவிட அதிகமாக உண்டாகும். அதனால் பிரம்மாவுக்குக் கோபம் வரும்.

இப்படி, ஹரியும் பிரம்மாவும் கோபித்துக் கொள்ளும் வரைக்கும் ஸரஸ்வதிலக்ஷ்மீகடாக்ஷம் அம்பிகையின் பக்தனுக்கு உண்டாகும். ஐசுவரியம் எதற்கு வேண்டும்? அநுபவிக்கவும், தர்மம் பண்ணவும், உபகாரம் பண்ணவுந்தான் வேண்டும். பாபியிடம் ஐசுவரியம் போனால் அவனுக்கும் கோபம்; லோகத்துக்கும் கஷ்டம் உண்டாகும்.

புத்தி, ஐசுவரியம் இந்த இரண்டும் வந்துவிட்டன. இன்னும் என்ன வேண்டும்? அம்பிகை வேண்டும் என்பதைக் கொடுப்பாள். நமக்குக் கேட்கத் தெரியாவிட்டாலும் எது வேண்டுமோ அதைக் கொடுப்பாள்.

நிறையப் படிப்பு—வேத சாஸ்திர அறிவு—பல பாஷாஜ்ஞானம்—ஐசுவரியம் இருந்தாலும் இன்னும் ஓர் ஆசை இருக்கிறது.

பண விஷயத்தில் எல்லோருக்கும் ஆசை யென்று சொன்னேன். தனியாகக்கேட்டால் எல்லோரும் பணந் தான் வேண்டுமென்று சொல்லுவார்கள் என்றேன். அதற்கு அடையாளம் என்ன வென்றால், ஒருவருக்கு எவ்வளவு பணம் வந்தாலும் பாங்கியில் போட்டாலும், அவரைக் கேட்டால், "நீங்கள் என்னவோ நினைத்துக் கொண்டிருக்கிறீர்கள். உள்ளே பார்த்தால் ஒன்றும் இல்லை" என்று தான் சொல்லுவார். பணக்காரர் என்று யாராவது சொன்னால் அவரைத் துவேஷிப்பார். அதனால் அவர் தமக்கு இருக்கிற பணம் மிகவும் கொஞ்சம் என்ற அபிப்பிராயம் உடையவர் என்று தெரிகிறது. எல்லோருக்கும் இப்படித்தான் அபிப்பிராயம் இருக்கிறது. மேலும் மேலும் வேண்டும் என்பதுதான் பணக்காரர்களுடைய எண்ணம். வெளியிலே ஒன்றும் இல்லை யென்பதனாலேயே இன்னும் நிறைய வேண்டும் என்னும் எண்ணம் இருக்கிறது வெளியாகிறது. ஆகையால், 'உனக்குப் பணம் வேண்டுமா? முதலில் விவேகந் தருகிறேன்; அப்புறம் அது தருகிறேன்' என்று சொல்லுகிறாள்.

உண்மையில் தாரித்திரியம் என்பது எப்படி உண்டாகிறது? 'நான் தரித்திரன்' என்று மூடிவைத்துக் கொள்வதனால்தான் தாரித்திரியம் உண்டாகிறது. திருப்தியாக இருந்தால் சந்தோஷம் உண்டாகும். தரித்திரன் என்று சொல்லிக் கொண்டிருந்தால் யார் தருகிறார்கள்? பணக்காரன் என்று சொன்னால் என்ன? அப்பொழுது சந்தோஷமாகவாவது இருக்கலாம்.

வித்தை, ஐசுவரியம் இரண்டுக்கும் அப்புறம் என்ன வேண்டும்? பணம் இல்லை இல்லை என்கிறதினால் பணம்

வேண்டு மென்ற ஆசை இருப்பது தெரிகிறது. இன்னு மொரு ஆசை யிருக்கிறது. அது என்ன?

ஒவ்வொருவருக்கும் இரண்டு அபிப்பிராயங்கள் இருக்கின்றன. நாம் எல்லோரைக் காட்டிலும் புத்தி சாலி, எல்லோரையும்விட அழகுடையோம் என்ற எண்ண மிருக்கிறது. புத்திசாலி என்ற எண்ணத்தினல் எல்லோரையும் ஏமாற்றி விடலாம் என்ற நினைவு உண்டாகிறது. எல்லாத் தப்பையும் ஒருவருக்கும் தெரியாமற் பண்ணிவிடலாம் என்று நினைக்கிறோம். இன்னும் புத்திசாலியாக ஆகவேண்டும் என்ற ஆசை இல்லை. பணக்காரனுக ஆகவேண்டும் என்ற தீர்மானம் மட்டும் இருக்கிறது.

புத்தி அழகு இவை உத்க்ருஷ்டம்என்பதனல் அவை இருப்பதாக நினைவு இருக்கிறது. பசி முதலியவை இருக்கின்றனவென்று துக்கம் உண்டாகிறது. அழகு புத்திசாலித்தனம் இருக்கின்றன வென்ருல் ஸந்தோஷம் உண்டாகிறது. அழகு இல்லையென்ருல் நன்ருக இல்லை. பரிபூர்ண லாவண்யம வேண்டும். மஹாதேஜஸ் வேண்டும். எல்லோரும் பார்த்து ஆச்சரியப்படும்படி யான தேஜஸ் வேண்டும். அதுவும் அம்பிகையை உபாஸிப்பதனல் கிடைக்கும். அதற்கு எல்லை யார்? அழகில் முதல்வனுகச் சொல்லப்படுபவன் மன்மதன். ஈசுவராதிகளைச் சொல்லும்பொழுது கூட கோடி மன்மதனைப் போன்ற அழகுடையவர் என்று சொல்லுவ துண்டு. அவன்தான் அழகின் பேரெல்லை. அவனை விட அதிகமான அழகு கிடைக்கும். ஸரஸ்வதியும் லக்ஷ்மியும் ஸ்திரீகள். அவர்கள் அநுக்கிரஹம் வைத் தால் அவர்கள் புருஷர்கள் கோபித்துக் கொள்ளுகிருர்

கள். இங்கே மன்மதனுக்கு ஸமானமான அதிக அழகு கிடைப்பதற்கு அடையாளம் என்ன? ரதி பதிவிரதை. அம்பிகையின் கடாக்ஷம் உள்ள மஹாபுருஷனைப் பார்த்தால், 'நம்முடைய புருஷன் இங்கே எங்கே வந்தார்?' என்ற பிரமம் உண்டாகும். அதனால் அவருடைய பாதிவிரத்தியம் கொஞ்சம் சிதிலமாகிவிடும்.

ஸரஸ்வதிகடாக்ஷம் நாம் புத்திசாலி என்று நினைப்பதைப் போக்குகிறது. பணத்தை வைத்துக்கொண்டு க்ஷேமமாக இருக்கும் மார்க்கத்தைத் தரும் கல்வி உண்டாகிறது. பணமும் அழகும் இருக்கின்றன. இவ்வளவுக்கும் பின்பு இன்னும் என்ன வேண்டும்?

இவ்வளவும் இருந்தன. 'எல்லாம் இருக்கின்றன; இவன் பிள்ளையாண்டானுக்குக் கர்மாதிகாரம் சீக்கிரம் இருக்கிறது' என்றால் இவ்வளவினாலும் என்னப் பிரயோஜனம். ஆதலால் எத்தனை நாள் இருக்க வேண்டுமென்று தோன்றுகிறதோ அவ்வளவு நாள் அம்பிகை கிருபையினால் தீர்க்காயுளோடு இருக்கலாம். இந்த நான்கும்—வித்தை, அர்த்தம், லாவண்யம், தீர்க்காயுள்—எல்லாம் வந்துவிட்டன. அப்புறம் என்ன வேண்டும்? 'இப்படியே இருந்துகொண்டு என்ன பண்ணுகிறது? இது என்ன வேலை? எதற்காக இப்படி இருக்கவேண்டும்' என்று தோன்றுவதுதான் அடுத்தபடியாக வேண்டியது. அப்படி நாமாக க்ஷணம் நினைத்தால் நடுவிலே போய்விடும். அம்பிகை கிருபையினால் தானாகத் தோன்றவேண்டும்.

இவ்வளவையும் வைத்துக்கொண்டு ஏன் உட்கார்ந்திருக்கவேண்டும்? பிரயோஜனம் என்ன? 'அது வேணும், இது வேணும்' என்ற பாசம் எதற்கு?

அநாவசியமான பிரேமை நம்மை இழுக்கிறது. பாசம் கட்டி இருக்கிறவரைக்கும் நாம் பசு. நாம் பகவானுகிற வரையில் அந்தப் பாசம் இருக்கும். அதுவரையில் நாம் பசு; அவன் பசுபதி; பின்பு பரப்பிரம்மம். பசுவுக்கும் உள்ள ஸம்பந்தத்தைக் கத்தரித்துவிட்டால் பசுத்துவம் போய்விடும். என்றைக்கு வைராக்கியம் தோன்று கிறதோ, அன்றைக்குப் பாசம் அறுந்துவிடும். பணம், அழகு, ஆயுள், மனது இவைகளைக்கொண்டு கட்டப் பட்டிருக்கிறோம். அவை வேண்டாம். உள்ளேசுத்தமான— வெளுப்பான ஒன்றுதான் இருக்கிறது. அது ஆத்ம ஸ்வரூபம். பசுபாசத் தொடர்பு அற்றுப்போனல் பேரின்பமயமாக இருக்கலாம். அதுதான் பலன்; கடைசி முடிவு.

இன்றைக்கே பேரானந்தம் உண்டென்றால் ஒருவ னும் பஜனம் பண்ணமாட்டான். அதனால், கல்வி பணம் முதவியவைகளைப் பெற்றுப் பின்பு பரமானந்தத்தை அடைகிறுனென்று சொல்லப்பட்டிருக்கிறது.

ஆகையினால் ஜகத்துக்குத் தாயாகவும் கருணை யுடையவளாகவும் இருக்கும் பரதேவதையிடம் கன்றுக் குட்டியைப் போன்ற பக்தி இருக்கவேண்டும். எப்படி குழந்தைக்கு வேண்டியதைத் தாய் தருவாளோ அப்படி அவள் இஹலோகத்தில் வித்தை, பணம் முதலியவை களை அடையச் செய்து பின்பு தானாக பழுத்துப் பரமானந்தத்தைப் பெறும்படி அநுக்கிரஹம் செய்வாள்.

---

## 11. அம்பிகை பூஜையின் பிரயோஜனம்

(9—12—32)

அம்பிகையினுடைய பிரஸாதத்தைப் பரிபூர்ணமாக அடைந்த ரிஷிகளுக்குள் துர்வாஸர் சிறந்தவர். அவர் அம்பிகை விஷயமாக 'ஆர்யாத்விசதி' என்று 200 சுலோகங்கள் சொல்லியிருக்கிறார். ஆர்யா விருத்தம் என்பது ஒருவகைச் சுலோகம். அந்தச் சுலோகங்கள் 200 கொண்டது ஆர்யா த்விசதி. அதற்கப்புறந்தான் மற்றக் கவிகளுடைய வாக்கு உண்டாயின. அம்பிகை அந்த வாக்கில் ஆவிர்ப்பவித்திருக்கிறதுபோல அநுபவிக்கிறவர்களுக்குத் தெரியும்.

ஸ்ரீசக்கிரத்தை நாற்பது முக்கோணமென்பார்கள். ஆவரண தேவதைகள் பலர் அதில் உண்டு. மேல் உள்ள பிந்துஸ்தானத்தில் காமேசுவரனுடைய வாம பாகத்திலுள்ள காமேசுவரியாகிய அம்பிகை இருக்கிறாள். அவளைத் துர்வாஸர் ஸ்தோத்திரம் பண்ணியிருக்கிறார். அது மிகவும் உத்கிருஷ்டமான க்ரந்தம். பாராயணம் பண்ணினால் நல்ல அநுக்கிரஹம் உண்டாகும், நல்ல வாக்கு உண்டாகும். கவித்வசக்தி அம்பிகையை ஸ்தோத்திரம் பண்ணுவதன் பிரயோஜனமாக உண்டாவது. அம்பிகையின் உபாஸனா விசேஷத்தால் ஓர் ஊமை வாக்கு பெற்று 500 சுலோகங்கள் சொல்லியிருக்கிறார். அவை மூகபஞ்ச சதி என்று வழங்கப்படும். ஆர்யா சதகம், பாதாரவிந்த சதகம், ஸ்துதி சதகம், கடாக்ஷ சதகம், மந்தஸ்மித சதகம் என்று ஐந்து சதகங்

கள் சேர்ந்தவைதான் மூகபஞ்ச சதி என்பது. துர்வாஸர் 200 ஆர்யாவிருத்தங்கள் சொன்னார். மூகபஞ்ச சதியில் ஒவ்வொன்றிலும் 100 ஆர்யாவிருத்தங்கள் இருக்கின்றன. இந்த இரண்டும், நல்ல சித்திரக்காரன் அம்பிகையின் ஸ்வரூபத்தை எழுதிக் காட்டுகிற மாதிரி மனதுக்குத் தோன்றும்படி செய்கின்றன. கண்ணுக்கும் மனதிற்கும் எட்டாதவளைக் காட்டுகிற மாதிரி இருக்கின்றன.

இவைகளைத் தவிர அம்பாள் விஷயமான ஸ்தோத்திரமாக நம்முடைய ஆசார்யர்கள் சொன்ன ஸௌந்தரியலஹரி இருக்கிறது. காம்பீர்யம் எவ்வளவு உண்டோ அவ்வளவும் அதில் இருக்கிறது. மார்த்தவம் மிகுந்து இருப்பது மூகபஞ்சதி.

அம்பிகையை ஆராதித்தால் ஸகல தேவதைகளையும் ஆராதித்த மாதிரியாகும் என்ற அர்த்தத்தைத் தரும் ஒரு சுலோகம் ஸௌந்தரியலஹரியில் இருக்கிறது.

त्रयाणां देवानां त्रिगुणजनितानां तव शिवे
भवेत्पूजा पूजा तव चरणयोर्या विरचिता ।
तथाहि त्वत्पादोद्वहनमणिपीठस्य निकटे
स्थिता ह्येते शश्वन्मुकुलितकरोत्तंसमकुटाः ॥ २५ ॥

அம்பிகை சித்ஸ்வரூபிணி.

चिच्छक्तिः परमेश्वरस्य विमलं चैतन्यमेवोच्यते-
ऽसत्यैवास्य जडा परा भगवतः शक्तिस्त्वविद्योच्यते ॥

[ஸங்க்ஷேபசாரீரகம்]

चिदेकरसरूपिणी ।

என்று ஸஹஸ்ரநாமாவளியில் வருகிறது.

ஸத் என்பது உண்மையான வஸ்து. சித் என்பது அறிவான பொருள். ஸத்தியம் எல்லாம் ஈசுவர ஸ்வரூபம். அதை அறிவதற்கு அறிவுவேண்டும். அது அம்பிகை ஸ்வரூபம். ஸத்தை ஈசுவரனாகவும் சித்தை அம்பிகையாகவும் சொல்லுவதுண்டு. அறிகிறது இல்லை என்றால் உள்ளதால் பிரயோஜனமில்லை. இரண்டும் ஒன்றேதான்.

எல்லாச் சாஸ்திரங்களும் முடிவில் ஞானமடைவதைத்தான் சொல்லுகின்றன.

ज्ञानादेव तु कैवल्यं प्राप्यते येन मुच्यते ।

[உபநிஷத்]

ஸாக்ஷாத் ஞானம்தான் மோக்ஷ ஸாதனம். ஞான ஸ்வரூபிணீ பரதேவதை. அவள் அநுக்கிரஹம் பெற்றால் ஜன்ம விடுதலையாகி மோக்ஷமடையலாம். ஸஹஸ்ர இதழ்களையுடைய தாமரை சிரஸுக்குமேல் பிரம்மரந்திரத்தில் இருக்கிறது. அதில் சந்திரபிம்பத்துள் அம்பிகை இருக்கிறாள். சிரஸ் ஜ்ஞானஸ்தானம். அங்கிருந்து பிரவஹிக்கும் அமிர்ததாரையால் பேரானந்தம் உண்டாகிறது. ஸ்ரீவித்யையாக அம்பிகை அங்கே இருக்கிறாள். அவளை ஆராதித்தால் ஞானம் ஆவிர்ப்பாவமாகி அஜ்ஞானம் போகும். இது ஸௌந்தரியலஹரியில் சொல்லப்பட்டிருக்கிறது. ஆர்யாத்விசதியிலும் மூகபஞ்சசதியிலும் அம்பிகையை உபாஸிப்பதால் ஞானம் உண்டாகும் என்று சொல்லப்பட்டிருக்கிறது.

அதனுல்தான் அம்பிகையை ஆராதிப்பது எல்லாத் தேவதைகளையும் ஆராதித்தமாதிரி ஆகின்றது. நாமாக ஆராதிக்காவிட்டாலும் பெரிய ரிஷிகளும் மகாத்மாக்களும் அம்பிகையை ஆராதித்த கோயில் முதலிய இடத்திற்குப் போய் வணங்கினுல் அம்பிகை கடாக்ஷம் ஏற்பட்டு எந்தக் காலத்திலும் க்ஷேமமாக இருக்கும் அநுக்ரஹம் கிடைக்கும்.

---

# 12. கௌரி பூஜை

[18—11—1932]

விவாஹ காலத்தில் அம்பாளை அவசியம் ஆராதிக்க வேண்டும். ருக்மணி, பகவான் பர்த்தாவாக வர வேண்டுமென்று அம்பிகையை ஆராதித்தாள். கௌரீ பூஜை பண்ணி அந்த பாக்கியத்தை அடைந்தாள். ஸரஸ்வதி, லக்ஷ்மீ பூஜைகளைப் பண்ணக்கூடாதா? அம்பிகை பூஜைதான் பண்ணினாள். அதன் காரணம் என்ன? கௌரீ பூஜையை ருக்மணி ஏன் பண்ண வேண்டும்? விவாஹமாகாத கன்னிகைகள் விவாஹமான பின்பு பாதிவிரத்தியத்தோடு இருக்க வேண்டும். பர்த்தா எப்படி இருக்கிறானோ அப்படியே இருக்க வேண்டும். அப்படி இருப்பதால் சித்தம் திடமாக இருக்க வேண்டும். அப்படி இருப்பதற்கு யார் ஸதியோ, யார் பதிவிரதையோ, யார் பாதிவிரத்தியத்தையே ஒரு ரூபமாக வைத்துக்கொண்டிருக்கிறாளோ, அந்த அம்பிகையை ஆராதனம் பண்ணினால் நல்லது. உத்தரதேசத்திலும் ஆந்திர தேசத்திலும் கன்னிகைகள் கௌரீபூஜை செய்யும் ஸம்பிரதாயம் இருக்கிறது. அதை அநுசரித்துப் பாகவதத்திலும் சொல்லப்பட்டிருக்கிறது.

அம்பிகைக்குப் பாதிவிரத்தியம் இருப்பதற்கு அடையாளம் இருக்கிறதா? இருக்கிறது. தாக்ஷாயணியாக அவதரித்த பொழுது பதிதூஷணம் பண்ணின தக்ஷனுக்குப் புத்திரியாக வந்த சரீரம் கூடாதென்று தியாகம் பண்ணி விட்டுப் பர்வதராஜனுக்குப் புத்திரியாக ஆனாள்.

இன்று வெள்ளிக்கிழமையாகையால் நேற்றுச் சொன்ன விவாஹத்தோடு அம்பிகை ஸம்பந்தமான விஷயத்தைச் சொல்ல வேண்டுமென்று எண்ணினேன்.

பர்த்தாவின் தூஷணையைக் கேட்ட காது இருக்கக் கூடாது; அந்தக் காதையுடைய சரீரமே இருக்கக் கூடாது என்று சரீரத்தியாகம் பண்ணினது மட்டும் அம்பாளுடைய பாதிவிரத்திய அடையாளமன்று. மற்ற அடையாளங்களும் இருக்கின்றன. லக்ஷ்மிக்குப் பாதிவிரத்யம் இருப்பது ஒரு விசேஷம் இல்லை. அழகு, அலங்காரம் முதலியவைகளெல்லாம் மஹாவிஷ்ணுவினிடத்தில் இருக்கின்றன. அப்படிப்பட்ட பதியினிடத்தில் பாதிவிரத்தியமுடையவளாக இருப்பது ஒரு பிரமாதம் அல்ல. அம்பிகையினுடைய பர்த்தா எப்படிப்பட்டவர்? ச்மசானவாஸி; பாம்பு, சடை, எலும்பு முதலியவைகளை வைத்துக் கொண்டிருக்கிறார். அகோரஸ்வரூபம் உடையவர்.

या ते रुद्र शिवा तनूरघोरापापकाशिनी ।

என்றும்,

अघोरेभ्योऽथ घोरेभ्यो घोरघोरतरेभ्यः ।

[ஸ்ரீருத்ரம்]

என்றும் ருத்ரத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. மஹா கோரமான ஸ்வரூபியாக அவர் இருக்கிறார். இப்படிப் பட்டவரிடத்தில் பாதிவிரத்தியத்தை அநுஷ்டித்து அந்தப் பதியினுடைய தூஷண சப்தத்தைக் கேட்டதற்காகச் சரீரத் தியாகம் பண்ணிவிட்டு மறுபடியும் அந்தப் பதியையே அடைய வேண்டுமென்று தபஸ் பண்ணி அடைந்த ஒரு ஸதியை ஆராதித்தால் எப்பொழுதும்

பாதிவிரத்தியம் ஸ்திரமாக இருக்கும் அநுக்கிரஹம் கிடைக்கும் அல்லவா?

புருஷர்களுக்கு ஆசார்யரிடத்தில் ஸ்திரமான பக்தி இருக்கவேண்டும்.

ओङ्कारपञ्जरशुकीमुपनिषदुद्यानकेलिकलकण्ठीम् ।
आगमविपिनमयूरीमार्यामन्तर्विभावये गौरीम् ॥
दयमानदीर्घनयनां देशिकरूपेण दर्शिताभ्युदयाम् ।

என்று காளிதாஸன் அம்பிகையை ஸ்தோத்திரம் செய்திருக்கிறான். அதில் ஆசாரிய ஸ்வரூபம் ஸாக்ஷாத் அம்பிகையே என்று சொல்லப்பட்டிருக்கிறது.

अवटुतटघटितचूलीं ताडितताडीपलाशताटङ्काम् ।
वीणावादनवेलाकम्पितशिरसं नमामि मातङ्गीम् ॥

என்பது மற்றொரு சுலோகம். தாளீபலாசம் என்பது பனையோலை அதுதான் அம்பாளுக்குத் தாடங்கமாக இருக்கிறது. அதனால் அம்பிகை பூஜையில் கருகுமணி பச்சோலை கொடுக்கிறார்கள். கல்யாணம் பண்ணிக் கொள்ளும் ஸ்திரீகள் நித்தியமங்களமாக இருக்க, ஸர்வ மங்களையாகிய அம்பிகையைப் பூஜை செய்யவேண்டும். அவளே மங்களஸ்வரூபி. ஆகையால் வேறொரு வஸ்துவை எடுத்துத்தர வேண்டும் என்பது இல்லை.

அம்பிகையின் ஆராதனத்தால் பதிபக்தியும் குரு பக்தியும் உண்டாகும். அதற்காகத்தான் ருக்மணி பூஜை செய்தாள். காளிதாஸன் வாக்கில் அம்பிகையின் தாடங்கத்தைப்பற்றிச் சொல்லி யிருப்பதாகச் சொன்னேன். அம்பிகையினுடைய தாடங்கத்தில் நம்முடைய

ஸ்ரீ ஆசாரியர்களாகிய பகவத் பக்தர்களுக்கும் பிரீதி அதிகம். ஜம்புகேசுவரத்தில் உள்ள அகிலாண்டேசுவரியினுடைய சக்தியைக் கலியுகத்தில் பொறுக்க முடியவில்லை. அதனால் அதைச் சாந்தப்படுத்துவதற்காக அந்த அம்பிகைக்குத் தாடங்கப்பிரதிஷ்டை செய்தார்கள்.

அம்பிகையினுடைய சக்தி மிகவும் அதிகம். அவளுடைய கோயிலின் 9-ஆவது வாயிலுக்கு அணிமாதி அஷ்டஸித்திகள் காவல். அந்த வாயிலுக்கு வெளியில் வந்துநின்ற தேவர்கள்கூட அஷ்டமாஸித்தியை அடைகிறார்கள். இதை ஸ்ரீ ஆசாரியர்கள் சொல்லியிருக்கிறார்கள்.

पुरारातेरन्तःपुरमसि ततस्त्वच्चरणयोः
सपर्यामर्यादा तरलकरणानामसुलभा ।
तथा ह्येते नीताः शतमखमुखाः सिद्धिमतुलां
तव द्वारोपान्तस्थितिभिरणिमाद्याभिरमराः ॥

[ஸௌந்தர்யலஹரீ, 95.]

அம்பாளுக்குரிய சக்ரம் ஸ்ரீசக்ரம். அது மஹாமேருஸ்வரூபமானது. அதில் பல ஆவரணங்கள் உண்டு. ஒவ்வோர் ஆவரணத்துக்கும் பல அதிதேவதைகள் இருக்கிறார்கள். பிந்துஸ்தானம் பராசக்தி. எல்லாவற்றிற்கும் மேலானது பராசக்திஸ்வரூபம். அதற்குக் கீழே இருப்பவைகளெல்லாம் சின்ன சக்திஸ்வரூபங்கள்; ஆவரணசக்தி அம்பிகை இருக்கும் சிந்தாமணி கிருஹத்தில் ஒன்பது ஆவரணங்கள் இருக்கின்றன. ஒன்றுக்கொன்று கோடிகோடி யோஜனை தூரத்தில் இருக்கிறது.

கடைசித் துவாரம் அணிமாதி அஷ்டஸித்திகளுக்கு ஏற்பட்டது. அந்தத் துவாரத்துக்கும் அம்பிகை இருக்கும் இடத்துக்கும் எவ்வளவோ தூரம் இருக்கிறது. ஆனாலும் அதற்கு வெளியிலே நிற்கும் பொழுதே அணிமாதிகளின் அநுக்கிரஹத்தால் ஐசுவரியத்தை அடைகிறார்கள்.

இந்திராதி தேவதைகள் ஒன்பதாவது வாயிற்படியில் இருந்துகொண்டே அஷ்டவிபூதி சக்திகளின் அநுக்கிரஹம் பெற்றுப் போகிறார்கள். இந்திராதிகளுக்குப் பரதேவதையை அணுகத்தக்க இந்திரிய நிக்கிரஹம் இல்லை. ஸனகாதி யோகிகளுக்கே கிடைக்காது. அந்தப் புரத்துக்குட் போவதற்கு எவ்வளவு இந்திரிய நிக்கிரஹம் வேண்டும்!

அப்படிப்பட்ட சக்தியை உடைய அம்பிகையின் பூர்ண சைதன்யம் ஏற்பட்டால் கலியில் தாங்கமுடியாதென்று எண்ணி ஜம்புகேசுவரத்துக்கு ஸ்ரீ சங்கராசாரியர்கள் போகும்போது அம்பிகையைப் பிரார்த்தித்தார்கள். ஸௌம்ய ஸ்வரூபமாக இருக்கவேண்டுமென்று சக்தியை ஆகர்ஷித்து ரத்னமயமான ஸ்ரீசக்ரம், பஞ்சாக்ஷரயந்திரம் இரண்டையும் சேர்த்து இரண்டு சக்ரம் பண்ணி அம்பாள் கர்ணத்தில் ஸ்தாபனம் பண்ணினார்.

அந்தத் தாடங்கத்தைப்பற்றி ஸ்ரீசங்கராசாரியர்கள் "உன்னுடைய தாடங்கத்தின் மஹிமையால் தான் பரமேசுவரனுக்கு இவ்வளவு மஹிமை ஏற்பட்டிருக்கிறது" என்று ஸௌந்தர்யலஹரியில் சொல்லியிருக்கிறார்.

सुधामप्यास्वाद्य प्रतिभयजरामृत्युहरिणीं
विपद्यन्ते विश्वे विधिशतमखाद्या दिविषदः ।
करालं यत् क्ष्वेलं कबलितवतः कालकलना
न शम्भोस्तन्मूलं तव जननि ताटङ्कमहिमा ॥

[ஸௌந்தர்யலஹரீ, 28.]

தேவதைகள் அமிருதபானம் பண்ணினார்கள். அமிருதம் ஜராமரணங்கள் இல்லாமற் பண்ணும். அவர்களகூட பிரளயகாலத்தில் இல்லாமற் போய்விடுகிறார்கள்; பயம் அடைகிறார்கள். பரமேசுவரர் எதைச் சாப்பிட்டார்? அந்த ஆஹாரத்தை நினைத்தாலே மரணபயம் உண்டாகிறது! அப்படிப்பட்ட ஹாலாஹல விஷத்தை அப்படியே எடுத்துச் சாப்பிட்டுவிட்டார்; மிச்சம் வைக்காமல் சாப்பிட்டார். அப்படிச் சாப்பிட்டும் அவருக்குக் காலக்கணக்கே இல்லை. அவர் கால காலராக இருக்கிறார். காலனை உதைக்கிறார். விஷத்தைச் சாப்பிட்டுக்கூட இப்படி இருக்கிறார். மற்றவர்களோ அமிருதத்தைச் சாப்பிட்டுக்கூட மரணமடைகிறார்கள். இதற்குக் காரணம் என்ன? எது இதற்கு மூலம்? "உன்னுடைய தாடங்க மஹிமைதான் காரணம்" என்று அம்பிகையைப் பார்த்து ஸ்ரீசங்கராசாரியர்கள் சொல்லுகிறார்கள். அந்தத் தாடங்கமானது அம்பிகையின் காதைவிட்டுக் கீழே இறங்காமல் இருக்கவேண்டும். அவர் எதைச் சாப்பிட்டாலும் ஒன்றும் பண்ணாவிட்டால் அது அப்படி இருக்கும். அதனால் தாடங்கந்தான் காரணம் என்று சொல்லுகிறார். ஸ்ரீ ஆசார்யர்களுடைய வாக்காகிய இது சுருதி. ஸ்மிருதிக்கு சுருதிமூலம் இருக்கும். ஈசுவரனைச்

சொன்னது சுருதி. அதை அநுஸரித்துப் பெரிய மஹான்கள் சொன்னது ஸ்மிருதி.

या ते रुद्र शिवा तनूः शिवा विश्वा ह भेषजीं शिवा रुद्रस्य भेषजी तया नो मृड जीवसे ।

என்பது வேதம்.

'ஹே பரமேசுவரா! நீ பிழைத்திருக்கின்றாயே. உனக்கு யார் மருந்து கொடுத்தார்கள்? உனக்கு இரண்டு சரீரங்கள் இருக்கின்றன. அவற்றில் ஒன்று கோரமானது. மற்றொன்று மங்களகரமானது. கோரஸ்வரூபம் உன்னுடையது. சிவ என்பதை, சிவா என்று நீட்டினால் அம்பிகைக்கு ஆகும். அம்பிகைக்குப் பாதி உண்டு. அவள் ஸ்வரூபம் பரமமங்களகரமானது. லோகம் முழுவதற்கும் மருந்து அதுதான். அம்பாள் கடாக்ஷம் இருந்தால் அகாலமரணம் லோகத்தில் இராது. உனக்கும் மருந்து பண்ணுவது அந்த ஒரு சரீரம். ஸர்வமங்கள சரீரந்தான் மருந்து. அதனால் எங்கள் அம்பிகையால்தான் நீ பிழைத்திருக்கிறாய்' என்ற கருத்து கீழே சொன்ன சுருதியில் இருக்கிறது. இது மூலச்சுருதி. ஸௌந்தர்யலஹரி முதல் சுலோகத்திலும் இதே கருத்து வந்திருக்கிறது.

शिवः शक्त्या युक्तो यदि भवति शक्तः प्रभवितुं
न चेदेवं देवो न खलु कुशलः स्पन्दितुमपि ।
अतस्त्वामाराध्यां हरिहरविरिञ्चादिभिरपि
प्रणन्तुं स्तोतुं वा कथमकृतपुण्यः प्रभवति ॥

'சிவன் சக்தியோடு இருந்தால்தான் இருக்கமுடியும், இல்லாவிட்டால் அசையக்கூட முடியாது' என்று இந்த

சுலோகம் சொல்லுகிறது. இப்படிப்பட்ட அம்பிகையை ஆராதிக்க எவ்வளவோ புண்ணியம் பண்ணி யிருக்க வேண்டும்.

பர்த்தாவினுடைய கோரஸ்வரூபத்தால் அம்பிகையினுடைய பாதிவிரத்தியம் அதிகமாகிறது. பாதிவிரத்தியத்துக்காகத் தேஹபரித்தியாகம் செய்த அந்த அம்பிகையைக் கல்யாணத்துக்கு முன்பு ஆராதித்தால் அவளுடைய அநுக்கிரஹத்தால் பாதிவிரத்தியமும் ஸர்வமங்களங்களும் திடமான சித்தமும் உண்டாகும்.

---

# 13. பார்த்தஸாரதி

[5—11—1932]*

ஆதியில் இரண்டாயிரம் வருஷங்களுக்கு முன் ஸ்ரீ ஆசார்யஸ்வாமிகள் அவதாரம் செய்து ஆஸேது ஹிமாசலம் ஸஞ்சாரம்பண்ணி இங்கே உள்ள ஸகலப் பிராணிகளுக்கும் எது க்ஷேமமோ அதை அடைவதற்குரிய அநுக்கிரஹத்தைச் செய்தார்கள். அப்படி அநுக்கிரஹம் பண்ணினது அந்தக்காலத்தில் இருந்தவர்களுக்கு மாத்திரம் உபயோகப்பட்டது. பின்னுல் வந்தவர்களும் க்ஷேமத்தைத் தரும் காரியங்களை மறக்காமல் இருக்கவேண்டும். அப்படி மறக்காமல் இருப்பதற்காக நான்கு இடங்களில் நான்கு மடங்களை ஸ்ரீ ஆசார்ய ஸ்வாமிகள் ஸ்தாபித்திருக்கிருர்கள். அப்படி ஸ்தாபித்து சிரேயஸைத்தரும் தர்ம மார்க்கத்தை மறக்காமல் இருக்கும்படி எல்லோருக்கும் சொல்லவேண்டும் என்று எங்களைப் போன்றவர்களுக்கு ஆஜ்ஞாபித்திருக்கிருர்கள். 'நான் எந்தக் காரியங்களை இந்த லோகத்துக்கு க்ஷேமகரமென்று சொல்லிவந்திருக்கிறேனே அந்தக் காரியங்களை எல்லோரும் செய்துவரவேண்டுமென்பதும், அவரவர் சக்திக்கும் புத்திக்கும் தக்கபடி சொல்ல வேண்டும்' என்பதும் அவருடைய ஆஜ்ஞை. அந்த ஆஜ்ஞையைக் கோடியில் ஒரு பங்காவது நடத்தப் பிரயத்தனம் பண்ணவேண்டியது எங்கள் காரியம். அதோடு வேருரு காரியமும் நடத்தும்படி ஆஜ்ஞையிட்டிருக்கிருர்கள். அந்தக் காரியத்தைச் சக்திக்குத்

* திருவல்லிக்கேணி ஹிண்டு ஹை ஸ்கூலில் சொன்ன வார்த்தைகள்.

தக்கபடி செய்வது எங்கள் கடமை. அவருடைய பாதஸ்மரணத்தோடு உத்தமமான க்ஷேத்திரங்களுக்கும் தீர்த்தங்களுக்கும் போய்வரவேண்டும் என்பது அந்த ஆஜ்ஞை. மஹான்களால் ஏற்பட்ட க்ஷேத்திரங்களிலும் தீர்த்தங்களிலும் ஈசுவரஸாந்நித்யம் அதிகமாக இருக்கும். அங்குள்ளவர்கள் அநேகமாக ஆஸ்திகர்களாகவே இருப்பார்கள். அவர்களுக்கு ஆஸ்திக தர்மத்தைப் போதிக்க வேண்டும் என்பது முக்கியமான காரியம். அதற்காகத் தான் நாங்கள் ஊரூராக வருகிறோம்.

இது மிகவும் உத்தமமான க்ஷேத்திரம். இங்கே ஸாக்ஷாத் ஸ்ரீ கிருஷ்ணபகவான் எந்த நாளிலும் அழியாத தத்துவத்தை உபதேசிக்கும் மூர்த்தியாக இருக்கிறார். ஸ்ரீ கிருஷ்ணனுக்கு வேணுகோபாலன், கோபாலகிருஷ்ணன், பாண்டுரங்கன், பாண்டவர்தூதன் முதலிய பல அவஸரங்கள் உண்டு. அவைகளெல்லாம் அந்த ஸமயத்தில் இருந்தவர்களுக்குமட்டும் பிரயோஜனமுடையவைகளாக் இருந்தன. பார்த்தஸாரதி அவஸரமானது எந்தக் காலத்திலும் எந்தத் தேசத்திலும் உள்ளவர்கள் ஸம்ஸார துக்க நிவ்ருத்தியின்பொருட்டுத் தெரிந்து கொள்ளக் கூடிய கீதோபதேசம் செய்த அவஸரம். அந்த சாஸ்திரம் படித்தால் ஞான இன்பத்தைத் தரும். அதை உபதேசம் செய்த மூர்த்தி இந்த க்ஷேத்திரத்தில் இருப்பதால் இது பெரிய ஞான பூமிகளில் முதல் பூமி. ஞானத்திற்கு உயர்வைத்தரும் க்ஷேத்திரம் இது. தவிர, பகவான் தம்முடைய பக்தனுக்கு அநுக்கிரஹம்பண்ண மிகவும் கீழான கைங்கர்யத்தையும் பண்ணுவாரென்பதைக் காட்டும் க்ஷேத்திரம் இது. குதிரைக்காஸாரி வேலை மிகவும் தாழ்வானது. அதைக் கூடப் பண்ணத்

தயார் என்று பார்த்தஸாரதி காட்டுகிறார். இடது கையால் பரம கேவலமான தொழிலைச் செய்துகொண்டு கர்மயோகத்தையும், வலது கையால் ஞானோபதேசம் செய்துகொண்டு ஞானயோகத்தையும் காட்டுகிறார். அர்ஜுனன் ஸ்வாமியிடத்தில் மிகுந்த பக்தியோடு கேட்கிறான். அவன் பக்தியோக ஸ்வரூபனாக (Personification of Bakthi-Yoga) இருக்கிறான். இப்படி நரநாராயணர்களாகிய இருவரும் சேர்ந்து மூன்று யோகத்தையும் ஸூசிப்பித்துக்கொண்டிருக்கிறார்கள். இந்த ஸமயத்தில் இங்கே ஒருவிதமான சண்டையுமில்லை. எல்லோரும் ஆனந்தமாக இருக்கிறோம். அப்படியிருந்தும் ஒருவர் ஒரு நன்மையான காரியத்தைச் சொல்லுகிறதும் அதைக் கேட்கிறதும் கஷ்டமாக இருக்கின்றன. அந்த ஸமயத்திலோ அடுத்த க்ஷணம் தலைபோகப்போகிறது. யார் தலை எப்பொழுது போகுமோ என்பது தெரியாத ஸமயம். இந்தக் கூட்டத்தில் இரண்டுபேர் சண்டை போட ஆரம்பித்தால் உடனே எல்லோரும் எழுந்து போய்விடுவோம். அப்பொழுதோ 18 அக்ஷௌஹிணி ஸைன்னியங்கள் பெரிய யுத்தத்துக்கு ஆரம்பம் செய்திருக்கின்றனர். அப்படிப்பட்ட மஹா யுத்த ஸமயத்தில் பரம சாந்தனாக இருந்துகொண்டு சந்தேஹங்களையெல்லாம் அர்ஜுனன் நிவர்த்தி செய்துகொண்டான். பகவானும் பரமோபதேசம் செய்தார். எதைக்காட்டிலும் ஆபத்தில்லையோ அப்படிப்பட்ட ஆபத்து வருகின்ற சமயத்தில் ஒரு பெரிய விஷயத்தை உபதேசம் செய்தார் பகவான்.

यस्मिन् स्थितो न दुःखेन गुरुणापि विचाल्यते ॥

[கீதை, VI-22]

பரமதுக்கம் வந்தாலும் கலங்காத உபதேசம் அது. அந்த

உபதேசத்தை அந்த சமயத்தில் அந்தப் பகவான்தான் சொல்லமுடியும்; அதை அந்த அர்ஜுனன்தான் கேட்க முடியும். ஞானமாகிய நிதி உற்பத்தியான அவசரம். அத்தகைய க்ஷேத்திரத்தில் வாஸம்பண்ணும் பாக்கியத்தை நீங்கள் பெற்றிருக்கிறீர்கள். உத்தம க்ஷேத்திரங்களுக்கும் உத்தம தீர்த்தங்களுக்கும் போய்வரவேண்டுமென்பது ஆசார்ய ஸ்வாமிகளின் ஆஜ்ஞை. அவர்கள் ஆஜ்ஞையைப் பூர்த்தியாக நடத்த முடியாது. அதில் கோடியில் ஒரு பங்கு செய்வதுகூட ஸாத்தியம் இல்லாமல் இருக்கிறது. ஆனாலும் நடத்தியாக வேண்டுமே.

நமக்கெல்லாம் மனது என்று ஒன்று இருக்கிறது. ஒவ்வொரு தேஹத்திலும் ஒவ்வொரு மனது இருக்கிறது. அந்த மனது இல்லாவிட்டால் கண், காது, கால் முதலியவைகள் ஸௌக்கியமாக இருந்தாலும் ஒன்றும் செய்யமுடியாது. சித்தப்பிராந்தி உண்டாகிவிட்டால் ஒன்றும் செய்யமுடிவதில்லை. மனது நன்றாக இருந்தால்தான் சகல இந்திரியங்களும் வேலை செய்யும். மனது மிகவும் கெடுதலாக இருந்தால் அதனால் அதிகக்கஷ்டங்கள் உண்டாகும். எல்லாருக்கும் ஹிம்ஸை உண்டாகும். பைத்தியம் பிடித்தவனுக்கு மனது அதிகக் கெடுதலாக இருக்கிறது. அதனால் அவனுக்கும் கஷ்டம்; மற்றவர்களுக்கும் ஹிம்ஸை. நமக்கு அவ்வளவு பைத்தியம் இல்லை; சாதாரணப் பைத்தியமாக இருக்கிறோம். இதிலே கொஞ்சம் அளவு குறைவாக இருக்கிறது. கோபம், தாபம் முதலிய கெடுதல்கள் இருக்கின்றன. அதற்குள் கொஞ்சம் சாந்தியும் இருக்கிறது. மனது நல்ல தன்மை குறைந்து விட்டால் பைத்தியமாகிறது; அதனால் பரம துக்கம் உண்டாகிறது. நிரம்ப நன்றாக இருந்தால் பரம

சாந்தி உண்டாகிறது. இந்தப் பைத்தியம் போய் என்ன கஷ்டம் வந்தாலும் அசையாமல் மலைபோல இருக்க வேண்டும். அந்த நிலையை அடைவதற்கு வழி எது? நம்முடைய மனதை உத்தம பதார்த்தத்தில் வைத்தால் உத்தமமான இன்பம் உண்டாகும். உத்தம பதார்த்தம் எது? பரமேசுவரன்தான் உத்கிருஷ்டமான வஸ்து. அவருடைய பாதம் நமக்கு உத்கிருஷ்டமானது. அந்தப் பாதத்தில்தான் மனதை வைக்கவேண்டும். பகவத் பாதஸ்வரூபந்தான் ஸ்ரீ ஆசார்யஸ்வாமிகள்; அதனால் தான் பகவத்பாதாள் என்று நாம் சொல்லுகிறோம். மிகவும் கீழான இடத்தில் மனதை வைத்தால் கீழான பைத்தியம் உண்டாகிறது. மேலான இடத்தில் வைத்தால் மேலான பிரம்மவித்தாக ஆகிறோம். ஆகையால் ஈசுவர சரணாரவிந்தத்தைப் பிடித்தால் நமக்கு அப்படிப்பட்ட உயர்ந்த நிலை உண்டாகும். அந்தச் சரணாரவிந்தமே ஸ்ரீ ஆசார்யஸ்வாமிகள். அவர்களைத் தியானம் செய்வதே பரமேசுவரனுடைய சரணாரவிந்தத் தியானமாகும். மனது கெட்டுப்போய் எவ்வளவோ பாபம் செய்திருக்கிறோம். குழந்தையாக இருந்ததி லிருந்து ஈசுவர தியானம் செய்திருந்தால் இவ்வளவு நாள் எவ்வளவோ பாபம் போயிருக்கும். இப்பொழுதோ மேலேயும் பாபத்தை ஸம்பாதித்துக் கொண்டிருக் கிறோம். எத்தனை நாள்கள் ஈசுவரசரணாரவிந்தியானம் செய்கிறோமோ அவ்வளவு நாள்களும் நம்முடைய காரியத்தை நாம் பார்த்தவர்களாகிறோம். இந்த ஜன் மத்தை எடுத்ததற்குப் பலன் அதுதான். அந்தச் சரணாரவிந்தியானத்தைப் பண்ணச்சொல்லி எங்க ளுக்கு ஸ்ரீ ஆசார்ய ஸ்வாமிகள் ஆஜ்ஞைசெய்திருக்கிறார் கள். மற்றவர்களையும் செய்யச் சொல்லும் படியும்

சொல்லியிருக்கிறார்கள். குழந்தைகளைப் பள்ளிக் கூடத்துக்கு அனுப்புகிறோம். அவர்கள் சரியாக நடக்கா விட்டால் உபாத்தியாயர் உபயோகமில்லை என்றுசொல்லி விடுகிறோம்.

राजा राष्ट्रकृतं पापं राजपापं पुरोहितम् ।
भर्तारं स्त्रीकृतं पापं शिष्यपापं गुरुं व्रजेत् ॥

[நீதிசாஸ்திரம்]

குடிகள் செய்த பாபம் அரசனைச் சேரும். பிரபலர்கள் துர்ப்பலர்களை ஹிம்ஸிக்காமற் பாதுகாக்க வேண்டியது அவனுடைய கடமை. அப்படிச் செய்யாவிட்டால் அந்தப் பிரபலர்கள் செய்யும் பாபம் அரசனைத்தான் சேரும். சிஷ்யர்களுடைய பாபம் குருவைச் சேரும். அதனால் எல்லோருக்கும் குருவாகிய ஆதி ஆசார்ய ஸ்வாமிகள் எங்களைப் பிரதிநிதிகளாக்கி எல்லோருக்கும் ஈசுவர சரணாரவிந்த தியானம் செய்யும்படி சொல்ல வேண்டு மென்று சொல்லிவிட்டார்கள். அப்படிச் சொன்னால் கொஞ்சமாவது பாபம் நிவர்த்தியாகும். 'அவர்கள் கேட்காவிட்டால் அவர்களுக்கும் சேர்த்து நீங்கள் தியானம் பண்ணுங்கள்' என்று சொல்லியிருக்கிறார்கள். அந்தக் கடமையைச் செய்யப் பிரயத்தனம் பண்ணி வருகிறோம். நீங்களும் எத்தனை நாழிகை பாதத்தியானம் பண்ணுகிறீர்களோ அவ்வளவு ஸௌக்யம் உண்டாகும். அதற்கு அநுகூலமாகப் பல புஸ்தகங்கள் இருக்கின்றன. நாம் எவ்வளவு நாழிகை தியானம் பண்ணுகிறோம்? தினந்தோறும் பல காரியங் களைச் செய்து வருகிறோம். ஆனாலும் ஈசுவரத்தியானம் கொஞ்சந்தான் செய்திருப்போம். வம்பு, பரிஹாஸம்,

பத்திரிகை படித்தல், அதன் மேல் அபிப்பிராயம் சொல்லுதல் (comment) முதலிய காரியங்களில் காலம் செலவாகிறது. பத்திரிகை படிப்பது கெடுதல் இல்லா விட்டாலும் அபிப்பிராயம் சொல்லிச் சர்ச்சை செய்வதில் தான் அநாவசியமாகப் பொழுதுபோய் விடுகிறது. அப்படிச் செலவான காலமெல்லாம் ஈசுவரத்தியானத் தில் செலவழித்திருப்போமானால் இப்பொழுது பாப மூட்டைக்குப் பயப்படவேண்டாம். இப்பொழுது பாப மூட்டை வர வர ஏறிக்கொண்டே இருக்கிறது. நாம் பூலோகத்தில் வந்து விட்டோம். இனி, யாராக இருந் தாலும் போயாக வேண்டும். இருக்கும்பொழுது பிராணிகளுக்கு ஹிம்ஸையில்லாமல் இருக்கவேண்டும். அதற்காக ராஜகாரியங்கள் தேசகாரியங்கள் செய்ய வேண்டும். எல்லோரும் இருக்கிறவரைக்கும் நன்றாக இருக்க அப்படிப்பட்ட காரியங்களைச் செய்ய வேண்டும். ராஜாங்கம் இந்த லோகத்தில் இருக்கும்பொழுது நாம் நன்றாக இருக்கச் செய்வது. துஷ்டர்களால் ஸாதுக் களுக்கும், பலிஷ்டர்களால் துர்ப்பலர்களுக்கும் கஷ்டங் கள் உண்டாகாமல் அரசன் பரிபாலனம் பண்ண வேண்டும். அந்த அரசனை இஹலோக ஸுகத்துக்காக நாம் ஸேவை பண்ணவேண்டும். அவன் நன்றாகப் பரிபாலனம் பண்ணவிட்டால் நாம் எடுத்துக்காட்ட வேண்டும். இந்த லோகத்தில் இருப்பதற்காக அரசன் வேண்டியது போலப் பரலோகம் போகும்படியான காரியத்துக்கு ஆசார்யர் வேண்டும். இந்த லோகத்தில் மட்டும் நன்றாக இருந்தால் போதாது. எந்தக் காலத்தி லும், இங்கேயிருந்து போன பிறகுகூட நன்றாக இருக்க வேண்டும். அதற்காகச் சில காரியங்களைச் செய்யவேண் டும். இந்த லோகமானது பாபத்தை அலம்புகிற இடம்.

தேஹம், மனது, சாஸ்திரம், க்ஷேத்திரம், தீர்த்தம்முதலிய பல ஸௌகரியங்கள் இங்கேதான் இருக்கின்றன. நாம் வாக்கினாலும் மனதினாலும் கைகால் முதலியவற்றாலும் பாபம்செய்து இருக்கிறோம். அந்தப் பாபங்களை யெல்லாம் அவைகளைக்கொண்டே புண்ணியம் செய்து கரைத்து விடவேண்டும். இந்த ஜன்மம் இருக்கும் பொழுதே பாபங் களை அலம்பிக் கொள்ளவேண்டும். இது போனால் அப்புறம் எது வருமோ தெரியாது, மாடாகப் பிறந் தால் ஒன்றும் பண்ண முடியாது. 'ஏன் பின்னால் செய்து கொள்ளக்கூடாது' என்று இருந்தால் இந்த ஜன்மம் போகும் காலம் நமக்குத் தெரியாது. நாம் போவதற்குள் 'பாப மூட்டை இல்லை' என்றுசொல்லும் படி இருந்தால் அப்புறம் பஞ்சைப் போல் ஆனந்தமாகப் பறந்து போகலாம். அப்பொழுது பயமே இராது. எங்கிருந்து புறப்பட்டோமோ அங்கேயே போய்ச் சேர்ந்துவிடலாம். அதற்கு எவ்வளவோ வழிகள் இருக் கின்றன. உத்ஸவம் செய்வது, பூஜை செய்வது, க்ஷேத்திராடனம் பண்ணுவது, பரோபகாரம் பண்ணுவது முதலிய பல வழிகள் இருக்கின்றன. எல்லாம் நல்ல வைகளே. ஏதாவது ஒரு சின்னக் காரியத்தைக் குழந்தை முதல் பெரியவர்கள் வரையில் எல்லோரும் அவரவர் மனது நன்றாக இருப்பதற்காகச் செய்ய வேண்டும்.

अपि चेदसि पापेभ्यः सर्वेभ्यः पापकृत्तमः ।
सर्वं ज्ञानप्लवेनैव वृजिनं संतरिष्यसि ॥

[கீதை IV-36]

"பாபம் பண்ணினோமென்று பயப்பட வேண்டாம்.

இந்த லோகத்திலுள்ள ஸகல பாபிகளுக்கும் முதலான வனக இருந்தாலும் பயம் வேண்டாம். ஞானமாகிய ஓர் ஓடம் தருகிறேன். [அதனல் பாபங்களைத் தாண்டி விடலாம்]'' என்று இந்த க்ஷேத்திரத்திலுள்ள பகவான் சொல்லியிருக்கிருர்.

ஆகையால் நாம் நம்முடையமனது சுத்தமாக இருப்ப தற்காக, நித்திய சிரேயஸை அடைவதற்காகப் பகவத் பாதத்தை—ஆசார்ய ரூபமான சரணத்தை—தியானம் பண்ண வேண்டும். மனது அதற்குத்தான் ஏற்பட்ட இடம். எத்தனை நாழிகை செய்ய முடியுமோ அவ்வளவு நாழிகை தியானம் செய்யவேண்டும். ஐசுவரியம் இருந் தாலும், தாரித்திரியம் இருந்தாலும் செய்யவேண்டும். நம்முடைய பழக்கத்துக்குட்பட்டவர்களையும் செய்யும்படிச் சொல்ல வேண்டும். செய்யவில்லையென்று கோபித்துக் கொள்ளக் கூடாது. அன்போடே அவர்களுக்குப்படும்படி சொல்ல வேண்டும். அன்போடே சொன்னல் எப்படிப் பட்ட மனமும் கரையும். அந்தக் காரியத்துக்கு எவ்வளவு நாழிகை கொடுக்க முடியுமோ அவ்வளவு நாழிகையும் கொடுக்கவேண்டும். மற்ற காரியங்களை யெல்லாம் குறுக்கிக் கொள்ள வேண்டும். மனதினல் ஈசுவரனது பாதத்தியானம் செய்ய எவ்வளவு காலம் கிடைக்கிறதோ அவ்வளவு காலமும் தியானம் செய்ய வேண்டும். காலம் கிடைக்காமற் போகாது. அநாவசியமான வம்புப் பேச்சு முதலியவைகளிற் போகும் காலத்தைத் தியானத்தில் செலவழித்தால் நிரம்ப நன்மை உண்டாகும். இப்படி எல்லோரும் சிரேயஸுக்கு உபயோகமான ஒரு காரி யத்தைத் தவராமற் செய்துவர வேண்டும்.

இப்படிச் சொல்ல வேண்டுமென்பது எங்களுக்கு இடப்பட்ட ஆஜ்ஞை. அதைத் தெரிவித்தேன், தெரி

வித்ததினல் என்னுடைய கடமையை நான் செய்தவனு கிறேன். சொல்லும் பாக்கியம் எனக்கு உங்களால் கிடைத்தது. ஸ்ரீ ஆசார்யர்கள் எதைச் சொல்ல ஆஜ்ஞை செய்திருக்கிருர்களோ அதைக் கேட்கும் பாக்கியம் உங்களுக்கு உண்டாயிற்று. உங்களால் என்னுடைய கடமையைச் செய்தவனுனேன்.

---

# 14. சிவ விஷ்ணு அபேதம்*

I

[4—12—1932]

பரமேசுவரனும் ஸ்ரீமந் நாராயணனும் ஒரே வஸ்து, இரண்டல்ல. இதுதான் எல்லா சாஸ்திரங்களின் ஸித்தாந்தம். பெயர் வேறு, உருவம் வேறு, வேலை வேறு, ஆனால் உள்ளிருக்கும் வஸ்து ஒன்றே. நம்முடைய ஸ்ரீ ஆசாரியர்களின் ஸித்தாந்தமும் இதுவே. ஆனால் மூவகையான கொள்கைக்காரர்கள், பரமசிவன் வேறு, ஸ்ரீமந் நாராயணன் வேறு என்று அபிப்பிராயப்பட்டிருக்கிறார்கள்.

மெய்கண்ட சாஸ்திரம் என்று மற்றொரு பெயருடைய சைவ ஸித்தாந்தத்தில் பரமசிவனும் ஸ்ரீமந் நாராயணனும் வேறு வேறு என்று சொல்லப்பட்டிருக்கிறது; ஸ்ரீமத்வாசாரியரும் அப்படியே சொல்லியிருக்கிறார். ஸ்ரீ ராமானுஜருடைய அபிப்பிரயமும் அதுதான். ஸ்ரீகண்டாசாரியாரும் பிரம்ம ஸூத்திரத்திற்குப்பாஷ்யம் செய்திருக்கிறார். அவருடைய அபிப்பிராயம் மெய்கண்ட சாஸ்திரத்தின் அபிப்பிராயத்திற்கு ஒத்தது. ஸ்ரீமந் நாராயணனுடைய ஹிருதயத்தில் பரமசிவன் அந்தர்யாமியாக இருப்பதாக அவர் சொல்லுகிறார். ஸ்ரீமத்வாசார்யர் பரமசிவனுடைய ஹிருதயத்தில் ஸ்ரீமந் நாராயணன் அந்தர்யாமியாக இருப்பதாகச் சொல்லியிருக்கிறார். ஸ்ரீ ராமானுஜர், மற்ற பொருள்களிலெல்லாம் ஸ்ரீமந் நாராயணன் அந்தர்யாமியாகவிருப்பது போல் பரமசிவனாகிய ஜீவனிலும் அந்தர்யாமியாக

* இந்த உபந்நியாஸம் மாம்பலத்தில் செய்யப்பட்டது.

இருக்கிறார் என்று சொல்லுகிறார். இவருக்குள் அவரோ, அவருக்குள் இவரோ இருப்பதாக அவர்கள் சொல்லுவதால் ஒருவருக்குச் செய்யும் நமஸ்காரம் இரு வருக்கும் செய்வதுதான். மத்வ ஸித்தாந்தப்படி சிவால யங்களுக்குப் போகலாம். ஆனால் ருத்திரனுக்கு என்று நமஸ்காரம் செய்யவேண்டும். ராமானுஜ சித்தாந் தப்படி விஷ்ணு கோயிலுக்குப் போவது போதும். ஆனால் வழியில் சிவ மூர்த்தத்தைக் கண்டால் ஸேவிக்க வேண்டும். பரமசிவன் பரமபாகவதராகையால் கண்ட விடத்தில் அவரை வணங்காமல் போதல் நிந்தனையாகும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. மெய்கண்ட ஸித்தாந் தம் சுமார் 500 வருஷங்களுக்கு முன்னும், இராமானுஜ ஸித்தாந்தம் சுமார் 700 வருஷங்களுக்கு முன்னும், மத்வ ஸித்தாந்தம் சுமார் 600 வருஷங்களுக்கு முன்னும் ஏற் பட்டவை. திருவாவடுதுறை முதலிய ஆதீனங்களும் சிவ தீக்ஷை செய்துகொள்வோரும் சைவ ஸித்தாந் தத்தை அனுஷ்டிப்பவர்கள். சைவ ஸித்தாந்தம் 14 கிரந்தங்களையுடையது. பண்டார சாஸ்திரம் என்றும் அவைகளுக்குப் பெயர். இந்த மூன்று ஸித்தாந்தப்படி யும் தீக்ஷை உண்டு. ராமானுஜ ஸித்தாந்தப்படி ஜன்மத் தில் ஒருமுறை ஸமாசிரயணம் செய்து கொள்ள வேண்டும். மத்வஸித்தாந்தப்படி பஞ்ச முத்ரா தாரணம் ஆசார்யர்களைக் காணும் போதெல்லாம் செய்து கொள்ள வேண்டும். சைவத்தில் முத்திராதாரணம் இல்லையாயி னும் தீக்ஷை உண்டு. ஆதிசைவர்கள் என்று சொல்லப் படும் குருக்கள்மார்களும் வேளாளபரம்பரையினரும் சிவ தீக்ஷை செய்துகொள்ளுகிறார்கள். மத்வஸம்பிரதாயம் தெலுங்கு, கன்னடம், மஹாராஷ்டிரம் பேசப்படும் பிர தேசங்களில் வியாபித்துள்ளது. ராமானுஜ ஸம்பிரதாயம்

தமிழ்தேசத்தில் முக்கியமாகவும், தெலுங்கு தேசத்தில் கொஞ்சமாகவும் வியாபகமுடையது. இந்த மதஸ்தர்கள் பரமசிவன் வேறு, ஸ்ரீமந்நாராயணன் வேறு என்று சொல்லுகிறார்கள்; ஆனால் ஒருவர் மற்றவரில் அந்தர் யாமியாக இருப்பதாகச் சொல்லுகிறார்கள்.

இந்த மூன்று மதங்களும் ஏற்பட்டதற்குமுன், அதாவது 800 வருஷங்களுக்குமுன் ஜனங்கள் எப்படி அபிப்பிராயப்பட்டிருந்தனர்? அந்தக்கால அபிப்பிராயத்திற்கு ஆதாரமாக இருந்த பிரமாணங்கள் வேதங்கள், சாஸ்திரங்கள், 18 புராணங்கள் ஆகியவைகளே. ஸ்ரீராமானுஜர் காலத்திற்கு முந்தியும் விசிஷ்டாத்வைத ஸித்தாந்தம் சிற்சிலரால் அபிமானிக்கப்பட்டு வந்தது. திருமலைநம்பி ஆளவந்தார், நாதமுனிகள் முதலியவர்கள் விசிஷ்டாத்வைதிகள். நாதமுனிகளிடமிருந்து ஸ்ரீராமானுஜர் உபதேசம் பெற்றதால், விசிஷ்டாத்வைதத்திற்கு நாதோபஜ்ஞம் என்றும் பெயருண்டு. நாதமுனிகளின் பிதா ஈசுவர பட்டர். ஸ்ரீராமானுஜரின் பிதா கேசவஸோமயாஜி; ஸோமயாகம் செய்தவர். அவருடைய மாமா திருமலை நம்பிகள். ஸ்ரீராமானுஜர் பிதா விவாஹம் செய்து கொண்டபோது, அவர் ஸமாசிரயணம் செய்து கொண்டால்தான் பெண்கொடுக்க முடியுமென்று பெண் வீட்டுக்காரர்கள் சொன்னார்களாம். ஆகையால் விசிஷ்டாத்வைத அனுஷ்டானங்களில் அவர்கள் மிகப் பற்றுடையவர்கள் என்று தெரிகிறது. ஆகையால் ஸ்ரீராமானுஜர் தமது மாதுல பரம்பரையில் அபிமானிக்கப்பட்டு வந்த ஸித்தாந்தத்தைப் பிரபலப்படுத்தினார் என்றேற்படுகிறது. விசிஷ்டாத்வைதக் கொள்கைகளுக்குத் திருவாய்மொழி ஆதாரமென்று அவர்

கொண்டார். சைவஸித்தாந்தத்திற்குத் தேவாரம், திருவாசகம் ஆதாரங்களென்று சைவர்கள் கொண்டார்கள். மத்வாசாரியர் வேதத்தையே ஆதாரமாகக்கொண்டவர். வேறு கன்னட கிரந்தங்களை அவர் ஆதாரமாகக் கொள்ளவில்லை. தேவாரம், திருவாய்மொழிகளை அந்தந்த மதஸ்தர்கள் வேதத்திற்குச் சமமாக வைத்துக் கொண்டார்கள். மத்வாசாரியர் கன்னட பாஷைக்கிரந்தம் எதையும் தமக்கு ஆதாரமாகத் தேடவில்லையாயினும் கன்னடபாஷைக்கு ஒரு கௌரவத்தை ஏற்படுத்தினர். கன்னடத்தில்தான் புராணத்தைச் சொல்லவேண்டுமென்றும், கன்னடத்தைத்தான் சிராத்தகாலத்தில் பேசவேண்டுமென்றும் சொல்லி அதற்கு ஒரு கௌரவத்தை ஏற்படுத்தினர். இப்படியெல்லாம் மற்ற மதாசாரியர்கள் சில கட்டுப்பாடுகளை ஏற்படுத்தினர்களாயினும், நம்முடைய ஸ்ரீ ஆசாரியர்கள் ஒரு கட்டுப்பாடும் வைக்கவில்லை. நமக்கு ஒரு தீக்ஷையுமில்லை. பிராம்மணர்களுக்கு உபநயனந்தான் தீக்ஷை. புராணக்கதைகளில் ஸ்ரீ ராமன், ஸ்ரீ கிருஷ்ணன் முதலியவர்களுடைய சரித்திரங்கள் சொல்லப்பட்டிருப்பதில், அவர்கள் முத்ராதானம் செய்து கொண்டதாகக் காணவில்லை. அத்துவைதிகளாகிய நாம் எல்லாக் கோயில்களுக்கும் போகிறோம். வீரசைவர்கள் விஷ்ணு கோயிலுக்குப் போகமாட்டார்கள். ஸ்ரீ ராமாநுஜ ஸித்தாந்தத்தில் சிரத்தை யுள்ளவர்கள் சிவன் கோயிலுக்குப் போகமாட்டார்கள். நாம் மாத்திரம் எல்லாக் கோயில்களுக்கும் போவதால் நமது பெரியோர்கள் அபிப்பிராய மென்னவென்று பார்ப்போம். அக்காலத்தில் வைதிகமதந் தவிர வேறு மதமில்லை.

நம்முடைய ஸ்ரீ ஆசாரியர்கள் "பிரச்னோத்தர ரத்ன மாலிகை" என்ற கிரந்தத்தில் தமது அபிப்பிராயத்தைத் தெளிவாகச் சொல்லியிருக்கிறார்.

"சங்கரநாராயணாத்மா ஏக:" என்று அவர் சொல்லியிருக்கிறார். சங்கரநாராயணன் கோயில் என்று ஒரு க்ஷேத்திரமு மிருக்கிறது. ஸ்வாமி ஒரு பக்கம் சிவனாக வும், மற்றொருபக்கம் நாராயணனாகவு மிருக்கிறார். ஹரி ஹரம் என்று பம்பாய்க்குப் போகிற வழியில் ஒரு க்ஷேத் திர மிருக்கிறது. ஸ்ரீ பகவத்பாதாசாரியர்கள் சிவனும், விஷ்ணுவும் ஒன்றென்று சொல்லுகிறாரே. வேதம் என்ன சொல்லுகிறது; உபநிஷத்துக்களில் பத்துதான் முக்கியமானவை. அந்தப் பத்து உபநிஷத்துக்களில் 'சிவ' என்ற சப்தம் ஒரு இடத்திலும், 'விஷ்ணு' என்ற சப்தம் ஒரு இடத்திலுமே வந்திருக்கின்றன. மற்ற இடங்களில் எல்லாம் "பிரம்மம்" என்ற பதமே பிரயோகிக்கப்பட்டிருக்கிறது. 'விஷ்ணு' என்ற சப்தம் கடோபநிஷத்தில் இருக்கிறது, 'விஷ்ணோ: பரமம் பதம்' என்று சொல்லப்பட்டிருக்கிறது. மாண்டூக்ய உபநிஷத் தில் 'சிவம் அத்துவைதம்' என்று சொல்லப்பட்டிருக் கிறது.

'விஷ்ணோ: பரமம் பதம்' என்பதற்கு மூன்று விதமாக அர்த்தம் செய்யப்பட்டிருக்கிறது. 'பச்யந்தி' அதாவது பார்த்துக் கொண்டிருக்கிறார்கள் என்ற சொல்லை வருவித்துக் கொண்டு நித்தியஸூரிகள் "விஷ்ணுவினுடைய பரமபதமாகிய வைகுண்டத்தைப் பார்த்துக்கொண்டிருக்கிறார்கள்" என்று மற்றவர்கள் அர்த்தம் செய்திருக்கிறார்கள்.

நம்முடைய ஸ்ரீ ஆசாரியர்கள் "விஷ்ணுவாகிய பரம பதத்தைப் பார்த்துக்கொண்டிருக்கிறார்கள்" என்று அர்த்தம் செய்திருக்கிறார்கள். விஷ்ணு அரூபமானவர், நமக்கு அனுக்கிரஹம் செய்ய வேண்டியதற்காகக் கரசர

ணுதிகளைத் தரித்திருக்கிறார். விஷ்ணுதான் பரமபதம் என்பது அவரது வியாக்கியானம். விஷ்ணுவினுடைய பரமபதமாகிய வைகுண்டத்தைப் பார்த்துக்கொண்டிருக்கிறார்கள் என்னும்போது, நித்திய ஸூரிகள் அந்த லோகத்தைப் பார்த்துக்கொண்டிருக்கிறார்கள் என்று ஏற்படுகிறதேயல்லாமல் மூர்த்தியைப் பார்த்துக்கொண்டிருக்கிறார்கள் என்று ஏற்படவில்லை. ஊரைப்பார்ப்பது மோக்ஷமாகாது.

அவரைப் பார்ப்பதுதான் மோக்ஷமாகும். சைவ ஸித்தாந்தத்தில் விஷ்ணு என்ற சொல்லில் ஐந்தாம் வேற்றுமை உருபு தொக்கி நிற்பதாகக் கொண்டு "விஷ்ணுவைக் காட்டிலும் பரமமாகிய பரமசிவனைப் பார்த்துக்கொண்டிருக்கிறார்கள்" என்று அர்த்தம் செய்திருக்கிறார்கள். நம்முடைய ஸ்ரீ ஆசாரியர்கள் விஷ்ணு வேறு, சிவன் வேறு என்று கொள்ளாமல் "விஷ்ணு வாகிய பரமபதம்" என்று சொல்லியிருக்கிறார். அப்படியானால் சில புராணங்களில் ஒன்றை உத்கிருஷ்டமாகச் சொல்லியிருப்பதற்குக் காரணமென்ன? எந்த இடத்தில் எந்த மூர்த்தியை உத்கிருஷ்டமாகச் சொல்ல வேண்டுமோ அங்கு அப்படிச் சொல்லியிருக்கிறது என்று ஸாதாரணமாக ஒரு ஸமாதானம் சொல்லுவதுண்டு. இதற்கு "ந ஹி நிந்தா நியாயம்" என்று பெயர். ஒரு மூர்த்தியை நிந்தை செய்வது தாத்பரியமல்ல, ஆனால் மற்றதை உத்கிருஷ்டமாகச் சொல்லுவதே உத்தேசம். அதுமாத்திரமல்ல. சிவன் விஷ்ணுவை உபாஸிப்பதும், விஷ்ணு சிவனை உபாஸிப்பதும் நிஜந்தான். ஸேதுவில் ஸ்ரீ ராமன் லிங்கப் பிரதிஷ்டை செய்தார், குடிமல்லத்தில் பரசுராமன்

சிவபூஜை செய்தார், காஞ்சியில் விஷ்ணு கச்சபேசுவரரைப் பிரதிஷ்டை செய்தார் என்பதிலிருந்து ஸ்ரீ மஹாவிஷ்ணுவே சிவபூஜை செய்தாரே, ஆகவே நாம் எல்லோரும் சிவபூஜை செய்யவேண்டுமென்ற எண்ணம் உண்டாகும். அப்படியே சிவனே விஷ்ணுவைப் பூஜை செய்தாரே ஆகவே நாம் எல்லோரும் விஷ்ணு பூஜை செய்யவேண்டு மென்று நினைப் புண்டாகும். சிவன் சிவனையே பூஜை செய்வதைக் காட்டிலும் விஷ்ணு ரூபமாக இருந்துகொண்டு செய்வதால் லோகத்திற்கு அனுக்கிரஹம் ஏற்படுகிறது. அப்படியே விஷ்ணு சிவரூபமாக இருந்துகொண்டு பூஜை செய்வதாலும். ஆகையால் அவர்கள் பரஸ்பரம் பூஜை செய்து கொண்டதும் நிஜமே.

இனிமேல் மஹாவித்வான்களுடைய அபிப்பிராயத்தைப் பார்ப்போம். கவிகளில் சிரேஷ்டர் காளிதாஸன், ரகு வம்சத்தில் தேவதைகள் வைகுண்டத்திற்குப் போய் ஸ்ரீமந் நாராயணனைப் பிரார்த்தித்தார்கள் என்று அவர் சொல்லுகையிலும், குமார ஸம்பவத்தில் பிரம்மாவிடத்தில் தேவர்கள் போய் பிரார்த்தித்ததைச் சொல்லுகையிலும், கைலாயத்திற்குத் தேவர்கள் போய் பரமசிவனை ஸ்தோத்திரம் செய்வதைச் சொல்லுகையிலும், அந்த அந்த மூர்த்தியை உத்கிருஷ்டமாகச் சொல்லியிருக்கிறார். இப்படி ஒவ்வொரு மூர்த்தியையும் உத்கிருஷ்டமாகச் சொல்லிவிடில் எதுதான் உத்கிருஷ்டம் என்று கேட்கக் கூடியவர்களுக்கு அவர் பதில் சொல்லியிருக்கிறார்.

एकैव मूर्तिर्बिभिदे त्रिधा सा सामान्यमेषां प्रथमावरत्वम् ।

என்று காளிதாஸன் சொல்லி யிருக்கிறார். ஒரு மூர்த்தி

மூன்ருகப் பிரிந்தது, உயர்ந்தது, தாழ்ந்தது என்பது மூன்றுக்கும் பொது என்பது அதன் அர்த்தம். ஒரு திருஷ்டாந்தம்—காகத்திற்கு ஒரு கண்தான் இருக்கிற தென்று சொல்லுகிருர்கள்; ஆனல் இரண்டு கண்களி லும் கண்ணுடி இருக்கிறது. கருப்பு பாபா என்கிருேமே அது ஒன்றுதான். இந்தக் கண்ணல் பார்க்கும் போது அது இங்கே ஓடி வந்து விடுகிறது. அந்தக் கண்ணல் பார்க்கும் போது அங்கே ஓடி விடுகிறது. அப்படியே சிவனைகப் பார்த்தால் விஷ்ணு அங்கே வந்து விடுவார்; விஷ்ணுவாகப் பார்த்தால் சிவன் அங்கே வந்துவிடுவார். காதம்பரியைச் செய்தவராகிய பாண கவியும் மங்கள சுலோகத்தில் ஈசுவரன் ஸத்வ, ரஜஸ், தமோ குணங்களாக இருக்கிருர், ஒவ்வொரு குணத்தை ஒவ்வொரு ஸமயத்தில் கிரஹிக்கிருர் என்று சொல்லி யிருக்கிருர்.

रजोजुषे जन्मनि सत्त्ववृत्तये
स्थितौ प्रजानां प्रलये तमःस्पृशे ।
अजाय सर्गस्थितिनाशहेतवे
त्रयीमयाय त्रिगुणात्मने नमः ॥

தேவாரத்தில் அப்பர் ஸ்வாமிகள் திருவாரூர் க்ஷேத்திரத் தின் பழமையைச் சொல்லுகையில், "ஒருவனய் உல கேத்த நின்றநாளோ, ஒருருவே மூவுருவாய் ஆனநாளோ, திருவாரூர் கோயிலாக் கொண்ட நாளே" என்று சொல்லி யிருக்கிருர். ஒரு ரூபம் மூவுருவாயிற்று என்று அவர் சொல்லி யிருக்கிருர்.

திருவாய்மொழியில் நம்மாழ்வார், "முனியே, நான் முகனே, முக்கண்ணப்பா" என்று விஷ்ணுவைப் பாடியிருக்கிறார். விஷ்ணுவை துதி செய்ய வந்தவர் அவரையே "முக்கண்ணப்பா" என்று சொல்லி யிருப்பதின் கருத்து தெளிவாக இருக்கிறது. பேயாழ்வார் திருமலைக்குத் தரிசனத்துக்குப் போய்,

> தாழ்சடையும் நீள்முடியும் ஒண்மழுவும் சக்கரமும்
> சூழரவும் பொன்னாணும் தோன்றுமால்—சூழும்
> திரண்டருவி பாயும் திருமலைமேல் எந்தைக்கு
> இரண்டுருவ மொன்ரு இசைந்து.

என்று சொல்லியிருப்பது பிரசித்தம்.

பொய்கை ஆழ்வார்,

> "அரன்நாரணன்நாமம் ஆன்விடைபுள் ளூர்தி
> உரை நூல் மறையுறையும் கோவில்—வரைநீர்
> கருமம் அழிப்பு அளிப்புக் கையதுவேல் நேமி
> உருவமெரி கார்மேனி யொன்று"

என்று பாடியிருக்கிறார்.

உனக்கு அரன் என்றும் அரி என்றும் இரண்டு பெயர்களுண்டு, விருஷபம் என்றும் புள் என்றும் இரண்டு வாகனங்களுண்டு, மலை என்றும் கடலென்றும் இரண்டு இருப்பிடங்களுண்டு என்பது இதன் பொருள். கம்பனாட்டார், "அரன் அதிகம், அரி அதிகம், என்றுரைப்போருக்குப் பரகதியில்லை" என்று சொல்லி விட்டார்.

விப்ரநாராயணன், பக்தாங்கிரிரேணு, தொண்டரடிப் பொடி ஆழ்வார் என்று பல பெயர்களையுடைய பக்தர் ஸ்ரீ ரங்கநாதனையே பாடுவதில் ஆர்வமுள்ளவர். மற்றக்

கோயில்களில் எழுந்தருளியிருக்கும் விஷ்ணு மூர்த்திகள் தங்களைப் பாடும்படி அவரைக் கேட்டபோது பாடமாட்டேன் என்று சொன்னாராம். எல்லா மூர்த்திகளும் விஷ்ணுமூர்த்தி என்பது அவருக்குத் தெரியும். ஆனால் ஸ்ரீரங்கநாத மூர்த்தியிடம்தான் அவருடைய மனம் ஈடுபட்டிருந்தது. இப்படியே ஹனுமாரைப் பற்றியும் கதை சொல்லுவதுண்டு. ஸ்ரீ கிருஷ்ணனும் ஸ்ரீ ராமனும் விஷ்ணுவின் அவதாரங்கள் என்று அவருக்குத் தெரியுமாயினும் கிருஷ்ணன் ராம உருவெடுத்துக்கொண்டால் தான் தான் வணங்கமுடியுமென்று அவர் சொல்லிவிட்டாராம்.

ஸ்ரீ ரங்கநாதனுடைய க்ஷேத்திரத்திற்கே வைஷ்ணவ ஸம்பிரதாயத்தில் கோயில் என்று பெயர்.

சைவ ஸம்பிரதாயத்தில் சிதம்பரத்திற்கே கோயில் என்று பெயர். கோ-அரசன், இல்-வீடு. ஆகையால் கோயில்-அரசன் வீடு.

எந்த அரசன்? ஒரு ஊரில் ரங்கராஜன், ஒரு ஊரில் நடராஜன். ஒருவன் தூங்கிக்கொண்டு ஆநந்தத்தில் இருக்கிறான், ஒருவன் விழித்துக்கொண்டு ஆநந்தத்தில் ஆடுகிறான். ஜாக்ரத், ஸ்வப்ன, ஸுஷுப்தி அவஸ்தைகளில் ஜாக்ரத் அவஸ்தையிலும் ஸ்வப்ன அவஸ்தையிலும் கவலையுண்டு, பயமுண்டு. தூக்கத்தில் தான் ஆநந்தம், ஜாக்ரதவஸ்தையில் ஒருவன் எப்பொழுது கூத்தாடுவான்? ஒரு கவலையுமில்லாமல் ஆநந்தமாக இருக்கையிலேயே கூத்தாடுவான்.

கிருஷ்ண கர்ணாமிருதாசாரியார் தாம் சைவ பரம்பரையில் வந்து பஞ்சாக்ஷர உபதேசம் பெற்று அதை ஜபிப்பவராயினும், யசோதையின் குழந்தையாகிய

மூர்த்தியிலேயே தனது மனம் லயித்துப்போய்விட்டதாகச் சொல்லியிருக்கிறார்.

शैवा वयं न खलु तत्र विचारणीयं
पञ्चाक्षरीजपपरा नितरां तथापि ।
चेतो मदीयमतसीकुसुमावभासं
स्मेराननं स्मरति गोपवधूकिशोरम् ॥

அப்பைய தீக்ஷிதர் மகேசுவரனும் ஜனார்த்தனனும் ஒருவரேயாயினும், இளம்பிறையை ஜடையில் முடித்த ரூபத்தில்தான் தனது மனம் லயித்துவிட்டதாகச் சொல்லியிருக்கிறார். இரண்டும் ஸமமென்று சொல்லக் கூடாது, ஸமமென்றால் இரண்டிருப்பதாக ஏற்படும். இரண்டும் வெவ்வேறல்ல என்பதே ஸத்தியம். அவர்களுக்குள் பேதமில்லை.

महेश्वरे वा जगतामधीश्वरे
जनार्दने वा जगदन्तरात्मनि ।
न वस्तुभेदप्रतिपत्तिरस्ति मे
तथापि भक्तिस्तरुणेन्दुशेखरे ॥

இந்த ஊர் மாம்பலம், பெரிய அம்பலம். ஒரு காலத்தில் பிரஸித்தமான க்ஷேத்திரமாக இருந்திருக்கலாம். கோயில்களுக்குப் போவது குறைந்துவிடவே, கோயில்கள் இடிந்து போகின்றன. காஸ்மாபாலிட்டன் கிளப்புகள் பிரகாசிக்கின்றன. நாம் போகாததால்தான் கோயில்கள் ஸரியாக நடை பெறவில்லை. ஆயிரக்கணக்கான

ஜனங்கள் கோயில்களுக்குப் போவது வழக்கமாகிவிடின் அர்ச்சகர்கள் தங்களுடைய கடமையைச் சரியாகச் செய்வார்கள் ; தர்மகர்த்தாக்கள் பயந்து நடப்பார்கள். முற்காலத்தில் ஜனங்கள் கோயிலுக்குத்தான் போவார்கள். அப்பொழுது ரீடிங் ரூம்களும் கிளப்புகளும் இருந்ததில்லை. ஆகையால் எண்ணிறந்த கோயில்கள் கட்டப்பட்டன. இப்பொழுது ஜனங்கள் போவதில்லையாகையால், கோயில்கள் அனுவசியமாகக் கட்டப்பட்டிருப்பதாகத் தோன்றுகிறது. எல்லோரும் தினந்தோறும் கோயிலுக்குப் போகவேண்டும். முடியாவிடில், விசேஷ தினங்களிலாவது போய்க்கொண்டிருந்தால், கோயில்கள் அனுவசியமாகக் கட்டப்பட்டிருப்பதாகத் தோன்ருது.

[சுதேசமித்திரன்.]

# 15. சிவ விஷ்ணு அபேதம்*

## II

[28—12—1932]

நமது வேத சாஸ்திரங்களை நம்பிக் கர்மானுஷ்டானங்களைச் செய்கிறவர்களில் உபாஸகர்கள் இரண்டு வகைப் படுவார்கள். அவர்கள் ஶைவர்களும் வைஷ்ணவர்களும். ஆலயங்களும் சிவாலயங்கள் என்றும், விஷ்ணு ஆலயங்கள் என்றும் ஏற்பட்டிருக்கின்றன. இவை தவிர ஸுப்ரமண்ய ஆலயங்கள், ஸப்தமாதா ஆலயங்கள் முதலியனவு முண்டு. ஆனால் சிவாலயங்களும், விஷ்ணு ஆலயங்களுமே அதிகம். தென்தேசத்தில் பிடாரிகோயில் என்று ஒன்றுண்டு. அது துர்தேவதையின் கோயில் என்று சிலர் தப்பாக நினைத்துக்கொண்டிருக்கிறார்கள். அம்பாளுடைய ஸஹஸ்ர நாமத்தில் 'பட்டாரிகா' என்று ஒரு நாமா சொல்லப்பட்டிருக்கிறது. அந்தப் பெயர்தான் படாரிகை என்று மருவிப் பிறகு பிடாரியாகிவிட்டது. சில தாமிர சாஸனங்கள் ஸம்ஸ்கிருதம், தமிழ் ஆகிய இரண்டு பாஷைகளிலு மிருக்கின்றன. வடமொழிச் சாஸனத்தில் 'பட்டாரிகாமான்யம்' என்றும், தமிழ்ச் சாஸனத்தில் 'படாரி மான்யம்' என்றும் காணப்படுகிறது. ஆகையால் 'பட்டாரிகா' என்ற சொல் பிடாரியாக மாறிவிட்டதென்பது நிச்சயம். இப்படிப் பல கோயில்கள் இருப்பினும் சிவன் கோயில்களும் விஷ்ணு கோயில்களுமே முக்கியமானவைகளாக இருக்கின்றன. அயல் தேசத்தான் ஒருவன் வந்து பார்த்தால் இரண்டு மதஸ்தர்கள் இருப்பதாகவே சொல்லக்கூடும். சைவர்கள் வைஷ்ணவர்கள் என்பவர்களில் பூரண

---

* இது ஏகாம்ரேசுவரர் அக்ரஹாரத்தில் செய்யப்பட்டது.

சைவர்கள், பூரண வைஷ்ணவர்கள் சிலர் இருக்கிறார்கள். வீரசைவர்கள் அதாவது லிங்காயத்துக்கள் பூரண சைவர்கள்; ராமானுஜ ஸம்பிரதாயத்தை அனுஷ்டிப்பவர்களில் ஸாதாரண வைஷ்ணவர்கள் சிலர் இருவகைக் கோயில்களுக்கும் போகிறவர்களாக இருக்கலாமாயினும் அவர்களுடைய ஆசார்ய புருஷர்கள் சிவாலயத்திற்குப் போகவேண்டியதில்லை யென்றும், சிவபுராணங்களைக் கேட்கவேண்டியதில்லை யென்றும் சொல்லுவார்கள். வீர சைவர்கள் விஷ்ணுகோயிலுக்குப் போகவேண்டியதில்லை யென்றும் விஷ்ணு புராணங்களைக் கேட்கவேண்டியதில்லை யென்றும் சொல்லுவார்கள். இவ்விருவருக்கும் மத்தியிலுள்ள நாம்—அதாவது ஸ்மார்த்தப் பிராமணர்கள், பிராமணரல்லாதவர்கள்— எல்லோரும் இரண்டு பக்தியும் செய்கிறோம்.

விபூதி இட்டுக்கொண்டும் விஷ்ணு கோவிலுக்குப் போவார்கள். வீர சைவர்கள் வீர வைஷ்ணவர்கள் தவிர மற்றவர்கள் எல்லோருக்கும் இரண்டும் பொது. விபூதி தாரணம் செய்துகொண்டு ஸ்ரீராமநவமி, கோகுலாஷ்டமி, ராதா கல்யாணம் முதலியன கொண்டாடுவார்கள். விபூதி ருத்திராக்ஷம் தரித்திருப்பினும் அவர்களுககு விஷ்ணுபக்தி அதிகம். விபூதி ருத்திராக்ஷம் பரம்பரைச்சின்னம். அவர்களுடைய ஸொந்த பக்தி விஷ்ணு பக்தி. சிலர் ஊர்த்துவபுண்டரம் போட்டுக்கொள்ளுவார்கள். ஆனால் சிவபக்தி செய்வார்கள். இவைகளைத் தவிர கர்மானுஷ்டானங்கள் பொது. ஏன் சிவாலயங்களுக்குப் போவதில்லை என்று வீர வைஷ்ணவர்களைக் கேட்டால் அவர்கள் சொல்லும் ஆக்ஷேபம் இது. பகவான் ஒருவர்தானே. இரண்டு

பெயர்களல்ல. ஒரு பரமாத்மாதான் உண்டு. மற்ற தேவதைகள் பிரும்மா, ருத்திரன், உள்பட ஸூரிய சந்திரர்கள் மாதிரி ஜீவாத்மாக்கள்தான். நாம் கடைத் தேற பரமாத்மாவே வேண்டும். அவர் விஷ்ணுதான். ஆகையால் விஷ்ணுவின் ஆலயத்திற்கே போக வேண்டும் என்று அபிப்பிராயப்படுகிருர்கள். லிங்காயத்துகளும் அப்படியே சொல்லுகிருர்கள். சிவன் பரமாத்மா, விஷ்ணு ஜீவாத்மா என்கிருர்கள். இருவரும் நம்மைப் பரிகாஸம் செய்கிருர்கள். நமக்குத் தீவிரமான அபிப் பிராயமில்லே என்கிருர்கள். வேறு சிலர் பரமசிவன் ஜீவாத்மாவாக இருப்பினும் நம்மைக் காட்டிலும் பெரியவர்தானே,—அவருடைய கோயிலுக்குப் போக வேண்டாமா என்ருல், ஜீவ ஈசுவர ஸம்பந்தம் நாயக நாயிகா ஸம்பந்தம் போன்றது. ஆகையால் சிவன் கோயிலுக்குப் போகக்கூடாது என்கிருர்கள். அதாவது, ஸ்திரீகள் பர்த்தாவிடத்தில் ஏகாக்ரசித்தமுடையவர் களாக இருக்கவேண்டியதுபோல் விஷ்ணுபக்தி செய்ய வேண்டும். வேறு வீட்டிற்குப் பதிவிரதை போனுல், பாதிவிரத்தியத்திற்கு லோப மேற்பட்டுவிடும். பர புருஷனேப் பார்க்கக்கூடாததுபோல் வேறு தெய்வத் தைக் காணுமுன் கதவை மூடிக்கொண்டு போய்விட வேண்டு மென்கிருர்கள். வீரசைவர்களும் இப்படியே நாயக நாயிகா வாதத்தைச் சொல்லுகிருர்கள்.

பரமாத்மா இரண்டல்லவென்பது நிச்சயம். இரண்டி ருப்பதாக வைத்துக் கொண்டாலும் பதிவிரதையைப் போல் வேறு தெய்வத்தைப் பார்க்கக் கூடாது என்கிருர் கள். ஆனுல் நாம் இரண்டு கோயில்களுக்கும் போகிருேம். நம்முள் பலர் அவர்களைக் காட்டிலும் அதிகமாக விஷ்ணு

பக்தி செய்கிறார்கள். பிராம்மணர்களை மாத்திரம் நான் சொல்லவில்லை. எல்லா ஜாதிகளிலும் பரம விஷ்ணு பக்தர்கள் இருக்கிறார்கள். ஆனால் பூசுவது வெண்ணீறு. மேலே நான் சொன்ன வாதங்களைச் சொல்லிச் சொல்லியே ஒவ்வொரு ஆசார்யர்கள் ஏற்பட்ட காலங்களில் அநேகரைத் தங்களுடைய வழிக்குத் திருப்பினார்கள். அநாதியாக வந்துள்ள உபாஸனை சரியா, அவர்கள் சொல்லுவது சரியா என்று யோசிப்போமானால், அது அவர்களுக்குச் சரி, இது நமக்குச் சரி. அதெப்படி என்று கேட்கலாம். பரமாத்மா இரண்டென்று வைத்துக் கொள்ளுவதால் ஒருவரை ஜீவாத்மாவாகச் செய்யவேண்டியிருக்கிறது. வெவ்வேறு மூர்த்தி என்று வைத்துக் கொள்ளுவதால் இந்தக் கஷ்டம் நேருகிறது. ஆனால். இரண்டு பெயர்களும் ஒருவரே, வெவ்வேறு மூர்த்தி என்று வைத்துக்கொள்ளுவதால் இந்தக் கஷ்டம் நேருகிறது. வேஷம் மாத்திரம் வெவ்வேறு என்றுதான் சாஸ்திரம் சொல்லுகிறது. சங்கரநயினார்கோயில் போன்ற சில ஊர்களில் இரண்டு மூர்த்தியையும் ஒரே உருவத்தில் காண்கிறோம். ஒரு உதாஹரணம் சொல்லுகிறேன். ஒருவருக்குக் கிருபா சங்கரர் என்று பெயர் வைத்துக் கொள்ளுவோம். அவரைக் கிருபர் என்றும் கூப்பிடுவதுண்டு. கிருபா கிருபாசங்கருடன் சண்டை போட்டார் என்பது அஸந்தர்ப்பம். பரமாத்மா இருவராக இருந்தால், அவர்கள் சொல்லுவதுதான் சரி. இரண்டும் ஒன்றாக இருந்து வேஷம் மாத்திரம் வேறானால் நாம் சொல்வதுதான் சரி. வஸ்து ஒன்றே யாகையால்—இரண்டல்ல வாகையால்—பாதிவிரத்தியத்திற்கு தோஷ மேற்படாது. பர்த்தா

ஒரு ஸமயம் ஒரு வேஷமும், இன்னொரு ஸமயம் இன்னொரு வேஷமும் போட்டுக் கொண்டால், இரண்டு வேஷங்களை யுடைய அவரிடத்தில் பக்தியுள்ள ஸ்திரீக்கு தோஷ முண்டா? அப்படியானால் ராமபக்தி செய்கிறவர்கள கிருஷ்ணன் கோயிலுக்குப் போகக்கூடாது. ஏனெனில் பாதிவிரத்தியத்திற்கு தோஷ மேற்பட்டுவிடும். பார்த்த ஸாரதி கோயிலுக்குப் போய்விட்டு கேசவப்பெருமாள் கோயிலுக்குப் போகக்கூடாது. இரண்டிடங்களிலும பெயர் வேறு, ரூபம் வேறு. நாம் அப்படி நினைக்காமல் ஒரே ஸ்வாமியாக நினைத்து எல்லாக் கோயில்களுக்கும போகிறோம். மூர்த்தி இரண்டானால் பாதிவிரத தியத்திற்கு தோஷம் நிச்சயம், நமக்கு ஏற்பட்ட தர்மத் திலிருந்து மாறுவதே பெரிய பாதிவிரத்திய லோபம். குருபக்திதான் பெரிய பாதிவிரத்தியம். இன்று ஒரு ஆசார்யார் சொல்லுவதைக் கேட்டுக்கொண்டு அவர் வழியில் போனால் இரண்டு தலைமுறையானதும் வேறு ஒரு குருவிடம் போய்விடலாம். அநாதியான மார்க்கத் தில் போவதே பாதிவிரத்தியம். ஆகையால் சிவாலயத் துக்குப் போனால், பாதிவிரத்திய லோபம் வருமென்பது பிசகு.

சாஸ்திரங்கள் ஒரே பரமாத்மாதான். சிருஷ்டி ஸ்திதி ஸம்ஹாரங்களுக்காக மூன்று உருவங்களை எடுத்திருக்கி றது என்று சொல்லுகின்றன. லோகத்தை உண்டாக் குவது ஒரு காரியம், பிறகு பரிபாலனம் செய்வது ஒரு காரியம். பிறகு ஸம்ஹாரம் செய்வது ஒரு காரியம். நாசம் செய்வது அக்கிரமமென்று தோன்றலாம். உண்டு பண்ணுவதுதான் அக்கிரமமென்று சொல்ல முடியும். நாம் அனுபவிப்பது கஷ்டம். எதற்காக உண்டாக்கினார்

என்று தோன்றுகிறது. கஷ்டம் அதிகமாகும்போது தன்னைத் தானே மனிதன் நாசஞ்செய்து கொள்ளுகிறான் இருப்பதைக் காட்டிலும் நாசமே நல்லதென்று நினைக்கிறான்.

நாம் எல்லோரும் சாகாமலிருந்துவிடின் இருநூறு வருஷங்களில் என்னவாகும்? ஜனஸங்கியை பெருகி உட்கார இடமிராது, ஆஹாரமகப்படாது. ஆகையால் நாசம் அவசியமான காரியமாக இருக்கிறது. விருத்தர்கள், ரோகிகள் முதலியவர்கள் மரணத்தை விரும்புகிறார்கள். அவர்களுக்கு நாசம் அனுகூலமான காரியமென்று தோன்றுகிறது. ஆகையால் நாசம் அவசியமானதுதான். ஒரே பரமாத்மா முத்தொழில்களைச் செய்ய மூன்று ரூபமெடுக்கிறார். பிரம்மா, விஷ்ணு, ருத்திரன் என்று அந்த ரூபங்களுக்குப் பெயர்.

அந்தந்தக் காரியத்துக்குத் தக்க குணத்தை கிரஹித்துக்கொள்ளுகிறார். நம்முடைய வீட்டிற்கு ஒரு அதிதி வருவாராயின் அவரை உபசரிக்கிறோம். 'வாருங்கள், உட்காருங்கள்' என்று சொல்லுகிறோம். நாம் கோபிஷ்டராக விருப்பினும், அந்த ஸமயத்தில் ஸத்வ குணத்தை எடுத்துக் கொள்ளுகிறோம். நம்முடைய குழந்தைகள் படிக்கும்படி செய்யவேண்டியபோது 'வாருங்கள், உட்காருங்கள்' என்று சொல்லமுடியாது. அந்த இடத்தில் கெடி இருக்கவேண்டும். அதற்கு ரஜோகுணம் அவசியம். நம்மூரில் பல ஜனங்கள் இருக்கிறார்கள். புலி ஒன்று கூட்டிலிருந்து வெளிப்பட்டு விட்டது. அப்பொழுது தமோகுணத்தை அவலம்பித்துக்கொண்டு குரூரமான காரியத்தைச் செய்யவேண்டும்.

ஆகையால் காரியத்துக்குத் தக்க குணம் அவசியமாக இருக்கிறது.

சிருஷ்டி ரஜோகுணம், ஸ்திதி (பரிபாலித்தல்) ஸத்வகுணம், ஸம்ஹாரம் (நாசம்) தமோகுணம். இம் மூன்றும் சேர்ந்தது மாயை. இந்தக் குணங்கள் பரமாத்மாவின் ஸ்வபாவமல்ல. காரியங்களின் பொருட்டு அவைகளைக் கிரஹித்துக் கொள்ளுகிறார். ஈசுவரன் நிர்க்குணமானவர். குணங்கள் மாயை. மா என்ற சொல்லுக்கு இல்லை என்று அர்த்தம். யா என்றால் எவள் என்று அர்த்தம். 'யாகுந்தேந்து...தவளா' என்ற ஸரஸ்வதி ஸ்தோத்திரத்தில் 'யா' என்பதற்கு எவள் என்பது அர்த்தமென்பது உங்களுக்குத் தெரிந்திருக்கும். ஆகையால் மாயை என்றால் 'எவள் இல்லையோ அவள்' என்பது அர்த்தம். வாஸ்தவத்தில் இல்லாததை இருப்பதாக அவர் காட்டுகிறார்.

பிரம்மா ரஜோகுணத்தைக் கிரஹித்த பரமாத்மா, விஷ்ணு ஸத்வகுணத்தைக் கிரஹித்த பரமாத்மா, ருத்திரன் தமோகுணத்தைக் கிரஹித்த பரமாத்மா; ஆனால் 100-க்கு 75-வீதம் சிவன் கோயில்கள் இருக்கின்றன. 100-க்கு 25-வீதம் விஷ்ணு கோயில்கள் இருக்கின்றன. ஜனங்களிலும் 100-க்கு 75-பெயர்கள் சிவபக்தி செய்கிறவர்கள். பாக்கி கால் பாக ஜனங்களில் எத்தனையோ பேதங்கள் உண்டு. எல்லோரும் சேர்ந்து 100-க்கு 25-வீதமே இருக்கிறார்கள். உபாஸகர்கள் கணக்குப்படி கோயில்களுமிருக்கின்றன. ராமாநுஜ ஸம்பிரதாயம் ஏற்பட்டதற்குமுன் விஷ்ணு கோயில்கள் ஏற்பட்டவை. அக்காலத்தில் ஸ்மார்த்தர்கள்தான் விபூதி தரித்துக்கொண்டு பூஜை செய்து வந்தார்கள்.

இப்பொழுதும் ஸ்ரீரங்கத்தில் காணியாளர் என்று ஒரு வகைப் பிராம்மணர்கள் இருக்கிறார்கள். விஷ்ணு கோயிலில் அவர்கள் காணியாட்சி பாத்தியம் உடையவர்கள். திருவரங்கத்து அமுதனர் என்று இப்பொழுதும் ஒரு குடும்பத்தார் இருக்கிறார்கள். ராமநுஜஸம்பிரதாய மேற்பட்ட பிறகு நாமம் போட்டுக் கொண்டார்கள். ஆனால் ஸ்மார்த்தர்களே. வருஷத்தில் ஒருநாள் அவர்களைக் கோயிலுக்கு அழைத்துக்கொண்டுபோய் ஸகல மரியாதைகளையும் செய்து வீட்டிற்குக் கொண்டுவந்து விடுகிறார்கள். விஷ்ணுபக்தி செய்வோருக்கு அநாதியாக ஏற்பட்ட சின்னம் கோபிசந்தனத்தால் ஊர்த்துவ புண்டரம் போட்டுக் கொள்ளுதல், தேசத்தில் அத்துவைத ஸம்பிரதாயமும் சிவ ஸம்பிரதாயமுமே அதிகம். கிராமங்களில் விஷ்ணு ஆலயங்களை ஸ்மார்த்தர்களே பரிபாலித்து வருகிறார்கள்.

ஸத்வரஜஸ்தமோகுணங்களை அந்தந்தக் காரியத்தைச் செய்யும்போது பகவான் உபயோகித்துக் கொள்ளுகிறார். மூன்று கிருத்தியங்கள் என்று சொல்வது தவிர, பஞ்ச கிருத்தியங்கள் என்று சொல்லுவதுமுண்டு. அம்பாளை 'பஞ்சக்கிருத்யபராயணீ' என்று சொல்வது வழக்கம். ஸிருஷ்டி, ஸ்திதி, ஸம்ஹாரம, திரோதானம், அனுக்ரஹம் என்று பஞ்ச கிருத்தியங்களுக்குப் பெயர். 'பஞ்சப்ரேதாஸனீ' என்று லலிதா ஸஹஸ்ரநாமத்தில் அம்பாள் சொல்லப்பட்டிருக்கிறாள்.

மேற் சொன்ன பஞ்சகிருத்யங்களை முறையே பிரம்மா, விஷ்ணு, ருத்திரன், ஸதாசிவன், மகேசுவரன் ஆகியவர்கள் செய்கிறார்கள்.

ஒவ்வொரு பிரளயமானவுடன் அவர்கள் அம்பாளிடத்தில் ஐக்கியமாய் விடுகிறார்கள். புதிதாகச் சிலர் அப்பதவிகளைப் பெறுகிறார்கள். ஐக்கியமடைந்து விட்டவர்களின் சரீரம் அம்பாளுடைய ஆஸனங்களாகி விடுகின்றன. ஆகையால்தான் அம்பிகைக்குப் 'பஞ்சப்ரேதாஸனீ' என்று பெயர். சிருஷ்டி, ஸ்திதி, ஸம்ஹாரக்ருத்தியங்களில் பரிபாலித்தல் ஸத்வகுணத்தின் காரியம். மஹாவிஷ்ணு ஸத்வகுணத்துடன் பரிபாலிக்கிறார். அன்னம் போட ஸத்வகுணம் அவசியம்.

ஆஹாரம் கிடைப்பதும் கிடைக்காததும் நம்முடைய பிரயத்தனத்தால் அல்ல. கர்ப்பத்தில் நம்முடைய கெட்டிக்காரத்தனத்திலா வளர்ந்தோம்? கர்ப்பத்தில் ஆஹாரம் போட்டது யார்? தாயாருக்காவது தெரியுமா? வலி ஒன்றே அவளுக்குத் தெரியும். அதில் ஆஹாரம் போட்டுக் காப்பாற்றினவர் மஹாவிஷ்ணுவே. அது அவருடைய காரியம். ருத்திரனின் காரியம் ஸம்ஹாரம். அதற்குத் தமோகுணத்தை கிரஹித்திருக்கிறார். இப்படிப்பட்ட குணங்களில் எந்தக் குணத்துடன் இருக்கையில் நாம் பரமாத்மாவை உபாஸிப்பது? ஒரு காரியத்தின் பொருட்டு ஒரு பெரிய மனிதரிடத்தில் போகிறோம். அவர் ஸந்தோஷமாக இருக்கையில் போனால் வாருங்கள் என்பர். நமது உத்தேசமும் பலிக்கும். அவர் கோபத்துடன் இருக்கும்போது போனால் காரியம் ஸித்தியாகாது. ஒரே ஒருவராக விருந்தால்கூட அவர் தமோ குணத்தை கிரஹித்திருக்கையில் உபாஸிக்கலாமா? பாகவதத்தில் 'இந்த மூன்றில் ஸத்வமான குணத்திலிருந்துதான் சிரேயஸுண்டாகும்' என்று சொல்லப்பட்டிருக்கிறது. அப்படியானால் தமோகுண உபாஸனை சரியா? இதற்கு

முதலில் ஒரு சிறிய ஸமாதானம் சொல்லுகிறேன். பிறகு சாஸ்திரரீதியாக விஸ்தாரமாக ஸமாதானம் சொல்லுகிறேன். உபாஸனை ஒரு பிரேமையால் செய்யப்படுகிறது. பலனை உத்தேசித்துப் பிரேமை வைத்தால், அது ஒரு வியாபாரமாகிவிடும். அது வாஸ்தவமான பிரேமையல்ல. காரியத்தை உத்தேசித்துப் பிரியம் வைப்பது கூடாது. 'பலனை உத்தேசிக்காமல் நாம் பக்தி செய்வோம். சிரேயஸ் கிடைத்தால் கிடைக்கட்டும், கிடைக்கவில்லையானால் மனஸ்தாபமில்லை' என்ற மனோபாவத்துடன் பக்தி செய்வதுதான் சரி.

மூர்த்தி ஒருவர்தான். அவர் மூன்று குணங்களைக் கிரஹிக்கிறார். குணங்களை கிரஹிக்காதபோது நிர்க்குணமாக விருக்கிறார். ஸ்படிகலிங்கம் ஒரு நிறமு முள்ளதல்ல. அதற்குப் பக்கத்தில் எந்த நிறமுள்ள பொருள் வைக்கிறோமோ அந்த நிறத்தை அது கிரஹிக்கிறது. குண மில்லாதிருத்தல் துரீயம் என்று சொல்லப்படுகிறது. துரீயம் என்றால் நாலாவது என்று அர்த்தம். நாலாவது நிலை ஒன்றில்லை. மூன்றும்ல்லாதது நாலாவது. அதுதான் பரமாத்மா. 'சாந்தம் சிவம் அத்வைதம் சதுர்த்தம்' என்று உபநிஷத் சொல்லுகிறது. மூன்று குணங்களு முள்ள வஸ்து அல்லாதது சிவன். அது ரூபமெடுத்தால் பிரம்மா, விஷ்ணு, ருத்திரனாகிவிடும். துரீயமான சிவஸ்வரூபம் மஹாலிங்கம் மூன்றாகப் பிரிவதற்கு முன் சிவன். சிவன் கோயிலில் சிவஸ்வரூபமாகிய மஹாலிங்கத்துடன் பாக்கி விக்கிரஹங்கள் ஸோமாஸ்கந்தர் முதலிய ருத்திர ஸ்வரூப விக்ரஹங்களாக இருக்கின்றன. துரீயமான சிவனுக்கும் தமோகுண ஸ்வரூபியாகிய ருத்திரனுக்கும் என்ன ஸம்பந்தம்? சிவ ஸ்வரூபமாகிய மஹாலிங்கத்துடன்

விஷ்ணு மூர்த்தங்களை உத்ஸவ மூர்த்திகளாக ஏன் வைக்கவில்லை? இதற்குக் காரணத்தைத் தெரிந்து கொள்ள நம்மிடமிருந்து ஆரம்பம் செய்வோம். நாம் விழித்துக்கொண்டிருக்கிறோம், தூங்குகிறோம், கனவு காண்கிறோம். இந்த மூன்று அவஸ்தைகளுக்கும் ஜாக்ரத், ஸுஷுப்தி, ஸ்வப்னம் என்று பெயர். இந்த மூன்று அவஸ்தைகளில் ஒன்றை அனுபவிப்பது தவிர, இம் மூன்றுமல்லாத நாலாவது நிலைமையை நாம் அனுபவிக்கவில்லை. ஆனால் நாலாவது நிலைமையை அடைய வேண்டும். இந்த மூன்று அவஸ்தைகளிலும் ஸுகமில்லை. ஜாக்ரத் அவஸ்தை அதாவது விழித்துக் கொண்டிருக்கையில் பசி, தாஹம், கவலை முதலியன இருக்கின்றன. ஸ்வப்னாவஸ்தை ஸுகமில்லை. ஸ்வப்னம் காணும்போதெல்லாம் பணம் அகப்படுவதாக ஸ்வப்னம் காணவில்லை. துஸ்ஸ்வப்னமே அதிகம். நான் ஒரு நாள் ஒரு கனவு கண்டேன். ஒரு உயரமான கட்டடமிருந்தது. அதன் மாடிமேல் ஏற ஒரு ஏணி வைத்திருந்தது. அது வழியாக ஏறிவிட்டேன். ஆனால் ஒரு சாண் அகலமுள்ள இடமே அங்கிருந்தது. பயப்பட்டேன். அப்பொழுது ஒருவன் ஏணியை எடுத்துக் கொண்டு போய்விட்டான். கீழே விழுந்து விடுவேனோ என்று பயமாக இருக்கையில், விழித்துக்கொண்டு விட்டேன். எனக்குண்டான ஆனந்தத்திற்கு அளவேயில்லை. இந்த வாழ்வும் அப்படிப்பட்ட ஒரு கனவு. இதிலிருந்து விழித்துக் கொண்டுவிட்டால் நிரம்ப ஸந்தோஷம் உண்டாகும். அப்படி விழித்துக்கொண்டு விடவேண்டும். ஆனால் ஜாக்ரத், ஸ்வப்ன, ஸுஷுப்தி அவஸ்தைகளிலேயே உழன்று கொண்டிருக்கிறோம். மனிதன் இந்த மூன்று அவஸ்தைகளுக்கும் உள்ளாகி

யிருப்பதுபோல் பரமாத்மாவும் தாமாகவே ஏற்றுக் கொள்ளுகிறார்.

ஜகத் எல்லாம் அவருடைய சரீரம். நமது ஜீவன் எல்லாம்—உலகிலுள்ள ஜடமெல்லாம் அவருடைய சரீரம். நமக்கு மூன்று அவஸ்தைகளும் நம்மை அறியாமல் வருகின்றன. அவரோ தானாக அவைகளை வருவித்துக் கொள்ளுகிறார். சில காரியங்களைச் செய்வதற்காக அந்த அவஸ்தைகளை அவர் மேல்போட்டுக் கொள்ளுகிறார். ஸ்வப்னம் ரஜோகுணம், தூக்கம் தமோகுணம். பரமாத்மாவின் ஸ்வப்னத்தில் கண்டது இந்த உலகம். பரிபாலனம் அவருடைய ஸத்வம். நாசம் அவருடைய தமஸ். நமது தூக்கத்தில் கர்மேந்திரியங்களும் ஞானேந்திரியங்களும் ஆத்மாவில் ஒடுங்கி விடுகின்றன. பரமாத்மாவின் ஸுஷுப்தியில் அவருடைய சரீரமாகிய பிரபஞ்சம் அவரிடம் அடங்கி விடும். அவருடைய ஸ்வப்னமே பிரம்மா, அவருடைய விழித்தலே விஷ்ணு, அவருடைய தூக்கமே ருத்திரன். இந்த மூன்று அவஸ்தைகளில் ஸுகம் எதில் அதிகமாக இருக்கிறது? ஜாக்ரதவஸ்தையில் (விழித்துக்கொண்டிருக்கையில்) கவலை. பிராணிகள்கூட தங்களுடைய பிராணனுக்கு அபாயம் வந்துவிடுமோ என்று ஜாக்ரதவஸ்தையில் பயப்படுகின்றன. ஸ்வப்னத்தில் துஸ்ஸ்வப்னமே அதிகம். தூக்கத்தில்தான் கஷ்டமில்லை. 'ஸௌக்கியமாகத் தூங்கினேன்' என்கிறோம்; ஸௌக்கியமாக விழித்துக்கொண்டிருந்ததாகவாவது, ஸௌக்கியமாகக் கனவு கண்டதாகவாவது நாம் சொல்லுவதில்லை. ஆகையால் உபத்திரவமே இல்லாத நிலைமை தூக்கம் ஒன்றுதான். தூக்கத்தில் ஸுகமிருப்பதால் எப்

பொழுதும் தூங்கலாமென்றால் நம்மால் முடியவில்லை. ஒருவனை தூக்குப் போடும்படி தண்டனை விதிக்கப்பட்டிருக்கிறது. அவன்கூடத் தூங்கும் போது தனது துக்கத்தை மறந்துவிடுகிறான். ஆகையால் தூக்கத்தைப் போல் ஆனந்தமான அவஸ்தை வேறில்லை. ஆனால் எப்பொழுதும் தூங்க முடியவில்லை. பிரஸ்தாபித்த மூன்று அவஸ்தைகளும் மாறிமாறி வருகின்றன. இவைகளைக் கடந்து அப்பால் போய்விடின் இம்மூன்று மல்லாத துரீய நிலைமை உண்டாகி விடும். அதற்கு முக்தி அவஸ்தை என்றும், மோக்ஷ அவஸ்தை என்றும் பெயர்; மரணம் ஒரு தூக்கமே. தூக்கத்தில் இந்திரிய சக்தி ஒடுங்கிவிடுகிறது. மரணத்தில் தேஹத்தை விட்டு விட்டு ஞானேந்திரியசக்திகளைக் கூட்டிக் கொண்டு போய் வேறு ஜன்மம் எடுக்கிறது. வேறு தேஹம் வந்தவுடன் கர்மேந்திரியங்களும் வந்துவிடுகின்றன: நாலாவதாகிய துரீயத்தில் இவையெல்லாமில்லை. மூன்று அவஸ்தைகளும் கலப்பு; க்ஷணம் சந்தோஷம். வெகு காலம் துக்கம்.

இங்கு நாம் உட்கார்ந்தது முதல் கவலையின்றி ஆநந்தமாக இருக்கிறோம். அதனால்தான் புராணங் கேட்க வேண்டு மென்று சொல்லப்பட்டிருக்கிறது. புராணசிரவணம் செய்யும் நேரத்திலாவது கவலையற்றிருப்போம். ஒரு புண்ய தீர்த்தத்தில் ஸ்நானம் செய்யும் போது அந்த ஒரு க்ஷணமாவது கவலையற்றிருப்போம். ஒரு தான தர்மங்களைச் செய்யும் போதும் ஆனந்தம் உண்டாகிறது. அந்தந்த ஸமயத்தில் மனது சந்தோஷப் படுகிறது. ஒவ்வொருநாளும் குரு ஸேவை செய்து வேதாந்த சிரவணம் செய்தால் 80 கிருச்சரபலன்

சொல்லப்பட்டிருக்கிறது. அகண்டகாவிரி ஸ்நானபலன் 8 கிருச்சரம். அவஸ்தாத்ரயங்களைக் கடக்க இப்படியெல்லாம் பழக்கப்பட வேண்டும். ஜாக்ரதவஸ்தையும் ஸ்வப்பனவஸ்தையும் கலப்பான நிலைமைகள். நாலாவது அவஸ்தை சுத்தமானது. கலப்பற்றது. அதற்கு ஸமீபமானது ஸுஷுப்தி. தூக்கத்தில்தான் துக்கமேயில்லை. ஆத்ம நிஷ்டையிலும் துக்கமில்லை. இரண்டுக்கும் வித்தியாசமென்ன? ஸுஷுப்தியில் மறுபடியும் ஜாக்ரதவஸ்தையு முண்டு, துரீயத்தில் அது இல்லை. துரீயாவஸ்தைக்குத்தான் தூங்காமல் தூங்குதல் என்று பெயர். ஸுஷுப்தியின் குணம் தமஸ். தமோ மூர்த்தி ருத்திரன். ஆகையால் துரீயமாகிய பரமாத்மஸ்வரூபத்துக்கு ஸமீபமாகவுள்ள மூர்த்தி ருத்திரனே. தமஸ் என்பது இருட்டு. இருட்டில் ஒன்றும் தெரியாது. தூக்கத்தில் தூக்கத்திற்குக் காரணமான விதை இருக்கிறது. அதை அவர் மறைத்து விடுகிறார். தினந்தோறும் நாம் தூங்குவதை நித்திய ப்ரளயமென்றும், ருத்திரன் நம்மிடத்தில் இரக்கப்பட்டு வருவித்துக் கொள்ளும் தூக்கத்தை மஹாப்பிரளய மென்றும் சொல்லுவது வழக்கம். அவருடைய தமோ குணத்தால் நம்முடைய துக்கத்தை நமக்குத் தெரியாமல் மறைக்கிறார். அது பரமானுக்கிரஹம். மஹாப்ரளயத்தில் ஜீவர்களிடத்தில் இரக்கங் கொண்டு தம்மிடம் இழுத்துக் கொள்ளுகிறார். ஜகத் எவ்வளவு காலமிருந்ததோ அவ்வளவு காலம் பிரளயமுமிருக்கும். 'புனரபி ஜனனம், புனரபி மரணம்' என்று ஜீவர்கள் பிறந்து பிறந்து செத்துச் செத்துக் கஷ்டப்படுகின்றனவே, அவை இளைப்பாறட்டும் என்று கருணை கொண்டு தம்மிடத்தில் அடக்கிக் கொள்ளுகிறார். ஸுஷுப்தி அன்றியில் அனுக்ஹிரகிக்கவேண்டுமென்று

அவரையே சரணமடைகிறோம். துரியமான பரமாத்மாவுக்கு அடையாளமாக வுள்ளது மஹாலிங்கம். துரியமான பரமாத்மாவுக்கு ஸமீபத்தில் உள்ளவர் ருத்திரன. ஆகையால்தான் கோயில்களில் மஹாலிங்கத்துடன் ருத்திர மூர்த்திகளாகிய ஸோமாஸ்கந்தர் முதலிய மூர்த்திகள் இருக்கிறார்கள். நாம் உபாஸிப்பது பரமசிவன், துரீயம். மஹாலிங்கம் அவருடைய ஸ்வரூபம். அவருக்கு ஸமீபமான நிலைமையில் இருபபவர் ருத்திரன். அவருக்கும் சிவன் என்று பெயருண்டு. அவருடைய கிருத்தியமாகிய ஸம்ஹாரம் நம்முடைய க்ஷேமத்திற்கு அவசியமானது. ஸம்ஹாரம் என்பது சேர்த்துக்கொள்ளுதல். நம்மைத் தம்முள் சேர்த்துக்கொள்ளுகிறார். விஷ்ணுவும் அவரே. பிரம்மாவும் அவரே.

அம்பாளை பிரம்ம விஷ்ணுருத்திரர்கள சில ஸமயங்களில் பிரார்த்தித்ததாகச சொல்லப்பட்டிருக்கிறதே, அதெப்படி எனறு கேட்கலாம். பராசக்தி துரீயம். பராசக்தி, ஸரஸ்வதி, லக்ஷ்மி, பார்வதி என்பதாகப் பிரிந்து மூன்றாக ஆனாள். பார்வதி ஸுஷுப்தி ரூபமானவளாகையால், பராசக்திக்கு ஸமீபமாக வுள்ளவள். பிரம்ம, விஷ்ணு, ருத்திரர்கள அப்படியே பரமாத்மாவின் பிரிவால் உண்டாகி ஒவ்வொரு குணத்தைக் கிரஹித்தவர்கள். ஆகையால் துரீயத்துக்கு ஸமீப நிலைமையாகிய ஸுஷுப்திஸ்வரூபமான அம்பாளை மற்ற அவஸ்தைகளின் ஸ்வரூபமாகியவர்கள் வணங்கினார்கள் என்பதில் பிசகில்லை. அடியிலிருந்து மறுபடி சொல்லுகிறேன்.

பரமாத்மா மூன்றாகப் பிரிந்தார்; மூன்று கிருத்தியங்களைச்செய்ய அவர் மூன்று குணங்களைக் கிரஹித்துக் கொண்டார். ரூபம் மூன்று, வஸ்து ஒன்றே. ஜாக்ரத்,

ஸ்வப்ன, ஸுஷுப்தி அவஸ்தைகளில் ஸுஷுப்திதான் ஸுகமானது. அது தமோகுணம். தமோகுணமுடையவர் ருத்திரன். அவர்தான் பரமானந்தமாகிய துரீய நிலைக்கு ஸமீபமாக வுள்ளவர். அவருடைய நிலை துரீயத்தில் கொண்டுபோய் விடுகிறது. நாம் உபாஸிப்பது, மஹாலிங்கம் எதன் அடையாளமோ அந்த பரமாத்மாவாகிய சிவத்தை உபாஸித்து சிரேயஸை அடைவோம்.

---

T. 1892

ஸ்ரீ சந்த்ர மௌளீச்வராய நம:

## ஸ்ரீ காமகோடி கோசஸ்தானத்தின் வெளியீடுகள்

ஒவ்வொரு புத்தகமும் ஸம்ஸ்க்ருத, க்ரந்த மூலமும், தமிழ் அனுவாதமும், பல வர்ணப் படங்களுடனும் ஸ்ரீ ஆசார்யாள் அனுக்ரஹ பூர்வமான ஸ்ரீ முகத்துடனும் கூடியது.

| | | ரூ. | அ. | பை. |
|---|---|---|---|---|
| 1. | ஸ்ரீ விஷ்ணுஸஹஸ்ர நாமஸ்தோத்திரம் ... | 1 | 8 | 0 |
| 2. | ஷை மூலம் மட்டும் ... | 0 | 2 | 6 |
| 3. | ஸ்ரீ பஜ கோவிந்தம் ... ... ... | 0 | 4 | 0 |
| 4. | ஸ்ரீ முகுந்தமாலை ... ... ... | 0 | 6 | 0 |
| 5. | ஸ்ரீ ப்ரச்னோத்ர ரத்னமாலிகா (தெலுங்கில்) ... | 0 | 2 | 6 |
| 6. | ஸ்ரீ தேவீ ஸ்தோத்ர ரத்னாகரம் (ஸ்ரீ ச்யாமளா தண்டகம் முதலிய 12 தேவீ ஸ்தோத்ரங்கள் தமிழ் அர்த்தத்துடன் கூடியது) ... | 0 | 15 | 0 |
| 7. | ஸ்ரீ சீதலாஷ்டகம் ... ... ... | 0 | 2 | 6 |
| 8. | ஸ்ரீ அம்பாஷ்டகம் ... ... ... | o | 2 | 6 |
| 9. | ஸ்ரீ ஜம்புநாதாஷ்டகம் ... ... | o | 2 | 0 |
| 10. | ஸ்ரீ குலீரேசாஷ்டகம் ... ... | 0 | 2 | 0 |
| 11. | ஸ்ரீ கீதையும், குறளும் ... ... | 0 | 3 | 0 |
| 12. | ஸ்ரீ தயாசதகம் ... ... ... | 0 | 12 | 0 |
| 13. | ஸ்ரீ சிவபாதாதிகேசாந்த ஸ்தோத்திரங்கள் ... | 0 | 12 | 0 |
| 14. | ஸ்ரீ தக்ஷிணாமூர்த்தி அஷ்டகம் ... ... | 0 | 5 | 0 |
| 15. | ஸ்ரீ ரங்கநாதாஷ்டகம் ... ... ... | 0 | 2 | 0 |
| 16. | ஸ்ரீ அத்வைதசித்தாந்த வினாவிடை ... | 0 | 5 | 0 |
| 17. | கும்பகோணம் அத்வைத சபை பொன் விழா நினைவு மாலை — | | | |
| | (1) ஸம்ஸ்கிருதம்—51 கட்டுரைகள் அடங்கியது | 5 | 0 | 0 |
| 18. | (2) ஆங்கிலம் —12 ,, ,, ... | 3 | 0 | 0 |
| 19. | ஸ்ரீ ஆர்யா ஷஷ்டி ... ... | 0 | 10 | 0 |
| 20. | திருக்குறள் — பொருட்பாலும், காமத்துப் பாலும்—பாலருரையுடன் ... | 4 | 0 | 0 |
| 21. | ஸ்ரீ சங்கராசார்ய ஸ்வாமிகளின் நன்மொழிகள் 5 பாகங்களாக கூடிய சீக்கிரம் வெளியிடப்படும் | | | |

ஸ்ரீ ஆதிசங்கரர். ஸ்ரீ ஆச்சார்யாள் அவர்களின் திவ்ய மூவர்ண படங்கள். ஒவ்வொன்றும் விலை அணா 10.

### ஸ்ரீ காமகோடி கோசஸ்தானம்

57, மேல டபீர் தெரு
கும்பகோணம்

4, பிரான்ஸிஸ் ஜோஸப்புத் தெரு
சென்னை—1.

T
1893

கோடி க்ரந்தாவளி : 31

21 JAN 1953

T. 1893

ॐ

श्रीगुरुभ्यो नमः

3253

# நமது அனாதி மதம்

ஸ்ரீ காமகோடி பீடாதிபதிகளான

ஜகத்குரு

ஸ்ரீ சங்கராசார்ய ஸ்வாமிகள்

அருளிய நன்மொழிகள்



श्रीकामकोटिर्विजयते

ஸ்ரீ காமகோடி கோசஸ்தானம்

பிரான்ஸிஸ் ஜோஸப்புத் தெரு,

சென்னை



ஸ்ரீ ஜகத்குரு காஞ்சி காமகோடி பீடாதிபதிகள்
ஸ்ரீ சந்த்ரசேகரேந்த்ர ஸரஸ்வதீ ஸ்ரீ சங்கராசார்யஸ்வாமிகள்

ௐ

श्रीगुरुभ्यो नमः

# நமது அநாதி மதம்

ஸ்ரீ காமகோடி பீடாதிபதிகளான

ஜகத்குரு

## ஸ்ரீ சங்கராசார்ய ஸ்வாமிகள்

அருளிய நன்மொழிகள்



श्रीकामकोटिर्विजयते

ஸ்ரீ காமகோடி கோசஸ்தானம்

பிரான்ஸிஸ் ஜோஸப்புத் தெரு, சென்னை

பதிப்புரிமை] [விலை ரு. 0-6-0

முதற் பதிப்பு—பிப்ரவரி, 1950

Thompson & Co., **Ltd., Madras.**

T. 1893

॥ श्रीः ॥

यदा यदा हि धर्मस्य ग्लानिर्भवति भारत ।
अभ्युत्थानमधर्मस्य तदात्मानं सृजाम्यहम् ॥

ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதிகளான ஜகத்குரு ஸ்ரீ சங்கராசாரியார் ஸ்வாமிகள், 1932௵ செப்டம்பர் ௴ சென்னைக்கு விஜயம் செய்தார்கள். அச்சமயம் அவர்கள் அருளிய பொன்மொழிகள் இங்கே அளிக்கப்படுகின்றன.

காலவேறுபாட்டால் மக்கள் ஒரு நிலையில் இல்லை. நமது மதங்கள், வேதங்கள், சாஸ்திரங்கள், புராணங்கள அவற்றின் கொள்கைகள், நாகரிகம் முதலியவற்றின் உண்மைகளைச் சரிவர அறிந்து கொள்ளமுடியாமல் பலவாறு குழம்பி யிருக்கின்றனர். அன்னாரது நன்மைக்காகப் பல விஷயங்களும் எளிதில் விளங்குமாறு, தக்க மேற்கோள்களுடன் உபதேசிக்கப்பட்டுள்ளன.

மக்கள் தங்களது ஆத்ம லாபத்தைக் கருதி நற்பயன் அடையும் முறைகளை மேற்கொள்ள வேண்டுமென்று வேண்டப்படுகிறார்கள்.

ஸ்ரீ காமகோடி கோசஸ்தானம்

21 JAN 1958
TRIPLICANE P.C.

# விஷய அட்டவணை


| | | |
|---|---|---|
| | | பக்கம் |
| 1. | நம் மதத்தின் பொதுக் கொள்கை ... | 1 |
| 2. | நமது மதம் ... ... ... | 12 |
| 3. | அத்வைதம் ... ... | 34 |
| 4. | ஜீவன் முக்தி நிலை ... ... | 52 |

T. 1893

# நமது அநாதி மதம்

## 1. நம் மதத்தின் பொதுக் கொள்கை

(29—9—1932)

நமது தேசத்தில் பல மதங்கள் இருக்கின்றன. சைவ ஸித்தாந்தம் ஒன்று; வைஷ்ணவர்களுடைய பஞ்சராத்ர ஸித்தாந்தம் ஒன்று; மத்வருடைய ஸித்தாந்தம் ஒன்று; இப்படிப் பல ஸித்தாந்தங்கள் ஒன்றுக்கொன்று விரோதமாகக் காணப்படுகின்றன. எல்லாம் ஹிந்து மதத்தைச் சேர்ந்தனவே. அவைகளுள் எது தாழ்ந்தது, எது சிறந்தது என்பதை இப்பொழுது சொல்லப்போகிறதில்லை. ஆனால் ஹிந்து மதம் என்றால் என்ன? எல்லா ஸித்தாந்தங்களிலும் பொதுவாக என்ன சொல்லப்படுகிறது? என்று நாம் அறிந்து கொள்ளவேண்டும். இதைக் கேட்டால் தெளிவாகப் பதில் சொல்லுகிறதில்லை. நன்றாகப் படித்த பண்டிதர்களாயிருந்தாலும் ஸித்தாந்தங்களின் வித்யாஸங்களையே அதிகமாகச் சொல்லுகிறார்கள். நாம் படிக்கும் புஸ்தகங்களிலும் அப்படியேதான் காணப்படுகிறது. எல்லாவற்றிற்கும் பொதுவான ஏதோ ஒரு கொள்கை இருந்தாலொழிய ஹிந்து மதம் என்பதை ஒரு மதமாகச் சொல்ல முடியாது. இதைப்பற்றி நான் அநேக தடவைகளில் யோசித்திருக்கிறேன். அந்தப் பொதுவான விஷயம் என்ன என்று பார்ப்போம்.

தினந்தோறும் ஹிந்துக்களனைவரும் ராமாயண பாராயணம் ஆரம்பிக்கும்போதும் முடிக்கும் போதும் சில ச்லோகங்கள் சொல்லுவது வழக்கம். அவைகளுள்,

स्वस्ति प्रजाभ्यः परिपालयन्तां
न्याय्येन मार्गेण महीं महीशाः ।
गोब्राह्मणेभ्यः शुभमस्तु नित्यं
लोकाः समस्ताः सुखिनो भवन्तु ॥

என்பது ஒரு ச்லோகம். இதன் அர்த்தம்: 'ஜனங்கள் ஸௌக்யமாக இருக்கட்டும்! பூமியை ராஜாக்கள் நியாய மாக ஆளட்டும்! பசு, ப்ராம்மணர் இவர்கள் மங்களமாக வாழட்டும்! எல்லா உலகமும் ஸுகமாக இருக்கட்டும்!' என்பது.

இந்த ச்லோகத்தில் பொதுவாக ஜனங்களையும் உலகங்களையும் சொல்லிவிட்டுத் தனியாகப் பசுக்களையும் ப்ராம்மணர்களையும் சொல்லி அவர்கள் ஸௌக்யமாக இருக்கட்டும் என்று ஏன் சொல்லவேண்டும்? ப்ராம்ம ணர்கள் உலகத்தில் அடங்காதவர்களா? ஏன் அப்படிச் சொல்லவேண்டும்? எல்லோரைப் பற்றியும் சொன்ன பிறகு, தனியாக ப்ராம்மண ஜாதிக்கு ஸௌக்ய முண்டாகட்டும் என்று சொல்லுவது பக்ஷபாதமாகத் தோன்றுமல்லவா? ஆகவே இது பலருக்குச் சரியல்ல வென்று தோன்றும். அப்படி பக்ஷ பாதமாக வைத்துக் கொண்டாலும் பசுக்களை ஏன் தனியாகச் சொல்ல வேண்டும்? பசு எல்லோருக்கும் பொது தானே? ஆகையால் இதன் காரணம் நன்ருக விளங்கவில்லை. ஏன் அப்படிச் சொல்லவேண்டும் என்பதைக் கவனிக்க வேண்டும். இது இப்படி இருக்கட்டும்.

மதுரையில் கூன் பாண்டியன் என்று ஒரு அரசன் இருந்தான். அவன் சமணர்களுடைய உபதேசத்தால் சமணன் ஆனான். ஊரில் யாரும் விபூதி பூசக்கூடாது. ருத்ராக்ஷம் தரிக்கக்கூடாது என்றும் கட்டளை இட்டான். அவனது மனைவியும் மந்திரியும் மஹா சிவபக்தர்களா யிருந்தார்கள். இருந்தாலும் அரசனின் கட்டளையை மீற முடியவில்லை. ஏகாந்தத்தில் சிவனை வழிபட்டு வந்தார்கள். 'எப்பொழுது அரசன் இந்தச் சமண மதத்திலிருந்து திரும்பிச் சிவனை ஆராதிக்கப்போகிருன் ?' என்ற கவலையுடன் இருந்தார்கள். இப்படி இருக்கையில், சைவமத ஸ்தாபகர்களான நால்வருள் முக்கியமான வரும், ஸுப்ரஹ்மண்ய ஸ்வாமியின் அவதாரபூதருமான ஸம்பந்தமூர்த்தி ஸ்வாமிகள் பல பக்தர்களோடு ஒவ்வொரு சிவஸ்தலத்திற்கும் யாத்திரை செய்துகொண்டிருந்தார். அந்த ஸமாசாரத்தை அறிந்த பாண்டியனுடைய மந்திரி யும் மனைவியும் ரகஸ்யமாக ஸ்வாமிகளை அடைந்து, மதுரைக்கு விஜயம் செய்து அரசனுக்கு நல்ல புத்தி போதிக்கவேண்டும் என்று வேண்டிக் கொண்டார்கள். அவர் மதுரைக்குச் சென்று, தங்கிய மடத்தில் சமணர்கள் தீயிட்டனர். அதைக்கண்டு அவர் அத்தீ பாண்டியர்க் காக வேண்டுமென்று* ஈச்வரனைப் பிரார்த்திக்கவும் அப்பொழுது ஈச்வர ஸங்கல்பத்தால் அரசனுக்குக் கடுமையான ஜ்வரம் வந்தது. சமணர்கள் எவ்வளவோ ச்ரமப்பட்டும் ஜ்வரத்தைத் தணிக்க முடியவில்லை. அந்த ஸமயம் மந்திரி ஸம்பந்தருடைய மாஹாத்ம்யத்தைச் சொல்லி அவர் வந்து பார்த்தால் ஜ்வரம் தணிந்துவிடும் என்று சொன்னார்.

* "பொய்யராமமணர்கொளு வுஞ்சுடர்
பையவேசென்று பாண்டியர்க் காகவே"—தேவாரம்.

உலகத்தில் எவ்வளவு பிடிவாதக்காரர்களாயிருந்தாலும் வியாதியின் தொந்தரவு தாங்க முடியாதபோது தங்கள் பிடிவாதத்தைக் கொஞ்சம் மாற்றிக் கொள்வது வழக்கம். அதுபோல அரசனும் சிவ பக்தர்களையும் விபூதி ருத்ராக்ஷம் தரித்தவர்களையும் பார்ப்பதுகூட இல்லை என்ற தீவ்ர வ்ரதமுடையவனாயிருந்தும் வியாதியின் தொந்தரவு தாங்க முடியவில்லை. ஆகையால் மந்திரி வேண்டிக்கொண்டதற்கு ஸம்மதித்தான். மந்திரிக்கு மிகவும் ஸந்தோஷம் உண்டாயிற்று. மிக்க ஆடம்பரமாக ஸம்பந்தரை வரவழைத்தான். ஸம்பந்தர் அங்கு வந்ததும் சமணர்களுக்கும் அவருக்கும் வாக்கு வாதம் நேர்ந்தது. உடனே ஸம்பந்தர், அவர்களைப் பார்த்து, "நீங்கள் அரசனுடைய உடம்பில் வலது பக்கத்திலுள்ள ஜ்வரத்தை உங்களுடைய மந்த்ர சக்தியால் போக்குங்கள்; நான் இடது பக்கத்திலுள்ள ஜ்வரத்தை என்னுடைய மந்த்ர சக்தியால் போகச் செய்கிறேன். நீங்கள் போக்கடிக்காவிட்டால் நீங்கள் தோற்றவர்கள்; நான் போக்கடிக்காவிட்டால் நான் தோற்றவன்" என்றார். உடனே ஸம்பந்தர், "மந்திரமாவது நீறு வானவர் மேலது நீறு..." என்று ஆரம்பிக்கும் பத்துப் பாட்டுக்களைச் சொல்லி விபூதியை எடுத்துப் பாண்டியனுடைய இடது பக்கத்தில் பூசினார். உடனே ஜ்வரம் நின்றுவிட்டது. சமணர்கள் எவ்வளவோ முயன்றும் அவர்களால் வலது பக்கத்திலுள்ள ஜ்வரத்தைத் தணிக்க முடியவில்லை. உடனே அவர்கள் "நாங்கள் இடது பக்கத்தை வைத்துக் கொள்ளுகிறோம், நீர் வலது பக்கத்தை எடுத்துக் கொள்ளும்" என்றார்கள். அதற்கும் ஸம்பந்தர் ஸரி என்று சொல்லி வலது பக்கத்திலுள்ள ஜ்வரத்தைத் தணிக்க அதே பாசுரத்தைப் பாடி வலது

பக்கத்தில் விபூதியைப் பூசினர். அரசனுக்கு வந்த ஜ்வரம் சாதாரண ஜ்வரமல்ல. அது ஈச்வர ஸங்கல்பத்தால் வந்த ஜ்வரம். ஆதலால் வலது பக்கத்திலிருந்த ஜ்வரம் திடீரெனச் சமணர்களுடைய பக்கமான இடது பக்கத்திற்கு வந்துவிட்டது. பிறகு ஸம்பந்த ஸ்வாமி அரசன்படும் அவஸ்தையைப் பார்த்து இரக்கங்கொண்டு அந்த ஜ்வரத்தையும் ஒருவாறு தணித்தார்.

இவ்வளவு தூரம் ப்ரத்யக்ஷமாக நேர்ந்தும் சமணர்கள் தாங்கள் தோற்றதாக ஒத்துக்கொள்ளவில்லை. அரசனுக்கும் பூர்ண நம்பிகை ஏற்படவில்லை. இரண்டு பிரிவினர்களும் வாதம் செய்யலாம் என்று ஆரம்பித்தனர். அதற்கு முன்பு, ஸம்பந்தர் கோவிலுக்குப் போய் ஸ்வாமியினிடம் ப்ரார்த்தனை செய்து வந்தார். சமணர்கள் வேதத்தையும் வேள்வியையும் நிந்திக்கிறவர்களாகையால் அவர்களை அடக்கி உன்னுடைய புகழே எங்கும் பரவும்படி செய்யவேண்டுமென்று ஈசனை வேண்டிக்கொண்டார்.

"வேத வேள்வியை நிந்தனை செய்துழல்
ஆதமில்லி யமணொடு தேரரை
வாதில் வென்றழிக் கத்திரு வுள்ளமே
பாதி மாதுட னாய பரமனே
ஞால நின்புக ழேமிக வேண்டுந்தென்
ஆல வாயி லுறையு மெம் மாதியே"

[சம்பந்தர் தேவாரம்–திருவாலவாய்]

என்று அவர் வேண்டிக்கொண்டு சமணர்களிடம் போனார்.

உடனே, ஸம்பந்தர் சமணர்களைப் பார்த்து, "உங்கள் கொள்கைகளை ஓர் ஓலையில் எழுதி இந்த வைகையாற்று வெள்ளத்தில் போடுங்கள். நானும் என்

கொள்கையை எழுதிப் போடுகிறேன். எந்த ஓலை ப்ரவாஹத்தோடு போகாமல் அதை எதிர்த்துச் செல்லுகிறதோ அதிலுள்ள கொள்கைதான் உண்மையானது" என்று சொன்னார். அதற்கு அவர்கள் ஸம்மதித்தார்கள். அவர்கள் அப்படிப்போடவே சமணர்களின் ஓலை ப்ரவாஹத்தோடு சென்றுவிட்டது. ஸம்பந்தருடைய ஓலை தண்ணீரில் எதிர்த்துச் சென்றது. பிறகும் சமணர்கள் தாங்கள் தோற்றதாக ஒப்புக்கொள்ளவில்லை. பின்பு ஸம்பந்தர், "நாம் இருவரும் முன்போலவே நெருப்பில் எழுதிப்போடுவோம். யாருடைய ஓலை எரிந்து போகிறதோ அவர்கள் தோற்றுப் போனவர்கள்" என்று சொன்னார். அதையும் ஒப்புக்கொண்டு அப்படியே இருவரும் செய்ய, சமணர்களின் ஓலை எரிந்துபோயிற்று. ஸம்பந்தருடைய ஓலை அப்படியே இருந்தது.

ஸம்பந்தமூர்த்தி ஸ்வாமிகள் அந்த ஓலையில் பின் வருமாறு எழுதியிருந்தார் :

'வாழ்க அந்தணர் வானவர் ஆனினம்
வீழ்க தண்புனல் வேந்தனும் ஓங்குக
ஆழ்க தீயதெல் லாம்அரன் நாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே.'

இதன் அர்த்தம் :

'ப்ராம்மணர்கள் ஸௌக்கியமாக வாழவேண்டும். தேவர்கள் ஸௌக்யமாக இருக்கவேண்டும். பசுக்கள் ஸௌக்யமாக இருக்கவேண்டும். குளிர்ந்த மழை பெய்ய வேண்டும். அரசன் நீதி தவறாமல் ஆளவேண்டும். கெடுதியெல்லாம் தொலையவேண்டும். உலகம் முழுவதும் 'ஹர ஹர மஹாதேவ' என்ற வார்த்தை நிரம்பி யிருக்க வேண்டும். உலகத்திலேயே துக்கமென்பது இருக்கக் கூடாது.'

சைவர்கள் கொள்கை எப்படி வேண்டுமானாலும் இருக்கட்டும். அவர்களுடைய முடிவான ஸித்தாந்த மாகிற இந்தப் பாட்டிலும் ப்ராம்மணர்களையும் பசுக்களை யும் தனியே எடுத்துச் சொல்லியிருக்கிறார். இப்பாட்டில் தேவர்களும் சொல்லப்பட்டிருக்கின்றனர். முன்சொன்ன ச்லோகத்தில் தேவர்கள் சொல்லப்படவில்லை. இப்படியே நமக்குள் பொதுவாக ஒரு ச்லோகம் வழங்கி வருகிறது.

'नमो ब्रह्मण्यदेवाय गोब्राह्मणहिताय च ।
जगद्धिताय कृष्णाय गोविन्दाय नमोनमः ॥'

[சாந்திபர்வம், 46, Sl. 12, 6.]

இதன் அர்த்தம்:

'ப்ராம்மணர்களுக்கும் பசுவுக்கும் நன்மையைச் செய்யும் கிருஷ்ணனுக்கு நமஸ்காரம்.'

இங்கும் ப்ராம்மணனும் பசுவும் தனியே எடுத்துச் சொல்லப்பட்டிருக்கின்றனர். இப்படிச் சொல்லுவதற்குக் காரணம் என்ன என்பதை விசாரிப்போம்:

உலகத்தில் யார் எவ்விதக் கேள்வி கேட்டாலும், அதற்கெல்லாம் தகுந்த பதில் கீதாசாஸ்திரத்தில் சொல்லப்பட்டிருக்கிறது.

'सर्वोपनिषदो गावो दोग्धा गोपालनन्दनः ।
पार्थो वत्सः सुधीर्भोक्ता दुग्धं गीतामृतं महत् ॥'

[கீதா மங்களாசரணம், 4.]

'எல்லா உபநிஷத்துக்களும் பசுக்களாம். அவை களைக் கறக்கும் இடையன் ஸ்ரீ கிருஷ்ணபகவான். அப்பசுக்களின் கன்று அர்ஜுனன். அப்பசுக்களிடம்

கறந்த பால் கீதை யென்பதாகும். பாலைக் குடிப்பவர்கள் வித்வான்கள்.'

லோகத்தில் ஓர் இடையன் பால் கறக்கவேண்டு மென்றால் மாட்டுடன் கன்றையும் கொண்டுபோக வேண்டும். பால் கன்றுக்கும் மற்றவர்களுக்கும் உபயோகப்படுவது போல கீதா சாஸ்திரம் யாருக்கு எவ்வித ஸந்தேஹம் உதித்தாலும் அதைப் போக்கும்; யார் எவ்விதக் கேள்வி கேட்டாலும் அதற்குப் பதில் அதிலிருக்கும். அநேக க்ரந்தங்கள் இருந்தாலும் நான் ஏன் இதை எடுத்துக்கொண்டேன் என்றால் அதற்கு ஒரு காரணமுண்டு. இக் காலத்தில் எல்லாரும் கீதை உயர்ந்த தத்வக்ரந்தம் என்று ஒப்புக்கொள்ளு கிறார்களல்லவா? அதில் சொல்லும் தத்வங்கள் என்ன என்பதில் விவாதமிருந்தாலும், கீதை உயர்ந்த க்ரந்தம் என்பதில் ஒருவருக்கும் ஆக்ஷேபமில்லை. இப்படிப் பெரியவர்கள் ஒப்புக்கொண்ட புஸ்தகத்திலிருந்து நான் முன் சொன்ன ஸந்தேகத்திற்குத் தகுந்த பதில் கிடைக்கு மானால் நீங்கள் எல்லோரும் நிச்சயமாக நம்பிக்கை யடைவீர்கள் என்று எண்ணி அதைச் சொல்ல எடுத்துக்கொண்டேன்.

இவ்வுலகில் மனிதர்களாகிய நம்முடைய ஜீவனரீதி யைக் கவனிப்போம். ஓர் ஊரில் ஒரு ஸாமான் அதிகமாக விளைந்தால் அதை அந்த ஸாமான் விளையாத ஊருக்கு அனுப்பி, நம் ஊரில் விளையாததும் அந்த ஊரில் விளை வதுமான மற்றொரு ஸாமானை வாங்கி வருகிறோம். தச்சன், கொல்லன் முதலியவர்கள் நமக்காகச் சில காரியங் களைச் செய்கிறார்கள்; நாம் அவர்களுடைய காலக்ஷேபத் திற்கு வேண்டியவைகளைக்கொடுக்கிறோம். பசுக்களுக்குப்

புல் போடுகிறோம்; அவை நமக்குப் பால் கொடுக்கின்றன. நாம் ராஜாங்கத்திற்கு வரி கொடுக்கிறோம். அவர்கள் நமக்குத் தீங்கு வராமல் காவல் கட்டுச் செய்கிறார்கள். இப்படி உலக முழுவதுமே பரிவர்த்தனை க்ரமத்தில் நடந்து வருகிறது. இப்படியே நாம் லோகாந்தரங்களுடன் சில பரிவர்த்தனை செய்து கொண்டிருக்கிறோம். இஞ்சினீயர் முதலியவர்கள் பெய்த மழை நீரை ஒழுங்காகப் பிரித்து ஆறு முதலியவைகளில் பாயும்படி விடுவார்களே யொழிய, மழை பெய்யும்படி செய்ய அவர்களால் முடியாது. மழை பெய்யவேண்டுமானால் நாம் சில ஸாமான்களைத் தேவலோகத்திற்கு அனுப்ப வேண்டும். இதையே கீதையில் சொல்லியிருக்கிறது:

'सहयज्ञाः प्रजाः सृष्ट्वा पुरोवाच प्रजापतिः ।
अनेन प्रसविष्यध्वम् एष वोऽस्त्विष्टकामधुक् ॥
देवान् भावयतानेन ते देवा भावयन्तु वः ।
परस्परं भावयन्तः श्रेयः परमवाप्स्यथ ॥'

[கீதை, III, 10-11]

இதன் அர்த்தம்:

முதல்முதலில் ப்ரம்மா ஜனங்களோடு யாகத்தையும் ஸ்ருஷ்டித்தார். அப்பொழுது அவர்களைப் பார்த்து, "இந்த யாகத்தைச் செய்து நீங்கள் க்ஷேமத்தை அடையுங்கள். இந்த யாகம் உங்களுடைய இஷ்டங்களைப் பூர்த்திசெய்து வைக்கட்டும்! இந்த யாகத்தைக்கொண்டு நீங்கள் தேவர்களைத் திருப்தி செய்து வையுங்கள். அந்தத் தேவர்கள் மழை முதலியவற்றால் உங்களுக்கு க்ஷேமத்தைச் செய்யட்டும்! இப்படியே நீங்கள், ஒருவருக்கொருவர்

உதவி செய்து கொண்டு மேலான க்ஷேமத்தை அடையுங்கள்" என்று சொன்னார்.

யாகம் என்பது மந்த்ரம், தேவதை, ஹவிஸ் என்ற மூன்று ஸ்வரூபமாக உள்ளது. அவைகளுள் மந்த்ரம், ப்ராம்மணனால் சொல்லப்படவேண்டும். தேவதையை மனஸால் த்யானம் செய்யவேண்டும். ஹோமம் செய்வதற்கு முக்யமாக வேண்டியது பசுவின் நெய். இந்தக் காலத்தில் ப்ராம்மணர்கள் பெரும்பாலும் இங்கிலீஷ் படிக்கிறார்கள். அவர்கள் வேதாத்யயனம் செய்யவில்லை. இங்கிலீஷ் படித்தவர்களுக்கு, பிறகு வேதாத்யயனம் செய்தாலும், சரியான உச்சாரணம் செய்ய முடிவதில்லை. ஆகையால் தற்காலத்தில் மந்த்ரசுத்தி இல்லை. கர்மாக்களை ஒழுங்காக ஒருவரும் செய்யாததால் வேதாத்யயனமும் சரியாயில்லை. பசுவின் பால் தற்காலத்தில் பெரும்பாலும் காபிக்கு உபயோகப்பட்டு விடுகிறது. ஆகையால் சுத்தமான நெய்யும் கிடைப்பதில்லை. ஆதலால் த்ரவ்ய சுத்தியும் இல்லை.

யாகத்திற்கு முக்யமான மந்த்ரத்தை அத்யயனம் செய்வதால் ப்ராம்மணனையும், ஹோமத்ரவ்யமான நெய்யைக் கொடுப்பதால் பசுவையும் எல்லாவிடத்திலும், மேல்கண்ட ச்லோகங்களிலும், திருஞானஸம்பந்தர் பாசுரத்திலும் தனியாகச் சிறப்பித்துக் கூறியதாக எண்ணவேண்டியிருக்கிறது. யாகத்தினால் ஏற்படும் ப்ரயோஜனம் ப்ராம்மணர்களுக்கும் பசுவிற்கும் மட்டும் இல்லை. லோகத்தில் எல்லோருக்குமே க்ஷேமத்தைக் கொடுப்பது யாகம். யாகங்கள் செய்தால்தான் லோகம் க்ஷேமமாக இருக்கும். யாகம் ஒழுங்காக நடைபெற வேண்டுமானால் ப்ராம்மணர்களும் பசுக்களும் க்ஷேமமாய் இருக்கவேண்டும்.

தற்காலத்தில், வேதாத்யயனம் செய்யாத ப்ராம்மணர்கள் தாங்கள் வேதாத்யயனம் செய்யவில்லையேஎன்று வருத்தப்படுவதோடு, வேதாத்யயனம் செய்த ப்ராம்மணர்களை அலக்ஷ்யம் செய்யாமல் மரியாதையாக நடத்தவேண்டும். அவர்களுக்கு நமஸ்காரம் செய்யவேண்டும். கூடுமான வரையில் எல்லோரும் காபியை நிறுத்தவேண்டும். கொஞ்சமாவது வேதாத்யயனம் செய்யவேண்டும். பஞ்ச மஹாயஜ்ஞங்களையும் முடிந்தவரையில் செய்யவேண்டும்.

ஹிந்துமதப் பிரிவுகள் சில கொள்கை வேறுபாட்டால் பலவகையாக இருந்தாலும் எல்லாவற்றிற்கும் பொதுவான கொள்கை ஒன்றுகத்தான் இருக்க வேண்டும்.

பொதுவாக லோகத்தின் க்ஷேமத்திற்கு ப்ராம்மணர்களும் பசுக்களும் முக்கிய காரண பூதர்களாக இருப்பதால் தான் எல்லா ஹிந்துமதப் பிரிவினர்களும் ப்ராம்மணர்களையும் பசுக்களையும் சிறப்பாகச் சொல்லியிருக்கிறுர்கள் என்று எண்ணவேண்டியதாயிருக்கிறது.

# 2. நமது மதம்

(12—10—1932)

உலகத்தில் அநேக மதங்கள் இருக்கின்றன. ஒவ்வொரு மதத்திற்கும் ஒவ்வொரு பேர் இருக்கிறது. எல்லா மதத்தின் பேர்களும் மனிதரைப் பொறுத்தே இருக்கின்றன. அந்த அந்த மதத்தை யார் யார் ஏற்படுத்தி இருக்கிறார்களோ அவர் அவர் பேரால் அந்த அந்த மதம் வழங்கி வருகின்றது. புத்த மதம் புத்தரால் (Buddha) ஏற்பட்டது. ஜைன மதம் மஹாவீரரால் ஏற்பட்டது. முகம்மதிய மதம் முகம்மதினால் (Mahommed) ஏற்பட்டது. கிறிஸ்து மதம் கிறிஸ்துவால் (Jesus Christ) ஏற்பட்டது. பாரஸீகத்தில் ஒரு மதம் இருந்தது. அது ஜாரதஸ்தர் (Zoroaster) என்பவரால் ஏற்பட்டது. அந்த மதஸ்தர்கள் நம் தேசத்தில் இப்பொழுது இருக்கிறார்கள். சைனாவில் கன்பூஷஸ் (Confucius) என்பவரால் ஏற்படுத்தப்பட்ட மதம் உள்ளது. இப்படி ஒவ்வொரு மதமும் ஒவ்வொரு அவதார புருஷரால் ஒவ்வொரு காலத்தில் ஏற்படுத்தப்பட்டு இருக்கிறது. பல ஜனங்களுக்கு உபதேசம் செய்து அவர்களை தங்கள் வழிப்படுத்திக்கொண்டவர்கள் மஹா புருஷர்களாய்த்தான் இருக்கவேண்டும். இப்படி மற்ற மதங்களெல்லாம் ஒவ்வொரு பேருடையதாக இருக்கிறது. நம் மதத்துப் பையன் ஒருவனை நீ என்ன மதம் என்று கேட்டால் இங்கிலீஷ் படித்தவனாயிருந்தால் ஹிந்து மதம் என்று சொல்வான். இல்லாவிட்டால் அதுகூடத் தெரியாது. பத்திரம் எழுதுகிறவர்களைக் கேட்டால் சிவமதம் விஷ்ணு மதம் என்று இரண்டு சொல்வார்கள். ஆனால் அவை

உட்பிரிவுகள் ஆகும். அவைகள்கூட மனுஷ்யர் பேரால் இல்லை. இவைகளுக்கெல்லாம் சேர்ந்து பொதுப்பெயர் என்னவென்று கேட்டால் ஒன்றும் தெரிவதில்லை. ஹிந்து மதம் என்று சொன்னால் தாத்தாவைக் கேட்டாலும் அது தெரியவேண்டும். ஒரு கிறிஸ்துவனைப் பல தலைமுறைகளுக்கு முந்தி கேட்டாலும் அவன் கிறிஸ்து மதம் என்று சொல்வான். அது மாதிரி நமக்குப் பழைய பெயர் ஒன்றில்லை. வாஸ்தவமாக நமது மதத்திற்கு ஒரு பெயரும் இல்லை. உட்பிரிவுகளுக்குப் பெயர் இருந்தாலும் அவைகூட ஸ்வாமி பெயராக இருக்கின்றனவே யொழிய மனுஷ்யாள் பெயரைக் காணோம். சிவ பக்தன் விஷ்ணு பக்தன் எல்லோரும் ஒரு மதத்துள் அடங்கினவர் என்பதை அறிவார்கள். அந்தப் பொதுமதம் என்ன? அதன் பெயர் எது? என்று கேட்டால் ஒன்றும் தெரிவதில்லை. சில பேர் ஸநாதன தர்மம் என்று ஒரு புதுப்பெயர் சொல்லுகிறார்கள். அது பழைய பெயர் இல்லை. நம்முடைய மதத்தின் பெயர் அதாக இருந்தால் பாட்டியைக் கேட்டாலும் தெரியவேண்டும்; பறையனைக் கேட்டாலும் தெரியவேண்டும். அப்படிக் கேட்டால் அவர்கள் ஸநாதன தர்மம் என்பார்களா? அதனால் அந்தப் பெயர் ஸரியில்லை என்பது தெரிகிறது.

ஹிந்து மதம் என்று யாரோ பேர் வைத்திருக்கிறார்கள். அதற்குக் காரணம் உண்டு. நம்மவர்கள் ஹிந்துக் கரையில் இருந்தார்கள். அந்த ஹிந்து (Indus) நதியை வேறு தேசத்தவர்கள் இந்து என்று சொன்னார்கள். ஹிந்து தேசத்தை இந்து தேசமென்றார்கள். ஒரு தேசத்திற்குப் பக்கத்தில் உள்ள தேசம் எதுவோ அந்த

தேசப்பெயராலேயே அதற்கப்புறம் உள்ள தேசங்களை யும்வழங்குவது வழக்கம். வடக்கே இருந்து எந்த பைராகி வந்தாலும் காசிப்ராம்மணன் என்று நாம் சொல்லு கிறோம். மலையாள தேசத்திற்குப் பக்கத்தில் இருப்பது கொங்கு நாடு. அங்கு இருப்பவர்களைக் கொங்கம்பட்டர் என்று மலையாளத்தார் சொல்லுவார்கள. தஞ்சாவூர் திருச்சினாப்பள்ளி ஜில்லாவிலுள்ளவர்களையும் கொங்கம் பட்டர் என்றுதான் சொல்லுவார்கள். வேறு நாட்டார் எல்லாரும் அவர்களுக்குக் கொங்கம் பட்டர்களே. தெலுங்க நாட்டுக்கு அடுத்தாற்போல் கீழே இருப்பது அரவா நாடு. அதை அரவ நாடு என்று சொல்வதும் உண்டு. அதற்கு அப்புறம் உள்ள தேசங்களும் அவர் களுக்கு அரவ தேசங்கள் தாம். தமிழை அரவம் என்று சொல்வதற்குக் காரணம் இதுதான். பொருளற்ற சப்த மென்று இப்பொழுது சொல்லுகிறார்கள். அது தப்பு. பைராகிகளுக்கு உத்தர தேசத்தில் மாவு தருகிறார்கள். நம்முடைய தேசத்தில் அவர்களுக்கு ஒன்றும் தருவ தில்லை. அவர்கள் வடதேசத்துக்குப் போய் ஒரு பாட்டுப் பாடுவதுண்டு. அந்தப் பாட்டு,

இல்லா போபோ கரே தெலுங்கி
நஹிகு ஜாராத் ஸந்தன்
தேல்ப தாதே கரேல்

இந்தப் பாட்டுக்குத் தெலுங்கர் இல்லை போபோ என்று சொல்லுகிறார்கள். நெய்யைக் கேட்டால் தேங்கா யெண்ணெய் தருகிறார்கள் என்பது அர்த்தம். இல்லை போபோ என்பது தமிழனுடையவார்த்தை, தெலுங்கன் அப்படிச் சொல்லுவதாகப் பைராகிகள் சொல்லுகிறார் கள். அவர்களுக்கு அடுத்தது தெலுங்கு தேசம்.

அதனல் அப்புறம் உள்ளவற்றையும அப்படியே வழங்கு கிருர்கள். இவற்றைப் போலத்தான் ஸிந்துப் பிர தேசத்தைக் கண்டவர்களும் நம்முடைய தேசம் முழுவதையும் ஹிந்து தேசம் என்றும் நம்மை ஹிந்துக்க ளென்றும் நமது மதத்தை ஹிந்துமதமென்றும் சொல்ல ஆரம்பித்தார்கள். ஆகையால் ஹிந்து மதம் என்பது நமது மதத்துக்குரிய பழைய பெயர் அல்ல.

ஒவ்வொரு மதத்தினரும் ஏதாவது தமக்காக ஓர் அடையாளத்தை உடையவர்களாக இருக்கிருர்கள். நமக்கு எப்படிப் பொதுவான பேர் ஒன்று இல்லாமல் இருக்கிறதோ அப்படியே பொதுவான அடையாளமும் இல்லாமல் இருக்கிறது. நாமாவும் ரூபமும் இல்லாத மதம் நமது மதம். ஹிந்துவுக்கு என்ன அடையாளம்? சில பேர்கள் வீபூதி இட்டுக்கொள்கிருர்கள். சில பேர் நாமம் போட்டுக்கொள்கிருர்கள். சில பேர் சிவன் கோயி லென்ருல் கண்ணை மூடிக்கொள்கிருர்கள். சில பேர் லிங்கங் கட்டிக்கொண்டு வீரசைவர்களாக இருக்கிருர் கள். அவர்களுக்கு வைஷ்ணவனைக் கண்டால் ஆவ தில்லை. இவ்வளவு பேருக்கும் பொதுவான அடையாளம் என்ன இருக்கிறது? சிகையை அடையாளமாகச் சொல்லலாமா? இந்தக் காலத்தில் அதைச் சொல்ல முடியவில்லை. அல்லாமலும் சீனக்காரன்கூடச் சிகை வைத்துக் கொள்கிருன். அதனல் அதை ஓர் அடையாள மாகச் சொல்ல முடியாது.

இப்படி அடையாளம் இல்லாமல் இருக்கிறதே! எதை அடையாளமாகச் சொல்லலாம் என்று யோசித் தேன். ஓர் அடையாளத்தைக் கண்டுபிடித்தேன். பெருமாள் கோயில் தேரிழுப்பவன் ஹிந்து என்று ஒன்று

தோற்றியது. அன்றைக்குப் பறையன் முதல் ப்ராம் மணன் வரையில் தேர் இழுக்கிறார்கள். சிவன் கோயில் தேர் என்றால் வைஷ்ணவர்கள் வரமாட்டார்கள். அதனால் தான் பெருமாள் கோயில் தேர் என்றேன். ஏதாவது ஒரு அடையாளம் சொல்லித்தானே ஆகவேண்டும்? அதனால் வேடிக்கையாக இந்தச் சின்ன அடை யாளத்தைச் சொன்னேன். கிறிஸ்தவர்களும் முஹம்மதி யர்களும் தேரிழுக்க வரமாட்டார்களல்லவா?

ஒரு ஸம்ஸ்க்ருதக் கதைப் புஸ்தகம் வாசித்தேன். அதில் ஒரு அரசனுடைய அரண்மனை வர்ணிக்கப்பட் டிருக்கிறது. அந்த அரண்மனையில் சில துருக்க வீரர்கள் இருந்தார்கள். அவர்களைப் பற்றிச் சொல்லுகையில்,

‘अक्षतश्रोत्रयुग्माः’ ।

என்று சொல்லப்பட்டிருக்கிறது. அவர்கள் காது குத்தாதவர்களென்பது அதன் அர்த்தம். அப்பொழுது ஹிந்துக்கள் காது குத்தினவர்கள் என்ற ஞாபகம் உண்டாயிற்று. இது ஒரு லௌகிக அடையாளம். இப்படி ஏதாவது ஸ்வாரஸ்யமில்லாத அடையாளங் களைச் சொல்லவேண்டியிருக்கிறதே ஒழியச் சிறந்த பொது அடையாளம் ஒன்றும் நமக்கு இல்லை.

பேர் ஏன் இல்லை? அடையாளம் ஏன் இல்லை? மற்ற மதங்களுக்கெல்லாம் இருக்கிறதே, என்று ஒரு ஸமயம் யோசித்துப் பார்த்தேன். அப்புறம் எனக்கு ரொம்ப ஸந்தோஷமாக இருந்தது. பெரிய கௌரவம் தோன்றிற்று. பேர் இருக்கிற மதத்திற் பிறக்காமற்

போனோமே என்ற ஸந்தோஷம் உண்டாயிற்று. பேரில்லாமல் இருப்பது ஒரு கௌரவம் என்ற எண்ணம் ஏற்பட்டது.

மதம் என்பது என்ன? ஜன்மம் எடுத்ததன் ப்ரயோஜனத்தை அடையச் சொல்லிக்கொடுக்கும் ஒரு வழி. ச்ரேயஸ்ஸுக்கு எது ஸாதனமோ அதுதான் மதம். புஸ்தகங்களில் அது தர்மம் என்னும் பெயரால் சொல்லப்பட்டிருக்கிறது. ஜன்மம் கடைத்தேறுவதற்கு வழி அந்தத் தர்மந்தான். அதற்குப் பேர் எதற்கு?

எங்கள் ஊரில் ராமு என்னும் பேருடையவர்கள் நான்கு பேர் இருந்தார்கள். ஒருவன் கறுப்பு; ஒருவன் உயரமாக இருப்பான்; மற்றொருவன் அரைப் பார்வையுடையவன்; வேறொருவன் சிவப்பாக இருப்பான். அவர்களைத் தனித்தனியே சொல்லும்பொழுது கறுப்பு ராமு, நெட்டை ராமு, குருட்டு ராமு, சிவப்பு ராமு என்று சொல்வது வழக்கம். அடுத்த ஊருக்கு ஒரு நாள் போனேன். அங்கே ராமு என்று ஒருவனே இருந்தான். ஒருவர் என்னிடம் "ராமுவைக் கூட்டிக் கொண்டு வா" என்றார். நான் எங்கள் ஊர் ஞாபகத்தில், "எந்த ராமு?" என்று கேட்டேன். அவர், "எந்த ராமுவாவது? எத்தனை ராமு இருக்கிறார்கள்? இருப்பவன் ஒருவன் தானே?" என்று கேட்டார். ஒரு ராமுவே இருக்கும் பொழுது அடையாளம் வேண்டாம் என்று எனக்கு அப்பொழுது தெரிந்தது.

நமது மதத்தைத் தவிர மற்ற மதங்களெல்லாம் ஒரு மனிதருடைய பேரை உடையவை. அவருக்கு முன் அந்த மதம் இல்லை. அந்த மதங்களுக்கெல்லாம் ஜாதகம் கணிக்கப்பட்டிருக்கிறது. இவ்வளவு மதங்களும்

உண்டாவதற்கு முன்பும் நம்முடைய மதம் இருந்தது. நம்முடைய மதம் ஒன்றே இருந்த பழைய காலம் ஒன்று உண்டு. அந்தக் காலத்தில் அதற்குத் தனிப்பேர் இருக்கவேண்டிய அவச்யமில்லையல்லவா? வேறு மதங்கள் இருந்தால் தனிப்பேரும் அடையாளமும் வேண்டும். மதம் என்பது ஒன்றே என்று இருந்து விட்டால், அதன் பேர் மதம் என்பதுதான். இன்ன மதம் என்று வேறு குறிக்கவே வேண்டியதில்லை. முதன் முதலில் இருந்த மதம் தனிப்பேரில்லாமல் தானே ஏற்பட்டிருக்க வேண்டும்? இதை நினைக்கும்பொழுதுதான் இந்த மதத்திற் பிறந்ததைக் குறித்து ஒரு கௌரவ புத்தி எனக்கு உண்டாயிற்று. வெகுகாலமாக இந்த மதம் இருந்து வந்ததற்கு இதற்கு ஒரு தனிப்பேர் இல்லாததே அடையாளம்.

இந்தப் பழைய மதத்திற்குக் காலக்கணக்கு இல்லை. இன்னாரால் ஏற்பட்டது என்று இருந்தால் கணக்குச் சொல்லிவிடலாம். வேதம் இவ்வளவு வருஷத்திற்கு முன்பு ஏற்பட்டது என்று சில நவீன ஆராய்ச்சிக்காரர்கள் சொல்லுகிறார்கள். அவர்களுக்குள்ளேயே ஒருவர் அபிப்ராயத்தை மற்றவர் ஒப்புக் கொள்வதில்லை.

ஆகவே, நமது மதத்திற்குப் பேரில்லாதது தான் அடையாளம். பேரில்லாமை அதன் பழமையைக் காட்டுகின்றது. ஆனாலும் இதற்கு ஒரு அடையாளம் உண்டு. அது என்ன? வேதத்திற் சொல்லியிருப்பதை நம்புவது தான் நம்முடைய பொது அடையாளம். எந்த ஜாதியானாலும் வேதத்தை நம்பவேண்டும். இந்தக் காலத்தில் வேறு தேசத்துப் படிப்பு அதிகமாக ஏறிவிட்டபடியால் நம்முடைய சாஸ்த்ரங்களையும் நம் பழக்க வழக்கங்களையும்

நம்பாத ஒரு நிலைமை வந்திருக்கிறது. எப்பேர்ப்பட்ட கீழ் ஜாதியானாலும் ஏதாவது ஒருவர் பேச்சைக் கேட்க மறுத்தால், 'அது என்ன வேத வாக்யமா'? என்று கேட்கிறான். இந்தப் பழமொழி வேத வாக்யத்திற்கு அடங்கி எல்லோரும் நடக்கவேண்டும் என்பதைத் தெரிவிக்கின்றது. இந்தக் காலத்தில் அந்தப் பழமொழி மாத்திரம் இருக்கிறதே ஒழிய அதன் தாத்பர்யத்தை அறிந்து நடப்பது மாத்திரம் இல்லை.

வேதத்தில் என்ன சொல்லியிருக்கிறதோ அதன்படி நமது மதத்தில் உள்ள எந்த ஜாதியாரும் நடக்க வேண்டும். நம்முடைய தாயார் வேதமந்த்ரம் சொல்லக் கூடாது என்றால் அந்த விதிப்படியே நடக்க வேண்டும். ஏன் சொல்லக்கூடாது என்று கேட்கக்கூடாது. அப்படிச் சொன்னால்தான் மாத்ரு பக்தியென்று நினைப்பது தப்பு. தாயார் தூரமாக இருக்கும்பொழுது நீ ஏன் எங்களுடன் சாப்பிடக்கூடாது என்று சொல்வது பக்தியா? வேதம் சொல்லியபடி நடப்பது நம்முடைய கடமை என்று எல்லோரும் நினைக்க வேண்டும். எல்லாக் குலத்தினருக்கும் வேத நம்பிக்கை இருக்க வேண்டும்.

இப்பொழுது லோகத்தில் உள்ள மதங்கள் நான்கு அல்லது ஐந்து இருக்கலாம்; அவை ஒவ்வொன்றும் ஒவ்வொருவரால் ஏற்படுத்தப்பட்டது; அவற்றிற்கு முன்பு பொது மதமாக ஒன்று இருந்திருக்க வேண்டும்; அதுதான் நமது மதம்; பேரில்லாமல் இருப்பதனாலேயே இது பழையதென்பதை அறியலாம்.

பழைய காலத்தில் எல்லோருக்கும் ஒரு மதம் இருந்தது, அந்த மதம் நமது வைதிக மதம் என்று சொன்னால், அந்தக் காலத்தில் லோக முழுவதும் வேத

நம்பிக்கை உடையவர்களாக இருந்திருக்க வேண்டுமே, அவ்வாறு இருந்ததற்கு ஆதாரங்கள் இருக்கின்றனவா என்று நீங்கள் கேட்கலாம்.

இப்பொழுது உள்ள மதங்கள் 2,000 வருஷங்களுக்குள் ஏற்பட்டவை. அவற்றிற்கு முன்பு சில மதங்கள் இருந்து அழிந்து போயிருக்கலாம். கிறிஸ்து மதத்துக்கு முன்பே யூதர்கள் (Jews) மதம் இருந்தது. ஹிந்து மதம் மாதிரி, கிரேக்க (Greece) தேசத்து மதம் பழையது என்று சொல்லுகிறார்கள். அது அழிந்துவிட்டது. நமது மதம் மட்டும் இருக்கிறது. இப்பொழுது இதற்கும் நாடி பார்த்து வருகிறார்கள்!

இருக்கிறவற்றிற்குள் இது பழைய மதம் என்றால், அப்பொழுது இந்த ஜாதி வித்யாஸம உண்டா என்று கேட்கலாம். ஏசுகிறிஸ்து யூதர்களால் சிலுவையில் அறையப்பட்டார். அவர் கீழ் ஜாதியானின் கிணற்றிலுள்ள தீர்த்தத்தைக் குடித்தாராம்; அது ஒரு தோஷமாகச் சொல்லப்படுகிறது. ஆகையால் பழங் காலத்திலேயே ஜாதி வித்யாஸங்கள் இருந்தன என்று தெரிய வருகிறது.

கவர்ன்மெண்டார் முயற்சியால் அங்கங்கே பூமி தோண்டப்பட்டுப் பல வஸ்துக்களைக் கண்டு பிடித்துச் சரித்திரங்களை எழுதி வருகிறார்கள். ஈஜிப்ட் (Egypt) தேசத்தில் ஓரிடத்தில் கிறிஸ்து பிறப்பதற்கு 1280 வருஷத்திற்கு முன் எழுதப்பட்ட ஒரு சாஸனம் பூமியிலிருந்து கிடைத்ததாம். அந்தச் சாஸனம் இரண்டு அரசர்கள் தங்களுக்குள் செய்து கொண்ட உடன்படிக்கையாகும்.[1]

---

1. Treaty of Rameses II with the Hittites. See H. R. Hall—The Ancient History of the Near East, pp. 364 etc.—(*Ed.*)

அதில் தெய்வ ஸாக்ஷியாக மித்ராவருணரைக் குறிப்பிட்டிருக்கிறதாம். அதனால் அந்தக் காலத்தில் அந்தத் தேசத்தில் வேதமார்க்கம் இருந்தது என்று தெரியவில்லையா? ஈஜிப்ட் தேசத்தில் இருந்த பழைய அரசர்களுடைய பேர்களில் அநேகம் ராமன் பேராக இருக்கின்றன[2]. ஆப்பிரிக்காவுக்குப் பக்கத்தில் மடகாஸ்கர் (Madagascar) என்ற ஒரு தீவு இருக்கிறது. அங்கே உள்ள ஊரின் பேர்களில் நூற்றுக்கு எழுபத்தைந்து பேர்கள் ஸம்ஸ்க்ருதப் பேராக இருக்கின்றன. அவற்றிலும் பல, ராமன் பேராகவே இருக்கின்றன. ஆப்பிரிக்காவில் ஒரு பெரிய பாலைவனம் இருக்கிறது. அதற்கு ஸஹாரா பாலைவனம் (Sahara) என்று பெயர். பாலைவனங்களெல்லாம் ஒரு காலத்தில் ஸமுத்ரம் இருந்த இடங்களென்று சொல்கிறார்கள். ஸஹாரா பழைய காலத்தில் ஜலக்காடாக இருந்தபொழுது அதன் கரைப் பிரதேசங்களில் ஜனங்கள் இருந்தார்கள்[1]. அங்கே உள்ள பேர்களெல்லாம் ஸம்ஸ்க்ருதப் பேர்களாகவும் ராமன் பேராகவும் இருக்கின்றன.

பூகோளத்தின் கீழ்ப்பாதியிலும் இப்படிப்பட்ட அடையாளங்கள் இருக்கின்றன. அமெரிக்காவிலுள்ள மெக்ஸிகோ என்னும் தேசத்தில் நவராத்ரி காலத்தில் ஒரு உத்ஸவம் நடக்கிறது. அதற்கு ராமஸீதா என்று பெயர்[2]. அங்கே வெட்டுமிடங்களிலெல்லாம் பிள்ளையார்[3]

---

2. Rameses, I, Rameses II, Rameses III.—(*Ed.*)

1. *See Encyclopaedia Brittannica*, Vol. 23, Tit, Sahara.—(*Ed.*)

2. See p. 56 of the Text and Plate 24 by T. W. F. Gann—The Maya Indians of Southern Yucaton, North and British Honduras.—(*Ed.*)

3. Baron Humboldt quoted in Harbilassarda—Hindu Superiority, p. 151.—(*Ed.*)

விக்கிரஹம் அகப்படுகிறது. அந்தத் தேசத்தில் ஸ்பெயின் தேசத்தார் புகுந்து அதை நாசமாக்கினார்கள். அங்கே இருந்த பழைய குடிகள் ஆஸ்திகர். ஆஸ்டெக்ஸ் (Aztecs) என்று இப்பொழுது சொல்லுகிறார்கள். அங்கே இன்னும் ஒரு தேசம் இருக்கிறது. அது மிகவும் அழகிய தேசம். அதன் பெயர் பெரு (Peru) என்பது. நம்முடைய தேசத்திற்கு நேர் கீழே அது இருக்கிறது. அங்கே எல்லோரும் ஸூர்யாலயத்தில் உபாஸனை செய்கிறார்கள்[1]. விஷுவில்தான் அவர்களுடைய உத்ஸவம் நடைபெறுகிறது. அவர்களுடைய பெயர் இன்காஸ் (Incas) என்று இப்பொழுது வழங்குகிறது. இனன் என்பது ஸூர்யன் பெயர். அதிலிருந்து வந்தது அந்தப் பெயர். அவர்கள் ஸூர்யோபாஸகர்கள். ஆகையால் அந்தப் பெயரைப் பெற்றார்கள்.

இன்னொரு விஷயங்கூட வேடிக்கையாகச் சொல்கிறேன். பகீரதன் கங்கையைக் கொண்டு வந்த சரித்ரம் எல்லோருக்கும் தெரியும். ஸகரர்கள் அறுபதினாயிரம் பேர்கள் யாகக் குதிரையைத் தேடிக்கொண்டு பூமியைப் பறித்துப் பாதாள லோகம் போனார்கள்; கபிலருடைய ஆச்ரமத்தில் குதிரை இருப்பதைக் கண்டு அவரைக் கஷ்டப்படுத்தினார்கள்; அந்த முனிவர் த்ருஷ்டிபட்டு எல்லாரும் சாம்பலானார்கள்; அந்தச் சாம்பலில் பகீரதன் கங்கையைக் கொண்டு வந்து விட்டானென்று படித்திருக்கிறோம். பாதாள லோகமென்பது அமெரிக்க தேசம். கபிலர் தவம் செய்து கொண்டிருந்த கபிலாரண்யம் என்ற இடம் அங்கே இருக்கிறது. மதுரையை மருதை யென்றும் குதிரையைக் குருதை யென்றும் மாற்றிச்

1. *See Asiatic Researches*, Vol. I, p. 426.—(*Ed.*)

சொல்வது போல அதைக் கலிபோர்ன்யா (California) என்று இப்பொழுது சொல்லி வருகிறார்கள். அதற்குப் பக்கத்தில் ஹார்ஸ் ஐலண்ட் (Horse Island) என்ற தீவும், ஆஷ் ஐலண்ட் (Ash Island) என்ற மற்றொரு தீவும் இருக்கின்றன. குதிரை கட்டிய இடமும், சாம்பல் இருந்த இடமும் அவை.

ஆஸ்திரேலியாவில் (Australia) நிர்வாணமாக இருக்கும் ஒரு பழைய ஜாதியின் படம் ஒன்றைப் பார்த்தேன். வேஷம் போட்டுக் கொண்டு அவர்கள் ஆடிக்கொண்டிருந்த பொழுது எடுத்த படம் அது[1]. அதன் கீழ் 'சிவா டான்ஸ்' (Siva Dance) என்று எழுதியிருந்தது. பின்பு கொஞ்சம் கவனித்துப் பார்த்தேன். வேஷம் போட்டுக் கொண்ட ஒவ்வொருவருடைய நெற்றியிலும் மூன்றாவது கண் இருந்தது.

ஈஸ்ட் இண்டீஸ் (East Indies) என்னும் தீவுக் கூட்டங்களில் ஒன்றாகிய ஜாவாவில் நமது மதத்துப் புராதனச் சின்னங்கள் பல இருக்கின்றன என்று உங்களுக்கு நன்றாகத் தெரிந்திருக்கும். அங்கே போர்னியோ என்று ஒரு தீவு இருக்கிறது. அதில் நூற்றுக் கணக்கான மைல் நீளமுள்ள ஒரு காடு இருக்கிறது. அது முழுவதையும் மனிதன் இன்னும் பார்க்கவில்லை என்று சொல்லிக் கொண்டிருந்தார்கள். அதை வர்ஜின் காடு (Virgin Forest)[2] என்று சொல்லுகிறார்கள். ப்ரம்ம ஸ்ருஷ்டி முதல் மனித ப்ரவேசமில்லாமல் காடாகவே இருக்கிறதென்று அந்தப்பெயர் குறிக்கும். அந்தக் காட்டிற்குள்

---

1. Cf. Figs. 128 and 129, p. 621 of the Native Tribes of Central Australia by Spencer and Gillen (Macmillan, 1899).—(*Ed.*)

2. Wallace—*The Malay Archipelago*, pp. 44.45.—(*Ed.*)

சில நூறு மைல் உள்ளுக்குள் போனபொழுது ஒரு கல் இருந்தது. அதில் நம்முடைய க்ரந்த எழுத்தில் எழுதினது போன்ற ஒரு சாஸனம் இருந்தது. அதை வாசித்துப் பார்க்கும்பொழுது, இன்ன மஹாராஜா இன்ன யஜ்ஞம் செய்தான், இன்னவிடத்தில் யூபஸ்தம்பம் நட்டான், ப்ராம்மணர்களுக்குக் கற்பக விருக்ஷதானம் செய்தான் என்று அதில் எழுதப்பட்டிருந்தது தெரிந்தது[3]. இவற்றைப் போல ஆதாரங்கள் பல இப்பொழுது அகப்பட்டுக்கொண்டுவருகின்றன. இங்கிலீஷில் உள்ள புஸ்தகங்களில் இந்த விஷயங்கள் சொல்லப்பட்டிருக்கின்றன. நம்முடைய மதத்தைப் பரிஹாஸம் பண்ணச் செய்ததும் இங்கிலீஷ்; இப்பொழுது இவ்வளவையும் தெரிவித்ததும் அந்த இங்கிலீஷே. அதனால் எதையும் அலக்ஷ்யம் செய்யக் கூடாதென்று தெரிகிறது. விஷயக்ரஹண சக்தியோடு பார்த்தால் எதிலும் ஸாரமான சில விஷயங்கள் இருக்கும்.

இப்படிப் பல இடங்களில் நமது மதத்திற்குரிய சின்னங்கள் அகப்படுவதனால் நம்மவர்கள் இங்கே இருந்து அங்கே போனார்கள், அங்கே இருந்து இங்கே வந்தார்கள் என்று சிலர் சொல்கிறார்கள். எங்கேயும் நமது தர்மமே இருந்தபொழுது ஓரிடத்திலிருந்து வேறு இடத்திற்குப் போவானேன்? அங்கங்கே இருந்தவையே அவை என்று ஏன் கொள்ளக் கூடாது? இங்கிருந்து போனாரென்பது தப்பு. அப்படிச் சொல்லவேண்டிய அவச்யமேயில்லை. பல தீவுகளுக்குப் போவது தப்பு என்று நமது சாஸ்த்ரம்

3. Yūpa inscriptions of Mūlavarman of Koeti (Borneo).—(Ed.)

கூறுவதற்கு விரோதம் அதுவென்று நாம் பயப்பட வேண்டாம். அங்கங்கே இருந்தவர்களென்றே கொள்ள வேண்டும்.

நம்முடைய தர்மமும் நம்முடைய சாஸ்த்ரங்களும் மிகவும் பழையவையானால் நம்முடைய சாஸ்த்ரங்களிற் சொன்னவையெல்லாம் நிஜமாக இருக்க வேண்டுமே? நம்முடைய சாஸ்த்ரங்களில் ஏழு ஸமுத்ரங்கள் இருந்ததாகச் சொல்லப்பட்டிருக்கின்றன. பால் ஸமுத்ரம், நெய் ஸமுத்ரம், தயிர் ஸமுத்ரம், கள் ஸமுத்ரம், கரும்புச்சாற்று ஸமுத்ரம், சுத்த ஜல ஸமுத்ரம், உப்பு ஸமுத்ரம் என்று அவைகள் சொல்லப்படுகின்றன. அந்த ஏழுள் இப்பொழுது உப்பு ஸமுத்ரம் ஒன்றுதான் பாக்கி இருக்கிறது. மற்றவற்றை இன்னும் வெள்ளைக்காரர் கண்டுபிடிக்கவில்லை என்று சொல்ல வேண்டியதுதான்!

ஈச்வரன் லோகம் முழுவதற்கும் ஒரே தர்மத்தை வைத்திருந்தார். கலியில் அந்த தர்மம் இந்தத் தேசத்தில் மாத்திரம் நிற்க வைத்திருக்கிறார். லோகம் முழுவதும் இப்படியே இந்தத் தர்மம் இருந்ததுண்டு. இப்பொழுது சரித்ர ஆராய்ச்சிக்காரர்கள் முன்பு இருந்த ஒரு ப்ரதேசத்தைப் பெரிய இந்தியா (Greater India) என்று சொல்லுகிறார்கள். உலகம் முழுவதும் இந்தியாவாக இருந்தது என்று நான் நினைக்கிறேன். இன்னும் பெரிய இந்தியா (Still Greater India) என்று சொல்லுகிறேன்.

இந்தப் பூலோகம் ஏழு த்வீபங்களை உடையது. 'ஸப்தத்வீபா ச மேதினீ*' என்று ஆசார்யாள் சொல்லி

* सप्तद्वीपा च मेदिनी ।

யிருக்கிறார்கள். அந்த ஏழில் ஜம்பூத்வீபத்தில் பாரத வர்ஷத்தில் பரதகண்டத்தில் நாம் இருக்கிறோம். இப்படியே ஒவ்வொரு த்வீபத்திலும் அநேக வர்ஷங்கள் உண்டு. ஒவ்வொரு வர்ஷத்திலும் பல கண்டங்கள் உண்டு. எல்லா த்வீபங்களும் மேருவுக்குத் தெற்கே இருக்கின்றன. மேரு எல்லாவற்றிற்கும் வடக்கே இருக்கிறது. இரண்டு த்வீபத்திற்கும் நடுவில் ஒரு ஸமுத்ரம் இருக்கிறது. இப்படி ஏழு ஸமுத்ரத்திற்கு எட்டு த்வீபங்கள் இருக்க வேண்டுமல்லவா? அதற்கு வடக்கேதான் மேரு ஒன்று இருக்கிறது. மேரு சிகரத்தில் ஸ்வர்க்கம் இருக்கிறது. மேருவைச் சந்த்ர ஸூர்யர் சுற்றுகிறார்கள். மேருவிற்கு அப்புறம் ஒன்றும் இல்லை. ஜபமாலையில் மேருவென்று ஒரு ருத்ராக்ஷம் இருப்பதுண்டு. அதைத் தாண்டாமல் மாலையைத் திருப்பித் திருப்பி எண்ண வேண்டும். இது ஒரு ஸம்ப்ரதாயம். மேருவைத் தாண்டக்கூடாது. இது மஹாமேருவுக்கு அப்புறம் போவதற்கு ஒன்று மில்லை என்பதை ஞாபகப்படுத்துகிறது.

நம்முடைய பள்ளிக்கூடத்தில் பிள்ளைகள் படிக்கும் புஸ்தகங்கள் இங்கிலீஷ்காரர்களால் எழுதப்பட்டதை அநுஸரித்தவை. அவர்கள் 'உங்களுக்குப் பூமி உருண்டையாக இருக்கிறது தெரியாது; தோசைக்கல் மாதிரி இருக்கிறதென்று நினைத்திருந்தீர்கள்; நாங்கள்தான் அதைச் சொல்லிக் கொடுத்தோம்' என்று சொல்லுகிறார்கள். அந்த சாஸ்த்ரத்திற்கு நமது பாஷையிற் பூகோள சாஸ்த்ரம் என்று சொல்லுகிறார்கள். அந்தப் பழைய வார்த்தையே பூமி கோள வடிவமானது என்பதைத் தெரிவிக்கவில்லையா? கணிதத்திற் பூகோளம்,

ககோளம் என்ற வார்த்தைகள் வரவில்லையா? அண்ட மென்று நாம் சொல்கிறோம். அதனுடைய அர்த்தம் என்ன? முட்டை என்பது. ஆகையால் அண்டங்கள் முட்டை வடிவமுடையவை (Oval shape) என்பதை நாம் பல வருஷங்களுக்கு முன்பே அறிந்திருக்கிறோமென்பதை அந்த வார்த்தையே ரூபிக்கிறதல்லவா?

நம்முடைய பூலோகத்தை ஒரு எலுமிச்சம் பழமாக வைத்துக்கொண்டால் அதனுடைய உச்சிதான் மேரு சிகரம். அந்த உச்சிக்கு எந்தப் பக்கமும் தெற்குத்தான். மேலே வடக்கானால் கீழே எல்லாம் தெற்கு இல்லையா?

'सर्वेषामपि वर्षाणां मेरुरुत्तरतः स्थितः ।'

[ஸர்வேஷாமபி வர்ஷாணாம் மேருருத்தரத: ஸ்தித:]

என்றதும் இதைத்தான் சொல்கிறது. மேருவை ஸூர்யன் சுற்றுகிறான். அது எப்படி? நமக்கெல்லாம் இப்பொழுது ஸூரியன் ஆகாசத்தில் தலைக்கு மேலே ஸஞ்சரிக்கிறது. மேருவில் நின்றால் பக்கத்தில்தான் வரும். அதனால்தான் மேருவை ஸூர்யன் சுற்றுகிறானென்று சொல்லப்பட்டிக்கிறது. அங்கே ஆறு மாஸம் பகல்; ஆறு மாஸம் ராத்ரி என்று சொல்கிறார்கள். உத்தராயணத்தில் வடக்கே ஸூர்யன் இருக்கிறதால் அந்தக் காலத்தில் மேருவில் வெளிச்சம் உண்டு. தக்ஷிணாயனத்தில் ராத்ரிதான். இதைத்தான் மேரு சிகரத்திலுள்ள தேவர்களுக்கு ஒரு வருஷம் ஒரு நாளென்று சொல்லப்படுகிறது. இப்படியே தெற்கே உள்ள நுனி மேருவின் அடியாகும். வடக்கே உள்ளதற்கு ஸுமேரு என்று பெயர். தெற்கே உள்ளதற்கு மேரு என்று பெயர். கீழே நரகம் இருக்கிறது. ஸுமேருவிலிருந்து

குமேரு வரையிலும் ஏழு த்வீபங்களும் ஏழு ஸமுத்ரங்களும் இருக்கின்றன என்று காணப்படுகிறது. இப்பொழுது உள்ளவற்றைப் பார்த்தால் அது பொய் என்று தோற்றுகிறது. ஏழு த்வீபங்களைக் காணோம். ஏழு ஸமுத்ரங்களும் இல்லை. இதைப் பற்றிக் கொஞ்சம் யோசிக்கலாம்.

மேருவின் உச்சிக்கு நேர் வடக்கே த்ருவ நக்ஷத்திரம் இருப்பதாக சாஸ்த்ரங்கள் சொல்லுகின்றன. ஆனால் இப்பொழுது கொஞ்சம் மாறி இருக்கிறது. வரவர மாறிக் கொண்டே வருகிறது. ஒரு காலத்தில் நேரே இருந்திருக்க வேண்டும்.

பம்பரம் வேகமாகச் சுற்றுகின்றது. அதனுடைய உச்சியில் மத்ய ஸ்தானம் த்ருவஸ்தானமென்று வைத்துக் கொள்வோம். ஒரு ஸமயத்தில் அது நேராகச் சாயாமல் ஆடத்தொடங்கும். பின்பு சாய்ந்து ஆடுகிறது. அது போலப் பூமியானது சுற்றிக்கொண்டே இருக்கும். ஒரு காலத்தில் த்ருவநக்ஷத்திரத்திற்கு நேராக ஸமமாக ஆடி இருந்தது. அப்படி ஸமமாக ஆடியிருந்த காலத்தில் பூமியும் ஸமுத்ரமும் ஸமமாக அமைந்திருக்க வேண்டும். அப்பொழுதுதான் ஏழு ஸமுத்ரங்களும் ஏழு த்வீபங்களும் ஸமமாக இருந்திருக்க வேண்டும். சுற்றுவதிற் கொஞ்சம் கோணல் ஏற்பட்டவுடன் கலந்துபோய் விடும். அப்பொழுது எல்லா ஸமுத்ரங்களும் கலந்ததில் ஒரே உப்பாக ஆகிவிட்டன. ஸப்தத்வீபங்களும் மாறிவிட்டன. இப்பொழுதும் மாறிக்கொண்டே வருகின்றன.

புராணத்தில் சொல்லப்பட்ட இந்த விஷயங்களெல்லாம் மிகப்பழைய காலத்தில் இருந்த நிலைமையைக் குறிக்கின்றன. யுகத்தினுடைய ஆதியில் எல்லா

க்ரஹங்களும் ஒரே வரிசையில் இருந்தன். யுகத்தின் ஆரம்பம் ஜ்யோதிஸ் சாஸ்திரக் கணக்கால் தெரியவரும்.

ஸங்கல்பத்தில் இந்தக் கணக்குகள் இருக்கின்றன. இப்பொழுது இரண்டாவது பரார்த்தம் நடக்கிறது. ஒரு பரம், ப்ரம்மாவினுடைய ஆயுள். ஆயிரம் சதுர்யுகம் ப்ரம்மாவினுடைய ஒரு நாள். அப்படி நூறு வருஷம் ஒரு பரம். இந்தக் கலியுகமே நான்கு லக்ஷத்திற்கு மேற்பட்ட வருஷங்களை உடையது.

'ते ब्रह्मलोके तु परान्तकाले परामृतात् परिमुच्यन्ति सर्वे ।'

[தே ப்ரம்மலோகே து பராந்தகாலே பராமிருதாத்
பரிமுச்யந்தி ஸர்வே]

[மஹாநாராயணோபநிஷத், X-5-6.]

என்பதில் வர்ணாச்ரம தர்மங்களைத் தவறாமல் நடத்தினால் ப்ரம்ம ஸபையில் சேருகின்றார்களென்று கூறப்படுகின்றது. அவர்கள் அப்படியிருப்பது ஒரு பரத்தின் முடிவுகாலம் வரைக்கும். ப்ரம்மா அந்தப் பராந்தத்தில் மோக்ஷம் அடையும்பொழுது அவர்களும் மோக்ஷம் அடைகிறார்கள். இங்கே ஜீவன்முக்தியை அடைந்தவர்கள் உடனே முக்தியை அடைகிறார்கள். தர்மத்தின்படி நடந்தவர்கள் ப்ரம்மலோகத்தில் இருக்கிறார்கள். நம்முடைய காலக்கணக்குகள் இந்த விதமாகச் சொல்லப் பட்டிருக்கின்றன.

பூமி சுற்றுவதை நாம் புதிதாகத் தெரிந்துகொண்டோம் என்று சொல்லுகிறார்கள்.

அப்பைய தீக்ஷிதர் என்று ஒரு பெரியவர்கள் இருந்தார்கள். இன்றைக்கு நாம் விபூதி ருத்ராக்ஷம்

தரித்திருப்பது அவர்களுடைய ப்ரயத்தனத்தின் ப்ரயோஜனம். அவர்கள் 104 புஸ்தகங்கள் எழுதியிருக்கிறார்கள். சிவோத்கர்ஷத்தை ஸ்தாபித்தார்கள். விஷ்ணு த்வேஷத்தால் அவர்கள் அப்படிச் செய்யவில்லை. விஷ்ணு பக்தி என்று பேர் வைத்துக்கொண்டு சிவ பக்தியை நாசம் பண்ணி சிவத்வேஷத்தை வளர்ப்பதை அவர்கள் வெறுத்தார்கள். "சிவத்வேஷத்தை ஸஹிக்க மாட்டேன்" என்று சொல்லிச் சிவோத்கர்ஷத்தை ஸ்தாபித்தார்கள். விஷ்ணு த்வேஷம் இருந்திருந்தால் விஷ்ணு ஸம்பந்தமாக எழுதியிருக்கமாட்டார்கள். விஷ்ணுவைப் பற்றியும் சில புஸ்தகங்கள் எழுதி யிருக்கிறார்கள.

அந்தப் பெரியவர்களுடைய தம்பியின் பேரர் நீலகண்ட தீக்ஷிதர் என்னும் பெயருடைய ஒரு பெரியவர் இருந்தார். அவர் திருமலை நாய்க்கரிடத்தில் மந்த்ரியாக இருந்தார். அவர் ஓரிடத்தில் அப்பைய தீக்ஷிதரை ஸ்துதி செய்திருக்கிறார். அதில் பூமி சுற்றுகின்றது என்பதைச் சொல்லியிருக்கிறார்.

'भूमिर्भ्राम्यति बुद्ध एव मरुति प्रत्यग्भ्रमोऽत्यद्भुतो
भ्राम्यन्त्येव सहाश्रयेण यदि वा ज्योतींषि सर्वाण्यपि ।
आवर्तोऽयमपां भ्रमः परिचिता मूर्तिर्हरस्याष्टमी
या सास्त्यप्पयदीक्षितो जयति सा मूर्तिर्निरस्तभ्रमा ॥'

[சிவோத்கர்ஷமஞ்ஜரீ]

ஈச்வரனுக்கு அஷ்டமூர்த்தி என்பது ஒரு பெயர். பூமி, ஜலம், வாயு, அக்னி, ஆகாசம், ஸூர்யன், சந்த்ரன், யஜமானன் இந்த எட்டும் எட்டு மூர்த்திகள். யஜமானன் என்பது யாகம் செய்யும் யஜமானனைக் குறிக்கும். ஈச்வர

னுடைய இந்த எட்டு மூர்த்திகளில் ஏழு மூர்த்திகள் ப்ரமண முடையனவாக இருக்கின்றன. அப்பைய தீக்ஷிதர் (யஜமானன்) என்னும் மூர்த்திக்கு மட்டும் ப்ரமணம் இல்லை என்று அந்த ச்லோகத்தில் சொல்லியிருக்கிறார். அந்த ச்லோகத்தால் பூமியும் சுற்றுகிறது என்று தெரிகின்றதல்லவா? ஆர்யபடர், வராஹமிஹிரர் முதலிய கணிதசாஸ்த்ரிகள் பூமிசுற்றுகிறதென்று எழுதியிருக்கிறார்கள். நம்முடைய மிகப் பழைய ஸூர்ய ஸித்தாந்தத்தில் பூமிக்கு ஆகர்ஷண சக்தி இருக்கிறது என்பது போன்ற பல ஸமாச்சாரங்கள் சொல்லப்பட்டிருக்கின்றன. ஆகாசத்தில் ஏன் இந்த க்ரஹங்கள் விழாமல் நிற்கின்றன? ஆகர்ஷண சக்தியால் இப்படி நிற்கின்றன என்று சொல்லப்படுகின்றது. இவ்வளவு அருமையான விஷயங்களை யுகாந்தரங்களுக்கு முன்பே தெரிந்து எழுதி வைத்த சாஸ்த்ரங்களை உடைய நம்முடைய மதம் எவ்வளவோ பழமையானதென்று தெரிகின்றது.

ஆகவே ஒரு காலத்தில் எங்கும் நம்முடைய மதம் இருந்தது. எல்லாம் நம் தேசமாக இருந்தது. நம்மிடமிருந்து பிரிந்தவர்கள்தாம் அங்கங்கே இருக்கிறார்கள். அதற்குரிய ஆதாரங்கள் நிறைய இருக்கின்றன. இன்னும் அகப்பட்டுக்கொண்டு வருகின்றன என்பவற்றை அறிந்து கொண்டோம்.

ஒரு விளக்கு இருக்கிறது. அதைச் சுற்றிலும் திரை போடப்பட்டிருக்கிறது. அந்தத் திரையில் தாமரைப் பூவைப்போல ஒரு பாகத்தைக் கத்தரித்து விட்டால் சுவரில் வெளிச்சம் தாமரைப் பூப்போல விழும். முழு வெளிச்சத்தின் ஓர் அம்சமே அப்படி விழுகிறது. அந்தத்

திரையை எடுத்துவிட்டால் முழு வெளிச்சம் உண்டாகும். அதைப் போல நம்முடைய மதத்திற் சில சில அம்சங்கள் தாம் கிறிஸ்துவ மதம் புத்த மதம் முதலியவைகளில் இருக்கின்றன. எல்லா மதங்களிலுமுள்ள எல்லா அம்சங்களையும் உடைய பழைய மதம் நமது மதம். அதனால்தான் அதற்குத் தனிப் பேர் இல்லை.

நம்முடைய மதம் எப்படிப் பொது மதமோ அது போல ஸம்ஸ்க்ருதமும் பொதுப்பாஷை. அதற்கும் ஊர் இல்லை. தெலுங்கு, தமிழ், இந்துஸ்தானி முதலியவற்றிற்குத் தேசம் உண்டு. ஸம்ஸ்க்ருதத்திற்குத் தேசமே இல்லை. இந்த ஸம்ஸ்க்ருதத்தைச் செத்துப்போன பாஷையென்று சிலர் சொல்லுகிறார்கள்.

எங்கள் அம்மாவுக்கு எனக்கு முன் ஒரு குழந்தை இருந்தது. அவள் ஒரு ஞானி. அந்தக் குழந்தை செத்துப்போய் விட்டது. அதற்காக அவள் அழவில்லை. அம்மாவுக்கு என்னிடம நிரம்ப ப்ரியம். ஒரு நாள் நான் அவளைப் பார்த்து, "அம்மா! பெரியவன் செத்துப்போனதற்கு நீ அழவில்லையே; நான் செத்துப்போனால் அழுவாயோ, மாட்டாயோ?" என்று கேட்டேன். "நீயும் அவனைப் போலப் பிள்ளை தானே; அவன் உடம்பில் செத்துப்போனான். நீ மனஸில் செத்துப் போ" என்றாள். செத்துப்போன மனஸை உடையவனாக வேண்டும் என்பது அவள் எண்ணம். அந்த மாதிரிதான் ஸம்ஸ்க்ருதம் செத்துப் போயிற்று.

தனக்கு என்று ஓரிடம் இருந்தால் பயம் இருக்கும். எல்லாம் தன்னுடைய இடமாக இருப்பது ஸம்ஸ்க்ருதம். இப்பொழுது லோகத்திலுள்ள பாஷைகள் எல்லாவற்றிலும் ஸம்ஸ்க்ருதம் கலந்திருக்கிறது. அவற்றில் பெரும்

பான்மையானவை ஸம்ஸ்க்ருதத்திலிருந்து உண்டானவை. நாம் பேசும் தமிழில் எவ்வளவோ ஸம்ஸ்க்ருத வார்த்தைகள் கலந்திருக்கின்றன. தமிழ்ச் செய்யுளாக இருந்தால் அதற்கு உரை ஸம்ஸ்க்ருத ஸம்பந்தம் உடையதாக இருக்கிறது. குற்றம் என்ற தமிழ் வார்த்தைக்கு தோஷம் என்று ஸம்ஸ்க்ருதத்தில் அர்த்தம் சொல்லுகிறோம். தேச பாஷையிலுள்ள கடினமான சொற்களுக்கு ஸம்ஸ்க்ருத வார்த்தைகளால் அர்த்தம் சொல்லி விளங்க வைக்கிறோம்.

சாவு என்பது என்ன? எதற்குச் சாவு உண்டு? உடம்புதானே சாகிறது? அது உயிரோடு இருக்கிறது. பின்பு சாகிறது. உயிர் இல்லாதபொழுது அது செத்துப் போகிறது. உயிருக்கு மற்றோருயிர் ஏது? அது எப்பொழுதும் செத்தது தான். ஸம்ஸ்க்ருதம் எல்லாப் பாஷைக்கும் உயிராக இருக்கிறது.

இத்தகைய நமது மதமும் பாஷையும் லோகம் முழுவதும் பரவியிருந்தன. நமது மதத்துக்கு வேதம் ப்ரமாணம். எல்லா மதமும் நம்முடைய மதங்களே. எல்லாம் சேர்ந்து ஒன்றாக மறுபடியும் ஆகிவிடலாம். அஹம்பாவமில்லாமல் அன்போடே சொன்னால் எல்லோரும் நமது வார்த்தையை ப்ரியமாகக் கேட்பார்கள். மனஸும் ஒன்றாகும். அப்பொழுது இந்த மதம் பழையபடி அகண்டமான மதமாக ஆகும்.

1953

# 3. அத்வைதம்

(13—10—'32)

ஆதியில் ஸ்ரீமத் ஆசார்யாள் அத்வைத ஸித்தாந்தம் பண்ணியிருக்கிறார்கள். அந்த அத்வைத ஸித்தாந்த்தைத் தெரிவிக்கும் க்ரந்தங்களில் முக்யமானவை ப்ரஸ்தான த்ரயம். அவை கீதா பாஷ்யம், உபநிஷத் பாஷ்யம், ஸூத்ர பாஷ்யம் என்பவை. இந்த மூன்றும் அத்வைத ஸித்தாந்தத்துக்கு முக்ய ஆதாரங்கள். இவற்றோடு கூடப் பல ப்ரகரணக்ரந்தங்களை ஆசார்யாள் செய்திருக்கிறார்கள். அவற்றில் முக்யமானவை விவேக சூடாமணி முதலியவை. இவைகளோடு, சிவஸ்தோத்ரம், விஷ்ணு ஸ்தோத்ரம், அம்பிகாஸ்தோத்ரம் முதலிய பல க்ரந்தங்கள் செய்திருக்கிறார்கள். ப்ரபஞ்சஸாரம் என்ற ஒரு மந்த்ர சாஸ்த்ரம் செய்திருக்கிறார்கள்.

ஆசார்யாள் செய்த க்ரந்தங்களுக்கு மஹா வித்வான்கள் பலர் வ்யாக்யானம் எழுதியிருக்கிறார்கள். ஆசார்யாள் செய்த க்ரந்தங்களுள் முக்யமானது ப்ரம்மஸூத்ர பாஷ்யம். அது வ்யாஸமஹரிஷியால் செய்யப்பட்ட ப்ரம்ம ஸூத்ரங்களுக்கு வ்யாக்யானம். அந்த ப்ரம்ம ஸூத்ரங்களில் பத்து உபநிஷத்துக்களிற் சொல்லப்பட்ட விஷயங்கள் இருக்கின்றன. அவ்விஷயங்களின் ஸாரம் ஸூத்ர ரூபமாக அதில் சொல்லியிருக்கிறது. அது பத்து உபநிஷத்துக்களிலுள்ளவற்றை எப்படித் தெரிவிக்கிறது என்பதை விஸ்தாரமாகச் சொல்வது பாஷ்யம். அந்தப் பாஷ்யத்துக்கு இன்று வரையில் அநேகர் வ்யாக்யானம் செய்திருக்கிறார்கள்.

ஆசார்யாளின் முக்ய சிஷ்யராகிய பத்மபாதாசார்யர் பஞ்சபாதிகா என்று ஒரு வ்யாக்யானம் செய்தார். அதற்கு விவரணுசார்யார் என்பவர் ஒரு வ்யாக்யானம் செய்திருக்கிறுர். அதற்குத் தத்வதீபனம் என்று பெயர். இப்படி வ்யாக்யானக் கிளை ஒன்று இருக்கிறது.

ஆசார்யபாஷ்யத்துக்கு உத்தர தேசத்தில் இருந்த வாசஸ்பதிமிச்ரர் என்பவர் பாமதி என்று ஒரு வ்யாக்யானம் செய்திருக்கிறுர். அதற்கு அமலாநந்தர் என்பவர் கல்பதரு என்று ஒரு வ்யாக்யானம் செய்திருக்கிறுர். கல்பதருவுக்கு அப்பைய தீக்ஷிதர் அவர்கள் பரிமளம் என்று ஒரு வ்யாக்யானம் செய்திருக்கிறுர்கள். அந்தக் கல்பதருவுக்கே கொட்டையூர் லக்ஷ்மீநரஸிம்மவாஜபேயர் ஆபோகம் என்று ஒரு வ்யாக்யானம் செய்திருக்கிறுர்கள். இது ஒரு பரம்பரை.

ஸூத்ரபாஷ்யத்துக்கே ராமாநந்தர் என்பவர் ரத்நப்ரபை என்ற ஒரு வ்யாக்யானம் செய்திருக்கிறுர். அதற்கும் ஒரு வ்யாக்யானம் இருக்கிறது.

அந்த ஸூத்ரபாஷ்யத்துக்கே ஆசார்யாளுடைய சிஷ்யர் ஆனந்தகிரி என்பவர் வேறொரு வ்யாக்யானம் செய்தார். அதற்கு ஆனந்தகிரீயம் என்று பெயர். சற்றேறக் குறைய 150 வருஷங்களுக்கு முன் த்ரியம்பக பட்டாசார்யர் என்பவர் பாஷ்யபானுப்ரபை என்று பாஷ்யத்துக்கு ஒரு வ்யாக்யானம் செய்திருக்கிறுர்.

மஹாராஷ்ட்ரதேசத்தில் இருந்த ரகுநாதஸூரி என்பவர் பாஷ்யத்தில் ஒரு பாதத்துக்குச் சங்கரபாதபூஷணம் என்று ஒரு வ்யாக்யானம் செய்திருக்கிறுர். நமக்குத் தெரிந்தவை இவ்வளவு.

ஒரு க்ரந்தத்துக்கு இவ்வளவு வ்யாக்யானங்கள் இருக்கின்றன.

பத்து உபநிஷத்துக்களுள் ப்ருஹதாரண்யத்திற்கும் தைத்திரீயத்திற்கும் ஸுரேச்வராசார்யர் வார்த்திகம் என்னும் ஒரு பாஷ்யம் எழுதியிருக்கிறார். அதனால் அவருக்கு வார்த்திககாரர் என்று ஒரு பெயர் உண்டு.

பகவத்கீதைக்கு ஸ்ரீமத் ஆசார்யாள் செய்த பாஷ்யம் ஒன்று இருக்கிறது. அதை அநுஸரித்துப் பத்து வ்யாக்யானங்கள் இருக்கின்றன.

இவ்வளவும் அத்வைத ஸித்தாந்தத்தைத் தெரிவிக்கும் க்ரந்தங்கள்.

இதைப்போல் த்வைதஸித்தாந்தமென்பது ஒன்று. முன்பு சொன்ன ப்ரம்மஸூத்ரங்களுக்குப் பச்சிமதேசத்திலிருந்த ஸ்ரீமத்வாசார்யர் த்வைதஸித்தாந்த ரீதியாக ஒரு பாஷ்யம் செய்திருக்கிறார். அதற்கும் பல பேர் வ்யாக்யானம் எழுதியிருக்கிறார்கள். அந்த வ்யாக்யானங்களில் அத்வைத ஸித்தாந்தமாக உள்ள நிர்மானங்களை மறுத்து அவர்கள் எழுதியிருக்கிறார்கள். 400 வருஷங்களுக்கு முன் ந்யாயாம்ருதம் என்ற ஒரு க்ரந்தம் அத்வைத ஸித்தாந்தத்தை மறுத்து எழுதப்பட்டது. அதை மறுத்து மதுஸூதனஸரஸ்வதி என்பவர் அத்வைத ஸித்தி என்று ஒரு க்ரந்தம் பண்ணினார். அது ஸரியல்லவென்று த்வைதத்தின் சார்பில் தரங்கிணீ என்று ஒரு க்ரந்தம் பண்ணப்பட்டது. அந்தத் தரங்கிணியை மறுத்துக் கௌடதேசத்தில் இருந்த ப்ரஹ்மானந்தர் என்ற ஒரு பெரியவர் சந்த்ரிகை என்று ஒரு க்ரந்தம் எழுதினார். அது கௌடப்ரஹ்மானந்தீயம் என்றும் வழங்கப்படும். அந்த க்ரந்தத்தை ஆக்ஷேபித்து த்வைத

மதத்தை அநுஸரித்து வனமாலாமிச்ரர் என்பவர் வனமாலாமிச்ரீயத்தை எழுதினர். பாஷ்யபானுப்ரபையை எழுதிய த்ரியம்பகபட்டாசார்யர் என்பவர் அந்த, க்ரந்தத்தை மறுத்து ஸித்தாந்தவைஜயந்தீ என்று ஒரு புஸ்தகம் எழுதினர்.

முன்பு சொன்ன கௌடப்ரஹ்மானந்தீயத்தை மறுத்து அறுபது வருஷத்திற்கு முன்பு விசிஷ்டாத்வை ஸித்தாந்த ரீதியாக அநந்தாழ்வாரென்பவர் ந்யாய பாஸ்கரம் என்று ஒரு புஸ்தகம் எழுதினர். அந்த ந்யாயபாஸ்கரத்தை மறுத்து அப்பைய தீக்ஷிதர் வம்சத்தில் அவதரித்த மஹாமஹோபாத்யாய ராஜு சாஸ்திரிகளென்பவர் ந்யாயேந்து சேகரம் என்ற க்ரந்தம் எழுதினர். இப்படி த்வைதரீதியில் கடைசி மறுப்பாக ஸித்தாந்தவைஜயந்தீ இருக்கிறது; விசிஷ்டாத்வைத மறுப்பாக ந்யாயேந்துசேகரம் என்பது இருக்கிறது. இந்த இரண்டிலும் நிற்கிறது கண்டன பரம்பரை. இனிமேல் இது வளர்ந்தாலும் வளரும். யார் கண்டனம் எழுதினலும் அதை யாவரும் கவனிக்கவேண்டும். அவற்றை வாசித்தால் தெளிவு ஏற்படும். அபிப்ராய பேதங்கள் உண்டானல்தான் தெளிவு என்பது ஏற்படும். நம்முடைய தேசத்தில் ஒரு மதத்தில் நல்ல அறிவுள்ளவர்கள் இதர மத க்ரந்தங்களை அறிந்துகொள்வது ஸம்ப்ரதாயம்.

இவ்வளவு புஸ்தகங்கள் நம்முடைய மதஸம்பந்தமாக இருக்கின்றன. அவற்றை நாம் வாசிக்கிறதில்லை. தேசாந்தர புஸ்தகங்களின் பேர் நமக்கு அதிகமாகத் தெரியும். எந்தப் புஸ்தகம் நமக்கு ஆதாரம் என்று தெரியாது. நமக்கு ஸம்பந்தமில்லாதவை கட்டுக்கட்டாகத்

தெரியும். நமது புஸ்தகம் தெரியாது. பேராவது தெரிந்தால் கொஞ்சம் ச்ரத்தை இருக்கும். சாஸ்த்ரம் அறிந்தவர்கள் சொல்ல வந்தால் காது கொடுத்துக் கேட்பதில்லை. அசட்டை செய்கிறோம். நம்முடைய தேசம் ஹீனஸ்திதியில் இருக்கிறது. நம்முடைய தேசத்தி லிருந்த ஆத்ம வித்யையை இதர தேசத்தார்கள் பாராட்டுகிறார்கள். லோகத்தில் நமக்குக் கௌரவம் வேண்டுமானால் நம்முடைய தேசத்துக்கு எந்த விதத்தில் உண்மையான கௌரவம் இருந்ததோ அதை வ்ருத்தி பண்ணவேண்டும். நமது தேசத்திற்கு என்ன கௌரவம்? இங்கே எவ்வளவோ மஹான்கள் ஆத்ம இன்பத்தை அடைந்திருக்கிறார்கள் என்பதுதான். அந்தக் கௌரவத்துக்கு ஆதாரமானவைகளை நாம் தெரிந்து கொள்ளாமல் இருப்பது மிகவும் குறைவான காரியம்.

இவ்வளவுநேரம் அத்வைதஸித்தாந்த க்ரந்தங்களின் வரிசையைச் சொன்னேன். அந்த அத்வைதம் என்பது என்ன? நமக்கு என்ன உபயோகம்? நமக்கு அது தெரியுமா? தெரியாதா? ப்ரயோஜனம் அடையலாமா? முடியாதா? இவ்வளவும் கதையளவில் உள்ளவைதானா? அநுபவத்தில் ப்ரயோஜனம் ஆகுமா? என்பவற்றை ஆலோசிப்போம்.

அத்வைதம் என்பதன் அர்த்தம் என்ன? இரண்டாவது இல்லாதது என்பதுதான் அதன் அர்த்தம். இரண்டாவது இல்லை என்பது நமக்கு உண்மையாகத் தோற்றுகிறதில்லை. ஆயிரக்கணக்காக வஸ்துக்கள் இருக்கின்றன. அப்படி இரண்டாவது இல்லாததனால் நமக்கு என்ன லாபம்? அதனாலேதான் நாம் எதற்காக

ப்ரயத்னம் செய்கிறோமோ அது கைகூடும். நாம் எதற்காகப் பாடுபடுகிறோம்? நமக்கு வரும் கஷ்டமெல்லாம் நிவர்த்தியாக வேண்டுமென்று பாடு படுகிறோம். அந்தக் கஷ்ட நிவர்த்தி இந்த அத்வைதத்தால் உண்டாகும். தரித்ரம், பசி, அவமானம், வ்யாதி, வ்யவஹாரம், மனஸ்தாபம் முதலியவைகளை நிவர்த்தி செய்வதற்காக நாம் கஷ்டப்படுகிறோம். எந்த ஊரிலாவது இந்தக் கஷ்டம் இல்லாமல் இருக்கிறதா? இல்லை. ஆனால் நாம் துக்க நிவர்த்திக்காக ப்ரயத்னம் பண்ணிக்கொண்டேயிருக்கிறோம். நம்முடைய லௌகிக ப்ரயத்னங்களால் தற்கால சாந்திமட்டும் உண்டாகிறது. ஒரு வ்யாதிக்கு மருந்து கொடுத்து அதை நிவர்த்தி செய்துவிட்டால் வேறொரு வ்யாதி வருகிறது. இப்படி உள்ள கஷ்டங்களை நீக்குவதற்கு நிரந்தரமான உபாயம் அத்வைதம். அதனால் பசி, வ்யாதி, சாவு, அவமானம், வ்யவஹாரம், கோபம், தரித்ரம் முதலியவை வராமலிருக்கும்.

நாம் ஏன் துக்கப்படுகிறோம்? தரித்ரம், பசி முதலிய எல்லாம் நமக்கு இல்லாமல் இருந்தால் நல்லது. ஆனால் அவை ஏன் வருகின்றன? அவை வரும் வழி எது என்று பார்ப்போம். நமக்குப் பசி, வ்யாதி முதலியவைகளால் துன்பம் உண்டாகிறது. இவைகளெல்லாம் உடம்பு இருக்கும் வரைக்கும் இருக்கும். இந்த உடம்பு போய்விட்டால் மற்றோர் உடம்பு வருகிறது. அந்த உடம்புக்கும் பசி, தாகம், வ்யாதி முதலியவைகளெல்லாம் வருகின்றன. ஆகவே உடம்பில்லாமல் பண்ணிவிட்டால் நமக்கு இந்தக் கஷ்டங்களெல்லாம் இல்லாமற் போகும். நமக்குப் பல பிறவிகள் உண்டாகின்றன. அந்தப் பிறவிகளுக்கெல்லாம் காரணம் என்ன? உடம்பு எதனால் வருகிறது? முன்

ஜன்மத்தில் பண்ணிய பாப புண்ய பலன்களை நாம் அநுபவிக்க வேண்டும். ஆத்மாவால் அநுபவிக்க முடியாது. ஆத்மாவை நெருப்பால் சுட முடியாது. சந்தனத்தை அப்பிக் குளிரச் செய்துவிட முடியாது. ஆகையால் ஒருடம்பு வேண்டியிருக்கிறது. நாம் செய்த பாப புண்ய பலனைக் கடவுள் நமக்கு உடம்பைக் கொடுத்து அதையே 'நான்' என்று நினைக்கச் செய்து தண்டிக்கிறார். ஒரு சிறுவன் ஒரு குற்றம் பண்ணினால் அதற்குக் கசையடி கொடுக்கிறார்கள். பக்கத்தில் டாக்டர் இருக்கிறார். அந்தக் குழந்தை பொறுக்க முடியாமல் மூர்ச்சையானால் சிகித்ஸை செய்து மறுபடியும் அடிக்கிறார்கள். சோறு போட்டு மறுபடியும் அடிக்கிறார்கள். நல்ல போதனை செய்து மறுபடியும் அடிக்கிறார்கள். நாம் செய்த பாபத்திற்காக ஈச்வரன் உடம்பைக் கொடுத்து நம்மைச் சிக்ஷை செய்கிறார். போதாவிட்டால் மறுபடியும் உடம்பைக் கொடுத்துச் சிக்ஷிக்கிறார். ஆகையால் நாம் பண்ணுகிற பாபம் உடம்புக்குக் காரணம். இனிமேல் பாபம் பண்ணாமல் இருந்தால் வராது. பாபம் பண்ணக் கூடாது என்ற நினைவு தினமும் இருக்க வேண்டும்.

பாப புண்யத்துக்குக் காரணம் என்ன? அவற்றைச் செய்யாமல் நிறுத்த இஷ்டமிருக்கிறது; ஆனால் முடியவில்லை. ஒரு மரத்தைத் தழையாமற் செய்யவேண்டுமானால் கிளைகளை வெட்டினால் முடியாது; அடி மரத்தை வெட்ட வேண்டும். அது போலப் பாபத்துக்குக் காரணத்தை அறிந்து அதை அழிக்க வேண்டும். கெட்ட காரியத்தினுடைய பலன் பாபம். கெட்ட காரியம் எதனால் செய்கிறோம்? நமக்கு ஒரு வஸ்து வேணும் என்ற ஆசையிருக்கிறது. அதை அடைவதற்குக் குறுக்கு

வழிகளிற் போகிறோம். அது பாபம். பாபம் செய்யக் காரணம் ஆசை. ஒரு வஸ்து அழகாக இருந்தால் ஆசை உண்டாகிறது. நல்ல பதார்த்தங்களைக் கண்டால் வேண்டுமென்று ஆசை தோன்றுகிறது. அது நல்லது என்ற ஒரு ஞானம் இச்சையை உண்டாக்குகிறது. அந்த இச்சையைப் பூர்த்தி பண்ணக் காரியங்கள் செய்கிறோம். இந்த்ரியங்கள் ஒன்றை அழகானதென்று அறிவதுதான் ஆசைக்குக் காரணம். ப்ரயத்னத்தால் இச்சையை உண்டாக்கலாம், மாற்றலாம்; ஞானத்தை உண்டாக்கவும் முடியாது, மாற்றவும் முடியாது.

நாம் செய்யும் பாபத்துக்கு உடம்பு தண்டனை ஆகை யால் அந்தப் பாபகாரணமாகிய ஆசையை நிவர்த்தி பண்ணினால் துக்க நிவர்த்தி உண்டாகும். அந்த ஆசையை எப்படி நிவர்த்திப்பது? இந்தத் துக்க நிவர்த்தி பண்ணுவது எப்படி என்று இதர சாஸ்த்ரங்கள் வழி சொல்லாமல் விட்டு விட்டன.

வேதாந்தம் இப்படி விடவில்லை. வேதத்துக்குச் சிகரமாக இருக்கும் வேதாந்தம் இந்த துக்க நிவர்த்திக் குத் தக்க வழியைச் சொல்கிறது.

த்வேஷமும் ஆசையும் நமக்கு அந்யமாக இருக்கும் வஸ்துக்களிடத்தில்தான் உண்டாகின்றன. நம்மிடத்தில் நமக்கு ஆசையும் வெறுப்பும் உண்டாவதில்லை. வேறே யாக உள்ள பொருள்களிடத்தில் ஆசை உண்டாவதால் அவைகளை நாமாகப் பண்ணிவிட்டால் அது உண்டா காது. நம்மினும் வேறாக ஒன்று இல்லாமல் எல்லாவற் றையும் நாமாகப் பண்ணினால் ஆசை உண்டாகாது. ஆசை இல்லாவிட்டால் ப்ரயத்னம் இல்லை. அதனால் பாபம் இல்லை. பாபம் இல்லாதபொழுது தேஹம் இல்லை.

அது இல்லாவிட்டால் துக்கம் இல்லை. துக்கம் இல்லாமல் இருப்பதற்குத்தான் நாம் பல ப்ரயத்னங்கள் பண்ணுகிறோம்.

இரண்டாவது ஒன்று இருந்தால் அது நம்மைவிட சக்தி உள்ளதாக இருந்தால் பயம் உண்டாகிறது. அழகாக இருந்தால் ஆசை உண்டாகிறது. சித்த விகாரம் உண்டாகிறது. இரண்டாவது இல்லாவிட்டால் ஆசை இல்லை; த்வேஷம் இல்லை; பயம் இல்லை. தேளாலும் பாம்பாலும் நமக்குப் பயம் உண்டாகிறது. நாமே தேளும் பாம்புமாக இருந்துவிட்டால் அப்பொழுது பயம் ஏது? நம்மிடம் நாமே பயப்படுவோமா? இரண்டாவது என்று ஒன்று இருக்கிறவரைக்கும் இந்த மாதிரி பயம் இருக்கும். ஆகையால் இரண்டாவது இல்லாமற் பண்ணுவதுதான் அத்வைதம். இரண்டாவது இல்லையானால் பயம் நீங்குகிறதென்று உபநிஷத் சொல்லுகிறது.

ப்ரபஞ்சத்திற் பலர் இருக்கிறார்களே. இவர்களெல்லாம் ஒன்றாக எப்படி ஆகமுடியும்? இரண்டாவது இல்லையென்றால் ஆசையில்லை என்பது தீர்மானம். இனிமேலாவது துக்கம் இல்லாமற்போக ஆசையில்லாமல் இருக்கவேண்டும். இரண்டாவது இல்லாமல் எப்படிப் பண்ணுகிறது?

வேதாந்தம் இந்த லோகத்தில் நாம் பல வஸ்துக்களாகக் காண்பவைகளெல்லாம் பொய் என்கிறது. எல்லாம் ஈச்வர ஸ்வரூபம் என்று சொல்கிறது. நமக்கு அப்படித் தோன்றவில்லையே. எல்லாம் ஈச்வரன் என்பது நிஜமானால் நமக்குத் தோன்றுவது பொய்யாக வேண்டும். நமக்குத் தோன்றுவது நிஜமானால் எல்லாம் ஈச்வரன்

என்பது பொய்யாக இருக்க வேண்டும். நமக்குத் தோன்றுவது நிஜமாக இருந்தால் நமக்குக் கஷ்டம் வரக்கூடாது. ஆனால் கஷ்டம் வருகிறது. ஆகையால் வேதாந்தம் சொல்வதுதான் நிஜம். அது உண்மையானால் எல்லாம் ஈச்வர ஸ்வரூபம் என்பது உறுதியாக வேண்டும். நமக்குத் தோன்றுவது பொய். ஸத்யமானது வேறு ஒன்று உண்டு. பொய்யான வஸ்துக்களை நம்முடைய கண் பார்க்கிறது. லோகமெல்லாம் மெய்யான ஒரு வஸ்து வென்று அத்வைதம் சொல்கிறது. நமக்கு வஸ்துக்களாகத் தோன்றுவதெல்லாம் பொய். மெய்யான வஸ்துவொன்றே மெய்.

எல்லாம் ஈச்வரன் என்றால் நாம் மட்டும் வேறேயா? நம்மையும் அந்த ஈச்வரனைக் கரைக்க வேண்டும். அப்பொழுது இரண்டாவது என்பது இல்லை. நாம் இப்பொழுது வெவ்வேறாகப் பார்க்கிறோம். எல்லாம் ஈச்வரனைப் பார்ப்பதுதான் நிஜப்பார்வை. இரண்டாவது இல்லாமல் நாமும கரைந்து விட்டால் நல்லது உண்டாகும். லோகத்திற்கூட இரண்டு மனஸ் ஒன்றானால் சண்டையில்லை. அது போல எல்லாம் ஈச்வரனாகி ஒன்றாகிவிட்டால் எல்லாம் நாமாக ஆகிறோம். நமக்கு நம்மேல் ஆசை அப்பொழுது ஏற்படாது. ஆசையில்லாவிட்டால் பாபம் இல்லை பாபம் இல்லையென்றால் தேஹம் இல்லை; தேஹம் இல்லாவிட்டால் துக்கமே இல்லை. அந்தத் துக்க நிவர்த்திக்கு அத்வைதம் மருந்து. இரண்டாவது இல்லாமற் பண்ணுவது அத்வைதம். எல்லாம் பகவானைப் பார்ப்பது அத்வைதம். உள்ளதை உள்ளபடி பார்ப்பதுதான் அத்வைதம். இதைத்தான் முன்னே சொல்லிய புஸ்தகங்கள் சொல்லுகின்றன.

இதில் எவ்வளவோ ஆக்ஷேபணைகள் உண்டாகின்றன. அவைகளில் ந்யாயமான ஆக்ஷேபணைகளும் உண்டு. குயுக்தியான ஆக்ஷேபணைகளும் இருக்கும். சாஸ்த்ரங்கள் அவற்றிற்கு ஸமாதானம் சொல்லுகின்றன. அத்வைதத்துக்கு ஸாதனங்களைச் சொல்கின்றன. ஆசார்யாள் பண்ணின ப்ரகரணக்ரந்தங்கள் அந்த உபதேசந்தான் செய்கின்றன.

நாம் தூங்குகிறோம். தூங்கி விழிக்கிறோம், நன்றாகத் தூங்குகிறோம். சில ஸமயங்களில் ஸ்வப்னம் உண்டாகிறது. விழித்துக்கொண்டிருப்பது ஜாக்ரத் அவஸ்தை. கனவு காண்பது ஸ்வப்னாவஸ்தை. நன்றாகத் தூங்குவது ஸுஷுப்தி. இப்படி மூன்று அவஸ்தைகள் இருக்கின்றன. நாம் விழித்துக்கொண்டிருப்பது வேலை செய்வதற்காக. நன்றாகத் தூங்குவது வேலை செய்த ச்ரமமெல்லாம் போவதற்காக. இந்த இரண்டுமே போதுமே. ஸ்வப்னம் எதற்காக இருக்கிறது? யோசித்துப் பார்த்தேன். ஈச்வரன் எங்கும் இருக்கிறார். அவர் அத்வைத ப்ரம்மம். எல்லாம் ஆத்ம ஸ்வரூபம். அதை நிரூபித்துக் காட்டுவதற்கு த்ருஷ்டாந்தத்துக்காக இந்த ஸ்வப்னத்தை அவர் உண்டாக்கி இருக்கிறார் என்று தோன்றுகிறது. வேறு ஒரு ப்ரயோஜனமும் இல்லை. இந்த லோகம் நமக்குப் பலவாகத் தோன்றுவது ஸ்வப்னத்தைப்போல இருக்கிறது. ஸ்வப்னத்தில் என்ன என்னவோ கஷ்டங்களும் ஸுகங்களும் வருவதாகத் தோன்றுகிறது. ஸ்வப்னம் முடிந்தால் ஒன்றும் இருக்கிறதில்லை. ஸ்வப்னம் பார்த்தபொழுது இருந்ததாகத் தோன்றிய உடம்புகூட இருப்பதில்லை. இப்படி ஸ்வப்னம் கண்டோம் என்று அறிந்துகொண்ட ஒருவன்தான்

மிச்சம். ஸ்வப்னத்தில் இருந்த மற்றவை எல்லாம் போய்விடுகின்றன. ப்ரபஞ்ச ஸ்வப்னத்திலிருந்து நாம் விழித்துக்கொண்டால் அறிவு ஒன்றுதான் மிஞ்சும். ஸத்யமான வஸ்து அதுதான். அதற்குத்தான் அத்வைதம் என்று பெயர். ஆயிரக்கணக்காகப் பார்ப்பது த்வைதம். நாமெல்லாம் த்வைதிகள்; த்வைத அநுபவத்தில் இருக்கின்றோம். ஆனால் அத்வைதத்தை நம்புகிறவர்கள் அனுபவத்தில் த்வைதமாகிய கனவு காண்கிறோம். கனவில் வ்யாதியையும் கஷ்டத்தையும் படுகிறோம். வ்யாதி நீங்கிய நிலை ஒன்றுண்டென்று நம்புகிறவர்கள் நாம். த்வைதம் எதனால் தெரிவிக்கப் படுகிறது? கண் முதலியவைகளால் இப்பொழுது ப்ரத்யக்ஷமாகத் தெரிவிக்கப்படுகிறது. அத்வைதம் வேதாந்தத்தினால் மட்டும் தெரிவிக்கப்படுகிறது. சாஸ்த்ரத்தால் தெரிவிக்கப்படுவது அத்வைதம், கண்ணால் தெரிவிக்கப்படுவது த்வைதம். ஸூர்யன் எவ்வளவோ யோஜனை பெரியதென்று சாஸ்த்ரம் சொல்கின்றது. நம்முடைய கண் ஸூர்யன் ஒருசாண் என்று சொல்கிறது கையைக்கொண்டு மறைத்தால் மறைபடுகிறது; அதனால் சின்னது என்று தோன்றுகிறது. எது நிஜம்? நாம் பார்ப்பதே நிஜம் என்றால் சாஸ்த்ரங்கள் வேண்டாம். நமக்குத் தெரியாததைத்தானே சாஸ்த்ரங்கள் நமக்குத் தெரிவிக்கவேண்டும்?

உபநிஷத்தில் த்வைதம் என்பது ஓரிடத்தில் சொல்லப்படுகிறது. அத்வைதம் என்பது ஓரிடத்தில் சொல்லப்படுகிறது. அத்வைதம் எங்கே சொல்லப் பட்டிருக்கிறது? ப்ரப்ரம்மஸ்வரூபத்தைப் பற்றிச் சொல்லப்பட்டிருக்கிற இடத்தில் சொல்லப்பட்டிருக்

கிறது. மாண்டுக்ய உபநிஷத்தில் பிரணவஸ்வரூபத்தைச் சொல்லும் இடத்தில் எல்லாம் அத்வைதஸ்வரூபம், அதுவே எல்லாம் என்று முடிவுசொல்லும் இடத்தில் அத்வைதம் என்ற சொல் இருக்கிறது. த்வைதம் என்ற சொல் ஓர் உபநிஷத்தில் வருகிறது. தான் வேருக இருந்து வேருன பொருளை எப்படிப்பார்ப்பான்? எல்லாம் ஆத்மஸ்வரூபமாளுல் எதை எவன் வேருக அநுபவிக்க முடியும்? என்பதைப் பற்றிச் சொல்கையில், "யத்ர ஹி த்வைதமிவ பவதி' என்று சொல்லுகிறது. த்வைதம் போல எந்த நிலை யிருக்கிறதோ அங்கே அப்படி உண்டு என்று சொல்லுகிறது.

यत्र हि द्वैतमिव भवति। तदितर इतरं पश्यति यत्र त्वस्य सर्वमात्मैवाभूत्, तत्केन कं पश्येत्.... । [ப்ருஹதாரண்யகம்.]

எப்பொழுது எல்லாம் ஆத்மாவாக ஆய்விட்டதோ அப்பொழுது அத்வைதமென்றும், வேறு வேருகக் காணப் படும் பொழுது 'த்வைதத்தை போல' என்றும் சொல்லப் பட்டிருக்கிறது. போல என்ற இடத்தில் த்வைதமும், ஆத்மாவாகவே ஆய்விட்டதோ என்ற இடத்தில் அத்வைதமும் சொல்லப்படுகிறது. 'து' என்று ஒரு பதம் அத்வைதத்தைச் சொல்லுமிடத்தில் இருக்கிறது. ஒரு பதத்துக்குப்பின் 'து' (तु) வாவது 'அத' (अथ) வாவது வந்தால் அதற்கு மேலே முடிவாக வேறென்று சொல்கிருேம் என்று கொள்ளவேண்டும். 'யத்ர து' (यत्र तु) என்ற இடத்தில் எல்லாம் ஆத்மாவாகிவிட்டதோ என்று சொல்லப்படுகிறது. 'து' என்பதனல் முடிவு ஆத்மஸ்வரூபமே எல்லாம் என்று தெரிந்துகொள்ள வேண்டும். போல என்ருல் தோற்றமே யொழிய

ஸத்யமில்லை. அவனைப்போலே என்றால் அவன் இல்லை என்று தெரிகிறது. ஆகவே த்வைதம்போலே என்றால் த்வைதம் இல்லை என்பதுதான் ஸித்தாந்தம். நம்முடைய கண்ணுக்குத் தோற்றுகிறது த்வைதம். அது வெறும் தோற்றம். சாஸ்த்ரத்தைக்கொண்டு தெரிந்துகொள்வது அத்வைதம். அதுதான் ஸித்தாந்தம். 'ஸர்வம் ஆத்மைவ' என்பதே ஸத்யம்.

இங்கே ஆத்மா என்றிருக்கிறதே, பரமாத்மா என்றல்லவா இருக்கவேண்டும்? என்று கேட்கலாம், பரமாத்மா என்றால் அல்பாத்மா வேறு இருக்கவேண்டும். அப்படி ஒன்று இல்லை ஆதலினால் பரமாத்மாவும் இல்லை. எல்லாம் ஆத்மாதான். த்வைதநிலையில்தான் பரமாத்மா ஜீவாத்மா என்பது. அத்வைதமாக மாறினால் ஆத்மா தான்.

द्वितीयाद्वै भयं भवति । [ப்ருஹதாரண்யகம்]

த்வைதத்தால் பயமும் துக்கமும் உபத்ரவமும் உண்டாகின்றன என்று சொல்லப்பட்டிருக்கிறது. இரண்டு வித்யாஸமான வஸ்துக்கள் இருந்தால்தான் ஆசை, பயம், துக்கம் முதலியவை உண்டாகின்றன.

நமக்கு ப்ரியமானவர்கள் இறந்து போனால் துக்கம் உண்டாகிறது. நம் கண் முன் அவர் போனால் துக்கம் உண்டாகிறது. நாம் போனால் துக்கமிருக்காதே என்று நினைக்கிறோம். நாம் போவதில் நமக்குத் துக்கம் கிடையாது. ஆகையால் எல்லாரும் நாமாக இருந்து விட்டால் துக்கமே இல்லை. துக்கம் தோன்றினால் பேத நினைவு இருக்கிறது. ப்ரியம் எதனால் உண்டாகிறது? இரண்டு என்னும் நினைவினால்தான். நமக்கு அந்யமான

ஒருவர் என்று நினைப்பதனால் தான் ப்ரியமும் அவர் பிரிவால் துக்கமும் உண்டாகின்றன. அவரே நாமாகி விட்டால் பிரிவே இல்லை. துக்கமே இல்லை. ஒன்றாக எப்படிப் பண்ணுவது? எல்லாரும் பரமாத்மாவாகவானால் ஒரே ஆத்மாவாகலாம்.

ஆகையினால்தான் இரண்டாவது வேண்டாம், அத்வைதந்தான் ஸத்யமென்று வேதாந்தம் முறையிடுகிறது. இந்த விஷயத்தை நம் ஆசார்யாள் தீபம்போல் எடுத்துக் காட்டி 'மறவாதீர்கள்' என்று விளக்கி யிருக்கிறார்கள். பாஷ்யதீபம் என்று பாஷ்யத்துக்குப் பெயர். வேதத்தில் த்வைதம் என்று வந்திருக்கிறது என்ற உடன் 'த்வைதம்', 'த்வைதம்' என்று சொல்ல ஆரம்பித்து விடுகிறார்கள். அது எந்த இடத்தில் எதற்காக எந்த முடிவுக்கு முன்பு சொல்லப்பட்டிருக்கிறது என்று ஆலோசிப்பதில்லை. 'நஸுராம பிபேத்' என்று இருந்தால் வேதத்தில் கள்குடி இருந்தது என்று ஆராய்ச்சி பண்ணுவதைப்போல இருக்கிறது இது.

நாம் இப்பொழுது ஸ்வப்னவஸ்தையில் இருக்கிறோம். இதிலிருந்து விழித்தால் அது அத்வைத நிலை. அந்த ஸித்தாந்தம் நினைவில் இருந்தால் லக்ஷத்தில் ஒருவனாவது அந்த நிலையை யடைய ப்ரயத்னம் பண்ணுவானென்று பெரியவர்கள் சாஸ்த்ரங்களை எழுதி வைத்திருக்கிறார்கள். காசியில் கங்கையிருக்கிறது என்று தெரிவதுமட்டும் போதாது. டிக்கட் வாங்கிக்கொண்டு ரயிலேறி ஜங்ஷனெல்லாம் தாண்டிக்கொண்டு ரயிலில் தூங்காமல்போய்க் காசியைச் சேர்ந்து கங்காஸ்நானம் செய்து அநுபவத்தில் நாம் பார்க்கவேண்டும்.

அத்வைதநிலை வாக்கும் மனமும் அடைய முடியாமல் திரும்புமிடம் என்று வேதமானது சொல்கிறது.

यतो वाचो निवर्तन्ते । अप्राप्य मनसा सह ।

[தைத்திரீயோபநிஷத்]

என்று வேதவாக்யம் சொல்கிறது. மனஸால் நினைக்க முடியாவிட்டால் எப்படித் தெரிந்துகொள்வது? வேதம் சொல்வதன் அர்த்தம் என்ன? மனஸால் நினைக்கத் தகுந்ததல்லவென்பதன் அர்த்தம் என்ன? பரமாத்மாவை அறியலாமென்றால் அறியப்படும் பொருள் அது ஆகிறது. அறிபவன் வேறு ஆவான். கேனோபநிஷத தில் 'எனக்குத் தெரிந்ததென்பவனுக்குத் தெரியாது; தெரியவில்லை என்பவன் தெரிந்தவன்' என்று சொல்லப்படுகிறது.

यन्मनसा न मनुते येनाहुर्मनो मतम् । [கேனோபநிஷத்]

அறியப்படவில்லை யென்றால் என்ன? அது அறியப் படுவதில்லை என்பது. விளக்கைக்காட்ட வேறு விளக்குக் கொண்டுவந்தால் அதற்கு அர்த்தமில்லை. ஜடத்திற்குத்தான் விளக்கு வேண்டும். விளக்கைத் தெரிந்துகொள்ள வேறு ஒன்றும் வேண்டாம். அறிவு ஸ்வப்ரகாசமானது. அந்த அறிவே உருவாக இருப்பது ஈச்வரஸ்வரூபம். தேவாரம் திருவாசகம் தாயுமானவர் பாடல் முதலிய தமிழ் நூல்களில் பல விடங்களில் ஈச்வரன் 'அறிவே' 'அறிவுருவே' என்று சொல்லப் படுகிறார்.

மனஸாலே அது ஆலோசிக்கப்படுவதில்லை. மனஸ் அதனால் ஆலோசிக்கிறது. மனஸ் ஆலோசிக்கிற

தெல்லாம் பொய். எதனால் அது ஆலோசிக்கிறதோ அது மெய்.

यस्यामतं तस्य मतं मतं यस्य न वेद सः ।

[கேனோபநிஷத்]

கனவிற் காணப்படுவதெல்லாம் பொய். பார்க்கிற அறிவொன்றுதான் மெய். இந்த ஆத்மாவே பார்க்கப் படும் அவ்வளவு வஸ்துக்களாகவும் கனவில் இருந்தது. கனவு நீங்கினால் ஒன்றே மிச்சம் இருப்பது தெரியும். சொல்லும் வஸ்து அறியும் வஸ்து என்றால் அவை வேறு ஆகும். வேறாக இல்லாவிட்டால் சொல்லவும் முடியாது, அறியவும் முடியாது. இந்த அத்வைதத்தை உபநிஷத்துக்கள் சொல்கின்றன; முன் சொன்ன க்ரந்தங்கள் சொல்கின்றன.

வேதமாகிய வ்ருக்ஷத்தில் உபநிஷத்தாகிய புஷ்பங்கள் இருக்கின்றன; அவற்றைக் கழுத்திலே போட்டுக் கொள் வதற்காகத் தொடுக்க உதவும் ஸூத்ரமாக (கயிறாக) இருப்பது பரப்ரம்மஸூத்ரம் என்று ஸ்ரீ ஆசார்யாள் பாஷ்யத்தில் ஓரிடத்தில் சொல்லியிருக்கிறார்கள்.

वेदान्तवाक्यकुसुमग्रथनार्थत्वात् सूत्राणाम् ।

ஸூத்ரம் செய்தவர் வ்யாஸரானால் அதைத்தொடுத் தவர்கள் ஸ்ரீ ஆசார்யாள். அதைப் போட்டுக்கொள்ளு பவர்கள் நாம். நம்முடைய கழுத்திலே அந்த மாலை இருக்க வேண்டும்.

இப்பொழுது முடிவாக நாம் அறிந்துகொண்டது— நிஜம் ஒன்றுதான் இருக்கிறது; எல்லாம் ஈச்வரஸ்வரூபம்

என்பதே. வாஸனையால் வேறு வேறாகத் தோன்றுகிறது. எல்லாவற்றையும் ஒன்றாக்கவேண்டும். 'நாம்' என்பதையும் கரைக்கவேண்டும். அதற்குவேண்டிய சாஸ்த்ரங்களைப் படிக்க வேண்டும். இதற்கு ஸாதனம் ச்ருதி ஸ்மிருதி புராணம் கோயில் தரிசனம் பூஜை முதலியவைகள். உலகத்தில் உள்ள வஸ்துக்களாக எவ்வளவோ த்யாகம் பண்ணுகிறோம். நமக்கு ஸ்திரமான ஆனந்தத்தை அடைவதற்கு எல்லாம் பண்ணலாம். ஜனகர் "விதேஹராஜ்யம் முழுவதும் கொடுத்தேன்; என்னையும் கொடுத்தேன்" என்றாராம்.

विदेहां ददामि मां चापि सह दास्याय ।

இந்த நிலைக்கு வருவதற்கு ஸுலபமான ஸாதனம் ஸ்ரீசந்த்ரமௌளீச்வரருடைய உபாஸனை என்று அப்பைய தீக்ஷிதர் சொல்லியிருக்கின்றார், அதை எல்லோரும் அநுஸரித்து அத்வைத ஸித்தியை அடையவேண்டும்.

ईश्वरानुग्रहादेव पुंसामद्वैतवासना ।
महाभयकृतत्राणा द्वित्राणामुपजायते ॥

[சிவதத்வவிவேகம்]

ORIENTAL MSS.

# 4. ஜீவன் முக்தி நிலை

(30—9—1932)

நம்முடைய ஆசார்யாள் எல்லாப் ப்ராணிகளும் கடைத்தேறும்படி அத்வைத மதத்தை உபதேசித்திருக்கிருர்கள். அந்தப் பரம்பரையில் வந்த நாங்கள் எல்லா விடங்களிலும் சுற்றிக் கொண்டே வருகிருேம். இப்படிச் சுற்றுவது அவர்களையும் அவர்கள் ஸ்தாபனம் செய்த மதத்தையும் நமக்கு அடிக்கடி ஞாபக மூட்டுகிறது. நாம எல்லோரும் இங்குக் கூடியிருக்கிருேம். இந்த ஸமயத்தில் எல்லோருக்கும் ஸ்ரீ பகவத்பாதாள் ஞாபகமாகவே இருக்கிறது. எங்களை இம்மாதிரி சுற்றிக் கொண்டிருக்கும்படி அவர்கள் ஏற்பாடு செய்ததற்கு இது ஒரு முக்கியமான ப்ரயோஜனம். இது மாத்திரமல்ல ; மற்ருெரு ப்ரயோஜனமுமுண்டு. ஸேதுவிலிருந்து ஹிமாசலம் வரையில் மதத்தையும் தர்ம மார்க்கத்தையும் ஸ்தாபனம் செய்த ஆசார்யாள் எங்களுக்கும் ஒரு கட்டளையை இட்டிருக்கிருர்கள். ஸ்ரீ சந்த்ரமௌலீசுவரர் பூஜை செய்து கொண்டு அங்கங்கே சுற்றி வரும்பொழுது மத ஸம்பந்தமான பல விஷயங்களை எடுத்துச் சொல்லவேண்டுமென்று எங்களுக்கு ஆஜ்ஞை செய்தார்கள். அதற்காக அவர்கள் பெயரையும் வகிக்கச் செய்திருக்கிருர்கள். ஆகையால் ஸந்யாஸாச்ரமத்திலிருந்து கொண்டு பகவத்பாதாளுடைய ஸித்தாந்தங்களைச் சொல்லிக் கொண்டிருப்பதே எங்களுக்கு முக்கியமான வேலை. மத ஸ்தாபனம் செய்தவர்களை ஆசார்யர்கள் என்று சொல்லுகிருேம். மதஸ்தாபனம் செய்தவர்கள் நமது ஆசார்யாளைப் பகவத்பாதாள் என்று சொல்வது வழக்கம். பெரியோர்களின் பெயரைச் சொல்வது வழக்கமில்லை.

நாம் எப்பொழுதும் சாகாமலிருக்க வேண்டும் என்ற எண்ணம் எறும்பு முதல் எல்லாப் பிராணிகளுக்கும் இருக்கிறது. ஆனால் ஒவ்வொரு பிராணியும் செத்துச் செத்துப் பிறந்து கொண்டே இருக்கிறது. சாவை ஜயித்த பெரியோர்கள் பலர் இருந்தார்களென்று இதிஹாஸங்கள் மூலமாய்க் கேட்டிருக்கிறோம். சமீப காலத்தில் அப்படிப் பட்ட ஸதாசிவபிரம்மேந்திராள் என்ற பெரியவர் ஒருவர் இருந்ததாகவும் தெரிகிறது. இப்பொழுதும் சில மஹான்களிருப்பார்கள். ஆனாலும் மரணமென்னும் வியாதியை நிவர்த்திக்க மருந்து எது என்பதை நம்மிடம் வந்து அவர்கள் சொல்லுகிறதில்லை. இந்த உயர்ந்த மருந்தையே பகவத்பாதாள் நமக்கு உபதேசித்திருக்கிறார்கள். ஜீவித்திருக்கும்பொழுதே இதை நாம் ஸம்பாதித்துக் கொள்ள வேண்டும். செத்த பிறகு செய்து கொள்வதற்குப் போதுமான சக்தி நமக்குக்கிடையாது. முந்திச் செத்துப் போனவர்கள் மறுமடியும் பிறந்திருக்கிறோமல்லவா? அதனாலேயே இது விளங்குகிறது. அது போலவே பிழைத்திராதவன் சாக முடியாது. செத்திருப்பதால் முந்தி நாம் பிறந்திருக்க வேண்டும். இது போல இன்னும் விசாரிக்கப் போனால் தலை சுற்ற ஆரம்பித்து விடும். அது இருக்கட்டும்.

செத்த பிறகு சாவில்லா மருந்தை ஸம்பாதிக்க முடியாது என்பது மறுபடி பிறந்திருப்பதனால் தெரிகிறதென்று சொன்னேன். அது போலவே முன் ஜன்மங்களில் பிழைத்திருக்கும் பொழுதும் நாம் இந்த வழியைக் கண்டு கொள்ளவில்லை என்பதும் தெரிகிறது. ஏனென்றால் செத்துப் போய்த்தானே மறுபடியும் நாம் பிறந்திருக்கிறோம்? ஆகையினால் ஜனன மரணமென்ற

வியாதியானது நம் புத்திக்கு எட்டாமலிருக்கிற காலத்திற்கு முன்னிருந்தே நம்மைத் தொடர்ந்து வருகிறது.

'जातस्य हि ध्रुवो मृत्युर्ध्रुवं जन्म मृतस्य च ।'

[கீதை, II, 27]

என்று பகவத் கீதையில் அர்ஜுனனுக்குப் பகவான் சொல்லியிருக்கிறார். செத்துச் செத்துப் பிறந்து கொண்டிருப்பதே நமக்குச் சுகமாக இருந்து விட்டால் சாகாத நிலைக்கு நாம் மருந்து தேடவேண்டியதில்லை. அப்படிக் காணோம்.

மனிதனுக்கு உடம்பென்று யாரோ எப்பொழுதோ ஏற்படுத்தி விட்டார். அது உள்ள வரையில் பசி தாகம் என்பவை இவனைப்பாதித்துக் கொண்டே இருக்கின்றன. அவைகளைத் தீர்த்துக் கொள்வதற்காக ஒவ்வொருவரும் அநேக வஸ்துக்களைத் தேடவேண்டி வருகிறது. நம்முடைய காரியத்திற்கு உபயோகமாக இருப்பதால் அவைகளில் நமக்கு ஆசை உண்டாகிறது. அதற்கு இடையூறுயிருந்தால் த்வேஷம் உண்டாகிறது. இந்த பசி தாகம் என்னும் வியாதியைப் பரிஹாரம் செய்து கொள்வதற்காகவே நாம் எல்லோரும் இவ்வளவு கஷ்டப்படுகிறோம். வேறு வியாதிகளாயிருந்தால் மருந்தை உபயோகித்தால் நீங்கி விடும். இந்த வியாதியோ அப்படி நீங்குவதில்லை. வேளைக்கு வேளை உண்டாகித் தொந்தரவு செய்துகொண்டே இருக்கிறது. பசியில்லாமலிருப்பதற்கு யாராவது ஒரு சித்தர் மருந்து கொடுத்தால் இப்படிக் கஷ்டப்படவேண்டிய அவசியமில்லை.

கொஞ்ச நாள் முந்தி, சித்தூர் ஜில்லாவிலிருக்கும் புக்கை என்னும் தீர்த்தத்தில் இருந்தேன். அதன்

சமீபத்தில் கைலாஸக்கோனே, சதாசிவக்கோனே என்ற இரண்டு தீர்த்தங்கள் இருக்கின்றன. கோனே என்றால் மலையருவி என்று தெலுங்கு பாஷையில் அர்த்தம். அங்கே சிவ க்ஷேத்திரங்கள் இருக்கின்றன. நான் அங்குப் போயிருந்தேன். புண்ணியமானதும் பரிசுத்த மானதுமான ஜலம் நிரம்ப அழகாக விழுகிறது. ஏகாந்த மும் சாந்தமும் சுற்றி எங்கும் நிறைந்திருக்கின்றன. அங்கு ஸ்நான அநுஷ்டானங்கள் செய்யும்போது 'இங்கேயே இருந்து விடலாம்; இனி எங்கேயும் போக வேண்டாம்; இதை விட வேறு ஸந்தோஷம் கிடையாது' என்று தோன்றும். ஆனாலும் நாம் அங்கிருந்து ஏன் திரும்பி வந்து விடுகிறோம். இந்தப் பசியின் கொடுமையினு லல்லவா? அவ்வளவு நேர்த்தியாகவும் மனதிற்குப் பிடிப் பாகவும் அந்தப் பிரதேசங்கள் அமைந்திருக்கின்றன. ஞாபகம் வரவே சொன்னேன். மனிதனுக்குத் தேக ஸம் பந்தம் ஏற்படுவது ஜன்மமென்று சொல்லப்படுகிறது. தேக ஸம்பந்தம் நீங்குவது மரணம்.

இந்த உடம்பு இருக்கும் வரையில் பசி என்னும் தொல்லை நம்மை விடுவதில்லையென்று சொன்னேன். சரீரத்தை விட்டு விட்டால் கஷ்டம் ஒழிந்து விடுமென்று ஏற்பட்டது. அதற்கு ஸுலபமான மார்க்கம் ஒன்று தோன்றுகிறது. தற்காலத்தில் சிலர் பெரிய தப்புக் காரியம் செய்துவிட்டாலோ, அல்லது ஸஹிக்கக் கூடாத துக்கம் ஏற்பட்டாலோ ரிவால்வரை எடுத்துத் தம்மைச் சுட்டுக் கொள்ளுகிறார்கள். சரீர ஸம்பந்தத்தை நீக்க இதுவும் ஒரு வழியாகுமா? ஆகாது. இந்த ஸ்தூல சரீரம் நீங்கிப்போனாலும் ஏதோ ஒரு மாதிரியான மற்றொரு சரீரம் இருந்து கொண்டிருக்கும்; அதனுடன் எங்கெங் கேயோ சுற்றிக்கொண்டிருக்கவேணும். மறுபடியும்

ஹீனமான ஜன்மத்தை எடுத்துக்கொள்ளத்தான் வேண்டும். ஆத்மஹத்தி செய்துகொள்வது சரியான வழியல்ல. ஆத்மவதம் பெரும் பாபமென்று தர்ம சாஸ்திரங்கள் கூறுகின்றன. முன்பே அநேக பாபங்களைச் செய்து இத்தகைய கஷ்டங்களை அனுபவிக்கிறோம். இதனுடன் ஆத்மவதம் என்ற பாபமும் சேர்ந்தால் ஜன்மங்களும் கஷ்டங்களும் அதிகமாகவே பெருகும். இக்காலத்திலும் தற்கொலை செய்து கொள்வது பெருந் தப்பு என்றே எண்ணுகிறார்கள். ஒருவன் மற்றொருவனைக் கொன்று விட்டால் கோர்ட்டில் அவனுக்கு மரண தண்டனை விதிக்கப்படுகிறது. அது எதற்காக? மரண தண்டனையால் அவனுடைய பாபம் முற்றிலும் நீங்குமா? ஒருபொழுதும் இல்லை. அந்தத் தண்டனை அவன் க்ஷேமத்திற்காக அல்ல. பிழைத்திருந்தால் இன்னும் பலபேரைக் கொல்வானல்லவா? அப்படி அநேகம் பேர்கள் மரண மடைவதைவிட ஒருவன் சாவதே மேலானதென்று தண்டனை விதிக்கிறார்கள். இதிருக்கட்டும்

உடம்பென்பது பெரிய வியாதி. தற்கொலை செய்து கொள்வது பாபம். சாகாமலிருப்பது உயர்ந்த நிலை என்று சொன்னேன். அந்த நிலையையடைவதற்கு என்ன மார்க்கம்? இதைத்தான் பகவத்பாதாள் உபதேசிக்கிறார்கள். ஒவ்வொரு மதத்திலும் அந்த அந்த ஆசார்யர்களால் இதற்கு உபாயம் சொல்லப்பட்டிருக்கிறது. சைவர்கள் ஓர் உபாயம் சொல்லுவார்கள். மற்றொன்று வைஷ்ணவர்கள் சொல்லுவார்கள். இரண்டையும் தவிர மூன்றாவதாக மற்றவர்கள் சொல்லுவார்கள். இன்னும் பல உபாயங்களும் சொல்லப்பட்டிருக்கின்றன. பகவத்பாதாள் ஓர் உபாயத்தையும்

வேண்டாமென்று தள்ளுவதில்லை. அவைகளும் க்ராஹ்ய மானவைகளே. ஆனால், அவைகளைக்கொண்டு இந்த வியாதிக்குத் தற்கால சாந்தியை சம்பாதிக்கலாம். வியாதியின் மூலம் மட்டும் ஒட்டிக்கொண்டே இருக்கும். ஒருவனுக்கு மலேரியா ஜ்வரம் வருகிறது. கொய்னா முதலிய மருந்துகளைக் கொடுக்கிறோம். கொடுத்தால் ஜ்வரம் நிற்கிறது. இது போதுமா? மறுபடி இந்த ஜ்வரம் வராமலிருப்பதற்கு ஜ்வரத்தின் மூலத்தை நீக்கும்படியான வேறு மருந்து கிடைத்தால் அது விசேஷமல்லவா? இதர மதஸ்தர்கள் சொல்லும் உபாயத்தினால் சரீரம் என்னும் வியாதியை ஸ்வஸ்தம் செய்து கொள்வது கொய்னா மருந்து சாப்பிடுவது போலாகும். அதையும் தற்கால சாந்திக்காக உபயோகம் செய்து கொள்ளத்தான் வேண்டும். இப்படியே பகவத்பாதாள் எல்லா மார்க்கங்களையும் ஒப்புக் கொண்டு எல்லாவற்றிற்கும் மேலான மற்றொரு மார்க்கத்தை உபதேசித்திருக்கிறார்கள். செத்துப்போன பிறகு இந்த மருந்தைச் சாப்பிட முடியாதென்று சொன்னேன். அப்பொழுது கண் கால் முதலிய கருவிகள் எல்லாம் சக்தியற்றுக் கிடக்கும். தினந்தோறும் பூஜாகாலத்தில் சொல்லுவது புருஷஸூக்த மந்த்ரம். அதில் இந்த மந்த்ரம் வருகிறது:

'तमेवं विद्वानमृत इह भवति । नान्यः पन्था विद्यतेऽयनाय ॥'

[புருஷஸூக்தம்.]

கீழே சொன்னபடி இந்த ஆத்மஸ்வரூபத்தை நன்கு அறிந்தவன் இந்த ஜன்மத்திலேயே மரண மில்லா நிலையை அடைந்தவனாகிறான். இந்நிலையை அடைவதற்கு வேறு மார்க்கம் கிடையாது என்பது அர்த்தம். அம்ருதம்

என்றால் மோக்ஷம். மோக்ஷ மடைந்தவர்களுக்குச் சாவு பிறப்பு என்பவை இல்லையாதலால் 'அம்ருதமென்று சொல்லப்படுகிறது. சரீர மென்கிற வியாதியானது மனிதனுக்குப் புதிதாய் ஏற்பட்டதல்ல; நமக்குத் தெரியாமலும் கணக்கிடக் கூடாததுமான நாட்களாக வருகிறது. தக்க மருந்து சாப்பிட்டு இந்த வியாதியை ஸ்வஸ்தம் செய்துகொண்டவர்களுடைய அநுபவந்தான் நமக்கு வேண்டும். இந்த வியாதிபோலவே இதற்கு ஸித்தமான மருந்தும் அநாதியான வேதத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. நாம் ஒரு புஸ்தகம் எழுதுகிறோம். அந்தப்புஸ்தகம் அதற்கு முந்திக் கிடையாது. அதுபோல் வேதம் ஒருவரால் எழுதப்பட்டதல்ல, எந்நாளுமுள்ள உபதேசமென்பது ஸித்தாந்தம். இதைப்பற்றி அவகாசமுள்ளபொழுது உங்களுக்குச் சொல்லுகிறேன். முன் சொல்லிய வேத வாக்கியத்தில் இஹ என்ற பதம் இருப்பதால் இந்தச் சரீரமிருக்கும்பொழுதே சாவில்லா நிலையைப் பெறலாமென்பது கிடைக்கிறது. இந்த மார்க்கமே சிறந்தது. ஏன்? இதர மதங்களில் சொல்லுவதுபோலப் பரலோகம் போய் இந்நிலையை யடைவதென்றால் அதை நாம் இப்பொழுது அறிய முடியாது. அதை யடைந்தவர்கள் நமக்கு இந்த அநுபவத்தை எடுத்துக் கூறத் திரும்பிவரமாட்டார்கள். அம்ருத மென்கிற இந்த நிலைக்குக் காரணம் ஆத்ம ஞானமென்பது இந்த வசனத்தின் தாத்பரியம். எல்லா பிராணிகளுக்கும் பசி தாகம் என்ற வியாதி ஏற்பட்டிருக்கிறது என்று சொன்னேன். அதைத் தீர்த்துக்கொள்ள கண் நாக்கு முதலிய கருவிகள் வேண்டியிருக்கின்றன. மனதும் வேண்டியிருக்கிறது. மனதினால் போக்ய வஸ்துக்கள் நல்லவை பொல்லாதவை என்று கண்டுகொள்ளுகிறோம். இவை

களைக்கொண்டு அநேக வஸ்துக்களை ஸம்பாதிக்கிறோம். அதை ரக்ஷிக்க வீடு வேண்டியிருக்கிறது. நமக்கு ஸஹாயம் செய்ய மனைவி, புத்திரன், பந்து, ஸ்நேஹிதர்கள் முதலிய அநேகரை வேண்டுகிறோம். இதோடு நிற்காமல் அவர்களை நம்முடையவரென்று அதிக அபிமானம் பாராட்ட ஆரம்பிக்கிறோம். கண் கால் முதலிய கருவிகளுக்குக் கஷ்டம் நேர்ந்தால் அதை நமக்கு நேர்ந்ததாக எண்ணுகிறோம். உடம்பு இளைத்தால் நான் இளைத்துப்போகிறேன் என்கிறோம். நம்மைச் சேர்ந்தவர்களுக்குக் குறைவேற்பட்டால் அது நம்முடையதென்றே தோன்றுகிறது. இதனால் நம்முடைய வாஸ்தவமான ஸ்வரூபத்தை நாம் அறியவில்லையென்பது விளங்குகிறதல்லவா? ஒரு ஸமயம் நம்முடைய மனம், நம்முடைய கண், நம்முடைய தேகம் என்று வேருக இவைகளைப் பேசிக்கொண்டாலும் அதே ஸமயத்தில், நான் அறிவில்லாதவன், குருடன், நொண்டி, நெட்டை, குட்டை என்கிற அபிமானம் நம்மை விடுவதில்லை. இதைத் தொலைக்க ஆத்மஞானம் ஒன்றே ஸரியான மருந்தாகும். எப்பொழுதும் வியாதியின் ஸ்வபாவத்திற்கு ஸரியான மருந்து செய்வது வழக்கம். இல்லாத கஷ்டங்களை அஜ்ஞானத்தினுல் தன்னிடத்தில் தூக்கிப்போட்டுக்கொண்டு கஷ்டப்பட்டால் அதற்கு ஸரியான மருந்து இவை நம்மைச் சேர்ந்ததல்ல வென்ற ஞானமே. உடமபை என்னுடையதல்லவென்று செய்து விட்டால் உடம்பு என்னும் வியாதி தானுகவே போய் விடும். இதற்காகத் தற்கொலை செய்துகொள்ளவேண்டியதில்லை. மற்ற வேறு உபாயம் தேடவேண்டாம். அதனுல் சரீர ஸம்பந்தம் நமக்கு அதிகமாகவே பெருகுமென்று சொன்னேன். பகவத்பாதாள் சரீர மிருக்கும்

பொழுதே அதை இல்லாமற் செய்து கொள்வதுதான் அம்ருதம், மோக்ஷமென்று ஸ்தாபித்திருக்கிறார்கள்.

तदेतत् अशरीरत्वं मोक्षाख्यम् । [ஸூத்ரபாஷ்யம், I-i-4]

என்று அவர்கள் சொல்லுகிறார்கள். உங்களுக்கு அநேகம் பேர் ஸ்நேஹிதர்கள் இருக்கலாம். அவர்கள் நம்மைச் சேர்ந்தவர்கள் என்ற எண்ணமுள்ள வரையில் அவர்களுடைய நல்லது பொல்லாததெல்லாம் நமக்கென்றே ஆகின்றன. ஒரு காலத்தில் அவர்களே நமக்கு விரோதிகளாக ஆகிவிடுவதாக வைத்துக் கொள்வோம். அப்பொழுது அவர்கள் சுகதுக்கத்துக்கும் நமக்கும் ஸம்பந்தமில்லாமற் போகிறது. அடிக்கடி அவர்களுக்குத் துக்கம் வரவேண்டுமென்பதில் மாத்திரம் கொஞ்சம் ஸம்பந்தம் இருந்தாலும் இருக்கலாம். அதேன்? அஹம் மம (நான் என்னுடையது) என்ற அபிமானம் போய்விட்டது. இதுபோலவே நம் உடம்பையும் செய்துகொள்ளவேண்டும். இதோ எதிரில் ஒரு வாழைக்கட்டை கட்டித் தொங்குகிறது. அது வாடி வதங்கிப்போனால் நாம் வாடி வதங்குகிறோமா? அந்த வாழைக் கட்டையைவிட இன்னும் கொஞ்சம் கிட்டே கட்டியிருக்கும் மாம்ஸக்கட்டையென்றே இந்தச் சரீரத்தை அடிக்கடி எண்ண வேண்டும். நாம் நாம் என்று எண்ணுவதால் இந்த அபிமானம் நம்மிடத்தில் வேரூன்றி இருக்கிறது. காமம், க்ரோதம், த்வேஷம், பயம் எல்லாம் மனதைச் சேர்ந்தவையே ஒழிய எனக்கல்ல. பசி, தாகம் முதலியன உடம்பைச் சேர்ந்தவை, என்னுடையவையல்ல என்று இம்மாதிரி எப்பொழுதும் அநுஸந்தானம் செய்து வந்தால் வேரூன்றியிருக்கும் இந்த அபிமானம் கொஞ்சம் கொஞ்சமாய்ப் போய் விடும்.

நம்முடைய ஆத்மா மிகவும் சுத்தமானதென்று உபநிஷத்துக்களில் உபதேசிக்கப்படுகிறது. எங்கும் நிறைந்து சுத்தமான ஆனந்த ஸ்வரூபமாயுள்ள ஒரு பொருளே ஈச்வரன். அந்த ஈச்வரனே நாமென்கிற வாஸ்தவ தத்வத்தை எல்லாரும் அறிய வேண்டும். நம்மால் பார்க்கப்படும் தேகம் முதலிய வஸ்துக்கள் வேறு, நாம் வேறு என்று பிரித்து அறியவேண்டும்.

'तं स्वाच्छरीरात् प्रवृहेत् । मुञ्जादिवेषीकां धैर्येण । तं विद्याच्छुक्रममृतम् ।' [கடோபநிஷத்.]

பயிர்த் தண்டிலிருந்து இஷீகா என்னும் கதிரை உருவி எடுப்பது போல அந்த ஆத்ம ஸ்வரூபத்தைத் தன் சரீரத்திலிருந்து தைரியமாகத் பிரிக்க வேண்டும். அப்பொழுது அது சுத்தமாகவும் சாவில்லாததாகவும் காணப்படுமென்பது அர்த்தம். ஒரு வஸ்துவை நாம் பார்க்கிறோம். அங்குப் பார்க்கப்படுகிறது (Object) என்றும், பார்க்கிறவன் (Subject) என்றும் இரண்டு ஏற்படுகின்றன. பார்க்கப்படுகிறது வேறு, பார்க்கிறவன் வேறு. உடம்பு பார்க்கப்படுகிறது. ஆதலால் அதைக் காட்டிலும் பார்க்கிறவனாகிய ஆத்மா வேறானவன். ஆத்மாவைப் பார்க்கக்கூடியதென்று நினைப்பவன் அஞ்ஞானி. இதையே,

'अविज्ञातं विजानताम् , विज्ञातमविजानताम् ।'

[கேனோபநிஷத்.]

என்று உபநிஷத் சொல்லுகிறது. தெரியுமென்று எண்ணுகிறவர்களுக்குத் தெரியாதது, தெரியாது என்று எண்ணுகிறவர்களுக்குத் தெரிந்தது என்பது அதற்கு அர்த்தம். இது இருக்கட்டும்.

நாம் சாகாமலிருக்க வேண்டுமானல் உடம்பு முதலிய வியாதி ஒழிய வேண்டும். உடம்பு இல்லாதவன் ஈச்வர ஞைகயால் அந்த ஈச்வரனே நானென்று (ஸோஹம்) பாவனை எப்பொழுதும் செய்து வர வேண்டும். உட்காரும் பொழுதும் எழுந்திருக்கும்பொழுதும் சிலர் ஸோஹம் ஸோஹம் என்ற சப்தத்தை மட்டும் சொல்லுவார்கள். அப்படி யல்லாமல் அதன் அர்த்தத்தையும் உணர்ந்து சொல்லுவது விசேஷம். நமது சரீரத்தை நம்முடைய தல்லவென்று நினைக்கவேண்டும் என்று சொல்லுவது ஸுலபம். அப்படிச் செய்வது கடினந்தான். யாராவது நம்மை அடித்தால் அடிக்கவில்லை யென்ருவது நோகவில்லை யென்ருவது வைத்துக்கொள்ள முடிகிறதா? அப்படிச் செய்ய என்ன உபாயம்? உடம்பு இல்லையென்று நினைக்க முடியாமற்போனல் லோகத்தில் எல்லா உடம்பும் நம்முடையதே என்று நினைக்க ஆரம்பிக்கவேண்டும். அதே இதற்கு ஸரியான உபாயம். அப்படி நினைப்பதால் இதரர்கள் கஷ்டப்படும்பொழுது அதற்குப் பரிஹாரம் செய்ய நமக்கு எண்ணமுண்டாகிறது. இதரர்களுடைய ஸுக துக்கம் நம்முடையனவாக ஆய்விடுகின்றன. நாம் செய்யும் எந்தக் காரியமும் நமக்காக அல்லவென்னும் எண்ணம் தானுகவே ஏற்பட்டுவிடும். இந்த முடிவையே, எல்லாவற்றையும் ஈச்வரனுக்கு அர்ப்பணமாகச் செய்ய வேண்டுமென்று பகவான் கீதையில் அர்ஜுனனுக்கு உபதேசிக்கிறுர். ஆகையால் எப்பொழுதும் பிறருக்காக உழைக்கவேண்டும். நாம் செய்யும் ஒவ்வொரு காரியத்தையும் ஈச்வரார்ப்பணம் செய்யவேண்டும். எப்பொழுதும் ஸோஹம்பாவனை செய்யவேண்டும். நேற்று நான் சொல்லியபடி 'நம:பார்வதீ பதயே' என்று புண்டரீகம்

போட்டுக்கொண்டே இருக்கவேண்டும். பிழைத்திருக்கும் பொழுதே இத்தேகத்தை விட்டுவிட்ட நிலை இதுவே. இதையே சாஸ்திரத்தில் ஜீவன் முக்தி என்று சொல்லு வார்கள்.

'अशरीरं वाव सन्तं न प्रियाप्रिये स्पृशतः ।'

[ப்ருஹதாரண்யகம்.]

என்ற வசனமும் இப்படியே கூறுகிறது. சரீர மில்லாமல் பிழைத்திருக்கும் புருஷனை ஒருபொழுதும் ஸுகம் துக்கம் அணுகுவதில்லை என்பது அர்த்தம். பகவத்பாதாள் நமக்குச் சாகாமலிருக்க உபதேசித்த மருந்தும் இதுவே. பெரியோர்கள் இந்த விஷயத்தை சீலோகமாகச் சொல்லி யிருக்கிறார்கள். அந்த சீலோகமானது பகவத்பாதாளால் ப்ரம்மஸூத்ர பாஷ்யத்தில் உதாஹரிக்கப் பட்டிருக் கிறது.

गौणमिथ्यात्मनोऽसत्त्वे पुत्रदेहादिबाधनात् ।
सद्ब्रह्मात्माहमित्येवं बोधे कार्यं कथं भवेत् ॥

[ஸூத்ரபாஷ்யம் I-i-4]

கௌணாத்மா, மித்யாத்மா, முக்யாத்மா என்று ஆத்மாக் களை மூன்றாகப் பிரித்துச் சொல்வது வழக்கம். புத்ர மித்ரர்கள் நாமே, என்றும், அவர்களுடைய ஸுக துக்கம் நம்முடையது என்றும் எண்ணும் அபிமானமானது எல்லாரிடத்திலும் குடிகொண்டிருக்கிறதென்று சொன் னேனல்லவா? அதுதான் கௌணாத்மா. கௌண மென்றால் உபசாரமாகச் சொல்வதென்று அர்த்தம். நாம் வேறு. புத்ர மித்ரர்கள் வேறு என்று நமக்குத் தெரிந் திருக்கும்பொழுதே, நாம் நாம் என்கிற அபிமானம் நமக்கு

வருவதால் கௌணாத்மா என்று சொல்லப்பட்டது. சரீரம் முதலியவற்றில் நான் என்கிற அபிமானம் உண்டாவது மித்யாத்மா. கீழே சொல்லியபடி சுத்தமான ஆத்ம ஸ்வரூபத்தைப் பிரித்து சுத்தமான ப்ரம்ம ஸ்வரூபமே நான் என்பது அநுபவத்திற்கு வருகிறபொழுது ப்ரம்மம் ஆத்மாவாகி விடுகிறது. அதைத் தான் முக்யாத்மாவென்று சொன்னேன். முதலில் சொல்லப்பட்ட கௌணாத்மா மித்யாத்மா இவ்விரண்டையும் விலக்கி விட்டால் புத்ர மித்ரர்கள், சரீரேந்த்ரியங்கள், இவைகளுடைய ஸம்பந்தம் நீங்கிவிடும். அப்பொழுது ஸத்யமான ப்ரம்ம ஸ்வரூபமாகவே நான் இருக்கிறேன் என்கிற ஞானம் உண்டாகிறது. அதற்குப் பிறகு செய்ய வேண்டியதொன்றுமே கிடையாது என்பது கீழே சொல்லிய ச்லோகத்தின் தாத்பரியம். ஆகையால் நாம் எல்லோரும் பரமாசாரியர்களான பகவத்பாதாள் அருளிய தத்வ ஞானமாகிய இந்த மருந்தை ஸம்பாதிக்க ப்ரயத்னப்பட வேண்டும். எப்பொழுதும் சுத்தமான சரீரமில்லா நிலையையும் களங்கமற்ற பேரானந்தத்தையும் பெறலாம். இதற்குக் காரணமான ஈச்வரபாவனை செய்யவும், எப்பொழுதும் நல்ல காரியங்களிலேயே ப்ரவிருத்திக்கவும் ஸ்ரீ சந்த்ரமௌலீசுவரர் அநுக்ரஹம் செய்யவேண்டுமென்பது பிரார்த்தனை.

T.1893

---

21 JAN 1939

ஸ்ரீ சந்த்ர மௌளீச்வராய நம:

## ஸ்ரீ காமகோடி கோசஸ்தானத்தின் வெளியீடுகள்

ஒவ்வொரு புத்தகமும் ஸம்ஸ்க்ருத, க்ரந்த மூலமும், தமிழ் அனுவாதமும், பல வர்ணப் படங்களுடனும் ஸ்ரீ ஆசார்யாள் அனுக்ரஹ பூர்வமான ஸ்ரீ முகத்துடனும் கூடியது.

| | | ரூ. | அ. | பை. |
|---|---|---|---|---|
| 1. | ஸ்ரீ விஷ்ணுஸஹஸ்ர நாமஸ்தோத்திரம் … | 1 | 8 | 0 |
| 2. | ஷை மூலம் மட்டும் … | 0 | 2 | 6 |
| 3. | ஸ்ரீ பஜ கோவிந்தம் … … … | 0 | 4 | 0 |
| 4. | ஸ்ரீ முகுந்தமாலை … … … | 0 | 6 | 0 |
| 5. | ஸ்ரீ ப்ரச்னோத்ர ரத்னமாலிகா (தெலுங்கில்) … | 0 | 2 | 6 |
| 6. | ஸ்ரீ தேவீ ஸ்தோத்ர ரத்னாகரம் (ஸ்ரீ ச்யாமளா தண்டகம் முதலிய 12 தேவீ ஸ்தோத்ரங்கள் தமிழ் அர்த்தத்துடன் கூடியது) … | 0 | 15 | 0 |
| 7. | ஸ்ரீ சிதலாஷ்டகம் … … … | 0 | 2 | 6 |
| 8. | ஸ்ரீ அம்பாஷ்டகம் … … … | 0 | 2 | 6 |
| 9. | ஸ்ரீ ஜம்புநாதாஷ்டகம் … … | 0 | 2 | 0 |
| 10. | ஸ்ரீ குலீரேசாஷ்டகம் … … | 0 | 2 | 0 |
| 11. | ஸ்ரீ கீதையும், குறளும் … … | 0 | 3 | 0 |
| 12. | ஸ்ரீ தயாசதகம் … … … | 0 | 12 | 0 |
| 13. | ஸ்ரீ சிவபாதாதிகேசாந்த ஸ்தோத்திரங்கள் … | 0 | 12 | 0 |
| 14. | ஸ்ரீ தக்ஷிணாமூர்த்தி அஷ்டகம் … … | 0 | 5 | 0 |
| 15. | ஸ்ரீ ரங்கநாதாஷ்டகம் … … … | 0 | 2 | 0 |
| 16. | ஸ்ரீ அத்வைதசித்தாந்த வினாவிடை … | 0 | 5 | 0 |
| 17. | கும்பகோணம் அத்வைத சபை பொன் விழா நினைவு மாலை— | | | |
| | (1) ஸம்ஸ்கிருதம்—51 கட்டுரைகள் அடங்கியது | 5 | 0 | 0 |
| 18. | (2) ஆங்கிலம் —12 ,, ,, … | 3 | 0 | 0 |
| 19. | ஸ்ரீ ஆர்யா ஷஷ்டி … … | 0 | 10 | 0 |
| 20. | திருக்குறள் — பொருட்பாலும், காமத்துப் பாலும்—பாலருரையுடன் … | 4 | 0 | 0 |
| 21. | ஸ்ரீ சங்கராசார்ய ஸ்வாமிகளின் நன்மொழிகள் 5 பாகங்களாக கூடிய சீக்கிரம் வெளியிடப்படும் | | | |
| | (1) நமது வேதங்களும் சாஸ்திரங்களும் … | 1 | 0 | 0 |
| | (2) நமது ஆலயங்களும் மூர்த்திகளும் … | 0 | 12 | 0 |
| | (3) நமது அறநெறி மதம் … | 0 | 6 | 6 |
| | (4) நமது தர்மம் … | 0 | 12 | 0 |

ஸ்ரீ ஆதிசங்கரர். ஸ்ரீ ஆசார்யாள் அவர்களின் திவ்ய மூவர்ண படங்கள். ஒவ்வொன்றும் விலை அணா 10.

**ஸ்ரீ காமகோடி கோசஸ்தானம்**

57, மேல டபீர் தெரு, கும்பகோணம்
4, பிரான்ஸிஸ் ஜோஸப்புத் தெரு, சென்னை—1.

T
1894

மகோடி க்ரந்தாவளி : 32

T. 1894

... ORIENTAL ...
21 JUN 1958
TRIPLICANE P.O., MADRAS

ௐ

श्रीगुरुभ्यो नमः

# நமது தர்மம்

ஸ்ரீ காமகோடி பீடாதிபதிகளான

ஜகத்குரு

ஸ்ரீ சங்கராசார்ய ஸ்வாமிகள்

அருளிய நன்மொழிகள்



श्रीकामकोटिर्विजयते

ஸ்ரீ காமகோடி கோசஸ்தானம்

ப்ரான்ஸிஸ் ஜோஸப்புத் தெரு

சென்னை

முதற் பதிப்பு—பிப்ரவரி, 1950

Thompson & Co., Ltd., Madras.

T.1894

॥ श्रीः ॥

यदा यदा हि धर्मस्य ग्लानिर्भवति भारत ।
अभ्युत्थानमधर्मस्य तदात्मानं सृजाम्यहम् ॥

ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதிகளான ஜகத்குரு ஸ்ரீ சங்கராசாரியார் ஸ்வாமிகள், 1932௵ செப்டம்பர் ௴ சென்னைக்கு விஜயம் செய்தார்கள். அச்சமயம் அவர்கள் அருளிய பொன்மொழிகள் இங்கே அளிக்கப்படுகின்றன.

காலவேறுபாட்டால் மக்கள் ஒரு நிலையில் இல்லை. நமது மதங்கள், வேதங்கள், சாஸ்திரங்கள், புராணங்கள் அவற்றின் கொள்கைகள், நாகரிகம் முதலியவற்றின் உண்மைகளைச் சரிவர அறிந்து கொள்ளமுடியாமல் பலவாறு குழம்பியிருக்கின்றனர். அன்னாரது நன்மைக்காகப் பல விஷயங்களும் எளிதில் விளங்குமாறு, தக்க மேற்கோள்களுடன் உபதேசிக்கப்பட்டுள்ளன.

மக்கள் தங்களது ஆத்மலாபத்தைக் கருதி நற்பயன் அடையும் முறைகளை மேற்கொள்ள வேண்டுமென்று வேண்டப்படுகிறார்கள்.

ஸ்ரீ காமகோடி கோசஸ்தானம்

முதற் பதிப்பு—பிப்ரவரி, 1950

Thompson & Co., Ltd., Madras.

T. 1894

॥ श्रीः ॥

यदा यदा हि धर्मस्य ग्लानिर्भवति भारत ।
अभ्युत्थानमधर्मस्य तदात्मानं सृजाम्यहम् ॥

ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதிகளான ஜகத்குரு ஸ்ரீ சங்கராசாரியார் ஸ்வாமிகள், 1932௵ செப்டம்பர் மீ சென்னைக்கு விஜயம் செய்தார்கள். அச்சமயம் அவர்கள் அருளிய பொன்மொழிகள் இங்கே அளிக்கப்படுகின்றன.

காலவேறுபாட்டால் மக்கள் ஒரு நிலையில் இல்லை. நமது மதங்கள், வேதங்கள், சாஸ்திரங்கள், புராணங்கள் அவற்றின் கொள்கைகள், நாகரிகம் முதலியவற்றின் உண்மைகளைச் சரிவர அறிந்து கொள்ளமுடியாமல் பலவாறு குழம்பி யிருக்கின்றனர். அன்னாரது நன்மைக்காகப் பல விஷயங்களும் எளிதில் விளங்குமாறு, தக்க மேற்கோள்களுடன் உபதேசிக்கப்பட்டுள்ளன.

மக்கள் தங்களது ஆத்மலாபத்தைக் கருதி நற்பயன் அடையும் முறைகளை மேற்கொள்ள வேண்டுமென்று வேண்டப்படுகிறார்கள்.

ஸ்ரீ காமகோடி கோசஸ்தானம்

# விஷய அட்டவணை


| | | | | பக்கம் |
|---|---|---|---|---|
| 1. | தர்மப் பிரமாணங்கள் | ... | ... | 1 |
| 2. | மனுஷ்ய தர்மம் | ... | ... | 18 |
| 3. | பாப புண்ணியங்கள் | ... | ... | 37 |
| 4. | வர்ண தர்மம் | ... | ... | 51 |
| 5. | ஸாமான்ய தர்மங்கள் | ... | ... | 75 |
| 6. | பரோபகாரம் | ... | ... | 89 |
| 7. | விநயஸம்பத் | ... | ... | 92 |
| 8. | இந்திரியநிக்ரஹம் | ... | ... | 97 |
| 9. | கோ ஸம்ரக்ஷணம் | ... | ... | 106 |
| 10. | நாம் செய்ய வேண்டிய காரியங்கள் | | ... | 111 |

T. 1894

GOVERNMENT ORIENTAL MSS. LIBRARY
21 JAN 1953
MADRAS

# நமது தர்மம்

---

## 1. தர்மப் பிரமாணங்கள்

[19—10—1932]

உலகத்தில் புஸ்தகங்கள் நிறைய இருக்கின்றன. ஒவ்வொன்றும் ஒவ்வொரு விஷயத்தைச் சொல்லுகிறது. ஒவ்வொரு மதத்தினரும் ஏதாவது ஒன்றைக் கௌரவமாக வைத்திருக்கிறார்கள். எல்லாம் புஸ்தகங்களே. ஆனாலும் ஒரு புஸ்தகத்தை விசேஷமாகக் கொண்டாடுகிறார்கள். அதில்தான் ஜன்மம் கடைத்தேறும் வழிகள் சொல்லப்படுவதாகச் சொல்லுகிறார்கள். அதில் இருக்கிறது எல்லாவற்றிலும் முக்கியமானது என்று எண்ணுகிறார்கள். அந்தப் புஸ்தகத்துக்குப் பூஜை செய்கிறார்கள்; நமஸ்காரம் செய்கிறார்கள். சில மதஸ்தர்கள் அந்தப் புஸ்தகத்திற்கே தனியாகக் கோயில் கட்டி வணங்குகிறார்கள். ஸீக்கியர்கள் அவ்வாறு செய்து வருகிறார்கள். அவர்களுடைய மதப் புஸ்தகத்தை அவர்கள் கிரந்த ஸாஹேப் என்று மரியாதையாகச் சொல்லுவார்கள். இப்படி ஒவ்வொரு மதத்தினரும் தங்கள் தங்கள் ஆத்ம க்ஷேமத்திற்கு வேண்டிய மார்க்கங்களைச் சொல்லும் ஒவ்வொரு புஸ்தகத்தைப் பெற்றிருக்கிறார்கள்.

நம்முடைய வைதிக மதத்திற்கு எந்தப் புஸ்தகம் இருக்கிறது? மற்ற மதஸ்தர்களை உங்கள் மதப் புஸ்தகம்

எது என்று கேட்டால் அவர்களுக்குச் சந்தேகமில்லாமல் இன்னது என்று தெரியும். நம்மைக்கேட்டால் சைவர்கள் தேவாரம், திருவாசகம் என்று சொல்லுவார்கள். வைஷ்ணவர்கள் ராமாநுஜர் செய்த ஸ்ரீ பாஷ்யம் என்று சொல்லுவார்கள். அவர்களுக்குள் பக்திமான்களாக இருப்பவர்களைக் கேட்டால் ஸ்ரீமத் ராமாயணம் என்று சொல்லுவார்கள். கனபாடிகள் வேதந்தான் என்பார்கள். இங்கிலீஷ் வாசித்துக் கொஞ்சம் வைதிக சிரத்தை உள்ளவர்கள் கீதை என்பார்கள். எல்லாருக்கும் பொதுவாக எந்த மதப் புஸ்தகம் இருக்கிறதென்றால் எல்லாரும் சேர்ந்து ஒன்றைச் சொல்லுவதில்லை. இதற்கு என்ன காரணம்? முக்கிய காரணம் ஒன்று இருக்கிறது. மற்ற ஜனங்கள் எந்த மதத்தில் ஜனனம் ஏற்பட்டிருக்கிறதோ அந்த மதப் படிப்பை முதலில் இரண்டு அல்லது மூன்று வருஷங்கள் படித்துவிட்டு அப்புறம் லௌகிகப் படிப்பைப் படிக்கிறார்கள். அதனால் சிறு பிராயத்திலேயே அவர்களுக்கு மதத்தைப்பற்றிய ஞானம் ஏற்பட்டுவிடுகிறது. நம்முடைய மதத்தில் மதத்தைப்பற்றிப் படிப்பதே கிடையாது. அப்படிப் படிக்காததனால் என்ன பலன் ஏற்பட்டிருக்கிறது? வேறு எந்த மதத்துக்காவது ஆள் வேண்டுமானால், நம்முடைய மதத்திலிருந்து பிடித்துப் போகிறார்கள். அவர்கள் தங்கள் மதத்திலிருந்து வேறொரு மதத்திற்குப் போவதில்லை. பால்யத்திலிருந்தே மத சாஸ்திரங்களை அவர்கள் படிக்கிறார்கள். நாமோ பால்யத்தில் கொஞ்சம்கூட எட்டிப் பார்ப்பது இல்லை. என்ன வாசித்தாலும் ஏறுத வயதில் நாம் வாசிக்கிறோம். நம்முடைய மதக் கிரந்தங்களை நாமே தூஷிக்கிறோம், அழிக்கிறோம். மற்றவர்கள் பிறர் மத புஸ்தகங்களை அழிக்கிறார்கள்.

நமக்குப் புஸ்தகத்தின் பெயரே தெரியவில்லை. காரணம் கேட்காமல் வேதங்களையும் அங்கங்களையும் படித்தறிய வேண்டுமென்று நேற்றுச் சொன்னேன். காரணம் என்பது என்ன, அதனால் என்னப் பிரயோஜனம் உண்டாகும் என்று நாம் கேட்கிறோம். இது எதற்குக் காரணமாக இருக்கிறது என்றும் கேட்கிறோம். பணம் முதலியவற்றைவிட இது ஆனந்தமென்று நினைத்துவிட்டால் காரணம் எதற்கு? பிரேமை இருந்தால் காரணம் வேண்டியதில்லையே. எதற்கு இது காரணமாக இருந்தால் நாம் விரும்புவோமோ அந்தப் பணம் முதலியவற்றை இதற்குக் காரணமாக வைதத்துக் கொள்ளலாமே. நாம் சாப்பிடுவது வேதாத்தியயனம் செய்வதற்காகத்தான் என்று நினைக்கலாமே. இப்படிக் காரணம் கேட்காமல் படிக்கவேண்டும் என்று சொல்லியிருக்கிற மதத்தில் குழந்தை பிறந்தவுடன் நம்முடைய வித்தையை அறிய முடியாமல் கத்திரித்துவிடுகிறோம் லௌகிக வித்தையை எடுத்தவுடன் வாசிக்கச் செய்கிறோம். பால்யப் பருவத்திலிருந்தே குழந்தைகளுக்கு ஆஸ்திக புத்தி வரும்படி நாம் பழக்கலாம் இந்த விஷயங்களைத் தவிர மற்ற விஷயங்களில் குழந்தைகளுக்காக எவ்வளவோ செலவு செய்கிறோம். ஒரு பணக்காரர் தம்முடைய குழந்தைக்கு உபநயனம் செய்வதாயிருந்தால் ஆயிரக் கணக்காகச் செலவழிக்கிறார். அந்தச் செலவில் பத்தில் ஒருபங்கு உபநயனத்திற்காக ஏற்பட்ட காரியத்தில் செலவழித்தால் நம்முடைய மத நம்பிக்கை போகாது. உபநயனத்தின் செலவைவிட உபநயன லக்ஷியத்திற்காகச் செலவு செய்வது விசேஷம். அந்த விஷயங்களில் பிரைவேட் டியூஷன் வைத்து குழந்தைகளுக்குச் சொல்லி வைக்கவேண்டும்.

அந்த விஷயங்களை அறிந்த வாத்தியார் பட்டும் ஏன் ஒரு விதலாபமும் இன்றி இருக்கவேண்டும்? அவருக்கும் உபயோகமாக இருக்கும். மத விஷயங்கள் பால்யத்திலேயே தெரிந்திருந்தால் ஸந்தேகமே வராது. புஸ்தகமே இன்னதென்று தெரியாத கேவல நிலை வராது.

அப்படி படிக்காததனுல் பலவித அபிப்பிராயங்கள் நம்மவர்களிடத்தில் இருக்கின்றன. ஒருவர் ஆஸ்திகராக இருக்கிருர். வேருெருவர் நாஸ்திகராக இருக்கிருர். மற்ருெருவர் வெறும் பக்திமட்டும் பண்ணிக்கொண்டு இருக்கிருர். இவர்களுக்குள் ஒருவருக்கொருவர் அபிப்பிராய பேதங்கள் ஏழெட்டு விதமாக இருக்கின்றன. இதற்காகச் சண்டை வேறு. ஸந்தேகங்களோ ஆயிரக் கணக்கில் இருக்கின்றன. மதப் படிப்பை இளம் பருவத்திலே படித்திருந்தால் எல்லோருடைய அபிப்பிராயமும் ஒன்ருக இருக்கும். ஸந்தேகம் இருக்காது. மதப் படிப்பைப் படிக்கிறவர்களின் மதங்களில் கக்ஷிகள் குறைவாக இருக்கும்.

நம்முடைய மதப் புஸ்தகம் என்ன? புஸ்தகத்தை தீர்மானம் பண்ணுவதே இந்தக் காலத்தில் சிரமமாக இருக்கிறது. நம்முடைய புஸ்தகம் எதுவோ அதில் சொல்லியிருக்கிறபடி நாம் அநுஷ்டானம் செய்துவந்தால் நமக்கு க்ஷேமம் உண்டாகும். மதக்கிரந்தங்களில் எது சொல்லியிருக்கிறதோ அதே விஷயம் வேறு புஸ்தகங்களில் சொல்லியிருந்தாலும் தமது மத புஸ்தகம் இதுதான் என்று ஒன்றையே பல மதஸ்தர்களும் கொண்டாடுகிருர்கள். இன்றைக்கு ஒருவன் ஒரு புஸ்தகம் எழுதுவான்; நாளைக்கு ஒருவன் வேறு ஒன்று எழுதுவான். அவைகளில் நல்லதும் இருக்கலாம்; தப்பும் இருக்கலாம்.

அதை நிச்சயம் பண்ணுவது சிரமமாக இருக்கும். ஆகையால் ஏதாவது ஒன்றை ஸ்திரமாக ஏற்படுத்திக்கொண்டால் நல்லதல்லவா? அதற்காகத்தான் பல மதஸ்தர்களும் தங்கள் 'தங்களுக்குப் பிரமாணமாக ஒவ்வொரு புஸ்தகத்தை வைத்துக்கொண்டிருக்கிறார்கள்.

நமது மதம் என்ன என்பது மதப் புஸ்தகங்களிலிருந்து தெரிந்துகொள்ளவேண்டும். அந்தப் புஸ்தகங்கள் எவை? மதம் இன்னதென்று தெரிந்துகொண்டு பின்பு புஸ்தகங்களைத் தெரிந்துகொள்ள வேண்டும். இப்படி இருந்தால் ஸந்தேகம் உண்டாகிறது. புஸ்தகங்கள் நிறைய இருக்கின்றன. விஷயங்களும் அதிகமாக இருக்கின்றன. நம்முடைய மத அநுஷ்டானத்தால் நல்ல அநுபவத்தை யடைந்தவர்கள் இருக்கிறார்கள். உலகத்தையே மறந்து ஆனந்தமாக ஏகாந்த நிஷ்டையில் இருந்து என்ன பண்ணினாலும் சாகாமற் படுத்துக் கிடந்தவர்கள் எத்தனையோ பேர். ஜீவன்முக்தர்கள் எத்தனையோ பேர். அவர்களை நாம் பிரத்தியக்ஷமாகப் பார்க்கிறோம். புஸ்தகங்களின் மூலம் ஸதாசிவ பிரம்மேந்திரர்கள், பட்டினத்தார் முதலியவர்களைப் பற்றிக் கேட்டிருக்கிறோம். இவ்வளவு அநுபவிகள் மற்ற மதங்களில் மிகவும் குறைவு. இத்தகைய மதத்திற்குப் பிரமாணக் கிரந்தங்கள் இல்லாமலா போகும்?

மதம் எதற்கு? ஒருவர் சொல்லுவதை நாம் ஏன் கேட்கப் போகிறோம்? நமக்குள்ள கஷ்டம் போவதற்காகவும் குறை நீங்குவதற்காகவும் போகிறோம். குறையில்லாவிட்டால் வேண்டியதில்லை. குறை அதிகமானல் அதிகமாகக் கோயிலுக்குப் போகிறோம்; அதிகமாகப் பெரியவர்களைத் தரிசிக்கிறோம்; உபதேசம் கேட்கிறோம்

குறையில்லாவிட்டால் உபதேசம் வேண்டாம். நமக்குள்ள ஸந்தேகங்களையும் கஷ்டங்களையும் போக்கிக்கொள்வதற்காக நாம் பெரியவர்களிடம் போகிறோம். புஸ்தகங்களை வாசிக்கிறோம்; நல்லவர்களிடம் உபதேசம் பெறுகிறோம்; மஹாக்ஷேத்திரங்களுக்குப் போகிறோம்; தீர்த்த ஸ்நானம் செய்கிறோம். அப்படிச் செய்வதால் மனது கொஞ்சம் கொஞ்சமாக சாந்தி அடைகிறது. முழுவதும் சாந்தி அடைந்தவர்கள் வெட்டினாலும் குத்தினாலும் பூஷித்தாலும் தூஷித்தாலும் ஆனந்தமாக இருக்கிறார்கள். புஸ்தகம் வாசித்தல் குரு தரிசனம் செய்தல் முதலியவற்றால் இந்த சாந்தி ஏற்படுகிறது. எல்லா ஜாதிகளிலும் மஹான்கள் கிளம்புகிறார்கள்; மனதில் சாந்தி அடைகிறார்கள். இந்த சாந்திக்குரிய மார்க்கத்தைத் தான் மதம் என்பது. இதன் பேர் தர்மம் என்று சொல்லுவார்கள். தர்மமாவது சிரேயஸுக்கு ஸாதனம். அதுதான் மதம். தர்ம அர்த்த காம மோக்ஷங்களுக்கு ஸாதனமாக இருப்பது மதம். இந்த நான்கையும் புருஷார்த்தங்கள் என்று சொல்லுவார்கள்.

அர்த்தம் என்றால் என்ன? பணம் மட்டும் அல்ல. நெல் வீடு முதலிய எல்லாம் அர்த்தந்தான். இதைத் தமிழில் பொருள் என்று சொல்லுவார்கள். காமம் மோக்ஷம் என்பவைகளை இன்பம் வீடு என்பார்கள். இந்த இரண்டுந்தான் வாஸ்தவமான புருஷார்த்தம். புருஷார்த்தம் என்பது என்ன? அதில் அர்த்தம் என்னும் ஒரு வார்த்தை இருக்கிறது. முன்பு சொன்ன நான்கில் ஓர் அர்த்தம் இருக்கிறது. இவ்விரண்டும் என்ன? அர்த்தித்தல் என்றால் வேண்டுமென்று நினைத்தல். புருஷன் அதாவது இங்கே பிராணிகளாகப் பிறந்தவர்கள் வேண்டுமென்று எவைகளை நினைக்கிறார்களோ அவை

கள்தாம் புருஷார்த்தங்கள். எதை மனிதன் வேண்டுமென்று நினைக்கிருன்? குறைவில்லாமல் ஸந்தோஷமாக இருக்கவேண்டுமென்று அவன் நினைக்கிருன். அந்த ஸந்தோஷம் இரண்டு விதம். கொஞ்ச நாழிகை இருப்பது ஒரு விதம்; எப்பொழுதும் குறையாமல் இருப்பது மற்ருெரு வகை. கொஞ்ச நாழிகை ஸந்தோஷம் உண்டாவது, பின்பு குறைவது, அப்புறம் மறுபடியும் வருவது இப்படி திரும்பத் திரும்ப அழிந்தும் குறைந்தும் வருவதுதான் இன்பம் அல்லது காமம். வந்துவிட்டால் எந்தக் காலத்திலும் போகாதது மோக்ஷம். எதைக் காட்டிலும் பெரிய ஸந்தோஷம் இல்லேயோ அது தான் வீடு. அந்தப் பேரின்பத்தின் பெருமை தெரியாததால் இன்பந்தான் வேண்டுமென்று மனிதர்கள் நினைக்கிருர்கள். அது தெரிந்தால் இதை நினைக்கவே மாட்டார்கள்.

ஆகவே, நாம் வேண்டுமென்று நினைக்க வேண்டியது நான்காவதாகிய வீடு. இப்பொழுது வேண்டுமென்பதோ மூன்ருவதாகிய இன்பம். இன்பத்தை அடைவதற்கு ஸாதனமாக வேண்டுமென்று நினைப்பது பொருள். காமத்துக்கு சாதனமாக வேண்டுவது அர்த்தம். நாம் சாப்பிடுவதனுல் ஆனந்தம் உண்டாகிறது; அது இன்பம். ஸங்கீதம் கேட்பதால் ஒரு ஸந்தோஷம் உண்டாகிறது; அது இன்பம். ஹைகோர்ட்டு ஜட்ஜாக இருந்தால் நிரம்ப ஸந்தோஷப்படுகிருேம். அதுவும் ஒருவகை இன்பம். நல்வரவு பத்திரம் வாசித்துக்கொடுத்தால் ஓர் ஆனந்தம்; அதுவும் இன்பந்தான். இப்படி லௌகிக ஸந்தோஷங்களேக் கொடுப்பதெல்லாம் இன்பம். இந்த இன்பம் கொஞ்ச நாழிகை இருக்கும். இந்தச் சில்லறை இன்பத்தை எதனுல் ஸம்பாதிக்கிருேமோ அது

பொருள். அது தானியமாக இருக்கலாம், பணமாக இருக்கலாம், வீடாகலாம், மனிதர்களாகலாம். பொருள் இன்பத்துக்குக் காரணம். அந்த இன்பம் துக்கத்தை நிறையத் தந்து பளிச்சுப்பளிச்சென்று நடுவில் நடுவில் கொஞ்சம் ஸுகத்தைத் தருவது.

இதற்கு மேல் ஒன்று வேண்டும் என்று இல்லாதது. மோக்ஷம். அதுதான் வீடு. நாம் ஊரெல்லாம் சுற்றுகிறோம்; அலைந்து கஷ்டப்படுகிறோம். நாம் வந்து அடையவேண்டியது சொந்த வீடு. ஜயிலில் ஒருவன் இருக்கிறான். அதிலிருந்து அவன் வந்தால் வீட்டுக்குப் போகிறான். வீடு என்பதற்கே விடுதலை என்று அர்த்தம். விடுதலையான இடம் வீடு. அதுபோல நம்முடைய சொந்த இடம் மோக்ஷம். இப்பொழுது ஜயிலில் இருக்கிறோம். மாம்ஸமாகிய ஜயிலுக்குள் இருக்கிறோம். இந்த மாம்ஸம்—அதாவது இந்த உடம்பு—அழகாக இருந்தால் நாம் அழகுள்ளவர்களென்று ஸந்தோஷப்படுகிறோம். இளைத்துப் போனல், "ஐயோ இளைத்துப்போய் விட்டோமே!" என்று வருத்தப்படுகிறோம். இந்த உடம்பில் தான் நாம் இருக்கிறதாக எண்ணியிருக்கிறோம். நாம் நம்முடைய சொந்த இடத்தில் இருக்க வேண்டும். அதாவது வீட்டில் இருக்கவேண்டும். அந்த வீடுதான் எல்லையற்ற இன்பம். மற்ற இன்பங்களெல்லாம் எல்லைக்குள் அகப்பட்டவை. கால தேச மாறுபாடுகளால் பாதிக்கப்படுவன. ஒரு காலத்தில் இன்பமாக இருப்பது மற்ருெரு காலத்தில் துன்பமாக இருக்கிறது. கோடை காலத்தில் காற்று ஸுகமாக இருக்கிறது. குளிர் காலத்தில் கஷ்டமாக இருக்கிறது. இப்படியே ஒரு தேசத்தின் இன்பமாக இருப்பதே மற்ருெரு தேசத்தில் துன்பமாக இருக்கிறது. வஸ்துக்களிலும் இப்படியே பிரிவுபட்

டிருக்கிறது இந்த இன்பம். காலம் தேசம் வஸ்து இந்த மூன்றிலும் குறையாமல் நிறைந்து இருப்பது பேரின்பம். சிற்றின்பம் கொஞ்சம் ஸந்தோஷங் கொடுத்துப் பின்பு துக்கத்தைத் தரும்.

இன்பத்துக்குப் பொருள் ஸாதனமாக இருப்பது போல் பொருளுக்குத் தர்மம் ஸாதனமாக இருக்கிறது. முன் ஜன்மத்தில் நாம் அர்த்தத்தை மற்றவருக்குக் கொடுத்து வைத்தால் அது மறு ஜன்மத்தில் கிடைக்கும். தர்மத்தினுடைய பிரயோஜனமே பொருள்.

தர்மம் என்பது நல்லது கிடைக்கவேண்டிச் செய்யப் படுவது. எந்தக் காரியம் செய்தால் நல்லதோ அது தர்மம். என்ன மாதிரி கொடுத்தால் நாம் பின்னால் ஸௌக்கியமாக இருக்கலாமோ அது தர்மம்.

தர்மம் அர்த்தத்துக்கு ஸாதனம்; அர்த்தம் இன்பத் திற்கு ஸாதனம். ஆகவே தர்மமானது அர்த்தத்தின் மூலமாக இன்பத்திற்கு ஸாதனமாக இருக்கிறது.

நாம் செய்யும தர்மத்தை, 'இந்த அர்த்தம் வேண் டாம் ஈசுவரன் நினைத்ததைக் கொடுக்கட்டும்' என்று அவனுக்கு அர்ப்பணம் பண்ணிவிட்டால் நம்மிடத்தி லுள்ள அழுக்குப் போய்ப் பேரின்பம் கிடைக்கும். அந்தத் தர்மமே அப்பொழுது வீட்டிற்கு ஸாதனமாய் விடும். நிஷ்காம்யமாக தர்மம் செய்து வந்தால் அது மோக்ஷத்தைக் கொடுக்கும். சித்தவிருத்தி யடங்கும். அப்படியில்லாமல் காம்யமாக அர்த்தத்தை அபேக்ஷித் துச் செய்தால் இந்த ஜன்மத்துக்கு மட்டும் உபயோகப் படும். இப்படி தர்மமானது பொருளுக்கு ஸாதனமாக வும் அதன் மூலம் இன்பத்துக்கு ஸாதனமாகவும் நிஷ்காம்யமாகச் செய்யப்பட்டால் வீட்டிற்கு ஸாதனமாக

வும் ஆகின்றது. அர்த்தம் தர்மம் செய்ய ஹேதுவாக இருக்கின்றது. இன்பத்தைப் பெறுவதற்கு ஸாதன மாக இருக்கிறது. நிஷ்காம்ய தர்மம் செய்வதன் மூல மாக மோக்ஷத்திற்கு ஸாதனமாகிறது. இன்பம் ஒன் றுக்கும் ஸாதனமில்லை. அது மணலில் போட்ட ஜலம் போல் இருக்கிறது. இங்கே ஸங்கீதம், ஸாஹித்தியம் என்னும் இரண்டிற்கும் உள்ள வித்தியாசத்தைச் சொல்லும் ஒரு சுலோகம் ஞாபகத்துக்கு வருகிறது:

कर्णं गतं शुष्यति कर्ण एव सङ्गीतकं सैकतवारिरीत्या ।
आनन्दयत्यन्तरनुप्रविश्य सूक्तिः कवेरेव सुधासगन्धा ॥

[சிவலீலார்ணவம்]

இந்தச் சுலோகத்தில் ஸாஹித்தியம் உயர்ந்தது என்பதைக் கவி சொல்லுகிறார். மருந்தின் மேலே வெல்லம் தடவிக்கொடுப்பதுபோல ஸாஹித்தியத்தை எல்லாரும் கேட்பதற்காக ஸங்கீதம் உபயோகப்படுகிறது.

கவியினுடைய நல்ல வார்த்தைகள் அமிருதத்தைப் போன்றவை. அமிருதம் சாகாது. கவியின் பாவத்தை ஹிருதயத்தில் வாங்கினால் அது சாகாது. உள்ளுக் குள்ளே இருந்து நினைக்க நினைக்க இன்பத்தைத் தரும். ஸங்கீதமோ கேட்ட அப்பொழுதுதான் இன்பத்தைத் தரும். அப்புறம் பாட்டுக்கச்சேரி எங்கே நடக்கிறது, டிராமா எங்கே நடக்கிறது என்று தேடிக்கொண்டு போகச் சொல்லுகிறது. அது கேட்டபொழுதே செத்துப் போகின்றது; திருபபித் திருப்பிக் கேட்க வேண்டி யிருக்கிறது. ஸாஹித்தியத்தினுடைய பாவமோ மனதில் இருந்துகொண்டே மேலும் மேலும் இன்பத்தைக் கொடுத்துக்கொண்டே யிருக்கிறது.

ஸங்கீதம் காதிலே கேட்டால் காதிலே வற்றிப் போகிறது. காய்ந்த மணலில் தீர்த்தத்தை விட்டால் விழுந்ததைப் பார்ப்பதற்குள் சுவறிவிடும்; அதுபோல ஸங்கீதம் கேட்டமாத்திரத்திலே காதுக்குள்ளே வற்றி விடும்.

இன்பம் அதைப் போன்றதுதான். அப்படி அப் படியே சுவறிவிடும்.

தர்மம் பின்பு க்ஷேமமாக இருக்கவேண்டி அநுஷ்டிப் பது. பின்பு இது வேண்டும் என்ற ஆசை யில்லா விட்டால் அது மோக்ஷத்தைத் தரும். அதுதான் தர்மம், அதுதான் மதம். அது எது என்று தெரிந்துகொள்ள வேண்டுமானல் ஒரு புஸ்தகத்தைப் பார்க்கவேண்டும். அப்படிப்பட்ட புஸ்தகத்தைத் தர்மப்பிரமாணம் என்று சொல்லுவார்கள். பிரமாணம் என்பது ஸத்தியம். இதுதான் தர்மம் என்று ஸத்தியமாகத் தெரிவிக்கின்றது தான் தர்மப் பிரமாணங்கள்.

வேறே உள்ள மதப் புஸ்தகங்களெல்லாம் மனிதன் அடைய வேண்டியது பரலோகமென்று சொல்லுகிறது. மோக்ஷத்தைப் பரலோகமென்றே சொல்லுகின்றன. ஆனல் நம்முடைய புஸ்தகங்களில் பரலோகம் என்று வேறு இல்லை. இங்கேயே மோக்ஷத்தை அடையலாம். இங்கேயே அடையப்படுவது அது என்று சொல்லப் படுகிறது. அந்தத் தர்மத்தைச் சொல்லும் புஸ்தகங்கள் எவை? அவை இன்னவென்பது நமது சாஸ்திரங் களில் சொல்லப்பட்டிருக்கின்றன:

अङ्गानि वेदाश्चत्वारो मीमांसा न्यायविस्तरः ।
पुराणं धर्मशास्त्रं च विद्या ह्येताश्चतुर्दश ॥

[மனுஸ்மிருதி]

पुराणन्यायमीमांसाधर्मशास्त्राङ्गमिश्रिताः ।

वेदाः स्थानानि विद्यानां धर्मस्य च चतुर्दश ॥

[யாஜ்ஞவல்க்யஸ்மிருதி]

அந்தப் பிரமாணக்கிரந்தங்கள் பதினான்கு. அறிவு (ज्ञानं) இந்தப்பதினான்குக்குள் அடங்கியிருக்கிறது. அதனால் இவைகளுக்கு வித்தியாஸ்தானங்கள் என்று பெயர். அறிவிற்கு இருப்பிடம் என்பது அதன் அர்த்தம்.

அந்தப் பதினான்காவன :—ஆறு அங்கங்கள், நான்கு வேதங்கள், மீமாம்ஸை, நியாயம், புராணம், தர்மசாஸ்திரம் என்பவைகள். வேதத்தைப்பற்றியும் ஆறு அங்கங்களைப் பற்றியும் பெரும்பாலும் எல்லோரும் கேட்டிருப்பார்கள்.

"வேதமோ டாறங்க மாயினானை"

என்று தேவாரம் சொல்லுகிறது. இந்தப் பத்தும் ஈசுவர ஸ்வரூபம் என்று அதிற் சொல்லப்பட்டிருக்கிறது.

இந்தச் சதுர்தசவித்தைகளை நளன் கற்றுக்கொண்டான் என்று நைஷதத்தில் சொல்லி இருக்கிறது. அங்கே சிலேஷையாக அந்த விஷயம் சொல்லப்படுகிறது. நளன் சதுர்தச வித்தைகளுக்குச் சதுர்தசையைக் கொடுத்தான். அதாவது இந்தப் பதினான்கு வித்தைகளுக்கும் தெரிந்து கொள்ளுவதற்காக நான்கு தசைகளைக் கொடுத்தான். நான்கு தசைகளாவன :—படிப்பது, படித்ததைத் தெரிந்து கொள்ளுவது, படித்தபடி நடப்பது, மற்றவர்களை நடக்கச் செய்வது என்பவைகள்.

अधीतिबोधाचरणप्रचारणैर्दशाश्चतस्रः प्रणयन्नुपाधिभिः ।

चतुर्दशत्वं कृतवान् कुतः स्वयं न वेद्मि विद्यासु चतुर्दशस्वपि ॥

[நைஷதகாவ்யம், I-4]

இந்தப் பதினான்கு வித்தைகளிலே அறிவு அடங்கி இருக்கிறது. இன்னும் நான்கு வித்தைகள் இருக்கின்றன. அவைகளையும் சேர்த்துக்கொண்டால் பதினெட்டாகும். அந்த அஷ்டாதசவித்தைகளில் அடங்காதது ஒன்றுமேயில்லை. லோகத்திலுள்ள ஸகல வித்தைகளும் அவைகளுக்குள்ளே அடங்கிவிடும். நேராகத் தர்மத்தைச் சொல்லுவன முன்பு சொன்ன பதினான்காகும்.

தர்மத்துக்கு ஸ்தானம் இந்தப் பதினான்கு கிரந்தங்களும். வித்தியாஸ்தானம் என்றும் இவற்றைச் சொல்லுவார்கள். ஆத்மலோகத்தில் இன்பத்தை அடைவதற்கு ஏற்பட்ட ஸாதனங்கள் இவை.

இந்தப் பதினான்கிலும் பிரதானம் வேதம். அது நான்கு பிரிவுடைத்து; அதற்கு அங்கங்கள் ஆறு; மற்ற நான்கும் உபாங்கங்கள் என்று சொல்லுவார்கள்.

धर्मज्ञसमयः, प्रमाणं वेदाश्च ।

[ஆபஸ்தம்பதர்மஸூத்திரம்]

நேரான தர்மப்பிரமாணம் வேதம். ஸாங்கோபாங்கமாக வேதாத்தியயனம் செய்ததாகச் சொல்லும் வழக்கம் இருக்கிறதல்லவா? அங்கங்களோடும் உபாங்கங்களோடும் வேதங்களைத் தெரிந்து கொண்டான் என்பது அதன் அர்த்தம்; அதாவது இந்தப் பதினான்கையும் தெரிந்து கொண்டான் என்று அர்த்தம்.

ஆறு அங்கங்கள்: சிக்ஷை, வியாகரணம், சந்தஸ், நிருக்தம், ஜ்யோதிஷம், கல்பம் என்பவைகள்.

சிக்ஷை

சிக்ஷை என்பது வேதப்பிரதம அங்கம். சிக்ஷா என்று சொல்லுவார்கள். அது பல மஹரிஷிகளாற் செய்யப்பட்டிருக்கிறது. பாணினி என்பவர் ஒன்று பண்ணியிருக்கிறார். அது விசேஷமாகப் பிரசாரத்தில் இருந்துவருகிறது. பாணினீயம் என்னும் வியாகரணம் பண்ணினவரும் அவரே. வேதத்தின் சிக்ஷையை வேதமே சொல்லியிருக்கிறது.

अथ शीक्षां व्याख्यास्यामः । वर्णः स्वरः । मात्रा बलम् । साम सन्तानः । [தைத்திரீயோபநிஷத்]

வேதம் முழுவதும் மந்திரங்கள். மந்திரங்களில் எழுத்துக்கும் அதன் ஸ்வரத்துக்கும் அதிக யோக்கியதை உண்டு. அர்த்தத்தைவிட எழுத்துத்தான் விசேஷம். தேள் கொட்டு மந்திரம் இருக்கிறது. அதற்கு அர்த்தம் சொல்லக்கூடாது. அதில் அந்த எழுத்துக்குத்தான் யோக்கியதை உண்டு. சில வகையான சப்தங்களுக்குச் சில சக்தி உண்டு. திவஸ மந்திரங்களை ஸம்ஸ்கிருதத்திலே ஏன் சொல்லவேண்டும்? இங்கிலீஷிலாவது தமிழிலாவது சொன்னால் என்ன? அப்பொழுது சப்தம் வேறாய் விடுகிறது. அந்தச் சப்தந்தான் பிரதானம். பில்லி சூனியம் வைக்கிறவர்களுடைய பல்லைத் தட்டிவிட்டால் அவர்கள் செய்கிறது பலிக்காது. ஏனென்றால் பல் போனபின்பு உச்சாரணத்தில் தப்பு ஏற்படும். உச்சாரணம் இல்லாவிட்டால் அது பலிக்காது. உச்சாரணம் வேதத்துக்குப் பிரதானம். அது ஸரியாக இருக்க என்ன செய்வது? அதன் லக்ஷணத்தைச் சொல்லுவது தான் சிக்ஷை என்பது.

ஒரே விதமான மந்திரங்களை ஒவ்வொரு தேசத்தார் ஒவ்வொரு விதமாக உச்சரிக்கிறார்கள். வங்காளத்தில் ஒரு விதம்; மஹாராஷ்டிரத்தில் ஒரு விதம்; அப்புறம் தெலுங்கு தேசத்தில் ஒரு விதம்; தமிழ்த் தேசத்தில் ஒரு விதம். இப்படி இருந்தால் யாருடையது ஸரி என்று சண்டை உண்டாகும் அல்லவா.

உத்தர தேசத்தில் பகாரத்துக்கு வகாரமும், யகாரத்துக்கு ஜகாரமும் உபயோகப்படுத்துகிறார்கள். வங்கவாஸி என்பதை (ப)ங்க(ப)ாஸி (பங்கபாஸி) என்று சொல்லுவார்கள். இப்படிச் சொல்லுவது பிழை என்பதை அவர்களே அறிந்து கொண்டார்கள். வங்காள தேசத்தில் இந்தத் தப்பைத் திருத்த ஒரு பரிஷத் ஏற்படுத்தினார்கள். வங்க பரிஷத் என்பது அதன் பெயர். இனிமேல் பதிப்பிக்கும் புஸ்தகங்களிலெல்லாம் பகாரம் உள்ள இடங்களிலெல்லாம் வகாரமாகத் திருத்தவேண்டுமென்று நினைத்து அப்படியே செய்து வந்தார்கள். அப்படிச் செய்ததில் ஸ்வபாவமாக பகாரம் இருக்க வேண்டிய இடத்திலும் வகாரமாக மாற்றிவிட்டார்கள். பந்து வென்பதைக்கூட 'வந்து' வென்று திருத்தி விட்டார்கள்.

அவர்கள் வகாரத்தை பகாரமாக மாற்றி உச்சரிப்பதற்குக் காரணம் என்ன? பிராதிசாக்கியத்தில் இப்படிச் சொல்லவேண்டும் என்று இருக்கிறது. அந்த விதியை எல்லாவற்றிற்கும் உபயோகப்படுத்திக் கொண்டார்கள். இதனால் வேதத்தில் சொன்ன விதிகள் இந்தத் தேசம் முழுவதும் ஒரு காலத்தில் சிரத்தையாக அநுஷ்டிக்கப்பட்டு வந்ததென்று தெரிகிறது.

சிக்ஷை என்பது எழுத்துக்களின் உச்சாரணம், மாத்திரை முதலியவற்றை வரையறுப்பது. பலம், ஸமம்,

ஸந்தானம் முதலியவற்றைச் சொல்லும். எழுத்துக்களின் உற்பத்தியைப்பற்றிச் சொல்லும். இன்ன இன்ன எழுத்துக்கள் இன்ன இன்ன இடத்தில் பிறப்பவை; இன்ன இன்ன முயற்சியால் உண்டாகின்றவை யென்று சொல்லப்பட்டிருக்கிறது. உதடுகளைச் சேர்த்தால் இன்ன எழுத்து உண்டாகின்றது என்பது போன்ற பல விஷயங்கள் சொல்லப்படுகின்றன. அவற்றால் உச்சாரணம் இதுதான் என்று நிச்சயமாகிறது. ஒருவர் நிரோஷ்ட ராமாயணம் என்று ஒன்று செய்து இருக்கிறார். எச்சப்படாமற் பாராயணம் பண்ணுவதற்கு உபயோகப்படுமென்று நினைத்தார் போலிருக்கிறது.

मन्त्रो हीनः स्वरतो वर्णतो वा मिथ्याप्रयुक्तो न तमर्थमाह ।

स वाग्वज्रो यजमानं हिनस्ति यथेन्द्रशत्रुः स्वरतोऽपराधात् ॥

எழுத்துக்களின் ஸ்வரம் தவறினால் விபரீதமான பலன் உண்டாகும். துவஷ்டா என்று ஒருவர் விருத்திரனை உண்டு பண்ணுவதற்காக ஹோமம் பண்ணினார். ஒரு ஸ்வரம் தவறிப் போய்விட்டது. அதனால் அவருக்குத் துன்பம் உண்டாயிற்று. நாம் ஸந்தியாவந்தனத்தை ஸ்வரம் தப்பிச் செய்து வருகிறோம். அதற்குத் தகுந்தபடிதான் பலனும் இருக்கிறது.

இன்ன எழுத்துக்கு இன்ன ஸ்வரமென்பது வேதத்தின் பிரதமாங்கமாகிய சிக்ஷையில் சொல்லப்பட்டிருக்கிறது. ஸம்ஸ்கிருதத்தில் 51 அக்ஷரங்கள் இருக்கின்றன. மாத்ருகா என்று அவற்றிற்குப் பெயர். இந்த அக்ஷரங்கள் அம்பாள் ஸ்வரூபம். இன்ன இன்ன அங்கம் இன்ன இன்ன அக்ஷரம் என்று கூறப்பட்டிருக்கிறது. ஆத்ம க்ஷேமத்துக்கு உபயோகமாகின்றனவைகள் இந்த ஐம்பத்-

தோர் அக்ஷரங்கள்தாம். லோகத்தில் பல விதமான சப்தங்கள் இருந்தாலும் சிரேயஸுக்கு ஸாதனமாக உள்ள அக்ஷரங்களைப் பொறுக்கிச் சேர்த்து வேதமாக்கி வைத்திருக்கிறார்கள்.

சிக்ஷை வேத புருஷனுக்கு நாஸிகையாகும். அதாவது பிராணஸ்தானம். இப்படியே ஒவ்வோரங்கமும் வேதபுருஷனுக்கு ஒவ்வோரங்கமாகும்.

---

GOVERNMENT ORIENTAL MSS. LIBRARY
04 JAN 1953
TRIPLICANE P.O. MADRAS

# 2. மனுஷ்ய தர்மம்

[9—10—1932]

உலகத்திலுள்ள ஜீவர்கள் பிராணிகளெனப்படும். பிராணனுடையவை பிராணிகள். பிராணன் என்பது உயிர். ஆகவே உயிருள்ளன எல்லாம் பிராணிகளென்று சொல்லப்படும். உயிருள்ள பிராணிகள் எல்லாம் எப்பொழுதும் காரியங்களைச் செய்துகொண்டே இருக்கின்றன. ஒவ்வொரு பிராணியும் ஸதா ஏதாவது ஒரு காரியத்தைச் செய்துகொண்டே இருக்கிறது. எறும்பு ஸதா ஊர்ந்துகொண்டே இருக்கிறது. நத்தை ஏதாவது செய்துகொண்டே இருக்கிறது. பறவை பறந்துகொண்டோ, உணவு தின்றுகொண்டோ இருக்கிறது. மனிதன் ஆபீஸுக்குப் போய் வேலை செய்கிறான். இல்லையென்றால் உழுது பயிரிடுகிறான். இவற்றைப் போல வேறு பல காரியங்களைச் செய்துகொண்டேயிருக்கிறான். ஒருவனாவது காரியம் செய்யாமல் இருப்பதே இல்லை. இந்த விஷயத்தையே பகவான் கீதையிற் சொல்லியிருக்கிறார் :—

'न हि कश्चित् क्षणमपि जातु तिष्ठत्यकर्मकृत् ।'

[கீதை, III-5]

ஒரு மனிதன்கூட ஒரு ஸமயத்திலாவது ஒரு காரியத்தையாவது செய்யாமல் இருப்பதில்லை என்பதே இதன் கருத்து.

இப்படி மனிதன் சதா காரியங்களைச் செய்துகொண்டே இருப்பதை ப்ரபஞ்சத்தில் நாம் பார்த்து வருகிறோம். சிறிய ஊரிலுள்ளவனுக்குக் கொஞ்சந்தான்

காரியங்கள் இருக்கின்றன. பெரிய ஊரில் உள்ளவனுக்குக் கணக்கில்லாத காரியங்கள் இருக்கின்றன. ஏன் இவ்வாறு எல்லாரும் காரியங்களைச் செய்துகொண்டே இருக்கவேண்டும்?

நாம் ஏதாவது ஒரு காரியத்தைச் செய்துகொண்டே இருந்தால்தான் கஷ்டப்படாமல் இருக்கலாம். கஷ்டப்படாமல் இருப்பதை உத்தேசித்துப் பல காரியங்களைச் செய்யவேண்டும். ஸுகத்தை அடைவதற்கும் பல காரியங்களைச் செய்யவேண்டும். காரியங்கள் செய்யாமல் சும்மா இருப்பதைப்போன்ற கஷ்டம் வேறு இல்லை. இப்படிக் காரியஞ் செய்வதற்காக நம்முள்ளே ஒன்று நம்மைத் தூண்டிவருகிறது. யாரோ ஒருவர் பசியென்று ஒன்றை எல்லாருக்கும் வைத்துவிட்டார். அந்தப் பசி மனிதனை, "காரியஞ் செய்," "காரியஞ் செய்" என்று தூண்டிக் கொண்டே இருக்கிறது. காரியஞ் செய்யாமல் இருந்துவிட்டால் வயிறு பக்பக்கென்று பசிக்கிறது. அந்தப் பசியாகிய வியாதிக்கு மருந்து தேடி நாம் காரியங்களைச் செய்யவேண்டியிருக்கிறது. தலைவலி நமக்கு வந்தால் உடனே மருந்துபோட்டால் போய்விடுகிறது. அப்புறம் எப்பொழுதாவது பல நாள் கழித்து வருகிறது. இந்தப் பசி என்கிற வியாதியானது அப்படியல்ல. மருந்து போட்டால் அப்புறம் பல நாள் வராமல் இருக்கும் மற்ற வியாதிகளுக்கும் இந்த வியாதிக்கும் நிரம்ப வித்யாஸம் உண்டு. இந்த வியாதிக்கு வேளைதோறும் மருந்து கொடுத்துக்கொண்டே இருக்க வேண்டும். இந்த வியாதிக்கு மருந்து தேடித்தான் ஒவ்வொருவரும் காரியம் செய்ய வேண்டும். புலி மானை அடிப்பதும் மாட்டை அடிப்பதும் இந்த வியாதியைத்

தீர்த்துக்கொள்வதற்காகவே. மனிதன் பலவகை வேஷங்களைப் போட்டுக் கெட்டிக்காரத்தனமெல்லாம் பண்ணி ஸம்பாத்யம் செய்வதும் இதற்காகவே. பசியாயிருந்தால் அரிசி தேடிச் சாதம் சமைத்துச் சாப்பிடுகிறான். அரிசிக்காகக் காரியம் செய்கிறான். உடம்பை வைத்திருக்க வேண்டுமானால் காரியம் செய்துகொண்டிருப்பதும் அவசியம். க்ஷணநேரமாவது காரியம் செய்யாமல் இருக்க முடியாது.

வேலை செய்யாமலே இருந்தால் இந்த உடம்பு ப்ரயோஜனப்படாமற் போய்விடும். பணக்காரனயிற்றே வேலை ஏன் செய்யவேண்டும் என்பது இல்லை. அவனுக்குத்தான் அதிகக் காரியங்கள் இருக்கின்றன. பணம் கொடுத்த இடத்தில் அது ஜாக்ரதையாக இருக்க வேண்டுமென்று அவனுக்கு ஸதா கவலை. ஆகையால் அதற்கு வேண்டிய காரியங்களை இடை விடாமல் செய்துகொண்டே இருக்கிறான். ஓர் உஞ்சவிருத்தி ப்ராம்மணனைக் காட்டிலும் பத்துலக்ஷம் ரூபாய் ஸொத்துடையவனுக்கு அதிக வேலை. அவன் செய்துகொண்டு இருக்கிற வேலைக்கு முடிவே இல்லை.

இப்படி மனிதன் செய்யும் வேலைகள் பலவகையாக இருக்கின்றன. தன் உடம்புக்காக அவன் செய்யும் வேலைகள் ஒரு வகை, தன்னைச் சேர்ந்தவர்களுக்காகச் செய்யும் காரியங்கள் மற்றொருவகை. குழந்தை, பெண்டாட்டி, தகப்பனர், தாயார் முதலிய சிலபேர்கள் அவனிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்களுக்காகச் செய்ய வேண்டிய சில வேலைகள் உண்டு. அவற்றிற்குப் பின், அவனுடைய ஸொந்த மாடு, ஸொந்த நாய்-கொஞ்சம் அபிமானம் அதிகமானல்-ஒரு பூனை, அவனுடைய

வேலைகளைப் பார்க்கும் குடியானவன், வேலைக்காரன் முதலியவர்களைப் போன்றவர்களுக்காகச் சில வேலைகள். இவற்றிற்கப்புறம் க்ராமஸமுதாய ஸம்பந்தமான வேலைகள் இருக்கின்றன. வீட்டைச் சுத்தமாக மெழுகி நன்றாக வைத்துக்கொள்வது வீட்டிலுள்ளவர்கள் பொறுப்பு. அதுபோல ஒரு க்ராமத்தை நன்றாக வைத்துக்கொள்வது அந்த க்ராமத்திலுள்ளவர்கள் பொறுப்பு. பத்துப்பேர் சேர்ந்தது ஒரு குடும்பம்; ஆயிரம் பேர் சேர்ந்தது ஒரு க்ராமம். குடும்பக் காரியங்கள் எப்படி மனிதனுக்கு அவசியமோ அப்படியே க்ராமஸமுதாய காரியங்களும் அவசியம். அப்புறம் தேச ஸமுதாயத்திற்காகச் செய்யும் காரியங்கள் பல.

இப்படிப் பிரிக்கப்பட்ட காரியங்களில் பல் தேய்த்தல், வேஷ்டி தோய்த்தல், ஸ்நானம் செய்தல், சாப்பிடுதல் முதலியவற்றைப் போன்ற காரியங்கள் தன் ஸொந்தப் ப்ரயோஜனத்தைக் குறித்துச் செய்யப்படுபவை. வீடு கட்டுதல், மெழுகுதல், வீட்டுக்கு வேண்டிய உபகரணங்களை ஸம்பாதித்தல் முதலியவை வீட்டிற்காகச் செய்யப்படுபவை; அதாவது தன்னைச் சேர்ந்தவர்களுக்காகச் செய்யப்படுபவை. வாய்க்கால் வெட்டுதல், ஏரியைச் செப்பனிடுதல், கிராமத்தில் ஆஸ்பத்திரி கட்டுதல், வியாதியைப் போக்கத்தக்க ஏற்பாடுகள் செய்தல் என்பவற்றைப்போன்றவை கிராம ஸமுதாய ஸம்பந்தமான காரியங்கள். தேச ஸமுதாயமான காரியங்கள் இந்தக் காலத்தில் எல்லோருக்கும் நன்றாகத் தெரியும்.

நாம் செய்யும் காரியங்களில் நம் வயிற்றுக்கு மாத்திரம் சாப்பாடு போடும் வகையையன்றி மற்றவர்களையும் ஸம்ரக்ஷிக்கும் காரியங்களும் உண்டு. சக்தி உள்ளவர்கள்

அசக்தர்களைக் காப்பாற்றுவது உலகத்தில் இயற்கை. அசக்தர்கள் சக்தியுள்ள வேறொருவர் கையில் ஒப்புவிக்கப்பட்டிருக்கிறார்கள். குழந்தையைச் சக்தியுள்ள மனிதன் போஷித்து வருகிறான். அவன் கிழவனாகி அசக்தனாகும்பொழுது பெரியவனாகிய அந்தக் குழந்தையால் போஷிக்கப்படுகிறான். இப்படி மாறிமாறி வருவதே உலகத்தில் இயற்கையாக இருக்கிறது. இந்த ஸ்வபாவம் மனிதனிடத்தில் மட்டுமல்ல; பக்ஷி முதலிய எல்லா ப்ராணிகளிடத்திலும் காணப்படுகின்றது. பக்ஷிகளும் மிருகங்களும் குஞ்சுகளையும் குட்டிகளையும் ஸம்ரக்ஷித்துக் கொள்கின்றன. புழு, பூனை, குரங்கு முதலிய எல்லா வகைச் சிறிய பிராணிகளிடத்திலும் இந்த ஸ்வபாவம் காணப்படுகிறது.

உலகம் முழுவதிலும் காரியங்கள் நடந்துகொண்டே இருக்கின்றன. பலவகையான காரியங்களை மனிதன் செய்கிறான்; ஒவ்வொன்றிலும் ஈடுபடுகிறான்; பணம் ஸம்பாதிக்கிறான்; கூட்டுறவு (Co-operation) தேடுகிறான்; வாய்க்கால் வெட்டுகிறான்; தேஹ ஆரோக்ய சாலைகளை அமைக்கிறான்; ராஜாங்கத்தைக் கவனிக்கிறான்; ஜனக் கஷ்டத்தைப் போக்க வழி தேடுகிறான். ஸ்வயநல பரித்யாகம் செய்து இப்படிப் பொதுவான காரியங்களோடே தனக்கு வேண்டிய காரியங்களையும் பார்த்துக்கொள்கிறான். வயலுக்குப் போகிறான்; ஆபீஸில் வேலை செய்கிறான். இப்படிப் பணம் ஸம்பாதிப்பதற்காகப் பல காரியங்கள் செய்கிறான்.

மனிதனுக்கு அவசியமாக வேண்டி இருப்பவை மூன்றுவகைப் பொருள்களே. பசியைப் போக்கிக் கொள்ள ஆகாரம் வேண்டும். பின்பு, வெயில், குளிர்

இவைகளைத் தடுத்துக் கொள்வதற்கும் மானம் காப்பதற்கும் வஸ்த்ரம் வேண்டும். களைப்புத் தீர இருப்பதற்கு ஓர்-ஆவரணம்-இடம் வேண்டும். இந்த மூன்றும் மற்ற எல்லாப் பொருள்களையும் விட மிகவும் அவச்யமானவைகள். இந்த அவசியமான பொருள்களுக்குமேல் அவன் சேகரிக்கும் பொருள்கள் குழந்தைகள் ரக்ஷணத்திற்கும் அவர்களுடைய விவாஹம் முதலியவற்றிற்கும் உபயோகமாக இருக்கின்றன.

மனிதனுக்கு வேண்டிய அவசியமான பொருள்களைப் பெறுவதற்கு அவன் செய்யும் காரியங்களைத் தவிர வேறு சில காரியங்களைச் செய்யவேண்டியிருக்கிறது. தினமும் ஆஹாரத்தை ஸம்பாதித்துக் கொள்வதும், வீடு இடிந்து விட்டால் அதைக் கட்டிக்கொள்வதும், வஸ்த்ரம் கிழிந்தால் தைத்துக்கொள்வதும் அவனுக்கு அவசியமானவை. ஆனால் தன்பால் ஒப்படைக்கப்பட்ட வேறு சில ஆத்மாக்களுடைய அவசியப் பொருள்களையும் அவன் ஸம்பாதித்துத் தருகின்றான். அந்த நித்ய வியாதியாகிய பசிக்கு ஆஹாரம் ஸம்பாதித்துத் தானும் உண்டு பிறருக்கும் தருகிறான். பசியை வியாதியாகவும் சாப்பாட்டை மருந்தாகவும் சொல்வதில் ஒரு விசேஷம் இருக்கிறது.

'क्षुद्व्याधिश्च चिकित्स्यतां प्रतिदिनं भिक्षौषधं भुज्यतां
स्वाद्वन्नं न तु याच्यतां विधिवशात्प्राप्तेन संतुष्यताम् ।
शीतोष्णादि विषह्यतां न तु वृथा वाक्यं समुच्चार्यताम्
औदासीन्यमभीप्स्यतां जनकृपानैष्ठुर्यमुत्सृज्यताम् ॥

[ஸாதனபஞ்சகம், 4-வது ச்லோகம்]

பசியென்னும் வியாதிக்கு வைத்யம் பண்ணிக்கொள் என்று ஆசாரியாள் இந்த ச்லோகத்தில் கட்டளையிடு கிறார்கள். வியாதி நிவர்த்திக்கு எவ்வளவு மருந்து அவசியமோ அவ்வளவுதான் வியாதியுடையவன் சாப்பிடு வான். நாக்குக்கு ருசியான மருந்தைத் தேடிச் சாப்பிட் டுக்கொண்டே இருக்கமாட்டான். தவிர அதிக விலை கொடுக்காமல் குறைந்த விலையுள்ள மருந்து கிடைக்கு மானால் அதையே வாங்கிச் சாப்பிடுவான். அதைப் போல, பசிக்கு எவ்வளவு அவசியமோ அவ்வளவே சாப் பிடவேண்டும். ஸாதாரணமான சாப்பாடு இருந்தாலும் போதும் என்பதே முன் சொல்லிய ச்லோகத்தின் உட் கருத்து.

இப்படி மனிதன் தனக்காகச் செய்துகொள்ளவேண் டிய பல காரியங்களையும் தன்னைச் சேர்ந்தவர்களுக்காகச் செய்யவேண்டிய பல காரியங்களையும் தவிர வேறு சில விசித்ரமான காரியங்களைச் செய்து வருகிறான். அந்த அதிகப்படியான வேலைகளிற் சிலவற்றைச் சொல்லு கிறேன். ஒருவன் சிலுவை என்று ஒன்றை வைத்துக் கொள்கிறான். சர்ச் (church) என்ற ஓர் இடத்தைக் கட்டிக் கொள்கிறான். அங்கே இவனுடைய பசியைப் போக்கக்கூடிய பதார்த்தம் ஒன்றும் கிடையாது. மற் றொருவன் ருத்ராக்ஷம் அணிந்துகொண்டு நிறைய விபூதியைப் பூசிக்கொள்கிறான். அவற்றால் அவனுக்குப் பசி நீங்குமா? வஸ்த்ரத்திற்கு ஏதாவது ப்ரயோஜனம் உண்டா? வேறொருவன் நாமக் கட்டியைக் குழைத்து இட்டுக்கொண்டு திருச்சூர்ணத்தையும் இட்டுக்கொள் கிறான். முன்பு சொன்ன அவசியமான காரியங்களில் இவை சேரா. இவற்றால் வயிற்றுக்குப் ப்ரயோஜன

P.O. MADRAS

மில்லை; வஸ்த்ரத்திற்கும் ப்ரயோஜனமில்லை; வீட்டிற்கும் ப்ரயோஜனமில்லை; சேர்ந்தவர்களுக்கும் கொஞ்சம் கூடப் ப்ரயோஜனமில்லை. இவை அதிகப்படியான காரியங்கள். ஏதோ ஒரு பஞ்சபாத்ரத்தையும் உத்தரணியையும் எடுத்துக்கொண்டு ஒருவன் லொடலொட என்று சப்தம் பண்ணி ஏதோ செய்கிறான், ச்ராத்தம் என்று ஒன்று செய்கிறான். ப்ராம்மணர்களைக் கூட்டி வைத்துச் சாப்பாடு போடுகிறான். இவற்றால் அவனுடைய பசி நீங்குமா? வயலுக்கு மழைவருமா? ஒன்றுமில்லை. மலைகளிலிருந்து கல்லை எடுத்துவந்து கோவில் கட்டுகிறான். அது இவனுக்குத் தங்குவதற்குப் ப்ரயோஜனப் படுவதில்லை. ராத்ரியில் பூட்டி விடுகிறார்கள். மழையில் ஒண்டுவதற்குக்கூட இடமில்லை. இதனால் என்ன ப்ரயோஜனம்?

இன்னும் சில பேர்கள் மதம் மதம் என்று சொல்லிக்கொண்டு என்ன என்ன கார்யங்களோ செய்கிறார்கள். சில பேர் மதத்திற்காகச் சண்டை போட்டுக்கொள்கிறார்கள். மண்டையை உடைத்துக்கொள்கிறார்கள். இந்தக் காரியங்களெல்லாம் மனிதனுக்கு அவசியமல்லாத அதிகப்படியான காரியங்களாகத் தோன்றுகின்றனவல்லவா?

விபூதி பூசுதல், ருத்ராக்ஷம் அணிதல், கோவில் கட்டுதல், ச்ராத்தம் செய்தல், பிராமண ஸந்தர்ப்பணம் செய்தல் இவையெல்லாம் மனிதனுக்கு அதிகப்படியான கார்யங்கள் என்று சொல்லலாமல்லவா? இப்படிச் செய்யும் அதிகப்படியான காரியங்களால் என்ன ப்ரயோஜனம்? போதாக் குறைக்குச் சில வருஷங்களாக இந்த ஊரில் பஜனை என்று ஒன்று ஆரம்பிக்கப்பட்டிருக்

கிறது. தொண்டை வற்றிப்போகிற வேலை. அந்த வேலைக்கும் ஆபீஸ் வேலைக்கும் ஸம்பந்தமே கிடையாது. அநாவசியமாக அந்த வேலை நடந்துகொண்டே வருகிறது. இவ்வளவு காரியங்களும் அநாவசியமாகவே தோன்று கின்றன அல்லவா?

இவை அநாவசியந்தானா? ஏன் இவற்றைச் செய்ய வேண்டும்? இவற்றால் வரும் பிரயோஜனமென்ன? என் பவற்றை இனி ஆலோசித்துப் பார்க்கலாம்.

மனிதன் ரூபாய் ஸம்பாதிப்பானேன்? தினந்தோறும் பசியை ஆற்றிக் கொண்டாலே போதுமே. எங்கேயாவது போய்ச் சாதம் கேட்டால் போடுகிறார்கள்; சத்திரங் களிலும் சாப்பிடலாம். சாப்பாடு கிடைக்கிறதே, சம்பளம் எதற்கு என்று ஒருவன் நினைப்பதில்லை. ஒருவர் சாதமும் ஒரு படி அரிசியும் பத்து ரூபாய் பணமும் தனித் தனியே வைத்து இவைகளுக்குள் ஏதாவது ஒன்றை எடுத்துக் கொள் என்று சொன்னால் பணத்தைத் தான் ஒருவன் எடுத்துக்கொள்வான். ஏன்? சாதம்தானே வேண்டும்? பணம் எதற்காக? சாதம் ஒரு வேளைக்குத்தான் ப்ரயோ ஜனப்படும். அரிசி இரண்டு வேளைக்குத்தான் உதவும். பணம் பத்து வேளைக்கு உதவும். அதிக நாளைக்கு ப்ர யோஜனமாகக் கூடிய பொருளைத்தான் அவன் அதிக மாக விரும்புகிறான்.

பள்ளிக்கூடம் போகிற பையனுக்குத் தாயார் சாதம் கட்டித் தருகிறாள். கொஞ்சம் தூரமான ஊருக்குப் போனால் அரிசி முதலிய ஸாமான்களைக் கட்டிக் கொண்டு போகிறோம்.

முன்காலத்தில் ரயில் கிடையாது. நினைத்த மாத் திரத்தில் போய்விட்டு வர வேண்டிய ஸௌகரியங்கள்

இல்லை. ஆனால் இந்த ஸௌகரியங்களால் நமக்கு நஷ்டந் தான் அதிகமாக ஏற்படுகிறது. ரயில்சார்ஜ், சாப்பாட்டு ஹோட்டல் செலவு, பஸ், காப்பி முதலிய செலவுகள் உண்டு ; இவற்றையல்லாமல் பெரிய ஊருக்குப் போனால் புது ஸாமான்கள் வாங்குவதில் செலவு. இவ்வளவு செலவும் இந்தக் காலத்தில் உண்டாகின்றன. பழைய காலத்தில் எவ்வளவு நாள் வெளியூரிற் பிரயாணம் செய்கிறோமோ அவ்வளவு நாள் அகத்துச் சாப்பாடு லாபம். நடப்பதால் காலுக்குப் பலம்.

இப்படிச் சிறிய செலவில் தந்திரமாகக் காலங்கழிக்கும் பழைய காலத்து மனிதர்களில் ஒருவரைப் பற்றி இங்கே ஞாபகம் வருகிறது. பாலக் காட்டுக் கருகில் உள்ள சித்தூரென்னும் ஊரில் கிருஷ்ணையர் என்ற ஒருவர் இருந்தார். அவர் ஒரு பெரிய பாங்கி வைத்தார். அந்த பாங்கி வட்டி வருமானத்தினால் 70 பிள்ளைகளுக்கு மேல் வேத சாஸ்திரங்களைக் கற்றுக் கொடுக்க ஒரு பாடசாலை வைத்தார். அந்தக் காலத்தில் அங்கே படித்தவர்கள் பின்பு வி. கிருஷ்ணஸ்வாமி ஐயர் வைத்த இந்த ஸம்ஸ்க்ருத காலேஜில் வந்து படிப்பது வழக்கம். இப்படிப் பாடசாலை வைத்தவர்களுள் மற்றொருவராகிய முத்துகனபாடிகளென்பவர் திருவையாற்றில் இருந்தார். அவர் நூறு நூற்றிருபது பிள்ளைகள் வரையிலும் வேதாத்யயனம் செய்யும்படி ஏற்பாடு செய்தார். எங்கேயாவது அவர்களுக்குச் சாப்பாட்டுக்குத் தக்க வஸதிகளை செய்து கொடுத்தார். வேலையிற் பிசகினவர்களுக்கு அபராதம் போட்டு அதை வட்டிக்கு விட்டு அந்தத் தொகையையே மூலதனமாக வைத்தார். தாமே சொல்லிக்கொடுத்தார். ஒரு நாள் ஓர் உத்யோகஸ்தர்

அந்தப் பாடசாலைக்கு வந்தார். அவர் அங்கேயுள்ள பிள்ளைகளைப் பார்த்துவிட்டு, "ஐயையோ, அநியாயமாக இவர்களையெல்லாம் குட்டிச் சுவராக்குகின்றீர்களே! ஆட்டு மந்தையைப் போலப் பத்து வருஷங்கள் அடைத்துவைத்து என்ன ப்ரயோஜனம்? இவர்களுடைய ஜீவனத்துக்கு ஒரு வழியும் செய்யவில்லையே. இங்கிலீஷ் படித்திருந்தால் நல்ல நிலைக்கு வந்திருக்கலாமே!" என்று சொன்னாராம். அப்பொழுது பக்கத்திலிருந்த ஒருவர், "இவர்களை இங்கிலீஷ் படிக்க அனுப்பாமல் இங்கே மந்தைபோல அடைத்து வைப்பதனால் பாதிச் செலவு லாபமாகிறது. இங்கிலீஷில் போயிருந்தால் உடுப்பு, கிராப், ஸைக்கிள் முதலியவற்றிற்காக இவர்கள் செலவழிப்பது இப்பொழுது லாபம்தானே? அந்தச் செலவு அவர்கள் ஸம்பாதிப்பதில் பாதியை இழுத்து விடும். அந்தச் செலவு இல்லாமையால் இவர்களுக்கு அந்தப் பாதி ஸம்பாத்தியம் இருக்கிறமாதிரிதான். மிச்சம் பாதி ஸம்பாதிக்க நாங்கள் சொல்லிக் கொடுத்திருக்கிறோம். இங்கே இவர்கள் வித்தை கற்றுக் கொள்ளாமற் போனாலும் இங்கிலீஷ் பக்கம் திரும்பாமல் இருப்பதனாலே லாபம் உண்டு" என்றாராம். இவற்றால் அந்தக் காலத்தில் சுருக்கமாகச் செலவழித்துக் கொண்டு பெருக வாழ்ந்தவர்கள் இருந்தார்களென்பது தெரியவருகிறது.

அந்தக் காலத்திற்கூட 50 மைல் தூரம் உள்ள ஓரிடத்திற்குப் போக அரிசி கட்டிக்கொண்டு போனார்கள். ப்ரயாண தூரம் அதிகப்பட அதிகப்பட நாம் சேகரித்து வைத்துக் கொள்ளவேண்டிய பொருள்களும் அதிகப்படுகின்றன.

ஒரு நாள் சாப்பிட்டால் போதுமே; மறுநாள் சாப்பாட்டிற்கு இப்பொழுதே என்ன கவலை என்றிருப்பதில்லை. மறுநாள் அஸௌக்கியம் வந்துவிட்டால் கஷ்டப்படவேண்டுமே. யென்று நாளைக்கும் சேர்த்து இன்றைக்கே சேகரித்துக் கொள்கிறோம். மறு நாள் ஸௌக்கியத்தைக் கவனிக்காவிட்டால் பணம் நமக்கு வேண்டாம். இந்த மடத்தில் முதலில் சிப்பந்திகளுக்குச் சாதமாகக் கொடுத்துப் பார்த்தோம். அதனால் அவர்களுக்கு அவ்வளவு த்ருப்தி ஏற்படவில்லை. அரிசியாகக் கொடுத்தால் நல்லதென்று அவர்கள் எண்ணினார்கள். வேண்டிய அளவு உபயோகப்படுத்திக்கொண்டு மிச்சத்தை விற்றுக்கொள்ளலாமல்லவா? இப்பொழுது அரிசியாகத்தான் கொடுத்து வருகிறோம். அசடாயிருப்பவன்தான் கொஞ்ச நாளுக்குப் போதுமானவற்றைப் பெற்றுக்கொள்வான். புத்திசாலி பல நாளுக்கு உபயோகப்படக்கூடியவற்றைப் பெறுவான்.

இப்படி முன்னாடியே பிற்காலத்துக்கு வேண்டியவற்றைச் சேகரித்து வைக்கிறதில் பின்பு எவ்வளவு நாள் ஸௌக்யமாக இருக்கவேண்டுமென்று எண்ணுகிறோம்? ஒரு நாளா? ஒரு மாதமா? ஒரு வருஷமா? எவ்வளவு சேர்த்து வைக்கிறோம்? ஆயிரமா? பதினாயிரமா? இன்னும் எவ்வளவு இருந்தாலும் நம் ஸௌக்யத்துக்கு அநுகூலமே. எவ்வளவு நாள் ஸௌக்யமாக வாழவேண்டுமென்பது எல்லோருக்கும் தெரியாது. பரமேச்வரன் எழுதிவைத்திருக்கும் நாள்தான் அதற்கு எல்லை. ஆனால் நாம் எப்பொழுதும் ஸௌக்யமாகவே இருக்க விரும்புகிறோம்.

முன் சொன்ன எல்லைக்குப் பின்பும், எப்பொழுதும் ஸௌக்யமாயிருக்க இந்தப் பணம் முதலிய உபகரணங்கள்

போதுமா? இவை உடம்பு உள்ளவரைக்குந் தான் உதவும் அப்புறம் இவற்ருல் ப்ரயோஜனமில்லை. நாம் செய்யும் காரியங்களெல்லாம் பிற்காலத்தில் ஸௌக்ய மாக இருப்பதற்காகச் செய்கிரும். எப்போதும் ஸௌக்ய மாக இருப்பதற்குத் தக்க காரியங்களை நாம் செய்ய வேண்டும். இப்பொழுது செய்து கொண்டுவரும் காரியங்கள் செய்ய வேண்டியவைதாம். அதோடு எப்பொழுதும் கஷ்டமில்லாமல் இருக்க ஒரு காரியம் செய்யவேண்டும். நாம் எப்பொழுதும் சாவதில்லை. உடம்பு தான் சாகிறது. ஆகையால் எப்பொழுதும் ஸௌக்யமாக இருக்க ஒரு காரியத்தை இப்பொழுதே செய்யவேண்டும். செத்த பின்பு கரசரணுதிகள் இல்லை. பிற்காலத்துக்காக இப்பொழுதே இன்ஷ்யூர் செய்வதைப்போல இப்பொழுதே இந்தக் காரியங்களைச் செய்யவேண்டும்.

ஒரு மலையடிவாரத்தில் நாம் இருக்கிரும். நம்மு டைய கையில் ஆயிர ரூபாய் பணம் இருக்கிறது. அவ் வளவும் அரையணுக் காசாக இருக்கிறது. அப்பொழுது திருடர்கள் வருகிருர்கள். பலமான கலகம் நடக்கும் போல் இருக்கிறது. மலைமேல் ஏறி அப்புறம் போய்விட் டால் நமக்குப் பயமே இல்லை. அப்பொழுது ஒருவன் வந்து இந்த ஆயிர ரூபாய்க்கும் நோட்டு வேண்டுமா என்று கேட்கிருன். நாம் என்ன செய்வோம்? உடனே அவனிடம் சில்லறை மூட்டையைத் தள்ளிவிட்டு ஆயிர ரூபாய் நோட்டை வாங்கிக்கொண்டு துள்ளிக் குதித்து மலைமேலேறி ஓடிப்போய்விடுவோம். ஆனுல் அந்த நோட்டு மலைக்கு அப்புறம் உள்ள தேசத்தில் செல்லும் நோட்டாக இருக்கவேண்டும். அதைப் போலத்தான் இப்பொழுது நம்முடைய கதையும் இருக்கிறது. நமக்கு

உள்ள சக்தியைக்கொண்டு பிற்காலத்துக்கு உபயோகமான காரியங்களைச் செய்துகொண்டால் நமக்குக் கஷ்டமே இராது.

இங்கே தான் ஸௌக்யமாக இருக்கவேண்டும். அப்புறம் நாம் இருப்பதென்ன நிச்சயம்? என்று ஒருவர் கேட்கலாம். இருந்துவிட்டால் அப்புறம் அழுவதா?

"नास्ति चेन्नास्ति नो हानिः अस्ति चेन्नास्तिको हतः ।"

இந்த ச்லோகத்தில் இந்த ஸமாசாரம் சொல்லப்பட்டிருக்கிறது. இந்தப் பிறப்புக்கு அப்புறமும் நாம் இருக்கிறோம்; அதனால் இப்பொழுதே நல்ல காரியங்கள் செய்யவேண்டுமென்று ஆஸ்திகன் சொல்கிறான். அப்புறம் இருப்பது என்ன நிச்சயம் என்று நாஸ்திகன் சொல்கிறான். இப்பொழுது நல்ல காரியங்களைச் செய்துவிட்டால் பின்பு இருந்தால் நன்மை உண்டு; இல்லாவிட்டால் நஷ்டம் ஒன்றுமில்லை. இரண்டு பக்ஷத்திலும் ஆஸ்திகனுக்குக் கஷ்டமே இல்லை. பின்பு நாம் இருப்பது உண்மையானல் சும்மா இருந்த நாஸ்திகன் பாடுதான் திண்டாட்டம்.

ஆகையால் நல்ல காரியங்களைச் செய்வது எப்பொழுதும் நல்லது தான். நாம் ஓர் இடத்திற்கு ப்ரயாணம் செய்யவேண்டுமானல் மனம் ஸந்தோஷமாக இருக்கவேண்டும். இந்தச் சரீரத்தை விட்டு விட்டு ப்ரயாணம் செய்யும்பொழுது வழியில் கஷ்டத்தைப் போக்கிக் கொள்ளும் காரியங்களை நாம் செய்யாமலிருந்தால் நமக்குக் கஷ்டம் ஏற்படும். அவ்வாறு ஏற்படாமல் காத்துக் கொள்வதற் குரிய காரியங்களை ஞானமார்க்கத்தால் அறியலாம். இப்பொழுது செய்யும் கர்மங்களுக்கு இப்

பொழுது பலன் இல்லாவிட்டால் பின்பு உண்டு. நியூட்டன் (Newton) சொல்லிய உண்மையை வெகு காலத்துக்கு முன்பே ஆத்மா விஷயத்தில் நம் பெரியவர்கள் சொல்லியிருக்கிறார்கள். ஒரு சக்திக்குப் பிரதி பலன் (re-action) எப்பொழுதும் உண்டு என்னும் கொள்கையை நம்முடைய சாஸ்திரங்கள் நன்றாகச் சொல்கின்றன.

கிறிஸ்துவர்கள் ஜன்மாந்தரத்தை ஒப்புக்கொள்வதில்லை. ஆனால் அவர்கள் சொல்லும் சில ஸமாசாரங்கள் அவர்கள் தங்களை யறியாமலே ஜன்மாந்தரத்தை ஒப்புக் கொண்டவர்கள் என்பதைக் காட்டுகின்றன. அவர்கள் இந்த உடம்பை விட்டு நீங்கிய பின்பு நியாயத்தீர்ப்பு ஒன்று நடக்கிறதாகவும் பின்பு ஜீவன் நரகத்தையோ ஸ்வர்க்கத்தையோ செய்த கர்மாக்களுக்குத் தக்கபடி அடைகின்றானென்றும் சொல்லுகிறார்கள். ஸுகதுக்க அனுபவம் பெறுவதற்குரிய இந்தத் தேகம் இங்கே பெட்டியிற் கிடந்தாலும் வேறொரு தேசத்தில் இருந்து அவற்றை அனுபவிப்பதாக அவர்கள் சொல்லுகிறார்கள். அதைத் தான் நாம் ஜன்மாந்தரம் என்கிறோம். அந்தத் தேகத்தில் ஸுகதுக்கங்களை அநுபவிப்பதற்கு முன்பு அவற்றிற்குக் காரணமான கர்மாக்களைச் செய்த இந்த ஜன்மம் எப்படி உண்டோ அதேமாதிரி இந்த ஜன்மத்தில் ஸுகதுக்கானுபவங்களுக்கு ஹேதுவான கர்மாக்களுக்குரிய ஒரு பிறப்பு இதற்கு முன்பும் இருக்கவேண்டும் அல்லவா?

இந்த ஜன்மத்திற்குப் பின்பும் உபயோகப்படக் கூடிய சில காரியங்கள் செய்யவேண்டுவது அவசியம். எப்பொழுதும் ஸௌக்யமாக இருப்பதற்காகச் செய்யப் படும் காரியங்கள் தாம் முன்பு நான் அதிகப்படியானவை

யென்று சொன்னவை. விபூதி இட்டுக்கொள்ளுதல் ருத்ராக்ஷம் அணிதல், ச்ராத்தம் செய்தல் முதலிய காரி யங்கள் நாம் எப்பொழுதும் ஸௌக்யமாக இருப்பதற்கு உதவும் காரியங்கள். இவற்றைப்போன்ற காரியங்களை எவ்வளவு அதிகமாக நாம் செய்கிறோமோ அவ்வளவுக் கவ்வளவு அவை நன்மையை உண்டாக்கும்.

உடம்பிருக்கும்பொழுது உபயோகப்படக்கூடிய காரி யங்களைத் தவிர அதற்குப் பின்பும், பல கோடி வருஷங் களுக்கும், எப்பொழுதும் உபயோகப்படக்கூடிய காரியங் களாக நாம் செய்யவேண்டும். இந்த ஊர் நோட்டு ருஷியா (Russia)வில் செல்லாது. எல்லா ஊருக்கும் ஒரு ராஜா இருந்தால் அவனுடைய முத்திரையுள்ள நோட்டு எங்கும் செல்லும். இந்தப் பதினான்கு லோகங்களுக்கும் ஒரு ராஜா இருக்கிறான். அவன்தான் பரமேச்வரன். அவனுடைய ஸகல ராஜ்யங்களிலும்செல்லும் நோட்டு ஒன்றிருக்கிறது. அது எப்பொழுதும் எவ்விடத்திலும் செல்லும். அது எது? அதுதான் தர்மம்.

ராமன் காட்டுக்குப் போவதற்கு முன்பு கௌஸல்யா தேவியிடம் விடை பெற்றுக்கொள்ளப் போனான். ஊருக் குப்போகும் குழந்தைக்குத் தாயார் பக்ஷணம் கட்டிக் கொடுப்பது வழக்கமல்லவா? பதினான்கு வருஷம் போயிருக்கவேண்டிய குழந்தைக்கு என்ன கொடுப்பது? அவளுக்கு ஒன்றும் தோன்றவில்லை. நிரம்ப ஆலோ சித்துச் சொல்லுகிறாள்:

यं पालयसि धर्मं त्वं धृत्या च नियमेन च ।
स वै राघवशार्दूल धर्मस्त्वामभिरक्षतु ॥

[அயோத்யாகாண்டம், 25: 3]

"ஏ ராகவா! நான் உன்னை ரக்ஷிக்க ஒன்றும் செய்வதற்கில்லை. தர்மம் ஒன்றுதான் இருக்கிறது. தைர்யமாகவும் ஒரே ரீதியாகவும் நியமமாகவும் எந்தத் தர்மத்தை நீ பாதுகாத்து வந்தாயோ அந்தத் தர்மம் தலைகாக்கும். அது ஒன்றுதான் நான் செய்யும் அநுக்ரகம்" என்றாள். தர்மம் நம்மால் ரக்ஷிக்கப்பட்டு பின்பு அது நம்மை ரக்ஷிக்கிறது. ராமனுக்கு எந்தத் தர்மம் பாதுகாவலாக இருந்ததோ அந்தத் தர்மந்தான் ஈச்வரனுடைய அகண்ட ராஜ்யத்தில் செல்லக் கூடியது. நாம் வழக்கமாக, குழந்தை, தகப்பனார், ஊர், தேசம் முதலியவைகள் ஸம்பந்தமாகச் செய்கின்ற காரியங்களோடு ஆத்மாவுக்கு நிரந்தரமான இன்பத்தைத் தரும் காரியத்தைச் செய்ய வேண்டும். அந்தக் காரியம் எப்படி இருக்கவேண்டுமென்பதை விசாரிப்போம் :

நாம் செய்கிற காரியத்தை ஈச்வரனுக்கு அர்ப்பணம் செய்யவேண்டும். ஞானத்திற்கெல்லாம் பெரிய எல்லை பரமேச்வரன். அவனுக்கு நாம் செய்யுங் காரியத்தை அர்ப்பணம் செய்துவிட்டால் அந்தக் காரியம் நிரந்தரமான இன்பத்தைத் தரும். அந்தக் காரியம் புதியதாக இராமல், பரம்பரையாகப் பெரியவர்கள் செய்து காட்டியதாக இருந்தால் மிகவும் ஸுலபமாக இருக்கும். கெட்ட காரியமாக இருந்தாலும் நமது காமக்ரோதத்தின் பொருட்டுச் செய்யப்படாமல், நமது வயிற்றுக்காகச் செய்யப்படாமல், அதிகப்பட்ட ஒரு காரியமாகச் செய்யப்பட்டும் பரமேச்வரனுக்கு அர்ப்பணம் செய்யப்பட்டால் அது தர்மந்தான்.

எந்தத் தர்மத்தை நாம் அநுஷ்டிப்பது? பல காலமாகப் பரம்பரையாகப் பெரியவர்கள் அநுஷ்டித்து

வந்த தர்மத்தில் நாம் ஊறியிருக்கிறோம். அநுபவத்தில் அவர்கள் நித்ய ஸௌக்கியத்தை அடைந்திருக்கிறார்கள். அந்தத் தர்மத்தை நாம் கடைப்பிடித்தால் போதும். நாமாக ஒன்றைப் புதிதாகப் பிடித்துக்கொண்டால் வீண் அலைச்சல். அது நல்லதோ கெட்டதோ என்ற ஸந்தேகம். ஆதலின் முன்பே பெரியவர்களால் அநுஷ்டிக்கப்பட்டு நமக்கென்று ஏற்பட்ட தர்மத்தைக் கைக்கொள்வதே நல்லது.

ஆகவே அதிகப்படியாக உள்ள ஒரு காரியம் வேண்டும். அது நமது வயிற்றுக்கோ, நமது குடும்பத்திற்கோ, நமது ஊருக்கோ, தேசத்திற்காகவோ இருக்கக் கூடாது. அது பரம்பரை க்ரமமாக வந்ததாக இருக்க வேண்டும். அதை ஈச்வரார்ப்பணம் செய்யவேண்டும். அதைத் தைரியத்துடன் நியமமாகச் செய்துவரவேண்டும். அதுதான் தர்மம். அதுதான் எப்பொழுதும் ஸௌக்யத்தைக் கொடுக்கும்.

நாம் பெற்றிருக்கின்ற மனம், வாக்கு, சரீரம் என்னும் மூன்று கரணங்களாலும் செய்யும் செயல்களெல்லாம் தர்மங்களாக இருக்கவேண்டும். நம்முடைய பணங்களை எல்லாம் தர்மமாகிய நோட்டாக மாற்றிக்கொள்ள வேண்டும். எல்லாவிதச் சக்திகளையும் அந்தத் தர்மத்திலே உபயோகிக்கவேண்டும். அப்படிச் செய்யும் தர்மம் எந்தக் காலத்திலும் எந்த இடத்திலும் செல்லும். ராமனுக்குக் கௌஸல்யா தேவி பாதுகாப்பாகச் சொன்னது அதுதான். ராமனுக்கு வந்த ஆபத்துக்கள் மிகப் பெரியவை. அவற்றையெல்லாம் அந்தத் தர்மத்தால்தான் கடந்தான்.

மனிதன் எப்பொழுதும், மேற்போவதற்குரிய காரியங்களைச் செய்யவேண்டும். பிராணிகளுள் மனிதனைத் தவிர மற்றவைகளெல்லாம் குறுக்கே வளர்ந்தவை. அவைகளைத் திர்யக் பிராணிகளென்பார்கள். மனிதன்தான் நேரே வளர்பவன். அவனுடைய ரூபம் அவன் உயர்ந்தவன் என்பதைக் காட்டுகின்றது. அவன் தர்ம மார்க்கத்திலிருந்தால் பிராணிகள்கூட அவனை ஆதரிக்கும். அதர்ம மார்க்கத்தில் நடந்தால் ஸஹோதரன் கூட விலகிவிடுவான் என்பதை ராமாயண கதையினால் தெரிந்துகொள்ளலாம். இதைப் பின்வரும் ச்லோகம் நன்ருய் வெளிப்படுத்துகிறது.

यान्ति न्यायप्रवृत्तस्य तिर्यञ्चोऽपि सहायताम् ।
अपन्थानं तु गच्छन्तं सोदरोऽपि विमुञ्चति ॥

[அநர்கராகவநாடகம், 1-4]

ராமன் தர்மமார்க்கத்தின் வழி நடந்ததால் ம்ருகங்களாகிய குரங்குகள்கூட அவருக்கு உதவி செய்தன. ராவணன் அதர்மத்தின் வழி நடந்ததனால் தம்பியும் அவனைவிட்டு விலகினன். [ராவணன் தன் சொந்த ராஜ்யத்தில் பலவகைச் சேனைகளோடு இருந்தும் ரக்ஷிக்கப்படவில்லை] தர்மவானுக்கு எந்த இடத்திலும் ஸௌக்யம் உண்டு.

ஆதலால் அந்தத் தர்மமே தலைகாக்கும். நம்முடைய காமக்ரோதம் முதலியவற்றின் பொருட்டும், ஜீவனத்தின் பொருட்டும் அல்லாமல், அதிகப்படியாக உள்ளதும், பரம்பரையாக அநுஷ்டிக்கப்படுவதும் ஆகிய தர்மத்தை, தைரியமாகவும் நியமத்துடனும் நாம் செய்து வந்தால், அது எப்பொழுதும் ஸௌக்யத்தைக் கொடுக்கும்.

# 3. பாப புண்ணியங்கள்

(10—10—1932)

நாம் வயிறு நிறையச் சாப்பிட்டுக்கொண்டு குழந்தைகள் பந்துக்கள் முதலியவர்கள் கஷ்டப்படாமல் சாப்பிடும்படி செய்து வருவதற்காக க்ரகஸ்த தர்மத்தில் சில காரியங்கள் செய்துகொண்டிருக்கிறோம். நம்முடைய மானத்தைக் காப்பாற்ற வஸ்த்ரமும், பசியைப் போக்க ஆஹாரமும், இருப்பதற்கு வீடும், நம்முடைய குழந்தை முதலியவர்களைப் போஷிப்பதற்குரிய ஸௌகரியங்களும் அமைவதற்காக ஒரு லௌகிக காரியம் செய்வதைப் போல, எந்த லோகத்திலே போனாலும ஸௌக்யமாயிருக்க ஒரு காரியம் செய்யவேண்டும். அந்தக் காரியந் தான தர்மம்.

ஒரு ஸந்தேகம் இப்பொழுது ஏற்படுகிறது. வயிற்றுப் பாட்டுக் காரியத்திலேயே காலமெல்லாம் ஸரியாய்ப் போகிறதே; தர்மம் செய்யச் ஸாவகாசம் இல்லையே; இந்த மாதிரி ஒரு ச்ரமம் தோன்றுகிறது. இப்படிச் சொல்லுகிறவர்களெல்லாம் பணம் ஸம்பாதிக்கத் தங்கள் காலத்தை யெல்லாம் செலவழித்தாலும் பாதகமில்லை. வீண் பேச்சிலும் நினைவிலும் பரிகாஸத்திலும் உத்ஸாகத்திலும் எவ்வளவோ காலம் வீணாகப்போகிறது. பணம் ஸம்பாதிக்கும் காலத்தைக் கணக்குப் போட்டுப் பார்த்து மிச்சமுள்ள காலத்தை வீணாகச் செலவழிக்காமல் ஆத்மலாபமான காரியத்தைச் செய்யலாம். மனம் இருந்தால் அவகாசம் கிடைக்காமற் போகாது. டிராமிலும் மோட்டாரிலும் போகும்போது பகவந் நாமாவை ஜபித்துக்கொண்டே வரலாம். இப்

பொழுது ஸம்பாதிக்கும் பணத்தில் ஒரு பைசாவாவது நாம் இந்த உடம்பை விட்டபிறகு வேறு லோகத்தில் ப்ரயோஜனப்படுமா? அந்த லோகங்களிற் செலாவணியாகும் பணம் பகவந்நாமாதான். ஆகையால் அதைத் தவறுமல் ஜபிக்கவேண்டும். அவகாசமில்லை என்பது பொய்.

நாம் நான்கு விதத்தில் தர்மம் செய்துவரலாம்; சரீரத்தாலும், வாயாலும், மனத்தாலும், பணத்தாலும் செய்யலாம். பணத்தை ஆத்மலாபத்தில் உபயோகிக்கலாம்; தானதர்மம் செய்யலாம். தரித்ரதசையில் தானதர்மம் எப்படிச் செய்கிறது என்ற ஒரு ஸந்தேகம் தோன்றுகிறது. தரித்ரத்திலும் செலவைக் குறைத்து ஒரு பைசாவாவது தர்மம் செய்யலாம். தினமும் ஒவ்வொருவரும் ஒரு பைசாவாவது காலணுவாவது தர்மம் செய்ய ஸங்கல்பம் செய்துகொள்ளவேண்டும்.

தூங்குவதிலும் வம்பு பேசுவதிலும் பரிகாஸம் செய்வதிலும் ஒவ்வொருவருக்கும் எவ்வளவோ காலம் செலவழிகிறது. அவற்றை நிறுத்திப் பகவானின் சரணங்களை த்யானம் செய்யலாம். அதுதான் வரவு; மற்றவையெல்லாம் செலவுதான். அவையெல்லாம் மாம்ஸத்திற்காகச் செலவழிக்கும் காலம். உடம்பு மாம்ஸந்தானே அது ஸம்பந்தமாகச் செலவழிப்பது மாம்ஸத்திற்காகச் செலவழிப்பது தானே.

நாம் மிகவும் பாபம் பண்ணியிருக்கிறோமென்று பயப்படக்கூடாது. நம்மைப்போல் இருந்தவர்கள் எவ்வளவோ பேர் பக்தர்களாகி யிருக்கிறார்கள். நம்மைவிட் மஹாபாபிகளானவர்கள் கூட நல்ல ஸ்திதிக்கு வந்திருக்கிறார்கள். பாபிகளை ரக்ஷிப்பதனால்தான் ஈச்வரனுக்குப் பெருமை ஏற்படுகிறது. அதனால் நாம் தைரியமாக இருக்கவேண்டும்.

பகவத் கீதையில் ஸ்ரீ கிருஷ்ணர் அர்ஜுனனுக்குச் சொல்லுகிறார்:

अपि चेदसि पापेभ्यः सर्वेभ्यः पापकृत्तमः ।
सर्वं ज्ञानप्लवेनैव वृजिनं संतरिष्यसि ॥

[கீதை. IV-36]

"லோகத்தில் எல்லாப் பாபிகளிலும் மஹாபாபியாக வைத்துக்கொண்டாலும் பாபமாகிற ஸமுத்ரத்தை ஞானமென்கிற ஓடத்தினால் நீ தாண்டிவிடுவாய்" என்று சொல்கிறார்.

अहं त्वा सर्वपापेभ्यो मोक्षयिष्यामि मा शुचः ।

[கீதை. XVIII-66]

நாம் பாபம் செய்து விட்டோம் என்று நினைத்து அழக்கூடாது. "நான் உன்னை எல்லாப் பாபங்களிலிருந்தும் விடுபடச் செய்கிறேன்; அதனால் நீ அதைரியப் படாதே; அழாதே" என்று பகவான் சொல்கிறார்.

நாம் எப்படிப் பாபம் செய்கிறோம் என்பதை யோசித்துப் பார்க்கலாம்; வாயாலும் மனத்தாலும் தேஹத்தாலும் பணத்தாலும் நாம் பாபம் செய்கிறோம். மனஸில் கெட்ட நினைவுகளை நினைத்துப் பாபம் செய்கிறோம். வாயினால் உத்ஸாகமாகப் புரளி பண்ணிப் பாபம் செய்கிறோம். தேஹத்தால் கெட்ட காரியங்களைப் பண்ணிப் பாபம் செய்கிறோம். பணத்தினால் பல வகையாகப் பாபம் செய்கிறோம். நாம் இந்தப் பாபங்களைப் பண்ணக்கூடாது என்று நினைத்தாலும் அப்படி இருக்க முடியவில்லை. பிசாசுபோலப் பாபம் பண்ணும் பழக்கம் நம்மைப்பிடித்துக்கொண்டிருக்கிறது. நம்மை விடாமற் சுற்றிக் கொண்டேயிருக்கிறது. பல கால

மாகப் பாபம் பண்ணியிருக்கிறோம். அதனால்தான் அந்தப் பழக்கம் விடவில்லை. அந்தப் பழக்கத்தை எப்படிப் போக்குவது?

எந்த வழியினால் நாம் பாபம் பண்ணுகிறோமோ அந்த வழியிலேயே நாம் பழக்கத்தை மாற்றவேண்டும். முன்பு சொன்ன நான்கு மார்க்கங்களிலேயே அந்த முயற்சியைச் செய்யவேண்டும்.

'धर्मेण पापम् अपनुदति ।' [மஹாநாராயணோபநிஷத்]

என்பது வேதம். பாபத்தைத் தர்மத்தால் நிவர்த்தி பண்ணு என்று அது சொல்லுகிறது.

தர்மம் என்பது என்ன? அதர்மத்திற்கு நேர் விரோதமானது தர்மம். கெடுதலுக்கு விரோதமானது நல்லது. அதுதான் தர்மம். கெடுதல் எது? நம்மைப் பாபம் பண்ணியாகவேண்டும் என்று தூண்டுகிறது தான்? ஒரு காரியத்தை ஆசைப்பட்டுப் பண்ணுகிறது பாபம். அந்த ஆசை நம்மை வலிய இழுத்தும் பாபம் பண்ணச் செய்கிறது.

பாபம் என்பது என்ன? புண்ணியம் என்பது என்ன? எதை நாம் செய்யக் கூடாது என்று மனத்திற்குத் தோற்றுகிறதோ அதுதான் பாபம். எதைச் செய்வது நல்லது என்று தோற்றுகிறதோ அது தான் புண்ணியம். மனிதன் எப்பொழுதும் புண்ணியத்தின் பலனைத்தான் விரும்புகிறான்.

पुण्यस्य फलमिच्छन्ति पुण्यं नेच्छन्ति मानवाः ।
न पापफलमिच्छन्ति पापं कुर्वन्ति यत्नतः ॥

புண்யத்தின் ப்ரயோஜனம் கஷ்டம் இல்லாமல் ஸௌக்யமாக இருப்பது. அந்த ப்ரயோஜனத்தைத்

தான் எல்லோரும் விரும்புகிறார்கள். அதனால் மனம் சாந்தத்தை அடைகிறது. ஆனந்தம் உண்டாகிறது. நமக்குப் புண்ணியத்தின் ப்ரயோஜனத்தில் ஆசை இருக்கிறதே ஒழிய நாம் பண்ணுவதில் பெரும்பா, லானவைகள் பாப காரியங்களாகவே இருக்கின்றன. நாம் பாபம் செய்வதற்கு நம் மனமே ஸாக்ஷியாக இருக்கிறது. புண்ணியம் பண்ணுகிற விஷயத்தில் சோம்பல் உண்டாகிறது. பாப காரியங்கள் பண்ணுவதில் ஓர் உத்ஸாகம் இருக்கிறது.

பாபத்தின் பலன் கஷ்டம். இது செய்யக் கூடாதென்று நம் மனச்சாக்ஷி தடுக்கும் காரியங்கள் பாப காரியங்கள். இது செய்ய வேண்டாமென்று எண்ணுவதுண்டு; ஆனால் செய்வதை விடுகிறதில்லை.

இந்த உலகத்தில் பிறந்த யாவர்க்கும் ஸுகத்தில் இச்சை உண்டு. புண்ணியமே செய்யவேண்டுமென்று நினைக்கிறார்கள். பாபமே செய்யக்கூடாது என்பதும் தெரியும். ஆனால் அவர்கள் செய்வதில் நூற்றுக்கு எண்பது பங்கு பாபந்தான்; இருபது பங்கே புண்ணியம். இதை நினைத்தால் ரொம்ப வேடிக்கையாக இருக்கிறது. பாபம் வேண்டுமென்று நாம் ஆசைப்படுவதே இல்லை. ஆனாலும பாப மூட்டை மேலும் மேலும் ஏறிக்கொண்டே இருக்கிறது. இந்த ஆச்சரியத்தின் காரணம் தெரியவில்லை. ஏன் இப்படி? என்ற கேள்விக்குப் பதில் சொல்ல முடியவில்லை. பல காலத்திற்கு முன்பே அர்ஜுனன் நம் அனைவருக்கும் சேர்த்துப் பகவானைக் கேட்டு இதற்குப் பதில் வாங்கிவைத்திருக்கிறான்.

अथ केन प्रयुक्तोऽयं पापं चरति पूरुषः ।
अनिच्छन्नपि वार्ष्णेय बलादिव नियोजितः ॥

[கீதை, III-36]

"மனிதன் பாபம் செய்கிறான். அவனுக்கு அதைச் செய்ய ஆசை இல்லாதபொழுதே அவன் செய்கிறான். அவனைப் பாபம் பண்ணவைக்கிறது யார்? உபத்ரவப் படுத்திப் பாபம் செய்யச் சொல்கிற அந்தப் பேர்வழி யார்? பாபம் பண்ணவேண்டாம் என்றுதான் ஞாபகம்; பாபத்திற் கொஞ்சம் கூட இச்சை இல்லை. ஆனாலும் அவனைப் பாபம் பண்ணவைக்கும் ஆஸாமி யார்?" என்று கேட்டான் அர்ஜுனன்.

பகவான் அதற்குப் பதில் சொல்லி இருக்கிறார்:

काम एषः क्रोध एष रजोगुणसमुद्भवः ।
महाशनो महापाप्मा विद्ध्येनमिह वैरिणम् ॥

[கீதை, III-37]

மனிதனுக்கு ஒரு வஸ்து வேண்டும் என்ற ஆசை இருக்கிறது. அதை அடைய ப்ரயத்னம் செய்கிறான். நியாயமான வழியில் அகப்படாவிட்டால் அநியாய வழியில் முயற்சி செய்கிறான். அதுதான் பாபம். அந்தப் பாபத்திற்குக் காரணமாக இருப்பது 'வேண்டும்' என்னும் ஆசை. அதைத்தான் காமம் என்று சொல்வார்கள். அது நமக்கு ஒரு சத்ரு. மற்றொன்று இருக்கிறது. அது க்ரோதம்—கோபம். ஒரு வஸ்துவின்மேல் ஆசைப் பட்டால் அது கிடைக்காதபொழுது அதற்குத் தடையாக இருந்தவர்கள் மேல் க்ரோதம் உண்டாகிறது. ஆசைப் பட்டபொருள் கிடைக்காதபொழுது கோபம் உண்டாகிறது, காமம் திருப்பப் பட்டபொழுது கோபமாகிறது. ஆதலால் இரண்டையும் ஒன்றென்றே சொல்லிவிடலாம்.

कामः स एष प्रतिहतः केनचित्क्रोधत्वेन परिणमते ।

[கீதாபாஷ்யம்]

ஒரு ஸமயம் காமமாக இருப்பதே பின்பு கோபமாக ஆகிறது. ரப்பர்ப் பந்தை சுவரில் எறிகிறோம். எறிந்த பொழுது அது பின்பு திரும்பி வருகிறது. எறியப்படும் பொழுது அது காமம் போலிருக்கிறது. திரும்பி வருவதைப் போல்வது க்ரோதம். காமம் நிறைவேறு விட்டால் கோபம் உண்டாகிறது என்று இந்த வாக்கியம் சொல்லுகிறது. காமம் எதனுலும் திருப்தி அடையாது. எவ்வளவு சாப்பிட்டாலும் அதற்குப் போதாது. நாம் பசிக்கு ஆகாரம் கொடுத்தால் திருப்தி உண்டாகின்றது, ஆசை, ஆசைப்படும் வஸ்துவைக் கொடுத்தால் அடங்குவதில்லை. அந்த வஸ்து கிடைத்துவிட்டதே என்று சமனம் அடைவதில்லை. காமம் நெருப்புப்போன்றது. நெருப்புக்கு ஆஹாரம் கொடுக்கக் கொடுக்க அது பரவிப் பெருகும். அதைப்போன்றதே காமமும். ஆஹாரம் போட்டுச் சமனம் உண்டாக்குதல் நெருப்புக்கும் இல்லை. நெருப்புக்குக் கிருஷ்ணவர்த்மா என்று ஒரு பெயர் இருக்கிறது. அதற்குப் போனவழியெல்லாம் கறுப்பை உண்டு பண்ணுவது என்பது அர்த்தம். நெருப்பு எங்கேபோனுலும் பின்னுல் கரியை உண்டாக்கிக் கொண்டே போகிறது. காமமும் அப்படித்தான். முதலில் ஸந்தோஷம் உண்டாகிறது. அப்புறம் மேலே கிடைக்கவில்லையென்று அழுகை உண்டாகிறது. ஆஹாரம் கொடுக்கக் காமம் விரிகிறது. காமம் ஒரு பெரும் பசிக்காரன், மஹாசநன் என்று கூறப்படும்.

க்ரோதம், காமம் நிறைவேறுமல் திரும்பிவரும் பொழுது ஏற்படுவது. அது காமத்திலும் உயர்ந்தது. இது நைஷதத்திற் சொல்லப்பட்டிருக்கிறது.

கலி வருகிறுர். அவருடைய ஸேனுதிபதிகளாகிய காமன் க்ரோதன் முதலியவர்கள் உடன் வருகிறுர்கள்

ஸ்துதி பாடகர்கள் ஒவ்வொரு ஸேனாதிபதியின் பெருமையையும் எடுத்துச் சொல்லுகிறார்கள். க்ரோதனைப்பற்றியும் சொல்லப்படுகிறது.

दुर्गं कामाशुगेनापि दुर्लङ्घ्यमवलम्ब्य यः ।
दुर्वासोहृदयं लोकान् सेन्द्रानपि दिधक्षति ॥

[நைஷதகாவ்யம், XVII-21]

காமம் புகாத இடமில்லை என்று சொல்வதுண்டு. காமன் பெரிய வீரன். ஆனால் க்ரோதன் அவனைக் காட்டிலும் பலவான். க்ரோதனுடைய கோட்டையில் காமன் பாணம் உள்ளே வராது. அந்தக் கோட்டைக்குள்ளிருந்து இந்த்ராதி தேவர்களையும் ஒரு கை பார்ப்போம் என்று க்ரோதன் சொல்லுவான். அந்தக் கோட்டை எது? துர்வாஸருடைய ஹ்ருதயந்தான் அது. அதற்குள் காமன் பாணம் செல்லாது.

நாம் செய்யும் பல பாபகாரியங்களுக்கும் இந்தக் காமக்ரோதங்களே காரணமாக இருக்கின்றன. ரஜோ குணத்தால் இவை உண்டாகின்றன. பெரும் பசிக்காரன் காமன்; பெரிய பாபி க்ரோதன். இவர்கள் தாம் நமக்குச் சத்ருக்கள்.

ஆசையின்றி ஒரு காரியத்தைச் செய்தால் அப்பொழுது பாபமில்லை. ஆசைப்பட்டு ஒன்றைச் செய்வது தான் பாபம். பாபம் பண்ணிப் பண்ணி அந்தப் பழக்கம் பல காலமாக ஊறியிருக்கிறபடியால் அது இப்பொழுதும் பாபம் பண்ணச் செய்கிறது.

த்ரிகரணத்தாலும் பாபத்தைச் செய்கிறோம். மனத்தால் பலவகையான கெட்ட நினைவுகள் உண்டாகின்றன. அவை பாபம். வாக்காற் பொய் பேசுதல் முதலிய

பாபத்தைச் செய்கிறோம். நமக்கு மாத்திரம் பகவான் வாக்குக் கொடுத்தது எதற்காக? ஹ்ருதயத்தில் உள்ளதைச் சொல்லட்டும் என்று கொடுத்திருக்கிறார். அப்படிச் செய்யாமல் பொய்சொன்னால், இவனுக்கு வாக்குக் கொடுத்து ப்ரயோஜனமில்லையென்று வாயில்லா மாடாகப் பிறக்கச் செய்வார். நமக்கு வாக்குக் கொடுத்திருப்பது ஸத்யத்தைச் சொல்வதற்காகவும் பகவந்நாமாவைச் சொல்வதற்காகவுமே.

மனம், வாக்கு, உடம்பு, பணம் என்னும் நான்கினாலும் பாபம் பண்ணுகிறோம். ஆசைப்பட்டு ஒன்றைச் செய்தால் பாபம் உண்டாகிறது. முன்பு கூறிய நான்கினாலும் நல்ல காரியங்கள் செய்ய வேண்டும். கயிற்றை எப்படிச் சுற்றினோமோ அப்படியே அவிழ்க்க வேண்டும். எந்த நான்கினால் நாம் பாபம் பண்ணப் பழகிக் கொண்டோமோ அந்த நான்கினாலேயே புண்ணியம் செய்யப் பழக வேண்டும்.

பாபத்திற்கு இரண்டு சக்திகள் இருக்கின்றன. ஒரு கெட்ட பழக்கம் இருக்கிறது. உதாரணமாகப் பொடி போடும் பழக்கத்தைக் கவனிப்போம். அது இரண்டு வகைக் கெடுதலை உண்டாக்குகிறது. அன்றைக்குப் போடும் கெடுதல் ஒன்று. நாளைக்கும் போடும்படி தூண்டும் கெடுதல் ஒன்று. ஆக இரண்டு உண்டாகின்றன. அது போலவே பாப காரியம் பின்னும் பல பாபங்களைச் செய்யும் பழக்கத்தை ஏற்படுத்துகிறது. அந்தப் பழக்கத்தை வாஸனை என்று சொல்லுவோம். நாம் நல்ல வாஸனையை ஏற்றிக் கொண்டு வர வேண்டும்; கெட்ட வாஸனையை ஒழித்து வரவேண்டும்.

ஆகவே எல்லாப் பாபமும் ஆசைப்படுவதால் உண்டாகின்றன என்று எண்ணி முன் கூறிய நான்கு

வகையில் ஆசையில்லாமற் காரியங்களைச் செய்ய வேண்டும்.

நித்தியம் மனத்தினாலும் வாக்கினாலும் உடம்பினாலும் பணத்தினாலும் நல்ல காரியங்களைச் செய்து வர வேண்டும். நமக்குக் கிடைக்கும் பணத்தில் ஒரு தம்பிடியையாவது ஒவ்வொரு நாளும் தர்மத்துக்காக உண்டியல் கட்டிப்போடவேண்டும். அந்தப் பணத்தைக் குடும்பத்திற்கு ப்ரயோஜனப்படுத்தாமல் தர்மத்திற்கு விநியோகப்படுத்தவேண்டும். நம்முடைய பணமெல்லாம் நம்முடையதல்ல என்ற ஞாபகம் இருக்க வேண்டும். இந்த உடம்பு போனவுடன் அது நம்முடைய ஸம்பந்தத்தை விட்டு விடும். அந்தப் பணத்தை நம்முடையதாகச் செய்ய வேண்டுமானால் நாம் எங்கே போனாலும் செல்லக் கூடிய நோட்டாக மாற்றவேண்டும். மேலுலகத்தில் இந்தப் பணம் செல்லாது. இந்தப் பணத்தைத் தர்ம நோட்டாக மாற்றிவிட்டால் அது எங்கேயும் செல்லும். அப்பொழுது இந்தப் பணமும் நமக்குச் சொந்தமாகும். ஆகையால் குழந்தை முதற் பெரியவர்கள் வரையில் தனித் தனித் தர்மத்திற்காக ஒவ்வொரு உண்டியல் வைத்துக் கொள்ளவேண்டும். நாம் பிறந்தது முதல் இந்த மாதிரிப் பழக்கங்களை வைத்துக்கொண்டிருந்தால் இதற்குள் எவ்வளவோ செய்திருக்கலாம். நம்முடைய காரியத்தை நாம் மறந்து விட்டோம். குழந்தைகளுக்கென்று இப்பொழுதே தர்ம உண்டியல் ஏற்படுத்த வேண்டும். அவர்களுக்காக இன்ஷ்யூர் செய்வதில்லையா? இந்த இன்ஷ்யூரன்ஸ் இந்தப் பிறவிக்குப் பின்பும் (After Life) உபயோகப்படுமாதலால் இதை 'After Life Insurance' என்று கருதவேண்டும்.

வாக்கினுற் புண்ணியம் செய்யவேண்டும். நித்தியம் ஆயிர பகவந்நாமாவையாவது சொல்லவேண்டும். அது நமக்கு உபயோகப்படும். அன்றியும் உபத்ரவம் வராமற் காக்கும். வீணுக வம்பு பேசுவதனுல் பாபமும் அதனுல் உபத்ரவமும் உண்டாகிறது. பகவந்நாமாவைச் சொல்வதால் அந்த உபத்ரவமும் இல்லை. மேலே புண்ணியமும் உண்டாகிறது. பகவானுக்குப் பல நாமாக்கள் இருக்கின்றன. "பேராயிரம் பரவிவானேரேத்தும் பெம்மானே" என்று பெரியவர்கள் சொல்லியிருக்கிருர்கள். அவருடைய ஒரு நாமாவை ஆயிரம் தடவை சொல்லவேண்டும். ஸித்திபெற்ற பெரியவர்களிடம் அந்த நாமாவைக் கேட்டுக் கொள்ளவேண்டும். கணக்குக்காகக் கயிறு ஒன்றை வைத்துக்கொள்ளலாம். நாமாகப் பகவந்நாமாவைச் சொல்வதனுலும் பாதகமில்லை.

மனதினுல் நல்ல காரியம் செய்யவேண்டும். கொஞ்ச நாழிகை ஓரிடத்தில் இருக்கவேண்டும். பகவானை த்யானம் செய்யவேண்டும். நம்முடைய மனது பல நினைவுகளோடு இருக்கிறது. அது பெரிய ஸினிமாவைப் போலிருக்கிறது. ஹ்ருதயம் யாருடைய இடம் என்பதை அறியவேண்டும்.

அது பகவானுக்குரிய இடம். அந்த இடத்தை நாம் குப்பைத் தொட்டியாக்கி இருக்கிறேம். அதை மெழுகிச் சுத்தப்படுத்தி அதிற் பகவானை உட்கார வைத்து நாமும் உட்காரவேண்டும். அதற்கு என்ன வழி? ஸ்வாமியின் பாதத்தைத் த்யானம் செய்யவேண்டும். நித்தியம் ஐந்து நிமிஷமாவது த்யானம் செய்யவேண்டும். எந்த விதமான ஸமயத்திலும் இது தவருமல் நடக்க வேண்டும். ஸ்வராஜ்யம் வந்தாலும் வராவிட்டாலும்

நடக்கவேண்டிய காரியம். இது ஸாப்பிடுவதைப் போன்றது. இது அதைவிட அதிகமென்றே சொல்லவேண்டும். ஆஹாரம் செல்லாத காலத்திலும் இது அவசியம் செய்யவேண்டியது. அப்பொழுது ஈச்வரானுக்ரகம் உண்டாகும். அந்த அநுக்ரகம் எல்லாவற்றிற்கும் அநுகூலம். பணம் ஸம்பாதிக்க எவ்வளவோ காலத்தைப் போக்குகிறோம். நமக்கு உண்மையில் ஆத்மலாபமாக இருக்கும் இந்தக் காரியத்தை குறைந்த பக்ஷம் அரைமணியாவது செய்யக் கூடாதா? அந்த அரைமணியும் தர்மப் பணத்தைச் சேர்க்கும் காலமாகும். மனம் த்யானத்தில் ஈடுபட்டால் வாய் முதலியன அதன்படியே நல்ல காரியம் செய்யும்.

உடம்பினுல் நல்ல காரியம் செய்யவேண்டும். கோயிலுக்குப் போய் ப்ரதக்ஷிணம் செய்து நமஸ்காரம் செய்ய வேண்டும். தண்டம் ஸமர்ப்பித்தல் என்று நமஸ்காரத்தைச் சொல்லுவார்கள். தடியைபோல் விழுவதுதான் அது. இந்த உடம்பு நமதன்று, அவரது என்று நினைத்து அவர் ஸந்நிதியிற் போட்டுவிடவேண்டும்.

இப்படிச் செய்வதனுல் பாபம் தானுக நழுவிவிடும். அகம்பாவம் குறையும். எவ்வளவுக் கெவ்வளவு நாம் இரங்குகிறேமோ அவ்வளவுக்கவ்வளவு மஹிமை ஏறும்.

ஸ்த்ரீகள் பர்த்தாவை நமஸ்காரம் செய்தாலே போதும். புருஷர்கள் கோயிலுக்குப் போவதில்லை. என்று ஸங்கல்பம் செய்துகொண்டு விட்டபடியால் அவர்களுக்கும் சேர்த்து ஸ்த்ரீகள் கோயிலுக்குப் போய் வருகிருர்கள். கோயிலுக்கு அவர்கள் போகக்கூடாதென்பது இல்லை. அவசியமில்லை என்று கருதவேண்டாம். மூல

லிங்கத்தைத் தரிசிப்பவர்கள் சிலர். த்வஜஸ்தம்பத்தைத் தரிசிந்தாலே சிலருக்குப் போதும். கோபுர தரிசனத்தாலேயே சிலருக்குப் புண்ணியம் வந்துவிடும். ஸ்த்ரீகளுக்குப் பர்த்தாவை வணங்குவதே போதும். அதிகாரிகளுக்கு ஏற்றபடி ஒவ்வோரிடம் இருக்கிறது. அதற்கேற்றபடி தேகத்தை அர்ப்பணம் பண்ண வேண்டும்.

ஆகவே, நாம் நான்கு வகையிற் பாபம் பண்ணியிருக்கிறோம்; இன்னும் பண்ணி வருகிறோம். இதை நிறுத்துவதற்கு மாற்று தர்மம். அந்தத் தர்மத்தைத் த்ரிகரணத்தாலும் பணத்தாலும் செய்யவேண்டும். உடம்பினால் ப்ரதக்ஷிணம் முதலியவற்றைச் செய்யவேண்டும். இது எனதன்று பகவானது என்று எண்ணித் தண்டம் ஸமர்ப்பிக்கவேண்டும். ஆலயம் இல்லாவிட்டால் ஸ்மரணம் செய்து கொண்டாவது செய்யலாம். வாக்கால் பகவந்நாமாவைச் சொல்லவேண்டும். மனத்தால் சரணாரவிந்த த்யானம் செய்யவேண்டும். பணத்தால் தான தர்மம் செய்யவேண்டும்.

நாம் பாபம் பண்ணாமலிருந்தால் புண்ணியம் செய்ய வேண்டாம். பாபம் பண்ணியிருக்கிறோமாகையால் அவசியம் இந்தத் தர்மங்களைச் செய்யவேண்டும். குழந்தை முதல் விருத்தர்வரைக்கும் உள்ள எந்தப் பருவத்தினராயினும் எந்த ஜாதியாராலும் இந்த நான்கு வகையிலும் தர்மம் செய்தால் தான் பாபம் நிவர்த்தியாகும். புண்ணிய பலம் ஏற ஏறப் பாபம் குறையும். ஆத்ம லாபத்திற்கு வேண்டிய முதல் சேரும். இந்தத் தர்மங்களை கை கால் முதலிய கரணங்கள் இருக்கிறபொழுதே

செய்து கடனை அடைத்து முதலையும் சேர்க்கவேண்டும். அவை போனபின் செய்வதென்றால் முடியாது.

प्रयाणकाले मनसा चलेन
भक्त्या युक्तो योगबलेन चैव ।
भ्रुवोमध्ये प्राणमावेश्य सम्यक्
स तं परं पुरुषमुपैति दिव्यम् ॥

[கீதை, VIII-10]

என்று சொல்லப்படுகிறது. இந்த உடம்பைவிட்டு நாம் ப்ரயாணம் செய்யும்பொழுது மனம் அசையக்கூடாது. மலைபோல இருக்கவேண்டும். பாப பயம் இல்லாவிட்டால் அப்படியிருக்கலாம். காமமும் க்ரோதமும் இல்லையானால் அந்தப் பயம் இல்லை. தர்மம் செய்து வந்தால் அவை அடங்கும். நாம் பண்ணும் பாபங்களைப் பார்த்தால் நமக்குச் சாதம்கூடக் கிடைக்கக்கூடாது. அவ்வளவு பாபங்கள் செய்கிறோம். பகவான் பரம கருணையுடையவராகையால் இவ்வளவு ஸௌகரியங்கள் பாபிகளாகிய நமக்கும் கிடைக்கின்றன. ஆதலால் பாபத்தைக் குறைத்துக் கொள்ளவேண்டும். எல்லாவற்றையும் அவருக்கு அர்ப்பணம் செய்து விடவேண்டும். அவர் ஆத்மாவுக்குள் இருக்கிறார். அவருக்கு உடம்பு முதலியவற்றை அர்ப்பணம் செய்வதால் ஆசை அற்று விடுகிறது. அப்பொழுது பாபம் இல்லை. பாபம் இல்லாதபொழுது ஸ்திரமான ஸௌக்யம் உண்டாகிறது.

---

# 4. வர்ண தர்மம்

(15—10—1932)

நம் தேசத்தில் ப்ரஹ்ம க்ஷத்ரிய வைச்ய சூத்ரர் என்று நான்கு வர்ணங்கள் ஏற்பட்டிருக்கின்றன. இந்த வர்ணங்களை நாம் ஜாதி என்று சொல்லுகிறோம். அந்த நான்கு வர்ணங்களைப் பற்றிய விஷயங்கள் சாஸ்த்ரங்களில் சொல்லப்பட்டிருக்கின்றன. ஒவ்வொரு வர்ணத்தாருக்கும் தனித்தனியே காரியங்கள் சொல்லப்பட்டிருக்கின்றன. ஒருவர் செய்த காரியத்தை மற்றொருவர் செய்யக் கூடாது. ஒவ்வொருவருக்கும் பலவிதமான நிர்பந்தங்கள் உண்டு. ஒரு குடியானவன் பஞ்சகச்சம் கட்டிக்கொண்டு பூணூல் அணிந்து பவித்ரம் போட்டுக் கொண்டு வந்தால் நமக்குப் கோபம் வருகிறது. நிரம்ப மீறிப்போய்விட்டானென்று சொல்லுகிறோம். ப்ராம்மணன் சுருட்டுக் குடித்துக் கொண்டு பஞ்சகச்சம் கட்டிக் கொள்ளாமல் பூணூல் போட்டுக் கொள்ளாமல் வந்தால் அவனை அயோக்யனென்று சொல்லுகிறோம். பறையனும் குடியானவனும் குடித்தால் அவ்வளவாகக் கோபித்துக் கொள்வதில்லை. ப்ராம்மணன் குடித்தால் ஜாதிப்ரஷ்டம் செய்து விடுகிறோம். இவ்வளவு ஜாதிக்காரர்களும் ஒரே மதத்தை உடையவர்களே ஆனாலும் ஒருவன் செய்வது நல்ல காரியமாயிருந்தாலும் கோபம் வருகிறது, கெட்டகாரியமாயிருந்தாலும் கோபம் வருகிறது. ப்ராம்மணன் கலப்பை எடுத்து உழுதால் ஆசாரமில்லை என்று பரிஹாஸம் செய்கிறோம். பறையன் வேதாத்

யனம் செய்தால் காலம் கெட்டுப்போயிற்றென்று குறை கூறுகிறோம். இப்படி ஒரே மதத்தில் பலவித வித்யாஸங்கள் இருக்கின்றன. ஒருவரோடு ஒருவர் உட்கார்ந்து சாப்பிடக்கூடாது, ஒரு ஜாதியாரைத் தொடக்கூடாது, ஒருவர் கிட்ட வரக்கூடாது, ஒரே வீட்டிற் குடி இருக்கக் கூடாது, கல்யாணம் பண்ணக்கூடாது, ஒருவர் செய்த காரியத்தை மற்றொருவர் செய்யக்கூடாது என்று இப்படி எவ்வளவோ வித்யாஸங்கள் இருக்கின்றன. நாலு வர்ணம் என்று பெயரளவில் இருக்கின்றன. ஒவ்வொன்றிலும் ஆயிரக்கணக்கான பிரிவுகள் இருக்கின்றன. இன்னும் பல பிரிவுகள் உண்டாய்க்கொண்டே இருக்கின்றன. இப்படி இந்த மதமானது ஒரு விசித்ரமான மதமாக இருக்கிறது. முன்னொரு நாள் லோகம் முழுவதற்கும் இந்த ஒரே மதம் இருந்தது என்று சொன்னேன். அவ்வளவு பெருமையுள்ள மதத்தில் இப்படி ஒன்றுக்கொன்று வித்யாஸப்படும் பல ஸம்ப்ரதாயங்கள் இருக்கின்றன. மற்ற மதங்களிலும் விதிகளும் நிஷேதங்களும் உண்டு. ஆனால் அந்த மதத்திலுள்ள யாவர்க்கும் ஒரே விதமான விதிகள். ஒரே விதமான விலக்குகளே உண்டு. நமக்குள்ளேயே ஒரே மதமாக இருந்தாலும் விதிகளும் நிஷேதங்களும் பல வகைகளாக இருக்கின்றன. ஒரு காரியத்தை ஒருவன் செய்தால் தர்மமாகிறது. அதையே வேறொருவன் செய்தால் அதர்மமென்கிறோம்.

ஒரு பெரியவர் ஒரு பெரிய ஆச்சரியத்தைச் சொல்லுகிறார். நாமெல்லாம் மரணமடைவது ஆச்சரியமன்று; இந்த உடம்பில் இருக்கிற ஒன்பது ஓட்டைகளுக்குள்ளே உயிரானது போகாமல் நிற்கிறதே, அது

தான் பெரிய ஆச்சரியம் என்று அவர் சொல்லி இருக்கிருர்.

नवद्वारे शरीरेऽस्मिन्नायुः स्रवति सन्ततम् ।
जीवतीत्यद्भुतं तत्र गच्छतीति किमद्भुतम् ॥

அதைப்போலப் பலவிதமான ஸந்தேஹங்களுக்கும் வித்யாஸங்களுக்கும் இடமான இந்த மதமானது எவ்வளவோ வருஷங்களாக இருக்கிறதே என்பதை நினைத்து ஆச்சரியப்படவேண்டி யிருக்கிறது.

பறையனும் சக்கிலியனும் தங்களுக்குள் வித்யாஸம் பாராட்டுகிருர்கள். எந்த இடத்திலும் வித்யாஸம் காணப் படுகிறது. கோயிலுக்குப் போனல் ப்ராம்மணன் அர்த்த மண்டபத்தின் வரைக்குந்தான் போகலாம். மற்றவர்கள் வெளியிலே நிற்கவேண்டுமாம். சில பேர் த்வஜஸ்தம்பத் தினடியிலே நிற்க வேண்டுமாம். இப்படியே நம்முடைய வீட்டிற்குள்ளும் வித்யாஸம் இருக்கிறது. சில பேர் அன்ன ச்ராத்தம் செய்யலாம். சில பேர் ஆமச்ராத்தந் தான் பண்ணவேண்டும். சில காரியங்களைச் சில பேர் வேதோக்தமாகவே செய்ய வேண்டும். அதே மாதிரி காரி யத்தைச் சில பேர் வேதோக்தமாகச் செய்தால் அவர் களுக்குக் கெடுதல் உண்டாகும். வேதத்தை விட்டால் சிலருக்குப் பாபம். வேதம் சொன்னல் சிலருக்குப் பாபம். இவ்வளவு வித்யாஸங்களும் பக்ஷபாதங்களும் ஏன் இருக் கின்றன?

இந்த விஷயங்களை யெல்லாம் சொல்லிக் கொள்வது அவமானமாக இருக்கிறதென்று நாம் நினைக்கிருேம். இவை தொலைந்தால் நல்லதென்றும் நினைக்கிருேம். இந்த வித்யாஸங்கள் பல நல்ல அம்சங்களையுடைய நமது மதத்

துக்குக் களங்கமாக இருக்கின்றன என்று சிலர் சொல்லு கிறார்கள். நன்றாக ஊன்றிப் பார்த்தால் முழுவதும் இப் படித்தான் வித்யாஸம் இருக்கிறது. நல்ல அம்சம் ஒன்று கூட இல்லையென்றே சிலசமயம் தோன்றுகிறது. இப்படிப் பலபேருக்கு இந்த விஷயங்களில் மனஸ் உறுத்திக் கொண்டே இருக்கிறது. சில பேர் ஏதாவது தெரிந்து ஸமாதானம் செய்து கொள்ளுகிறார்கள். சில சமயங்களில் சில பேர் இந்த மாதிரி வித்யாசங்களை எடுத்துக் காட்டி உறுத்தி உறுத்திச் சொல்லுகிற போது நம்முடைய மனஸ் மிகவும் கஷ்டப்படுகிறது. சில பேர் அவர்களோடு சேர்ந்தே விடுகிறார்கள். ஆனாலும் அனுஷ்டானத்தை விடுவதற்கு மனஸ் துணிவதில்லை. சண்டாளன் முதற் கொண்டு தன் அனுஷ்டானத்தை விடுவதனால் சிரமப் படுகிறான். இந்த மாதிரி விஷயங்களை யெல்லாம் யோசிக்கும் பொழுது ஒன்றுமே புரிவதில்லை.

நம்முடைய தேசத்தில் நம்மை வேறு தேசத்திலி ருந்து வந்தவர்கள் ஆளுகிறார்கள். நாமெல்லாம் அவர் களுக்கு அடங்கி நடக்கிறோம். சில தேசங்களில் அந்த அந்தத் தேசத்தார்களே ஆண்டு வருகிறார்கள். நம்மு டைய நிலைமையை ராஜாங்க ஸம்பந்தமான ப்ரஸங்கங் களைச் செய்கிறவர்களெல்லாம் அடிமைத்தனம் என்கி றார்கள். இந்த அடிமைத் தனத்திற்குக் காரணம் நாம் நமக்குள் சிலரை அடக்கி அடிமையாக நடத்திய பாபமே என்கிறார்கள். இதை எல்லோரும் பல இடங்களில் கேட்டிருப்பார்கள்.

நம்முடைய தேச ஜனங்கள் வேறு பல தேசங்க ளுக்குக் கூலி வேலைக்காகவும் வ்யாபாரத்திற்காகவும் போயிருக்கிறார்கள். அந்த இடங்களில் நம்மவர்களை

முனிஸிபாலிடியில் வெள்ளைக்காரர்கள் இருக்கும் இடங்களில் வஸிக்க விட ஸம்மதிப்பதில்லை. வண்டியில் கூட ஏற்றுவதில்லை. வீடு முதற்கொண்டு தனி. ஸஞ்சாரத்திற்கும் தனியான இடம். இதற்கென்ன காரணம்? நாம் நமக்குள் சிலபேரை விலக்கி வைத்ததே காரணம் என்கிறார்கள்.

அந்தத் தேசங்களில் ஏறக்கூடாதென்ற வண்டியில் நாம் ஏறினால் அவர்கள் நம்மை அடிப்பார்கள்; அது தான் அதற்கு ப்ராயச்சித்தம். ஆனால் நம் ஊரில் நம்மில் ஆசார ச்ரத்தையுள்ள முதியோர்கள் ஏறும் வண்டியில் ஏறக் கூடாதவன் ஒருவன ஏறினால் தாங்கள் பட்டினி கிடந்து ஸ்நானம் செய்வார்கள். மேலே சொன்ன அந்த நாடுகளில் குற்றம் செய்தவர்கள் தண்டிக்கப்படுகிறார்கள். இங்கே ஒருவர் குற்றஞ்செய்ய மற்றொருவர் தாமே தண்டனையை ஏற்றுக் கொள்ளுகிறார்.

இந்த வித்யாஸம் ஸ்வல்பமாகத் தோன்றினாலும் உண்மையைப் பார்க்கும் பொழுது இது தான் பெரிய வித்யாஸம்.

இப்பொழுது பெரியோர்களிடந்தான் நமது தர்மம் கொஞ்சம் இருந்து வருகிறது. நாம் சமையல் பண்ண வேண்டி இருந்தால் அடுப்பில் செத்தை, புல் முதலியவைகளைப் போட்டு மூட்டுகிறோம். மழை நாளாக இருக்கிறது. நெருப்பு அணைந்துவிடும் போலிருக்கிறது. கொஞ்சம் நெருப்புப் பொறிகள் மாத்திரம் பாக்கி இருக்கின்றன. அவைகளால் என்ன பண்ணுவோம் என்று நாம் விட்டுவிட மாட்டோம். விசிறி ச்ரமப்பட்டு முயற்சி செய்து மறுபடியும் பற்றவிடப் பார்ப்போம் அல்லவா? அதைப் போல் நம் முதியோர்களிடம் இருக்கும் ஆசாரத்

தையும் தர்மத்தையும் எல்லோரிடத்திலும் பரவச் செய்யலாம் என்பது எனது பேராசை. அதனால் தான் நான் இதைச் சொல்லுகிறேன்.

நம்முடைய மதம் எவ்வளவோ யுகங்களாக நீடித்து வாழ்ந்து வந்திருக்கிறது. ஏதோ ஆதாரம் இருந்துதான் இந்த மதம் இவ்வளவு நாள் பிழைத்திருக்கிறது. எந்த மதமும் இவ்வளவு தீர்க்காயுஸோடு இருந்ததாகத் தெரிய வில்லை. நம்முடைய மதத்தை நான் நம்முடைய கோயிலைப் போல நினைத்திருக்கிறேன். நம்முடைய கோயில்கள் மற்றவர்களுடைய கோயில்களைப்போலச் சுத்தமாக இல்லை. மற்ற மதத்தார்களுடைய கோயில்களோ வெள்ளை யடித்துச் சுத்தமாக வைக்கப்பட்டிருக்கின்றன. நம்முடைய கோயில்களில் முளைத்திருக்கும் மரங்களுக்குக் கணக்கே கிடையாது. அவ்வளவையும் தாங்கிக்கொண்டு நமது கோயில்கள் நிற்கின்றன. மற்ற மதத்தார்கள் கோயில்களோ இரண்டு மூன்று வருஷத்திற்கு ஒருதரம் ரிபேர் செய்யாவிட்டால் ஒரு க்ஷண நேரங்கூடத் தாங் காது. நம் கோயில்களெல்லாம் கருங்கல்லால் கட்டப்பட் டிருக்கின்றன. பல ஆயிரம் வருஷங்களுக்குமுன்பு நம் முடைய பெரியோர்கள் பலமாக அஸ்திவாரம் போட்டிருக் கிறார்கள். ஆகையால்தான் கோயில்கள் நீடித்து நிற்கின் றன. நாம் எவ்வளவோ ப்ரதிகூலங்கள் செய்துவருகி றோம். பல ஆபாஸங்களைச் செய்கிறோம். அபசாரங்களைச் செய்கிறோம். இவ்வளவுக்கும் ஈடு கொடுத்துக்கொண்டு நம்முடைய கோயில் நிற்கிறது. லோகத்திற்குள் மிகப் புராதனமான கோயில்கள் இந்தியாவில்தான் இருக்கின் றன என்று எல்லோரும் சொல்லுகிறார்கள். சீமையில் இருந்து நம்முடைய கோயில்களைப் படம் பிடிப்பதற்

காகப் பலபேர் வருகிருர்கள். ஒவ்வொரு க்ஷணமும் அழிவதற்குரிய காரணங்கள் பல இருந்தும் அவை அழியாமல் நிற்கின்றன. அவற்றை இடித்து விடலாமென்ருலோ அதுவும் ச்ரமமாக இருக்கின்றது. கட்டுவதற்கு எவ்வளவு ச்ரமப்பட்டிருக்குமோ அவ்வளவு இடிப்பதற்கும் படவேண்டும்.

நம்முடைய மதமும் இப்படித்தான் இருக்கின்றது. நமக்குத் தெரியாமல் ஏதோ ஒன்று இதைத் தாங்கிக்கொண்டு நிற்கிறது. எவ்வளவோ வித்யாஸங்கள் இருந்தாலும் இந்த மதம் அழியாமல் நிற்கிறது. முப்பது வருஷ காலமாக 'எல்லாம் ஒன்ருகவேண்டும், எல்லாம் ஒன்ருகவேண்டும்' என்ற பேச்சே எங்கும் இருக்கிறது.

ஒரு அரசர் இருக்கிருர். அவருக்குப் பல ப்ரஜைகள். ஒரு ப்ராம்மண குடும்பம் இருக்கிறது. அந்தக் குடும்பத்தில் அண்ணன் தம்பியாக இரண்டு பேர். மூத்தவர் வைதிகர் — சாஸ்திரிகள் — வேதாத்யயனம் செய்தவர். "மஹாப்ரபு தங்களுடைய க்யாதி எங்கும் பரவி இருக்கிறது. தங்களுடைய தர்மத்தை அபேக்ஷித்து நான் வந்தேன்" என்று ஸ்தோத்ரம் பண்ணிப் பல ப்ரபுக்களிடம் பணம் வாங்கிக்கொண்டு ஜீவனம் செய்து வருகிருர். இந்த வ்ருத்தியினுல் அவருக்கு நிரம்பப் பணம் கிடைக்கிறது, வைதிகர் ஆகையால் அதிகமாகச் செலவு பண்ணமாட்டார். அவருக்குப் பணம் நிறையச் சேருகிறது. அவர் தம்பி இங்கிலீஷ் வாசித்தார். ஸப் மாஜிஸ்டிரேட் உத்யோகம் பண்ணுகிருர். இங்கிலீஷ் படிப்பினுல் செலவு பண்ணும் விதங்களை நன்ருகத் தெரிந்துகொண்டார். அலங்காரம் செய்துகொள்ளவேண்டும், நல்ல உடுப்பு வேண்டும், வீடு

பெரியதாயிருக்கவேண்டும் என்று செலவு செய்கிறார். டாக்டருக்குப் பணம் கொடுத்து மருந்து சாப்பிடுகிறார். இப்படிச் செலவு பண்ணுவதால் இவருக்குப் பணம் சேர்வதில்லை. "நாம் அண்ணாவுக்கு மட்டும் எப்படிப் பணம் சேர்ந்தது?" என்று யோசித்துப் பார்த்தார். "நம் அண்ணாவைப்போல் நாமும் மஹாராஜாவின் ப்ரஜைதானே, ஏன் நாமும் அவர் செய்வதைப்போல் செய்யக்கூடாது? அவரைவிட நமக்குச் செல்வாக்கு அதிகம் இருக்கிறது" என்று நினைத்து இவரும் வாங்குந் தொழிலைச் செய்ய ஆரம்பித்தார். இது மேலதிகாரிகளுக்குத் தெரிந்தது. உடனே இவரை வேலையை விட்டுத் தள்ளிவிட்டார்கள். இவர் மேலே அப்பீல் செய்தார். "நாங்கள் இருவரும் ஒரே அரசனுடைய ப்ரஜைதானே, எனக்கு ஒரு விதி, அவருக்கு மற்றொன்றோ?" என்று இவர் கேட்டார்.

இந்தக் கேள்விகளுக்கு நம்முடைய சாஸ்த்ர ராஜ்யத்தில்தான் ஸரியான பதில் இருக்கிறது. இவர் கேட்டதோ கிறிஸ்தவ ராஜ்யத்தில். கிறிஸ்தவர்களோ எல்லாருக்கும் ஒரே விதி என்று சொன்னாலும் இந்த விஷயத்தில் அவ்வாறு நடக்க முடியவில்லை. வேறுவிதமாகச் செய்யவேண்டியிருக்கிறது. அவர்கள் மதத்தில் பத்துக் கட்டளைகளும் (Commandments) எல்லோருக்கும் ஒரே விதந்தானே? லோக நிர்வாஹத்தில் மாத்ரம் ஒரே விதமென்னு முறையை ஏன் மறுக்கிறார்கள்?

அவர்களுடைய மதம் சில கட்டளைகளுக்குள் அகப்பட்டுவிட்டது. நம்முடைய மதத்துக்கு இன்னதுதான் வரையறை என்று சொல்ல முடியவில்லை. இதுதான்

சாஸ்த்ரம் என்றும் தெரியவில்லை. அந்தச் சாஸ்த்ரங்களில் என்ன சொல்லியிருக்கிறதென்பதும் தெரியாது. விழுப்புடன் வந்தால் மேலே படக்கூடாது என்கிறோம். பறையன் வந்தால் விலகும்படி சொல்லுகிறோம். இவை போன்றவை தாம் நமக்குத் தெரியும்.

லோகம் முழுவதும் எல்லா மதங்களும் இப்படி வித்யாஸங்களுள்ள மதங்களாகவே இருந்துவிட்டால் இது தப்பென்று தோன்றாது. மற்ற மதங்களெல்லாம் ஒரே மாதிரி தர்மத்தை அநுஸரித்துவர நம்முடைய மதம் மட்டும் இப்படி இருப்பதனால்தான் தப்பாகத் தோன்றுகிறது. அந்த மதங்கள் இவ்விதம் இருப்பது நம்மைச் சுட்டிக் காட்டித் தோஷம் கூறுவதுபோல் இருக்கிறது.

இது இருக்கட்டும். மதமெனறால் என்ன? ஆத்மா கடைத்தேறுவதற்கு என்ன வழியோ அதுதான் தர்மம்; அதுதான் மதம் எனப்படுகிறது.

உடம்பிற்கு இன்ன வ்யாதி வந்திருக்கிறதென்றும் அதைப்போக்க இதுதான் மருந்தென்றும் வைத்யனுக்குத்தான் தெரியும். உடம்புக்கு வ்யாதி வராமல் காப்பவன் வைத்யன். உடம்பு இருப்பதனால் தான் வ்யாதி வருகிறது. நமக்கு உடம்பே வராமல் இருந்திருந்தால் வ்யாதியே வந்திருக்காது. வ்யாதிக்குக் காரணமும் இடமுமாகிய உடம்பே வராமல் இருக்க ஒரு வழி இருக்கிறது. அந்த வழியைச் சொல்லும் ஒரு வைத்யர் நான் சொல்வதை நம்பு என்று சொல்லுகிறார். அவர் தாம் தர்மசாஸ்த்ரகாரர். அவருக்கு மனு என்று பெயர். தர்மசாஸ்த்ரகாரரை வைத்யரென்று நான் மட்டும் சொல்லவில்லை; "மனு சொன்னதுதான் பேஷஜம்" என்று வேதமும் சொல்லுகிறது.

यद्वै किं च मनुरवदत् तत् भेषजम् ।

[தைத்திரீயஸம்ஹிதை]

பேஷஜம் என்றால் மருந்தென்று அர்த்தம். உடம்பு வராமல் இருக்கும் மருந்து தர்மசாஸ்த்ரத்தில் சொல்லப் படுகிறது.

வைத்யனைப் பார்த்து நாம், "அவனுக்கு ஒருவித மருந்து, எனக்கு வேறுவித மருந்து ஏன்? அந்த ஊர் டாக்டர் செய்கிற சிகித்ஸை மாதிரி ஏன் செய்யக் கூடாது?" என்றால் அவன், "பேசாமலிரு. உனக்கொன்றும் தெரியாது" என்பான். எல்லாவற்றிற்கும் ஜலமே மருந்து என்று ஒருவர் சொல்லுகிறார். அது ஒரு வழி. அது இருக்கட்டும். மலையாளத்தில் நவரக்கழி என்று சொல்லுகிறார்கள். அதற்குக் கடுமையான பத்யங்கள் வேண்டியிருக்கின்றன. வைத்யன் சொல்லுகிறபடி நாம் பத்யம் இருக்கவேண்டியது அவசியந்தான். ஒரு வைத்யனுக்கே வ்யாதி வந்துவிட்டால் அவன் மற்றொரு வைத்யனுடைய சொற்படி கேட்டு மருந்து சாப்பிடுகிறான். உடம்பு வைத்யத்திற்கே இப்படியானால் ஆத்ம வைத்யத்தில் எவ்வளவு நம்பிக்கையும் அந்த வைத்யனிடத்தில் எவ்வளவு பக்தியும் இருக்கவேண்டும்?

மற்ற மதங்களில் உள்ள விதிகள் எல்லோருக்கும் பொதுவானவை. நமக்குள்ளும் அப்படிப் பொதுவான விதிகள் இருக்கின்றன. அவற்றைப் பொதுதர்மம் என்றும் ஸாமான்யதர்மம் என்றும் சொல்லுவோம். எல்லோரும் செய்யவேண்டியது ஸாமான்யதர்மம். தர்மசாஸ்த்ரத்தில் ஸாமான்யதர்மம் சொல்லப்பட்டிருக்கிறது. ஆத்மாவுக்கு ஏற்பட்ட வ்யாதி உடம்பு. அந்த

ஆத்ம வ்யாதியைப் போக்கும் வழிகளைச் சொல்லும் சாஸ்த்ரத்தில் எல்லா வ்யாதியஸ்தர்களுக்கும் பொதுவாகச் சில பத்யங்கள் கூறப்பட்டிருக்கின்றன. அப்படிச் சொல்லும் ஆத்ம வைத்யர்களுள் மனு என்பவர் பெரிய வைத்யர்.

अहिंसा सत्यमस्तेयं शौचमिन्द्रियनिग्रहः ।
एतान् धर्मान् समासेन चातुर्वर्ण्येऽब्रवीन्मनुः ॥

[மனுஸ்ம்ருதி, X-63.]

என்பது ஒரு ச்லோகம். இதில் நான்கு வர்ணங்கள் என்று சொல்லியிருந்தாலும் வ்யாக்யானகாரர்கள் அதற்கு ஸகல ஜாதிகள் என்று அர்த்தம் சொல்லியிருக்கிறார்கள். சில பேர் வேதத்தில் நான்கே ஜாதிகள் இருக்கின்றன என்று சொல்லுகிறார்கள். அது உண்மை அல்ல. தர்ம சாஸ்த்ரத்திலும் வேதத்திலும் உள்ள ஜாதிகள் இப்பொழுது காணப்படவில்லை. யஜுர் வேதத்தில் 3-வது அஷ்டகத்தில் 4-ம் ப்ரச்னத்தில் நரமேதப்ரகரணத்தில் நரமேதயாகத்தைப்பற்றிச் சொல்லப்படுகிறது. நரமேதம் என்பது மனிதனைப் பசுவாக வைத்துச் செய்யப்படுவது. அந்த யாகம் இந்த யுகத்தில் செய்யக்கூடாதென்று தர்மசாஸ்த்ரத்தில் தடுக்கப்பட்டிருக்கிறது. அந்த நரமேத யாகத்தைப் பற்றிச் சொல்கையில் இன்ன இன்ன தேவதைக்காக இன்ன இன்ன ஜாதி மனிதன் பசுவாக இருக்கவேண்டுமென்று சொல்லப்படுகிறது. அப்படி மனிதப்பிறவியிலுள்ள பல ஜாதிகள் அங்கே சொல்லப்படுகின்றன.

ப்ரதானமானவை நான்கு வர்ணங்கள். இவைகளுக்குள் சில கலப்பு விவாஹங்கள் சாஸ்த்ரங்களாலேயே

அநுமதிக்கப்பட்டிருக்கின்றன; சில தடுக்கப்பட்டிருக்கின்றன. அநுமதிப்படி கலந்து உண்டான ஜாதியினர் அநுலோமர் எனப்படுவார்கள். விதியை மீறி உண்டானவர் ப்ரதிலோமர். ப்ரதிலோமர்களுக்கே தீட்டுச் சொல்லப்பட்டிருக்கிறது. அப்படி உண்டான பல ஜாதிகளுக்கும் தனித்தனியே தொழில்கள் அமைத்திருக்கிறார்கள். இஹலோகத்துக்கு உபயோகமாக அந்தத் தொழில்கள் வகுக்கப்பட்டன. ஆத்மக்ஷேமத்துக்காக அவர்களுக்கு உரிய மார்க்கங்களைத் தர்ம சாஸ்த்ரங்கள் சொல்கின்றன.

ஸப்த ஸ்வரங்கள் பல வகையாகச் சேர்ந்து 72 மேளகர்த்தாக்களும் மற்ற இராகங்களும் உண்டானது போல நான்கு வர்ணங்கள் தமக்குள் கலந்து பெருகிய ஜாதிகள் பல. இவ்வளவு பிரிவுகளும் அவைகளுக்குரிய தர்மங்களும் கர்மகாண்டத்திற் சொல்லப்பட்டிருக்கின்றன.

ஞானகாண்டத்தில் ஒரு உயர்ந்த ஐக்ய நிலையை அடைந்தால் வேதமே வேதமில்லாமற் போகும். தேவர் தேவரில்லாமற் போகிறார்கள் என்று சொல்லப்படுகிறது. கூஜா, டம்ளர், குடம், செம்பு முதலிய பலவற்றில் உள்ள ஜலத்தைக் குளத்திற் கொண்டுபோய்க் கலந்து விட்டால் வித்யாஸமின்றிக் கலந்து விடுகிறது. அப்பொழுது கூஜா, டம்ளர் முதலிய வித்யாஸம் கிடையாது. கூஜா, டம்ளர் இவைகளைப் போன்றன காணும் உடல்கள்; ஜலத்தைப் போன்றது உள்ளிருக்கும் அறிவு; குளத்தைப் போன்றது பரம்பொருளென்னும் பேரறிவு; பேரறிவிற் கலந்த போது வேற்றுமைகள் அற்றுப் போகின்றன.

ஞானநிலையில் வேதம் வேதமல்லாமற் போகிறது என்று உபநிஷத் சொல்லுகிறது. அந்த உயர்ந்த நிலையில் ப்ராம்மணன் பிராம்மணனில்லாமற் போகிறான்; சண்டாளன் சண்டாளனில்லாமற் போகிறான் என்று அந்த வேதமே சொல்லுகிறது.

முன்பு நான் கூறிய மனுஸ்ம்ருதியில் பொது தர்மங்கள் பல சொல்லப்படுகின்றன.

ஸத்யம் என்பது ஒரு சிறந்த பொது தர்மம். பொய் சொல்லக் கூடாது. தாயாரிடம் பக்தி, தகப்பனாரிடம் பக்தி, குருவினிடம் பக்தி, தெய்வத்தினிடம் பக்தி, முதலியவை வேண்டும். பிறருக்கு நம்மாலான உபகாரங்களைச் செய்ய வேண்டும். இந்த்ரியங்கள் போனவழி போகாமல் அவற்றை அடக்க வேண்டும். நமக்கு எவ்வளவு அவசியமோ அவ்வளவு மட்டும் செலவுசெய்து கொண்டு மிச்சத்தை மற்றவர்களுக்காக உபயோகிக்க வேண்டும். இவைகள் ஸத்யம், ப்ரம்மசர்யம், அஹிம்ஸை, அஸ்தேயம். அபரிக்ரஹம் என்னும் பெயர்களாற் சொல்லப்படுகின்றன. நமக்கு வேஷ்டி வேண்டுமானால் இரண்டு ரூபாயில் ஒரு வேஷ்டி இருக்கிறபோது, 10 ரூபாயில் ஒரு வேஷ்டி வாங்காமல் அந்த 2 ரூபாய் வேஷ்டி வாங்கிக் கொண்டு 4 பேருக்கு 2 ரூ. வேஷ்டிகள் வாங்கிக் கொடுக்க வேண்டும். நாம் அதிக விலையுள்ள அன்னபானங்களை உபயோகிப்பதால் அதிகச்செலவு ஆகிறது. அந்தச் செலவில் கோதுமைக் கஞ்சி செய்து நாமும் சாப்பிட்டு மற்றவர்களுக்கும் கொடுக்க வேண்டும். இப்படிச் செய்வது அபரிக்ரஹமெனப்படும். இவற்றைப் போன்ற தர்மங்கள் ஸாமான்ய தர்மம் என்று சொல்லப்படும்.

இவைகளைத் தவிர விசேஷ தர்மங்களென்று சில உண்டு. ஈச்வரன் நம்மை எந்த ஜாதியில் எந்தக் குடும்பத்தில் எந்த இடத்தில் எந்த நிலையில் பிறப்பித்திருக்கின்றாரோ அதற்காகச் சில தர்மங்களுண்டு. அவைகளைத் தான் விசேஷ தர்மங்களென்று சொல்வார்கள். ப்ராம்மணனாகப் பிறந்ததற்காக அவன் செய்ய வேண்டிய சில காரியங்கள் உண்டு. பறையனாகப் பிறந்ததற்காகப் அவன் செய்ய வேண்டிய காரியங்கள் சில உண்டு. அவை வர்ண தர்மம் என்று சொல்லப்படும். பொதுவாக உள்ள தர்மங்களுக்கு மேல் ஒவ்வொருவருக்கும் அதிகப்படியான சில தர்மங்கள் உண்டு. அந்தத் தர்மத்துக்காக அவர்களுக்குச் சில ஸௌகரியங்கள் சொல்லப்பட்டிருக்கின்றன. எல்லாருக்கும் எல்லாம் பொதுவானவை என்றால் கஷ்டம்தான் அதிகமாகும். நான் ஒருவரிடம் பேசிக்கொண்டிருக்கும்போது ஒரு ஸ்த்ரீ தரிசனத்துக்கு வந்தாள். வாசலில் இருந்தவன் உள்ளே போகக்கூடாது என்றான். "அவர் உள்ளே போயிருக்கும் போது நான் ஏன் போகக்கூடாது? காங்கிரஸ்காரர்கள் பறையர்களைக் கூடக் கோயில்களிற் போகவேண்டும் என்று சொல்லுகிற இந்தக் காலத்தில் இப்படிச் சொல்லுவது தப்பு. நான் போகத்தான் போவேன்" என்று சொல்லி உள்ளே வந்துவிட்டால், நான் என்ன செய்வது? நான் அநுஷ்டானம் செய்யும்பொழுது, "ஸ்வாமிகள் எல்லோருக்கும் பொதுத்தானே? ஏன் நாம் இப்பொழுது போகக்கூடாது?" என்று எல்லோரும் உள்ளே புகுந்துவிட்டால் நான் எப்படி அநுஷ்டானம் செய்வது! டிக்கட் கொடுக்கும் இடத்தில் எல்லாரும் புகுந்துவிட்டால் டிக்கட் கொடுப்பவன் என்ன செய்வான். ஒவ்வொருவருக்கும் தங்கள் தங்கள் கடமைகளை செய்யச்

சில ஸௌகரியங்கள் இருக்கவேண்டும். ஒரு பொதுக் குடும்பத்தில் ஒருவருக்கு வியாதி உண்டானால் அவருக்குச் சில ஸௌகரியங்கள் செய்து கொடுக்கிறோம். மற்றவருக்கும் அப்படி வேண்டுமென்பது ந்யாயமா? தாயார் தூரமாக இருக்கிறாள். ஒரு தனி இடத்தில் அவள் இருக்கிறாள். "உனக்கு மட்டும் ஏன் தனியிடம்? நானும் வருகிறேன்" என்றால் அது ஸரியா? எல்லாருக்கும் பொதுவான தர்மங்களும் நம் மதத்தில் நிறைய இருக்கின்றன. கடமையைச் செய்வதற்கு சில ஸௌகரியங்கள் வேண்டுமல்லவா? வாஸ்தவத்தில் அவை ஸௌகரியங்களல்ல. அவர்களுக்குள்ள அந்த விசேஷ தர்மத்தையும் அதற்கு வேண்டிய சில ஸ்வதந்த்ரங்களையும் எல்லோரும் அங்கீகாரம் செய்யவேண்டும். ஏனென்றால் அவர்கள் செய்வது தங்களுக்காகமட்டுமல்ல; எல்லோருக்கும் ஸௌக்யம் உண்டாவதற்காகவே அவர்கள் தங்கள் விசேஷ தர்மங்களை அனுஷ்டிக்கிறார்கள்.

ஹ்ருதயத்தில் அன்பும் ஒற்றுமையும் இருக்கவேண்டும். சேர்ந்து சாப்பிடுவதால் மட்டும் ஒற்றுமை வந்து விடாது. ஒவ்வொருவரும் தங்கள் தங்கள் காரியங்களைச் செய்துகொண்டு மற்றவர்களுடைய காரியங்களும் நடக்கும்படி செய்து மனஸில் ஒற்றுமையாக இருக்கவேண்டும். சேர்ந்து சாப்பிடாவிட்டால் த்வேஷம் என்று நினைப்பது தவறு. மாமனாரிடம் மருமகள் பேசுவதில்லை; மரியாதைக்காக அப்படி இருக்கிறாள்; ஏதாவது த்வேஷம் உண்டா? ஒருவருக்கு ஏதாவது தீட்டு வந்து விட்டால் அவரோடு சாப்பிடுவதில்லை; அவரைத் தொடுவதில்லை; அதனால் த்வேஷம் உண்டா? இந்த மாதிரி உள்ளவைகளை த்வேஷமென்று சொன்னால்

சொல்பவர்பால் ஏதோ தோஷம் இருக்கும். நமக்குள்ள மனக் கலக்கத்தினல் நம்முடைய தர்மங்கள் தப்பாகத் தோற்றுகின்றன. எவ்வளவுக் கெவ்வளவு நியமங்கள் அதிகமாக இருக்கின்றனவோ அவ்வளவுக் கவ்வளவு ஸௌக்யம் அதிகம். பத்யம் கடுமையாக இருந்தால் வ்யாதி சீக்கிரம் குணமாகும்.

நம்முடைய விசேஷதர்மங்கள் அரசனில்லாமலே தேசம் நன்ருக இருக்க உபயோகப்பட்டு வந்தன. க்ராமப் பஞ்சாயத்தில் ஜாதிக்கட்டு குறையக் குறைய அக்ரமங் கள் அதிகமாகின்றன. அதனல் கலஹம் உண்டாகிறது. ஜாதிக் கட்டுப்பாடு இருந்தபோது அக்ரமத்தில் பயம் இருந்தது. ஜாதிப்ரஷ்டம் பண்ணிவிடுவார்கள் என்பத ஞல் அந்தப் பயம் உண்டாகும். அது குறையவே குற்றங்கள் அதிக மாகின்றன. ஜாதிக் கட்டுப்பாட்டால் குற்றங்களே நடக்காமல் இருந்தன. அரசன் தண்டனை அதிகாரம் செய்யவேண்டிய அவசியமே இல்லாமல் இருந்தது. அவனுடைய வேலை மேன்மேலும் ச்ரேயஸை உண்டாக்குவதுதான். இப்பொழுது இவ்வளவு போலீஸ், ராணுவம், ஜெயில் முதலியவை இருப்பதற்குக் காரணம் என்ன? ஜாதிக் கட்டுப்பாடு போனதும் வர்ணாச்ரமதர்மத்தின் குறைவுமேயாகும்.

மற்ற மதங்களில் எல்லோருக்கும் ஒரே தர்மம் இருக் கின்றது. அதனல்தான் அவைகள் அதிகப் பெருமை அடைந்திருக்கின்றன என்று நாம் நினைக்கலாம். அவை ஒரு ஸமயம் ஒரே அடியாக ஏறி நிற்கும்; ஒரு ஸமயம் இருந்த இடம் தெரியாமற் போனலும் போய்விடும்.

ஒரு பனைமரம் இருந்தது. அதன்மேல் ஓர் ஒணன் கொடி கிடுகிடென்று படர்ந்தது. சில மாதத்திற்குள்

பனைமரத்திற்கு மேல் வளர்ந்துவிட்டது. அப்பொழுது அந்த ஒணன் கொடி, "இந்தச் சில மாதமாக இந்தப் பனைமரம் ஓர் அங்குலம் கூட உயரவில்லையே! இது உபயோகம் இல்லாதது" என்று சொல்லிச் சிரித்தது. பனைமரம் சொல்லிற்று: "நான் பிறந்து பதினாயிரம் ஒணன் கொடியைப் பார்த்திருக்கிறேன். நீ பதினாயிர்த்து ஓராவது கொடி. ஒவ்வொருவரும் இப்படித்தான் கேட்கிறார்கள். எனக்கு ஒன்றும் சொல்லத் தெரியவில்லை". இந்த மாதிரிதான் நம் மதமும் பிற மதங்களும் இருக்கின்றன.

சரித்ரத்தைப் பார்த்தால் பிற மதங்கள் நம்முடைய தேசத்தில் ஒவ்வொரு காலத்தில் ஒவ்வொரு காரணத்தை முன்னிட்டுப் பரவியதாகத் தெரிகின்றது. பஞ்சகாலத்தில் ஆசை காட்டுவதால் சில மதங்கள் பரவுகின்றன. ஆகவே அவைகளின் அடிப்படை தத்வமில்லாமற் போகிறது. யுத்த காலத்தில் கலவரத்தால் சில மதங்கள் பரவின. அதிக பலசாலி ஏற்பட்டால் அவை போக வேண்டியவை தான். இப்படி எல்லோருக்கும் ஒரே தர்மமாக இருக்கும் மதங்கள் வீழ்ந்தால் அடியோடே வீழ்ந்துவிடும். தனித்தனிப் பிரிந்த தர்மங்கள் இருந்தால் அவைகள தங்களுக்குள்ளே ஒன்றையொன்று காப்பாற்றிக்கொண்டு இருக்கும். ஆகாயக்கப்பல்களில் காற்றுப்பையை (Gas bag) ஒன்றாக அமைத்தார்கள். அப்பொழுது அதில் ஓர் ஓட்டை விழுந்து விட்டால் முழுவதும் கெட்டு விடும். அதனால் பின்பு பல பைகளை வைத்தார்கள். ஒன்று ஓட்டையாகி விட்டாலும் மற்றவைகள் நன்றாக இருக்கும். அந்தப் பைகளெல்லாம் தனித்தனியே இருந்தாலும் ப்ரயோஜனம் இல்லை. எல்லாம் சேர்ந்து ஒரே இடத்தில் ஒன்றையே தாங்கிக்

கொண்டே தனித்தனியாக இருக்கவேண்டும். அது போல நம்முடைய தர்மங்கள் தனித்தனியே இருந்தாலும் அவற்றுள் ஓர் ஒற்றுமை இருக்கவேண்டும்.

இப்படி ஒவ்வொருவருக்கும் தனித்தனி வேறு வேறு விதமான தர்மங்கள் இருந்தாலும் இந்தத் தர்மா நுஷ்டானங்களில் எல்லோருக்கும் ஸமமான பலன்தான் உண்டாகின்றது. ஸமமான பலமும் உண்டாகிறது.

ஒரு ஸமூஹத்தாரை ஒரே தர்மாநுஷ்டானத்தோடு இரு என்று புதிதாக ஒரு ராஜாங்கத்தாரால் ஏற்படுத்தி வைக்கமுடியாது. அப்படிச் செய்தால் அது நிலைத்து மிருக்காது. ஒருவரை உள்ளே வரக்கூடாது என்று பல காலம் விலக்கிவைக்கமுடியாது. ஒருவர் ஒரு நாளில் செய்யாமல் தானே பிரிந்து பிரிந்து ஏற்பட்டிருப்பதனு லும், இந்தத் தர்மத்தால் இஹலோக பரலோகங்களில் க்ஷேமம் உண்டாவதாலும் அநாதிகாலந் தொடங்கி நமது தர்மம் நிலைத்திருக்கிறது. இதர மதங்களைபபோல எல் லோரும் ஒரே தர்மத்தை அநுஷ்டித்திருந்தாலும், அசட்டுத்தனமாகத் தனித்தனித் வர்ணத்திற்கேற்பட்ட தர்மங்களை எல்லோரும் அநுஷ்டித்திருந்தாலும் நமது மதம் இவ்வளவு தீர்க்காயுஸாக இருந்திருக்க முடியாது.

ஒரு வீட்டில் நான்கு ஸஹோதரர்கள் இருக்கிறார்கள். மூத்தவன் வீட்டில் இருந்துகொண்டு பூஜை செய்கிறான். அடுத்தவன் பண வரவு செலவுகளைக் கவனித்துக்கொள் கிறான். மற்றொருவன் வீட்டிற்கு வேண்டிய ஸாமான்களை வாங்கிப் போடுகிறான். கடைசி ஸஹோதரன் வயலுக் குப்போய் வ்யவஸாயத்தைக் கவனித்து வருகிறான். இப்படி வீட்டுக் காரியங்களைத் தனித்தனியே பிரித்து நடத்துதல் எல்லாருடைய க்ஷேமத்திற்காகவே. வீட்டுக்

காரியங்களும் ஸுலபமாக நடக்கின்றன. இப்படி இல்லாமல் எல்லாரும் எல்லாம் செய்ய ஆரம்பித்தால் என்ன ப்ரயோஜனம்? வீணாகக் கஷ்டந்தான் உண்டாகும். குடும்பமே நன்றாக நடக்காது. ஒருவன் செய்வது எல்லோருக்கும் நன்மை தரும். சாதுர்வர்ண்யமும் இப்படித்தான் உள்ளன. ப்ராம்மணன் தன் கர்மாக்களைப் பண்ணுவது எல்லாரையும் உத்தேசித்துத்தான். பறையனுடைய குழந்தையின் க்ஷேமத்தையும் அவை குறித்தவைதான். க்ஷத்ரியன் அரசாள்வது எல்லாருடைய நன்மையின்பொருட்டே. வைச்யன் வ்யர்பாரமும் இப்படியே. இந்த நியமத்தால் லோக வ்யவஹாரங்கள் ஸுலபமாக நடைபெறுகின்றன; க்ஷேமம் உண்டாகிறது. இது மாறினால் லோகக்ஷேமமும் மாறும். பூஜையும் கர்மாநுஷ்டானமும் பண்ணவேண்டிய ஜாதி நியமம் அதிக உடையது. அந்த நியமத்தால் யாவரும் பயனை அடைகிறார்கள். மற்றவர்கள் ஒதுங்கி நிற்பது தங்களுக்கும் ஒரு ச்ரேயஸை உண்டாக்கத்தான். நாம் செய்யும் ச்ராத்தத்திற்கு ஒரு நிமந்த்ரண ப்ராம்மணன் மடியாக வந்தால், நாம் விழுப்பாக இருந்துகொண்டு, "நீ மட்டும் மடியாக இருப்பது என்ன? நான் உன்மேற் படுவேன்" என்று சொல்லி அவ்வாறு செய்தால் யாருக்கு நஷ்டம்? இருவருக்குமல்லவா?

ஆகையால் ஒரே தர்மம் பலவகையாகப் பிரிந்து இருப்பதில் பல அநுகூலங்கள் இருக்கின்றன. நம்முடைய தர்மம் என்றும் சாவாமல் இருக்க முதலில் இதுவே ஒரு காரணமாக இருக்கிறது. தர்மங்களில் வேற்றுமையும் வேண்டும்; ஒற்றுமையும் வேண்டும். ஒரேயடியாகப் பிரிந்தே இருக்கக்கூடாது; ஒரேயடியாக

ஒன்ருக இருக்கக்கூடாது. சிலர் ஒரேயடியாகப் பிரிக்கப் பார்க்கிருர்கள்; சிலர் ஒரேயடியாகச் சேர்க்கப் பார்க்கிருர்கள்; இவ்விதமாக இரண்டும் வேண்டாம் என்று தர்மசாஸ்த்ரம் சொல்லுகிறது. நான் அதற்குப் பிரதிநிதியாக வந்திருக்கிறேன். அதனல்தான் வேற்றுமையும் வேண்டும், ஒற்றுமையும் வேண்டும், ஒரேயடியாக இரண்டும் கூடாதென்று சொல்கிறேன்.

தொடாமல் இருப்பது மரியாதையைக் காட்டுமேயொழிய த்வேஷத்தைக் காட்டாது. பலர் ஒன்று சேர்ந்து சாப்பிடுவது அவசியமில்லை யென்றும், ஜாதிவிட்டு வேறு ஜாதியில் கலப்புக் கல்யாணம் செய்வது அவசியமில்லையென்றும், இவைகள் இல்லாமலே ஜனங்கள் ஒற்றுமையாக இருக்கக்கூடுமென்றும் முக்யமான ராஜீயவாதிகள் கூறுகிருர்கள். தொடுவதும் அவசியமில்லை என்று நான் சொல்லுகிறேன். ஒன்ருகச் சாப்பிட்டுக்கொண்டும், ஒன்ருகக் கல்யாணம் பண்ணிக்கொண்டும், ஒன்ருகத் தொட்டுக் கட்டிப் புரண்டுகொண்டும் இருக்கும் மேல்நாட்டு ஜாதிகளில் எவ்வளவு போட்டிகளும் சண்டைகளும் காணப்படுகின்றன!

உண்மையில் எவ்வளவு வேற்றுமை இருந்தாலும் அன்பு இருந்தால் சாந்தம் இருக்கும். எவ்வளவு கூடி இருந்தாலும் அன்பு இல்லாவிட்டால் கலஹம்தான் உண்டாகும். எல்லா ஜாதிகளிடத்திலும் ஒரேவிதமான அன்பு இருக்கவேண்டும். நம்முடைய தாயினிடமும் குழந்தையினிடமும் எந்தவித அன்பு நமக்கு இருக்கிறதோ அத்தகைய அன்பு பறையர்களிடத்தும் இருக்க வேண்டும். என்ன விதமான கஷ்டங்கள் இருந்தாலும் அன்பை விடக்கூடாது. அந்த அன்பு தர்மமார்க்கத்

துக்கு விரோதமில்லாமல் இருக்கவேண்டும். தரித்திரத்தை நிவர்த்தி செய்வதிலோ, துன்பத்தை நீக்குவதிலோ, மற்ற ஜாதியர்களிடத்து அன்பு வைத்து நம் சக்திக்கும் மீறிச் செய்தாவது அவ்வன்பை வளர்க்க வேண்டும். நம்முடைய புத்திக்குத் தோன்றுவதெல்லாம் ஸரியென்று சொல்லமுடியாது. ஒரு ஸமயத்தில் தோன்றுவது மற்றொரு ஸமயத்தில் தோன்ருது. ஆகையால் சாந்தமாகவும் உறுதியாகவும் இருந்து தர்மத்தைக் காப்பாற்றவேண்டும். இன்றைக்கு ஒன்று சொல்பவர்களே மறுபடி வேருெரு காலத்தில் மாறி வேறு சொல்லுவார்கள். கலப்புச் சாப்பாடு, கலப்புக் கல்யாணம் இவை அவசியமில்லை யென்று ஒப்புக்கொண்டவனே, தொடுவதும் அநாவசியம் என்று சொல்லுங்காலம் வந்தாலும் வரும்.

நந்தனூர் கோயிலுக்குள் வர மாட்டேன் என்ருர். பிராம்மணர்கள் வரத்தான் வேண்டுமென்ருர்கள். ஸ்வாமி நந்தியை விலகச் செய்து காட்சி கொடுத்தார். இம்மூன்றிலும் உள்ளடங்கி யிருக்கும் தத்வந்தான் வர்ணுச்ரமதர்மம். நந்தனூர்தான் அந்தத் தர்மத்தைக் காப்பாற்றினவர் என்று சொல்லலாம்.

எந்த ஜாதியினிடத்தும் உண்மையான அன்பு ஏற்பட்டால் சாந்தம் உண்டாகும். ஒரு கிராமத்திற்கும் மற்றொரு கிராமத்திற்கும் வாய்க்கால் விஷயமாகச் சண்டை ஏற்படுகிறது. இந்தக் கிராமத்திலுள்ள பறையன் முதல் பிராம்மணர்கள் வரையில் எல்லோரும் ஒன்ருக இருப்பார்கள். அதே போல் அந்தக் கிராமத்திலும் ஒன்ருக இருப்பார்கள். இந்த ஊர்ப்பறையனும் அந்த ஊர்ப்பறையனும் ஜாதி ஒன்று தானே என்று

னிணைத்துச் சேர்ந்து கொள்ளமாட்டார்கள். ஒரு கிராமம் என்ற ஐக்கியமே இருக்கும். இந்த ஊர்ப்பறையன் அந்த ஊர்ப் பிராம்மணனோடு சண்டை போடுவான். எல்லோருக்கும் பொதுவான காரியம் ஆதலால் இங்கே ஜாதி வேற்றுமை இல்லை. ஒவ்வொருவனும் கிராமத்திற்காகச் சண்டை செய்வான். அதுபோல மன ஒற்றுமை ஏற்பட வேண்டும்.

பிராம்மணன் செய்யும் வைச்வதேவத்தில் சண்டாள பலிகொடுக்கவேண்டும் என்று சாஸ்திரம் சொல்லுகிறது. அவனுக்காக இவன் செயவதனால் இருவரிடமும் அன்பு உண்டு என்று தெரிகிறது. பழைய காலத்து கிராமங்களில் அன்பும் ஒற்றுமையும் இருந்து வந்தது. கால தேச வர்த்தமானங்களின் மாறுதலால் கிராம ஸமுதாயமும் மாறிவிட்டது. பணக்காரர்கள் பட்டணங்களுக்கு வந்துவிட்டார்கள். அங்கே ஒவ்வொருவரும் தனித்தனியே பற்றின்றி இருக்க ஆரம்பித்துவிட்டார்கள். கிராமத்தின் கட்டு விட்டுப்போய்விட்டது. இந்த ஸமயத்தில் அந்நிய மதஸ்தர்கள் புகுந்து உபதேசம் செய்தார்கள். அதனால் ஜாதிக்கட்டுப்பாடு போயிற்று. அவர்கள் தரித்திரம் அதிகமாக இருந்த காலததில் தங்கள் மதப்பிரசாரம் செய்தார்கள். கிராமத்திலிருந்த ஏழைஜனங்கள் மயங்கிவிட்டார்கள். அவர்களுடைய மதத்திற் சேர்ந்தார்கள். நம்முடைய மதத்திற் சேர்பவர்களுக்கும் மற்ற மதத்திற் சேர்பவர்களுக்கும் ஒரு பெரிய வித்தியாஸம் இருக்கின்றது. ஏழைகளும் கூலிக்காரர்களும் இந்த மதத்திலிருந்து வேறு மதங்களுக்குப் போகின்றார்கள். மற்ற மதத்தினர்களிலோ அதிகமாகத் தத்வ விசாரணை செய்தவர்கள தாம் நம்முடைய மதத்திற்கு வருகிறார்கள்.

அந்நிய மதஸ்தர்கள் புகுந்த பொழுதே நாம் நமது மதத்தினர்களைக் காப்பாற்ற முயன்றிருக்க வேண்டும். அப்பொழுது செய்யாததனால் இப்பொழுது ஒற்றுமையிற் குறைவு ஏற்பட்டிருக்கிறது.

மேல்நாட்டு அந்நிய மதஸ்தர்களை நாம் ஏன் பின்பற்ற வேண்டும். நடையுடை பாவனைகளில் அவர்கள் தாம் நம்மைப் போல் இருக்கட்டுமே என்று தைரியமாக நம் நிலையிலேயே இருக்க வேண்டும். நம் மதத்தில் எல்லாருக்கும் பொதுவாகச் சொல்லப்பட்ட தர்மங்களை நன்ருகச் செய்ய வேண்டும். வாஸ்தவமான அன்பு இருந்தால் கஷ்டங்கள் தாமே நிவர்த்தியாகும். தனித் தனியாக உள்ள தர்மங்களெல்லாம் ஒரு பொது மதத்துக்கு ஆதாரமாக இருக்கின்றன. எந்த ராஜாங்கம் வந்தாலும எது எபபடி யாஞலும் நாம் தர்மத்தை அநுஷ்டித்து வரவேண்டும். ஜீவனத்தை உத்தேசித்து தர்மங்கள் கெட்டுப் போயின. அப்படி விட்டிருக்கக் கூடாது. ஆபத்துக் காலங்களிலும் தர்மத்தில் கண் இருக்க வேண்டும; அநுஷ்டானங்களை விடக்கூடாது. ஒருவன் தன் வர்ணத்துக்குரிய அநுஷ்டானம் செய்வது பொதுவில் தேசத்துக்கே க்ஷேமத்தைத் தரும். பிராம்மணன் ஸ்நானம், ஸந்தியாவந்தனம், பூஜை முதலியவற்றைப் பறையனுடைய க்ஷேமத்தின் பொருட்டும் செய்ய வேண்டும். நம்முடைய மதரக்ஷணத்திற்குச் சாஸ்திரந்தான் வழி காட்டுகிறது. தாபத்திற்கு அன்புதான் சமனம். உண்மையாக நம்மிடம் அன்பு இருந்தால் நாம் ஜயத்தை அடைவோம். பரஸ்பர ஸஹாயத்தை அன்பு கொண்டு செய்ய வேண்டும். எந்தக் காலத்திலும் அன்பு குறையக் கூடாது. கவலையை விரட்டிவிட

வேண்டும். என்ன விபரீதம் ஏற்பட்டாலும் அன்பைக் கைவிடக்கூடாது. நம்முடைய நல்ல பிரயத்தினங்களைச் செய்து கொண்டே இருக்க வேண்டும். பரோபகாரம் செய்ய வேண்டும்.

லோகம் புரண்டுபோனாலும் நம்முடைய கடமைகளைச் செய்து கொண்டு பயமின்றி அன்புடன் ஸாமான்ய தர்மங்களை நன்றாக ரக்ஷித்து விசேஷ தர்மத்தைக் கூடிய வரைக்கும் ரக்ஷிக்க வேண்டும். அதற்குரிய சக்தியைப் பகவான் அருள்வாராக.

21 JAN 1953
...CANE P.O. MADRAS

## 5. ஸாமான்ய தர்மங்கள்

[16—10—1932]

எல்லாருக்கும் பொதுவான தர்மங்கள் இன்னவை என்பது மனுதர்ம சாஸ்திரத்தில் பின்வருமாறு சொல்லப்பட்டிருக்கிறது.

अहिंसा सत्यमस्तेयं शौचम् इन्द्रियनिग्रहः । [மனுஸ்மிருதி.]

இந்த ஐந்தும் மிகவும் முக்கியமானவை. வேதத்தில் மாத்ருபக்தி, பித்ருபக்தி, குருபக்தி, தெய்வபக்தி முதலியவைகளும் ஸாமான்ய தர்மங்களாகச் சொல்லப் பட்டுள்ளன.

இந்த ஐந்தையும்பற்றி யோசிக்கலாம்.

1. அஹிம்ஸை

அஹிம்ஸை என்பது எல்லோருக்கும் வேண்டியது. ஓர் எறும்பைக்கூட நாம் கொல்லக்கூடாது. யாருடைய சரீரத்துக்கும் ஒரு கஷ்டத்தை உண்டுபண்ணக்கூடாது. அதுதான் அஹிம்ஸை. இந்த அஹிம்ஸை யோக ஸாதனமாகச் சொல்லப்பட்டிருக்கிறது.

யோகம் என்பது என்ன? மனதை நிறுத்துதல் தான் யோகம்.

योगश्चित्तवृत्तिनिरोधः ।

என்று யோகசாஸ்திரம் சொல்லுகிறது.

மனதில் ஆசை உண்டாகிறது. பலவிஷயங்களை அது நினைக்கின்றது. அதனால் அநேகவிதமான

விகாரங்கள் உண்டாகின்றன. நமக்கு மனதினுல்தான் எல்லாவிதமான கஷ்டங்களும் உண்டாகின்றன.

मन एव मनुष्याणां कारणं बन्धमोक्षयोः । 8

என்று சொல்லியிருக்கிறது. பந்தத்துக்கும் மோக்ஷத்துக்கும் காரணம் மனதுதான் என்பது தாத்பரியம். நாம் நமது மனம் எப்படி இருக்கவேண்டுமென்று நினைக்கிருேமோ அப்படி இருக்கிறதில்லை. நாம் ஒரு வஸ்துவை நினையென்ருல் அது வேறு எங்கேயாவது போய் நிற்கிறது. ஒன்றையாவது நினைக்காமல் இரு என்ருல் அது முடியவே முடியாது. பேசாமல் இரு என்ருல் வாய் பேசாமல் இருக்கும். கண்ணைப் பார்க்காதே என்ருல் அது பார்க்காமல் இருக்கும். மனதை நினைக்காமல் இருவென்ருல் அப்படி இருப்பதில்லை. மனது நம்முடைய ஸ்வாதீனத்தில் இல்லை. நமக்கு மனது வசப்படவில்லை. நமக்கு உண்மையில் மனது ஸ்வாதீனமாக இருந்தால் நம்முடைய இஷ்டப்படி அது நடக்கவேண்டும். நினைக்காதே என்ருல் நினைக்காமல் இருக்கவேண்டும். ஆனுல் நாம் எதை நினை என்கிருேமோ அதை விட்டுவிட்டு விபரீதமான ஒன்றைத்தான் அது நினைக்கிறது. பைத்தியம் பிடித்தவன் மௌனமாக இருப்பதில்லை; வாயினுல் எதையாவது பேத்திக்கொண்டே இருக்கிருன். அவன் வாயை அடக்க முடிவதில்லை. அதுபோல நாம் மனதை அடக்க முடியவில்லை. நாம் மனதினுல் பைத்தியமாக இருக்கிருேம். நமக்குப் புத்தி ஸ்வாதீனம் இருந்தால் நாம் சொன்னபடி அது கேட்கவேண்டும். நினை என்ருல் நினைக்கவேண்டும். நில் என்ருல் நிற்கவேண்டும். அப்பொழுதுதான் அது நாம் சொன்னதைக் கேட்பது ஆகும். நமக்கு வலி உண்டா

ஞல் மனதுக்குத் தெரிகிறது. அப்பொழுது வலிக்கிற தென்று நினைக்காதே என்ருல் அது கேட்கவேண்டும். அது புத்தி ஸ்வாதீனம். புத்தி ஸ்வாதீனமாஞல் கஷ்டமில்லையென்று நினைக்கமுடியும். புலி ஒன்று பயமுறுத்திஞல் பயமுறுத்தாததுபோல் இரு என்ருல் மனது இருக்கும். அழு என்ருல் அழும். அழாதே என்ருல் அழாது. அழுவதற்குக் காரணமில்லாதபொழுதுகூட இப்பொழுது நமது மனது அழுகிறது. அப்பொழுது அழுகிறதற்குக் காரணம் இருந்தாலும் அழாதே என்ருல் அழாமல் இருக்கும். இவ்வாறு இருப்பது நிரோதம் எனப்படும். அப்பொழுது கோபிக்காதே என்ருல் அவ்வாறு இருக்கும்.

இப்பொழுது நமக்கு வாய்கூட முழுவதும் கட்டுப்படுவதில்லை. எதையாவது கன்னு பின்னுவென்று பேசிவிட்டு, "இப்படிப் பேசிவிட்டோமே!" என்று பின்பு வருத்தப்படுகிருேம். பைத்தியத்துக்கும் நமக்கும் கொஞ்சந்தான் வித்தியாஸம் இருக்கிறது. பைத்தியம்கூட, "என்னமோ சொல்கிறேன்" என்று சில ஸமயங்களில் சொல்வதுண்டு. திடீரென்று பயம் அடைகிருேம். கோபம் கொள்கிருேம். இவற்றை யெல்லாம் போக்குவதற்கு மனதை அடக்கவேண்டும்.

இவ்வாறு மனது அடங்கி நிற்பதைத் தைலதாரை போன்றது என்பார்கள். அவிச்சின்ன ஸந்தானமாகப் பார்க்கவேண்டும். மனது ஸ்வாதீனப்பட்டுவிட்டால் அது ஈசுவரனைப் பார்ப்பதைவிட மேலானது. ஈசுவரனைப் பார்ப்பதால் ஆனந்தம் உண்டாகிறது. அந்த ஆனந்தத்தில் இரு என்ருல் மனது இருந்துவருகிறது. ஸ்வாமி

யாகவே இருந்துவிடு என்றால் இருந்துவிடும். இன்னும் எது சொன்னாலும் கேட்கும். அதுதான் யோகம்.

நமக்கு எதை நினைத்தால் ஸெளக்கியம் உண்டாகுமோ அதை நினைக்காமல் மற்றவற்றை நமது மனது இப்பொழுது நினைக்கிறது. என்ன பண்ணினால் இந்த மனது ஸ்வாதீனத்துக்கு வரும்? கொஞ்சம் கோபித்துக் கொள் என்றால் கோபித்துக்கொள்ளவேண்டும். கூடாது என்றால் சும்மா இருக்கவேண்டும். இதற்கு ஒருவழி தேடவேண்டும். அதையும் சாவதற்குள் தேடவேண்டும்.

तमेवं विद्वानमृत इह भवति । [புருஷஸூக்தம்]

என்று வேதம் சொல்லுகிறது.

शक्नोतीहैव यः सोढुं प्राक् शरीरविमोक्षणात् ।
कामक्रोधोद्भवं वेगं स युक्तः स सुखी नरः ॥

[கீதை, V-23.]

காமக்குரோதங்கள் வருவதற்கு ஹேதுக்கள் இருக்கையில் அந்த வேகத்தை இந்த ஜன்மத்திலே அடக்கப் பிரயத்தினம் பண்ணவேண்டும். அப்படிச் செய்கிறவன் தான் யுக்தன். யுக்தன் என்றால் யோகத்தொடு கூடியவன் என்பது அர்த்தம். யோகங்களெல்லாம் ரிஷிகளுக்கு மாத்திரம் அல்ல. மருந்து யாருக்கு வேண்டும்? வியாதியுள்ளவனுக்கல்லவா வேண்டும்? மனோவியாதி நமக்கு இருக்கிறது. ஆகையால் நமக்குத்தான் இவை வேண்டும். மனது அடங்க வழி என்ன? இரண்டு ஸாதனங்கள் உள்ளன. பஹிரங்கஸாதனம், அந்தரங்கஸாதனம் என்று இரண்டு. அவற்றைப்பற்றித் தெரிந்தவர்களை நாம் கேட்கவேண்டும். மனதை அடக்கினவர்

களைக் கேட்கவேண்டும். கிருஷ்ண பகவான் எப்பொழுதும் மனது அடங்கினவர். நம்முடைய ஆசார்யாளும் மனது அடங்கினவர்கள். சிலபேர் பிறக்கும் பொழுதே சிவப்பாக இருக்கிறார்கள். சீமைக்குப் போய்ச் சட்டை முதலியவற்றைப் போட்டுக்கொண்டு சிலபேர் சிவப்பு ஆகிறார்கள். பிறக்கிறபொழுதே பறக்கிற பிராணிகள் இருக்கின்றன. அப்புறம் பறக்கிறவைகள் இருக்கின்றன. மீன்குட்டி பிறவியிலே நீந்துகிறது. நாம் கொஞ்ச நாள் கழித்து நீந்துகிறோம். இப்படி, பிறவியிலேயே மனது கட்டுப்பட்டவர் ஈசுவரன். அவர் எப்பொழுதும் இருப்பவர். எப்பொழுதும் மனது நின்றுள்ளவர். நாம் எல்லோரும் பிரயத்தினம் பண்ணி மனதை நிற்கச் செய்யவேண்டும். அப்படி மனதை ஸாதனங்கள் பண்ணி நிற்கச் செய்தவர்கள் வித்யாரண்யர், ஸதாசிவப்ரஹ்மேந்திரர்கள் முதலியவர்கள். இந்த இரண்டுபேரும் வழி சொல்லி இருக்கிறார்கள்.

முன்பு இரண்டுவழி என்று சொன்னேன். அவற்றில் ஒன்று பஹிரங்கஸாதனம். அதாவது—வெளியிலிருந்து உபகாரம் பண்ணுவது. தானம், தர்மம், ஸந்தியை, ஔபாஸனம், யஜ்ஞம், வேதாத்யயனம், பரோபகாரம் என்பவைகளைப் போன்றவைகள் பஹிரங்கஸாதனங்கள். இவைகளை சிரத்தையோடு நன்றாகப் பண்ணினால் மனது அந்தமாதிரி ஆகும்.

அந்தரங்க ஸாதனம் என்பது கிட்ட இருந்து உபகாரம் பண்ணுவது. மடத்தில் பூஜாகாரியங்கள் ஆக வேண்டும். வண்டிக்காரன் சமையற்காரன் முதலியவர்கள் வெளியிலிருந்து ஸாதனம் ஆகிறார்கள். தீபாராதனை போட்டுக்கொடுப்பவன், புஷ்பம் எடுத்துக்கொடுப்பவன்

முதலியவர்கள் நெருங்கியவர்கள். அந்தரங்கஸாதனங்கள் என்பவை இவர்களைப்போல் நெருங்கியவை. அவை பல. அவைகளில் ஒன்று அஹிம்ஸை. மனது சொன்னபடி கேட்க அஹிம்ஸை ஒரு ஸாதனம். மனதில் ஆகாத காரியம் ஒன்று இல்லை. அது கட்டுப்படாததனுல் ஒன்றும் செய்ய யோக்கியதை இல்லாமல் இருக்கிறது. யானை கட்டுப்படாவிட்டால் நமக்கு ஒன்றும் பிரயோஜனம் இல்லை! உபத்திரவந்தான் உண்டு. கட்டுப்பட்டுவிட்டால் எவ்வளவோ காரியங்களை ஸாதித்துக்கொள்ளலாம். இந்த மனது எவ்வளவோ யானைபலம் உடையது. விச்வாமித்திரர், ஹநுமான் முதலியவர்கள் மனோஜயம் பண்ணினவர்கள். அதனுல்தான் அவர்களுக்கு அவ்வளவு சக்தி இருந்தது. அந்த மனதுதான் நம்மிடமும் இருக்கிறது. அது சொன்னபடி கேட்கச் செய்தால் நாமும் எது வேண்டுமானுலும் பண்ணலாம். பிரபஞ்சம் முழுதும் ஒரு மனதால் ஸிருஷ்டிக்கப்பட்டது என்று வேதாந்தம் சொல்லுகிறது. எறும்பினுடைய சின்ன மனதுக்குக்கூட இந்தப் பிரபஞ்சம் போதாது.

மனது ஒரு பூதம் போன்றது. விக்ரமார்க்கன் கதையில் சொல்லப்பட்ட வேதாளத்தைப்போன்றது. வேதாளம் கட்டுப்பட்ட பின்பு எவ்வளவு காரியங்களைச் செய்ததோ அதைப்போலவே மனதும் செய்யும். அந்த மனதை நமது ஸ்வாதீனப்படுத்துவதுதான் யோகமென்பது. அந்த யோகத்திற்கு அங்கம் அஹிம்ஸை. மனதை வசப்படுத்தியவர்கள், அஹிம்ஸையை அநுஸரித்தோம், மனது வசப்பட்டது என்று சொல்லுகிறுர்கள்.

ஆகவே, இந்த அஹிம்ஸையானது மனுதர்மசாஸ்திரத்தில் ஸாமான்ய தர்மங்களுள் ஒன்ருகச் சொல்லப்பட்

டிருக்கிறது; யோகசாஸ்திரத்தில் யோகத்திற்கு அங்கமாகச் சொல்லப்பட்டிருக்கிறது. அஹிம்ஸையின் பெருமை நன்ருக விளங்குவதற்காக இவ்வளவுவிரிவாகச் சொன்னேன்.

ஒரு முக்கியப் பிரயோஜனத்துக்காக ஒரு காரியம் செய்தால் வேறு சில பிரயோஜனங்களும் உண்டாகும். அவற்றிற்கு அவாந்தரப் பிரயோஜனம் என்று பெயர். மடத்திற்குப் பூஜைதரிசனம் செய்ய வந்தோம். பூஜை தரிசனத்தோடு பல சாஸ்திரிகளுடைய உபந்யாஸங்களைக் கேட்டோம், மேளம் கேட்டோம். இவை தாமாகவே நேர்பவை. நமது உத்தேச்யம் இவைகள் அல்ல. அநேகம் பேர்களைப் பார்க்கிறோம். பல வித்வான்களையும் பக்தர்களையும் பார்க்கிறோம். இவையெல்லாம் உத்தேசிக்காத பிரயோஜனம். பூஜை தரிசனம் முக்கிய பிரயோஜனம். மற்றவைகளெல்லாம் அவாந்தரப் பிரயோஜனங்கள்.

அஹிம்ஸைக்கும் சில அவாந்தரப் பிரயோஜனங்கள் உண்டு. அஹிம்ஸையின் முக்கிய உத்தேசம் சித்தம் அடங்குவது. அதுதான் முக்கியப் பிரயோஜனம். அதைத் தவிர அவாந்தரப் பிரயோஜனம். வேறு கிடைக்கிறது.

अहिंसा प्रतिष्ठायां तत्सन्निधौ वैरत्यागः ।

[பாதஞ்ஜலயோகஸூத்ரம் 4.]

என்று யோகஸூத்ரம் சொல்லுகிறது. அஹிம்ஸையைத் திரிகரணங்களாலும் ஸாதித்துவிட்டோமானல் நமக்கு எதிரில் யாவரும் சாந்தம் அடைவார்கள்.

ஒருவன் மற்றொருவனைக் கஷ்டப்படுத்த நினைக்கக் கூடாது. வாயாலும் ஒருவனுக்குக் கஷ்டத்தைத் தரும் பேச்சைப் பேசக்கூடாது. அப்படியே சரீரத்தாலும் யாருக்கும் ஹிம்ஸையைச் செய்யக்கூடாது. ஸ்வபாவத்தில் ஒருவனுக்கும் பரஹிம்ஸைபண்ணத் தோன்றாது. ஆனால் பிறர் ஏதாவது குற்றம் செய்தால் கோபத்தினால் ஹிம்ஸை பண்ணத் தோன்றும். நம்முடைய குழந்தை கூரையில் நெருப்பு வைத்துவிட்டால் அப்பொழுது அதைக் கோபித்துக் கொள்வோமா? உடனே நெருப்பை அணைப்போம். நாளைமுதல் அப்படி நேராமல் பார்த்துக் கொள்வோம். அதைப்போலவே துன்பம் பண்ணுகிறவனிடத்திலும் நடக்க வேண்டும். குழந்தையைப் போலவே அவனைப் பாவிக்கவேண்டும். அதுதான் அஹிம்ஸை. அந்த அஹிம்ஸையால் சித்தவிருத்தி அடங்குவது முக்கியப் பிரயோஜனம். அதைத் தவிர, அவனுக்கு எதிரில் கொலைபண்ணவேண்டும் என்று வரும் கோபம் உடையவர்கள் கூடச் சாந்தம் அடைவார்கள். அவன் இருக்கும் இடத்தில் குரூரமானவர்களுக்கும் மனதில் சாந்தம் உண்டாகும். அதுதான் அஹிம்ஸையின் அவாந்தரப் பிரயோஜனம். அது தானாக வரும்.

வர்ணாச்ரமதர்மங்களில், பிராம்மண வர்ணத்திற் பிறந்து ஸந்யாஸ ஆச்ரமத்தை உடையவர்கள் அஹிம்ஸையைப் பூர்ணமாக அநுஷ்டிக்கவேண்டும். ஸந்யாஸம் வாங்கிக் கொள்ளும்பொழுதே அவர்கள்

अहिंसन् सर्वभूतान्यन्यत्र तीर्थेभ्यः ।

[சாந்தோக்யோபநிஷத்].

என்று பிரதிக்ஞை செய்து கொள்கிறார்கள், ஸகல பிராணிகளுக்கும் என்னால் பயம் இல்லை என்பது அதன்

தாத்பர்யம். கிரஹஸ்தன் ஸ்வதர்ம விஷயத்தைத் தவிர மற்றவற்றில் அஹிம்ஸையை அநுஷ்டிக்கவேண்டும். வேதத்திற் சொல்லப்பட்ட கிரியைகளில் ஹிம்ஸை இருக்கலாம். ஆதலால் அந்தக் கிரியைகளைத் தவிர மற்றவற்றில் அவன் அஹிம்ஸா அநுஷ்டானம் செய்ய வேண்டும். கௌதம தர்மஸூத்ரத்திலும் சாந்தோக்யோபநிஷத் முடிவிலும் இந்த அஹிம்ஸையைப் பற்றிய விஷயங்கள் சொல்லப்படுகின்றன. வேதவிஹித கர்மாக்களில் தவிர மற்றவற்றில் கிரஹஸ்தன் அஹிம்ஸையைக் கைக்கொள்ளவேண்டும். பூர்ணமாக அநுஷ்டானம் செய்யவேண்டியது ஸந்யாஸியின் கடமை. அவன் சமையல் பண்ணக்கூடாது; இலை பறிக்கக் கூடாது; அதைப்போன்ற வேறு காரியங்களையும் செய்யக்கூடாது.

2. ஸத்தியம்.

ஸத்தியத்திற்கு லக்ஷணம் (definition) ஒன்று உண்டு.

वाङ्मनसयोरैकरूप्यं सत्यम् ।

மனதும் வாக்கும் ஒரே விஷயத்தைச் செய்வதுதான் ஸத்தியம். மனதிலுள்ளதைச் சொல்லத்தான் பகவான் நமக்கு வாக்கைக் கொடுத்திருக்கிறார். வாக்கை அஸத்தியத்திற்கு உபயோகப்படுத்தினால் மாடாகப் பிறக்க வைப்பார். அஹிம்ஸையில் எப்படி கிரஹஸ்தனுக்கு ஒரு விலக்கு இருக்கிறதோ, அப்படி ஸத்தியத்திற்கும் ஒரு விலக்குண்டு. அஹிம்ஸையிலுள்ளது கிரஹஸ்தனுக்கு மட்டுந்தான். இது எல்லோருக்கும் உண்டு.

ஊரிலுள்ளவர்களின் தப்புக்களை எல்லாம் ஒருவன் எடுத்துச் சொல்லுகிறான். "அவன் அயோக்கியனா-

அவன் அங்கே நின்றுன். இவன் இது செய்தான்'' என்று அவன் சொல்லுகிருன். அவன் சொல்லுபவை யெல்லாம் நிஜமாக இருக்கலாம். அது வாக்கு மனதுகளின் ஐக்யமாக இருந்தாலும் ஸத்தியமாகாது.

सत्यं भूतहितं प्रियम् ।

என்று சொல்லப்பட்டிருக்கிறது. மனதிலுள்ளது வாக்கில் வரவேண்டுமென்பது பொது லக்ஷணம். எதற்காக மனதிலுள்ளதை வாக்கினுற் சொல்லவேண்டும் என்பதை யோசிப்போம். இந்தக் காரியங்களெல்லாம் நன்மையை உண்டாக்கவே செய்யப்படுகின்றன. ஸத்தியமும் நல்லதை உண்டாக்கவேண்டும். நல்லதுண்டானல் அது ஸத்தியம். கெடுதல் ஏற்பட்டால் அது ஸத்தியமாகாது. ஸத்தியமானது எல்லா ஜீவன்களுக்கும் க்ஷேமகரமாக இருக்கவேண்டும். காமத்தினுலும் குரோதத்தினுலும் ஸத்தியம் வரக்கூடாது. ஒருவனுடைய குற்றத்தை எடுத்துச் சொல்லி தூஷிக்கவேண்டும். அவனுடைய பெருமையைக் குறைக்கவேண்டும் என்ற ஆசையோடு சொல்லப்படும் வார்த்தைகள் உண்மையானவைகளாக இருந்தாலும் ஸத்தியமல்ல. ஸத்தியத்தால் ஒருவனுக்குத் தாபம் உண்டாகக்கூடாது. கஷ்டம் உண்டாகக்கூடாது. நமக்காவது வேறு பிராணிக்காவது க்ஷேமத்தை உண்டாக்கவேண்டும். அப்படி உள்ள ஸத்திய வார்த்தைகளையும் சொல்லும்போது சாந்தமாகச் சொல்லவேண்டும். கேட்பவர்களுக்கு அவை ஹிதமாக இருக்கவேண்டும். இவை வாக்கினுல் சொல்லப்படும் ஸத்தியம்.

மனதினுலும் ஸத்தியத்தை அநுஷ்டிக்கவேண்டும். பொய் சொல்ல நினைக்கக்கூடாது.

ஸ்நானம் பண்ணுமல், ஸ்நானம் பண்ணினவனைப் போல நடித்தல் முதலிய காரியங்கள் உடம்பாற் செய்யப் படும் அஸத்தியம். திரிகரணங்களாலும் ஸத்தியமாக இருக்கவேண்டும். சித்தவிருத்தி நிரோதத்திற்கு அது வும் ஒரு காரணம்.

ஸத்தியத்திற்கும் ஓர் அவாந்தரப் பிரயோஜனம் உண்டு. ஸத்தியத்தையே சொல்லிச் சொல்லிப் பழக்கம் பண்ணிவிட்டால் மனது ஸத்தியத்தையே நினைக்கும். வாக்கு ஸத்தியத்தையே சொல்லும். அப்பொழுது சொல்லப்படுபவை எல்லாம் ஸத்தியமாகும். தவறி ஒன்று சொல்லப்பட்டாலும் அந்தச் சொல் ஸத்திய மாகவே ஆகிவிடும். உள்ளத்தையே சொல்லும் வாக்கின் படியே எல்லாம் இருக்கும். தவறிச் சொன்னாலும் அப்படியே நடந்துவிடும். வார்த்தை ஸித்தியாவது ஸத் தியத்தினுல் தான். வாக்கிலிருந்து வந்தது உள்ளதாய் விடும் சக்திதான் சாபாநுக்ரஹசக்தி. ஸத்தியம் பேசுப வர்கள் இன்றைக்குப் பூர்ணிமை என்றுல் சந்திரன் அப்படியே வந்து நிற்பான். நிக்ரஹாநுக்ரஹசக்தி உண்டாகும்.

பணத்தில் நமக்கு ஆசை இல்லை என்று தோன்று கிறது. அதற்கு என்ன அடையாளம்? கனவிலும் பணம் வேண்டாம் என்ற நினைவு இருந்தால் அந்த ஆசை இல்லாதது ஸ்திர மென்று நம்பலாம். கனவில் பணத்தை ஒருவன் கொடுத்தால் 'கொண்டுவா' என்று சொனனுல் அது தப்பு. அதைப் போல கனவில்கூட ஸத்தியத்தைக் கைவிடாத ஸ்திரபாவம் வேண்டும். அப் பொழுது ஸத்தியஸித்தி உண்டாகும். நாம் சொல்வ தெல்லாம் நடக்கும்.

सत्यप्रतिष्ठायां क्रियाफलाश्रयत्वम् ।

[யோகஸூத்ரம்]

இந்த அவாந்தரப் பிரயோஜனத்தை உத்தேசித்து ஸத்தியத்தை அநுஷ்டிக்கக் கூடாது.

... ORIENTAL ...

வைராக்கியம் என்று ஒரு அந்தரங்க ஸாதனம் இருக்கிறது. ஆசையில்லாமை என்பது தான் அதன் அர்த்தம். அது மஹா பலமாகச் சொல்லப்படுகிறது. இதனுடைய அவாந்தர பலம் புதையலெல்லாம் கண் ணுக்குத் தெரியும் சக்தி. நான் வைராக்கிய முடையவன்; எனக்குப் புதையல் தெரியவில்லையே என்று ஒருவன் சொன்னால் அவனுடைய வைராக்கியம் எப்பேர்ப்பட்ட தென்பது நன்ருகத் தெரிகிறது. புதையலை எதிர் பார்த்தால் அவன் உண்மை வைராக்கியத்தை உடைய வனுகமாட்டான்.

அதைப் போலவே ஸத்தியத்தினுடைய அவாந்தரப் பிரயோஜனத்தை உத்தேசித்து அதை நாம் அநுஷ் டிக்கக்கூடாது.

3. அஸ்தேயம்.

அந்நியாய ஆசை நமக்கு இருக்கக் கூடாது. அஸ் தேயம் என்ருல் திருடாமல் இருப்பது என்பது அர்த்தம். மற்றவன் ஸொத்தை ஏமாற்றிப் பெறக்கூடாது. அடித் துப் பிடுங்கக் கூடாது. எல்லாவற்றையும் விடக் கடி தத்தின் மூலமாக திருடுவது மிகவும் மோசமான காரியம்.

4. சௌசம்.

சரீரசுத்தி மனசுத்தியை உண்டாக்கும். சரீர சுத்தத்திற்கு ஏற்பட்ட காரியங்கள் தர்மசாஸ்திரத் தில் சொல்லப்பட்டிருக்கின்றன. இப்பொழுது முப்பது அல்லது நாற்பது வருஷ காலமாக சௌசம் நமது தேசத்தில் தவறியிருக்கிறது. இன்ன இன்ன காலங் களில் இன்ன இன்ன பதார்த்தங்களைக் கொண்டு சரீரத் தைச் சுத்தி செய்து கொள்ள வேண்டும். இன்ன இன்ன

பாத்திரங்களை இன்ன விதம் சுத்தம் செய்ய வேண்டும் என்ற விஷயங்கள் சாஸ்திரங்களிற் காணப்படுகின்றன. சுத்தம் எல்லாவிதமான கர்மாக்களுக்கும் முதலில் அவசியம். அது தவருமல் இருக்க வேண்டும். இப்பொழுது நாம் மறந்து போனாலும் தெரிந்து கொண்டு அநுஷ்டானம் செய்ய வேண்டும். இதைக் கூட நாம் ஸரியாகச் செய்யா விட்டால் மனதை எப்படி அடக்குவது?

இதைக் காதில் கேட்டுவிட்டுப் போவதால் மட்டும் பிரயோஜனமில்லை. காரியத்திற் செய்யவேண்டும். நாம் க்ஷேமமாக இருக்கவேண்டுமானால் சுத்தமாக இருக்க வேண்டும். குழந்தைகள் முதற்கொண்டு விருத்தர்கள் வரையில் தங்கள் தங்களுக்கென்று ஒவ்வொரு செம்பு தனித் தனியே வைத்துக்கொள்ளவேண்டும். அதைக் கொண்டே சுத்திசெய்து கொள்ளவேண்டும். தீர்த்த பாத்திரம் தனித்தனியே வைத்துக்கொள்ளவேண்டும். மற்றவன் பாத்திரத்தில் தீர்த்தம் வாங்கிக் குடிக்கக் கூடாது. அந்த அந்தப் பாத்திரம் செய்யப்பட்ட லோஹத்திற்குத் தக்கபடி சொல்லப்பட்ட பதார்த்தங்களால் சுத்தி செய்யவேண்டும். வெள்ளிப் பாத்திரமென்றால் அதற்குச் சொல்லப்பட்ட வஸ்துவால் அதைச் சுத்தி செய்யவேண்டும். தாமிரம் முதலியவைகளானால் அதற்கு ஏற்றபடி சுத்தி செய்யவேண்டும். எங்கே சாப்பிடப்போனாலும் நம்முடைய தீர்த்த பாத்திரத்தை எடுத்துக்கொண்டு போகவேண்டும். மற்றவன் பாத்திரத்தை உபயோகிக்கக்கூடாது. இப்படி எல்லா ஜாதிகளும் செய்யவேண்டும். தங்கள் தங்கள் ஜாதிக்கேற்ற காரியங்களைச் செய்வதில் சுத்தமாக யாவரும் இருக்க வேண்டும்.

5. இந்த்ரியநிக்ரஹம்

நம்முடைய இந்திரியங்களை அவைகளின் போக்கிலே விட்டுவிடக்கூடாது. ஒவ்வோரிந்திரியத்திற்கும் இவ்வளவுதான் ஆஹாரம் கொடுக்கவேண்டும் என்று கணக்கு வைத்துக் கொள்ளவேண்டும். அநுபவம் அந்தக் கணக்குப்படி இருக்கவேண்டும். மீறினல் அவற்றை அடக்கும் சக்தி வேண்டும்.

இந்த ஐந்தும் ஆஸ்திக மதத்தை அநுஷ்டிப்பவர்களுக்கும் வைதிக மதத்தை உடையவர்களுக்கும் பிரதான தர்மங்கள் ஆகும். இவைகளை நாம் எல்லாரும் அநுஷ்டிக்க வேண்டும். இவைகள்தாம் முக்கியமான ஸாமான்ய தர்மங்கள்.

---

# 6. பரோபகாரம்*

[25—10—1932.]

உலகத்தில் இருக்கும் தேசங்களுக்குள் மிகவும் ஏழ்மையான ஸ்திதியில் இருப்பது நமது தேசம். அப்படி இருந்தாலும் இங்கே பரோபகார எண்ணம் இருக்கிறதென்பதற்கு இந்தப் பள்ளிக்கூடமே ஒரு திருஷ்டாந்தம். மற்றப் பள்ளிக்கூடங்கள் பெரும்பான்மை யாக ஸர்க்காராலும் வேறு தேசங்களிலிருந்து வந்தவர் களாலும் ஏற்படுத்தப்பட்டவை. இந்தத் தேசத்தில் உள்ளவர்கள் ஏற்படுத்தவில்லை. அவ்வளவு தரித்திர நிலையில் நம்முடைய தேசம் இருக்கிறது. சிலபேர்தான் உபகாரம் செய்யும் ஸ்வபாவம் உள்ளவர்களாக இருக் கிறார்கள்.

எல்லோருக்கும் பரோபகார எண்ணம் வேண்டும். இந்தப் பள்ளிக்கூடத்தை ஸ்தாபித்தவரைப் போன்றவர் களைப் பின்பற்றி எல்லாரும் உபகாரம் செய்யவேண்டும். பரோபகார எண்ணம் திடமாக இருந்தால் ஸௌகரியம் உள்ளபொழுது ஒரு தர்மத்தைச் செய்துவிடலாம். அந்த எண்ணமானது பால்யம் முதலே இருக்கவேண்டும். இந்தப் பள்ளிக்கூடத்தில் வாசிக்கிற பிள்ளைக ளெல்லாம் இங்கே படித்ததற்குப் பிரயோஜனமாகப் பரோபகார எண்ணத்தை உடையவர்களாக இருக்க வேண்டும். அந்த எண்ணம் இருந்து எப்பொழுதாவது ஸௌகரியம் உண்டான பொழுது ஒரு தர்மத்தைச் செய்துவிட்டால் அது என்றைக்கும் நிலைத்து நிற்கும். இந்தப் பள்ளிக்கூடத்தை ஸ்தாபித்தவருடைய தர்மம்

---

*மயிலாப்பூர் பி. எஸ். ஹை ஸ்கூலில் செய்த உபந்நியாஸம்.

அவருடைய வம்சத்திற்கு ஒரு புகழை உண்டாக்கி இருக்கிறது. எல்லோரையும் போலப் பணத்தைச் செலவழித்துவிட்டு அவர் இருந்திருந்தால் அவருக்கு இவ்வளவு புகழ் வந்திருக்காது.

ஒவ்வொருவரும் தங்கள் தங்களாலான உபகாரங்களைச் செய்யலாம். சின்னக் கிணறுவது வெட்டலாம். அதனால் எவ்வளவோ ஜனங்கள் ஆனந்தமடைவார்கள். ஆடு மாடுகள்கூட அந்த ஜலத்தைக் குடித்து ஆனந்தமடையும். கோயில் கட்டிப் பூஜை உத்ஸவம் முதலியவை நடக்கும்படி தர்மம் செய்தால் பரமாத்மாவின் அநுக்கிரஹத்தை எல்லாரும் பெறுவார்கள். ஆயுள் முழுவதும் ஆனந்தத்தை அடையலாம். நந்தவனம் வைக்கலாம். தண்ணீர்ப்பந்தல் வைக்கலாம். எல்லாத் தானங்களிலும் உயர்ந்த தானம் அன்னதானம். சத்திரம் கட்டி அன்னதானம் செய்யலாம். அந்த அன்னதானத்திலும் உயர்ந்தது வித்தியாதானம். பரோபகார எண்ணம் வேண்டும் என்ற கல்வியைப் பிள்ளைகளுக்குப் புகட்ட வேண்டும். அதனால் எல்லோருக்கும் ஆனந்தம் உண்டாகும்.

ஈசுவரன் நமக்கு ஐசுவரியத்தைக் கொடுக்கிறார். அதை வைத்துக்கொண்டு பரோபகாரம் செய்யவேண்டும். தங்கள் தங்கள் சக்திக்கு ஏற்றபடி ஒரு தர்மத்தைச் செய்யவேண்டும். நம்முடைய வாழ்க்கையில் எவ்வளவோ செலவுகள் வருகின்றன. ஒரேயடியாக நூறு அல்லது இருநூறு ரூபாய் கிடைக்கும் ஸமயம் வருகிறது. அப்பொழுது ஒரு கிணற்றை வெட்டித் தர்மம் பண்ணலாம். செய்ய முடிந்தபொழுது உடனே செய்துவிடவேண்டும். அப்புறம் செய்துகொள்ளலாமென்று நினைக்கக்கூடாது.

முந்நூறு ரூபாய்கள் இருந்தால் உடனே ஒரு சின்ன ஆலயம் கட்டலாம். ஆயிரம் ரூபாய் இருந்தால் கொஞ்சம் பெரிய ஆலயம் கட்டலாம். பத்தாயிரம் இருந்தால் ஒரு வித்தியாலயம் வைக்கலாம். உதார புத்தியுடையவர்களை நாம் நினைத்து அவர்களைப்போலப் பரோபகாரம் செய்ய எண்ணவேண்டும். அவர்களுடைய படத்தைப் பார்க்கும் பொழுதெல்லாம் நாமும் தர்மம் செய்யும் ஸங்கல்பத்தைச் செய்துகொள்ளவேண்டும். இப்படி ஒவ்வொருவரும் தங்கள் தங்களால் முடிந்த பரோபகாரத்தைச் செய்து வந்தால் உலகத்தில் துக்கமே இருக்காது. ஒவ்வொருவரும் நமக்குக் கஷ்டம் இருந்தாலும் மற்றவருக்கு உபகாரம் செய்யவேண்டும் என்ற எண்ணம் கொண்டால் அதுவே லோக துக்க நிவர்த்திக்கு ஆதாரமாகும். உபகாரம் சின்னதானாலும் பெரியதானாலும் அது உபகாரந் தான்.

ஆகையால் நம்முடைய ஜன்மாவில் நாம் ஒவ்வொருவரும் நம் சக்திக்கு இயன்றபடி ஒரு நிலையான தர்மத்தைச் செய்து இஹலோக க்ஷேமத்தையும் பரலோக இன்பத்தையும் அடையவேண்டும்.

# 7. விநயஸம்பத்

[11—11—1932.]

ஸ்ரீ சங்கராசார்ய ஸ்வாமிகள் ஸௌந்தர்யலஹரியை இயற்றி இருக்கிறார்கள். அம்பிகை ஸகல ஸௌபாக்கியங்களுக்கும் இருப்பிடம். ஸௌந்தர்யஸ்வரூபி. லஹரி என்பதற்குப் பிரவாஹம் என்று அர்த்தம். ஸௌந்தர்யமே ஒரு பெரிய பிரவாஹமாக வந்தமாதிரி இருப்பதால் அதற்கு ஸௌந்தர்யலஹரி என்ற பெயர் வந்தது. அதில் அநேக சுலோகங்களைச் சொல்லிக் கடைசியில் எல்லாவற்றையும் அம்பாளிடத்தில் அர்ப்பணம் செய்திருக்கிறார்.

யாராவது ஒரு ஸ்தோத்திரக்கிரந்தம் எழுதினால் கடைசியில் தம்முடைய பெயரை வைத்திருப்பார்கள். 'இது இன்னாரால் செய்யப்பட்டது. இதைப் பாராயணம் பண்ணினால் இன்ன இன்ன பலன் உண்டாகும்' என்று சொல்லுவார்கள். ஸாக்ஷாத் அம்பிகையின் ஸ்வரூபத்தை வர்ணித்து ஸ்தோத்திரம் செய்த ஸ்ரீ ஆசார்யர்கள் கடைசியில் என்ன சொல்லியிருக்கிறாரென்பதை அறிய வேண்டும் என்ற ஓர் ஆசை தோன்றும்.

மற்றவர்களெல்லாம் தங்களைப்பற்றி எழுதிக்கொள்ளுகிறார்கள். ஈசுவரனே ஒரு புஸ்தகம் எழுதினால் என்ன எழுதியிருப்பார்? ஸ்ரீ ஆசார்யஸ்வாமிகள் ஈசுவராவதாரமாகையால் அவர் என்ன எழுதியிருக்கிறாரென்பதைப் பார்த்தால் போதும்.

நம்முடைய நிலைமையிலிருந்து பார்த்தால் மிகவும் அஹம்பாவப்படலாம் என்று தோன்றுகிறது. எல்லோருக்கும் மேலானவராகையால் வணக்கமே வேண்டாம் என்று எண்ணுவோம். எல்லோரிலும் உயர்ந்தவர் ஆனாலும் மனுஷ்யாவதாரம் எடுத்தபடியால் மனிதர்கள் இருக்கிறபடி இருக்கவேண்டும். அப்பொழுதுதான் அவதாரப் பிரயோஜனம் உண்டாகும். அஹம்பாவத்தைக்

குறைத்துக் கொண்டு மனிதனுக இருக்க வேண்டும். முறைப்படி எவ்வாறு இருக்க வேண்டுமோ அவ்வாறு இருக்கவேண்டும். மிகவும் தாழ்மையோடு இருக்க வேண்டும். அந்த மாதிரி இருந்து கொண்டு நமக்கு ஒரு நிதர்சனமாக நடித்துக் காட்டி யிருக்கிறுர். அதனுல் தான் அம்பாளை ஸ்தோத்திரம் பண்ணினுர். இல்லா விட்டால் வேண்டியதில்லை. பக்தருடைய நிலையில் அவ தாரம் பண்ணினுர். அதனுல் ஸ்தோத்திரம் பண்ணி யிருக்கிறுர். ஸீதாதேவி காட்டுக்குப் போகும்போது கங்கையைத் தாண்டுகையில் "ஹே கங்கே! நாங்கள் ஸௌக்கியமாகத் திரும்பி வந்தால் ஆயிரம் கள் குடம் வைத்து உன்னை ஆராதிக்கிறேன்" என்று பிரார்த்தனை செய்தாள். லக்ஷ்மியாகிய அவள் எதற்காக அப்படி வேண்டிக் கொள்ள வேண்டும்? அது லோக வழக்கம். ஸாமான்ய ஸ்திரீயாக இருந்தால் எப்படி நடக்க வேண்டுமோ அப்படி நடக்க வேண்டுமென்று அவ்வாறு வேண்டிக் கொண்டாள். அதைப் போல ஸ்ரீ ஆசார்யர் களும் ஸாதாரண பக்தருடைய நிலையில் இருந்து ஸ்தோத் திரம் செய்திருக்கிறுர்.

அவர் பல சுலோகங்களால் அம்பாளை ஸ்தோத் திரம் செய்து விட்டுக் கடைசியில் ஒரு சுலோகம்சொல்லி யிருக்கிறுர்.

प्रदीपज्वालाभिर्दिवसकरनीराजनविधिः
सुधासूतेश्चन्द्रोपलजललवैरघ्र्यरचना ।
स्वकीयैरम्भोभिः सलिलनिधिसौहित्यकरणं
त्वदीयाभिर्वाग्भिस्तव जननि वाचां स्तुतिरियम् ॥

[ஸௌந்தர்யலஹரீ' 100.]

ஸ்தோத்திரம் பண்ணின வாக்கிற்கும் யாவருக்கும் அம்பிகை ஜனனி. காளிதாஸன்கூட வாக்குக்குப் பார்வதியைத் தேவியாகச் சொல்லி யிருக்கிறான். "நான் ஸ்தோத்திரம் பண்ணி யிருக்கின்றேன். எதைக்கொண்டு பண்ணினாய் என்று கேட்டால், நீதான் வாக்ஜனனியாக இருப்பதால் உன்னிட மிருந்ததைக் கொண்டு பண்ண வேண்டாமென்று பார்த்தேன். உன்னை ஸ்தோத்திரம் பண்ண வேறெங்கே போகிறது? அவர்கள் வீட்டுப் பழத்தைப் பறித்து அவர்களுக்கே கொடுத்தேன் என்பதைப் போல நான் சொல்லி யிருக்கின்றேன். நீதான் எல்லா வாக்குக்கும் இருப்பிடம். நீயே வாக்ஜனனீ என்றால் எல்லா வாக்கும் உன்னுடையவைகளாகும். நீயே வாக்காக இருக்கின்றாய். உன்னுடைய வாக்கைக் கொண்டே உன்னை ஸ்தோத்திரம் பண்ண எப்படி தைரியம் வந்தது?

ஸங்கிராந்தியில் ஒவ்வொரு வீட்டிலும் சூரிய நாராயண பூஜை செய்வதுண்டு. சூரியன் மாதிரி கோலம் போட்டுப் பூஜை பண்ணுவார்கள். அர்க்கியம் பாத்தியம் முதலிய எல்லாம் கொடுத்துப் பூஜை பண்ணிக் கற்பூர ஹாரத்தி காட்டுவார்கள். அதைப் பார்த்து ஸ்ரீ ஆசார்யர்கள் 'நாமும் அம்பிகையை ஸ்தோத்திரம்' பண்ணலாம் என்று எண்ணினார், 'ஸர்வப்பிரகாசகனான சூரியனுக்கு நீராஜனம் பண்ணின மாதிரி நான் பண்ணினேன்' என்று சொல்லியிருக்கிறார். அமிருதமயமான கிரணன் என்பது சந்திரனுக்கு ஒரு பெயர். அவன் மிகவும் சீதளமானவன். சந்திரகாந்தக்கல்லில் சந்திரப்பிரகாசத்தால் ஜலம் ஊறும். அந்த ஜலத்தைக்கொண்டு சந்திரனுக்கு அர்க்கியம் கொடுப்பதுபோல நான் ஸ்தோத்திரம் பண்ணி யிருக்கிறேனென்று ஸ்ரீ ஆசார்யர்கள் சொல்லியிருக்கிறார்கள். மூன்றாவதாக ஓர் உபமானம் சொல்லியிருக்

கிருர். ராமேசுவரத்தில் ஸமுத்திரராஜனுக்குப் பூஜை செய்வதுண்டு. அதைப் பண்ணுவதற்கு வீட்டிலிருந்து ஒரு சிறிய பாத்திரத்தில் ஜலம் கொண்டுபோய் 'ஆபோ ஹி ஷ்டா' என்ற மந்திரத்தைச் சொல்லி ஸமுத்திரத்திற்குப் புரோக்ஷணம் செய்வதுண்டு. அதைப்போல நான் செய்தேனென்று அடுத்தபடியாகச் சொல்லியிருக்கிருர். இந்தக் காரியங்களை யெல்லாம் செய்கிறபொழுது நான் செய்வது மட்டும் தப்பா? என்று அவர் எண்ணினர். எல்லா ஸ்தோத்திரமும் பண்ணி அம்பிகைக்கே அர்ப்பணம் (Dedicate) பண்ணினர்.

ஸ்ரீ ஆசார்யர்கள் எதற்கு மேலே நினைக்கமுடியாதோ அந்தத் தத்துவத்தைச் சொன்னவர். அவரே இப்படித் தாழ்மையோடு சொல்லியிருக்கிருர். 'ஸாக்ஷாத் வாக்தேவியாகிய உன்னுடைய வாக்கிலிருந்து கோடியில் ஒன்றை எடுத்து உன்னை ஸ்தோத்திரம் செய்திருக்கிறேன். அங்கிகரிக்கவேண்டும்' என்ருர்.

இந்த ஒரு சுலோகத்தைப் பாராயணம் பண்ணினல் ஸௌந்தர்யலஹரி முழுவதையும் பாராயணம் பண்ணின பலன் உண்டாகும். ஸகல வித்தைகளையும் பாராயணம் பண்ணின பலனும் உண்டாகும். எப்படி?

विद्याविनयसम्पन्ने ब्राह्मणे गवि हस्तिनि ।
शुनि चैव श्वपाके च पण्डिताः समदर्शिनः ॥

[கீதை, V-11.]

என்பது சாஸ்திரம்.

எல்லா வித்தைகளுக்கும் பிரயோஜனம் விநயஸம்பத். ஸகல விநயமும் இந்த சுலோகத்தில் இருக்

கிறது. எதற்கு மேல் விஜயம் இல்லையோ அவ்வளவு விஜயம் இதில் இருக்கிறது. ஆகையால் இதைப் பாராயணம் பண்ணினால் எல்லா வித்தைகளையும் தெரிந்து அநுபவித்து விஜயம் உண்டான பலன் ஏற்படும். ஸ்ரீ ஆசார்யர்களுடைய வாக்கைப் பாராயணம் பண்ண வேண்டும் என்ற ஆசையிருந்தால் இந்த சுலோகத்தைப் பாராயணம் பண்ணுவதே போதும். எல்லா வித்தைகளுக்கும் முடிவான விஜயஸம்பத் இதில் இருக்கிறது. பூஜை செய்யும்போது ஈசுவரனுக்கு எல்லா உபசாரங்களையும் பண்ணிவிட்டுக் கடைசியில் நீராஜனம் பண்ண வேண்டும். இதில் நீராஜனம் இருக்கிறது. எல்லாவற்றிற்கும் முடிந்த தத்துவத்தை இந்தச் சுலோகம் சொல்லுவதற்கு இதுவும் ஓர் அடையாளம்போல் இருக்கிறது.

21 JAN 1953
CANE P.O. MADRAS

# 8. இந்திரியநிக்ரஹம்

[15—1—1933]

இரவில் இருட்டினவுடன் ஒரு பிரகாசமுண்டாகிறது. ஆகையால் இருட்டால்தான் பிரகாச மேற்படுகிறது. பிரகாசமுண்டாவதற்கு இருட்டு காரணம். வெளிச்சமே ஒரு இருட்டாகவுமிருக்கிறது. இப்பொழுது ஆகாயத்தில் ஜ்யோதிர்மண்டலங்கள் இருக்கின்றன. ஆனால் அவை தெரியவில்லை. ஆகையால் இப்பொழுதுள்ள வெளிச்சமானது இருட்டின குணமுடையதாக விருக்கிறது. இரவு வந்து இருட்டினவுடன், நக்ஷத்திரங்கள் முதலிய மண்டலங்கள் தெரிகின்றன. வேதாந்தத்திலும் அப்படியே. சிவஸ்வரூபம் விளங்கினால் உலகம் மறையும். உலகம் விளங்கினால், சிவஸ்ரூபம் மறையும். ஸ்ரீகிருஷ்ணன் கீதையில் இப்படி ஒரு கருத்தைச் சொல்லியிருக்கிறார்:—

"யா நிசா ஸர்வபூதாநாம் தஸ்யாம் ஜாகர்தி ஸம்யமீ !
யஸ்யாம் ஜாக்ரதி பூதானி ஸா நிசா பச்யதோ முனே:"

[கீதை, II.—69.]

நிசா என்றால் ராத்திரி; ஜாக்ரதி என்றால் விழித்துக் கொண்டிருக்கிறது, பூதங்கள் என்றால் பிராணிகள், பூத ப்ரேதங்கள் அல்ல; சுலோகத்தின் கருத்து மொத்தமாக 'எல்லாப் பூதங்களுக்கும் எப்பொழுது இருட்டோ அப்பொழுது அடக்கமுள்ளவன் விழித்துக் கொண்டிருக்கிறான்' என்பது. 'ஸம்யமி' என்ற பதத்தில் 'ஸம்' என்பதற்கு நன்றாக என்றும் 'யமி' என்பதற்கு அடக்கிக் கொண்டிருப்பவன் என்றும் அர்த்தம். யமன் என்ற சொல்லில் யமி என்ற பாகத்துக்கு அடக்கிக் கொண்டிருப்பவன் என்றுதான் அர்த்தம். எல்லோரையும்

அடக்கிவைத்துக் கொண்டிருப்பவன் யமன். ஆகையால் ஸம்யமி என்ற சொல்லுக்கு நன்ருக அடக்கினவன் என்ற அர்த்தம். ஆசையையும் கோபத்தையும் நன்ருக அடக்கினவன் என்று பொருள் விரியும். கோபத்தை அடக்குதல் மிகவும் கஷ்டம். கோபத்தை அடக்கி விடவேண்டு மென்று பேசிவிடலாம். ஆனால் ஸமயத்தில் சிரமமாகவே இருக்கும். கோபத்தை அடக்குதல் துர்லபம் என்று காட்ட ஒருகதை சொல்லுவதுண்டு. ஒருவனுக்கு ஸகல நல்ல குணங்களுமிருந்தன வாயினும் கோபமதிக மிருந்தது. ஒருநாள் அவன் வீட்டிற்குள் இருந்ததை அறியாத அவனுடைய இஷ்டர்கள் இருவர் திண்ணையில் உட்கார்ந்து பேசிக் கொண்டிருக்கையில் அவர்களில் ஒருவன் "அவர் நற்குண ஸம்பன்னரே, ஆனல் கோபத்தை விட்டபாடில்லை" என்று சொன்னன். உள்ளே யிருந்தவன் இதைக் கேட்டவுடன் வெளியே வந்து "யார் சொன்னர், எவர் சொன்னர்" என்று கோபித்துக் கொள்ளத் தலைப்பட்டான். திண்ணையிலிருந்தவர்களில் மற்றவன், "வேறு எவருடைய ஸாக்ஷ்யமும் அவசியமில்லை. தாங்கள் இப்பொழுது கூச்சல் போடுவதிலிருந்தே அவர் சொன்னது சரியென்று தெரிந்து விட்டது" என்ருன். கோபத்தைப் பற்றி நள சரித்திரத்திலிருந்து ஒரு விஷயத்தைக் சொல்லி விட்டு பிறகு பிரஸ்தாப "ஸம்யமி" க்கு வருகிறேன். நளனுடைய சரித்திரம் எல்லோருக்கும் தெரியும். முன்நாளில் தாயார் விடிய நாலு நாழிகை யிருக்கும்போது எழுந்திருந்து வீட்டு வேலைகளைச் செய்து கொண்டிருக்கையில் புண்ணிய கதைகளைப் பாட்டாகச் சொல்லி கொண்டே வேலைகளைச் செய்து கொண்டிருப்பாள். குழந்தைகள் அதைக்கேட்டு முதலில் புராண கதைகளைத்

தெரிந்து கொள்ளுவார்கள். பிறகு வயது வந்த காலத்தில் புராணம் சொல்லுவோர் மூலம் தெரிந்து கொள்ளுவார்கள். இவை யெல்லாம் முற்கால ஸம்பிரதாயங்கள். இப்பொழுது குறைந்து விட்டன ; ஆயினும் நாடக சாலைகளின் பலனைச் சிறிது புராணஜ்ஞானம் உண்டாகிறது. ஆனால் நாடகம் பார்க்கப் போய் நடிப்பவர்களுடைய குணங்களை கிரஹித்துக் கொண்டு வருகிறார்கள் ; பெரியோர் மூலம் புராணங் கேட்டால் புராணங்கள் உபதேசிக்கும் குணங்களைக் கிரஹிப்பார்கள். நாடக சாலைகளில் சரித்திரத்தைச் சிறிது சொல்லி விட்டு விகாரமான பாட்டுகளுக்குப் பிராதான்யம் கொடுத்து விடுவார்கள். புராணக் கதைகளைப் பாகவதர்கள் காலக்ஷேபம் செய்வதிலும் நல்ல பிரயோஜனமில்லை. ஜனங்கள் ரஞ்ஜிக்கும்படி செய்ய அவர்கள் விரும்புவார்கள். முன்னாளில் பாகவதர்களின் காலக்ஷேபம் நல்ல பலனையே கொடுத்து வந்தது. இப்பொழுது அவர்களும் காலவசப்பட்டு விட்டார்கள். பெரியோரிடத்தில் புராணங்களைக் கேட்க வேண்டியது அவசியம். ஆனால் புராணம் கட்டுக்கதை என்று சிலர் சொல்லுகிறார்கள். கட்டுக் கதையாக இருந்தாலுமென்ன? புராணம் சாந்தப்படுத்துகிறதா, இல்லையா? கடைக்கு ஒரு சாமான் வாங்கப் போகிறேன். கடைக்காரன் எப்படி இருந்தாலென்ன? சிராத்தத்திற்கு ஒரு பிராம்மணனை அழைக்கிறோம். அவருக்கு பூகோள சாஸ்திரம் ககோள சாஸ்திரம் தெரியா திருந்தாலென்ன? புராணங்களில் சொல்லப்பட்டிருக்கும் தேதிகள் சரியாயிருந்தாலென்ன, இல்லாவிடிலென்ன? தேதி எப்படி முக்கியம். இந்த கந்தஸ்வாமி கோயில் எப்பொழுது கட்டப்பட்டாலென்ன? ஸன்னிதானம் நமது துக்கத்தைப் போக்கி அருள் சுரக்குமானால் அது போதாதோ?

புராணங்களுடைய காரியம் மனதை ஒருமைப் படுத்து வதே. இனி நளன் கதைக்கு வருவோம். தூக்கத்திலி ருந்து எழுந்தவுடன் நினைக்கத்தக்கவர்களில் நளன்பெயர் முதலாகச் சொல்லப்பட்டிருக்கிறது. "புண்யச்லோகோ நளோ ராஜா" என்று சொல்லுவார்கள். நளனுடைய பெயரைச் சொன்னாலே புண்ணியமுண்டாகும். நளன் அவ்வளவு பெரியவர். கோபத்தைப் பற்றி நளசரித்தி ரத்தில் சொல்லப்பட்டிருப்பதைச் சொல்லுவதற்காக இந்தப் பூர்வ பீடிகைகளைச் சொன்னேன். நமது சத்து ருக்களில் காமம் (ஆசை) முதல் சத்துரு. பாபத்தை ஸம்பாதித்துக் கொடுப்பது காமம். அதனிலும் பெரிய துவேஷி கோபம். தமயந்தியின் சுயம்வரத்திற்கு இந்தி ராதி தேவர்கள் நால்வர் வந்திருந்தனர். அவர்கள் தம யந்தி நளனிடத்தில் பிரியம் வைத்திருந்ததை அறிந்து தங்களுடைய தூதனாக தமயந்தியிடத்தில் நளனையே அனுப்பினார்கள். நளன் தேவர்களை விவாஹம் செய்து கொள்ளும்படியே தமயந்திக்கு உபதேசம் செய்தார். அவள் அதை ஏற்கவில்லை. அதன்மேல் தேவர்கள் நளன் வேஷம் போட்டுக்கொண்டு சுயம்வரத்திற்குப் போனார்கள். தமயந்தி ஸரஸ்வதியின் அனுக்கிரஹத் தால் உண்மை நளன் யார் என்பதை அறிந்து மாலையிட் டாள். தமயந்தியின் உத்தம குணத்தைத் தேவர்கள் மெச்சி அவளை ஆசீர்வதித்துவிட்டுப்போன பிறகு, கலியும், துவாபரனும் சுயம்வரத்துக்காக வந்து கொண் டிருந்தார்கள். அவர்கள் வருவதற்கு முன் விவாஹம் நடந்தது. தேவர்கள் திரும்பிப்போகையில் விவாஹ மாகி விட்டதென்று கலிக்குச் சொன்னார்கள். கலி கோபமடைந்து தான்றிக்காய் மரத்தில் ஒளிந்துகொண்டு நளன் அற்ப அபசாரம் செய்தவுடன் பிடித்துக் கொண்

டான் என்று நள சரித்திரம் சொல்லுகிறது. இந்த சரித்திரத்தை ஏழுதியுள்ள ஒரு கவி கலியின் ஸேனாதிபதிகள் அவனுடைய கீர்த்தியைச் சொல்லுவதாக காமக் குரோதாதிகளை வர்ணித்திருக்கிறார். கலியின் ஸேனாதிபதிகள், காமம், குரோதம், லோபம், மோகம், மதம், மாத்ஸர்யமென்ற ஆறு துர்க்குணங்களுமே. இந்த ஸேனாதிபதிகள் தங்கள் தங்களுடைய பிரதாபத்தைச் சொல்லிக் கொண்டு வருகிறார்கள். ஜனங்கள் நரகத்தை அடையும் படி செய்யத் தான் வல்லவன் என்று முதல் ஸேனாதிபதி காமன் சொல்லுகிறான். மனிதர் மிருகங்களிலும் கேடாக நடந்து கொள்ளும்படி செய்ய அவனுக்கு வல்லமையுண்டாம். இரண்டாவது ஸேனாதிபதி குரோதன், தன்னுடைய பிரதாபத்தைச் சொல்லுகையில், தான் ஒரு துர்க்கத்தை பிடித்திருப்பதாகவும், அதைக் காமனுடைய ஆசுகம் தாண்ட முடியாதென்றும் சொல்லுகிறான். துர்க்கம் என்றால் கோட்டை என்று கேள்விப்பட்டிருப்பீர்கள். துர் என்றால் கஷ்டப்படுதல், கம் என்றால் உள்ளே போதல். கஷ்டப்பட்டு உள்ளே போகக்கூடிய இடம் துர்க்கம். அதாவது கோட்டை. ஆசுகம் என்பது அம்பு. ஆசு என்றால் சீக்கிரம் என்று அர்த்தம். வங்காளத்தில் 'ஆஷுடோஷ்முகர்ஜி' என்று ஒருவர் இருந்தார் என்று கேள்விப்பட்டிருக்கலாம். அவருடைய சரியான பெயர் ஆசுதோஷமுகர்ஜி. பரமசிவனுக்கு ஆசுதோஷர் என்று பெயர். சீக்கிரத்தில் ஸந்தோஷப் படுகிறவர். ஆகையால் ஆசுகம் என்பது அம்பு (சீக்கிரம் செல்வது). குரோதன் 'காமனுடைய அம்பும் நுழைய முடியாத ஒரு கோட்டையை நான் பிடித்திருக்கிறேன், அது துர்வாஸருடைய ஹிருதயம்' என்று சொல்லுகிறான். துர்வாஸருடைய ஹிருதயத்தில் காமம் நெருங்க

முடியாது. ஆனால் கோபத்திற்கு இடங்கொடுத்துவிட்டார் என்றேற்படுகிறது. இந்தக் காமன் குரோதன் என்ற இருவருக்கும் இடங்கொடாதவன் ஸம்யமி. நமக்கு இருட்டு. ஸம்யமிக்கு, அதாவது காமக்குரோதங்களை நன்றாக அடக்கினவனுக்குப் பிரகாசம்.

"யஸ்யாம்' ஜாக்ரதி பூதானி ஸா நிசா பச்யதோ முனே;"

எந்த நிலைமையில் பிராணிகள் விழித்துக் கொண்டிருக்கின்றனவோ அது ஞானிக்கு இருட்டு; அதாவது நாம் லோகமென்று நினைப்பதை ஞானி லோகமென்று நினைப்பதில்லை. ஒரு புஸ்தகத்தை நிழலில் வைத்துக் கொண்டு படிக்க முடியும். நல்ல வெயிலில் வைத்துக் கொண்டு படிக்கப்பார்த்தால், கண் கூசும். அப்பொழுது பிரகாசம் இருட்டாகிவிடும். திருமூலர் இதையே வெகு அழகாகவும் இலகுவாகவும் சொல்லியிருக்கிறார். அவர் பெரிய யோகீசுவரர். சைவஸித்தாந்த சாஸ்திரங்கள் 12 திருமுறையில் திருமூலரின் திருமந்திரம் முதல் திருமுறை. ஆதியில் ஏற்பட்டது அது. ஒன்பதுகோடி வருஷம் அவர் தபஸ் செய்தார். ஆயிரம் வருஷங்களுக்கொருமுறை விழித்துக்கொண்டு ஒரு பாட்டை எழுதுவது வழக்கம். அவர் சொல்லியிருப்பதாவது :—ஒரு கோயிலுக்கு ஒரு யானை செய்யும்படி தச்சனுக்குச் சொன்னார்கள். தச்சன் யானையைச் செய்தானவுடன், மற்றொரு தச்சன் அதைப் பார்க்கப்போனான். வர்ணம் பூசப்படவில்லை. அவனுடன் அவனுடைய குழந்தையும் போயிற்று. அது யானையைக் கண்டவுடன் பயப்பட்டது. "யானை முட்டும், கிட்டப்போகாதே அப்பா" என்றது. தச்சனோ ஸமீபத்தில் போய் அது என்ன மரத்தால் செய்யப்பட்டதென்று ஆராய்ச்சி செய்தான்.

இது யானையா, மரமா? ஒருவருக்கு யானையாகவும், மற்றவருக்கு மரமாகவும் தெரிகிறது. ஒருத்தருக்கு மரம் தெரியவில்லை, யானை தெரிகிறது. "மரத்தை மறைத்தது மாமத யானை, மரத்தில் மறைந்தது மாமத யானை." இரண்டு பொருள்களில்லை, ஒன்றே உளது. யானை வேறு, மரம் வேறானால் இரண்டு பொருள்களிருக்க வேண்டும். ஆனால் ஒரே பொருள் ஒருவனுக்கு மரமாக இருக்கிறது. இன்னொருவனுக்கு யானையாக இருக்கிறது. அப்படியே, "பரத்தை மறைத்தது பார் முதல் பூதம், பரத்தில் மறைந்தது பார்திரு முதல் பூதம்." பார் என்பது பிருதிவி; கனமான சாமான்களுக்கெல்லாம் பார் என்று பெயர். பார் முதல் பூதம் என்பன. பஞ்ச பூதங்கள்: ஒளி, காற்று, வெளி, நீர், பார் ஆகியவை. காற்று வேறு, வெளி வேறு. சித்பர வெளி என்பது சிதம்பரம்.

'பரத்தை மறைத்தது பார் முதல் பூதம்' என்றார் திருமூலர். பரமாத்ம ஸ்வரூபம் எங்கிருக்கிறது? அவரை எங்கு தேடுகிறது? அவரை எது மறைத்திருக்கிறது? பரமாத்மா வேறு, பார் முதல் பூதம் வேறல்ல. இரண்டல்ல, ஒன்றுதான். இதெல்லாம் பரமாத்மாவாகத் தெரிந்துவிடின், இவை மறைந்துவிடும்.

வேதத்தின் முடிவில் பரம்பொருளின் தத்துவம் சொல்லப்பட்டிருக்கிறது. அதுதான் உபநிஷத். அதை விளக்கவே ஸ்ரீ ஆசார்யர்கள் வந்தார்கள். முதல் பாஷ்ய காரர் அவர்தான். பத்து உபநிஷத்துக்கள் முக்கிய மானவை. அந்தப் பத்தில் முதல் உபநிஷத் ஈசாவாஸ்ய உபநிஷத். அதில் ஈசனாலே உலகை மறைக்கவேண்டும் என்று சொல்லியிருக்கிறது. பரத்தில் மறையவேண்டும்

பார்முதல் பூதம் என்று அது சொல்லுகிறது. ஆனை மறைந்தால் மரம் வந்துவிடும். மரம் தோன்றிவிடின் ஆனை தோன்ருது. முதலில் துவைதம், பிறகு சிவாத்வைதம், சிவமயம். நமக்கு பரமாத்மா இருட்டில் இருக்கிருர். ஜகத்தெல்லாம் ஒளியில் இருக்கிறது. இதெல்லாம் இருட்டிவிடின் அவர் விளங்கி விடுவார். "ஈசான: ஸர்வபூதானும்" என்று வேதம் சொல்லுகிறது. இதுதான் அத்வைதம், வேதாந்தம், இரண்டில்லை என்று சொல்லுவது. இந்தக் கதைகளால் என்ன பிரயோஜனம்? பரவெளி எப்படிப் போனுலென்ன? நமக்கென்ன காரியம்; சாப்பாடு வேண்டும், பணம் வேண்டும், வம்பெதற்கு, வம்பு ஒழிந்து சாந்தம் வேண்டும், இந்தக் கதை எதற்கு என்கிருர்கள்.

வம்பு ஒழிந்து எல்லோரும் பணக்காரராகி விட்டதாகவே வைத்துக்கொள்வோம். (அது ஒரு நாளும் ஸாத்தியமில்லை.) மடத்தில் தீர்த்தம் வாங்குவதுபோல் லௌகிகத்தில் பணப்போட்டி. ஐசுவரியம் கணக்காக இருக்கிறது. பிராணிகள் நிரம்ப இருக்கிருர்கள். எல்லோருக்கும் ஆசை அதிகம். ஆகையால் பணமடைந்து சாந்தியடைய முடியப் போகிறதில்லை. முடியுமென்றே வைத்துக் கொள்ளுவோம். சுயராஜ்யம் வந்து கஷ்டம் நீங்கிவிடின் அப்புறம் என்ன செய்கிறது? இப்பொழுது கஷ்டமிருப்பதால் அதிகாரம் வந்தால் எல்லோருடைய கஷ்டத்தையும் நிவர்த்தி செய்யலாம் என்று நினைக்கிறோம்.

பணம் நிரம்ப இருந்தால் பிறரைக் கெடுக்க பிரவர்த்தி, பாபத்தை மூட்டை கட்டப் பிரவர்த்தி, வியாதியை ஸம்பாதிக்க பிரவர்த்தி. ஆகையால் எந்த ராஜ்யம் வரினும், இந்த மருந்து வேண்டும். அதை ஸ்ரீ ஆசார்

யர்கள் கொடுத்திருக்கிறார். பணக்காரனைப் பார்த்து தர்மத்தைச்செய் என்றும், ஏழையைப் பார்த்துத் துக்கப் படாதே என்றும் சொல்லக்கூடிய மருந்து. அந்த மருந்துதான். சிவாத்வைதம், சிவமயம், அதை மறந்து விடின் உலகம் பெரிய இருட்டில் அகப்பட்டுவிடும். ஸூரியன் போனாலும் பாதகமில்லை. அந்த ஒளி போகக் கூடாது.

---

21 JAN 1953
MADRAS

# 9. கோ ஸம்ரக்ஷணம்*

[12—1—1933]

கோ ஸம்ரக்ஷணம் என்பது லோகத்தில் எல்லா ஜாதியார்களாலும் செய்யக்கூடிய தர்மம். நாலு வர்ணத்தாரும் இதர ஜாதியார்களும் செய்யக்கூடிய தர்மம். நம்முடைய இந்து மதஸ்தர்களைத் தவிர பௌத்தர்களும் ஜைனர்களும் கோ ஸம்ரக்ஷணம் செய்கிறார்கள். கோவானது லோகத்திற்கே தாயாக இருக்கிறது. கோவைத் தவிர பாக்கிப் பிராணிகளில் எல்லாம் அவற்றின் சிசுக்களுக்கு மாத்திரம் பால் கொடுத்து ரக்ஷிக்கின்றன. அதுவும் கொஞ்ச காலத்திற்குத்தான். பசுவோ எந்த ஜாதிக்கும் ஆயுள் உள்ளவரையில் பால் கொடுத்து ரக்ஷிக்கிறது. இதையெல்லாம உத்தேசித்துத்தான் சாஸ்திரங்களில் கோவை ரக்ஷிக்க வேண்டுமென்று சொல்லியிருக்கிறது. வேத ஸம்பந்தமான எல்லாக் கிரியைகளிலும் "கோப்ராஹ்மணேப்ய: சுபமஸ்து நித்யம்" என்று சொல்லுவது வழக்கம். இந்த வாக்கியத்தில் பசுவைத் தான் முதன்மையாகச் சொல்லியிருக்கிறது. கோக்களும் பிராம்மணர்களும் எப்பொழுதும் மங்களமாயிருக்கட்டும் என்பது அர்த்தம். பசுவைத்தான் முதன்மையாகச் சொல்லியிருக்கிறது. பசு ஸௌக்கியமாயிருந்தால் லோகமே அதனால் ஸௌக்கியமடையும். பசுவினால் ஸகல ஜனங்களும் ஸௌக்கியமடைகிறார்கள் என்பதினால் தான் கோபூஜையைப் பிரதானமாகச் சொல்லியிருக்கிறது. கன்று தன் தாயின் பாலைக் குடித்த பிறகு மற்ற ஜனங்களுக்கும் கொடுக்கும்படியாக அவ்வளவு க்ஷீர விருத்தி பசுவுக்கு இருக்கிறது. மற்றெந்தப் பிராணி

* சென்னை, குஜராத்திப்பேட்டை ஸ்ரீ ஏகாம்பரேசுவரர் கோயில் தெருவில் செய்யப்பட்ட உபந்யாஸம்.

களுக்கும் இந்த குணம் கிடையாது. மதுரையில் வைதிக மதத்துக்கு விரோதமாகச் சமணர்களின் உபத்திரவம் அதிகமாக இருந்த காலத்தில் பாண்டிய ராஜாவின் மந்திரியான குலச்சிறையார் என்றவரும், அரசனுடைய பட்டமஹிஷியாகிய மங்கையர்க்கரசியார் என்ற உத்தமி யும் சமண மதத்தினின்றும் வைதிக ஸமயத்தைக் காப் பாற்ற வேண்டுமென்று திருஞானசம்பந்த மூர்த்திகளைப் பிரார்த்தித்தனர். அப்பொழுது சமணர்களுக்கும் திரு ஞானசம்பந்த மூர்த்திக்கும் அநேக விவாதங்கள் ஏற் பட்டுச் சமணர்களுடைய கொள்கைகள் நிலைக்காததினால் அவர்கள் தோல்வியுற்றனர். கடைசியில் ஒரு பிரதிஜ்ஞை செய்து கொண்டார்கள். அதில் வைதிக ஸமயம்தான் உண்மை என்றும், சமண ஸமயம்தான் உண்மை என்றும் தனித்தனி ஓலையில் எழுதி வைகை யாற்றின் பிரவாஹத் தில் விடுவது. அதில் எது பிரவாஹத்தை எதிர்த்துச் செல்லுகிறதோ அதுதான் உண்மையான மதமென்று முடிவுசெய்து கொண்டார்கள். அந்த ஓலையில் திருஞான சம்பந்தர் வாழ்த்துப் பதிகம் என்றதை எழுதினார். அதாவது "வாழ்க அந்தணர் வானவர் ஆன் இனம்" என்றதை முதலடியாகக் கொண்ட பதிகம். திருஞான சம்பந்த மூர்த்திகள் எழுதிய ஓலை பிரவாஹத்தை எதிர்த் துப் பத்து மைல் தூரத்திலுள்ள "திருவேடகம்" என்ற சிவஸ்தலத்தை அடைந்தது. அந்த ஸ்தலத்திலிருக்கிற பரமேசுவரனுக்கு "பத்திரிகாபரமேசுவரன்" என்று ஸம்ஸ்கிருதத்தில் பெயர். பத்திரிகை என்றால் ஏடு என்று அர்த்தம். ஏடு அங்கு தங்கியதால் சுவாமிக்கு அப்பெயர் இடப்பெற்றது. அப்பதிகத்தில் "ஆனினம் வாழ்க" என்று சொல்லப்பட்டிருக்கின்றது. ஆனினம் என்றால் பசுக்கூட்டம் என்று பொருள். அதாவது

பசுக்கூட்டம் வாழ்க என்று சொல்லப்பட்டிருக்கிறது. பசு இவ்வளவு பெருமை வாய்ந்திருப்பதினுல் யாவரும் அதைப் பூஜிப்பது அவசியம். தருமங்களைப் பொதுவாக எல்லோரும் அனுஸரித்தாலும் விசேஷித்து ஒரு ஜாதியார் அவசியம் செய்யவேண்டியது ஒன்றுென்றிருக்கிறது. வைசியர்கள் செய்யவேண்டிய தருமத்தை பகவான் கீதாசாரியரான ஸ்ரீ கிருஷ்ண பரமாத்மா பகவத் கீதையில் ஒரு சுலோகத்தினுல் சொல்லியிருக்கிறுர். (அதாவது 'கிருஷிகோரக்ஷவாணிஜ்யம் வைச்யகர்ம ஸ்வபாவஜம்') வைசியர்களுக்கு முக்கியமாக இந்த மூன்று காரியங்கள் சொல்லியிருக்கிறுர். கிருஷி என்றுல் பூமியை வைத்துக் கொண்டு உழுது சாகுபடி செய்து ஜனங்களுக்கு உபயோகப்படுத்தவேண்டியது. அடுத்தது பசுவை ஸம்ரக்ஷிக்க வேண்டியது. மூன்ருவது வியாபாரங்களினுல் பொது ஜனங்களுக்கு உபகாரம் செய்யவேண்டியது. அதாவது வியவஸாயத்தை விருத்தி செய்து அதனுல் மற்ற ஜீவராசிகளுக்கு உபகாரம் செய்யவேண்டியது வைசிய தருமம். பசுவை நன்ருக ஸம்ரக்ஷணை செய்து அதன் கன்றுக்குக் கண்டு பாக்கியுள்ள பாலை ஜனங்களுக்கு உபயோகப் படுத்துமாறு அவ்வளவு நன்ருக புஷ்டியாகப் பசுவை ஸம்ரக்ஷிப்பது ஒரு முக்கிய தருமம். வியாபாரமானது வைசியர்களுக்கு ஒரு முக்கியமான தருமம். அதாவது வெகு தூரமான தேசங்களில் விளையும் கோதுமை, பெருங்காயம் முதலியன போன்ற சாமான்களை ஓர் இடத்தில் சேகரித்து ஜனங்களுக்கு விற்று உபகாரம் செய்வதே ஒரு தருமம். ஒரு மனிதனுக்கு லக்ஷக்கணக்காக பணம் இருந்தும் பயிர் முதலியவை இல்லாத பாலைவனத்தில் உட்கார்ந்துகொண்டிருந்தால், இந்தப் பணத்தைக்கொண்டு மாத்திரம் அவன் ஜீவிக்க முடியாது.

அதேமாதிரி நெல் ஏராளமாக விளையும் தேசத்தில் நெல்லை மாத்திரம் வைத்துக்கொண்டு மற்றவை இல்லாமல் ஜீவிக்க முடியாது. ஆகையால் பல இடங்களிலிருந்து அங்கங்கே விளையும் தானியங்களைச் சேகரித்து ஓர் இடத்தில் ஜனங்களுக்கு விற்று உபகாரம் செய்வதுதான் வியாபாரம். இது வைசியருக்கு முக்கிய தருமமாக ஏற்பட்டிருக்கிறது. வைசியர்கள் நமக்கு வியாபாரம் வேண்டாமென்றிருப்பது பாபம். அதே மாதிரி ஒரு பிராமணன் ஸம்ஸாரத்தை விட்டுவிட்டு அரண்யத்தில் ஸந்நியாஸியாயிருந்துகொண்டு பணம் ஸம்பாதித்தால் அதுவும் பாபம். வியாபாரத்தை அவரவர்கள் லாபத்தை உத்தேசித்துச் செய்கிறார்கள் என்று நினைக்கக்கூடாது. ஏனென்றால் ஒரு ஸமயம் ஒரு வாரம் ஹர்த்தால் (hartal) ஏற்பட்டுக் கடைகள் யாவும் மூடப்பட்டிருந்தால் அப்பொழுது ஒரு ஸாமானும் கிடைக்கப் பெறாமல் ஜனங்கள் படும் சிரமம் சொல்ல முடியாது. ஆகையால் வியாபாரம் பொதுப் பிரயோஜனத்தை உத்தேசித்ததே தவிர சொந்தப் பிரயோஜனத்தை உத்தேசித்ததல்ல; ஆகையால் வைசியர்கள் வியாபாரத்தைத் தங்கள் லாபத்துக்காகச் செய்கிறோமென்று எண்ணாமல் பகவானால் ஏற்படுத்தப்பட்ட ஒரு காரியத்தைத் தாம் செய்கிறோமென்று நினைத்து பகவானை நினைத்துக் கொண்டு நடத்த வேண்டியது. எதற்காக இன்றைய தினம் கோபூஜையைப் பற்றிச் சொன்னேனென்றால் நாளைய தினம் கோபூஜை செய்யவேண்டிய தினமாகையாலும் அதிகமான ஆஸ்திக வைசியர்கள் கூடியிருப்பதனாலும் நான் சொன்னேன். ஆகையால் பகவான் ஸ்ரீ கிருஷ்ணன் சொன்னபடி நாம் நமது தருமத்தைச் செய்யவேண்டியது. ஆகையால் ஜனங்களும் ஆஸ்திகர்

களான வியாபாரிகளிடம் வியாபாரம் செய்யவேண்டியது. அப்பொழுதுதான் அந்த லாபம் தருமத்திற்கு உபயோகப்படும். நாஸ்திகர்களிடத்தில் வியாபாரம் செய்யக் கூடாது. செய்தால் அந்த லாபம் வேறு வழியில் செலவழியும். வியாபாரமானது வைசியர்களுக்கு விசேஷ தர்மமாக ஏற்பட்டிருக்கிறது. ஆகையால் பகவானால் ஏற்படுத்தப்பட்ட வியவஸாயம், கோரக்ஷணம், வாணிஜ்யம் என்ற மூன்று காரியங்களையும் ஈசுவர பக்தியுடன் செய்து பகவானுடைய கிருபைக்குப் பாத்திரராக வேண்டும்.

---

# 10. நாம் செய்ய வேண்டிய காரியங்கள்

[19—11—1932]

இத்தனை நாளாக நான் சொல்லிக் கொண்டு வருவதிலும், இங்கே பண்ணுவதைப் போன்ற வேறு உபந்யாஸங்களிலும், பகவத் கதைகளிலும் ஒரே தினுஸான அபிப்பிராயம் சொல்லப்படும். ஹரி கதையில் இரண்டு விதம் உண்டு. ஜனரஞ்ஜனம் உண்டாக்கிப் பணம் ஸம்பாதிக்கும் நோக்கத்தோடு பண்ணுவது ஒரு விதம்; நல்லது என்று ஆத்மார்த்தமாகப் பண்ணுவது ஒரு விதம். இந்த இரண்டும் அபிப்பிராயத்தில் ஒன்றாகத்தான் இருக்கும். ராஜாங்கக் குறைகளைச் சொல்லவும் நன்றாக நடத்தச் சொல்லவும் கூட்டங்கள் நடந்து கொண்டிருக்கின்றன. ஆசாரச் சீர்திருத் (Social Reform) தத்திற்காகச் சில கூட்டங்கள் கூடுகின்றன. ராஜாங்க ஆதரவில் நடக்கும் சில கூட்டங்கள் இருக்கின்றன. இவைகளில் ஒரு தினுஸான அபிப்பிராயம் இருக்கும். முன்பு சொன்னவைகளைப் பற்றிய ஸமாசாரம் பத்திரிகைகளில் அதிகமாய் வராது. ஜனங்களிடம் மட்டும் அந்த அபிப்பிராயம் இருக்கும். பின்பு சொன்னவைகளைப் பற்றிப் பத்திரிகைகளில் நிறைய வரும். ராஜாங்கக் கூட்டம், ராஜாங்கச் சீர்திருத்தம், ஆசாரச் சீர்திருத்தம், இவைகளைப் பற்றிய விஷயங்கள் சின்னதாக இருந்தாலும் பெரியதாகப் பத்திரிகைகளில் வந்துவிடும். முதலில் சொன்ன மூன்று வகையான இடங்களிலும் உள்ள அபிப்பிராயம், 'லோகத்திலுள்ளவர்கள் கெட்டுப்போய்விட்டார்கள்' என்பது. எங்களுக்கு

ஒரு தினுஸான எண்ணம் மனதில் இருக்கிறது. அதன்படி எல்லோரும் இருக்க வேண்டு மென்பது எங்கள் உத்தேசம். அதற்காக இவ்வளவும் செய்து வருகிறோம். சாஸ்திரம் படித்தவர்கள், பக்திமான்கள், தர்மாபிமானம் உடையவர்கள், அதைப் பண்ணு கிறவர்கள் எல்லாரும் இந்த மாதிரி இருக்கவேண்டும் என்ற அபிப்பிராயம் உடையவர்களாக இருக்கிறார்கள். அவர்களுக்கு எல்லாப் பத்திரிகைகளும் ஆதரவு. பத்திரிகைகளை வெளியிடுகிறவர்கள் அவர்கள் தாம். அவர்களுக்கும் ஓர் அபிப்பிராயம் இருக்கிறது. 'அதன் படி வரவில்லையே; அப்படி வரவேண்டும்' என்று அவர்கள் சொல்லுகிறார்கள். இரண்டுவகை யாரும் தாங்கள் தாங்கள் நினைக்கிறபடி ஆகவேண்டும் என்று ஆசைப்படுகிறார்கள். இப்படி இரண்டு தினு ஸானவர்கள்—புராணம், கதை, உபந்யாஸம் செய்கிற வர்கள், கூட்டம்போட்டுத் தீர்மானம் பண்ணுகிறவர்கள்—இரண்டு அபிப்பிராயங்களைச் சொல்லுகிறார்கள். இப்படிப் பிரிந்து குழறுபடையாக இருக்கிறது. சாஸ்திரி களுக்கும் ஸ்வாமிகளுக்கும் ஆதரவாக அகத்திலுள்ள பெண்பிள்ளைகள் இருக்கிறார்கள். அந்த அபிப் பிராயத்தை வெளியிலே சொன்னால் அவமானமாக இருக்கிறது. அகத்துக்குள்ளே இவர்களுடைய கக்ஷிக் காரர்கள் இருக்கிறார்கள். வெளியிலே அவர்கள் கக்ஷிக் காரர்கள் தொந்திரவு செய்கிறார்கள். இந்த இரண்டு பேருக்கும் நடுவில் அகப்பட்டுக்கொண்டு பலபேர் சிரமப்படுகிறார்கள். 'ஒரேவழியாக இருந்தால் சிரமம் இல்லாமல் இருக்குமே!' என்று ஸங்கடப்படுகிறார்கள். வெளியிலே ஒரு தினுஸாக இருக்கவேண்டியிருக்கிறது. அவர்கள் சொல்லுகிற யுக்தி ஸரியென்று தோன்று

கிறது. அகத்திற்கு வந்தால் பெண்களும் பெரியவர்களும் உபத்திரவப் படுத்துகிறார்கள். நூற்றில் ஒன்று அல்லது இரண்டு பேர் ஒரே தீர்மானமாக அகத்தில் உள்ளவர்கள் சொல்லுகிறபடி இருக்கவேண்டுமென்று இருந்துவிடுகிறார்கள். பிராதஸ்நானம் பண்ணிக்கொண்டு பரான்னபோஜனம் இல்லாமல் பெரியவர்கள் இருந்தபடி இருக்கிறார்கள். ஆயிரத்தில் இரண்டுபேர் 'உள்ளே சொல்லுகிறதைக் கேட்கக்கூடாது' என்று நினைக்கிறார்கள். லௌகிகப்படிதான் நடத்த வேண்டியது என்று தீர்மானித்தவர்களும் இருக்கிறார்கள். அவர்கள் லக்ஷத்தில் ஒருவராகத்தாம் இருப்பார்கள். இது தப்பு என்று வைகிறவர்கள் ஆயிரத்தில் 999 பேர் உண்டு. ஆனாலும் லௌகிகத்தின்படி நடக்க மனம் துணியாது. வெளியிலே சொல்லுகிறபடி உள்ளேயும் நடக்கவேண்டும் என்று இருக்கிறவர்கள் லக்ஷத்தில் ஒருவர்தாம். ஒன்றிலும் சேராமல் இருப்பதையும் விட்டுவிட முடியாமல் ஸங்கடப்பட்டுக் கொண்டிருப்பவர்கள்தாம் அதிகம். இது நிவர்த்தியாக வேண்டும்.

நம்மவர்கள் இரண்டையும் தீர்மானமாகக் கேட்பதில்லை. அப்படிக் கேட்க முடிவதுமில்லை. காந்தி விதவா விவாஹந்தான் பண்ணிக்கொள்ள வேண்டுமென்று சொன்னார். காந்தி படம் அநேகமாக எல்லாருடைய வீட்டிலும் இருக்கிறது. ஆனாலும் அவர் சொன்னபடி எவ்வளவு பேர் கேட்டார்கள்? நான் கிராப்பை எடுத்துவிட வேண்டுமென்று சொல்லுகிறேன். எத்தனை பேர் எடுத்தார்கள்? ஆகையால், அதையும் கேட்கத் தயாராயில்லை; இதையும் கேட்கத் தயாராயில்லை. ஸங்கடப்படுகிறார்கள்.

ஜனங்கள் நிறைய இங்கிலீஷ் படிப்பதனாலேயே இப்படி வந்திருக்கிறது. காரியம் ரொம்ப விபரீதமாகப் போகாமற்போனாலும் ரஹஸ்யமாக தப்புக்கள் நடக்கின்றன. ஆனாலும் குடும்ப முழுவதும் மாறின இடங்கள் நிரம்பக் குறைவுதான். எல்லோரும் இரண்டும் ஒன்றாவதற்கு என்ன வழி என்கிற யோசனை பண்ணுகிறார்கள். இங்கிலீஷ் வாஸனையினால் அவர்கள் சொல்லுவதில் பிரியம் உண்டாகிறது; ஆனால் இருப்பதை விடவும் முடியவில்லை. ஸங்கடமாக இருக்கிறது. ஆசாரச் சீர்திருத்தக்காரர்கள் ஒரு பக்கமும், நாங்கள் ஒரு பக்கமுமாக இரண்டுபேரும் இழுக்கிறோம். கொஞ்சம் யோசிக்கிறவர்கள் 'ஒன்றாக்க நீங்கள்தாம் வழிவிட வேண்டும்" என்கிறார்கள். என்னை லௌகிகராக வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறார்கள். அவர்களை இப்படிக் கேட்கக் காணோம். படிப்பு அந்த வாஸனை; பழக்கம் இந்த வாஸனை. பேச்சு படிப்பைச்சேர்ந்ததுதானே. ஆகையால் என்னை வந்து 'நீங்கள் அந்தக் கக்ஷிக்கு வந்துவிடுவதற்கு என்ன?" என்று கேட்கிறார்கள்.

மற்றத் தேசங்களில் இப்படியில்லை. இங்கே படிப்பு ஒரு விதமாக இருக்கிறது; வேறு தேச ஸம்பிரதாயமாக இருக்கிறது. பழைய பழக்கங்கள் அதற்கு விரோதமாக இருக்கின்றன. பழையது தப்பு என்று தீர்மானமாகத் தெரியவில்லை. பழக்கத்தைவிட முடியவில்லை. இந்த மாதிரி நிலை இந்தத் தேசத்தில்தான் இருக்கிறது. மற்றத் தேசங்களில் மதம் வேறு, படிப்பு வேறு என்பது இல்லை. நம்முடைய தேசத்திலும் முஹம்மதியர்களுக்கு இல்லை. அவர்களுக்காகத் தனியாகப் பள்ளிக்கூடங்கள் இருக்கின்றன. வேறு ஒரு ஜாதிக்குத் தனியாகவேண்டும்

என்றால் பெரிய ஆரவாரம் ஏற்பட்டு விடுகிறது. மற்றவர்களுக்குப் படிப்புக்கும் ஆசாரத்துக்கும் விரோதம் இருக்கிறது. அநுஷ்டானத்துக்கு ஆதரவு தருபவர்கள் இல்லை. மற்ற மதங்களில் மதத்தை ஒருவர் ஆதரிக்க வந்தால் எல்லோரும் வருவார்கள். நம்முடைய தேசத்தில் இரண்டுபேர் முயற்சிசெய்தால் அந்த இரண்டுபேர்தாம் இருக்கவேண்டும். பன்னிரண்டு வயதிற்குள் கன்னிகைகளுக்குக் கல்யாணம் எப்பொழுதும் பண்ணவேண்டும் என்று சொன்னால் ஸஹாயத்திற்கு ஒருவரும் வரமாட்டார்கள். ஆசாரத்தைப்பற்றிச் சொல்லுகிறவர்கள் ஸஹாயத்திற்கு ஒருவரும் வருவதில்லை. இதற்குக் காரணம் படிப்பு வேறாகவும் ஆசாரம் வேறாகவும் இருப்பதே. பௌத்தர்கள், முஹம்மதியர்கள், கிறிஸ்துவர்கள் முதலியவர்களுக்கு அப்படி இல்லை. இந்தத் தேசத்தில் நமக்குத்தான் ஸங்கடமாக இருக்கிறது. நம்முடைய தேசத்தின் ஸ்திதிக்கு என்ன காரணம் என்பதைச் சொன்னேன். பழைய காலத்தில் ஆசார அநுஷ்டானத்துக்கு எல்லாரும் ஸஹாயத்துக்கு வருவார்கள். மற்ற மதஸ்தர்கள் இப்பொழுது அப்படி இருக்கிறார்கள்.

நாங்கள், நம்முடைய பெரியவர்கள் போட்ட அமைப்பு மாறியிருக்கிறது என்பதற்காக உபந்யாஸம் பண்ணுகிறோம்; கதை பண்ணுகிறோம். "உங்களுக்கு எப்படி இருக்க வேண்டுமென்று உத்தேசம்?" என்று யாராவது கேட்டால், "நீங்கள் உங்கள் அபிப்ராயத்தைச் சொல்லுங்கள். முடியுமா, முடியாதா என்று பார்க்கிறோம். எங்களுக்கு சிரமமில்லையென்றால் பண்ண முயல்கின்றோம்" என்று சொன்னால் சுருக்கமாகச் சொல்லிவிடலாமென்று சொல்ல ஆரம்பித்தேன்.

எங்கள் உத்தேசம் புஸ்தகத்தில் இருப்பதுதான். ஏட்டுச்சுவடிகளில் இருக்கிறது. ஒவ்வொருநாளும் என்ன ப்ண்ணவேண்டும். என்ன பண்ணுமல் இருக்க வேண்டும்? பண்ண வேண்டியதைப் பண்ணுமையும் பண்ணக்கூடாததைப் பண்ணுவதும் தப்பு. ஆகையால் இரண்டையும் சொல்லவேண்டும். நடத்துவதில் இரண்டு தினுஸுகள் இருக்கின்றன. ஸரியென்று தோன்றி நடத்துவது ஒருவிதம். ஸரியென்று தோன்றுவதற்குள் எவ்வளவு நடத்தமுடியுமோ அவைகளை நடத்துவது ஒருவிதம். இவ்வளவையும் தெரிந்து கொண்டு அநுஷ்டானம் பண்ணவேண்டும்.

ஒரு சின்ன சுலோகம் இருக்கிறது. அதில் பிரதினமும் பண்ணவேண்டிய ஆறு காரியங்கள் சொல்லப் பட்டிருக்கின்றன. ஒவ்வொரு மதத்திலும் இத்தனை தரம் தொழவேண்டும் என்பது உண்டு. குடும்பத்துக்காகவும் வயிற்றுக்காகவும் செய்யவேண்டிய காரியங்களைத் தவிர செத்துப் போனதற்கப்புறமும் கௌரவமாக இருக்கச் செய்ய வேண்டிய காரியங்கள் ஆறு.

सन्ध्या स्नानं जपो होमो देवतानां च पूजनम् ।
आतिथ्यं वैश्वदेवं च षट् कर्माणि दिने दिने ॥

உடம்பு நம்மோடு இருக்கிறபொழுதும் அப்புறமும் நாம் நன்றாக இருக்க இந்த ஆறு காரியங்களையும் செய்ய வேண்டும். அந்த ஆறு எவை? அவைகள் நாம் செய்ய முடியாத காரியங்களாக இருந்து விடுமோ என்ற பயம் இருக்கலாம். அவை மிகவும் கஷ்டமான காரியங்கள் அல்ல.

முதலில் ஸ்நானம் சொல்லப்பட்டிருக்கிறது. இப்பொழுதும் நாம் ஸ்நானம் செய்து வருகிறோம். ஆனால் உடம்பு அழுக்கு நிவர்த்திக்கு மாத்திரம் பண்ணுகிறோம். சாப்பாடு எதற்தாகச் சாப்பிடுகிறோம்? சில காரியங்களை உடம்புக்கும் ஆத்மாவுக்கும் நல்லதென்று பண்ணுகிறோம். மடத்துப் பிக்ஷை சாப்பாடு சாப்பிடுகிறோம். அது உடம்பு, ஆத்மா இரண்டுக்கும் புஷ்டி தரும் என்று சாப்பிடுகிறோம். அது போல ஆத்மாவில் ஒட்டியுள்ள அழுக்கையும் மனதிலுள்ள அழுக்கையுங் கூடப் போக்கத் தக்க ஸ்நானம் பண்ணவேண்டும். இப்பொழுது பண்ணுகிற ஸ்நானமே அதற்கும் உபயோகப்பட வேண்டும். அகத்திலே சாப்பிட்டால் உடம்புக்கு மாத்திரம் புஷ்டி உண்டாகிறது. மடத்துச் சாப்பாட்டால் உடம்பு ஆத்மா இரண்டுக்கும் புஷ்டி ஏற்படுகிறது. ஸாதாரணமாகப் பண்ணும் ஸ்நானம் உடம்பு அழுக்கை மட்டும் போக்கும். மந்திரங்களோடு செய்தால் மனதின் அழுக்கையும் போக்கிவிடும்.

ஸ்நானம் செய்வதற்கு முன் ஸங்கல்பம் செய்து கொள்ள வேண்டும். ஸ்நானம் பண்ணும்பொழுது அகமர்ஷண ஸூக்தம் சொல்லவேண்டும். அப்புறம் வேஷ்டி பிழிய ஒரு மந்திரம் சொல்லவேண்டும். சிகை பிழிய ஒரு மந்திரம் சொல்லவேண்டும். அகம்-பாவம், மர்ஷணம்-அடக்குவது, ஸூக்தம்-நல்ல வார்த்தை, அகமர்ஷணஸூக்தம் என்பதற்குப் பாபத்தை அடக்கும் நல்ல வார்த்தை என்பது அர்த்தம். அதைத் தெரிந்து கொள்ள வேண்டும். வாஸோதகம் (வஸ்திரத்தைப் பிழிந்த ஜலம்), சிகோதகம் இரண்டும் நரகத்தில் உள்ளவர்களுக்கு உபயோகப்படும். அதிகமான பாபங்கள்

பண்ணினவர்களுடைய க்ஷேமத்துக்கு அவை உபயோக மாகின்றன. இப்பொழுது ஸோப்புத் தேய்த்துக் கொள்ளும் நாழிகையில் மந்திரத்தைச் சொல்லலாம். அப்படிப் பண்ணினல் ஆத்மாவுக்காக ஸ்நானம் பண்ணினதாகும்.

இரண்டாவது ஸந்தியாஜபம். ஸந்தியா வந்தன ஜபம் ஆத்மகாரியம். அதைச் செய்வதற்கு உத்தம காலம், மத்திம காலம், அதம காலம் என்று மூன்று உண்டு. காலையில் நக்ஷத்திரம் இருக்கும் பொழுதே ஆரம்பித்து ஸூரியோதயத்துக்கு முன் அர்க்கியம் கொடுப்பது உத்தமம். உதயத்தில் ஆரம்பிப்பது மத்திமம். உதயத்திற்குப் பின் செய்வது அதமம். நக்ஷத்திரம் பிரகாசிக்கிற போதே அர்க்கியம் கொடுத்து விட வேண்டும். நக்ஷத்திரம் மின்னும். கிரஹம் மின்னுது. நக்ஷத்திரம் (Star), கிரஹம் (Planet) என்ற இரண்டுக்கும் உள்ள முக்கிய வித்யாஸம் இது. நக்ஷத்திரம் ஸ்வயம் பிரகாசம் உடையது. கிரஹம் வேறு ஓரிடத்திலிருந்து ஜ்யோதிஸைப் பெற்றுக் கொள்ளும். ஸூரியனுக்கும் சந்திரனுக்கும் உள்ள வித்யாஸத்தைப் போல நக்ஷத்திரத்திற்கும் கிரஹத்திற்கும் வித்யாஸம் இருக்கிறது. கூரையிலிருந்து துவாரத்தின் வழியாக உள்ளே வெயில் விழுகிறது. ஸூரியன் வெயிலானல் அது ஆடும். சந்திரன் கிரணமானல் அசையாமல் இருக்கும். கடைசி நக்ஷத்திரம் அஸ்தமிப்பதற்குள் அர்க்கியம் கொடுத்து விட வேண்டும். ஸூர்யோதயத்துக்குள் காயத்ரீ ஜபம் செய்து விட வேண்டும். உதயமான பின் உபஸ்தானம் பண்ண வேண்டும்.

सहस्रपरमा देवी शतमध्या दशावरा ।

[தைத்திரீயாரண்யகம்]

காயத்ரீமந்திரம் ஆயிரம் ஜபிப்பது உத்தமம்; நூறு மத்தியமம்; பத்து அதமம். ஸாயங்காலத்தில் ஸூரியன் அர்த்த மண்டலமாக ஆகும்போது அர்க்கியம் கொடுக்க வேண்டும். நக்ஷத்திரோதயம் ஆகிறவரைக்கும் ஜபம் பண்ண வேண்டும். நக்ஷத்திர உதயம் ஆனவுடன் உபஸ்

தானம் பண்ண வேண்டும். ரயில் வருகிறது; ஆபீஸ் உத்தியோகம் பார்க்கிறோம். இந்த விஷயங்களில் காலந் தவறாமல் இருக்க வேண்டுமென்று எவ்வளவு ஜாக்கிரதையாக இருக்கிறோம். அப்படி ஸூரியோதமாய் விட்டால் கஷ்டமென்று இருக்க வேண்டும். மாத்தியாஹ்னிகத்திற்கு ஏற்பட்டது 10 மணி 48 நிமிஷத்துக்கு மேல் ஒரு மணிக்குள்ளான காலம். ஸூரியன் மேற்கே சாய்வதற்குள் உஷக் காலம், பிராதக் காலம், ஸங்கவகாலம், மாத்யாஹ்னிகாலம், அபராஹ்ன காலம், ஸாயங்காலம் என்று ஆறு காலங்கள் பிரிக்கப்பட்டிருக்கின்றன. உஷக் காலத்திற்கு ஐந்து நாழிகை; மற்றவைகளுக்கு ஆறு ஆறு நாழிகைகள். ஒரு நாழிகைக்கு இருபத்து நான்கு நிமிஷம். ஐந்து நாழிகை இரண்டு மணி. ஆறு நாழிகை என்பது இரண்டு மணி இருபத்துநான்கு நிமிஷம். உதயம் முதல் அஸ்தமிக்கிறவரையில் உள்ள காலங்கள் ஐந்து. ஒவ்வொன்றுக்கும் ஆறு ஆறு நாழிகையானால் மொத்தம் முப்பது நாழிகைகள் ஆகின்றன.

உஷக் காலத்தில், அதாவது உதயத்திற்கு முன் இரண்டு மணி காலத்தில், ஸ்நானமும் ஸந்தியாவந்தன ஆரம்பமும் செய்ய வேண்டும். பிராதக் காலத்தில் ஸந்தியா வந்தனமும் ஒளபாஸனமும் செய்ய வேண்டும். ஸங்கவ காலத்தில் பிராயச்சித்தங்கள், ஹோமம், க்ஷௌரம், அப்பியங்கனம் என்பவைகளைச் செய்ய வேண்டும். தீட்சா நிவர்த்திக்காக ஸ்நானம் செய்ய வேண்டுமானால் ஸங்கவகாலத்தில் தான் செய்ய வேண்டும். பிராயச்சித்த ரூபமான எல்லாக் காரியங்களும் அந்தக் காலத்திலே தான் செய்ய வேண்டும். காயத்திரீ ஜபத்தை பிராயச்சித்தமாகச் செய்தால்

ஸங்கவகாலத்தில் தான் செய்ய வேண்டும். அப்புறம் மாத்தியான்னிக காலத்தில் ஆபஸ்தம்பிகள் பிரம்மயஜ்ஞம் செய்யவேண்டும். ஆச்வலாயனிகள் ப்ராதக் காலத்தில் பிரம்மயஜ்ஞம் செய்ய வேண்டும். மாத்யான்னிக காலத்தில்தான் போஜனம் செய்ய வேண்டும். அபரான்ன காலத்தில் பிதுருகர்மாவைச் செய்ய வேண்டும். தெய்வ கர்மாக்களை ஸங்கவ காலத்தில் பண்ணவேண்டும். ஸாயங்காலம் பாராயணம் பண்ணவேண்டும். பிரதோஷ காலத்தில் ஸ்வாமி தரிசனம் செய்யவேண்டும்.

ஒரு ஜாமம் மூன்று மணியாகும்; அதாவது ஏழரை நாழிகை. ஐந்து நாழிகை உஷக் காலத்தில் போய்விடும். இரண்டரை நாழிகை பிரதோஷகாலத்தில் போய்விடும். பகற்காலத்தில் முப்பது நாழிகை போய்விடும். மிச்சம் இருப்பவை மூன்று ஜாமங்கள். அதனுல்தான் ராத்திரிக்கு திரியாமா என்று ஒரு பேர் ஏற்பட்டிருக்கிறது. பிரதோஷ காலத்தில் நித்திரை பண்ணக்கூடாது; போஜனமும் பண்ணக்கூடாது. உஷக் காலத்திலும் நித்திரை பண்ணக்கூடாது. பஞ்ச பஞ்ச உஷக் காலத்தில் நித்திரையிலிருந்து எழுந்திருக்க வேண்டுமென்று சொல்லுவதுண்டு. இருபத்தைந்து நாழிகைக்கு எழுந்திருக்க வேண்டுமென்பதை அது குறிக்கின்றது.

மூன்ருவது ஹோமம், அதாவது ஔபாஸனம், நான்காவது சிவபூஜை, தேவபூஜை. ஐந்தாவது ஆதித்யம், அதாவது அதிதிக்கு அன்னம் போடுதல்.

ஆருவது வைச்வதேவம் என்பது ஒரு ஹோமம். அது எதற்காகப் பண்ணுகிறது?

நம்முடைய அகம் கசாப்புக்கடை. அதில் ஐந்து கசாப்புக்கடைகள் இருக்கின்றன. தர்மசாஸ்திரத்தில் அப்படிச் சொல்லியிருக்கிறது. ஸங்கல்பத்தில்,

पञ्चसूना गृहस्थस्य वर्तन्तेऽहरहः सदा ।
खण्डिनी पेषणी चुल्ली जलकुम्भ उपस्करः ॥

[யமஸ்மிருதி]

என்று சொல்லி வைச்வதேவம் பண்ணவேண்டும். அந்த ஐந்து இடங்கள் எவை? அரிவாள்மணை ஒரு கசாப்புக்கடை. அதற்குக் கண்டினி என்று ஸம்ஸ்கிருதத்தில் பெயர். அதில் புடலங்காய் முதலியவைகளை நறுக்குகிறோம். கறிகாய்களும் பிராணிகள் தாமே? இரண்டாவது அம்மி. அதில் நாம் கருணையில்லாமல் தான்யாதிகளை அரைக்கிறோம். மூன்றாவது எந்திரம். நான்காவது நெல்மிஷின். சாஸ்திரத்தில் உரல் ஒன்று உலக்கை ஒன்று என்று சொல்லப்பட்டிருக்கின்றது. அவைகளுக்குப் பிரதியாக (Substitute) நெல் மிஷின் வந்திருக்கிறது. இந்த உடம்பு இருபபதறகாக எவவளவு உபத்திரவம்!? அந்தப் பிராணிகள் யாருக்காவது ஹிம்ஸை பண்ணுகின்றனவா? இதை யோசிக்கிற பொழுது இப்படி சாப்பிடவேண்டியிருக்கிறதே என்று துக்கம் உண்டாகிறது. அந்தத் தோஷங்களுக்காக வைச்வதேவம் செய்யப்படவேண்டும். ஒட குடத்தை வைக்கிறோம். கீழே எறும்பிருந்தால் நசுக்கிவிடுகிறது, நெருப்புப் போடுகிறோம்; போடுகிற இடத்தில் எறும்பு ஊர்ந்துகொண்டிருக்கும். அவை செத்துப் போய்விடும். விளக்கு வைத்தால் சில பூச்சிகள் விழுந்து இறந்துவிடும். இப்படிப் பலவிதமான ஹிம்ஸைகள் ஏற்படுகின்றன.

இந்த மாதிரி தோஷங்கள் நேர்வதால் பகவானை பிராயச்சித்துக்கொண்டு வைச்வதேவஹோமமும் வைச்வதேவ பலியும் செய்யவேண்டும். இந்தப்பிரபஞ்சத்தில் எவ்வளவு பிராணிகள் இருக்கின்றனவோ அவை எல்லாவற்றிற்கும் வைச்வதேவத்தில் பலி உண்டு. நாய், காக்கை, சண்டாளன் இவைகளுக்கெல்லாம் பலி உண்டு. அந்தப் பலிகளைக் கொடுத்தால் இவ்வகையான தோஷங்கள் எல்லாம் போகும்.

'ஷட்கர்மநிரதர்களான' என்று காகிதம் எழுதுகிற வழக்கம் உண்டு. அந்த ஷட்கர்மாக்கள் முன் சொன்னவைகள். யஜனம், யாஜனம், அத்தியயனம், அத்தியாபனம், பிரதானம், பிரதிக்ரஹம் என்று சொல்லுவது ஒருவகை. இந்த ஆறையும் பண்ணித்தான் ஆகவேண்டுமென்கிற அவசியம் இல்லை. ஸ்நானம் முதலிய ஆறையும் எல்லோரும் தினந்தோறும் பண்ணவேண்டும்.

பிதிருதர்ப்பணம் தினந்தோறும் பண்ணவேண்டும். சக்தர்களானால் சிராத்தம் தினந்தோறும் செய்ய வேண்டும். பிரம்ம யஜ்ஞம் செய்யவேண்டும். வேதத்தில் வரும் மஹரிஷிகளுக்குத் தர்ப்பணம் பண்ணவேண்டும்.

பஞ்ச மஹாயஜ்ஞங்களில் சில ஷட்கர்மாக்களில் வந்து விடுகின்றன.

எல்லோரும் தேவபூஜை பண்ணவேண்டும். எட்டு பில்வமாவது போட்டு திராக்ஷைப் பழத்தையாவது நைவேத்தியம் பண்ணிப் பூஜை பண்ணவேண்டும். சாப்பிடும்பொழுது யாராவது பிராம்மணன் இருந்தால் அவனைக் கூப்பிட்டுக் கூடவைத்துக்கொண்டு சாப்பிட வேண்டும்.

சாப்பிடுவதற்கு முன் வைச்வதேவ ஹோமம் பண்ணிப் பலி கொடுக்க வேண்டும். பறையனுக்கும் நாய்க்குங்கூடப் பலி கொடுக்கவேண்டும். அவர்களை நினைத்துக்கொண்டு போடவேண்டும். மூன்று விதமாகப் பலி போட வேண்டும். மனிதர்களை உத்தேசித்து 'ஹந்தா' என்று போட வேண்டும். தேவர்களை உத்தேசித்து 'ஸ்வாஹா' என்று போடவேண்டும். பிதுருக்களை உத்தேசித்து 'ஸ்வதா' என்று போடவேண்டும்.

ஸ்நானம் பண்ணிவிட்டால் உடனே ஸந்தியாவந்தனம் பண்ண ஆரம்பித்து உதய காலத்தில் உபஸ்தானம் பண்ணிவிட்டால் அகத்திலுள்ள ஸ்திரீகள் ஔபாஸன குண்டம் தயாராக வைப்பார்கள். அதில் மூன்று அக்ஷதை போட்டு மூன்று நிமிஷம் ஔபாஸனம் பண்ணவேண்டும். அப்புறம் 'ஆபோ ஹிஷ்டா' என்ற மந்திரத்தைச் சொல்லி அபிஷேகம் செய்து திராக்ஷைப் பழத்தை நைவேத்தியம் செய்து பத்து நிமிஷம் பூஜை பண்ணவேண்டும். சிவாராதனம் பண்ணி சிவப் பிரஸாதம் சாப்பிட வேண்டும். தனியாகச் சிவப் பிரஸாதம் கூடாது என்று சொல்லுவார்கள். பஞ்சாயதன பூஜை பண்ணவேண்டும்.

आदित्यमम्बिकां विष्णुं गणनाथं महेश्वरम् ।

இந்த ஐந்து மூர்த்திகளைப் பூஜை செய்வதுதான் பஞ்சாயதன பூஜை. இந்து ஐந்து மூர்த்திகளும் இந்தியாவிலே உள்ள வெவ்வேறு இடங்களில் அகப்படுகின்றன. விஷ்ணுவுக்கு உரிய ஸாலக்கிராமம் கண்டகீ நதியில் அகப்படுகிறது; அது ஹிமாசலத்தில் இருக்கிறது. பூஜையில் மத்தியில் சிவலிங்கத்தைக் கிழக்கே பார்த்து வைத்தால் ஈசான்யத்தில் ஸாலக்கிராமம் வைக்கவேண்

டும். அதைப் போலவே இந்தியாவுக்கு மத்தியில் நர்மதா நதியில் ஓங்கார குண்டத்தில் பாணலிங்கங்கள் அகப்படு கின்றன. ஆதித்யனுக்குரிய ஸ்படிகங்கள் வல்லத்துக்குப் பக்கத்தில் அகப்படுகின்றன. சோண்பத்ரா என்று ஒரு நதி இருக்கிறது. அது கங்கையிற் கலக்கிறது. சோணம்—சிவப்பு. அதில் சிவப்பான சிலைகள் இருக் கின்றன. அவைதாம் பிள்ளையார். ஸ்வர்ணமுகீசிலா அம்பிகையின் ஸ்வரூபம். அதில் தங்க ரேக் உள்ளே ஓடியிருக்கும். இந்த ஐந்தில் ஒன்றிலாவது கண் மூக்கு இல்லை. எல்லாம் அரூபம். எல்லாவற்றையும் ஸம்புடத்தில் போட்டு விடலாம். அதிலேயே திராக்ஷைப் பழத்தையும் வைத்துக்கொள்ளலாம். அக்ஷதை, கற்பூரம், ஊதுவத்தி இவைகளைக் கையில் வைத்துக் கொள்ள லாம். துளஸியை உலர்த்தி வைத்துக் கொள்ளலாம். எல்லாம் தயார் பண்ணிக் கொண்டால் ஸ்நானம் பண்ணினவுடன் அங்கேயே கொஞ்ச நேரம் உட்கார்ந்து கொண்டு பூஜையைப் பண்ணிவிடலாம். அகத்திலே இருந்தால் மஹா நைவேத்தியம் பண்ணலாம்.

எல்லோரும் காலத்தில் ஸந்தியா வந்தனம் பண்ண வேண்டும். வைச்வதேவம் செய்ய வேண்டுமென்றால் கொஞ்சம் ஸாவகாசம் இருக்க வேண்டும்.

பஞ்சமஹாயஜ்ஞங்கள் தேவயஜ்ஞம், பிதிருயஜ்ஞம் பூதயஜ்ஞம், பிரம்மயஜ்ஞம், மனுஷ்யயஜ்ஞம் என்பவை. அவைகளில் தேவயஜ்ஞம் வைச்வதேவத்தில் வந்து விடும். பிதிருயஜ்ஞம் தர்ப்பணம். பூதயஜ்ஞம் வைச்வ தேவ அந்தத்தில் கொடுக்கப்படும் பலிகளில் வந்து விடும். பிரம்மயஜ்ஞம் வேதாத்தியயனம். மனுஷ்ய யஜ்ஞம் ஆதித்தியமாகும். பிரம்மயஜ்ஞம் வேத ரிஷி

களுக்குத் தர்ப்பணம் பண்ணுவது. நான்கு வேதங்களையும் ஆரம்பித்துக்கொண்டு நம்முடைய வேதத்தை அத்தியயனம் செய்யவேண்டும்.

இப்பொழுது இவைகளை எல்லாம் ஒருவரும் பண்ணுவதில்லை. ஐம்பது அறுபது வருஷங்களுக்கு முன்பு இவ்வளவும் பண்ணிக்கொண்டிருந்தார்கள். நாம் இந்த மாதிரி இருக்கக்கூடாது. எல்லாவற்றையும் பண்ணமுடியாவிட்டாலும் ஜீவனோபாயத்தை அநுஸரித்து, முடிந்தவைகளைத் தவறாமல் பண்ணவேண்டும். ஸாத்தியப்பட்டால் எல்லாவற்றையும் பண்ணவேண்டும்.

என்ன பண்ணவேண்டுமென்பதை இது வரைக்கும் சொன்னேன். எதைப் பண்ணக்கூடாது? இவ்வளவும் பண்ணினால் அநாசாரம் தானாக ஓடிப்போய்விடும். பிதிருகளுக்குத் தர்ப்பணம் எல்லாரும் தினமும் பண்ண வேண்டும். அமாவஸ்யையில் அவசியம் பண்ண வேண்டும். வைச்வதேவம் அன்னத்தால் பண்ண வேண்டும். இல்லாவிட்டால் ஜலத்தால் பண்ணவேண்டும். ஆசௌச காலங்களில் தசகாயத்ரீயாவது பண்ண வேண்டும். அந்தக் காலங்களில் ஸ்நானம் ஸந்தியா வந்தனம் இரண்டும் பண்ணவேண்டும்.

பஞ்சமஹாயஜ்ஞங்களைவிட அதிகமானவை ஸ்நானம், ஸந்தியா வந்தன, ஜபம், தேவதா பூஜை என்பவை. இவை எட்டும் முக்கியமான கார்யங்கள்.

ஏகாதசி யன்று உபவாஸமானால் துவாதசி யன்று பாரணை பிராதக் காலத்தில் 8-24க்குள் பண்ணவேண்டும். அன்றைக்கு மாத்திரம் மாத்யான்னிகம் பிராதக்காலத்தில் பண்ணலாம். தனுர் மாஸத்தில் மாத்திரம் தேவ தாராதனம் உஷக்காலத்தில் பண்ணலாம். நித்தியம்

பண்ணவேண்டிபபூஜையையும் பின்பு பண்ணவேண்டும். இப்பொழுது இவைகளைப் பண்ணுகிறது நமக்குக் கஷ்டமாகத் தோன்றுகிறது. இவைகளை நடத்தி வியவஹாரம் பண்ணினவர்களைப் பற்றிக் கேட்டிருக்கிறோம்.

ஒளபாஸன பரியந்தம் எல்லோரும் பண்ணலாம், ஸ்நானம், ஸந்தியா வந்தனம், சிவ பூஜை, ஆதித்யம் பரியந்தம் பண்ணலாம். இவைகளைப் பண்ணிவிட்டு ஆபீஸுக்குப் போகலாம். பிரம்மயஜ்ஞம், வைச்வதேவம் இரண்டையும் ரிடையர் ஆனவர்கள் பண்ணலாம். முன்பு சொன்ன எட்டுக் காரியங்களையும் ஸௌகர்யம் உள்ளவர்கள் பண்ணிக்கொண்டு வரவேண்டும். மந்திராத்தியயனம் செய்ய வேண்டும். பிரயோகமும் தெரிந்து கொள்ள வேண்டும்.

இவைகளை யெல்லாம் பிரம்மா முதற்கொண்டு யாவரும் பண்ணிக்கொண்டு வந்தார்கள். பிரம்ம புத்திரர்களில் ரிஷிகள். அவர்கள் காலம் முதல் நம்முடைய தாத்தா காலம் வரையில் எல்லோரும் ஸரியாகப் பண்ணிக்கொண்டு வந்தார்கள். நம்முடைய நாளில் கத்திரித்து விட்டோம். அதனுடைய பலனை நாம் அநுபவிக்கிறோம். பிரளய காலம் வரையில் அவிச்சின்னமாக நடந்து வரவேண்டிய அநுஷ்டானங்களை நம்முடைய நாளில் கத்தரித்து விட்ட பாக்கியம் நமக்கு ஏற்பட்டிருக்கிறது!

என்றைக்கு அவர்கள் ஆரம்பித்தார்கள்? சரித்திரம் (History) எழுதினால் முடியாது. இந்த மாதிரி வேஷ்டி கட்டிக்கொள்வது. ருத்திராக்ஷம் போட்டுக் கொள்வது இவ்வகைளை எப்பொழுது ஆரம்பித்தார்கள்? இங்கிலீஷ்காரர்கள் இன்ன இன்ன காலத்தில் இன்ன இன்ன

விதமான உடை (Dress) இருந்தது ; இன்ன உடை இப்பொழுதிலிருந்து உண்டாயிற்று என்று எழுதிப் படம் போட்டிருக்கிறார்கள். நாம் அந்த மாதிரி செய்யப் பார்த்தால் நமக்கு அகப்படாது.

எந்த ரிஷி பேரை நாம் சொல்லுகிறோமோ அவர்களுடைய காலம் முதல் பண்ணப்பட்டு வருகிற அநுஷ்டானங்களைக் கபளீகாரம் பண்ணிவிட்டு இருக்கிறோம். இந்தக் கர்மாநுஷ்டானங்களால் பின் வரும் ஸந்ததிகளுக்கு உண்டாகும் நன்மையைத் தடுத்திருக்கிறோம். அந்த மாதிரி இருப்பதை விட்டு விட்டுக் கூடியவரைக்கும் கர்மாநுஷ்டானங்களைப் பண்ணி வரவேண்டும்.

பத்தினி இருந்தால்தான் ஔபாஸனம் பண்ணலாம். மற்றவைகளை எல்லோரும் பண்ணலாம். இவை இந்த லோகத்திலேதான் பண்ணமுடியும். நாம் பிதிருலோகம், தேவலோகம், நரகலோகம் இவைகளில் எவ்வளவு பிராணிகள் உண்டோ அவ்வளவு பேருக்கும் ஆஹாரம் கொடுத்துச் சாப்பிட வேண்டும்.

इष्टान् भोगान् हि वो देवा दास्यन्ते यज्ञभाविताः ।
र्दत्तानप्रदायैभ्यो यो भुङ्क्ते स्तेन एव सः ॥

[கீதை, III—12.]

நமக்கு இவ்வளவு ஸௌகரியங்களையும் உண்டுபண்ணிக் கொடுத்தவனுக்குக் கையைக் காட்டி விட்டுச் சாப்பிட வேண்டும். அவன் இல்லாவிட்டால் நம்மால் ஒன்றும் பண்ணவே முடியாது. ஓர் அரிசி நம்மால் பண்ண முடியுமா ? அதைப் பண்ணுகிறவன் ஒருவன் இருக்கிறான். ஒரு விஞ்ஞான சாஸ்திரி (Scientist) ஒரு வாழை இலையைப் பண்ணுவானா ? பரமேசுவரனாலே கொடுக்கப்

பட்டவைகளை அவனுக்குக் காட்டாமல் நாம் ஆஹாரம் பண்ணினால் திருடர்கள் ஆவோம். நைவேத்தியம் என்பது ஸ்வாமியைச் சாப்பிட வைப்பது என்று தப்பாகச் சில் பேர் நினைக்கிறார்கள். நிவேதயாமி என்பதற்கு அறிவிக்கிறேன் என்பது அர்த்தம். சாப்பிடுகிறதற்காகச் செய்வதில்லை. தெரிவித்துச் சாப்பிடவேண்டும் என்கிற எண்ணத்தால் நிவேதம் பண்ணுகிறோம். அவன் எங்கும் இருப்பான். இருக்கச் சொல்லும் இடத்திலும் இருப்பான். கல், மண் முதலிய எந்த இடத்திற் கூப்பிட்டாலும் வருவான். இங்கே கூப்பிட்டால் வரவேண்டும். எந்த மரத்திலும், கல்லிலும், செம்பிலும் வரவேண்டிய யோக்கியதை அவனுக்கு இருக்கின்றது. அப்படிப்பட்ட கருணை இல்லாவிட்டால் அந்த ஸ்வாமி நமக்கு வேண்டாம். 'எங்கள் ஸ்வாமி அப்படி வராது' என்று யாராவது சொன்னால் அது வேண்டாம். அவனால் கொடுக்கப் பட்டதை நாம் உபயோகிக்கிறோம் என்பதற்கு அறிகுறியாக அவனுக்குக் அறிவிக்க வேண்டும். அப்படி அறிவித்து வந்தால் நல்லவர்களாகிவிடுவோம்.

ஸமஸ்தலோகங்களிலும் எவ்வளவு பேர்கள் இருக்கிறார்களோ அவ்வளவு பேருக்கும் நாம் அன்னம் போட வேண்டும். நாகலோகத்தில் இருப்பவர்களுக்குக்கூடப் போட வேண்டும். அவர்களுக்குத்தான் அதிகமாகப் போடவேண்டும். எல்லா பிரபஞ்சத்தில் உள்ளவர்களையும் நினைத்துக்கொண்டு பலி போடுகிறோம்.

மற்ற லோகங்களில் உள்ளவர்களுக்காகத் தனியே எடுத்து வைக்க வேண்டும். அதை ஸ்வாமி அவர்களிடம் கொண்டு போய்ச் சேர்த்து விடுவார். திவஸம் எதற்காகப் பண்ணுகிறது? நம்முடைய பிதுருக்கள்

வேறு ஜன்மா எடுத்து விட்டார்கள் என்கிறார்கள். பிதிரு தேவதையாக இருக்கிறார்கள்? திவஸம் பண்ணினால், 'இன்றைக்கு அப்பா வருகிறார்' என்று சொல்லுகிறோம். அவர்கள் எங்கே வருகிறார்கள்? 'நாம் திவஸம் செய்யும் பொழுது யாருக்காக திவஸம் பண்ணுகிறோமோ அவர்கள் மாடாகப் பிறந்திருக்கலாம். பிதுருதேவதை யாக எப்படி இருக்க முடியும்? அப்படி இருந்தாலும் இந்தப் பிண்டம் அவர்களுக்கு எப்படிப் போய்ச்சேரும்?' என்று கேட்கிறார்கள். ஆனால் திவஸம் மட்டும் பண்ணிக் கொண்டு இருக்கிறார்கள்.

குருநானக் என்று ஒருவர் இருந்தார். அவர் ஸீக்கர்களுடைய மதகுரு. அவருடைய கதை ஒன்று இருக்கிறது. அவர் ஒரு சமயம் ஹரித்வாரத்துக்குப் போனார். அங்கே தீர்த்தயாத்திரையாக வந்தவர்கள் தர்ப்பணம் பண்ணிக் கொண்டிருந்தார்கள். அதை நானக் பார்த்தார். அது அவருக்குப் பிடிக்கவில்லை. ஒரு செம்பை எடுத்துக் கொண்டார். அங்கு ஒரு பிராம் மணன் எதிரில் போய் இறங்கி ஜலம் மொண்டார். படியின் மேலேறி அதைக் கீழே கொட்டினார். இப்படி ஒவ்வொரு செம்பு ஜலமாக எடுத்துக்கொட்டிக்கொண்டே யிருந்தார். பிராம்மணன் பார்த்தான். "நீர் ஏன் இப்படி பண்ணிக் கொண்டிருக்கிறீர்?" என்று அவரைக் கேட்டான். அவர் சொன்னார். "எங்கள் ஊரில் ஒரு நிலம் இருக்கிறது. அதற்கு ஜலம் இல்லை. காய்ச்சலாக இருக்கிறது. அதற்கு ஜலம் பாய்ச்சுகிறேன்" என்றார். உங்கள் ஊர் எத்தனை மைல் தூரத்தில் இருக்கிறது? இங்கேயிருந்து பாய்ச்சினால் அங்கே போகுமா?" என்று பிராம்மணன் கேட்டான். "நீர் அனுப்புகிறீரே; அது

எத்தனை மைல் தூரம் அது எப்படி போய்ச் சேரும்?" என்று நானக் கேட்டார். இப்படி ஒரு கதை புஸ்தகத்தில் எழுதப்பட்டிருக்கிறது. இந்தக் கதையைச் சொன்னால் கூடத் திவஸம் பண்ணுவதை யாரும் நிறுத்த மாட்டார்கள். குரு நானக் இப்படிச் சொல்லிக்கூடத் திவஸம் பண்ணிக்கொண்டிருக்கிறவர்கள் இல்லையா? இந்தக் கதைக்கு நான் ஒரு ஸமாதானம் சொல்லுகிறேன்.

'பிண்டம், தர்ப்பண ஜலம், எள்ளுந்தண்ணீரும் எல்லாம் இங்கே இருக்கிறது. எங்கேயோ போகிறது என்கிறீரே!' என்று சீர்திருத்தக்காரர் (Reformers) கேட்கிறார்கள்.

புதிதாகத் தந்திபோட்ட காலம். ஒருவர் பையனைப் பட்டணத்தில் வாசிக்க வைத்திருந்தார். அவன் பரீக்ஷைக்குப் பணம் கட்ட வேண்டியிருந்தது. மறுநாள் கட்டவேண்டியிருந்தது. உடனே பையன் அப்பாவுக்குக் கடிதம் எழுதினான். 'தந்தி மணியார்டரில் பணத்தை அனுப்பு' என்று எழுதினான். தபாலாபீஸில் போய்த் தந்தி மணியார்டர் பண்ணு என்று விவரம் எழுதியிருந்தான். அவருக்கு அந்தவிவரம் ஒன்றும் தெரியாது. தந்தியும் மணியார்டரும் தனியாக தெரியும். பிள்ளையோ தந்திமணியார்டர் அனுப்பும்படி எழுதியிருந்தான். தபாலாபீஸுக்குப் போனார். ரூபாயைக் கொடுத்து விட்டுத் தந்தி மணியார்டர் பண்ணவேண்டும் என்றார். அவர் ரூபாயில் ஓட்டைபண்ணித் தந்திக்கம்பியில் கட்டி அனுப்புவானென்று எண்ணினார். கொடுத்தவுடன் கொஞ்ச நாழிகையில் பணம் வாங்கிக் கொண்டவன் ரசீது கொடுத்துவிட்டு, 'ஸரி. உம்முடைய பணம்

போய்ச்சேர்ந்துவிடும். அனுப்பியாய்விட்டது' என்ருன். அவர் பணத்தை வாங்கிப் பெட்டியில் போட்டதையும் ஒட்டை ஒன்றும் பண்ணுமலிருப்பதையும் பார்த்த அவர், "என் பணம் இங்கேதானே இருக்கிறது? அதில் ஒட்டை ஒன்றும் போட்டு அனுப்பவில்லையே! அது எப்படிப் போய்ச்சேரும்?" என்று கேட்டார். "அது போய்ச் சேர்ந்துவிடும்" என்று மறுபடியும் அவன் சொன்னுன். "ஏதோ லொட்டு லொட்டென்று சப்தம் பண்ணுகிருன். சேர்ந்துவிடும் என்று சொல்லுகிருன். ரூபாய் இங்கிருக்கிறது. லொட்டு லொட்டென்று கட்டையை அடித்தால் அங்கே எப்படிப் போய்ச்சேரும்?" என்று அவருக்கு ஸந்தேஹம் வந்துவிட்டது. ஆனுலும் பணம் போய்ச் சேர்ந்துவிட்டது.

அந்த மாதிரி இருக்கிறது தர்ப்பணம் பண்ணுவதும். நாம் எதைத் கொடுத்தாலும் சட்டப்படி கொடுக்க வேண்டும். அப்படிக் கொடுப்பதைத் தெரிந்து கொள்ளுகிறவர்கள் யாருக்கு அது போய்ச் சேரவேண்டுமோ அவர்களுக்குச் சேர்த்துவிடுவார்கள். அவர்கள் மாடாகப் பிறந்திருந்தால் வைக்கோலாகப் போட்டுவிடுவார்கள். அப்படிச் சேர்ப்பிப்பவர்கள் தாம் பிதுரு தேவதைகள். வஸு-ருத்திராதித்தியர்கள் அவர்கள். 'பிதுருக்களுடைய ஆத்மக்ஷேமத்துக்காக நான் இதைக் கொடுக்கிறேன்' என்று சொல்லி நாம் கொடுத்தால் அதைக் கணக்கு வைத்துக்கொண்டு மனேபாவத்தால் அவரவருக்குச் சேர்த்துவிட வேண்டுமென்று அவர்களுக்குப் பரமேசுவரன் உத்தரவுபண்ணி இருக்கிருர். அந்தமாதிரி அவர்கள் செய்கிருர்கள். ஆகையால் சிராத்தத்தன்று கொடுப்பதைப் பெற்றுக் கொள்ள அப்பா வரவில்லை.

பிரபஞ்சம் முழுவதையும் அநுபவிக்க ஈசுவரர் நமக்கு விட்டிருக்கிறுர். நம்முடையது இல்லை இது என்று நாம் கொடுக்கவேண்டும். பிதுருக்களுக்கு என்று செய்தால் நேரே அப்பா அம்மாவுக்குக் கொடுப்பதல்ல. அவர்களுக்குச் சேர்க்கிற தேவதைகள் நம்முடைய எண்ணத்தைக் கிரஹித்துக்கொண்டு அவர்களிடம் சேர்க்கிறுர்கள். அப்படிக் கொடுக்கவேண்டிய திரவியம் சட்டப்படி இன்னதுதான் என்று சொல்லப்பட்டிருக்கிறது. அந்தத் திரவியம் எங்கே வேண்டுமானுலும் கிடைக்கலாம். தந்தி மணியார்டர் செய்தவனுடைய பணமே நேராக வாங்கிக்கொள்ளுகிறவனிடம் போவதில்லையல்லவா? பிதுருயஜ்ஞமாகும் சிராத்தம் என்பதற்குச் சிரத்தையோடு பண்ணுவது என்பது அர்த்தம். சிரத்தைதான் நமக்கு முக்கியம். ஒருகாரியம் என்று பண்ண ஆரம்பித்தால் சட்டப்படித்தான் பண்ணவேண்டும். "இப்படித்தான் பண்ணவேண்டுமோ? வேறே விதமாகப் பண்ணக் கூடாதோ?" என்பது சட்டத்தை மீறிய பேச்சாகும். "தபால் லெட்டர் எழுதினுல் அட்ரஸ் எதற்கு? அந்தப் பெட்டியில் போடுவானேன்? எங்களகத்துப் பெட்டியில் போடுகிறேன்" என்று சொல்லலாமா? காரியத்துக்குச் சட்டம் வேண்டும். பக்திக்கும் ஞானத்திற்கும் ஒன்றும் வேண்டாம்.

இதுவரைக்கும் நான் சொன்ன காரியங்களில் இப்பொழுது எவ்வளவு பண்ணுகிறேம்? எவ்வளவு பண்ணவில்லை? எவ்வளவு பண்ணமுடியும்? என்று ஆலோசிக்க வேண்டும். பஞ்சமஹாயஜ்ஞங்களும் மற்றகர்மாக்களும் பண்ணிக்கொண்டு ஷட்கர்ம நிரதர்களாக எல்லோரும் இருக்கவேண்டும் என்பதுதான் எங்கள் அபிப்பிராயம்.

---

ORIENTAL
T. 1894.